பதவுரை.

இன்பம் அதனை— ஆநந்தத்தை
உயர்த்தாய்— எனக்கு அதிசயிப்பித்தவனே!
இமையவர்க்கு— தேவர்களுக்கு
என்றும்— எந்நாளும்
அரியாய் — அறிதற்கரியனைவனே!
கும்பம்— கும்பத்தையுடைய
களிறு— குவலயாபீடகஜத்தை
அட்ட— கொன்ற
கோவே— ராஜாவானவனே!
கொடு— க்ரூரஹ்ருதயனான
கஞ்சன்— கம்ஸனுடைய
நெஞ்சினில்— மநஸ்ஸில்
கூற்றே— யமனைப்போல் அச்சத்தை விளை
க்குமவனே!
செம்பொன் மதில்— செம்பொன் போலே
விரும்பத்தக்க மதிளையுடைய
வெள்ளறையாய்— திரு வெள்ளறையை
இருப்பிடமாக வுடையவனே!
செல்வத்திருல்— செல்வச்செருக்கோடே
வளர்— வளராநின்ற
பிள்ளாய்— பிள்ளையானவனே!
அங்கு— அவ்விடத்தில்
கம்பம்— கண்டவர்களுக்கு நடுக்கத்தைத்
தரக்கடவ
கபாலி காண்— கபாலத்தையுடைய துர்க்கை
ஸஞ்சரியாநின்றுள்காண்;
(ஆதலால் கூஷ்ணத்ர தேவதைகள்
உலாவுகிற அந்திப்பொழுதில்
அங்கு நில்லாதே,)
காப்பு இடை— நான் காப்பிடும்படி
கடிது— விரைவாக
ஓடி வாராய்— ஓடிவா.

வ்வா. எட்டாம்பாட்டு. இன்பமதனையுயர்த்தாய். உன்னுடைய அவதாரகுண சேஷ்டி தாநுபவத்தால் வந்த ஸுகத்தை எனக்கு மேன்மேலு மதிசயிப்பித்தவனே. "தொழுகையு மிலை கண்டவதோதை தொல்லையின்பத் திறுதிகண்டாள்" என்னக்கடவதிறே. இமைய வர்க்கென்றுமரியாய். தந்தாமுடைய ஜ்ஞாநசக்திகள்கொண்டு உன்னைலபிக்கப்பார்க்கும் தேவர் களுக்கு என்றுமொக்க துஷ்ப்ராபனனவனே. இத்தால் - கீழ்ச்சொன்ன நீர்மைக்கு எதி ர்த்தட்டான மேன்மையைச் சொல்லுகிறது. கும்பக்களிறட்டகோவே. "கும்பமிகுமதயானை" என்கிறபடியே மஸ்தகத்திலுடைய உயர்த்தியையுடைத்தாயிருக்கும் குவலயாபீடத்தை நிர ஸித்த செளர்யத்தையுடைய ராஜாவானவனே. கொடுங்கஞ்சன் நெஞ்சினிற்கூற்றே. உன்பக்கல் என்றுமொக்க க்ரூரனாயிருக்கும் கம்ஸனுடைய மநஸ்ஸில் கூற்றம்போல் பயாவஹனாய்க்கொ ண்டு தோற்றுமவனே.

செம்பொன்மதிள் வெள்ளறையாய். செம்பொன்போலே மிகவும் ஸ்ப்ருஹணீயமான மதிளையுடைய திருவெள்ளறையை வாஸஸ்தாநமாக வுடையவனே. செல்வத்திருல் வளர் பிள்ளாய். சக்ரவர்த்திதிருமகனைப்போலே பலர்க்கும் நியாம்யனாய் வளருகையன்றிக்கே, ஒருவர் நியமநத்தில் அடங்காமல் வேண்டினபடி செய்து வேண்டினபடி புஜித்து, செல்வச் செருக்கோடே வளருகிறபிள்ளையானவனே. கம்பக்கபாலிகாணங்கு. கண்டவர்களுக்கு நடுக் கத்தை விளைக்கும் உக்ரமானமுலையும் கபாலத்தையு முடையளான துர்க்கை ஸஞ்சரிக்கிற ஸ்தலங்காணவ்விடம். அன்றிக்கே, கபாலியென்று ருத்ரனைச்சொல்லிற் முகவுமாம். கடி தோடிக் காப்பிடவாராய். அந்தகூஷ்ணத்ர தேவதைகள் ஸஞ்சரிக்கிற ஸந்த்யாகாலத்தில் அங்கு நில்லாதே, இக்காலத்திலே நான் உனக்குக் காப்பிடும்படி சடக்கென வோடிவாராய். அ.

மூ—இருக்கொடுநீர்சங்கிற் கொண்டிட்டெழின்மறையோர்கள் வந்துநின்றார்
தருக்கேனம்பிசந்திநின்று தாய்சொல்லுக்கொள்ளாய்சிலநாள்
திருக்காப்புநானுன்னைச்சாத்தத் தேசுடைவெள்ளறைநின்றாய்
உருக்காட்டுமந்திவிளக்கின் ரொளிகொள்ளவேற்றுகேன்வாராய். கூ.

பதவுரை.

தேசு உடை— தேஜஸ்ஸை உடைய
வெள்ளறை— திருவெள்ளறையிலே
நின்றாய்— நின்றருளுமவனே!
நம்பி— தீம்பில் கைவளர்ந்தவனே!
சில நாள்— இன்னும் சில நாளைக்கு
தாய் சொல்லு— தாய்மார் வார்த்தையை
கொள்ளாய்— மேற்கொண்டு நடக்கவேணும்,
இருக்கொடு — புருஷஸூக்தம்முதலிய
ரிக்குக்களோடேகூட
நீர்— சுத்தஜலத்தை
சங்கில் கொண்டிட்டு— சங்கிலேகொண்டு
எழில்— விலக்ஷணரான
மறையோர்— வைதிகப்ராஹ்மணர்கள்
வந்து நின்றார்— உனக்கு ரக்ஷையிடுவதாக
வந்திரா நின்றார்கள்;
(ஆகலால்,)
சந்தி நின்று— நாற்சந்தியிலே நின்று
தருக்கேல்— கர்வியாதேகொள்;
நான்— தாயானநான்
உன்னை— உனக்கு
திருக் காப்பு சாத்த— அழகிய ரக்ஷையிடும்
பொருட்டு
உரு— உன் திருமேனியை
காட்டும்— காட்டத்தக்கதான
அந்தி விளக்கு— திருவந்திக்காப்பை
இன்று— இப்போது
ஒளி கொள்ள— ஒளியை உடைத்தாம்படி
ஏற்றுகேன் — ஏற்றுநின்றேன்;
வாராய்— அதைக்கண்டருளும்படி வாராய்.

வ்யா. ஒன்பதாம்பாட்டு. இருக்கித்யாதி. "வேதப்புனிதவிருக்கை" என்கிறபடி யே புருஷஸூக்தாதிகளான ரிக்குக்களோடேகூட சுத்தஜலத்தையும் சங்கிலேகொண்டு, உனக்கு ரக்ஷையிடுகைக்காக விலக்ஷணரான ப்ராஹ்மணர்வந்து நின்றார்கள்; அவர்களைக் கொண்டு ரக்ஷையிடுவித்துக் கொள்ளவேணுங்காண். உங்கள் ஐயரும் அப்படியன்றே செய்வது, வழாவென்ன; அதுகேளாமல் கர்வித்து சந்தியிலேநின்று விளையாட்டப்புக்கவாறே தருக்கேல்நம்பி சந்திநின்று என்கிறாள். தீப்பால் பூர்ணனவனே, க்ஷுத்ரதேவதைகள் ஸந்திபண்ணும் நாற்சந்தியிலேநின்று கர்வியாதேகொள். அவர்கள் ரக்ஷையிடுகைக்காக வந்திலேயாகிலும், அந்த ஸ்தலந்தன்னில் நில்லாதேதவாராய். தாய்சொல்லுக் கொள்ளாய் சில நாள். இன்னம் சிலநாள் மாதர்வசநபரிபாலநம் செய்யவேணுங்காண். திருக்காப்புநானுன்னைச்சாத்த. நான் உன்னை அழகிதான ரக்ஷையிட. தேசுடைவெள்ளறைநின்றாய். விலக்ஷணரானவர்கள் வர்த்திக்கையால்வந்த தேஜஸ்ஸையுடைத்தான திருவெள்ளறையிலே நின்றருளினவனே. உருக்காட்டு மந்திவிளக்கு. உன் திருமேனியைக்காட்டும் திருவந்திக்காப்பு. ஏற்றுவார் ஏற்றியெடுப்பது நிரதிசயபோக்யமான திருமேனிகாண்கை புருஷார்த்தமாகையாலே உருக்காட்டுமென்கிறது. இன்ரொளிகொள்ள வேற்றுகேன்வாராய். இப்போது ஒளியையுடைத்தாம்படி ஏற்றுநின்றேன், இத்தைக்கண்டருளும்படி கடுகவாராய். திருக்காப்பு நானுன்னைச்சாத்த - உருக்காட்டு மந்திவிளக்கின் ரொளிகொள்ள வேற்றுகேன் வாராய் என்றந்வயம்.

... ...

அ. நிகமத்தில், இத்திருமொழி கற்றார்க்கு பலஞ்சொல்லித் தலைக்கட்டுகிறார்.

மூ.—போதமர்செல்வக்கொழுந்து புணர்திருவெள்ளறையானை
மாதர்க்குயர்ந்தவசோதை மகன்றன்னைக்காப்பிட்டமாற்றம்
வேதப்பயன்கொள்ளவல்ல விட்டுசித்தன்சொன்னமாலை
பாதப்பயன்கொள்ளவல்ல பத்தருள்ளார்வினைபோமே. ஒ.

பதவுரை.

மாதர்க்கு— ஸ்த்ரீகளெல்லாரிலும்
உயர்ந்த— மேற்பட்டவளான
அசோதை— யசோதைப்பிராட்டி
போது— செந்தாமரைப்பூவில் [போது - புஷ்பம்.]
அமர்— பொருந்தியிருப்பவளாய்
செல்வம்— "ஸ்ரீ" என்று பேரையுடையளாய் [ஸகலஸம்பதாத்மிகையாய்]
கொழுந்து— ப்ரதாநமஹிஷியான பெரிய பிராட்டியாரோடு
புணர்— நித்யஸம்ச்லிஷ்டனுய்
திருவெள்ளறையான— திருவெள்ளறையில் நிற்குமவனுய்
மகன்தன்னை— தனக்கு புத்ரனுய் நின்ற கண்ணனைக்குறித்து
காப்புஇட்டமாற்றம்-ரக்ஷையிட்டபாசுரங்களை
வேதம்— வேதத்தின்
பயன்— தாத்பர்யத்தை
கொள்ள வல்ல— கைக்கொள்வதில் ஸமர்த்தனான
விட்டுசித்தன்— பெரியாழ்வார்
சொன்ன— அருளிச்செய்த
மாலை— சொல்மாலையான இத்திருமொழியில்
பாதம்— பாட்டுக்கள்தோறும் பின்னடியில்
கொன்ன
பயன்— ¶ப்ரயோஜநத்தை
கொள்ளவல்ல— கைக்கொள்ளவல்ல
பத்தர் உள்ளார்— பக்தியுக்தர்களாய் உள்ளவர்களுடைய
வினை— மங்களாசாஸந விரோதியான பாபம்
போம்— தன்னடையே விட்டோடிப்போம்.

¶ அதாவது— காலாமடியிற்கொன்ன காப்பிடுகை.

வ்யா. போதமர்செல்வக்கொழுந்து. தனக்குப் பிறந்தகமான தாமரைப்பூவை யிருப்பிடமாக வுடையளாய், ஸ்ரீயாகையாலே ஸகலஸம்பத்ஸமஷ்டிபூதையாய், ப்ரதாநமஹிஷியாயிருந்துள்ள பெரியபிராட்டியார். "பங்கயச்செல்வி" என்றிறே திருநாமம். புணர்திருவெள்ளறையானை. அவள் தாமரைப்பூவை மறந்து, "அகலகில்லேன்" என்கிறபடியே க்ஷணகாலமும் பிரியமாட்டாதே நித்யஸம்ச்லேஷம் பண்ணும்படியாய்க்கொண்டு திருவெள்ளறையிலே நிற்கிறவனை. "கோல்தேடியோடுங் கொழுந்தது" என்கிறபடியே கொழுந்தானதொன்று, ¶உபக்நத்தையொழிய தரிக்கமாட்டாதாற்போலே யாய்த்து போதமர் செல்வக்கொழுந்தான விவளும் திருவெள்ளறையானுகிற உபக்நத்தோடே புணர்ந்தல்லது தரிக்கமாட்டாதபடி. உபக்நம், ஆதாரமாய் நிற்கும்மாத்ரமாய், அதின்மேலே படர்ந்தகொடியே ப்ரதாநமாயிருக்குமாபோலே யாய்த்து, * செந்தாமரைக்கண்ணர் அப்ரதாநராய் இவளே அவ்வூருக்கு ப்ரதாநையாயிருக்கும்படி. மாதர்க்குயர்ந்தவசோதை. "என்னநோன்பு நோற்றாள் கொலோ விவளைப் பெற்ற வயிறுடையாள்" என்றும், "எல்லாம் தெய்வநங்கை யசோதை பெற்றாள்" என்றும் சொல்லும்படி இவளைப் பிள்ளையாகப்பெற்று, இவளுடைய பாலசேஷ்டிதாதிகளான ஸகலரஸங்களும் மநுபவிக்கப்பெற்றவளாகையாலே லோகத்தில் ஸ்த்ரீகளெல்லாரிலும் உத்க்ர்ஷ்டையான யசோதைப்பிராட்டி.

¶ உவவுப் - கொள் கொம்பு.

மகன்றன்னைக் காப்பிட்ட மாற்றம். ரூபகுணசேஷ்டிதங்கி ளெல்லாவற்றாலும் அவரதம் காப்பிடவேண்டும்படியாயிருக்கும் தன்னுடைய புத்ரனுவனை, புத்ரஸ்நேஹமெல்லாந் தோற்ற ரக்ஷையிட்ட பாசுரங்களை. வேதப்பயனித்யாதி. பகவத்விஷயத்தில் மங்களாசாஸநம் பண்ணுகையே வேததாத்பர்யமென்றறிந்து கைக்கொள்ளவல்ல பெரியாழ்வாரருளிச்செய்த மாலையான வித்திருமொழியில். பாதப்பயனித்யாதி. பாட்டுக்களைதோறும் பின்னடியிற்சான்ன ப்ரயோஜநத்தைக் கைக்கொள்ளவல்ல பகதிமான்களாயுள்ளவர்களுடைய மங்களாசாஸந விரோதியாயுள்ள பாபம் தன்னடையே விட்டுப்போம். ... ... ஓ.

பெரியஜீயர் திருவடிகளே சரணம்.

—(*)—

அடிவரவு.—இந்திரன் கன்று சேப்பு கண்ணில் பல்லா கஞ்சன் கள்ள
மின்ப மிருக்குப் போதமர் வெண்ணெய்.

ஆ - திருமொழி, கள - க்கு, பாட்டு- கஅகூ.

அ. கீழ்- பூச்சூட்டிக் காப்பிட்டு, தனக்கு வசவர்த்தியாக்கி, கள்ளருகே இவனை யுறக்கி, நிர்ப்பரையாய், மாதாவான யசோதைப்பிராட்டி தானுமுறங்கி உணர்ந்து, தன்னுடைய க்ர்ஹகார்யபரவசையாய் வ்யாபரியாநிற்க, இவனு முணர்ந்துபோய் ஊரிலகங்களிலே புக்கு, அங்குண்டான வெண்ணெய்களை விழுங்கி அவையிருந்த பாத்ரங்களையுருட்டி யுடைத்து, காய்ச்சிவைத்த பாலைச் சாய்த்துப்பருகி, அவர்கள் சமைத்துவைத்த பணியாரங்கள் முதலானவற்றை நிச்சேஷமாகவெடுத்து ஜீவித்து, சிறுபெண்ணையழைத்து அவள்கையில் வளையைக் கழற்றிக்கொண்டுபோய் அத்தைக்கொடுத்து நாவற்பழங்கொண்டு, இப்படி நீம்புகளைச் செய்தையாலே அவ்வவ க்ர்ஹங்களிலுள்ளார் தனித்தனியே வந்து முறைப்பட்டு "உன் பிள்ளையை இங்கே யழைத்துக்கொள்ளாய்" என்ற ப்ரகாரத்தையும், இவளும் இவர்கள் சொன்ன வநந்தரத்திலே இவனை இங்கே யழைத்துக்கொள்ளுகைக்காக, பலகாலு மிவனை ஸ்தோத்ரம் பண்ணுவது, 'உன்னைப் பிறர்சொல்லும் பரிபவம் எனக்குப் பொறுக்கப்போகிறதில்லை, வாராய்' என்பதாய் இப்புடைகளிலே பலவற்றையும் சொல்லி இவனை யழைத்த ப்ரகாரத்தையும் ததவஸ்தாபந்நராய்க்கொண்டு பேசி, முன்பு அவன் செய்த க்ரீடைகளெல்லாவற்றையு மநுபவித்து ஹர்ஷடராகிறார்- இத்திருமொழியில். ... ... *.

முதற்பாட்டு. ஊரில் ஸ்த்ரீகளிலே சிலர் தங்கள் க்ர்ஹங்களிலே இவன் செய்த நீம்புகளை, தாயாரான யசோதைப்பிராட்டிக்கு வந்து சொல்லி, அவனை நீ யிங்கேயழைக்கவேணுமென்றபடியைச் சொல்லுகிறது. ... ... *.

மூ.—வெண்ணெய்விழுங்கி வெறுங்கலத்தை வேற்பிடையிட்டதனைசேட்கும்
கண்ணபிரான்கற்ற கல்விதன்னைக் காக்கிலோமுன் மகனைக்காவாய்
பண்ணிற்புளிப் பெய்தாலொக்குந் தீமைபுரைபுரையாலிவை செய்யவல்ல
அ ணைற்கண்ணனேர் மகனைப்பெற்ற வசோதைநங்காயுன் மகனைக்கூவாய்.க.

பதவுரை.

புண்ணில்— வ்ரணத்திலே
புளி— புளியை [புளிக்குழம்பை]
பெய்தால் ஒக்குமா— வார்த்தால் கரிக்குமாப் போலே
தீமை— ஆற்றவொண்ணாத நீம்புகளை
புரை புரை—அகந்தோறும் [ஆல் - அசை.]
செய்யவல்ல— செய்வதில் நிபுணனும்
அண்ணற்கு— தனையனான பலராமனுக்கு
அண்ணன்— சேஷ்டிதத்தால் ஒத்திராத வனும் [அண்ணன் - தூரஸ்தன்.]
ஓர்— அத்விதீயனான
மகனை— புத்ரனை
பெற்ற— பெற்றவளாய்
நங்கை— பூர்ணையான
அசோதாய்— யசோதைப்பிராட்டியே!
வெண்ணெய் — தாழிகளில் சேமித்துவைத்த வெண்ணெயை
விழுங்கி— நிச்சேஷமாகக் களவிலே விழுங்கி
வெறும் கலத்தை— வெண்ணெய் இருந்த பாத்ரத்தை
வெற்பிடை இட்டு—கல்லிலே இட்டுஉடைத்து
அதன்— அது உடைகிற போதுண்டான
ஓசை— த்வநியை
கேட்கும்— கேளாநின்ற
கண்ணன் — க்ருஷ்ணனை
பிரான்— ‡ உபகாரகன்
கற்ற— அப்யஸித்த
கல்வித்தன்னை— க்ருத்ரிமவித்யையை
காக்கக்கிலோம்— காத்துக்கொள்ள சக்தர் களாகிறிலோம்;
(ஆனபின்பு,)
உன்மகனை— உன்பிள்ளையை
காவாய்— நீ காத்துக்கொள்;
(அதுக்குடலாக)
உன்மகனை— தீம்புகளைச் செய்துதிரிகிற உன்பிள்ளையை
கூவாய் — அழைத்துக்கொள்ளாய்
என்று ஊரிற்பெண்கள் முறையிட்டுச் சொல்லுகிறார்கள்.

‡ இது வெறுத்துச்சொல்லும்வார்த்தை; அபகாரக னென்று விபரீத லக்ஷணையால் பொருள்கொள்க.

வ்யா. முதற்பாட்டு. வெண்ணெய்விழுங்கி. கடைந்தெடுத்துத் தாழிகளிலே சேர்த்துவைத்த வெண்ணெயை நிச்சேஷமாகக் களவிலேவிழுங்கி. அவ்வளவுமன்றிக்கே வெறுங் கலத்தை வெற்பிடையிட்டு. அது இருந்தபாத்ரத்தைக் கல்லிலேயிட்டு உடைத்து. வெண் ணெய்தான் விழுங்கினானிரான், வெறுங்கலங்களை வெற்பிடையிட்டுடைக்குமோ? இத்தால் இவனுக்கு ப்ரயோஜநமென்னென்ன அதனைசைகேட்கும். அது உடைகிறபோதை ஓசை கேட்கையாய்த்து இவனுக்கு ப்ரயோஜநம்; அதுக்காகச் செய்யும் என்ன; ஆனால், “ உங் கள் க்ருஹங்களை இவனுக்குப் புகுர அவகாசமில்லாதபடி அடைத்து நோக்கிக்கொள்ளுங் கோள் ” என்ன; கண்ணபிரான்கற்ற கல்விதன்னைக் காக்கக்கிலோம். க்ருஷ்ணனை உபகாரகன் கற்ற க்ருத்ரிமவித்யையை நாங்கள் காக்கமாட்டுகிறிலோம். எல்லாருடைய களவும் காக்க லாம், இவனுடைய களவு எங்களால் காக்கப்போகாதென்கை. பிரானென்றது - வ்யதிரே கோக்தி. ஸர்வஸ்வாபஹாரியென்றபடி. உந்தம் க்ருஹங்களை நீங்கள் காக்கமாட்டிகோளா கில் ஆர்காப்பாரென்ன; உன்மகனைக்காவாய். உன்னுடையபிள்ளையை நீ காத்துக்கொள்ளு வுதியாகில் எல்லாம் காவல்படும்; நீ அத்தைச்செய்யாய் என்றவாறே, சிறுபிள்ளைகள் தீம் புகளைச் செய்யார்களோ? அவன் அறியாமல் ஏதேனும்சில செய்ததுண்டாகில் நீங்களும் சற் றுப பொறுக்கவேண்டாவோ? இப்படி அலர்தூற்றலாமோ வென்ன; புண்ணில் புளிப்பெய்தா லொக்கும் தீமை. புண்ணிலே புளியைக் குறந்திட்டால் கரிக்குமாபோலே துஸ்ஸஹமான

தீமைகளைச் செய்யாநின்றால் எங்ஙனேபொறுப்பது. நீங்கள் ஓரகத்திலுள்ளாரன்றே இப்படி சொல்லுகிறிகோள், உங்களோரகத்திலும் இப்படிநின்று இவன்தீம்புகளைச் செய்கிறனே காதேயென்ன; எங்களகமொன்றிலுமன்று, புரைபுரையாலிலைவசெய்யவல்ல. அகந்தோறும் இப்படியிருந்துள்ள தீம்புகளைச் செய்பவல்லவன்காணிவனென்கிறார்கள். புரையாவது - க்ர்ஹம். வீப்ஸையால் - அகந்தோறுமென்றபடி. ஆல் - அசை. அண்ணல் கண்ணன். அண்ணலென்றது - ஸ்வாமிவாசகம். அண்ணல் கண்ணனென்றது - ஸ்வாமித்வ ஸூசக மான கண்ணையுடையவனென்றபடி. இத்தால் - இவ்விடத்தில், ஸ்வாமி பென்றது - க்ர்த்ரி மர்க்குத் தலைவனென்றபடியாய், இதுக்கு ப்ரகாசகமான கண்ணையுடையவனென்றதாய்த்து. அன்றிக்கே, அண்ணற்கென்றது - அண்ணலுக்கென்றபடியாய், அண்ணலென்றது - அண்ணியனுகாதவ னென்றபடியாய், இப்படி தீம்புகளைச் செய்கையாலே "தன்னம்பி நம்பியு மிங்கு வளர்ந்தது அவனிலைசெய்தறியான்" என்கிறபடியே ஸாதுவாய்த்திரியும் நம்பி மூத்தபிரானுக்கும் தனக்கும் ஒருசேர்த்தியில்லாதவனென்னவுமாம். ஓர்மகனேப்பெற்ற அசோதைதங்காய். இப்படி அத்விதியனன பிள்ளையைப்பெற்றபூர்த்தியை யுடையளளே. உன் மகனைக்கூவாய். இப்படி தீம்புகளைச்செய்து நிரியாமே, உன்மகனை உன்பக்கலிலே அழைத்துக்கொள்ளாய். ... ...க.

அ. இரண்டாம்பாட்டு. இப்படி இவர்கள் சொன்னவநந்நரம் யசோதைப்பிராட்டி கண்டுத்ரணவனை யழைத்தப்ரகாரத்தைச் சொல்லுகிறது.

மூ —வருக வருக வருக விங்கேவாமந னம்பீ வருகவிங்கே
கரியகுழல்செய்யவாய் முசத்துக் காகுத்த நம்பீ வருகவிங்கே
அரியனிவனெனக்கின்று நங்கா யஞ்சநவண்ணு வசலகத்தார்
பரிபவம்பேசத்தரிக்ககில்லேன் பாவியேனுக்கிங்கே போதராயே. உ.

பதவுரை.

வாமநன்— * குறள்பிரமசாரியாய்க்கொண்டு
நம்பீ!— அபிமதம்பெற்று பூர்ணனனவனே!
இங்கே— (அவ்விடத்தைவிட்டு) இங்கே
வருக வருக வருக— கடுக ஓடிவா;
கரிய குழல்— கறுத்த திருக்குழலையும்
செய்ய வாய்— சிவந்த திருப்பவளத்தையும்
முகம்— திருமுகமண்டலத்தையு முடைய னுய்
நம்பீ!— குணபூர்ணனனவனே!
காகுத்த!— ககுத்ஸ்த்தசக்ரவர்த்தியின் வம்
சத்தை விளங்கச்செய்யுமவனே!
இங்கே வருக— இங்கே வந்தருளாய்;
நங்காய்!— ("உன்மகனைப் புகழ்ந்தழைக்
கிறயல்லது, அச்சமுறும்படி கடிந்து
பேசுகிறிலையே" என்றென்னைப்
பொடிகிற) நங்காய்!

இவன்— இப்பிள்ளையானவன்
எனக்கு— தாயான எனக்கு
இன்று— இப்போது
அரியன்— கைக்கெட்ட முடியாதவன்;
(என்றுசொல்லி: பிள்ளையைக்குறித்து,)
அஞ்சநம்— மைபோன்ற
வண்ணு— திருநிறத்தையுடையவனே!
அசல் அகத்தார்— அயல்வீட்டுப்பெண்கள்
பரிபவம் பேச — 'கள்ளன், தீம்பன்'
என்றுற்போலேஉன்னைப்பரிபவித்துப்பேச
தரிக்க கில்லேன் — நான் தரித்திருக்க
மாட்டேன்;
பாவியேனுக்கு— உன்மேல் ஊராரிதூறேற்
றக் கேட்கும்படியான பாபத்தைப்பண்
ணின என்மனக்கவலை தீரும்படி
இங்கே போகராய்— இங்கே வாராய்

வ்யா. வருகவருகவருகவிங்கே. அங்கேயிருந்து நீப்புகளைச் செய்து கண்டார்வா யாலே பரிபவங்கேளாதே இங்கே வாவென்கிறாள். வருகவென்றது- வாவென்றபடி. அவன் கடுக வருகைக்காகப் பலகாலும் சொல்லுகிறாள். இப்படி யழைத்தவிடத்திலும் வாராமையா லே, வாமநனம்பீ வருகவிங்கே. நீவாமநாம்பியன்றே, ஆச்சரிதரக்ஷணம் செய்யும் குணபூர்த்தி யுடைய நீ யிங்கேவாராயென்கிறாள். அவ்வளவிலும் வாராமையாலே: கரியஸித்யாதி. கறுத்த திருக்குழலையும், சிவந்த திருப்பவளத்தையும், உபமாநரஹிதமாய்க்கொண்டு இரண்டுக்கும் நடுவே விளங்காநின்ற திருமுகத்தையுமுடையனும், மாதாபிதாக்கள் சொல்லிற்றுச் செய்யும் குணபூர்த்தியையுடைய காகுத்தனன்றே நீ, இங்கே வாராயென்ன; முறைப்பட்டுவந்து நின் றவர்களிலே ஒருத்தி "அஞ்சவுரப்பான் அசோதை" என்கிறபடியே நீ நியமியாமல் கொள் கொம்பு கொடுத்தன்றே இப்படி இவன் நீப்பிலே தகுணைறவேண்டிற்று, இப்போது மிவ னைப் புகழ்ந்துகொண்டு அழைக்கிறாயித்தனைபோக்கி, நியமித்து ஒருவார்த்தை சொல்லுகி றிலேயேயென்ன; அரியனிவனெனக்கின்று நங்காய் என்கிறாள். பிள்ளைபெற்று ஸ்நேஹித்துவள ர்த்துப்போரும் பூர்த்தியையுடையவளே! இவனெனக்கு இன்றுபெறுதற்கு அரியவனன்றே, இப்படியிருக்கிறவனை நான் கருக நியமிக்கமாட்டேனென்கை. இப்படி இவள்சொன்ன தூர்த்த வுத்தரம் சொல்லி, மீளவும் தன்பிள்ளையான வவஸ்தைக்குறித்து பரபரிபவம் பொறுக்க மாட்டாமையாலேவந்த தன் க்லேசத்தைச் சொல்லி யழைக்கிறாள் அஞ்சநவண்ணா. கண்டவர் கள் கண்குளிரும்படி. அஞ்சநம்போன்ற திருநிறத்தையுடையவனே. அசலகத்தார் பரிபவம் பேசத் தரிக்கமாட்டேன். அசலகத்தாரானவர்கள் "கள்ளன், நீப்பன்" என்றாற்போலே உன் னைப் பரிபவங்கள் சொல்லக்கேட்டுப் பொறுக்கமாட்டுகிறிலேன். பாவியேனுக்கிங்கேபோத ராதே. இச்சொல்லுகள் கேட்குமப்படியான பாபத்தைப் பண்ணினவெனக்கு இந்தக்லேசம் திருப்படி. இங்கேவாராய். ... ... உ.

அ. மூன்றும்பாட்டு. முன்புத்தையவர்களையொழிய வேறே சிலர் வந்து, தங்கள் க்ர் ஹத்திலே அவன் செய்த நீப்புகளைச்சொல்லி, இப்படி யருகிருந்தாரை அநியாயஞ்செய்ய லாமோ, உன்பிள்ளையை உன்பக்கலிலே யழைத்துக்கொள்ளாய் என்றப்ரகாரத்தைச் சொல்லுகிறது. ... ... *

மூ.—திருவுடைப்பிள்ளைதான் தீயவாறு தேக்கமொன்றுமிலன் தேசுடையன்
உருகவைத்தகுடத்தோடு வெண்ணெயுறிச்சி யுடைத்திட்டுப் போந்துநின்றான்
அருகிருந்தார்தம்மை யநியாயஞ்செய்வதுதான் வழக்கோவசோதாய்!
வருகவென்றுன்மகன்றன்னைக்கூவாய் வாழவோட்டான்மதுசூதனனே. ஈ.

பதவுரை.

அசோதாய்— யசோதைப்பிராட்டியே!
திரு உடை— ஐச்வர்யத்தால் குறைவில்லாத
பிள்ளை— உன்பிள்ளையான கண்ணன்
தான்— தான்
தீய ஆறு— தீம்பு செய்யும்வகைகளில்
ஒன்றும்— சிறிதேனும்
தேக்கம் இலன்— தேங்குதலில்லாதவனாய்
தேசு உடையன்— அதுதன்னையே தனக்கு தேஜஸ்ஸாகவுடையனாயிராநின்றான்;
உருக வைத்த— உருக்குவதற்காக அடுப்பில்வைத்த
வெண்ணெய்— வெண்ணெயை
குடத்தோடு— தாழியோடே
உறிச்சி— உறிஞ்சி

உடைத்திட்டு— பாத்திரத்தையுமுடைத்து
போந்து— இவ்வருகே வந்து
நின்றான்— நில்லாநின்றான்;
மதுசூதனன் — முன்பு விரோதியானமது
வை நிரஸித்தவன்
வாழ ஒட்டான்— இப்போது தானேவிரோ
தியாய்நின்று, எங்கள்குடிவாழ்ந்திருக்க
வொட்டுகிறிலன்;
அருகு— அண்டையில்லை
இருந்தார் தம்மை — குடியிருப்பவரான
எங்களை
அநியாயம் செய்வது — உன் பிள்ளையைக்
கொண்டு வேண்டிற்றுச் செய்கிறவிது
வழக்கோதான்— ந்யாயந்தானோ?
உன்மகன்தன்னை— உன்பிள்ளையான கண்
ணனை
வருக என்று— "என்னண்டைக்குவா"
என்று
கூவாய்— அழைத்துக்கொள்.

வ்யா. திருவுடைப்பிள்ளை. ஸ்ரீமானுடைப்பிள்ளை. ஐச்வர்யத்தால்குறைவற்றவனென்கை. இதனால் - ஸ்வகார்யத்தில் ஜீவநமற்று வயிறுவாழாமல் செய்கிறானன்றே, செல்வக்கிளர்ப்பாலே செய்கிற நீம்புகளிறே யிவையென்கை. தான்தீயவாறு தேக்கமொன்றுமிலன். தான் நீம்புசெய்யும் ப்ரகாரங்களில் தன் பிறப்பையும் ஐச்வர்யத்தையும் பார்த்து, "நாம் இத்தைச் செய்யுமிட்டடியென்" என்று தேங்குதல் அல்பமுமுடையவனல்லன்; கடையறச் செய்யாநிற்கு மென்கை. தேசுடையன். தேக்கமில்லாதவளவேயோ, இதுதன்னையே தனக்கு தேஜஸ்ஸாகவுடையனுமிராநிற்கும். இத்தால் - பிறர்சொல்லும் பழிச்சொல்லுக்கு அஞ்சானென்கை. இப்படி நீங்கள் சொல்லுகைக்கு இவன்றன் செய்தவையென்னென்ன; செய்தவற்றில் ஒன்றைச்சொல்லுகிறாள் உருகளித்யாதி. உருக்குவதாகவைத்த பாத்தத்தோடே வெண்ணையையுறிஞ்சி பாத்தத்தையு முடைத்து, தான் அல்லாதாரைப்போலே இவ்வருகே போந்துநில்லாநின்றான். அருகித்யாதி. உன்னையவீலே குடியிருந்த வெங்களை உன் பிள்ளையைக்கொண்டு வேண்டிற்றுச் செய்கிறதிதுதான் ந்யாயமோ அசோதாய். வருக வென்றுன் மகன்றன்னைக்கூவாய். உன்னுடைபபிள்ளையானவனை, இங்கே நின்று இன்னமும் நீம்புகளைச் செய்யாமல் உன்னருகே வாவென் றழைத்துக்கொள்ளாய். வாழவொட்டான் மதுசூதனனை. நீ இது செய்யாயாகில் எங்களை அவன்குடிசெய்து குடிவாழ்ந்திருக்கவொட்டான்காணென்கை. மதுசூதனன் என்றது - முன்பு விரோதிநிரஸனஞ் செய்து போந்தவன், இப்போது, தான் விரோதியாய் நின்று நலியாநின்றானென்கிற வெறுப்பாலே. ... ... கூ.

அ. கான்காம்பாட்டு. "வருகவென்றுன் மகன்றன்னைக் கூவாய்" என்றவாறே, இவள் அவனை ன்றுநிறுர்வகமாக அழைக்க, அவனும் ப்ரீதனை யோடிவந்து அகத்திலே புகுர, இவள் எதிரேசென்று எடுத்துக்கொண்டாடியடியைச் சொல்லுகிறது.

மூ.—கோண்டல்வண்ணு விங்கேபோதராயே கோயிற்பிள்ளாயிங்கே போதராயே
தெண்டிரைசூழ் திருப்பேர்க்கிடந்த திருநாரணவிங்கே போதராயே
உண்டுவேந்தேனம்மமென்று சொல்லியோடி யகம்புகலாய்ச்சிதானும்
கண்டெதிரே சென்றெடுத்துக்கொள்ளக் கண்ணபிரான் கற்றகல்விதானே. சு.

பதவுரை.

கொண்டல்— காளமேகம்போன்ற
வண்ணு— வடிவையுடையவனே!
இங்கே போதராய்— இங்கேவாராய்;
கோயில் — திருவரங்கம் பெரியகோயிலில்
வர்த்திக்கிற
பிள்ளாய்— பிள்ளையானவனே!

இங்கேபோதராய்— இங்கேவாராய்;
ஏதள்— நிர்மலமான
திரை— அலைகளையுடைய புனலாலே
சூழ்— சூழப்பட்ட
திருப்பேர்— திருப்பேர்நகரிலே
கிடந்த— கண்வளர்ந்தருளின
திரு நாரணா—ஸ்ரீமந்நாராயணனே!
இங்கே போதராய்—இங்கே அம்மமுண்ணவா
(என்று கண்ணனைத் தாயானவள்
பஹுமானித்தழைக்க;)
‡ அம்மம் உண்டுவந்தேன்— "நான் அம்ம
முண்டுவந்தேன்காண்"
என்று சொல்லி—என்று சொல்லி
ஓடி— விரைவாய்வந்து
அகம் புக— வீட்டுக்குள் நுழைய
ஆய்ச்சிதானும்— தாயானயசோதையும்
கண்டு—இவன் வரவைக்கண்டு
எதிரே சென்று—எதிரேபோய்
எடுத்துக் கொள்ள— மருங்கு லெடுத்துக்
கொள்ளும்படி
கண்ணபிரான்—கண்ணபிரான்
கற்ற—அப்பளித்த
கல்வி தான்!—கல்வியிருந்தபடியென்!
என்று மனமகிழுகிறார்.

‡ "அம்மம்" என்பது - முலைப்பாலுக்கும் அந்நாத்துக்கும் பர்யாய நாமமென்று அடையவளைந்தான்.

வ்யா. கொண்டலித்யாதி. நீர்கொண்டெழுந்த காளமேகம்போலே யிருக்கிற வடிவையுடையவனே! அங்குநின்று மிங்கே போதராயே. போதராயென்றது- வாராயென்றபடி. கோயில்பிள்ளாயிங்கேபோதராயே. "கொண்டல்வண்ணன்- வெண்ணெயுண்டவாயன்" என்னும்படி கோயிலிலேவளர்க்கிற பிள்ளையானவனே! இங்கே போதராயே. தெண்டிரையித்யாதி. தெளிந்த திரைகளையுடைத்தான புனலாலே சூழப்பட்ட திருப்பேரிலே கண்வளர்ந்த ஸ்ரீமானான நாராயணனே! இங்கே அம்மமுண்ணப்போதராயே. உண்டித்யாதி. இப்படி ஸ்துதிபூர்வகமாக அவளழைத்தவாறே, கிட்டவந்து அம்ம முண்டுவந்தேன் காணென்று சொல்லி ஓடிவந்து அகத்திலேபுகுந்து, தாயாரான இவளும் இவன்வந்த †வரத்தையும் முகத்தில் ப்ரஸந்நதையையும்கண்டு ப்ரீதையாய் எதிரேசென்று எடுத்துக்கொள்ள, கண்ணபிரானவன் கற்றகல்வி யிருந்தபடியே! என்று ப்ரீதராகிறார்.

அன்றிக்கே, ஆய்ச்சிதானும் கண்டெதிரேசென்றெடுத்துக்கொள்ளவென்றது- பிறர் சொல்லுமாபோலே தன்செயலைத் தானேசொன்னபடியாய், அம்மமுண்ணவரவேணுமென்றழைத்தால் அருகேவந்து நின்று, 'வேணும்,- வேண்டா' என்னவமைந்திருக்க, உண்டுவந்தேனம்மம் என்றபடியும், ஓடிவந்து உள்ளேபுகுந்தபடியும், அந்த உக்திவ்ருத்திகளைக் கண்டு ப்ரீதையாய், தாயானதானும், முன் தான்செய்த தீம்புகளைமறந்து எதிரேவந்து எடுத்துக்கொள்ளும்படியாகப் பண்ணினபடியும், இவை யெல்லாவற்றையும் அநுஸந்தித்து, கண்ணபிரான் கற்றகல்விதானேயென்று- ஒருவன் கற்றகல்வி யிருந்தபடியே! இப்பருவத்திலே இத்தனை விரகெல்லாம் இவனறிவதே!என்று தன்னிலே ச்லாகித்து ப்ரீதையாகிறளென்று யோஜிக்கவுமாம். இப்படியானபோது, பூர்வோத்தராத்தங்கள் சேர்ந்துகிடக்கும்....ச.

அ. ஐந்தாம்பாட்டு. இப்படி க்ருஹத்திலே வந்து புகுந்து இவளை யுகப்பித்து நின்று அவன் முன்போலே அசலகங்களிலேபோய் தீம்புகளைச்செய்ய, அதிலே ஒருத்தி வந்து தன்னகத்தில் அவன் செய்த தீம்புகளைச் சொல்லி முறைப்பட்டு, உன்மகனை யிங்கே யழைத்துக்கொள்ளா யென்றபடியைச் சொல்லுகிறது. ... ... *

† வரத்து - வரவு.

மூ.—பாலைக்கறந்தடுப் பேறவைத்துப் பல்வளையாளென் மகளிருப்ப
மேலையகத்தே நெருப்புவேண்டிச் சென்றிறைப்பொழுதங்கே பேசிநின்றேன்
சாளக்கிராமமுடையானம்பி சாய்த்துப்பருகிட்டுப் போந்துநின்றான்
ஆலைக்கரும்பின் மொழியனைய வசோதைதங்காயுன் மகனைக்கூவாய். டு.

பதவுரை.

ஆலை— ஆலையிலிட்டு ஆடத்தக்க
கரும்பு அனைய— கரும்பையொத்ததாய்
இன்— மதுரமான
மொழி— வாக்கையுடையளாய்
அசோதை நங்காய்— ஸ்த்ரீத்வ பூர்த்தியை யுடையளான அசோதாய்!
பல் வளையாள்— பலவளைகளையுடைய
என் மகள்— என்மகளானவள்
பாலை கறந்து— பசுவின்பாலைக்கறந்து
அடுப்பு— அடுப்பின்மேலே
ஏறவைத்து— மிடாக்களோடு ஏற்றிவைத்து
இருபப— அதற்குக் காவலாயிருக்க
மேலை அகத்து— உன் அகத்துக்கு மேலண் டைவீட்டிலே
நெருப்பு வேண்டி சென்று— இது காய்ச்சு வதற்கு நெருப்பெடுத்து வருவதற்காப் போய்
இறைப்பொழுது— கூணகாலம்
அங்கே— அவ்வீட்டில்
பேசி நின்றேன்— பேசிக்கொண்டு பாரா காய் நின்றேன்;
(அப்போது,)
சாளக்கிராமம்— ஸ்ரீஸாளக்ராமத்தை
உடைய— இருப்பிடமாகவுடையனும்
நம்பி — ஒன்றிலும் குறைவில்லாதவனு யிருக்குமவன்
சாய்த்து— அப்பாத்ரத்தைச்சாய்த்து
பருகிட்டு— அதிலிருந்த பாலைக்குடித்து
போந்து நின்றான்— கிடக்கவந்து நில்லா நின்றான்;
(ஆகையால் இனி அவன் எங்களகத்தில் தீம்புசெய்யாதபடி,)
உன்மகனை— உன்பிள்ளையான கண்ணனை
கூவாய் — உன் அருகிலழைத்துக்கொள்.

வ்யா. பாலைக்கறந்து. *வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்களிலுண்டான பாலையெல்லாங்கறந்து. அடுப்பேறவைத்து. அந்தப்பாலையெல்லாம் காய்ச்சுகைக்காக மிடாக்களோடும் தடாக்களோடும் அடுப்பிலே ஏற்றிவைத்து. பல்வளையாளென்மகளிருப்ப. பலவளைகளையுமுடையளான வென்மகள் இதுக்குக் காவலாக இராநிற்க. மேலையகத்தே நெருப்புவேண்டிச் சென்று. உன்னகத்துக்கு மேலேயானவகத்திலே இது காய்ச்சுகைக்கு நெருப்பெடுத்துக் கொள்வதாகப்போய். இறைப்பொழுதங்கே பேசிநின்றேன். கூணகாலமங்கே அவர்களோடே வார்த்தைசொல்லி நின்றேன். இதுவே அவகாசமாக; சாளக்கிராமமித்யாதி. ஸ்ரீஸாளக்ராமத்திலே நித்யவாஸம்செய்கிற பூர்ணன், அபூர்ணரைப்போலே அத்தனை பாத்ரங்களிலும் மிச்சத்துப்பருகி, தான், அல்லாதாரைப்போலே இடையப்போந்து நில்லாநின்றான். ஆலைக்கரும்பித்யாதி. ஆடுகைக்கு பக்வமான கரும்புபோலே இனிதாயிருக்கிற மொழியையும் ஸ்ரீசக்தியையு முடையவளே. உன்மகனைக்கூவாய். உன் பிள்ளையானவனை, அங்குநின்று தீமைசெய்யாதே உன்பக்கலிலே வரும்படி விரைந்தழையாய். ... ...

அ. ஆறும்பாட்டு. "அசோதைதங்காய் உன்மகனைக்கூவாய்" என்றவாறே மகனை இவளழைத்தபடியைச் சொல்லுகிறது.

மூ.—போதர்கண்டாயிங்கே போதர்கண்டாய் போதரேனென்னுதே போதர்கண்டாய்
ஏதேனுஞ்சொல்லியசலகத்தா ரேதேனும் பேசநான் கேட்கமாட்டேன்
கோதுகுலமுடைக்குட்டனேயோ குன்றெடுத்தாய் குடமாடுகூத்தா
வேதப்பொருளே யெம்வேங்கடவா வித்தகனே யிங்கேபோதராயே. சு.

பதவுரை.

கோது குலம் உடை—எல்லாராலும் கொண்
டாடத்தக்க சீரையுடைய
ஓ குட்டனே— வாராய் பிள்ளாய்!
குன்று— கோவர்த்தநபர்வதத்தை
எடுத்தாய்— குடையாக எடுத்தவனே!
குடம் ஆடி— குடமெடுத்தாடின
கூத்தா— கூத்தையுடையவனே!
வேதம்— ஸகலவேதங்களுக்கும்
பொருளே— ப்ரதிபாத்யனானவனே!
என்— என்னுடையவனென்னும்படி
வேங்கடவா— திருவேங்கடமலையில் நிற்
கிறவனே!
வித்தகனே— ஆச்சர்யசக்தியுக்தனானவனே!
இங்கே— (அவ்விடத்தைவிட்டு) இங்கே
போதர் ‡ கண்டாய்
போதர்கண்டாய்— } விரைந்து ஓடிவா;
போதரேன் என்னுதே — வரமாட்டே
னென்று சொல்லாமல்
போதர் ‡ கண்டாய்— வாராய்;
அசல் அகத்தார்— அசல் வீட்டுக்காரர்கள்
ஏதேனும் — உன்விஷயமாக வாக்கால்
சொல்ல வொண்ணுத தோஷங்களை
சொல்லி— தங்களிலே சொல்லி
ஏதேனும்— என் காதால் கேட்கவும் வா
யாற் சொல்லவுமொண்ணுதவற்றை
பேச— சொல்ல
நான்— உனக்குத்தாயானநான்
கேட்க மாட்டேன்— கேட்டுப் பொறுக்க
மாட்டேன்;
(ஆதலால்,)
இங்கே போதராய்— இங்கேவாராய்.
என்று யசோதை கண்ணனை அழைக்கிறாள்.

‡ "போதரு" என்கிறவிது - "போதர்" என்று கடக்கிறது.

வ்யா. போதர்கண்டாயிங்கே. அங்கேநின்று தீம்புசெய்யாதே இங்கே போருகிடாய். போதர்என்றதுபோதருவென்றபடி. போதர்கண்டாய்.இவன் கடிகவருகைக்காக மீளவும் ஒருக் கால் சொல்லுகிறாள். இப்படி இவளழைக்கச்செய்தே அவன் வரமாட்டேனென்ன; போதரே னென்னுதே போதர்கண்டாய். வாரேனென்னுதே வாகிடா யென்கிறாள். என்செய்யத்தான் நீ இப்படி நிர்ப்பந்தித் தழைக்கிறதென்ன; ஏதேனும் சொல்லி அசலகத்தார் ஏதேனும் பேச நான் கேட்கமாட்டேன். அசலகத்தாரானவர்கள் உன்விஷயமாக வாசாமகோசரமான தோஷக்களைத் தங்களிலேசொல்லி, அவ்வளவுமன்றிக்கே, என் பக்கலிலே வந்து என் செவியாற் கேட்கவும் வாக்காற் சொல்லவுமொண்ணுதவற்றைச் சொல்ல நான் கேட்டிருக்கமாட்டேன். கோதுகுலமுடைக்குட்டனே! ஓ!!. எல்லாரும் கொண்டாடும் சீரையுடைய பிள்ளாய். இப்படி பிருந்துள்ள நீ எல்லாரும் பழிக்கும்படியாலதே ! என்று விஷண்ணையாய், ஓ! என்கிறாள்.

குன்றெடுத்தாய். கோக்களையும் கோபகுலத்தையும், கோவர்த்தநகிரியை யெடுத்து ரக்ஷித்தவனே. குடமாடுகூத்தா. கோலமர்த்தியால் வந்த ஐச்வர்யச்செருக்குக்குப் போக்குவீ டாகக் குடக்கூத்தாடினவனே. குடமாடுகூத்தனென்றது- குடமெடுத்தாடின கூத்தையுடைய வனென்றபடி. இவ்விரண்டாலும்- இக்குலத்துக்கு ரக்ஷகனாய், இக்குலத்தில் பிறப்பால் வந்த

ஐச்வர்யமே உனக்கு ஐச்வர்யமென்று நினைத்திருக்குமவனன்றே, நீ இதுக்கிடாக வர்த்திக்க வேணுங்காணென்கை. வேதப்பொருளே. (க) "வெவெஷ்ஷ வெவெஷ்ஷ ஸ வெவெஷ்ஷ வ வெவெஷ்ஷ;" என்கிறபடியே ஸ்கல வேதப்ரதிபாத்யனனவனே. என்வேங்கடவா. அப்படியே சாஸ்த்ரத்திலே கேட்டுப்போகையன்றிக்கே, கண்ணாலே காணலாம்படி * வானோர்க்கும் வைப்பான திருமலையிலே இரண்டு விபூதியிலுள்ளாரையும் ஒருதுறையிலே அநுபவிப்பித்துக்கொண்டு என்னுடையவனென்னும்படி நிற்கிறவனே. வித்தகனே. இப்படி நிற்கையாலே விஸ்மயநீயனனவனே. இங்கேபோதராயே. உன்னுடைய குணஹாநி சொல்லுவார் வர்த்திக்கிறவிடத்தில் நின்றும் உன்குணமே பேசாநிற்கும் நானிருக்கிறவிடத்தில் வாராய். ... ... ஈ.

அ. ஏழாம்பாட்டு. "வித்தகனே யிங்கேபோதராபே" என்று இவளழைத்தவிடத்தில் வாராமல் வேறோரிடத்திலே போய்ப்புக்கு, அவர்கள் வ்ரதார்த்தமாகச் சமைத்துவைத்த பதார்த்தங்களையடைய ஜீவிக்கையாலே, ஒருத்திவந்து அத்தைச் சொல்லி முறைப்பட்டு உன்மகனை அழைத்துக்கொள்ளா யென்றபடியைச் சொல்லுகிறது.

மூ.—செங்நெலரிசி சிறுபருப்புச் செய்தவக்கார ரறுநெய்பாலால்
பன்னிரண்டு திருவோண மட்டேன் பண்டுமிப்பிள்ளைபரிசறிவன்
இன்னமுகப்புனனென்றுசொல்லி யெல்லாம்விழுங்கிட்டுப்போந்துநின்றான்
உன்மகன்றன்னை யசோதைதங்காய் கூவிக்கொள்ளா யிவையுஞ்சிலவே. எ.

பதவுரை.

அசோதை தங்காய்; — அசோதை நங்காய்;
செம் நெல் அரிசி— செங்நெலரிசியும்
சிறு பருப்பு— சிறு பயற்றம்பருப்பும்
செய்த— பாகதோஷமற காய்ச்சித்திரட்டின
அக்காரம்— கருப்புக்கட்டியும்
நறு நெய்— மணமிக்க நெய்யும்
பாலால்— பாலுமாகிற இவற்றாலே
பத்து இரண்டு திருவோணம் — பன்னிரண்டு திருவோணம்
அட்டேன்— நோன்புக்குறுப்பாக பாயஸாபூபங்கள் சமைத்தேன்;
பண்டும்— முன்பும்
இ பிள்ளை— இப்பிள்ளையின்
பரிசு— தன்மையை
அறிவன்— அறிவேன்;
எல்லாம் — திருவோணவ்ரதத்துக்காகச் சமைத்தவற்றையெல்லாம்
விழுங்கிட்டு— நிச்சேஷமாக விழுங்கி
(அவ்வளவிலும் அத்தனைப்,)
இன்னம்— "இன்னமும்
நான் உகப்பன்— நான் விரும்பாகின்றேன்"
என்று சொல்லி— என்று சொல்லி
போந்து நின்றான் — அவ்விடம்விட்டுப்
போந்து ஒன்றுமறியாதவன்போல்
நில்லாநின்றான்;

(ஆதலால்,)

உன் மகன் தன்னை— உன் பிள்ளையை
கூவிக்கொள்ளாய்— அழைத்துக்கொள்;
இவையும்— பிள்ளைகளைத் தீம்புசெய்யவிட்டிருக்கிறவித்தலும்
சிலவே— ஒரு பிள்ளைவளர்க்கையோ?
என்றுசேரியிற் பெண்கள் முறையிடுகிறபடி.

வ்யா. சேங்நெலித்யாதி. ¶ உரநிலத்திலே பழுதற விளைந்து சிவந்து சுத்தமான செங்நெலரிசியும், அப்படிப்பட்ட நிலத்தில் விளைந்த சிறுபயறு நெரித்துண்டாக்கின பருப்பும்,

(க) "வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்யஃ." ¶ உரநிலம்-ஸாரமேகூத்ரம்.

பாகமேதாஷம் வாராதபடி காய்ச்சித்திரட்டி நன்றுகச்செய்த கருப்புக்கட்டியும், நற்பசுவின் பாலாய் நால் ஒன்றும்படி காய்ச்சித்தோய்த்துச் செவ்விகுன்றுமல் கடைந்து உருக்கின நெய்யும், நற்பசுக்களில் கறந்தபாலுமாகிற விவற்றினாலே. பன்னிரண்டு திருவோணமட்டேன். பன்னிரண்டு திருவோணம் வ்ரதாங்கமாக பாயஸாபூபங்கள் சமைத்தேதன். பண்டு மிப்பிள்ளை பரிசறிவன். முன்பும் இப்பிள்ளைப்ரகாரமறிவன். அதாவது - திருவோணவ்ரதத்துக் கென்று ஆரம்பித்து இவை சமைத்தபோதை, இவனும் தம்பிலே ஆரம்பித்து, தேவார்ச்சநம் செய்வதுக்குமுன்னே இவற்றைவாரி ஜீவித்துவிடுமென்கை. இப்போது மப்படியே-எல்லாம் விழுங்கிட்டு. இத்திருவோணத்துக்கென்று சமைத்தனவெல்லாம் ஒன்றும் சேஷியாதபடி விழுங்கி. இன்னமுகப்பன்நானென்றுசொல்லி. அதிலும் த்ருப்திபிறவாமல் இன்னமும் வேண்டியிருப்பன் நானென்றுசொல்லி. போந்துநின்றான். அந்யபரரைப்போலே அங்குநின்றும்விடப் போந்துநில்லாநின்றான். உன்மகன்றன்னை யசோதைதங்காய் கூவிக்கொள்ளாய். யசோதைப் பிராட்டீ! அங்குத்தைமை செய்யாமல் உன்னுடைய பிள்ளையை உன்பக்கலிலே அழைத்துக் கொள்ளாய். இவையும்சிலவே. பிள்ளைபெற்றார்க்கு, பிள்ளை தம்புசெய்யாமல் பேணிவளர்க்க வேண்டாவோ, இவையும் சிலபிள்ளைவளர்க்கையோ. ... ... எ.

அ. எட்டாம்பாட்டு. "உன்மகன்றன்னை யசோதைதங்காய் கூவிக்கொள்ளாய்" என்றவாறே, தன்மகனை அழைத்த ப்ரகாரத்தைச் சொல்லுகிறது.

மூ.—கேசவனே யிங்கேபோதராயே கில்லேனென்னு திங்கேபோதராயே
நேசமிலாதா ரகத்திருந்து நீ விளையாடாதே போதராயே
துசனஞ்சொல்லுந் தொழுத்தைமாருந் தொண்டருநின்ற விடத்தினின்றும்
தாய்சொல்லுக்கொள்வது தன்மங்கண்டாய் தாமோதரா விங்கேபோதராயே-

பதவுரை.

கேசவனே—	அழகிய மயிர்முடியையுடைய வனே!
இங்கே போதராய்—	இங்கேவாராய்;
கில்லேன் என்னுது —	'வரமாட்டேன்' என்னுமல்
இங்கே போதராய் - ;	
நீ —	இங்கு சற்றுவிளையாடி வருகிறே னென்கிற நீ
நேசம் இலாதார்—	உன்திறத்தில் ஸ்நேஹ மற்றவர்களுடைய
அகத்து இருந்து —	அகத்திலே நின்று
விளையாடாதே —	விளையாட்டொழிவது மன்றி,
துசனம் சொல்லும்—	உன்னை தூஷிக்கிற
தொழுத்தைமாரும் —	இடைச்சிகளுக்கு அடிச்சிகளானவர்களும்
தொண்டரும்—	இடையர்க்கு அடியரான வர்களும்
நின்ற—	நிற்கிற
இடத்தில் நின்றும்—	இடங்களில் நின்றும்
போதராய்—	இங்கேவாராய்;
தாய் சொல்லு—	தாய்வார்த்தையை
கொள்வது—	மேற்கொண்டு நடப்பது
தன்மம் கண்டாய்—	தர்மங்காண்;
தாமோதரா—	தாமோதரனே!
இங்கே போதராய்.	

வ்யா. கேசவனே யிங்கேபோதராயே. ப்ரசஸ்த கேசனனவனே! அசைந்துவருகிற குழல்களும் நீயுமாய் நடந்துவரும்போதையழகை நானநுபவிக்கும்படி அங்குநின்ற விங்கே வாராய். இப்படி இவளழைத்தவிடத்தில் "நா னிப்போது வரமாட்டேன்" என்ன;

கில்லேனென்னு திங்கேபோதராயே. மாட்டேனென்னுதே இங்கே வாராயென்கிறுள். நானிங்கே சற்றுப்போதிருந்து விளையாடி வருகிறேனென்ன; நேசமித்யாதி. விளையாடும்போதைக்கு உனக்கு வேறிடமில்லையோ; உன்பக்கல் ஸ்நேஹமில்லாதாரகத்திலே யிருந்து நீ விளையாடாதே இங்கேவாராய். தூசனம்சொல்லும் தொழுத்தைமாரும் தொண்டரும் நின்றவிடத்தில் நின்றும். இவ்வளவேயோ? இடைச்சிகளுக்கு அடிச்சிகளாய்ப் போருகிறவர்களும் இடையர்க்கு அடியாய்ப்போருகிறவர்களும் உனக்குச்சொல்லுகிற தூஷணங்களுக்கு ஓரவதியில்லைகாண்; அவர்கள் நின்றவிடத்தில் நில்லாதேபோராய். இப்படி சொன்னவிடத்திலும் அவன் வாராமையாலே, தாய்சொல்லுக்கொள்வது தன்மங்கண்டாய் என்றிரக்கிறுள். பெற்ற தாய்வசநங் கொள்ளுகை பிள்ளைகளுக்கு தர்மங்காண்; நீ தான், †பிறந்தபோதே மாத்ர்வசந பரிபாலநம் பண்ணினவனன்றே. தாமோதரா. கயிற்றையிட்டு வயிற்றிலே கட்டலாம்படி எனக்குத்தான் முன்பு ப்வ்யனுயிருந்தவனுமன்றே. இங்கேபோதராயே. ஆனபின்பு, என் சொல்லே¶மறுதே இங்கேவாராய். ... ... அ.

அ. ஒன்பதாம்பாட்டு. "தாமோதரா விங்கேவாராய்" என்றழைத்தவிடத்திலும் வாராதே வேறேயொரு க்ருஹத்திலே போய்ப்புக்கு, அவர்கள் சமைத்துவைத்த அபூபாதிகளையடைய வாரிஜீவிக்கை முதலான தீம்புகளைச்செய்ய, அவ்வகத்துக்குக் கடவளானவள் வந்து முறைப்பட்டு "உன்பிள்ளையை யிங்கேயழைத்துக்கொள்ளாய்" என்றபடியைச் சொல்லுகிறது.

மூ.—கன்னலிலட்டுகத்தோடீடை காரெள்ளிலுண்டை கலத்திலிட்டு
என்னகமென்றுநான் வைத்துப்போந்தேனிவன் புக்கவற்றைப்பெறுத்திப்போந்தான்
பின்னுமகம்புக்குறியைநோக்கிப் பிறங்கொளிவெண்ணெயுஞ் சோதிக்கின்றுன்
உன்மகன்றன்னை யசோதைநங்காய் கூவிக்கொள்ளா யிவையுஞ்சிலவே. கூ.

பதவுரை.

அசோதைநங்காய்! - ;
கன்னல்— கருப்புக்கட்டிப் பாகுடன்சேர்ந்த
இலட்டுகத்தோடு— லட்டுகத்தோடு
சீடை— சீடையும்
கார் எள்ளில் உண்டை— காரெள் இட்டு வாரின எள்ளுண்டையும்
கலத்தில்— கலத்திலே
வைத்திட்டு— வைத்து
என் அகம் என்று— 'என்னகமாகையால் இங்குப் புகுவாரிலலை' என்றுநினைத்து
நான் போந்தேன் — நான் வெளியேயவந்தேன்;

(அவ்வளவில்,)
இவன்— இப்பிள்ளையானவன்
புக்கு— அங்கேபுகுந்து
அவற்றை— அப்பணியாரங்களை
பெறுத்தி— ‡ நான்பெறும்படி பண்ணி
போந்தான்— வந்தான்;
பின்னும்— மறுபடியும்
அகம்புக்கு— வீட்டிலேபுகுந்து
உறியை நோக்கி— உறியைப்பார்த்து

‡ இது வ்யதிரேகாக்தி: அதாவது அவற்றில் எனக்கு ஒன்றும் சேஷியாதபடி தானே களவுகண்டானென்கை.

† சதுர்ப்புஜரூபோபஸம்ஹரணத்தைத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார்.
¶ மறுதே - இரஸ்கரியாமல்.

பிறங்கு ஒளி— மிகவும் செவ்வியையுடைய வெண்ணெயும்—, பசு வெண்ணெயும் உண்டோ வென்று சோதிக்கின்றான்— ஆராயாநின்றான்; (இத்தீம்புகளெனக்குப் பொறுக்கப் போகாமையால்,)

உன் மகன்தன்னை— உன்பிள்ளையை கூவிக்கொள்ளாய் — அழைத்துக்கொள்; இவையும் — இப்படி இவனைத்தீம்பிலே கைவளர விட்டிருக்கிறவிதுவும் சிலவே— ஒரு பிள்ளைவளர்க்கைதானோ? என்றுசேரியிற்பெண்கள் முறையிடுகிறபடி.

வ்யா. கன்னல். கருப்புக்கட்டி. இது, மேற்சொல்லுகிறவை யெல்லாவற்றோடும் அன்வயித்துக் கிடக்கிறது. கருப்புவட்டோடே சமைத்தவை, வட்டிலுங்காட்டில் ரஸிக்குமிறை. இலட்டுகத்தோடு சீடை காரெள்ளிலுண்டை. இலட்டுகமாவது - ஓரடுபவிசேஷம். அத்தோடுசீடையையும், காரெள்ளிட்டுவாரின எள்ளுண்டையையும். கலத்திலிட்டு. அவற்றுக்கநுரூபமான பாத்ரங்களிலே யிட்டு. என்னகமென்றுநான் வைத்துப்போந்தேன். என்னகமன்றே, இங்குப் புகுவாரில்லையே யென்றுவைத்து நான் புறம்போந்தேன். இவன்புக்கவற்றைப் பெறுத்திப்போந்தான். நான் போந்தித அவகாசமாக இவன் சென்று புக்கு அவற்றை நான் பெறும்படி பண்ணிப்போந்தானென்று வ்யதிரேகமாகச் சொல்லுகிறாள். அதாவது - அவற்றில் எனக்கொன்றும் லபியாதபடி தானே ஜீவித்துப்போந்தானென்கை, பின்னுமகம்புக்குறியை நோக்கி. அதுபோராமல் மீண்டும் அகத்திலேபுக்கு உறியைப்பார்த்து. பிறங்கொளி வெண்ணெயும் சோதிக்கின்றான். மிகவும் செவ்வியையுடைத்தான வெண்ணெயுமுண்டோவென்று ஆராயாநின்றான். உன்மகனித்யாதி. யசோதைப்பிராட்டீ ! உன்னுடைய பிள்ளையானவனை அங்குநின்றும் தீம்புசெய்யாதே உன்னருகேயழைத்துக்கொள்ளாய். இவையும்சிலவே. இப்படி யிவனைத்தீம்பிலே கைவளரவிட்டிருக்கிற விவையும் ஒருபிள்ளை வளர்க்கையோ.

அன்றிக்கே, உன்மகன்றன்னை யசோதைநங்காய் கூவிக்கொள்ளாயென்று - குணபூர்த்தியையுடைய வசோதாய்! அவனும் உன்னைப்போலே குணபூர்த்தியையுடையனும்படி உன்னருகே யழைத்துக்கொள்ளா யென்றவாறே, என்னுடைய குணபூர்த்தியும் அவனுடைய தோஷங்களும் சொல்லிக்கதறுகையோ உங்களுக்குள்ளது, சிறுபிள்ளைகள் படலைத்திறந்(து)த குரம்பைகளிலேபுக்கு கண்டவற்றைப் பொறுக்கி வாயிலேயிடக்கடவதன்றே, உங்கள் பிள்ளைகள்தானே உங்களுக்கு வசவர்த்திகளாய்த் திரிகிறன என்று இவள் இவர்களை வெறுத்து விமுகையாக, அவன் செய்தவற்றுக்குமேலே, இவையும் சிலவேயென்று - இவள் இன்னுப்போலே சொல்லுகிறாளாகவுமாம். ... ... கூ.

அ. பத்தாம்பாட்டு. "உன்மகன்றன்னை யசோதை நங்காய் கூவிக்கொள்ளாய்" என்று ஒருத்திசொல்லி வாய்மாறுவதுக்குமுன்னே வேறே யொருத்திவந்து, தன்னுடைய க்ஷேத்ரத்தில் இவன்செய்த தீம்புகளை முறைப்பட்டபடியைச் சொல்லுகிறது.

கூ.—சொல்லிலரசிப்படுதிங்காய் குழலுடையனுன்பிள்ளைதானே
இல்லம்புகுந்தென் மகளைக்கூவிக் கையில்வளையைக் கழற்றிக்கொண்டு
கொல்லையினின்றுங் கொணர்ந்துவிற்ற வங்கொருத்திக் கவ்வளைகொடுத்து
கல்லனைநாவற்பழங்கள்கொண்டு நானல்லேனென்று சிரிக்கின்றானே. ய.

பதவுரை.

நங்காய் — குணபூர்ணையானயசோதாய்!
சொல்லில்— உன்மகன்செய்த தீம்புகளைச் சொன்னால்
அரசிப்படுதி— கோபியாநின்றாய்;
உன் பிள்ளைதான் — உன் பிள்ளையானவன்
சூழல் உடையன்— பற்பல வஞ்சகச் செய்கைகளை உடையனுயிராநின்றான்;
இல்லம் புகுந்து— என் வீட்டில்நுழைந்து
என்மகளை— என் பெண்பிள்ளையை
கூவி— பேர் சொல்லியழைத்து
கையில்— அவள்கையிலிருந்த
வளையை— அடையாளவளையை
கழற்றிக்கொண்டு— கழற்றிக்கொண்டுபோய்
கொல்லையில் நின்றும்— கொல்லையிலிருந்து
கொணர்ந்து — தெருவில் கொண்டுவந்து
அங்கு — அவ்விடத்திலே
விற்ற— நாவற்பழம்விற்ற
ஒருத்திக்கு— ஒருபெண்ணுக்கு
அவளை— அந்தவளையை
கொடுத்து— கொடுத்து
நல்லன—தன்மேனியாடொத்து அழகிதான
நாவல் பழங்கள்— நாவற்பழங்களை
கொண்டு— வாங்கிக்கொண்டு
(போரும் போராதென்று சொல்லுகிற வளவிலே நான் கண்டு 'இவ்வளை இவளுக்கு நீயோதந்தாய்?' என்று கேட்க;)
நான் அல்லேன் என்று— 'இவ்வளை கொடுத்தவன் நானல்லேன்காண்' என்று சொல்லிக்கொண்டு
சிரிக்கின்றான்— சிரியாநின்றான்.

வயா. சொல்லிலரசிப்படுதி நங்காய். முன்பே ஒருத்திசொன்னதுக்குமேலே புண்ணின்மேல் புண்ணைக இவளுமொருத்திவந்து தன்மகன் குறைகளைச் சொல்லப்புக்கவாறே, இதுவுமொரு சிலுமோ! என்று தாயான யசோதைப்பிராட்டி குபிதையாக; நங்காய்! உன் பிள்ளை செய்தவற்றைச்சொல்லில் நீ கோபியாநின்றாய். சூழலுடையன் உன்பிள்ளைதானே- உன்பிள்ளையானவன்றானே துஸ்ஸஹமாய் உனக்குவந்து சொல்லியல்லது நிற்கவொண்ணாத படியான சூழல்களை யுடையனுயிராநின்றான். சூழலாவது-சூழ்ச்சி. அதாவது- நானாவான க்ர்த்ரிமவகைகள். அவற்றில் இவனுக்கில்லாதது இல்லைகாணென்ன; இப்படி சொல்லுகைக்கு அவன் இப்போது துஸ்ஸஹமாகச் செய்ததுதான் ஏது, அத்தைச் சொல்லென்னச் சொல்லுகிறாள்மேல்; இல்லம் புகுந்தென் மகளைக்கூவி. என்னகத்திலே புகுந்து என்மகளைப் பேரைச் சொல்லியழைத்து. கையில்வளையைக் கழற்றிக்கொண்டு. அவள்கையில் ‡அடையாளவளையைக் கழற்றிக்கொண்டுபோய். கொல்லையித்யாதி. கொல்லையில் நின்றும் கொடுவந்து, அங்கே நாவற்பழம் விற்கிறவொருத்திக்கு அவ்வளையைக்கொடுத்து. நல்லன நாவற்பழங்கள்கொண்டு. தனக்கேறவழகிதான நாவற்பழங்கொண்டு, போரும் போராது என்று சொல்லுகிறவளவிலே நான்கண்டு, "இவ்வளை உனக்குவந்தபடி யென்" என்று அவளைக்கேட்க, அவள் "இவன் தந்தான்" என்ன; "நீயோ இவளுக்கு வளைகழற்றிக் கொண்டுகொடுத்தாய்" என்ன; நானல்லேனென்று சிரிக்கின்றானே. "நானல்லேன்காண், என்கையில் வளைகண்டாயோ, நான் உன் இல்லம் புகுகிறது கண்டாயோ, உன் பெண்ணைப் பேரைச்சொல்லியழைக்கிறதைக் கேட்டாயோ, வந்து கையில் வளைகழற்றினது கண்டாயோ, கண்டாயாகில் உன்வளையை யங்கேபறித்துக்கொள்ளாவிட்டதென்" என்றுற்போலே எனக்கு மறுநாக்கெடுக்க விடமில்லாதபடி சில வார்த்தைகளைச் சொல்லிநின்று சிரியாநின்றான், இதிற் காட்டிலுண்டோ துஸ்ஸஹமான தீம்பென்கை. ... ...

‡ நாவற்பழம் விற்கிறவளிடத்தில் கண்டு கேட்கவேண்டும்படி யிருக்கையாலே 'அடையாளவளை' என்று விசேஷித்தருளிச் செய்கிறார்.

அ. நிகமத்தில், இத்திருமொழி கற்றார், தமக்கு ப்ராப்யராவ ரென்கிறார்.

மூ.—வண்டுகளித்திரைக்கும் பொழில்சூழ் வருபுனற்காவிரித் தென்னரங்கன்
பண்டவன்செய்த கிரீடையெல்லாம் பட்டர்பிரான் விட்டுசித்தன்டாடல்
கொண்டிவைபாடிக் குனிக்கவல்லார் கோவிந்தன்றன் னடியார்களாகி
வண்டிசைக்கும் விளக்காகிநிற்பா ரிணையடியேன் றலைமேலனவே. கக.

பதவுரை.

வண்டி— வண்டுகளானவை
களித்து— மதுபானத்தாலே களித்து
இரைக்கும்— பேரொலியாய்ப் பாடாநிற்கிற
பொழில்— சோலைகளாலும்
வரு— அச்சோலைகளுக்காகப் பெருகிவாரா
நின்ற
புனல்— நீரையுடைத்தான
காவிரி— திருக்காவேரியாலும்
சூழ்— சூழப்பட்டதாய்
தென்— அழகிதான
அரங்கன்— திருவரங்கத்தில் வர்த்திக்கிற
அவன்— அப்படிப்பட்டவைபவத்தை யுடை
யனானவன்
பண்டு— லீபவாவதாரத்திலே
செய்த— செய்தருளின
கிரீடை எல்லாம்— லீலையாட்டச் செய்கை
களெல்லாவற்றையும்
விட்டு சித்தன்— விஷ்ணுவை மநஸ்ஸிலே
உடையராய்
பட்டர் பிரான்— ப்ராஹ்மணோத்தமரான
பெரியாழ்வார்பாடின
பாடல்— பாடலாகிய
இவை கொண்டு— இப்பாசுரங்களைக்கொண்டு
பாடி— வாயாரப்பாடி
குனிக்க வல்லார்— உடம்பு இருந்தவிடத்
திலிராதே ஆடவல்லவர்களாய்
கோவிந்தன் தன்— கோவிந்தனான கண்
ணனுக்கு
அடியார்கள் ஆகி— தாஸபூதர்களாய்
கட்டு திசைக்கும்— கட்டுதிக்கிலுமுள்ள
இருள்நீங்கும்படி
விளக்கு ஆகி நிற்பார்— விளக்காக விளங்கி
நிற்குமவர்களுடைய
இணை— சேர்த்தியழகையுடைத்தான
அடி— திருவடிகள்
என்தலைமேலன— என்தலைமேலே வர்த்
திக்குமவைகளாயிருக்கும்.
[அவர்கள் திருவடிகளை என்சென்னியிற்
சூடுவேன் என்றபடி.]

வ்யா. வண்டித்யாதி. வண்டுகளானவை மதுபானத்தாலே களித்துப்பாடுகிற கோஷத்தை யுடைத்தான பொழில்களாலும், பொழில்களுக்கு தாரகமாகப்பெருகி வாராநின்றுள்ள புனலையுடைத்தான காவிரியாலும் சூழப்பட்டு, திருமதில்களும் திருக்கோபுரங்களும் திருவீதிகளும் * மாடமாளிகைகளுமான இவற்றோட்டைச் சேர்த்தியால்வந்த அழகையுடைத்தாயிருந்துள்ள * திருவரங்கப்பெருநகரிலே நித்யவாஸம்பண்ணுகிற வைபவத்தை யுடையனானவன் முன்புசெய்த லீலாசேஷ்டிதங்களெல்லாவற்றையும். பட்டர்பிரானித்யாதி. ஸர்வவ்யாபகனான விஷ்ணுவை மநஸ்ஸிலையுடையராய் ப்ராஹ்மணோத்தமரான பெரியாழ்வார் பாடின பாடலான விவற்றைக்கொண்டு. பாடிக்குனிக்கவல்லார். ப்ரீதிப்ரேரிதராய்ப்பாடி, உடம்பு இருந்தவிடத்திலிராதே விக்தராய் ஆடவல்லவர்களாய். கோவிந்தனித்யாதி. இந்த சேஷ்டிதங்களெல்லாம்செய்த கோவிந்தனுக்கே அடியார்களாய், தங்களுடைய ஸங்நிதி விசேஷத்தாலே எட்டுதிக்கிலுமுண்டான அந்தகாரம்போம்படி ப்ரகாசகராய்க்கொண்டு நிற்குமவர்களுடைய. இணையடியென்றலைமேலனவே. சேர்த்தியழகையுடைத்தான திருவடிகளானவை, என்தலைமேலே ஸர்வகாலமும் வர்த்திக்குமவைகளென்கிறார்.

இத்தால் " ஒதவல்லபிராக்கள் நம்மையாளுடையார்க்கு பண்மேட் " என்னுமாப் போலே, இத்தை யப்யஸித்தவர்களுடைய வைபவத்தையும் அவர்கள்பக்கல் தமக்குண்டான கௌரவப்ராபத்திஸ்யயுமருளிச் செய்தாராய்த்து. ... ... கக.

பெரியஜீயர் திருவடிகளே சரணம்.

———(*)———

அடி வரவு—வெண்ணெய் வருக திருக்கோண்டல் பாலே போதர்
செங்கேல் கேசவன் கன்னல் சொல்லில் வண் டாற்றில்.

ஆ - திருமொழி, கஅ - க்கு, பாட்டு - உ00.

அ. கீழில் திருமொழியிலே - ஊரில் ஸ்த்ரீகளானவர்கள் தந்தாமகங்களில் இவன் செய்த தீம்புகளைச்சொல்லி, தாயாரான யசோதைப்பிராட்டிக்கு வந்து முறைப்பட்டு " உன் மகனை யிங்கேயழைத்துக்கொள்ளவேணும் " என்றபடியையும், அதுக்கீடாக அவள் அவனை யழைத்த ப்ரகாரங்களையும் சொல்லுகையாலே அவன் ஊரிலகங்கள்தோறும்செய்த நவநீத சௌர்யாதி க்ரீடா விசேஷங்களை யநுபவித்தாராய் நின்றார்; ப்ராப்தயௌவனைகளான பெண்களோடே அவன் $ இட்டிடுகொண்டு விளையாடுகையாலே அவனுழீடுபட்டபெண்கள், மாதாவான யசோதைப்பிராட்டிபக்கலிலே வந்து, தங்கள் திறத்தில் அவன்செய்த தீம்பு களிலே சிலவற்றைச்சொல்லி, ஆச்ரிதவிரோதி நிரஸநசீலனும், ஆச்ரிதரக்ஷகனும், ஆச்ரிதர் கட்டவுமடிக்கவுமாம்படியெளியனும், ஆச்ரிதர்க்கு நற்சீவனனதன்னை, பூதனைகையில் அகப் படாமல் நோக்கிக்கொடுத்தவனும், ஆச்ரிதர்க்குத் தன்னையழியமாறியும் கார்யம்செய்யுமவ னும், ஆச்ரிதர் ஆர்த்தியறிந்துசென்று உதவுமவனும், நித்யாச்ரிதையான பூமிப்பிராட்டிக்காக நிமக்நையான பூமியை உத்தரித்தவனும் இப்படி ஸர்வவிஷயமாக உபகாரங்களைப் பண்ணின வன் எங்கள் திறத்தில் அபகாரங்களைச் செய்பாநின்றான், ஆனபின்பு இவன்கீழ் ஜீவிக்கப் போகாது, இவனைலோகங்கள் இன்றுமுடிவுதோறும் என்று பலகாலும்சொல்லி முறைப்பட்ட ப்ரகாரத்தை, தாமுமப்படியேபேசி, அவனுடைய அந்த லீலாவ்யாபார ரஸத்தை அநுபவிக் கிறார் - இத்திருமொழியில்.

மூ.—ஆற்றிலிருந்து விளையாடுவோங்களைச்
சேற்றுலேறிந்து வளைதுகில் கைக்கொண்டு
காற்றிற்கடியனுயோடி யகம்புக்கு
மாற்றமுந்தாரானு லின்றுமுற்றும்
வளைத்திறம் பேசானுலின்று முற்றும். க.

$ இட்டிடுகொள்ளுகையாவது - ஒன்றுகொடுத்து, ஒன்றுவாங்குகை; இதுதானும் வார்த்தாவிஷயத்திலெனக்கொள்க.

பதவுரை.

ஆற்றில் இருந்து—யமுனையாற்றங்கரை மண லிலிருந்து
விளையாடுவோங்களை — தோழிகளுடன் விளையாடுகிற எங்கள்மேல்
சேற்றால் எறிந்து— சேற்றையிட்டெறிந்து
வளை— எங்கள் வளைகளையும்
துகில்— புடவைகளையும்
கைக்கொண்டு— வாரிக்கொண்டு
காற்றில்— காற்றிற் காட்டிலும்
கடியனுய்— வேகசாலியாய் [மிகவும் த்வரிதனுய்]
ஓடி— ஓடி
அகம் புக்கு— வீட்டினுள்ளே நுழைந்து
மாற்றமும் தாராஞல்— நாங்கள் கூப்பிட்டு இரந்தாலும், அதற்கு ஒரு மறுமொழியும் கொடாத கண்ணனுல்
இன்று முற்று (த) ம்— இன்று ‡ முடிவோம்;
வளைத்திறம்— வளையின் விஷயமாக
பேசாஞல்— தருவன், தாரேன் என்பவற்றிலொன்றும் பேசாதவனுலே
† இன்றுமுற்றும்.

‡ இது - வயிறெரிந்து சொல்லும்வார்த்தை. உயிரை இழக்கக்கடவோ மென்றபடி.
† இருகாற்சொல்லுகிறது - ஆற்றுமையின் மிகுதி.

வ்யா. முதற்பாட்டு. ஆற்றிலிருந்து. சிலர் “ எங்களது ” என்றபிமானிக்கும் நிலத்திலே யிருந்தோமோ, ஸர்வஸாதாரணமான ஸ்தலத்திலேயன்றே நாங்களிருந்தது. இத்தால் ஏகாந்தமாய், இவனுக்குவந்து தீம்புசெய்ய வொண்ணாதபடி பலரும் போவார் வருவாரான ஸ்தலத்திலேயன்றே நாங்களிருந்ததென்கை. விளையாடுவோங்களை. விளையாடுகிறவெங்களை. தன்னையொழிய நாங்கள் அந்யபரைகளன்றே; தன் இடையாட்டம்பட்டோமோ: நாங்கள் முன் தீமை செய்தோமாகிலுமாமிறே; தன்னைக்கடைக்கண்ணுல் கணிசித்தோமோ: தன்னை யிங்கிட்டெண்ணினுரில்லையிறே. சேற்றுலெறிந்து. சேற்றையிட்டெறிந்து. பிறரறியாதபடி கைகளாலே ஸ்பர்சித்தாலாகாதோ; “ இதேது ” என்று பிறர்கண்டு கேட்கும்படி சேற்றையிட்டெறியவேணுமோ. வளைதுகில்கைக்கொண்டு. நாங்கள் குளிக்கைக்காகக் களைந்திட்டு வைத்தவளைகளையும் துகில்களையும் வாரிக்கொண்டு. இடைப்பெண்களாகையாலே ஆபரணங்களும் பரியட்டங்களும் களைந்திட்டுவைத்திறே குளிப்பது. காற்றிற்கடியனுயோடி. துடர அகப்படாதே காற்றிலுங்காட்டில் கடியனுயோடி. தன்ஜீவநத்தில் ஒன்றும் குறையாதபடி கொண்டால், எங்கள் ஜீவநத்தையும் கொண்டுபோகவேணுமோ. அவனுக்கு ஜீவநம் இவர்களுடைய வளைகளும் துகில்களும்; இவர்களுக்கு ஜீவநம் அவன்றன்னுடைய வடிவிறே. அகம் புக்கு. பின்தொடர்ந்துசென்றுலும் காணப்போகாதபடி தன்னகத்திலேசென்றுபுக்கு. வழி பறித்து அஸாதாரண ஸ்தலத்திலே யாய்த்திருப்பது. மாற்றமும்தாராஞலின்றுமுற்றும். நாங்கள் தன்பேரைச் சொல்லியழைத்தாலும் அதுக்கு ஒருமறுமாற்றந்தானும் சொல்லுகிறனில்லை; வார்த்தையும், ஏதேனும்வளையும் துகிலுமோ; ஒரு வார்த்தைதன்னையாகிலும் தந்தாலாகாதோ. இப்படி ஒருவார்த்தையுமுட்படச் சொல்லாதவனுலே இன்றுமுடிவோம். ஒரு வார்த்தைபெறில் ஜீவிப்பார்போலேகாணும். வளைத்திறம்பேசாஞலின்றுமுற்றும். தருவனென்னுதல், தாரேனென்னுதல், வளையிடையாட்டமாக ஒன்றும் சொல்லாதவனுலே இன்றுமுடிவோம். “முற்றுதும்” என்கிறவிது, “முற்றும்” என்று குறைந்துகிடக்கிறது. முற்றுதல் முற்றலாய்; அதாவது - முடிவாய், முற்றுமென்றது - முடிவோமென்றபடி. ... அ

மூ.—குண்டலந்தாழக் குழல்தாழநாண்தாழ
எண்டிசையோரு மிறைஞ்சித்தொழுதேத்த
வண்டமர்பூங்குழலார் துகில்கைக்கொண்டு
விண்டோய்மரத்தாலு லின்றுமுற்றும்
வேண்டவுந்தாராலு லின்றுமுற்றும். உ.

214

பதவுரை.

குண்டலம்— காதுப்பணிகள்
தாழ— தோளளவும் தாழ்ந்தசைய
குழல்— திருக்குழற்கற்றை
தாழ— அத்தோடொக்கத் தாழ்ந்தசையவும்
நாண்— திருக்கழுத்திற் சாத்தின விடுநாணனது
தாழ— திருவுந்தியளவும் தாழ்ந்தசையவும்
எட்டு திசையோர்கும்— எட்டு திக்கிலுமுள்ள தேவர், முனிவர் முதலியவர்களெல்லாரும்
இறைஞ்சி) ஸாஷ்டாங்கமாக
தொழுது— வணங்கி
ஏத்த— ஸ்துதிக்கவும்
வண்டு அமர்— வண்டுகள் படிந்துகிடக்கிற
பூ— பூக்களா லலங்கரிக்கப்பட்ட
குழலார்— மயிர்முடியையுடைய ஸ்த்ரீகளுடைய
துகில்— புடவைகளை
கைக்கொண்டு— வாரிக்கொண்டு
விண் தோய்— ஆகாசத்தை அளாவிய
மரத்தாலுல்— குருந்தமரத்தின் மேலேறியிரா நின்றவனுல்
இன்று முற்றும்;
வேண்டவும்— "துகிலப்பணித்தருளாய்" என்று வேண்டினாலும்
தாராலுல்— அவற்றைக் கொடாதவனுல்
இன்று முற்றும்.

வ்யா. இரண்டாம்பாட்டு. குண்டலந்தாழக்குழல்தாழநாண்தாழ. குண்டலம் - காதுப் பணி. அதுதிருத்தோள்களளவும் தாழ்ந்தசைய, திருக்குழல்களும் அதுக்கு பரபாகமாம் படி அத்தோடொக்கத்தாழ்ந்தசைய, திருக்கழுத்திற்சாத்தின விடுநாணனது திருவுந்தியளவும்தாழ. எண்டிசையோரு மிறைஞ்சித் தொழுதேத்த. எட்டுதிக்கிலுமுண்டான தேவமநுஷ்யாதிகளெல்லாம் இவ்வடிவழகையும் சேஷ்டிதவைலக்ஷண்யத்தையும் கண்டு பக்தாபிமானராய் வணங்கி ஸ்தோத்ரமபண்ண. வண்டமர்பூங்குழலார் துகில்கைக்கொண்டு. வண்டுகள்மாறுதபூக்களாலே அலங்கர்தமான குழலையுடையவர்களுடைய, கரையிலே யிட்டு வைத்த பரியட்டங்களைக் கைக்கொண்டு. விண்டோய்மரத்தாலுலின்றுமுற்றும். இவர்களுக் கெட்டாதபடி விண்ணிலேதாய வளர்ந்த குருந்தமரத்திலேயிருந்தவனுல் இன்றுமுடிவோம். வேண்டவும் தாராலுலின்றுமுற்றும். "துகிலப்பணித்தருளாய்" என்றபேக்ஷிக்கவும் கொடாதவனுலே இன்றுமுடிவோம். ... ... உ.

மூ.—தடம்படுதோமரைப் போய்கைகலக்கி
விடம்படுநோக்கத்தை வால்பற்றிவீர்த்துப்
படம்படவைந்தலை மேலெழப்பாய்ந்திட்
டடம்பையசைத்தாலு லின்றுமுற்று
முச்சியினின்றுலு லின்றுமுற்றும். ங.

215

பதவுரை.

தடம் பட— விசாலமான
தாமரை பொய்க்கை—தாமரைப் பொய்கையை
கலக்கி — (உள்ளேகுதித்து) கலங்கப் பண்ணி
விடம் பட— அதனுல் சீறி விஷத்தை உமிழ்ந்து கொண்டு கிளர்ந்த
நாகத்தை— காளியுலர்ப்பத்தை
வால் பற்றி ஈர்த்து— வாலைப்பிடித்திழுத்து
படம் படு— படத்தையுடைத்தாய்
பை— கோபத்தாலே விஸ்தர்தமான
தலை மேல்— அதன் தலைமேலே
எழ பாய்ந்திட்டு— அதிர்த்தியாலே விஷத்தைக் கக்கும்படி கிளரக்குதித்து
உடம்பை— திருமேனியை
அசைத்தானல்— அசைத்து ஆடினவனுலே இன்று முற்றும்-;
உச்சியில்— அக்காளியன் படத்தின்மேல்
நின்ருனல்—அவனிளைத்து விழுந்து சரணம் புகுமளவும் நெருங்க மிதித்து நின்றவனுலே இன்று முற்றும்.

வ்யா. மூன்ரும்பாட்டு. தடமித்யாதி. இடமுடைத்தான தாமரைப்பொய்கையென்றிறே ப்ரஸித்தி- காளியன் புகுவதற்குமுன்பு; பின்பிறே *ஈச்சமுல் பொய்கையாயிற்று. இப்படிப்பட்ட பொய்கையை; (க) "ஜீவவாதஹ்ரதே தத்ர ஸர்ப்பராஜஸ்ய வேகதஃ। தேஷாநிபததாதத்ர ஸோமிதஸ்ய மஹாஹ்ரதஃ॥" என்கிறபடியே பெரிய விசையோடே உள்ளேகுதித்துக் கலங்கப்பண்ணி. விடம்படுநோகத்தை வால்பற்றி யீர்த்து. இப்படி கலக்கினவாறே (உ) க்ருத்தனுய், விஷத்தையுமிழ்ந்துகொண்டுகிளர்ந்த காளியனுகிற லர்ப்பத்தை ஒரு சரக்காக நினையாதே வாலைப்பிடித்திழுத்து. படம்படுவைத்தலே மேலெழப்பாய்ந்திட்டு படத்தையுடைத்தாய், கோபத்தாலே விஸ்தர்தமான அதின்தலைமேலே, அதிர்த்தியாலே விஷத்தைக் கக்கும்படி கிளரக்குதித்து. உடம்பையசைத்தானலின்றுமுற்றும். காளியனுடைய த்ரோதத்தையும், கிளர்த்தியையும், அவன்பணங்களிலே இவன் சென்று குதித்தபடியையும் கரையிலே நின்றுகண்டு, "இப்பாம்பின்வாயிலே அகப்பட்டப்புகுகிருனித்தனே, எல்லாரும் முடிந்தோம்" என்று படுக்காடுபட்டு விழுந்துகிடக்கிற அநுகூலரான (ங)கோபகோபீஜநங்கள் தரித்தெழுந்திருக்கும்படியாக, அங்கேகின்று திருமேனியை அசைத்தாடினவனுலே இன்று முடிவுதோம். உச்சியில்நின்ருனலின்றுமுற்றும். அவன் இளைத்து விழுந்து சரணம்புகுமளவும் அந்த பணத்தின்மேலே நெருங்கமிதித்து நின்றவனுலே இன்று முடிவுதோம். இத்தால்- ப்ரதிகூலரை (ச) தமித்து, அநுகூலரானவர்களுடைய வயிற்றெரிச்சலைப் போக்கினவன், ஸ்வசேஷ்டிதங்களாலே எங்களை இப்படி வயிறெரியும்படிபண்ணுநின்ருன்; ஆனபின்பு, அவனுலே நாங்கள் இன்றுமுடிவுதோமென்கை. இருகாற்சொல்லுகிறது - ஆற்றுமையினுடைய அதிசயம். ... ... ங.

மூ.—தேனுகனுவி சேகுத்துப் பனங்கனி
தானெறிந்திட்ட தடம்பெருந்தோளினல்
வானவர்கோன்விட வந்தமழைதடுத்
தாநிரைகாத்தானு லின்றுமுற்று
மவையுய்யக்கொண்டானு லின்றுமுற்றும். ச.

(க) "நிபபாத ஹ்ரதே தத்ர ஸர்ப்பராஜஸ்ய வேகதஃ। தேஷாநிபததாதத்ர ஸோமிதஸ்ய மஹாஹ்ரதஃ॥ (உ) க்ரூ-உனுய்-கோபத்தையுடையனுய். (ங)மொவமொவீஜந. (ச) தமித்து - நிரஸித்து.

பதவுரை.

தேனுகன்— தேனுகாஸுரனுடைய
ஆவி— உயிரை
செகுத்து— முடித்து
*பண கனி— ஆஸுரமான பனைமரத்தின் பழங்களுதிரும்படி
தான்— தான்
எறிந்திட்ட— (அத்தேனுகனை) வீசியெறிந்த
தட பெரு— மிகவும் பெரிய
தோளினால்— தோளாலே
வானவர் கோன்— தேவேந்திரன்
விட— ஏவ
வந்த— வர்ஷிக்கவந்த
மழை— மழையை
தடுத்து— மலையைபெடுத்துத்தடுத்து
ஆ நிரை— பசுக்கூட்டத்தை
காத்தவனால்— ரக்ஷித்தவனுலே
இன்று முற்றும் - ;
அவை— அவற்றை
உய்யக் கொண்டானால்— உஜ்ஜீவிப்பித்த வனால்
இன்று முற்றும்.

* "பணமுன்.....வலிவரின் ஐம்போயம் மும்....." என்ற நன்னூற் சூத்திரத்தை நினைக்க.

ஐயா நாலாம்பாட்டு. தேனுகனித்யாதி. (க); "ஸ்ரீமதீ ஸுவர்ணலங்காபுரீ தத்ரத்யோ ராஜா தேனுகாஸுரோ நாம ராக்ஷஸாதிபதி: । தஸ்ய ஸஹோதரோ

பதவுரை.

சேரி— சேரியிலே
ஆய்ச்சியர்— இடையர்கள்
அளை— மத்தைநாட்டியுடைத்த
தயிர்— (கடைவதாகவைத்த) தயிரையும்
பால்— (காய்ச்சுவதாகவைத்த) பாலையும்
உண்டு— அமுது செய்து
போர்த்து— பின்னையுமொருக்கால் வெண்ணெய் களவு காணப்புக்கவளவிலே
அவர்— அவ்விடைச்சிகள்
கண்டு— ஒளித்திருந்து கண்டு
பிடிக்க— கையிலகப்படுத்திக் கொள்ள
பிடி உண்டு— அவர்கள் கையிலே பிடிபட்டு
வேய்— மூங்கிலையொத்திராய்
தட— சுற்றுடைமையுள்ள
தோளினர்— தோள்களையுடையவர்களுடைய
வெண்ணெய்— வெண்ணெயை
கொள்ளாட்டாது— அபஹரிக்கமாட்டாமல்
அங்கு— அவர்கள்வீட்டில்
ஆப்புண்டு இருந்தானை— கட்டுண்டிருந்தவனை
இன்று முற்றும்;
அடி உண்டு— அவர்கள் கையாலடியுண்டிருந்து
அழுதானை— அழுதவனுமே
இன்று முற்றும்.

வ்யா. ஐந்தாம்பாட்டு. ஆய்ச்சியர்சேரி. இடைச்சிகள்சேரியிலே. அளைதயிர்பாலுண்டு. அவர்கள் கடைவதாக மத்தாநாட்டியுடைத்தவளவிலே வைத்ததயிரையும், காய்ச்சுவதாகவைத்த பாலையு மமுதுசெய்து. அன்றிக்கே, அளைதயிரென்றது - அபிநிவேசாதிசயத்தாலே தன்கையுள்ளளவும் போகவிட்டு அளையப்பட்ட தயிரென்னவுமாம். போர்த்தவர் கண்டு பிடிக்கப்பிடியுண்டு. "மீண்டு ஒருகால் வெண்ணெய் களவுகாண" என்று புகுந்தவளவிலே, அவர்கள் ஒளித்திருந்து கண்டுபிடிக்க அவர்கள் கையிலேபிடிபட்டு. வேயித்யாதி. பருமையாலும் சுற்றுடைமையாலும் வேய்போலேயிருப்பதாய், பெரிதாயிருந்துள்ள தோளையுடையவர்களுடைய வெண்ணெயை அபஹரிக்கமாட்டாதே. அங்கித்யாதி. அங்கேயவர்கள் கட்டக் கட்டுண்டிருந்தவனுமே இன்றுமுடிவுதோம். அடியுண்டித்யாதி. கட்டினவளவு மன்றிக்கே, அவர்களடிக்க அவர்கள்கையாலே அடியுண்டிருந்தழுதவனுமே இன்றுமுடிவுதோம்.

இத்தால் - அறுகூலிகளான அபலைகளுக்கு, கட்டிவைக்கலாம்படி பவ்யனாயிருந்தவன், எங்களுக்கு அபவ்யனாய் மிறுக்குக்களைப் பண்ணாநின்றான்; ஆனபின்பு, அவனுமே நாங்கள் இன்றுமுடிவுதோ மென்கை. ... ... ரு.

மு.—தள்ளித்தளர்நடை யிட்டிளம்பிள்ளாயாய்
உள்ளத்தினுள்ளே யவனுயுறநோக்கிக்
கள்ளத்தினல்வந்த டேய்ச்சிமுலையுயிர்
துள்ளச்சுவைத்தானு லின்றுமுற்றும்
துவக்கறவுண்டானு லின்றுமுற்றும். சு.

பதவுரை.

தள்ளி— தடுமாறி
தளர் நடை இட்டு— காலூன்றி நடக்கத் தரிப்பில்லாமையாலே தளர் நடை யிட்டு
இள பிள்ளை ஆய் — இளம்பிள்ளையாயிருக்கச்செய்தே
உள்ளத்தின் உள்ளே— தன்நெஞ்சினுள்ளே

அவளை— அவளை [பூதனையை]
உறநோக்கி— நம்மை நலியவருகிறாள்'
என்று உறைக்கப்பார்த்து
கள்ளத்தினால் வந்த— கர்த்திமமா கவந்த
பேய்ச்சி— பூதனையின்
முலை— முலைப்பாலோடே
உயிர்— அவளுடைய ப்ராணனையும்
துள்ள— அவள் துடிக்கும்படி
சுவைத்தானுல்— பசையற உண்டவனுலே
இன்று முற்றும் - ;
துவக்கு அற— அந்தவிஷத்தில் தனக்கெகாரு
ஸ்பர்சமில்லாதபடி
உண்டானுல்— உண்டவனுலே
இன்று முற்றும்.

வ்யா. ஆரும்பாட்டு. தள்ளித்தளர்நடையிட்டு. காலூன்றி நடக்கத்தரிப்பில்லாமையாலே தடுமாறித்தளர்நடையிட்டு. இளம்பிள்ளையாய் (சு) முக்தசிசுவாய். இத்தால் - நடக்கைக்குங்கூட பலமில்லாத அதிபாலனுயிருக்கச்செய்தே யென்கை. உள்ளத்தினுள்ளே அவளையுறநோக்கி. பிறர்க்குத்தெரியாதபடி தன்மநஸ்ஸினுள்ளே "நம்மை நலிவதாக வருகிறவள் இவள்" என்று அவளை உறைக்கப்பார்த்து. கள்ளமித்யாதி. தன்வடிவை மறைத்துத் தாய்வடிவைக்கொண்டு கர்த்திமத்தாலேவந்த பூதனையுடைய முலைப்பாலோடே அவளுயிரையும் அவள் துடிக்கும்படி பசையற வுண்டவனுலே இன்று முடிவுதோறும். துவக்கறவித்யாதி. அவள்நச்சுமுலையை யுண்ணுநிற்கச்செய்தே, அந்நஞ்சில் தனக்கொரு ஸ்பர்சமற வுண்டவனுலே யின்று முடிவுதோறும்.

இத்தால் - ஆச்ரிதர்க்கு நற்சீவனை தன்னே பூதனைகையில் அகப்படாமல் நோக்கி உபகரித்தவன், எங்களுக்குத் தன்னைத் தாராமல் அருமைப்படுத்தாநின்றுன்; ஆனபின்பு, அவனுலே நாங்கள் இன்று முடிவுதோறுமென்கை. ... ...சு.

மூ.—மாவலிவேள்வியின் மாணுருவாய்ச்சென்று
மூவடிதாவென் றிரந்தவிம்மண்ணினை
ஓரடியிட் டிரண்டா மடிதன்னிலே
தாவடியிடடானு லின்றுமுற்றும்
தரணியளந்தானு லின்றுமுற்றும். எ.

மாவலி— மஹாபலியின்
வேள்வியில்— யஜ்ஞவாடத்திலே
மாண் உரு ஆய்— ப்ரஹ்மசாரி வேஷத்தை
யுடையனுய்
சென்று— போய்
மூ (ன்று) அடி தா என்று— 'என்கா
லாலே மூன்று அடிதா' என்று
இரந்து— யாசித்து நீரேற்றுப் பெற்ற
இ மண்ணினை— இந்த பூமியை
ஓர் அடி இட்டு— அதன் பரப்படங்கலும்
தனக்குள்ளேயாம்படி ஒரு அடியைஇட்டு
இரண்டாம் அடி தன்னிலே— இரண்டாவ
தான அடியிலே
தாவு அடி இட்டானுல்— மேலுலகங்களெல்
லாம் தனக்குள்ளேயாம்படி தாவியடி
யிட்டவனுலே
இன்று முற்றும்;
* தரணி— பூம்யாதிலோகத்தை
அளந்தானுல்— அளந்தவனுலே
இன்று முற்றும்.

* "பரணி" என்னும் வடசொல்லின் திரிபு.

வ்யா. ஏழாம்பாட்டு. மாவலிவேள்வியில். இந்த்ரனுடைய ஐச்வர்யத்தை பலத்தா லே அபஹரித்துக்கொண்டு, " கோவாகிய மாவலி " என்கிறபடியே தன்னரசாய், அழிக்கவொண்ணாதபடி ஔதார்யமென்பதாரு குணத்தையுடையனுமிருந்த மஹா பலியினுடைய யாகத்திலே. மாணுருவாய்ச்சென்று. " கள்ளக்குறளாய் " என்கி றபடியே - அவனை ஸ்வஸ்வாபஹாரம் பண்ணுகைக்காக வாமநரூபத்தைக் கொண்டு வடிவழகாலும் நடையெழகாலும் அவன் அபஹர்தசித்தனுய் தான் சொன்னதுமாருமற் செய் யும்படி சென்று. மூவடிதாவென்றிருந்த இம்மண்ணினை. அவன் சடக்கென இசைந்து தரு கைக்காகவும், பின்பு ஓரடிக்கு அவனைச் சிறைவைக்கைக்காகவும் " மன்காலாலே மூன்றடி தா " என்று இரந்துபெற்ற இப்பூமியை. மண்ணென்கிறவிது - மற்ற லோகங்களுக்கெல் லாம் உபலக்ஷணம். ஓரடியித்யாதி. அளக்கிறவளவிலே பூமிப்பரப்புக்களும் தனக்குள் ளே யாம்படி ஓரடியிட்டு இரண்டாமடி தன்னாலே. தாவடியித்யாதி. ஊர்த்வலோகங்க ளடங்கலும் தனக்குள்ளே யாம்படி தாவியடியிட்டவனுலே இன்றுமுடிவுதாம். தரணியித்யாதி. திருவடிகளின் மார்த்தவம்பாராதே, $ ஓராச்சிதனுக்காக இப்படி லோகத்தை யளந்தவனுலே யின்று முடிவுதாம்.

இத்தால் - தன்னை யழியமாறியும் ஆச்ரித ரக்ஷணம் செய்யுமவன் எங்ஙனே ரக்ஷணம் செய்யாதே யிடுபடுத்தாநின்றான்; ஆனபின்பு, அவனுலே நாங்கள் முடிவுதாமென்கை.

மூ.—தாழைத்தண்ணம்பற் றடம்பெரும்பொய்கைவாய்
வாழுமுதலை வலைப்பட்டவோதிப்புண்
வேழந்துயர்கெட வின்னேர்பெருமானுய்
ஆழிபணிகொண்டானு லின்றுமுற்று
மதற்கருள்செய்தானு லின்றுமுற்றும். அ.

பதவுரை.

தாழை— (கரையிலே) தாழைகளையும்
தண் ஆம்பல்— (உள்ளே) குளிர்ந்த ஆம் பலையுமுடைத்தாய்
தட பெரு— மிகவும் பெரிதான
பொய்கைவாய்— தடாகத்திலே
வாழும்— இராநின்ற
முதலை— முதலையாகிற
வலை— வலையிலே
பட்டு— அகப்பட்டு
வாதிப்பு உண்— வருந்தின [வாதிப்பு — பாதை.
வேழம்— ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுடைய
துயர்— மனத்துன்பமானது
கெட— நீரும்படியாக
வின்னேர்— நித்யஸூரிகளுக்கு
பெருமான்— நிர்வாஹகனனவன்
ஆய்— பெரியதிருவடியை மேற்கொண்ட வனுய்
ஆழி— சக்ராயுதத்தாலே (முதலையைத் துணித்து அந்தச்சிறையை விடுவித்து,)
பணி கொண்டானுல்— அந்த கஜேந்த்ரன் கையிலிருந்த பூவைத்தம் திருவடிகளில் இடுவித்துக்கொண்டவனுலே இன்று முற்றும்;
அதற்கு— அந்த கஜேந்த்ரனுக்கு
அருள் செய்தானுல்— அப்படிக் கர்பைபண் ணினவனுல் இன்று முற்றும்.

$. ஓராச்சிதன்- தேவேந்த்ரன்.

வ்யா. எட்டாம்பாட்டு. தாழையித்யாதி. கரையிலே தாழைகளையும் உள்ளே குளிர்ந்த ஆம்பல்களையு முடைத்தாய், மிகவும் பெரிதாயிருந்துள்ள பொய்கையிடத்திலே தாழைக்கரையி லுண்டான சோலைக்கு உபலக்ஷணம். "மொய்ம்மாம்பூம்பொழிற் பொய்கை" என்றபடியே ஆழ்வார். ஆம்பல்-உள்ளுண்டான புஷ்பங்களுக்கெல்லாம் உபலக்ஷணம். "வைகு தாமரைவாங்கிய தேவழம்" என்கிறபடியே தாமரை நெருங்கப் பூத்துக்கிடக்கிறதுகண்டு அது பறிக்கைக்காகவிறே "உள்ளே துஷ்டஸத்த்வம் கிடக்கிறது" என்று அறியாதே ஸ்ரீகஜேந்த்ரன்றன் இப்பொய்கையிலே அத்யாதரத்தோடே சென்று இழிந்தது. வாழ்முதலே வலிப்பட்டு. நெடுங்காலமெல்லாம் "நம் சாபமோக்ஷத்துக்கு ஓரோ வருவ தெப்போதோ" என்கிறபடியே வாசிட, அதினுள்ளே வர்த்திக்குமுதலையாகிற வலியிலேயகப்பட்டு. வாதிப்புண் வேழம் துயர்கெட.(க) "ஜ்ஞாதவ்யம் தீர்க்கதீர்க்ஷ ஹ்ருஷீக ஸ்ரோத்ரமேவ" என்கிறபடியே அது நீருக்கிழுக்க, தான்கரைக்கிழுக்க, (உ) "திவ்யம் வர்ஷஸஹஸ்ரகம்" என்கிறபடியே நெடுங்காலம் இப்படி பரிதைப்பட்ட ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய "கையிற்பூ செவ்வி யழியாமல் திருவடிகளிலே சாத்தப்பெற்றிலோமே" என்கிற க்லேசம் தீரும்படியாக. விண்ணோர்பெருமானு யாழிபணி கொண்டானலின்று முற்றும். * அயர்வறுமமரர்களதிபதியானமை தோற்றப் பெரியதிருவடியை மேற்கொண்டுசென்று, (ஈ) "ஹ்ருஷீகேஷ க்ருஹாயாஸி" என்கிறபடியே திருவாழியாலே முதலையைத் துணித்து அந்தச்சிறையை விடுவித்து அவன் கையில் பூவைத் திருவடிகளிலே விடுவித்துக்கொண்டு இப்படி ரக்ஷித்தவனுலே இன்று முடிவதோம். அதற்கித்யாதி. "கைம்மாவுக்கருள்செய்த" என்கிறபடியே அந்த வானைக்கு அப்படி அருள்செய்தவனுலே இன்று முடிவதோம்.

இத்தால்- ஆச்ரிதனுடைய ஆர்த்திநிரசன்று ரக்ஷித்தவன் எங்களை ஆர்த்தைகளாயி டுபடும்படி பண்ணுகின்றனன்; ஆனபின்பு, அவனுலே நாங்கள் இன்று முடிவதோமென்கை.

மூ.—வானத்தெழுந்த மழைமுகில்போலெங்கும்
கானத்துமேய்ந்து களித்துவிளையாடி
ஏனத்துருவாயிடந்த விம்மண்ணினைத்
தானத்தேவைத்தானு லின்றுமுற்றும்
தரணியிடந்தானு லின்றுமுற்றும். கூ.

பதவுரை.

வானத்து— ஆகாசத்திலே
எழுந்த— நீர்கொண்டெழுந்த
மழை முகில் போல்— வர்ஷாகவலாஹகம் போன்ற
ஏனம் உரு ஆய்— வராஹரூபியாய்
கானத்து— காட்டிலே
எங்கும்— எல்லாவிடங்களிலும் ஸஞ்சரித்து
மேய்ந்து— கோரைக்கிழங்கு முதலியவற்றை அமுதுசெய்து
களித்து— செருக்கையுடைத்தாய்
விளையாடி— விளையாடி
இடந்த— அண்டபித்தியில்நின்று மொட்டு விடுவித்தெடுத்த
இ மண்ணினை— இந்த பூமியை
தானத்தே— ஸ்வஸ்தாநத்திலே
வைத்தானுல்— வைத்தவனுல் இன்று முற்றும்;
தரணி— பூமியை
இடந்தானுல்— உத்தரித்தவனுலே இன்று முற்றும்.

(க) "ஜ்ஞாதவ்யம் தீர்க்கதீர்க்ஷ ஹ்ருஷீகேஷ ஸ்ரோத்ரமேவ." (உ) "திவ்யம் வர்ஷஸஹஸ்ரகம்." (ஈ) "க்ராஹஸ்ஸ்ரீசக்ரேண மாதவஸ்."

வ்யா. ஒன்பதாம்பாட்டு. வானத்தெழுந்த மழைமுகில்போல்* ஆகாசத்திலே நீர் கொண்டெழுந்த காளமேகம்போலே. இத்தால்- திருமேனியின் நிறத்தைச் சொல்லுகிறது. எங்கும் காஷ்யத்துமேய்ந்து. காட்டிலே ஒருப்ரதிபக்ஷபயமற எங்கும் ஸஞ்சரித்து, கோரைக் கிழங்கு முதலானவற்றை ஜீவித்து. களித்துவிளையாடி. ஜாத்யுசிதமான கர்வத்தோடே கூடிக் கொண்டு விளையாடி. ஏனத்துருவாய். நீருக்கும் சேற்றுக்குமிருயாத வராஹவேஷத்தை யுடையனாய்.இடந்தவித்யாதி. அண்டபித்தியில் நின்றும் ஓட்டவிடுவித்தெடுத்த இந்த பூமியை "நான்றிலமேவும்மண்ணும் தானத்தவே" என்னும்படி ஸ்வஸ்தாநத்திலே வைத்தவனுலே இன்று முடிவுதோம். தரணியிக்யாதி. இப்படி நிமக்நையான பூமியை உத்தரித்தவனுலே இன்று முடிவுதோம்.

இதனால்-ப்ரளயாபக்நையான பூமியை யெடுத்தவன், எங்களை விரஹப்ரளயத்தே தள்ளா நின்றான்; ஆனபின்பு, அவனுலே நாங்களின்று முடிவுதோமென்கை. ... ...கூ.

அ. நிகமத்தில், இத்திருமொழி கற்றார்க்கு பலம்சொல்லித் தலைக்கட்டுகிறார்.

மூ.—அங்கமலக்கண்ணன்றன்னை யசோதைக்கு
மங்கைகள்லார்கடாம் வந்துமுறைப்பட்ட
அங்கவர்சொல்லைப் புதுவைக்கோன்பட்டன்சொல்
இங்கிவைவல்லவர்க் கேதமொன்றில்லையே. @.

பதவுரை.

மங்கை— பருவத்தால் இளையராய்
நல்லார்கள்தாம்— க்ருஷ்ணன் விஷயத்தில் ஸ்நேஹமுடையரான பெண்களானவர்கள்
அம்கமலம்— அழகிய செந்தாமரைப்பூப் போன்ற
கண்ணன் தன்னை— திருக்கண்களையுடைய கண்ணனைப்பற்ற
அங்கு வந்து— அவளகத்திலேவந்து
அசோதைக்கு— யசோதையிடத்திலே
முறைப்பட்ட— முறையிட்ட
சொல்லை— சொற்களை
புதுவை— ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு
கோன்— நிர்வாஹகரான
பட்டன்— பெரியாழ்வார் அருளிச்செய்த
சொல் இவை— சொல்லான இவற்றை
இங்கு— இந்தஸம்ஸாரத்தி லிருந்துவைத்தே
வல்லவர்க்கு— ஓதவல்லவர்களுக்கு
ஏதம்— பொல்லாங்கு
ஒன்று— அல்பமும்
இல்லை— இல்லாதபடிபோம்.

வ்யா. அங்கமலக் கண்ணன்றன்னை. சிவப்பாலும் விகாஸத்தாலும் செவ்வையாலும் அழகிய தாமரைப்பூப்போலே யிருக்கிற திருக்கண்களை யுடையவனைப்பற்ற. அசோதைக்கு. தாயாரான யசோதைப்பிராட்டிக்கு. மங்கை நல்லார்கள்தாம். பருவத்தாலிளையராய் க்ருஷ்ணனளவிலே ஸ்நேஹாதிகளுமாயிருக்கிற பெண்களானவர்கள்தாங்கள். அங்கு-வந்துமுறைப்பட்ட. அவளகத்திலே வந்து தங்களீடுபோடுதோற்ற முறைப்பட்ட. அவர்சொல்லை. அவர்கள் சொல்லை. மங்கைகள்லாரானவர்கள்தாம் - அங்கமலக்கண்ணன்றன்னைப்பற்ற-அங்கு - வந்து-அசோதைக்கு- முறைப்பட்ட சொல்லை என்றந்வயம். புதுவைக்கோன்பட்டன்சொல்-இவை. ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகரான பெரியாழ்வாரருளிச்செய்த சொல்லானவிவற்றை. இங்கு-வல்

லவர்க்கு- இந்த லோகத்திலே ஸாபிப்ராயமாக வல்லவர்களுக்கு- ஏதமோன்றில்லையே- பொல்லாங்கென்னப்பட்டவை யொன்றுமில்லாதபடி போம். ... ...

பெரியஜீயர் திருவடிகளே சரணம்.

அடிவரவு.—ஆற்றில் குண்டலம் தடம் தேனுசுழ்ச்சி தள்ளி
மாவலி தாழை வானத்து அங்கமலம் தன்னோர்.

ஆகிருமொழி- ககூ - க்கு, பாட்டு -உக0.

மூன்றும்பத்து, முதல் திருமொழி, தன்னேராயிரம் ப்ரவேசம்.

அ. இருவாய்ப்பாடியில் ப்ராப்தயௌவனைகளாய் லீலாபரைகளாய்த்திரிகிற பெண்கள் நிறத்தில் அவன் துஸ்ஸஹமான தீம்புகளைச்செய்து தங்களை நலிகிற ப்ரகாரத்தை, தாயான யசோதைப்பிராட்டிக்குவந்து முறைப்பட்ட ப்ரகாரத்தை, தத்பாவயுக்தராய்க்கொண்டு, தாமும் அவர்களைப்போலேபேசி அவனுடைய அந்த லீலாவ்யாபாரரஸத்தை அநுபவித்தாராய்நின்றார்-கீழ்; மாதர்ஸ்நேஹத்தாலே பலகாலும் அவனை அம்மமுண்ணவழைத்தும் அம்ம மூட்டியும்போரும் யசோதைப்பிராட்டி, அவனுடைய பருவத்தின் இளமையையும் அதுக்கநுரூபமல்லாதபடியான அதிமாநுஷ சேஷ்டிதங்களையும் கண்டு, அவனை "தன்னுடைய பிள்ளை" என்று நினைத்திருக்கை தவிர்ந்து, "அநியாம்யனுய் அப்ரதிஹத லீலா ரஸபரனான ஸர்வேச்வரன்" என்றநுஸந்தித்து அவனைக்குறித்து அவைதன்னைச்சொல்லி, "உனக்கம்மந்தாவஞ்சுவன்" என்று பலகாலும் பேசின பாசுரத்தை, தத்தஸ்தாபங்ராய்க்கொண்டு தாமுமப்படியேபேசி அந்தரஸத்தை அநுபவிக்கிறார்- இத்திருமொழியில். ... *

மூ,—தன்னேராயிரம் பிள்ளைகளோடு தளர்நடையிட்டு வருவான்
பொன்னேய் நெய்யோடு பாலமுதுண்டொரு புள்ளுவன் பொய்யேதவழும்
மின்னேர் நுண்ணிடை வஞ்சமகள் கொங்கைதுஞ்ச வாய்வைத்தவிரானே
அன்னேயுன்னை யறிந்துகொண்டே னுனக்கஞ்சுவ னம்மந்தரமே. க.

பதவுரை.

தன்— தனக்கு
நேர்— ஒப்பான
ஆயிரம் பிள்ளைகளோடு— ஆயிரம் பிள்ளைகளோடு கூட
தளர்நடை இட்டு— தளர்நடை நடந்து
வருவான்— வ்ருமவனுய்
பொன் ஏய் — பொன்னேடொத்த நிறத்தையுடைய
நெய்யோடு— நெய்யோடு கூட
பால் அமுது— போக்யமான பாலையும்
உண்டு— அமுது செய்து
ஒரு— அத்விதீயனான
புள்ளுவன்— க்ருத்ரிமனுய்க்கொண்டு
பொய்யே— பொய்யாக
தவழும்— தவழுமவனுய்
மின் நேர்— மின்னலை ஒத்திருக்கிற
நுண்— ஸூக்ஷ்மமான
இடை— இடையையுடைய

வஞ்சம் மகள்— வஞ்சகியான பூதனையான வள்
துஞ்ச— மாளும்படி
கொங்கை— அவள் முலையிலே
வாய் வைத்த— திருப்பவளத்தை வைத்து உண்ட
பிரானே— நாயனே!
அன்னே— $ அம்மே!
உன்னை— இதுவரை என்பிள்ளையாக பாவிக்கப்பட்ட உன்னை
அறிந்து கொண்டேன் — அருந்தெய்வமென்று இன்று அறிந்து கொண்டேன்;

(ஆகையால்,)

உனக்கு— உனக்கு
அம்மம் தர— முலை கொடுக்க
அஞ்சுவன்— பயப்படா நின்றேன்

$ "அம்மே!" என்று அச்சத்தால் சொல்லுகிற வார்த்தை.

வ்யா. முதற்பாட்டு. தன்னேரித்யாதி. "கர்ஷ்ணன் திருவாய்ப்பாடியிலே வந்து வதரிக்கிறபோது அவனைடொக்க ஆயிரம் பிள்ளைகள் சேரப்பிறந்தார்கள்" என்று சொல்லுவதொரு ப்ரஸித்தி உண்டிறே; பிறப்பாலும் வளர்ப்பாலும் வயஸ்ஸாலும் வளர்த்தியாலும அந்யோந்யமுண்டான ஸ்நேஹத்தாலும் தன்னைடொக்கச் சொல்லலாம்படி யிருப்பார் ஆயிரம் பிள்ளைகளோடேயாய்த்துத் தளர்நடையிட்டு வருவது.(க) "வாஞ்ஜாகிலு கிலுஹ்ரிழ்" என்றுபால்யமதொடங்கிப் பெருமாளையொழிய தரிக்கமாட்டாத இளையபெருமாளைப்போலே, இவர்களும் பால்யமேதொடங்கி இவனையொழிய தரிக்கமாட்டாத ஸ்நேஹத்தையுடையராய், எப்போதுமொக்கக் கூடித்திரிகையாலே இவர்களோடேகூடியே தளர்நடையிட்டு வருமென்னலாமிறே. "தளாநடையிட்டு வருமவனே!" என்று ஸம்புத்தி.பொன்னேய் நெய்யோடு பாலமுதுண்டு. செவ்விகுன்றுமலுருக்கித் துஞ்சினதாகையாலே பொன்னைடொத்த நிறத்தையுடைத்தான நெய்யோடே,ரஸ்யமான பாலமுதையுமுண்டு. ஒருபுள்ளுவன் பொய்யே தவழும் புள்ளுவமாவது- மெய்போலே யிருக்கும்பொய். உண்டிருக்கச்செய்தே 'உண்டிலேன்' என்கையாலே 'அஸத்யவாதி' என்று தோற்றுமிறே. ஒருபுள்ளுவனென்றது-களவுக்கு அதிதியனென்றபடி. பொய்யேதவழும். தளர்நடையிட்டுத் திரிகிறவன் அதுக்கு கூஷ்மல்லாதாரைப்போலே தவழுகிறதும் க்ருத்ரிமமென்று தோற்றுமிறே; ஆகையாலிறே பொய்யேதவழுமென்றது. இதுவும், பொய்யேதவழுமொருபுள்ளுவனே! என்று ஸம்புத்தி.

மின்னேரித்யாதி. பெற்றதாய்போலே வருகையாலே, மின்னைடொத்த நுணணிய இடையையும் வஞ்சநத்தையுமுடைபளான பேய்ச்சியானவள் முடியும்படி அவள் முலையிலே திருப்பவளத்தை வைத்துண்ட உபகாரகனனவனே. இவ்விடத்தில் உபகாரமாவது, *உலகுக்கட்கெல்லா மோருயிரான தன்னை முடிக்கவந்தவளை நிரஸித்து, தன்னைநோக்கித் தந்தவிதுவிறே. அன்னே. அதாவது- அம்மே! என்று அச்சத்தாலே சொல்லுகிற வார்த்தை. உன்னையறிந்துகொண்டேன். முன்பெல்லாம் என் பிள்ளையாகவும், நான்தருகிற அம்மம் முதலானவை உனக்கு தாரகாதிகளாகவும் நினைத்திருந்தேன்; உன்படிகள் அதிமாநுஷங்களாகையாலே "ஆபர்புத்திரனல்ல னருந்தெய்வம்" என்கிறபடியே- இவன் நம்மோடு ஸஜாதீயனுமல்லன், நாம்கொடுக்கிறவை இவனுக்கு தாரகாதிகளுமல்லவென்று நன்றாகவறிந்துகொண்டேன். உனக்கஞ்சுவனம்மந்தரவே. இப்படி யிருக்கிறவனுக்கு அம்மந்தரவஞ்சுவன். "தவழுகை

(க) "பால்யாத்ப்ரப்ர்தி ஸாஸ்நிக்தம்"

பொய்" என்றவோபாதி "அம்மம்" என்கிற இவன்சொலவும் பொயயமயன்று தோற்றுமிற் கச்செய்தேதயும் அவன் சொலவை அநுலரித்துச்சொல்லுகிறள். ... ... க.

மூ.—போன்போன் மஞ்சணமாட்டி யமுதூட்டிப் போனேன் வருமள விப்பால்
வன்பாரச்சகட மிறச்சாடி வடக்கிலகம் புக்கிருந்து
மின்போனுண்ணிடையா ளொருகன்னிய வேற்றுருவஞ் செய்துவைத்த
அன்பாவுன்னை யறிந்துகொண்டே னுனக்கஞ்சுவனம்மந்தரவே. உ.

பதவுரை.

பொன் போல்— பொன் போல் (வடிவழகு விளங்கும்படி)
மஞ்சனம் ஆட்டி— திருமஞ்சனம் செய்து
அமுது ஊட்டி— அமுது செய்யப் பண்ணி
போனேன்— யமுனை நீராடப்போன நான்
வரும் அளவு இப்பால் — வருவதற்கு முன்னே
வல்— வலியதாய்
பாரம்— பாரமாயிருக்கிற
சகடம்— சகடமானது
இற— கட்டுக்குலைந் தழியும்படி
சாடி— திருவடிகளா லுதைத்து
வடக்கில்— இவ்வகத்துக்கு வடக்கில்லள்ள
அகம்— அகத்திலே
புக்கு இருந்து— புகுந்து ‡ இருந்து
மின் போல்— மின்னலே யொத்ததாய்
நுண்— ஸூக்ஷ்மமான
இடையாள்— இடையையுடையளான
ஒரு கன்னிய — ஒரு நவயௌவநப்பான பெண்ணை
வேறு உருவம் செய்து வைத்த— ஸம்போக சிஹ்நங்களாலே மாறுபட்ட வடிவை யுடையளாம்படி பண்ணிவைத்த
அன்பா— கண்டதொன்றிலே மேல் விழும்படியான அன்பையுடையவனே!
உன்னை இத்யாதி பூர்வவத்.

‡ "இருந்து" என்கிறவிது — வார்த்தைப்யாடு.

வ்யா. இரண்டாம்பாட்டு. பொன்னித்யாதி. திருமேனியழகு விளங்கும்படியாகத் திருமஞ்சநஞ்செய்து, "என்னிளங் கொங்கையமுத மூட்டி" என்கிறபடியே அமுது செய்யப்பண்ணி, "யமுனை நீராடப்போனேன்" என்கிறபடியே யமுனையாகிறவாற்றிலே குளிப்பதாகப்போன நான் வருவதற்குமுன்னே. வன்பாரச்சகடமிறச்சாடி. வலியதாய்க் கண்டிதாயிருக்கிற சகடமானது கட்டுக்குலைந்து முறிந்துபோம்படியாக, முலைவரவுதாழ்த்துச் சீறி நிமிர்த்த திருவடிகளாலே உதைத்து. வடக்கிலகம்புக்கிருந்து. இவ்வகத்துக்கு வடவருகிலகத்திலே புக்கிருந்து. மின்போல் நுண்ணிடையாளொரு கன்னியை. மின்போலே நுண்ணிதான இடையையுடையளாய், நவயௌவநையா யிருப்பா ளொருத்தியை. வேற்றுருவம் செய்துவைத்த. ஸம்போகசிஹ்நங்களாலே விக்ருதிவேஷையாம்படி பண்ணிவைத்த. அன்பா. கண்டதொன்றிலே மேல்விழும்படியான ஸ்நேஹத்தையுடையவனே. இத்தால் — தீம்யனென்றபடி. உன்னை யறிந்துகொண்டேன். இவன் நம்மோடு ஸஜாதீயனல்லன், வ்யாவர்த்தனென்று உன்னை உள்ளபடி யறிந்துகொண்டேன். உனக்கஞ்சுவனம்மந்தரவே. ஆனபின்பு, உனக்கம்மந்தர வஞ்சுவன். ... ...

—கும்மாயத்தோடு வெண்ணெய் விழுங்கிக் குடத்தயிர் சாய்த்துப்பருகிப்
போய்ம்மாய மருதான வசுரரைப் பொன்றுவித்தின்று நீவந்தாய்
—இம்மாயம்வல்ல பிள்ளாயம்பியுன்னை யென்மகனே யென்பர் நின்னூர்
அம்மாவுன்னை யறிந்துகொண்டே னுனக்கஞ்சுவனம்மந்தரவே. ஊ.

பதவுரை.

கும்மாயத்தொடு — குழையச் சமைத்த பருப்போடு
வெண்ணெய்— வெண்ணெயை
விழுங்கி— விழுங்கியும்
குடம்— குடத்தில் நிறைத்த
தயிர்— தயிரை
சாய்த்து— அத்தோடே சாய்த்து
பருகி— அமுது செய்தும்
பொய் மாயம்— பொய்யே ஆச்சர்யமான
மருது ஆன— மருதமங்களாய் நின்ற
அசுரரை— அஸுரர்களை
பொன்றுவித்து— விழுந்து முறியும்படி பண்ணியும்
இன்று— இப்போது
நீ வந்தாய்— நீ ஒன்றும் செய்யாதாரைப் போலே வந்தாய்;
இ மாயம்— இப்படிப்பட்ட ஆச்சர்யங்களை
வல்ல— செய்ய வல்லவனும்
பிள்ளை நம்பீ— பிள்ளைத்தனத்தால் பூர்ணனவனே!
உன்னை— இப்படிப்பட்ட உன்னை
நின்றார்— நடு நின்றவர்கள்
என் மகன் என்பர்— ¶என்னுடைய பிள்ளையாகச்சொல்ல நிற்பர்கள்;
அம்மா— ஸர்வஸ்வாமியானவனே!
உன்னை இத்யாதி பூர்வவத்.

வ்யா. மூன்றும்பாட்டு. கும்மாயமித்யாதி. குழைபச் சமைத்துவைத்த பருப்போடே வெண்ணெயையும் சேரவிழுங்கி. குடத்தயிரித்யாதி. குடத்திலே நிறைத்திருந்ததயிரை அத்தோடே(ய)சாய்த்(த)முதுசெய்தது.பொய்யித்யாதி. தங்கள்வேஷம் அதுவன்றிக்கேயிருக்கச்செய்தே, பொய்யே ஆச்சர்யமான மருதுகளாய்நின்ற அஸுரர்களை மறியவிழுந்து முறியும்படிபண்ணி. இன்று நீ வந்தாய். இப்போது ஒன்றும் செய்யாதாரைப்போலே நீ வந்தாய். இம்மாயம்வல்ல பிள்ளை நம்பீ. இந்த ஆச்சர்யங்களைச் செய்யவல்லனும், பிள்ளைத்தனத்தால் பூர்ணனனவனே!. உன்னை யென்மகனே யென்பர் நின்றார். இப்படி யிருக்கிறவுன்னை உன்வாசியறியாத நடுநின்றவர்கள் "¶என்னுடைய மகன்" என்று சொல்லுவர்கள். அம்மா வுன்னை யறிந்துகொண்டேன். நான் அங்ஙனன்றிக்கே, "என்மகனன்று" என்றும், "எல்லார்க்கும் ஸ்வாமி" என்றும் உன்னை உள்ளபடி யறிந்துகொண்டேன். உனக்கித்யாதி. ஆனபின்பு, உனக்கம்மந்தர வஞ்சுவன். ... ...ஈ

மூ.—மையார்கண் மடவாய்ச்சியர்மக்களை மையன்மைசெய்தவர் பின்போய்க்
கொய்யார் பூந்துகில் பற்றித்தனி நின்று குற்றம் பலபல செய்தாய்
பொய்யாவுன்னைப் புறம்பலபேசுவ புத்தகத்துக்குள கேட்டேன்
ஐயாவுன்னை யறிந்துகொண்டே னுனக்கஞ்சுவனம்மந்தரமே. ச.

226

பதவுரை.

மை ஆர் — அஞ்சனத்தால் அலங்கரிக்கப் பட்ட
கண்— கண்களையுடையராய்
மடம்— மடப்பத்தை யுடையரான
ஆய்ச்சியர் மக்களை— இடைப் பெண்களை
மையன்மை செய்து— மோஹிப்பித்து
அவர் பின் போய்— அவர்கள் பின்னே போய்

¶ "என்னுடைய" வென்றது யசோதையினுடைய வென்றபடி.

† { கொய் ஆர்— கொய்தல் நிறைந்த
பூ— அழகிய
தகில்— புட்வைகளை
பற்றி— பிடித்து
தனி நின்று— தனியனுய் நின்று
பல பல— எண்ணிறந்த
குற்றம்— நீம்புகளை
செய்தாய்— பண்ணினுய்;
பொய்யா— க்ர்த்ரிமனே!
உன்னை— உன் விஷயமாக
பேசுவ— பிறர் பேசுகிற
புறம்பல— பொல்லாங்குகள்
புத்தகத்துக்கு— ஒருபுஸ்தக மெழுதுவதைக்கு
உள— தகுந்துள்ளவறறை
கேட்டேன்— என்காதால் கேட்டேன்;
ஐயா— க்ர்த்ரிமக் கெல்லாம் ஸ்வாமியான வனே!

உன்னை இத்யாதி பூர்வவத்.

† கொய்யார் பூந்துகிலாவது - புடவைகளின் கொய்ச்சகம். [கொய்ச்சகமென்பது 'கொசாம்' என்று உலகத்தில் நிலைந்து வழங்கும்.]

வ்யா. நான்காம்பாட்டு. மையாநித்யாதி. அஞ்சுநத்தாலே அலங்க்ர்தமான கண்களையும், ஆத்மகுணங்களில் ப்ரதாநமான மடப்பத்தையும், குடிப்பிறப்பையு முடையரான பெண்களை. மையன்மைசெய்து. உன்பக்கலிலே ஸ்நேஹிநிகளாய் தாய்மார் முதலானுர்க்கு வசவர்த்திநிகளாகாதபடி உன்னுடைய லைங்தர்யாநிகளாலே பிசகேற்றி. அவர்பின்போய். அவர்களுடைய பின்னேபோய். கொய்யார்பூந்துகில்பற்றி. கொய்தலார்ந் திருந்துள்ள அழகிய பரியட்டங்களைப் பிடித்து. இத்தால் - அவர்கள் பரியட்டங்களின் கொய்ச்சகங்களைப் பிடித்துக்கொண்டு, அவர்கள் பின்னேபோயென்கை. தனிநின்று. குற்றம் பலபலசெய்தாய். ஏகாந்த ஸ்தலத்திலேநின்று அவாச்யமான வ்யாபாரங்களை அபரிகண்யமாம்படி செய்தாய். ஆவதென், நானெரு குற்றமும் செய்திலேன், நீ மற்றுக்கண்டாயோவென்ன பொய்யாவித்யாதி. க்ர்த்ரிமனே! உன்னைப்பொல்லாங்கு பலவற்றையும் பிறர்சொல்லுமவைகள் ஒருபுஸ்தகம் நிறைய வெழுதத்தக்கவை கேட்டேன். அவர்கள் சொல்லுமத்தும் நீ கேட்டதுமேயோ ஸத்யம், நான்சொன்னதன்றே ஸத்யமென்ன; ஐயா. இதென்ன தெளிவுதான்! என்று கொண்டாடுகிறுள். அன்றிக்கே, ஐயா வென்று - க்ர்த்ரிமர்க்கெல்லாம் ஸ்வாமியானவனே யென்கிறுளாதல். உன்னையறிந்துகொண்டேன். உன்னை அதிலோகமான வுக்திசேஷ்டிதங்களையுடையவனென் றறிந்துகொண்டேன். உனக்கித்யாதி. ஆனபின்பு, உனக் கம்மந்தரவுங்குவன். ... ... *ச.

மூ.—முப்போதுங் கடைந்தீண்டிய வெண்ணெயினேடு தயிரும்விழுங்கிக்
கப்பாலாயர்கள் காவிற்கொணர்ந்த கலத்தோடு சாய்த்துப்பருகி
மெய்ப்பாலுண்டழு பிள்ளைகள்போல நீவீம்மிவிம்மியழுகின்ற
அப்பாவுன்னை யறிந்துகொண்டே னுனக்கஞ்சுவனம்மந்தரவே ரு.

பதவுரை.

மூன்று போதும்— காலை, உச்சி, அந்தி ஆகிற மூன்று போதிலும்
கடைந்து— கடையப்பட்டு
ஈண்டிய— திரண்ட
வெண்ணெயினேடு— வெண்ணெயோடே
தயிரும்— தயிரையும்
விழுங்கி— அமுது செய்து
ஆயர்கள்— இடையர்கள்

கப்பால்— தோளாலே
காவில்— க்காவடியில்
கொணர்ந்த— கொண்டுவந்த பாலை
கலத்தோடு— அந்த பாத்ரத்தோடே
சாய்த்து— சாய்த்து
பருகி— அமுதுசெய்து
மெய் பால்—உடம்பிலுண்டாகிற முலைப்பாலை
உண்டு— தாரகமாக உண்டு
அழு— அது பெறுகபோது அழுகிற
பிள்ளைகள் போல— பிள்ளைகளைப் போலே
ஈ— ஈ
விம்மி விம்மி— விக்கி விக்கி
அழுகின்ற— என் முலைப்பாலுண்ணக்கு அழுகிற
அப்பா— என் நாயனே!
உன்னை இதயாதி பூர்வவத்.

வ்யா. ஐந்தாம்பாட்டு. முப்போதுமித்யாதி. எப்போதும் கறப்பன கடைவன் வாய்ச் செல்லும் போலே காணும் திருவாய்ப்பாடி. சிறுகாலையும் உச்சியும் அந்தியுமாகிற மூன்று பொழுதும் கடைந்து திரண்ட வெண்ணெயோடே; அக்காலங்களெல்லாவற்றிலும் முண்டான செறியத் தோய்ந்த தயிரையும் விழுங்கி. கப்பாலித்யாதி. தோளாலே இடையர் காவிலே கொண்டுவந்த பால்களை, கொண்டுவந்த பாத்ரத்தோடே சாய்த்துப்பருகி, மெய்ப் பாலித்யாதி. உடம்பிலுள்ளமுலைப்பால் தாரகமாகவுண்டு, அதுபெறுகபோது அழும் பிள்ளைகளைப்போலே * என்னிளங் கொங்கையமுத முண்கைக்கு நீபொருமிப் பொருமியழுகின்ற. அப்பாவுன்னை யறிந்துகொண்டேன். இந்த அதிமாநுஷ சேஷ்டிதத்தையுடையபெரியோனே! உன்னை "மநுஷ்யாஸாதாரணன்" என்று அறிந்துகொண்டேன். உனக்கித்யாதி. ஆன பின்பு, உனக்கம்மந்தாலுஞ்சலன். ... ... இ.

மூ.—கரும்பார்நீள்வயற் கார்கதிர்ச்செந்நெலைக் கற்றுநிரை மண்டித்தின்ன
விரும்டாக்கன்றொன்று கோண்டு விளங்கனிவீழ வேறிந்தபிரானே
22 கரும்பார்மென்குழற் கன்னியொருத்திக்குச் சூழ்வலைவைத்துத்திரியும்
அரம்பாவுன்னை யறிந்துகொண்டே னுனக்கஞ்சுவனம்மந்தரவே. கூ.

பதவுரை.

நீள் வயல்— விசாலமான வயலிலே
கரும்பு ஓர்— கரும்புபோலெழுந்ததாய்
கார்— பசுங்கார்போன
கதிர்— கதிரையுடைய
செந்நெலை— செந்நெல் தான்யத்தை
கன்று ஓ நிரை— கன்றுகளோடுடைய பசுக்கூட்டமான்து
மண்டி— மேல்விழுந்து
தின்ன— தின்னுநிற்கச் செய்தே
விரும்பா— தின்கையில் விருப்பமில்லாத
ஒன்று— ஒரு
கன்று கொண்டு— கன்றைக் கொண்டு
விள கனி— விளாவின் பழங்கள்
வீழ— சிதறி விழும்படி
எறிந்த— விட்டெறிந்த
பிரானே— உபகர்க்கனுன்வனே!
சுரும்பு ஓர்— (புஷ்பத்தில் நன்சயர்ல்) வண்டுகள் படிந்திருக்கிற
மெல் குழல்— மார்துவான் கூந்தலையுண்டாள்ள
கன்னி ஒருத்திக்கு — நவயள்வனீயான ஒரு பெண் விஷயத்திலே
சூழ்— தப்பாமல் அகப்படுத்திக் கொள்ளுகிற
வலை— திருக்கண்களாகிற வலையை
வைத்து— வைத்து
திரியும்— தரியாநின்ற
அரம்பா— நீம்பனுன்வனே!
உன்னை இதயாதி பூர்வவத்.

வ்யா. ஆரும்பாட்டு. கரும்பித்தோ தி. பரந்தவயலிலே கரும்புபோலே எழுந்து பசுங்காயான கதிரையுடைய செந்நெல்லி. கற்றாநிரை. கன்றுகளோடேகூடின பசுநிரையான்து. மண்டித்தினன. விருப்பி மேல்விழுந்து தின்னாநிற்கச்செய்தே. விரும்பாக்கன்றென்று கோண்டு. தானும் தின்பாரைப்போலே பாவியாகிற்கச்செய்தே, தின்கையில் விருப்பமில்லாத தொரு கன்றைக்கொண்டு. விளங்கனி வீழவெறிந்துபிரானே. ஆகர்ஷகமாம்படி பழுத்துநின்ற விளாவினுடைய பழங்கள் சிதறிவிழும்படியெறிந்த உபகாரகனே. ஒரு ஊரன் கன்றுய்வந்து நிற்க, ஒரு ஊரன் விளாவாய்வந்துநிற்க, இத்தையறிந்து, ஒன்றையிட்டு ஒன்றையெறிந்து இரண்டையும் நிரவித்துப்போக்கட்ட உபகாரத்தைச் சொல்லுகிறது. கரும்பாரித்யாதி. எப்போதுமொக்கப் பூமாருமையிலே வண்டுகளானவை நெருங்கப்படிந்து கிடக்கும்படியிருப்பதாய், மர்துவாயிருந்துள்ள குழலியுடையளாய் நவயௌவனைபாயிருப்பாளொருத்திக்கு. சூழ்வலைவைத்துத் திரியுமரம்பா. "வாசமேதவன்வலை" என்றும், "தாமரைத்தடங்கண் விழிகளி னகவலை" என்றும், "கார்த்தண்குழலக்கண்ணென் னும் நெடுங்கயிறு" என்றும் சொல்லுகிறபடியே - தப்பாமலகப்படுத்திக்கொள்ளும் திருக்கண்களாகிற வலையை எப்போதுமொக்க அவன் விஷயத்திலே வைத்து, அகப்படுமளவும் அந்யபரரைப்போலே லஞ்சரிக்கிற தீம்பனனவனே. உன்னையறிந்துகொண்டேன். ஏவம்பூதனனவுன்னை நன்றுகவறிந்துகொண்டேன். உனக்கித்யாதி. ஆனபின்பு, உனக்கம்மந்தரவஞ்சுவன். ... ... சு.

மூ.—மருட்டார்மென்குழல் கொண்டுபொழில்புக்கு வாய்வைத் தவ்வாயர்தம்பாடிச்
சுருட்டார்மென்குழற் கன்னியர்வந்துன்னைச் சுற்றுந்தொழ நின்றசோதி
பொருட்டாய மீலே னெம்பெருமானுன்னைப் பெற்றகுற்ற மல்லான்மற்றிங்
கரட்டாவுன்னை யறிந்துகொண்டே னுனக்கஞ்சுவனம்மந்தரவே. எ.

பதவுரை.

மருட்டு ஆர்— மிகவும் மதிமயங்கப் பண்ணுமதாய்
மெல்— மர்துவான த்வனியையுடைய
குழல் கொண்டு— வேய்ங்குழலைக்கொண்டு
பொழில் புக்கு—போகத்துக்கு ஏகாந்தமான பொழிலிலே போய்ப்புகுந்து
வாய் வைத்து— அந்த வேய்ங்குழல வாயில் வைத்து ஊதி
அ ஆயர்தம் பாடி— அவ்விடையருடைய சேரியி லுள்ள
சுருண்டு— சுருண்டு
ஆர்— பூவாலே அலங்கர்தமாய்
மெல்— மர்துவான
குழல்— கூந்தலையுடையரான
கன்னியர்— பெண்களானவர்கள்
வந்து— குழலோசைதூண்ட வந்து
உன்னை— குழலூதுகிற உன்னை
சுற்றும் தொழ— நாற்புறத்திலும் சேவிக்க
சோதி நின்ற— ஜ்யோதிஸ்ஸை யுடையனும்
எம் பெருமான்— என் நாயனே! [நின்ற
உன்னை— பெருந்தீம்பனனவுன்னை
பெற்ற— பிள்ளையாகப் பெற்ற
குற்றம் அல்லால்— தோஷமொழிய
மற்று— மற்றைப்படி
இங்கு— இச்சேரியி லுள்ளாரோடு
பொருள் தாயம் இலேன்— அர்த்ததாயமுமுடையேனல்லேன்
அரட்டா— தீம்பனே!
உன்னை இத்யாதி பூர்வவத்.

வ்யா. ஏழாம்பாட்டு. மருட்டாரித்யாதி. கேட்டவர்களை மற்றொன்றறியாதபடி மருளப்பண்ணுதலால் மிக்கிருப்பதாய், *அவர்கள் செவிகளைப்பற்றி வாங்கும்படியாய் மர்துவான

த்வனியை யுடைத்தான வேய்ங்குழலைக்கொண்டு போகத்துக்கேகாந்தமான பொழிலிலே போய்ப்புக்குத் திருப்பவளத்திலே வைத்தூதி. அவ்வாயரித்யாதி. "கர்ஷ்ணன் கிடாய் பெண்கள் கிடாய்" என்று பெண்களைக் காத்துக்கொண்டு திரியும் அவ்விடையருடையவூரில் சுருட்டாரித்யாதி. சுருண்டு, பூவின்மேலே அலங்கர்தமாய், ம்ர்துவாயிருந்துள்ள குழலையுடைய பெண்களானவர்கள் குழலோசையாலே ப்ரேரிதராய்வந்து உன்னைச்சூழநின்றுதொழ, அத்தால் வந்த மேதஜஸ்ஸையுடையனாய் நின்றவனே. பொருள்தாயமித்யாதி. என்னுடைய நாதனானவனே! இப்படித்தீம்பனானவுன்னைப் பிள்ளையாகப் பெற்ற குற்றமொழிய இவ்வூரிலுள்ளார் என்னோடு காறுகாறென்ன எறிவார்களோடு ஓர்த்ததாய முடையேனல்லேன். அரட்டாவுன்னை யறிந்துகொண்டேன். இப்படி தீம்பனானவனே! உன்னை நன்றாக வறிந்துகொண்டேன். உனக்கித்யாதி. ஆனபின்பு உனக்கம்மந்தரவஞ்சுவன். ... ... எ.

மூ.—வாளாவாகிலுங் காணகில்லார் பிறர்மக்களை மையன்மைசெய்து
தோளாலிட்டவ ரோடுதிரிந்துநீசொல்லப்படாதன செய்தாய்
கேளாராயர் குலத்தவரிப்பழி கேட்டேன் வாழ்வில்லை நந்தன்
காளாயுன்னை யறிந்துகொண்டே னுனக்கஞ்சுவ னம்மந்தரமே. மூ.

பதவுரை.

வாளா ஆகிலும்— வெறுமனே யாகிலும் [நீ தீம்பு செய்யாதிருந்தாலும் என்று கருத்து.]	சொல்லப் படாதன — வாயாற் சொல்ல வொண்ணாத தீம்புகளை
காண கில்லார்— (உன் மீனுக்குப் பொறாதவர்கள்) உன்னைக் காண வேண்டார்கள்; (இப்படியிருக்கச் செய்தேயும்,)	நீ செய்தாய்— நீ செய்தாய்;
பிறர் மக்களை— அப்பற் பெண்களை	ஆயர் குலத்தவர்— இடைக்குலத் திலுள்ளவர்கள்
மையன்மை செய்து — உன்னழகாலே மயக்கி	இ பழி— இப்படிப்பட்ட பழியை
தோளால் இட்டு } — தோளாலே அணைத்து	கேளார்— கேட்கப் பொறார்கள்:
அவரோடு — அப்பெண்களோ டொக்க நின்று	கெட்டேன்! — [இது - வெறுத்துக் கை நெரித்துச்சொல்லும் வார்த்தை:]
திரிந்து— விளையாடி	வாழ்வு இல்லை — இச்சேரியி லெனக்கு வாழப்போகாது;
	நந்தன்— ஸாதுவான நந்தகோபருடைய
	காளாய்— குமாரனானவனே!
	உன்னை இத்யாதி பூர்வவத்.

வ்யா. எட்டாம்பாட்டு. வாளாவித்யாதி. நீ தீம்பு செய்யா திருக்கிலும் உன்மீனுக்கம் பொறாதவர்கள் வெறுமனேயாகிலும் உன்னைக் காணவேண்டார்கள். அதுக்குமேலே பிறர்மக்களை மையன்மை செய்து. பிறருடைய பெண்களை உன்னுடைய இங்கிதாதிகளாலே அறிவுகேட்டை விளைவித்து. தோளாலிட்ட வரோடுதிரிந்து. தோளாலே யணைத்திட்டு அவர்களோடே நின்று விளையாடி. நீ சொல்லப்படாதன செய்தாய். வாக்காற் சொல்ல வொண்ணாதவற்றை நீ செய்தாய். கேளாராயர்குலத்தவரிப்பழி. இடைக்குலத்திலுள்ளவர்கள் இப்பழிகேட்கப் பொறார்கள். கெட்டேன் வாழ்வில்லை. கெட்டேன்! , இவ்வூரில் எனக்கொருவாழ்வில்லை. அதாவது இவ்வூரில் வர்த்திக்கப் போகாதென்கை. கெட்டே னென்கை

விஷாதநிசயத்தாலே கைகெரித்துச் சொல்லுகிற வார்த்தை. நந்தன்காளாய். பசும்புல் லச்சரவு மிதிப்பாத ஸ்ரீ நந்தகோபர்பிள்ளையான நீ இப்படி செய்யக்கடவையோ. அன்றிக்கே, அவர் உன்னைநியமித்து வளர்க்காமையிறே நீயிப்படி தீம்பனைத் தென்னுதல். உன்னையறிந்து கொண்டேன். பருவமிதுவாயிருக்க, செய்கிற செயல்கள் துர்வ்ருத்தமாலே உன்னை "நாட்டார்படியல்லை" என்று அறிந்துகொண்டேன். உனக்கித்யாதி. ஆன்பின்பு உனக்கம்மந்தர வஞ்சுவன். ... ... அ.

மூ.—தாய்மார்மோர் விற்கப்போவர் தமப்பன்மார் கற்றுநிரைப் பின்புபோவர்,
நீயாய்ப்பாடி யிளங்கன்னிமார்களை நேர்படவே கொண்டுபோதி
காய்வார்க்கென்று முகப்பனசெய்து கண்டார்கழறத்திரியும்
ஆயாவுன்னை யறிந்துகொண்டே னுனக்கஞ்சுவ னம்மந்தரவே. கூ.

பதவுரை.

தாய்மார்— தாய்மாரானவர்கள்
மோர் விற்க— மோர் விற்பதற்காக
போவர்— (பெண்களை அகம்பார்க்க வைத்துவிட்டு) அயலூருக்குப் போவார்கள்;
தமப்பன்மார்— தமப்பன்மாரான்வர்கள்
கன்று நிரை பின்பு— இளம்பசுக் கூட்டத்தின் பின்னே
போவர்— போகா நிற்பர்கள்;
நீ— அந்தஸமயம் பார்த்திருக்கிற நீ
ஆய் பாடி— இடைச் சேரியிலுள்ள
இள கன்னிமார்களை— சுவயளவனைகளான பெண்களை
நேர்பட— உன்னினைவுக்குவாய்க்குமிடங்களில்
கொண்டு போதி— கொண்டுபோகாநின்றாய்;
காய்வார்க்கு— உன்மேல் சிறுகின்ற சில பாலாதிகளுக்கு
என்றும்— எப்போதும்
உகப்பனசெய்— உகக்கும்படியான வற்றை
செய்து— செய்து
கண்டார்— உன் செயல்களைக் கண்டவர்
கழற— (மன்னம் கொந்து) உறுத்திச் சொல்லுமிடத்தில்
திரியும்— திரியாநிற்கிற
ஆயா— இடைக்குமாரனே!
உன்னை இத்யாதி பூர்வவத்.

வ்யா. ஒன்பதாம்பாட்டு. தாய்மாரித்யாதி. பெண்களை அகம்பார்க்க வைத்து, தாய்மாரானவர்கள் மோர்விற்கப் போகா நிற்பர்கள். இடையர்க்கு ஐச்வர்யம் மிகவுமுண்டானாலும் இடைச்சிகள் மோர்விற்று ஜீவிக்குமதிறே தங்களுக்குத் தகுதியான ஜீவநமாக நினைத்திருப்பது. மோர்தான்விற்கை அரிதாயிருக்குமிறே. திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷம் குடியிலும் கறப்பனகடைவன குறைவற்றிருக்கையால் அசலூர்களிலேபோய் விற்க வேண்டுகையாலே இக்காலவிளம்பம் இவனுக்கு அவகாசமேறத்துவாயிறேயிருப்பது. அதுப்பன்மாரித்யாதி. தாய்மார்போனால் தமப்பன்மார்தானிருந்தாலும் இவனுக்கு நினைத்தடி செய்யப்போகாதிறே; அதுவுமில்லாதபடி, தமப்பன்மாரானவர்கள் கற்றுவாநிரையின்பின்னே போகாநிற்பர்கள். அவை மேச்சலுள்ளவிடங்களிலே தூரப்போகையும், இவர்கள்வந்ததை நியமியாமல் அவற்றின்பின்னே போகையும், அவைமேய்ந்து வயிறுநிறைந்தாலல்லது மீளாதொழிகையும், அவை மீண்டால் அவற்றின்பின்னே இவர்கள் வருகையுமாயிறேயிருப்பது; ஆகையால் இந்தக்கால விளம்பமும் இவனுக்கு அவகாசமிறே. நீயாய்ப்பாடி யிளங்கன்னிமார்களை நேர்படவே கொண்டுபோதி. நீ திருவாய்ப்பாடியில் யுவதிகளான பெண்களை

உன்னினவுக்கு வாய்க்கும்படி கொண்டுபோ. இ. அதாவது - உனக்கு அபிமதமான ஸ்தலங்களிலே கொண்டுபோகாநின்று யென்றபடி. தாய்மார் தமப்பன்மார் போகையாலும், கால விளம்ப முண்டாகையாலும், அவ்வகந்தானே அபிமதஸ்தலமா யிருக்கச்செய்தேயும் "ப்ராமாதிகமாக ஆசேஷமும் வரக்கூடும்" என்றிறே ஸ்தலாந்தரம் தேடிப் போகவேண்டுகிறது. காய்வார்க்கென்றும் உகப்பனவேசெய்து. உன் குணத்திலும் தோஷத்தை ஆவிஷ்கரிக்குமவர்களாய், உன்பக்கல் த்வேஷபராயேபோரும் சிசுபாலாதிகளுக்கு, 'சொல்லி பரிபவிக்கைக்கு இடம்பெற்றோம்' என்று ஸர்வகாலமும் உகக்கும்படியானவற்றைச்செய்து. கண்டார்கழறத் திரியுமாயா. காய்வாரன்றிக்கே, உனக்கு நல்லவர்களாய் நீ செய்கிற வ்யாபாரங்களைக் கண்டவர்கள் நீ செய்கிற நீண்புபொறுமல் நியமிக்கும்படி திரியாநிற்கிற ஆயனே. குல மர்யாதை தன்னையும் பார்க்கிறிலையே யென்கை. உன்னை யறிந்துகொண்டேன். நீ யிப்படி திரிந்தாயாகிலும் உன்னுடைய அநிமாநுஷ சேஷ்டிதங்களைக் கண்ட பின்பு, உன்னை "மநுஷ்யஸாதீயனல்லன்" என்று அறிந்துகொண்டேன். உனக்கித்யாதி. ஆனபின்பு, உனக்கு அம்மந்தரவந்சுவன். ... ... கூ.

மூ.—தொத்தார் பூங்குழற்கன்னி யொருத்தியைச் சோலைத்தடங்கொண்டுபுக்கு
முத்தார் கொங்கைபுணர்ந்திரா நாழிகை மூவேழுசென்றபின் வந்தாய்
ஒத்தார்க்கொத்தன பேசுவருன்னை யுரப்பவே நானென்று மாட்டேன்
அத்தாவுன்னை யறிந்துகொண்டே னனைக்கஞ்சுவ னம்மந்தரவே. ூ.

பதவுரை.

தொத்து— கொத்தாய்
ஆர்— சேர்ந்திருந்துள்ள
பூ— பூக்களாலிந்த
குழல்— கூந்தலையுடையளாய்
கன்னி— நவயௌவநையான
ஒருத்தியை— ஒருத்தியை
‡ { தடம்— இடமுடைத்தான
‡ { சோலை—சோலையிலே
கொண்டு புக்கு— அழைத்துக் கொண்டு போய்
முத்து— முத்துமாலையாலே
ஆர்— அலங்கரிக்கப்பட்ட
கொங்கை— ஸ்தநங்களிலே
புணர்ந்து— ஸம்ச்லேஷித்து
இரா— நேற்றிரவு
மூன்று ஏழு நாழிகை சென்றபின்— மூன்று யாமம் கடந்தபிறகு
வந்தாய்— வீடுவந்து சேர்ந்தாய்;
உன்னை— உன்திறத்தில்
ஒத்தார்க்கு ஒத்தன — வேண்டுவார்க்கு வேண்டினபடி யெல்லாம்
பேசுவர்— குற்றம் சொல்லுவர்கள்;
உரப்ப — (இப்படியிருக்கிற வுன்னைக்) கோபிக்க
நான்— தாயான நான்
ஒன்றும் மாட்டேன்— எவ்வளவும் சக்தையாகிறிலேன்;
அத்தா— என் நாயனே!
உன்னை இத்யாதி பூர்வவத்.

‡ "தடம்" என்றது "தடி" என்ற வடசொல்லின் விகாரமாய், 'சோலைத்தட' மென்றதற்கு - சோலைப் பிரதேசங்களிலே யென்று பொருளாகவுமாம்.

வ்யா. பத்தாம்பாட்டு. தொத்தாரித்யாதி. கொத்தாய்ச் சேர்ந்திருந்துள்ள பூக்களாலே அலங்கர்தமான குழலை யுடையளாய், திருவாய்ப்பாடியிலுள்ள பெண்களிற்காட்டில்

"இன்னுள்" என்று குறிக்கப்படுவா ளொருத்தியை. சோலைத்தடம்கொண்டுபுக்கு. இடமுடைத்தான சேரலையிலே கொண்டுபுக்கு. முத்தார்கோங்கைபுணர்ந்து, முத்துவடத்தாலே அலங்கரிக்கமான முலைகளிலே லம்பலேஷித்து. இராநாழிகை மூவேழு சென்றபின் வந்தாய், ராத்ரி மூன்றுயாம மற்றபின் வந்தாய். ஒத்தார்க்கோத்தன பேசுவருன்னை. உன் செயலித வாகையாலே வேண்டுவார்க்கு வேண்டுவது சொல்லுவீருன்னை. உனக்கு தோஷம் சொல்வார்க்கெல்லா மிடமாம்படி செய்யாநின்ற யென்கை. உரப்பவே நானென்றும்மாட்டேன். இப்படி யிருக்கிற வுன்னைக் கோபிக்கவென்றால் நான் எகதேசமும் கூடமையாகிறிலேன். பிள்ளைகள்தீம்புகண்டால் தாய்மார் சிகூடியார்களோ? "உன்னுடைய முகம் கன்றும்" என்னுமத்தாலே அது என்னைச் செய்யப்போகிறதில்லை. அத்தா, என்னுடைய நாதனை. உன்னை யறிந்துகொண்டேன். உன்னுடைய அதிமாநுஷம் கண்டபின்னை "அநியாம்பன்" என்றறிந்துகொண்டேன். உனக்கித்யாதி. ஆனபின்பு, உனக்கம்மம்தாவஞ்சுவன். ... ... ஓ.

அ. நிகமத்தில், இத்திருமொழி கற்றார்க்கு பலம்சொல்லித் தலைக்கட்டுகிறார்.

மூ.—காரார்மேனிநிறத் தெம்பிரானைக் கடிகமழ் பூங்குழலாய்ச்சி
ஆராவின்னமுதுண்ணத் தருவனனம்மந்தாரே னெஞ்றமாற்றம்
பாரார்தோல்புகழான் புதுவைமன்னன் பட்டர்பிரான் சொன்னபாடல்
ஏராரின்னிசை மாலைவல்லா ரிருடீகேச னடியாரே. கக.

பதவுரை.

கார் ஆர்— மேகத்தைதாடொத்த
மேனிநிறம்— திருமேனிநிறத்தையுடையனும்
எம் பிரானை— எனக்கு உபகாரகனனவனை
கடி கமழ்— வாஸனை வீசாநின்ற
பூ— பூக்களையணிந்த
குழல்— கூந்தலையுடைய
ஆய்ச்சி— யசோதைப் பிராட்டி
ஆரா— ஒருக்காலும் தெகுட்டாததாய்,
இன்— போக்யமாயிருந்துள்ள
அமுது— கொங்கை யமுதத்தை
உண்ண— அவன் உண்ணும்படி
தருவன்— தருவாளாயிருந்த
நான்— நான்
அம்மம் தாரேன் என்ற மாற்றம்— "உனக்கு அம்மம்தர அஞ்சுவன்" என்ற பாகுத்தை

பார்— பூமிப்பரப்பு படங்களும்
ஆர்— நிறைந்திருப்பதாய
தொல்— ஸ்வாபாவிகமாஞ
புகழான்— கீர்த்தியை யுடையராய்
புதுவை— திருப்புதுவைக்கு
மன்னன்— நிர்வாஹகரான
பட்டர் பிரான்— பெரியாழ்வார்
சொன்ன— அருளிச்செய்த
பாடல்— பாடலாகிற
ஏர் ஆர்— இயலழகாலே நிறைந்ததாய்
இன்— இனிய
இசை— இசையோடே கூடியிருந்து
மாலை— சொல்மாலையை
வல்லார்— ஓத வல்லவர்கள்
இருடீகேசன்— ஹ்ருஷீகேசனுக்கு
அடியார்— கிங்கரராகப் பெறுவர்கள்.

வ்யா. காசார்நித்யாதி. மேகத்தோடு சேர்ந்த திருமேனியின் நிறத்தையுடையனும் எனக்கு உபகாரகனனவனை. கடிகமழ்பூங்குழலாய்ச்சி. நாறுகூற்றம் கமழாநின்றுள்ள அழகியகுழலை யுடையளான யசோதைப்பிராட்டி. ஆராவித்யாதி. ஒருகாலும் தெகுட்டாததாய் இனிதாயிருந்துள்ள என்னிளங்கொங்கையமுதமுண்ண முன்புந்தந்தமேலும்தருவாளாயிரு

ந்த நான் உன்னை யறிந்துகொண்டபின்பு, "உனக்கம்மந்தாரேன், அஞ்சுவன்" என்று சொன்ன சொல்லவை. பாராரித்யாதி. விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியற இருந்தாரிருந்தவிடமெங்கும்கொண்டாடுகையாலேபூமியெங்கும்நிறைந்திருப்பதாய், ஸ்வாபாவிகமான புகழையுடையராய், திருப்புதுவைக்கு நிர்வாஹகரான பெரியாழ்வாரருளிச்செய்த பாடலான. ஏராரித்யாதி. இயலழகால்மிக்கு, அதுக்குமேலே இனியவிசையோடே கூடியிருந்துள்ள ஸந்தர்ப்பத்தை ஸாபிப்ராயமாகவல்லவர்கள். இருடீகேசனடியாரே. இந்த்ரியங்களைப் பட்டிபுகாமல் ஸ்வரூபரூபமாக நடக்கும்படி நியமிக்குமவனுக்கு நித்யகிங்கராகப் பெறுவர். ... ... ககக.

பெரியபீயர் திருவடிகளே சரணம்.

அடிவ்சவ.—தன்னேர் பொன் தும்மாயம் மையார் முப்போது
கரும்பு மருட்டார் வாளா தாய்மார் தொத்தார் காரா ரஞ்சாம்.

ஆ - திருமொழி, உ - க்கு, பாட்டு - உ ஃ.

மூன்றும் பத்து - இரண்டாந் திருமொழி - அஞ்சனவண்ணனை, ப்ரவேசம்.

அ. "அம்மமுண்ணாத்துயிலெழாய்" என்றும் "சுணாந்றணிமுலையுண்ணத்தருவன்" என்றும் "இவன்பருவத்துக்கு அநுகுணமான காரகமிது" என்றுநினைத்து காலாநுகுணமாக முலைகொடுத்துப்போரும் மாதாவான யசோதைப்பிராட்டி, இவனுடைய சேஷ்டிதங்களைக் கண்டு இவன்பக்கல் புத்ரத்வாதி ப்ரதிபத்தி குலைந்து தேவதாப்ரதிபத்தி விளைந்து, இவன் "அம்மமுண்ணவேணும்" என்று அழச்செய்தேயும், "உன்னையறிந்துகொண்டேன் உனக்கம்மந்தரவஞ்சுவன்" என்று பலகாலும் சொன்ன ப்ரகாரத்தை, தாமும் அப்படியேபேசி அநுபவித்தாராய் நின்றூர்-கீழ்; அவள் அத்தை அப்போதேமறந்து, முன்போலே தன்னுடைய புத்ரனுகவே இவனை ப்ரதிபத்திபண்ணி அபிமாநித்து, ப்ராஹ்மணர்க்கு பால்யத்திலே ப்ரஹ்மசர்ய மநுஷ்டித்து, பின்பு கார்ஹஸ்த்ய மநுஷ்டிக்கை தர்மமாயிருக்குமாபோலே, இடையர்க்கும் இளம்பருவத்தில் கன்றுகள்மேய்த்து, பக்வானபின்பு பசுநிரைமேய்க்கை ஜாத்யுசிதமாகையாலே, (க) "ஸுஷுப்ஸுர்ஜ்ஜகதீவாலை வத்ஸவாலை வபூவதுஃ" என்கிறபடியே கன்றுகள்மேய்க்கத் தகுதியான பருவத்தை ப்ராப்தனை விளை*சிறுகாலே யூட்டி யொருப்புடித்தி, கன்றுகள் மேய்க்கும்படி போகவிட்டு, அவன்போனவநந்தரம் கூசணகாலவிச்லேஷம் பொறுக்கமாட்டாதவளாகையாலே அவன் ஊரிலே நின்று செய்யும் ஸ்வைரவிஹாரங்களையெல்லாம் பரக்கச்சொல்லி, இப்படி செய்து நிரியாமல் "கன்றுகளின் பின்னே இவனை என்செய்யப்போகவிட்டேன்" என்று இவனுடைய மார்த்தவத்தையும், போகிறவிடத்தின் காடிந்யதைசூண்யங்களையு மநுஸந்தித்து, "ஸுகுமாரனை விவனை இப்படியிருக்கிற காட்டிலே போகவிட்டேனே" என்றும், அவ்வளவுமன்றிக்கே, "குடையும் செருப்பும் கொடாமல் வெய்யிலும் கல்லும் முள்ளுமான தேசத்திலே போகவிட்டேனே" என்றும் பகுமுகமாக க்லேசித்துச்சொன்ன ப்ரகாரத்தை, ததவஸ்தாபந்நராய்க்கொண்டு தாமுமப்படியேபேசி அநுபவிக்கிறார்- இத்திருமொழியில். ... ... *

(க) "ஸர்வஸ்ய ஜகதீபாலள வத்ஸபாலள பபூவதுஃ"

மூ.—அஞ்சனவண்ணனை யாயர்கோலக்கொழுந்தினை
மஞ்சனமாட்டி மணிகடோறுந்திரியாமே
கஞ்சனைக்காய்ந்த கழலடிநோவக்கன்றின்பின்
என்செயப் பிள்ளையைப் போக்கினேனெல்லேபாவமே. க.

234

பதவுரை.

அஞ்சனம்— மைபோன்ற
வண்ணனை— திருமேனியை யுடையனும்
ஆயர் கோலம்—இடைக்கோலம்பூண்டவனும்
கொழுந்தினை— அவ்விடையர்களுக்குத்தலை
வனான கண்ணனை
மஞ்சனம் ஆட்டி— நீராட்டி
மணிகள்தோறும்— பிறமணிகள்தோறும்
திரியாமே— (தன்மணியிற்போல்) திரியக்
கண்டிருக்கப்பெறுதல்
கஞ்சனை— கம்ஸனை
காய்ந்த— உதைத்த
கழல்— வீரக்கழலையுடைய
அடி— திருவடிகளானவை
நோவ— நோம்படியாக
கன்றின்பின்— புல்லுக்கண்டு பாய்ந்தோடித்
திரியும் கன்றுகளின்பின்னே
பிள்ளையை— என்பிள்ளையை
என் செய— ஏதுக்காக
போக்கினேன்— போகவிட்டேன்;
எல்லே பாவமே—என்னே! நான்பண்ணின
பாவமிருந்தபடியென்!
என்று வெறுத்துச்சொல்லுகிறாள்.

வ்யா. முதற்பாட்டு. அஞ்சனவண்ணனை. * கண்டவர்கள் கண்குளிரும்படி அஞ்ச
நம்போலே யிருண்டிருக்கிற திருமேனியை யுடையவனை. அஞ்சும் - மை. மைப்படி மேனி
யிறே. ஆயரித்யாதி. கன்றுகளின்பின்னேபோகிறபோதை நடையின் த்வனியும் திருமேனி
யின் குறுவெயர்ப்பும் அலைந்த திருக்குழல்களும் திருக்கையில் பிடித்த பொற்கோலுமான
ஆயர்கோலத்தையுடையனும், அவைகளுக்கு முன்னேடிக் கார்யம்பார்க்கும் தலைவனானவனை.
அன்றிக்கே, வேரிலே வெக்கைதட்டினால் கொழுந்து முற்பட வாடுமாபோலே அவர்களுக்கு
ஒருநோவுவந்தால் முதல் தன்முகம் வாடும்படியிருக்கையாலே "கொழுந்து" என்கிறதாக
வுமாம். "ஆயர்கொழுந்தாய்" என்றுரிதே ஆழ்வார். மஞ்சனமித்யாதி. "பொன்போல
மஞ்சனமாட்டி" என்கிறபடியே திருமேனியழகு விளங்கும்படி திருமஞ்சனம் செய்து, தன்
மணிபோலே பிறர்மணிகடோறும் வ்யாபரித்துத் திரியக்கண்டிருக்கப்பெறுதே. கஞ்சனைக்காய்
ந்தகழலடிநோவ. கடிதுப்பாய்ந்தியான கம்ஸனை உதைக்கையாலே நொந்ததிருவடிகளானவை கலை
யும் கரடுமான காட்டுவழியிலே நடக்கையாலே மிகவும் நோம்படியாக. கழலடி. வீரக்கழலை
யுடைத்தான திருவடிகளென்கை. கன்றின்பின் என்செயப்பிள்ளையைப் போக்கினேன். ஓரி
டத்தில் நில்லாதே பாய்ந்தோடித்திரியும் கன்றுகளின் பின்னே மற்றுப்பாய்ந்தியான பிள்ளையை
எதுக்காகப் போகவிட்டேன். இவன் பக்வனுய் சத்ருஜயம்பண்ண வல்லனானாலும் "பிள்ளை"
என்றிறே இவள் சொல்லுவது. எல்லே பாவமே. என்னே! நான் பண்ணின பாபமிருந்தபடி
என்! என்று வெறுத்துச்சொல்லுகிறாள். ... ...

மூ:—பற்றுமஞ்சள்பூசிப் பாவைமாரோடு பாடியில்
சிற்றிற்சிதைத்தெங்குந் தீமைசெய்துதிரியாமே
கற்றுத்தூளியுடைவேடர் கானிடைக்கன்றின்பின்
எற்றுக்கென்பிள்ளையைப் போக்கினேனெல்லேபாவமே.

பதவுரை.

பற்று— பறறும்படியான
மஞ்சள்— மஞ்சளை
பூசி— திருமேனியில் பூசிக்கொண்டு
பாடியில்— ஆய்ப்பாடியிலுள்ள
பாவைமாரொடு— பெண்களோடே
சிறு இல்— தன்னை உபேக்ஷித்து விளையா
டுகிறவர்களுடைய மண்மிகாட்டகங்களை
சிதைத்து— திருவடியாலழித்து
எங்கும் — எவ்விடங்களிலும்
தீமை செய்து— இப்படிப்பட்ட தீம்புகளைச்
செய்து
நிரியாமே — திரியாதபடி
கன்று — கன்றுகளுடைய
தூளி ஊடை — தூளிகளாலே வ்யாப்தமாய்
வேடர் — வேடர் திரிகிற
கானிடை — காட்டிலே
கன்றின்பின் — கன்றுகளின் பின்னே
என் பிள்ளையை— என்னுடைய கண்ணனை
எற்றுக்கு — ஏதுக்காக
போக்கினேன் — போகவிட்டேன்?
எல்லே! பாவமே

வ்யா. இரண்டாம்பாட்டு. பற்றுமஞ்சள்பூசி. ஊரிற் பெண்கள் தங்களுக்குப் பூசு கைக்கு மஞ்சள் அரைத்தால்‡பற்றுப்பார்ப்பது இவனுடம்பிலேயாய்த்து. ஒருத்தி இழுகின விடத்திலே ஒருத்தியிழுகாதே தனித்தனியேயிழுகி, பற்றுப்பார்க்கையாலே திருமேனியெங் கும் மஞ்சள்பூசினாற்போலே யிருக்குமாய்த்து. அத்தைப்பற்ற "பற்றுமஞ்சள்பூசி" என் கிறாள். பாடியில்-பாவைமாரோடு. திருவாய்ப்பாடியிலுள்ள பெண்களோடே. சிற்றில் சிதை த்து.. தன்னை உபேக்ஷித்திருந்து விளையாடுகிறவர்களுடைய கோட்டகங்களை யழித்து. எங்கும் தீமைசெய்து திரியாமே. இப்புடைகளிலே எங்கும் தீம்புகளைச்செய்து திரியாதபடியாக. இப் படி திரியக்கண்டிருக்கைபோலே காணும் இவள்தானுகப்பது. கற்றுத்தூளியுடை வேடர் கானிடை. முன்வருகிறவர்களைத் தெரியாதபடி. கன்றுகளினுடைய தூளியாலே வ்யாப்தமாய் ¶ அடிச்சுப்பறிக்கும் வேடர் ஸஞ்சரிக்கிற காட்டிலே. கன்றின்பின் எற்றுக்கென்பிள்ளையைப் போக்கினேன். புறம்பொன்றையும் பார்க்கவொட்டாதே தன்பின்னே ஓடித்திரியப்பண்ணும் கன்றுகளின்பின்னே என்ன ப்ரயோஜநத்துக்காக என்பிள்ளையைப் போகவிட்டேன். எல்லே பாவமே. பூர்வவத். ... ... உ.

மூ.—நன்மணிமேகலை நங்கைமாரோடு நாடொறும்
பொன்மணிமேனி பழுதியாடித் திரியாமே
கன்மணிநின்றதிர் கானதரிடைக்கன்றின்பின்
என்மணிவண்ணனைப் போக்கினே னெல்லேபாவமே. கூ.

பதவுரை

என்— எனக்கு அநுபவிக்கலாம்படியான
மணி வண்ணனை— நீலமணிபோன்ற வடிவை
யுடையவனை
நல்— லோகோத்தரமான
மணி— நவமணிகள் பதித்த
மேகலை— மேகலையையுடையளாய்

§ பற்றுப்பார்க்கை பற்றும், பற்றுதென்று பரீக்ஷை பார்க்கை. ‡ இழுகுதல்-பூசுதல்.
"அடிச்சு" என்றது— "அடித்து" என்றதற்குப்போலி.

நங்கைமாரோடு — ஸௌந்தர்ய பூர்த்தியை யுடையரான பெண்களோடே
பொன் – அழகிய
மணி— நீலரத்நம்போன்ற
மேனி— திருமேனியான்து
நாள்தோறும் – ப்ரதிதினமும்
புழுதி ஆடி— புழுதியிலளைந்து
திரியாமே – திரியாதபடி
கல்— மலையான்து
மணி நின்று அதிர் — (இவன் கன்றுகளை யழைக்கிற த்வநியாலும், அவை கூப்பிடுகிற த்வநியாலும்) ப்ரதித்வநி யெழும்படியான
கான் அதரிடை – காட்டுவழியிலே
கன்றின் பின்— கன்றுகளின் பின்னே
போக்கினேன்—; எல்லே பாவமே.

வ்வா. மூன்றாம்பாட்டு. நன்மணியித்யாதி. நல்லரத்நங்களாலே சேர்க்கப்பட்ட மேகலையையுடையராய், ஜாத்யுசிதமான குணபூர்த்தியையுடையரான பெண்களோடே ஒருநாளிரண்டுநாளன்றிக்கே நாடோறும், பொன்னித்யாதி: அழகிய நீலரத்நம்போலே யிருக்கிற திருமேனி அவர்களோடு இட்டீடுகொள்ளுகையாலே புழுதியாடித் திரியாதபடியாக. * மஞ்சனமாட்டி மணிகளோடாறும் திரியக்காண்பதிலும் இப்படி புழுதியாடித் திரியக்காண்கையாலே காணும் இவள்தானுகந்திருப்பது. கன்மணியித்யாதி. “ கன்று மேய்த்து வினையாடவல்லாணை வரைமீ காளில் ” என்கிறபடியே மலைமேல் காடுகளிலே கன்றுகளை மேய்க்கையாலே ஜாத்யுசிதமாக இவன் கன்றுகளை யழைக்கிற த்வநியாலும், அவைதான் கூப்பிடுகிற த்வநியாலும், அங்குண்டான மலையான்து மணித்வநிபோலே நின்று ப்ரதித்வநி எழும்படியான காட்டு வழியிலே கன்றின்பின்னே. என் மணிவண்ணனைப் போக்கினேன். ஏதேனுமொன்றைக் கண்டவாறே வெருண்டோடுகிற கன்றுகளின்பின்னே, எனக்கதுபாவ்யமான நீலரத்நம்போன்ற வடிவையுடையவனைப் போகவிட்டேன். எல்லேபாவமே. ... ... ங.

மு:—வண்ணக்கருங்குழன் மாதர்வந்தலர்தூற்றிடப்
பண்ணிப்பலசெய்திப்பாடி யெங்குந்திரியாமே
கண்ணுக்கினியானைக் கானதரிடைக்கன்றின்பின்
எண்ணற்கரியானைப் போக்கினே னெல்லேபாவமே. நு.

237

பதவுரை.

வண்ணம்— அழகியதாய்
கரு— கறுத்திருந்துள்ள
குழல் – கூந்தலையுடையரான
மாதர் – ஸ்த்ரீகளானவர்கள்
வந்து – அரைகுலையத்தலைகுலையவோடிவந்து
அலர்தூற்றிடப்பண்ணி – பழிதூற்றும்படியாகப்பண்ணி
பல செய்து— ஒளவற்ற நீப்புகளைச் செய்து
இ பாடி எங்கும்— இச்சேரியெங்கும்
திரியாமே – திரியாதபடி
கண்ணுக்கு – கண்களுக்கு
இனியானை – போக்யனாய்
எண்ணற்கு – ‘இப்படிப்பட்டவன்’ என்று நினைக்கைக்கு
அரியானை – அரியனானவனை
கானதரித்யாதி பூர்வவத்.

வ்வா. நான்காம்பாட்டு. வண்ணமித்யாதி. வண்ணம் - அழகு. அழகியதாய்க் கறுத்திருந்துள்ள குழலையுடையரான ஸ்த்ரீகளானவர்கள் தலைகுலையவோடிவந்து பழிதூற்றும்படியாகப்பண்ணி, பலசெய்திப்பாடியெங்கும் திரியாமே. ‘பல’ என்னுமதைழிய இத்தனை

யென்று பரிக்ணிக்க வொண்ணுதபடியான தீம்புகளைச் செய்து இவ்வுலகங்கும் திரியாதபடி யாக. அலர்தூற்றுகையும் இவனிப்படி செய்கையுந்தானே ரஸமாயிருக்கும்போலே காணு மிவளுக்கு. கண்ணுக்கினியானே. தீம்பாலே நெஞ்சுகள் புண்பட்டாலும் அவற்றைக் கண் வாங்கவொண்ணுதபடி தர்ஷ்டிப்ரியனு யிருக்குமவனே. எண்ணற்கரியானே. ஸ்வயத்நத்தாலே பெறப்பார்ப்பார்க்கு நினைக்கைக்கும் அரியனானவனே. கானதரிடைக்கன்றின்பின் - போக்கி னேன். இப்படி தூலபுனானவனைக் காட்டுவழியிலே கன்றுகளின்பின்னே போகவிட்டேன். எல்லேபாவமே. ... ... ச.

மூ.—அவ்வவ்விடம்புக்கவ்வாயர் பெண்டிர்க்கணுக்கனுய்க்
கோவ்வைக்கனிவாய் கொடுத்துக் கூழமைசெய்யாமே
எவ்வுஞ்சிலையுடைவேடர் கானிடைக்கன்றின்பின்
தெய்வத்தலைவனைப் போக்கினே னெல்லேபாவமே. டு.

பதவுரை.

தெய்வம்— தேவர்களுக்கு	கொடுத்து — அவர்களுக்கு ஜீவநமாகக் கொடுத்து
தலைவனை— நிர்வாஹகனானவனை	கூழமை செய்யாமே— கூழ்மைத்தன மடித்துத் திரியாதபடி
அ அ இடம்— மச்சு, மாளிகை முதலான அவ்வவ இடங்களிலே	எவ்வும்— பயங்கரமாக
புக்கு— ஏகாந்தமாகச் சென்றுபுக்கு	சிலை } வில்லைக் கையிலேயுடைய
அ ஆய் பெண்டிர்க்கு — அவ்விடைப் பெண்களுக்கு	உடை }
அணுக்கனுய்— அந்தரங்கனுய்	வேடர்— வேடர் திரிகிற
கொவ்வைக்னி— கோவைக்கனியோடொத்த	கானிடை— காட்டிலே
வாய்— திருவதரத்தை	கன்றின் பின் போக்கினேன்; எல்லே பாவமே.

வ்யா. ஐந்தாம்பாட்டு. அவ்வவ்விடம்புக்கு. * மச்சோடு மாளிகை நிலவறை முத லான அவ்வவ ஸ்தலங்களிலே பிறர்க்குத் தெரியாதபடி சென்றுபுக்கு. அவ்வாய்பெண்டிர்க் கணுக்கனுய். அவ்வவ ஸ்தலங்களிலிருந்த இடைப்பெண்களுக்கு அந்தரங்கனுய். அதாவது அவர்கள்(க)புத்யதீநமாகத்தன்னைச் சமைத்துவைக்கை. கோவ்வைக்கனிவாய் கொடுத்து. கோ வைப் பழம்போலே யிருக்கிற திருவதரத்தை அவர்களுக்கு ஜீவநமாகக்கொடுத்து. கூழமை செய்யாமே. கூழ்மைத்தனமடித்துத் திரியாமே. கூழமையாவது- " உன்னையல்லதறியேன், உன்னுலல்லது தரியேன்" என்று † அவரவர்க்கே யற்றுனுய்ப் பரிமாறுகை. எவ்வும் சிலை யுடை வேடர்கானிடை. எவ்வும்சிலை யென்றது — " எவ்வும் வெவ்வேல் " என்னுமா போலே, கண்டவர்களுக்கு பயங்கரமாய்க்கொண்டு துஃகத்தைப் பண்ணுநின்றுள்ள சிலையெ ன்னுதல். அன்றிக்கே, "ஏவும்" என்கிறவித்தை, "எவ்வும்" என்று குறைத்துக்கிடக்கிற தாய், " ஏ " என்று - அம்புக்குப்போராய், அம்போடே சேர்ந்த சிலையென்னவுமாம். முற் பட்ட யோஜனைக்கு, எவ்வுமென்றது-‡எவ்வத்தைப் பண்ணுநிற்கு மென்றபடி; பிற்பட்ட

(க) வ-ஜ்யீந. † கத்தகைநிர்கனுயென்றபடி. ‡ எவ்வம்- துன்பம்.

யோஜனைக்கு எவ்வும் என்கிறவிடத்தில் வகரவொற்று, கீழிலடிகளுக்குச் சேரவேண்டுகை பாலே வந்துகிடக்கிற வித்தனை. இப்படி யிருந்துள்ள சிலேஷையுடையரான வேடர் வர்த்திக்கிற காட்டிடத்திலே, கன்றின்பின் தெய்வத் தலைவனைப் போக்கினேன். ஸ்வைர கதிதரான கன்றுகளின்பின்னே தேவர்களுக்குத் தலையானவனைப் போகவிட்டேன். எல்லேபாவமே. இ.

மூ.—மிடறுமெழுமெழுத்தோட வெண்ணெய் விழுங்கிப்போய்ப்
படிறுபலசெய்திப்பாடி யெங்குந்திரியாமே
கடிறுபலதிரி கானதரிடைக் கன்றின்பின்
இடறவென்பிள்ளையைப் போக்கினே னெல்லேபாவமே. சு.

பதவுரை.

வெண்ணெய்— வெண்ணையை
மிடறு— கழுத்திலே
மெழுமெழுத்து ஓட— (உறுத்தாமல்)
மெழுமெழுத்து உள்ளே யோடும்படி
விழுங்கி— அமுது செய்து
போய்— புறம்பு போய்
பல்— அளவற்ற
படிறு—தீம்புகளை
செய்து— செய்து
இ பாடி எங்கும்— இச்சேரியெங்கும்
திரியாமே— திரியாதபடி
பல கடிறு— பல காட்டானைகள்
திரி— திரியா நின்றுள்ள
கான் அதரிடை— காட்டுவழியிலே
கன்றின் பின்— கன்றுகளின் பின்னே
இடற— தட்டித் திரியும்படி
என் பிள்ளையை — ஸுகுமாரனான என் கண்ணனை
போக்கினேன் எல்லே பாவமே.

வ்யா. ஆறும்பாட்டு. மிடறு மெழுமெழுத்தோட வெண்ணெய் விழுங்கிப்போய். இத்தால் - வெண்ணெய் விழுங்கும்போதை அந்யாஸம் சொல்லுகிறது. அதாவது - ஒருகால் பூபாதிகள் அமுதுசெய்யும்போது குறிக்கொண்டு திருப்பவளத்திலே இட்டிருந்துமென்று மெள்ள மிடற்றுக்குக்கீழே யிழிச்சவேணுமிறே; அங்ஙனன்றிக்கே, "தாழியில் வெண்ணெய் தடங்கையார விழுங்கிய" என்றும், "தடாநிறைந்த வெள்ளிமலையிருந்தாலொத்த வெண்ணெயை வாரிவிழுங்கிட்டு" என்றும் சொல்லுகிறபடியே வெண்ணெயிலுடைய ஸம்ர்த்தியைக்கண்டு ப்ரியப்பட்டு அபிநிவேசாதிசயத்தாலே திருக்கையைவிரித்து நிறையவள்ளி "கைகலந்துண்டான்" என்கிறபடியே இடக்கையாலும் வலக்கையாலும் வாரியமுது செய்யும்போது ஒருபருக்கை யில்லாமையாலே மிடற்றிலுறுத்தாமல் மெழுமெழுத்து உள்ளேயோடும்படியாயிறே யிருப்பது. ஆகையால் இது இவன் ஸௌகுமார்யத்துக்குச் சேர்ந்திருக்குமிறே. இப்படி வெண்ணெயை யமுதுசெய்து, கல்யாணதாங்களிற் காட்டிலும் இவன் விரும்பியிருப்பது வெண்ணெயேயிறே. *ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்கைக்காகவிறே வந்தவதரித்ததும். விழுங்கிப்போயென்றது - விழுங்கியிட்டென்னுதல்; ஸ்வகார்ஹத்திலே இப்படி வெண்ணெயை விழுங்கிப் புறம்போயென்னுதல்.

படிறுபலசெய்து. படிறு - தீம்பு. பலவென்கையாலே - அதுக்கு எண்ணில்லாமை சொல்லுகிறது. "பந்துபறித்துத் துகில்பற்றிக்கீறிப் படிறன் படிறுசெய்ய" என்கிறபடியே விளையாடுகிற பெண்கள்கையில் லீலோபகரணங்களைப் பறிப்பது, அவர்கள் புடை

வைகளைப் பற்றிக் கிழிப்பது; சிற்றில்களை யழிப்பது, "தொட்டுதைத்து நலியேல்" "எம் மைப்பற்றி மெய்ப்பிணக் கிட்டக்கால்" என்கிறபடியே அவர்களோடே இட்டீடுகொண்டு மெய்ப்பிணக் கிடுவதாய்ச் செல்லும் வ்யாபாரங்களுக்கு ஓரவதியில்லையிறே. இவன் செய்யு மவை அவாச்யமுமாய் அஸங்க்யேயமுமா யிருக்கையாலேயிறே "படிறு" என்றும் "பல" என்றும் இவள் அடக்கிச் சொல்லிவிட்டது: இப்படி செய்து. இப்பாடியெங்கும் திரி யாமே. ஓரக்மிரண்டகத்தள வன்றிக்கே, ஒருதெரு இரண்டுதெருவளவு மன்றிக்கே, பஞ்ச லக்ஷமீ ஆடியாய் ஒருகோல் ஒருமனையான இத்திருவாய்ப்பாடியெங்கும் இப்படி திரியாதபடி யாக "ஆஞ்சநேயப்பாள்சோதையாண்ட விட்டிட்டிருக்கும்" என்கிறபடியே இவன் இப்படி செய்கிறானென்றால் பயப்பட நியமியாதே "நம்முடைய பிள்ளையும் ஸமர்த்தனாய் இப்படி செய் யப்பெற்றோம்" என்று இது தன்னைக்கண்டு உகந்திருக்குமவளிறே. ஆகையாலிறே இப் படி திரியாதபடி போக்கிட்டேனென்று க்ஷமிக்கிறது.

கடிறுபலதிரி. கன்றுகள் பலவும்திரிகிற. "கெளிறு" என்கிற மத்ஸ்யத்தை, "கெ டிறு" என்னுமாபோலே, களிறு என்கிற வித்தை, "கடிறு" என்கிறது. கருடனை "கரு ளன்" என்று டகாரத்துக்கு ளகாரமாக்கச் சொல்லுகிறுப்போலே, களிற்றை "கடிறு" என்று ளகாரத்துக்கு டகாரமாக்கச் சொல்லுகிறது. ஆனைகள் பலவும் திரிகிற வென்கையாலே, "காட் டானைகள் ஆனைக்கண்டால் ஓடிக்கிடாரந்து விழவிட்டுக் கொல்லும்" என்று அஞ்சிச் சொல் லுகிறாள். கானதரிடை. காட்டுவழியிடத்திலே. அதாவது- சிற்றடிப்பாடாகையாலே இட வாய் வலவாய்ப்போக இடமற்றிருக்குமிறே. கன்றின்பின். அதிலும் தன்னிஷ்டத்திலே போய் வருகையன்றிக்கே, புல்லுக்கண்டவிடத்திலே தழைந்து போகாநிற்கும் கன்றுகளின் பின்னே திரியவேணுமே. இடறவென்பிள்ளையைப் போக்கினேன். இப்படி தட்டித்திரியும் படியாக ஸுகுமாரனான வென்பிள்ளையைப் போகவிட்டேன். எல்லேபாவமே. ... ... கூ,

மு.—வள்ளிநுடங்கிடைமாதர் வந்தலர்தூற்றிடத்
துள்ளிவிளையாடித் தோழரோடு திரியாமே
கள்ளியுணங்குவெங் கானதரிடைக்கன்றின்பின்
புள்ளின்றலைவனைப் போக்கினேனேல்லே பாவமே. எ.

பதவுரை.

வள்ளி— இளங்கொடி போன்று
நுடங்கு— துவளா நின்றுள்ள
இடை— இடையையுடைய
மாதர்— பெண்களானவர்கள்
வந்து— ஓடிவந்து
அலர் தூற்றிட— பழிதூற்றும் படியாக
துள்ளி— (நிலத்தில் மிதித்து நடவாதே) துள்ளிக்கொண்டு
விளையாடி— விளையாடி
தோழரோடு— தோழன்மார்களோடு
திரியாமே— திரியாதபடியாக
கள்ளி— (மழையில்லாக் காலத்திலும் பசுமைமாறுத) கள்ளியானது
உணங்கும்— பால்வற்றி உலரும் படியாய்
வெம்— வெப்பத்தையுடைய
கான் அதரிடை— காட்டுவழியிலே
புள்ளின் தலைவனை— பெரிய திருவடிக்கு நாதனானவனை
போக்கினேன்;—எல்லே பாவமே.

வ்யா. ஏழாம்பாட்டு. வள்ளியித்யாதி. வள்ளிக் கொடி, கொடிபோலே துடக்கு கிற இடையையுடையர்ான பெண்கள் வந்து தங்கள்திறத்தில் இவன்செய்த படிறுகளைச்சொல்லிப் பழிதூற்ற். உலைய வினையாடினால் பழிதூற்ற நிராகரிக்கிறே. துள்ளிவிளையாடித் தோழரோடே திரியுமே. இப்படி இவர்கள்வந்து பழிதூற்றுநின்றால் ஒருசற்றும் பயமின்றிக்கே இதுதன்னையே தனக்கேற்றமாகக்கொண்டு கர்வித்து, குழக்கன்றுகள் செருக்காலே துள்ளுமாபோலே நிலத்தில் மிதித்து நடவாதே துள்ளிக்கொண்டு விரோதித்து * தன்னேராயிரம் பிள்ளைகளான தோழன்மாரோடே திரியாதபடியாக, கள்ளியுணங்குவெங்கானதரிடைக் கன்றின்பின். அநாவ்ருஷ்டியாலும் பசுமைமாறாத கள்ளியானது நிலவெம்மையாலே பால்வற்றிப் பசுமையழிந்து உலரும்படி அத்யுஷ்ணமான காட்டுவழியிலே கன்றுகளின்பின்னே, புள்ளின் தலைவனைப்போக்கினேன். பெரியதிருவடிக்கு சாயகனைப் அவன்மேற்கொண்டு ஸஞ்சரிக்குமதொழிய ஒருகாலமும் கால்நடைதந்து திரியாதவனைப் போக்கினேன், எல்லேபாவமே. எ.

மூ.—பன்னிருதிங்கள் வயிற்றிற்கொண்ட வப்பாங்கினால்
என்னிளங்கோங்கை யமுதமூட்டி $ யெடுத்தியான்
பொன்னடிநோவப்புலரியே கானிற்கன்றின்பின்
என்னிளஞ்சிங்கத்தைப் போக்கினேனேல்லே பாவமே. 4

பதவுரை.

பன்னிரண்டு திங்கள் — பன்னிரண்டு மாஸம்
வயிற்றில் கொண்ட — (பிள்ளைக்கு நலுக்கம் வராமல்) வயிற்றிலே வைத்து நோக்கின
அப்பாங்கினால் — மிகப்பாங்காக நடத்திப் போந்த ஸ்நேஹத்தாலே
யான் — தாயான நான்
என் — என்னுடைய
இள — குழைந்திருக்கிற
கோங்கை அமுதம் — முலையின் பாலை
ஊட்டி எடுத்து — ஊட்டி வளர்த்து
என் — எனக்கு
இளஞ்சிங்கத்தை — இளஞ்சிங்கம் போன்ற வலீ
பொன் — ஸுகுமாரீ ஸுந்தரமான
அடி — திருவடிகள்
நோவ — நோம்படியாக
புலரி — விடியற் காலத்திலே
கானில் — காட்டிலே
கன்றின் பின் — கன்றுகளின் பின்னே
போக்கினேன் = ; எல்லே பாவமே.

வ்யா. எட்டாம்பாட்டு. பன்னிருதிங்கள். (க) "கதாசுபாதபோஷணவ" என்கிறபடியே சக்ரவர்த்திதிருமகனைப்போலே இவனும் பன்னிரண்டுமாஸம் கர்ப்பவாஸம்பண்ணியிறே பிறந்தது. கர்ப்பிணிகளான ஸ்த்ரீகள் தங்களுடைய ஆசார்த்தால், ஸ்ருதி கர்மஸ்ம்ருதிகளால் கர்ப்பத்திலிருக்கிற பிள்ளைகளுக்கு நலுக்கம்வாராதபடி பேணிக்கொண்டிறே திரிவது; அப்படியே இவளும் பன்னிரண்டுமாஸமும் ஒருநலுக்கம் வராதபடி பேணித்தன் வயிற்றிலேவைத்துக்கொண்டிருந்த ஸ்நேஹவிசேஷத்தைச் சொல்லுகிறாள்—பன்னிருதிங்கள் வயிற்றிற்கொண்ட வப்பாங்கினால் என்று. என்னிளங்கோங்கை யமுதமூட்டி யெடுத்தியான், வயிற்றிலிருந்தகாலம் நலுங்காமல் நோக்கினவள், பிறந்துவளருகிறகாலத்தில் நலுங்கவிடாவிறே; ஆகையாலே இவனுண்டய பருவத்துக்கிடான தாரகமிட்டு தானெடுத்து வளர்த்துக்

$ "...உக்குறள்...யல்வரினிய்யாம்" என்ற நன்னூற் சூத்திர முணர்க.
(க) "கதச்சதவாதசேமாலே"

கொண்டு போந்தபடி சொல்லுகிறாள். இப்படி ஸ்நேஹநிதியான வென்னுடைய இளமுலையில் பாலையூட்டி யானெடுத்து. பிள்ளை முழுசி முலை நெருடுங்காலத்தில் "வரக்கு" என்று இருக்கையன்றிக்கே, குழைந்திருக்குப்படியைப்பற்ற "இள்முலை" என்கிறது. கொங்கையமுதமென்கையாலே முலைப்பாலென்கிறது. ஊட்டியெடுத்திப்போனென்றது நிலத்தில் விடாமல் ஒக்கலையிலெடுத்துக்கொண்டுதிரிந்து வளர்த்தவைத்தேனென்கை. பொன்னடிநோவப் புல்லரியேகானிற் கன்றின்பின். "தண்போதுகொண்டதனிக் "நெரிஞ்சி" என்னும்படி அத்யந்தம்ம்ருதுவாய் ஸ்பர்ஶநீயமான திருவடிகள் கடிந்ஸ்தலத்திலே நடக்கையாலே உளைந்து நோம்படியாக, சிறுகாலே காட்டிலே மேய்ச்சல் கண்டவிடத்திலேயோடும் கன்றுகளின் பின்னே. என்னிளஞ்சிங்கத்தைப் போக்கினேன். என்னுடைய பிள்ளையாய் நான் சீராட்டி வளர்க்கையாலே ஸிஹ்மக்கன்றுபோலே செருக்கித்திரிகிறவனைப் போகவிட்டேன். எல்லேபாவமே. ... ... அ

மூ.—குடையுஞ்செருப்பும் கொடாதே தாமோதரனேனான்
உடையுங்கடியனலுன்று வெம்பரற்களுடைக்
கடியவெங்கானிடைக் காலடிநோவக் கன்றின்பின்
கொடியனென்பிள்ளையைப் போக்கினேனெல்லே பாவமே. கூ

பதவுரை.

குடையும்— (வெய்யிலுக்கு ரக்ஷகமான) குடையையும்
செருப்பும்— (நிலவெம்மை முதலிய வற்றுக்கு ரக்ஷகமான) செருப்பையும்
கொடாதே— கொடாமல்
தாமோதரனே— வயிற்றில் கயிற்றுத்தழும்பையுடையனான கண்ணனே
நான்— தாயான நான்
உடையும்— (ஸௌர்யன் வெப்பத்தாலே) பிளந்து கிடப்பதான
கடியனல்— கூரியதான வாய்க் கொண்டு
உன்று— காலிலே உறுத்துவனவாய்
வெம்— கால் வைக்க முடியாதவையான
பரற்கள் உடை— பருக்காங்கற்களையுடைத்தாய்
கடிய் வெம்— அத்யுஷ்ணமான
கானிடை— காட்டிலே
கால் அடி நோவ— உள்ளடி நோம்படியாக
கன்றின் பின்— கன்றுகளின் பின்னே
கொடியேன்— கடிநப்ரக்ருதியான நான்
என் இத்யாதி பூர்வவத்.

வ்யா. ஒன்பதாம்பாட்டு. குடையும் செருப்பும் கொடாதே. வெய்யிலுக்கு ரக்ஷகமான குடையையும், அடிச்சூட்டுக்கும் முள்ளு முதலானவற்றுக்கும் ரக்ஷகமான செருப்பையும் கொடுத்து விடாதே. தாமோதரனே நான். எனக்கு பய்யனாய் நான் கட்டினகட்டு அவிழ்க்க மாட்டாமலிருந்த பிள்ளையானவனே நான். உடையுங் கடியனலுன்று வெம்பரற்களுடை. உஷ்ணத்தாலே நான் உடைந்துகிடப்பதாய், கூரியதாய்க்கொண்டு காலிலேலுன்றுவன்வாய், கால் வைக்கப் பெறாதபடி அத்யுஷ்ணமான பருக்கைகளையுடைய. கடியவெங்கானிடை. மேல் ஒதுங்க நிழலில்லாதபடி கொடியதாய் வெவ்விதான காட்டிலே. காலடிநோவ. கால்களின் உள்ளடி நோம்படியாக. கன்றின்பின் கொடியேனென்பிள்ளையைப் போக்கினேன். பச்சை கண்டவிடமெல்லாம் பரந்துதிரியும் கன்றுகளின் பின்னே. இவற்றையெல்லாம் ஒக்கவொக்கநிரூபியாத கொடுமையையுடையேனை நான் ஸுகுமாரனான வென்னுடைய பிள்ளையைப் போகவிட்டேன். எல்லேபாவமே. ... ...மே.

அ நிகமத்தில், இத்திருமொழி கற்றார்க்கு பலம்சொல்லித் தலைக்கட்டுகிறார்.

மூ.—என்றுமென்கினியானை யெண்மணிவண்ணனைக்
கன்றின்பின்போக்கினே னென்றசோதைகழறிய
பொன்றிகழ்மாடப் புதுவையர்கோன் பட்டன்சொல்
இன்றமிழ்மாலைகள் வல்லவர்க்கிடரில்லையே! ய.

பதவுரை.

என்றும்— எப்போதும்
எனக்கு— காயான் எனக்கு
இனியானை— ப்ரியனுப்
என்— எனக்கு அதுபவிக்கலாம்படியிருப்பான்
மணி வண்ணனை— நீலரத்நம்போன்ற வடி
வ்வயுடையனாயுள்ள
கன்றின் பின்— கன்றுகளின் பின்னே
போக்கினேன்— காட்டில் போக்விட்டேன்"
என்று— என்று
அசோதை— யசோதைப் பிராட்டி
கழறிய— மனம் மருந்திச் சொன்ன சொ
ல்லை
பொன்— பொன்னாலே செய்யப்பட்டதாய்
திகழ்— ஒளிவிடா நின்றுள்ள
மாடம்— மாடங்களையுடைய
புதுவையர்— திருப்புதுவையில் வர்த்திக்கு
மவர்களுக்கு
கோன்— நிர்வாஹக்கான
பட்டன்— பெரியாழ்வார்
சொல்— அருளிச் செய்ததாய்
இன்— போக்யமாயிருந்துள்ள
தமிழ் மாலை — தமிழ்த் தொடைகளான
இவற்றை
வல்லவர்க்கு— ஓதவல்லவர்களுக்கு
இடர்— துக்க மென்பது
இல்லை— இல்லாமற் போம்.

வ்யா. என்று மெனக்கினியானை. இப்போது செய்கையன்றிக்கே, எல்லாக்காலத்திலும் எனக்கு ரஸாவஹனாயிருக்கிற. என்மணிவண்ணனை: எனக்கு அநுபாவ்யமான நீலரத்நம்போன்ற வடிவையுடையவனை: கன்றின்பின்போக்கினேனென்றசோதைகழறிய. "வீணாவ தறியாதே கன்றுகளின்பின் போகவிட்டேன்" என்று யசோதைப்பிராட்டி க்லேசப்பட்டுச்சொன்னதை. பொன்றிகழ்மாடப் புதுவையர்கோன் பட்டன்சொல். பொன்னாலே செய்யப்பட்டு விளங்காநின்றுள்ள மாடங்களையுடைய ஸ்ரீவில்லிபுத்தூரில் வள்ளார்க்கு நிர்வாஹகராய் பெரியாழ்வார் அருளிச்செய்த: இன்றமிழ்த்யாநி: சப்தார்த்தங்களினுடைய ரஸத்தை யுண்டாக்கின தமிழ்த்தொடைகளின் விப்பத்தை ஸாபிப்ராயமாக வல்லவர்களுக்கு பகவத்விச்லேஷ துக்கமில்லை:

பெரியஜீயர் திருவடிகளே சரணம்:

அடிவரவு.—அஞ்சனப் பற்று நன்மணி வண்ணம் அவ்வ மிடறு
வள்ளி பன்னிரு தொடை யென்றும் சீலை

ஆ திருமொழி உலகுக்கு, பாட்டு உலக.

மூன்றும்பத்து, மூன்றாந் திருமொழி, சீலைக்குதம்பை-ப்ரவேசம்.

அ. ஜாத்யுசித தர்மமாகையாலே யவனைக் கன்றுகள் மேய்க்கப் போகவிட்ட யசோ தைப்பிராட்டி, அவன் போனவநந்தரம் தத்விச்லேஷா ஸஹாயாய்க்கொண்டு, அவன் ஊரில் நின்றபோது செய்யும் லீலாசேஷ்டிதங்களை யெல்லாம் சொல்லி இப்படிச்செய்து திரியாமல் இவனை எதுக்காகப் போகவிட்டேன் என்றும், அவனுடைய மார்த்தவத்தையும் போஜநவிட த்தின் கொடுமைகளையு மநுஸந்தித்து, இப்படி ஸுகுமாரனான இவனை இத்தகைகொடியகாட் டிலே கன்றுகளின்பின்னே போகவிட்டேன் என்றும் க்லேசித்துச் சொன்ன ப்ரகாரங்களை, தாமும் அப்படியே அவனைக்குறித்துப்பேசி யநுபவித்தாராய் நின்றார்—கீழ்; கன்றுகளைமே ய்த்து மீண்டு வருகிறபோது அவள் எதிரே சென்று அவனுடைய திருமேனியையும் அலங் காரத்தையும் கண்டு ப்ரீதையாய், தானநுபவித்துப் பலர்க்கு மழைத்துக்காட்டி, லோகத் திலே என்னைப்போல் பிள்ளைபெற்ற ரில்லையென்பது; நான் வாழ்வையுகந்து, உன்னைக் கன் றுமேய்க்கப் போகவிட்டேன், என்னைப்போலே கடிநசித்தையா யிருப்பாரொருத்தி யில் லையென்பது; உன்னுடைய திருமேனியெல்லாம் கற்றுத்தூளியா யிருக்கிறதுகாண், நீராடத் தக்கவை சேமித்துவைத்தேன், நீராடி யமுதுசெய்யென்பது; குடையும் செருப்பும் கொடா மையாலே திருவடிகளும் வெதும்பித்திருக்கண்களும் சிவந்து திருமேனியுமலசதலை யடைந் தாய்காண் என்பதாய்; பின்னையும் பலவற்றையும் அவனைக்குறித்துச் சொல்லிக்கொண்டு சென்று, "கண்ணா நீ நாளைத்தொட்டுக் கன்றின்பின் போகேல் கோலஞ்செய் திங்கேயிரு" என்னுமதளவாக வவன் செய்யுமவையும் தவிருமவையும் கற்பித்த பாசுரங்களை யெல்லாம் கதவஸ்தாபந்நராய்க்கொண்டு, தம்முடைய ப்ரேமாதிசயத்தாலே தாமுமவனைக்குறித்து அப் படியேபேசி, அந்த ரஸத்தை யநுபவிக்கிறார் - இத்திருமொழியில். ... ... *

மூ.—சீலைக்குதம்பையோருகா தோருகாது செங்நிறமேற்றேன்றிப்பூக்
கோலப்பணைக்கச்சுங் கூறையுடையுங் குளிர்முத்தின் கோடாலமும்
2 4 4 காலிப்பின்னே வருகின்ற கடல்வண்ணன் வேடத்தைவந்து காணீர்
ஞாலத்துப்புத்திரனைப் பெற்றார் நங்கைகீர் நானே மற்றாருமில்லை. க.

பதவுரை.

ஒரு காது— ஒரு காதிலே
சீலை குதம்பை— சீலைத் தக்கையையும்
ஒரு காது— மற்றொரு காதிலே
செங்நிறம் மேல்தோன்றிப்பூ— செங்காந்தள் பூவையும்
கூறை உடையும்— திருமேனிக்குத் தகுதி யாகச் சாத்தின பரியட்டத்தையும்
கோலம்— அழகியதாய்
பணை— பெரிதாயிருந்துள்ள
கச்சும் — (பரியட்டம் நழுவாமைக்குச் சாத்தின) கச்சையும்
குளிர்— குளிர்ந்திரா நின்ற
முத்தின்— முத்தாலே தொடுக்கப்பட்டதாய்
கோடு— பிறைபோலே வளைந்திருக்கிற
ஆலமும் — ஹாரத்தையு முடையனுய்க் கொண்டு
காலி பின்னே— கன்றுகளின் பின்னே
வருகின்ற— வாராநின்றவனுய்
கடல்— கடல் போன்ற
வண்ணன் — திருநிறத்தை யுடையனான வனுடைய

வேடத்தை— வேஷத்தை
வந்து காணீர்— வந்து பாருங்கள்;
நங்கை மீர்— ஒன்றிலும் குறைவில்லாத பெண்டிர்காள்!
ஞாலத்து— பூமண்டலத்திலே
புத்திரனை— பிள்ளையை
பெற்றார்— பெற்றவர்களுள்
நானே — (“நல்லபிள்ளை பெற்றவள்” என்று சொல்லத்தக்கவள்) நானே;
மற்று ஆரும் இல்லை— வேறொருவருமில்லை.

வ்யா. முதற்பாட்டு. சீலையித்யாதி. ஒருகாதிலே சீலைக்குதம்பை, ஒருகாதிலே திவந்தநிறத்தையுடைய மேல்தோன்றிப்பூ. இரண்டுகாதிலும் சீலைக்குதம்பையிட்டு விட, அதிலே ஒருகாதிலத்தைக் கழற்றிப்பிபாகட்டுச் செங்காந்தள்பூவை யிட்டுக்கொண்டுவந்தானுய்த்து. கோலப்பணைக் கச்சங்கூறையுடையும். திருமேனிக்குத் தகுதியாகச்சாத்தின பரிவட்டமும், அதுநழுவாதபடி அதின்மேலேசாத்தின தர்சநீயமாய்ப் பெரிதான கச்சும். குளிர்முத்தின் கோடாலமும். குளிர்ந்தமுத்தாலே சமைக்கப்பட்டுப் பிறைபோலே வளைந்திருக்கிற ஹாரமும். “ஆரம்” என்கிறவிது “ரமயொரமெஉ” என்கிற ந்யாயத்தாலே “ஆலம்” என்று கிடக்கிறது. அன்றிக்கே, “ஆரம்” என்று பாடந்தானுகவுமாம். காலிப் பின்னேவருகின்ற கடல்வண்ணனன் வேடத்தை வந்துகாணீர். “காலி” என்கிறவிது ஜாதிப் பேராகையாலே, இவ்விடத்தில் கன்றுகளைச் சொல்லுகிறது. கன்றுகளை வயிறுநிறையமேய்த்து அவற்றை முன்நடக்கவிட்டு தான்பின்னேவாரா நிற்க, கடல்போன்ற நிறத்தையுடையவனுடைய அலங்காரத்தை வந்துகாணிர்கோள். “சீலைக்குதம்பை” இத்யாதியாற் சொல்லுவொப்பணையையிறே “இங்கு வேஷம்” என்கிறது. காணீரென்கிறது — கண்படைத்ப்ரயோஜநம் பெறுமிப்படிவந்து காணுங்கோளென்கை. ஞாலத்தித்யாதி. பிள்ளைவாசியறியும் குணபூர்த்தியுடையவர்களே! லோகத்தில் புத்ரனைப்பெற்றவர்களில் “நல்லபிள்ளைபெற்றவள்” என்று சொல்லத்தக்கேன் நானே, மற்றொருவருமில்லை. “என்னதோன்பு நோற்றுள் கொலோ இவனைப்பெற்ற வயிறுடையாள்” என்று கொண்டாடப்பட்டார் என்னை யொழிய மற்றொருவருண்டோவென்கை. ... ... க.

அ. இரண்டாம்பாட்டு. “காலிப்பின்னே வருகின்ற கடல்வண்ணன் வேடத்தை வந்து காணீர்” என்று கன்றுமேய்த்து வருகிறபோதை அவனுடைய வடிவையும் அலங்காரத்தையும் தானநுபவித்துப் பிறர்க்குக் காட்டினளாயிறே கீழ்நின்றது. இது, அவனை எதிரே சென்று அணைத்துக்கொண்டு, தன்னுடைய ஸ்நேஹத்தாலே அவன் முதத்தைப்பார்த்துச் சொல்லுகிற பாசுரமாயிருக்கிறது. ... ... ங. *

மூ.—கன்னிநன்மாமதிள்சூழ்தரு மும்மைச்சீர்க்காவிரித் தென்னரங்கம்
மன்னியசீர் மதுசூதனு கேசவா பாவியேன்வாழ்வுகந்து
உன்னை யிளங்கன்றுமேய்க்கச் சிறுகாலேயூட்டி யொருப்படுத்தேன்
என்னின்மனம்வலியா ளொருபெண்ணில்லை என்குட்டமேமுத்தந்தா உ

பதவுரை.

கன்னி— அழிக்க வொண்ணுததாய்
நல்— மநோஹரமாய்
மா— பெரிதாயிருந்துள்ள
மதிள்— மதில்களாலே
சூழ் தரு— சூழப்பட்டு
மூ— நித்யவஸந்தமான

பொழில்— சோலைக்ளையு முடைத்தாய்,
காவிரி— காவேரீ நதியோடு கூடி
தென்— தென் திசைக்கு ப்ரதாநமான
அரங்கம்— திருவரங்கத்திலே
மன்னிய— பொருந்தி வர்த்திக்கிற
சீர்— கல்யாண குணயுக்தனுய்
மது சூதனு— மதுவை நிரஸித்தவனுய்
கேசவா— அழகிய மயிர்முடியை யுடைய
வனுன்வனே!
பாவியேன்— பாவியான நான்
வாழ்வு— நம்முடிக்கேற்ற கன்றுமேய்க்கை
முதலியவாழ்வை
உகந்து— விரும்பி
உன்னை— இவ்வலேச்சனுக்காளல்லாதவுன்னை
சிறு காலே— விடிவோறே
வம்டி— உண் பித்து
இள கன்று— இளங் கன்றுகளை
மேய்க்க— மேய்க்கைக்காக
ஒருப்படுத்தேன் — அவற்றின் பின்னே
போகவிட்டேன்;
என்னில்— (இங்ஙனே செய்து பொறுத்
திருந்த) என்னிலுங்காட்டில்
மனம் வலியாள்— நெஞ்சுர முடையளான
ஒரு பெண்— ஒரு பெண்
இல்லே— இவ்வுலகத்திலில்லே;
என் குட்டனே— என் பிள்ளாய்
முத்தம் தா— முத்தம் கொடு
என்று அணைத்து உகந்து சொல்லுகிறுள்.

வ்யா. கன்னியித்யாதி. அழிவில்லாததாய் அகிலஜநமநோஹரமாய் அநுகூலப்போ
ரும்படியான பெருமையை யுடைத்தாயிருந்துள்ள திருமதிள்களாலே சூழப்பட்டு, நித்ய
வஸந்தமான திருச்சோலைகளை யுடைத்தாய், அவற்றை வளர்ப்பதான காவிரியாகிற மஹாநதி
யோடுங்கூடித் தெற்குத்திக்குக்கு ப்ரதாநமாயிருந்துள்ள*திருவரங்கன் திருப்பதியிலே யாவ
ரும் வந்தடிவணங்கும்படி நித்யவாஸம்பண்ணுகிற ஸௌசீல்யகுணயுக்தனுய், ஆச்ரித
விரோதிகளை மதுவை நிரஸித்தாற்போலே நிரஸித்துப் பொகடுமவனுய், அவர்களுக்கு மது
பாஷ்பமாம்படி ப்ரசஸ்தமான திருக்குழலையுடையனு யிருக்கிறவனே. பாவியேன் வாழ்வுகந்து.
உன்னுடைய வருமை பெருமையும் ஸௌகுமார்யமுமறியாத பாபியானநான் ஜாத்யுசித தர்
மாநுஷ்டாநமாகிற வாழ்வையுகந்து. உன்னை. இவ்வலேச்சனுக்கெல்லாம் ஆளல்லாதவுன்னை.
இளங்கன்று மேய்க்க. அள்ளியுண்ணவறியாத உன்னைப்போலே, பறித்துக்கசக்கித் தீத்தவே
ண்டுப்படியான இளங்கன்றுகளை மேய்க்கும்படியாக. சிறுகாலேயூட்டி யொருப்படுத்தேன்.
அலைமேய்க்கப் போங்காலமான விடிவோறே "மீள வருமளவும் உனக்கு தாரகமாக வே
ணும்" என்று வூட்டி அவற்றின்பின்னே போகவிட்டேன். என்னில் மநம்வலியா ளொரு
பெண்ணில்லே. இப்படி உன்னைப்போகவிட்டுப் பொருத்திருந்த வென்னிற்காட்டில் நெஞ்
சுரமுடையாளொரு பெண் லோகத்திலில்லே. வேறுசிலராகில் நெஞ்சழிந்து விழுந்துவிடார்
களோ வென்கை. என்குட்டனே முத்தம்தா. என்னுடைய சிறுப்பிள்ளையானவனே முத்தம்
தா வென்று அணைத்து உகந்து சொல்லுகிறுள். முத்தம் - அதரம். ... ., உ.

மு.—காடுகளுடுபோய்க் கன்றுகள்மேய்த்து மறியோடிக்கார்க் கோடற்பூச்
சூடிவருகின்ற தாமோதரா கற்றுத்துளி காணுன்னுடம்பு
246 பேடைமயிற்சாயற் பின்னைமணுளா நீராட்டமைத்து வைத்தேன்
ஆடியமுதுசெய் யப்பனுமுண்டில னுன்னோடுனே யுண்பான். கூ.

பதவுரை.

காடுகளுடு போய்— காடுகளினுள்ளே போய்
கன்றுகள் மேய்த்து— கன்றுகளை மேய்த்து
மறி ஓடி— அலைகைகழியப் போகாதபடி
மறிக்கைக்காக முன்னே ஓடி.

* கார் கோடல் பூ- பெரிய காந்தள் பூக்களை
சூடி— திருமுடியில் சூட்டிக் கொண்டு
வருகின்ற— வருகிற
தாமோதரா— தாமோதரனே!
உன்— உன்னுடைய
உடம்பு— திருமேனியடங்கலும்
கன்று— கன்றுகளால் விளைப்பட்ட
தூளிகாண்— தூளிப்படிந்து கிடக்கிறது
காண்;
மயில் பேடை— பெண்மயில் போன்ற
சாயல்— சாயலையுடைய
பின்னை— நப்பின்னைப் பிராட்டிக்கு
மணாளா— வல்லபனானவனே!
நீராட்டு— நீராட்டுவதற்கு வேண்டுவன
அமைத்து வைத்தேன்— ஸங்கல்பமாக்கி
வைத்தேன்;
ஆடி— நீராடி
அமுது செய்— அமுது செய்யவேணும்;
உன்னோடே— உன்னோடு கூட
உண்பான்— உண்ணவேணுமென்று
அப்பனும்— உன் தம்பியானவனும்
உண்டிலன்— இதுவரை உண்ணவில்லை,
காமதம் செய்யாமல் சடக்கென வா
என்றபடி.

* கார்— கறுப்பும், பெருமையும்.

வ்யா. மூன்றும்பாட்டு. காடுகளுடபோய். கன்றுகளுக்குப் புல்லும்தண்ணீரு மூள்ள விடம் பார்க்கைக்காகவும், அவை மேய்க்கைக்காகவும், ஒன்றுபோலொன்றன்றிக்கே பலவகைப்பட்டிருந்துள்ள காடுகளுக் குள்ளேபோய். கன்றுகள்மேய்த்து மறியோடி. கன்றுகளை மேய்த்து, அவை கைகழியப்போகாமல் மறிக்கைக்காக முன்னேயோடி. கார்க்கோடல்பூச்சூடி வருகின்ற. அவை வயிறுநிறைய மேய்ந்து ஊரைநோக்கி மடங்கினவாறே ப்ரீதனைப், பெரிய கோடல் பூக்களைத் திருமுடியிலே சாத்திக்கொண்டு வாசாநிற்கிற. தாமோதரா. முன்பு தனக்கு நியாம்யனாயிருந்த பந்தத்தை யுணர்த்துகிறாள் - மேலும் தான் நிபமித்தபடி செய்கைக்காக. கற்றுத்தூளிகாணுன்னுடம்பு. கன்றுகளினுடைய திரளுக்கு நடுவே போகையாலே அந்த தூளி யேறிக்கிடக்கிறதுகாண் உன்னுடைய திருமேனியெங்கும். பேடை மயிற்சாயல் பின்னைமணாளா. மயில் பேடைபோலும் சாயலையுடைய நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபனானவனே. இத்தால் - ஜாத்யுசித தர்மாநுஷ்டானத்தால்வந்த தூளியாகையாலும், அதுதான் ரத்நத்திலேயேறின வார்ப்புப்போலே யிருக்கையாலும் எனக்கினிதா யிருந்ததாகிலும், உனக்கபிமதையான நப்பின்னை யோட்டைக்கலவிக்குறுப்பாகக் குளிக்கவேணுமென்னுமிடத்தை ஸூசிப்பிக்கிறாள். நீராட்டமைத்துவைத்தேன். நீராடினக்கு வேண்டுவன சமைத்துவைத்தேன். அதாவது - * எண்ணெய் புளிப்பழம் கொண்டுவருகையும், * காய்ச்சின நீரோடு நெல்லிக் கடாரத்தில் பூரித்துவைக்கையுமிறே. ஆடியமுதுசெய். இளைப்பாலே சடக்கென அமுதுசெய்யப்புகுராதே, நீராடிவிட்டு அமுது செய்யவேணும். அப்படியுமுண்டிலன் உன்னோடேனே யுண்பான். " உன்னோடனே யுண்ணவேணும் " என்று உங்கள் தம்பியனும் உண்டிலர். ஆனபின்பு, காலவிளம்பம்பண்ணுதே கடுக அமுது செய்யென்கை.....கூ.

மூ.—கடியார்பொழி லணிவேங்கடவா கரும்போரேறே நீயுகக்கும்
குடையுஞ்செருப்புங் குழவுந்தருவிக்கக் கொள்ளாதே போயம்மாலே
கடியவெங்கானிடைக் கன்றின்பின்போன சிறுக்குட்டச் செங்கமல
வடியும்வெதும்பி யுன்கண்கள்சிவந்தா யசைந்திட்டாய்நீ யெம்பிரான். மு.

247

பதவுரை.

கடி ஊர்— பரிமள ப்ரசுரமான
பொழில்— பொழில்களையுடைத்தாய்
அணி— அழகிய
வேங்கடவா— திருவேங்கடமலையில் உறை
யும்வனே;
கரு— கறுத்த நிறத்தை யுடைத்தாய்

போர்— யுத்தோத்முகமான
ஏறே — ரிஷபம்போல் செருக்கியிருக்கு மவனே!
மால்— கன்றுகளிடத்தில் வ்யாமோஹத்தை யுடையவனே!
நீ உகக்கும்— நீ உகக்குமவையான
குடையும்— குடையையும்
செருப்பும்— செருப்பையும்
குழலும்— வேய்ங்குழலையும்
தருவிக்க— தருவிக்கச் செய்தேயும்
கொள்ளாதே— (அவற்றைக்) கொள்ளாமல்
போனாய்— கன்று மேய்க்கப் போனவனே!
கடிய வெம்— மிகவும் வெவ்விதான
கானிடை— காட்டிலே
கன்றின் பின்— கன்றுகளின் பின்னே
போன— தொடர்ந்து போன
சிறு குட்டன் — சிறுப்பிள்ளையான வுன் னுடைய
செங்கமலம்— செந்தாமரைப்பூப் போன்ற
அடியும்— திருவடிகளும்
வெதும்பி— கொதித்து
உன்— உன்னுடைய
கண்கள்— கண்களும்
சிவந்து ஆய்— சிவந்த தாகி
அசைந்திட்டாய்— இளைத்தாய்;
நீ எம் பிரான்— நீ என் நாயனன்றே
என்று மனம் தளர்ந்து சொல்லுகிறாள்.

வ்யா. நான்காம்பாட்டு. கடியித்யாதி. பரிமளப்ரசுரமான பொழில்களை யுடைத்தாய் அழகியதாயிருந்துள்ள திருமலையிலே நித்யவாஸம் பண்ணுகிறவனே. கரும்போரேறே. கறுத்த நிறத்தை யுடைத்தாய், செருக்காலே எதிரேபோருது ஸ்வைரத்திலே திரியும் ரிஷபம்போலே, திருவாய்ப்பாடியை மூலையடியே நடத்தி, மேனிணிப்புத் தோற்றத் திரிகிறவனே. "பட்டிமேய்ந்தோர் காரேறு" என்னக்கடவதிறே. நீ யுகக்குமித்யாதி. நீ யுகக்குமவையான வர்ஷாதபவாரணமான குடையும், கண்டகாதி பரிஹாரகமான திருவடிநிலைகளும், கன்றுகளைய்மைத்து மேய்க்கைக்கும் அழைக்கைக்கு முறுப்பாக வூதுகைக்குடலான வேய்ங்குழலும் தருவிக்கச்செய்தே இவற்றைவாங்கிக்கொள்ளாதே, கன்றுகள் மேய்க்கையில் வ்யாமோஹத்தாலே போனவனே. கடியவெங்கானிடைக் கன்றின்பின்போன. மிகவும்வெம்மையையுடைத்தான காட்டிலே கன்றுகள்போனவிடமெங்கும் தொடர்ந்துபோன. சிறுக்குட்டச் செங்கமலவடியும் வெதும்பி. சிறுப்பிள்ளையான உன்னுடைய சிவந்தகமலம்போன்ற திருவடிகளும் கொதித்து. செங்கமலவடியென்கையாலே- திருவடிகளினுடைய மென்மை குளிர்த்தி முதலானவற்றைச் சொல்லுகிறது. இப்படியிருக்கிற திருவடிகள் குடையும் செருப்புமின்றிக்கே * கடியவெங்கானிலே திரிந்தால் வெதும்பச்சொல்லவேண்டாவிறே. உன் கண்கள் சிவந்தாய். கால்கொதித்தால் கண்கள்சிவக்கை நிச்சிதமிறே. அதுக்குமேலே, கன்றுகளுக்கு மேய்ச்சற்றலைபார்க்கை, அவற்றின் வயிற்றிலே நிறைவுகுறைவு பார்க்கை, "துஷ்டம்ர்கங்கள் வருகிறதுண்டோ" என்று சுற்றும்பலகாலும் பார்க்கை, கைகழியப்போனவை யுண்டோ வென்று மறிக்கைக்குப்பார்க்கைமுதலாக ஒரொன்றிலே வொன்றப்பார்க்கையாலும் திருக்கண்கள் சிவக்குமிறே. அசைந்திட்டாய்நீ எம்பிரான். இளைத்திட்டாய்நீ என்னுயனே. திருவடிகள்வெதும்பித் திருக்கண்கள் சிவந்தவளவேயோ, ஊருக்குள்ளே திரியும்போது "கரும்போரேறு" என்னும்படி புஷ்கலமான வடிவையுடையனுய்ச் செருக்கித்திரியக்கடவநீ போர இளைத்துவிட்டாயென்று வெறுத்துச் சொல்லுகிறாள். ... ... ச.

மூ.—பற்றார்நடுங்க முன்பாஞ்சசன்னியத்தை வாய்வைத்தபோரேறேயென்
சிற்றாயர்சிங்கமே சீதைமணாளா சிறுக்குட்டச் செங்கண்மாலே
சிற்றடையுஞ் சிறுப்பத்திரமும்விலை கட்டிலின்மேல் வைத்துப்போய்க்
கற்றாயரோடுநீ கன்றுகண்மேய்த்துக் கலந்துடன்வந்தாய் போலும். டு.

பதவுரை.

பற்றர் — சத்ருக்களான துர்யோதநாதிகள்
நடுங்க— நடுங்கும்படியாக
முன்— பாரதயுத்தத்திலே
பாஞ்ச சந்நியத்தை — ஸ்ரீபாஞ்சஜந்யத்தை
வாய் வைத்த—வாயில் வைத்தினை
போர் ஏறே— யுத்தோத்முகமான ரிஷபம்
போன்ற கண்ணனே!
என்— எனக்கு விதேயனுய்
சிறு ஆயர் சிங்கமே— இடையர்களுக்கு சிங்
கக்குட்டி போன்றவனே!
சீதை மணாளா— ஸீதாவல்லபனே!
சிறு குட்டன்— சிறுப்பிள்ளையாய் (இருக்
கச்செய்தேயும்,)
செம் கண் — செந்தாமரைப்பூப் போன்ற
கண்ணையுடையனுய்
மாலே— ஸர்வாதிகனானவனே!
சிறு ஆடையும் — உன் பருவத்துக்குத்
தகுதியான திருப்பரியட்டமும்
சிறு— உன் கைக்கடங்கின
பத்திரமும் இவை— வீணையாடு பத்திரமு
மாகிற இவற்றை
கட்டிலின் மேல்— கட்டில் மேலே
வைத்து போய்— வைத்து, மறந்துபோய்
கன்று— கன்றுகள் மேய்க்கிற
ஆயரோடு— இடைப் பிள்ளைகளோடு
நீ— நீ
கன்றுகள் மேய்த்து— கன்றுகளை மேய்த்து
உடன் கலந்து— அவர்களோடே சேர்ந்து
வந்தாய் போலும்— வந்தாயோதான்,
என்று உகக்கிறாள்.

வ்யா. ஐந்தாம்பாட்டு. பற்றரித்யாதி. (க) "ஸ ஏவ பூர்ணாஹிவாஜ்ஞவாஃ" என்கிற படியே உனக்கு ப்ராணபூதரான பாண்டவர்களை நலிகையாலே (உ) "விஷஜ்ஞாதஹோ கூவ்ய" என்னும்படி உனக்கு சத்ருக்களான துர்யோதனாதிகள் (ஈ) "ஸவை மஹாயாத-ராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத்" என்கிறபடியே இதினுடைய த்வனியைக் கேட்டு நடுங்கும்படியாக பாரத ஸமரத்திலே ஸ்ரீபாஞ்சஜந்யத்தைத் திருப்பவளத்திலேவைத் தாதி, யுத்தோத்முகமான ரிஷபம்போலே செருக்குத்தோற்ற நின்றவனே. என்சிற்றாயர் சிங்கமே. எனக்குபவ்யனுய் "தன்னோராயிரம் பிள்ளைகள்" என்கிற சிறுப்பிள்ளைகளோ டே ஸிம்ஹக்கன்றுபோலே மேனிப்புத்தோற்ற விளையாடித் திரிகிறவனே. சீதைமணாளா. ப்ரதிகூலநிரஸநமும் அநுகூல ரக்ஷணமும் கண்டால் (ச) "ஹதஶ்சாஸ்ய விஷவ்யதே" என்கிறபடியே, உகந்தணைக்கும் ஸ்ரீஜநகராஜன் திருமகளுக்கு வல்லபனானவனே. சிறுக குட்டச் செங்கண்மாலே. சிறுப்பிள்ளையா யிருக்கச்செய்தே புண்டரீகாக்ஷத்வத்தாலே "லோ வஸ்மாத்பரன்" என்று தோற்றும்படி யிருக்கிறவனே. சிற்றுடையும்யித்யாதி. உன் பரு வத்துக்குத் தகுதியான திருப்பரிவட்டமும் உன் திருக்கைக்கடங்கின வீணையாடுபத்திரமு மாகிற் விவற்றைக் கன்றுமேய்க்கப்போகிற த்வரையாலே கிடக்கைப்பாட்டிலே பொகட்டுப் போவாரைப்போலே, கண்வளர்ந்தருளின கட்டிலின்மேலேவைத்து மறந்துபோய், கற்ரு ரோடு நீ கன்றுகள்மேய்த்து. கன்றுகள் மேய்க்கிற இடைப்பிள்ளைகளோடே நீ கன்றுகளை மேய்த்து. கலந்துடன் வந்தாய்போலும். "அவர்களிலே ஒருவன்" என்னலாம்படி அவர் களுடனே சேர்ந்து வந்தாயோதானென்று உகக்கிறாள். ... ... ஒ.

(க) "மம ப்ராணஹரா பாண்டவாஃ" (உ) "த்வஷ்டாதந்தம் நிபோக்தவ்யம்" (ஈ) "ஸ்மோகாவேஷ்டர்த்தராஷ்ட்ராணம் ஹ்ருதயாநி வ்யதாரயத்" (ச) "ப்ரத்தாரம் பரிஷஸ்வஜே"

மூ.—அஞ்சுடரோழி யுன்கையகத்தேந்து மழகாநீபொய்கைபுக்கு
நஞ்சுமிழ்நாகத்தினேடு பிணங்கவுநானுயிர் வாழ்ந்திருந்தேதன்
என்செய்யவென்னை வயிறுமறுக்கினு யேதுமோரச்சமில்லை
கஞ்சன்மனத்துக் குகப்பனேவசெய்தாய் காயாம்பூவண்ணங் கொண்டாய். கூ.

பதவுரை.

அம் சுடர்— அழகிய தேஜஸ்ஸையுடைய
ஆழி— திருவாழியை
உன்— உன்னுடைய
கையகத்து— திருக்கையிலே
ஏந்தும்— ஏந்திக் கொண்டிருக்கிற
அழகா— அழகையுடையவனே!
நீ— நீ
பொய்கை— நச்சுப் பொய்கையிலே
புக்கு— அவகாஹித்து
நஞ்சு உமிழ்— விஷத்தை உமிழா நின்ற
நாகத்தினேடு— காளிய நாகத்தோடு
பிணங்கவும்— போர் செய்தபோதும்
நான்— தாயான நான்
உயிர் வாழ்ந்து இருந்தேன்— ப்ராணனே தரித்திருந்தேன்;
என்னை— என்னை
என் செய்ய— எதுக்காக
வயிறு மறுக்கினுய்— வயிறு குழம்பப்பண்ணினாய்?
ஏதும்— சற்றும்
ஓர் அச்சம்— ஒருபயமும்
இல்லை— உனக்கில்லை;
காயாம் பூ— காயாமலர் போன்ற
வண்ணம்— நிறத்தை
கொண்டாய்— உடையவனே!
கஞ்சன்— கம்ஸனுடைய
மனத்துக்கு— மநஸ்ஸுக்கு
உகப்பனவே— ப்ரியமான வற்றையே
செய்தாய்— செய்து போரா நின்றாய்.

வ்யா. ஆரும்பாட்டு. அஞ்சுடரித்யாதி. உன் திருமேனி நிறத்துக்கு பரபாகமான அழகிய தேஜஸ்ஸையுடைய திருவாழியை, வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்கவேண்டும் படியான உன் திருக்கையிலே தரித்துக்கொண்டிருக்கிற அழகையுடையவனே. நீ போய்கை புக்கு * கருதுமிடம் பொருது, கைநிற்கும் பரிகரமுண்டாயிருக்க, இயற்றி யில்லாதாரைப் போலே நீ உன்னுடைய மார்த்தவத்தைப் பாராமல் நச்சுப்பொய்கையிலே போய்ப்புக்கு. நஞ்சுமிழ் நாகத்தினேடு பிணங்கவும் நானுயிர்வாழ்ந்திருந்தேன். க்ரோதத்தாலே மேன்மேலென நஞ்சை யுமிழாநின்றுள்ள காளியனுகிற ஸர்ப்புத்தோடே, அது தன்னுடலாலே உன்னைக் கட்ட, அத்தையுதறிப்போகட்டு, அதனுச்சியிலேறி அதின்வாலைப் பிடித்துக்கொண்டு நின்று திளைத்து வாயாலே ரத்தம் கக்கும்படியாட; இப்படியாய்க்கொண்டு அந்யோந்யம் பிணங்கினபோது நான் ப்ராணனேடே யிருந்தேனிறே. என்செய்ய வென்னை வயிறு மறுக்கினுய். எதுக்காக என்னை யிப்படி வயிறுமறுக்கப் பண்ணினுய். ஏதுமோரச்சமில்லை. இப்படி ஸாஹஸ ப்ரவ்ருத்திசெய்தால் "உனக்குத்தான் ஒரு தீங்குவரும்" என்றுதல், "எனக்குவயிறெரியும்" என்றுதல், "லோகமிதுகண்டால் பொறாது" என்றுதல், உனக்கு ஏகதேசமும் ஒரு ப்யமில்லை. கஞ்சன்மனத்துக் குகப்பனவேசெய்தாய். "உனக்கெதேனு மொரு அபாயமெப்போதேவருவது" என்று இடம்பார்த்திருக்கும் கம்ஸனுடைய மநஸ்ஸுக்கு ப்ரியமானவற்றையே செய்தாய். காயாம்பூவண்ணங்கொண்டாய். காயாம்பூப்போலேயிருக்கிற திருநிறத்தை யுடையவனே, வேண்டினபடியாகிறது; இவ்வடிவுக்கு ஒரு வைகல்யம் வாராமல் பிழைக்கப்பெற்றேனே யென்கை. ... ... கூ.

மூ.—பன்றியுமாமையு மீனுமுமாகிய பாற்கடல்வண்ணு வுன்மேல்
கன்றினுருவாகி மேய்புலத்தேவந்த கள்ளவசுரர் தம்மைச்
சென்றுபிடித்துச் சிறுக்கைகளாலே விளங்காயெறிந்தாய் போலும்
என்றுமென் பிள்ளைக்குத்தீமைகள் செய்வார்களங்ஙன மாவர்களே. ஏ

பதவுரை.

பன்றியும்— வராஹாவதாரமும்
ஆமையும்— கூர்மாவதாரமும்
மீனமும் ஆகிய— மத்ஸ்யாவதாரமும் செய்து
தருளினவனுய்
பாற் கடல்—க்ஷீரஸமுத்ரம் போன்ற
வண்ணு— திருநிறத்தை யுடையவனே!
உன் மேல்— உன்னை நலிவதாக
கன்றின் உரு ஆகி— கன்றின் வடிவையு
டையனாய்க் கொண்டு
மேய்— கன்றுகள் மேய்கிற
புலத்து— நிலத்திலே
வந்த— வந்து கலந்து நின்ற
கள்ளம்— க்ருத்ரிமச் செய்கையையுடைய
அசுரர் தம்மை— அஸுரர்களை
சென்று — அவர்கள் சேஷ்டைகளாலே
'அஸுரர்' என்றறிந்து சென்று
சிறு கைகளாலே— சிறிய் கைகளாலே
பிடித்து — கன்றுய் நின்ற அஸுரனைப்
பிடித்து
விள— ஆஸுரமான விளாவினுடைய
காய்— காயுதிரும்படி
எறிந்தாய் போலும்— எறிந்தாயோதான்!
என் பிள்ளைக்கு— என் பிள்ளை திறத்தில்
தீமைகள்— தீம்புகளை
செய்வார்கள்— செய்யக் கோலினவர்கள்
என்றும்— எப்போதும்
அங்ஙனம் ஆவர்கள்— அப்படியே மாண்டு
போகக்கடவர்கள்
என்று கைகரித்துச் சிறிச் சொல்லுகிறுள்.

வ்யா. ஏழாம்பாட்டு. பன்றியுமாமையுமீனுமாகிய. பூம்யுத்தரணம்பண்ணின வராஹ மூம், மந்தராதாரமான கூர்மமும், ப்ரளயாப்தஸகமான மத்ஸ்யமுமான. இத்தால்-அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தாநத்தையழியமாறி நிர்யக்ஜாதீயமாக்கிக்கொண்டு ஜகத்ரக்ஷணம் பண்ணியருளின நீர்மையைச் சொல்லுகிறது. வராஹாவதாரத்தை முற்படச்சொல்லிற்று- ப்ரளயார்ணவமக்நையான பூமியையெடுத்த வளவன்றிக்கே, ஸம்ஸாரார்ணவமக்நரானசேதநரைஉத்தரிப்பிக்கைக்காக தத்ததநுரூபோபாயங்களை உபதேசித்த வேற்றத்தைப்பற்ற. "ஏனத்துருவாயிடந்தபிரான்-ஞானப்பிரான்" என்றுரிறே யாழ்வார். திருமங்கையாழ்வாரும் "ஏனத்திலுருவாகி நிலமங்கை யெழில்கொண்டான்" என்றவனந்தரம், "ஞாநத்திலெளியுருவை" என்றுரிறே. இவர்தாமும் "எயிற்றிடை மண்கொண்டவெந்தை யிராப்பகலோதவித்து" என்றுமேலே அருளிச்செய்கிறுரிறே. பாற்கடல்வண்ணு. பாற்கடல்போலே வெளுத்திருந்துள்ள திருமேனி நிறத்தையுடையவனே. இத்தால்- "பாவனீர்மை" என்கிறபடியே ஸத்த்வப்ரசுரரான க்ருதயுகபுருஷர்களுடைய ருச்யநுகுணமான திருமேனி நிறத்தையுடையுக்கொண்டு, அவர்களுக்கு ஆச்ரயணீயனுய் ரக்ஷித்தபடி சொல்லுகிறது. "பார்க்கடல்வண்ணு" என்று பாடமாகில்- பார்சூழ்ந்த கடல்போலேயிருக்கிற திருமேனிநிறத்தையுடையவனே யென்கை. அப்போது, இப்படியிருக்கிற திருவடிவையிறே ஈ அழியமாறி, திர்யக்ரூபமாக்கிக்கொண்டு ஜகத்ரக்ஷணம் பண்ணிற்றென்றபடி.

* உன்மேலித்யாதி. இப்படி ஜகத்துக்கு ஸ்ர்வப்ரகாரகனான உன்மேலேவிவதாக நீமேய்க்கிற கன்றுகளுக்குள்ளே நத்துல்யமான வடிவைக்கொண்டு அவைமேய்கிற நிலத்திலேவந்து கலந்துநின்ற க்ர்த்ரிமரான அஸுரர்தங்களை, சென்றுபிடித்துச் சிறுக்கைகளாலே. அவர்கள்செய்திட்ட விசேஷங்களாலே அறிந்துசென்று சிறுக்கைகளாலே பிடித்து. விளங்காயெறிந்தாய்போலும். அஸுரமாய் உன்னேவிவதாக நின்றவினாவினுடைய காயுதிர்க்க, எறிவாசைப்போலே, தூக்கியெடுத்தெறிந்து இரண்டுதலையையும் மூடித்துப்போகட்டாயோதான் என்றவாறே "எறிந்தேன்காண்" என்று சொல்லிநிற்க; என்றுமித்யாதி. என்னுடைய பிள்ளைக்குத் தீமைசெய்வதாகக் கோலினவர்கள் என்றும் அப்படியாய்ப் போவர்களென்று நெஞ்செரிச்சலாலே சொல்லுகிறாள். அங்ஙனமாவர்களென்றது- அப்படியேயாவர்களென்றபடியாய், அவ்விளஞ்சும் கன்றும்போலே நசித்துப்போவர்களென்றபடி. ... ... எ.

மூ.—கேட்டறியாதன கேட்கின்றேன் கேசவா கோவலரிந்திரற்குக்
காட்டிய சோறுங்கறியுந்தயிருங் கலந்துடனுண்டாய் போலும்
251 ஊட்டமுதலிலே னுன்றன்னைக்கொண் டொருபோது மெனக்கரிது
வாட்டமிலாப்புகழ் வாசுதேவாவுன்னை யஞ்சுவனின்றுதொட்டும். ஆ.

பதவுரை.

கேசவா— கேசவனே!
கேட்டு அறியாதன— இதற்குமுன் உன்
திறத்தில் கேட்டறியாத வற்றையெல்லாம்
கேட்கின்றேன்— இப்போது கேளாநின்
றேன்;
கோவலர்— இடையர்கள்
இந்திரற்கு— இந்த்ரனுக்காக
காட்டிய— அனுப்பின
சோறும்— சோற்றையும்
கறியும்— அதற்குத்தக்க கறியையும்
தயிரும்— தயிரையும்
கலந்து— சேரக்கலந்து
உடன்— ஒன்றும் சேஷியாதபடி
உண்டாய் போலும்— உண்டாயோதான்;
(இப்படி யுண்ணவல்ல உனக்கு;)
ஊட்ட— நாள்தோறும் ஊட்ட
முதல் இலேன்— கைம்முதலுடையேனல்
லேன்;
உன்றன்னை கொண்டு— உன்னை லைத்துக்
கொண்டு
ஒரு போதும்— ஒரு வேளையும்
எனக்கு— எனக்கு
அரிது— ஆற்றவரிது;
வாட்டம் இலா— எப்போதும் வாடாத
புகழ்— புகழையுடைய
வாசுதேவா— வஸுதேவர் திருமகனே!
உன்னை— உன்னைக் குறித்து
இன்று தொட்டும்— * கேட்டறியாதன
கேட்ட இன்று முதலாக
அஞ்சுவன்— பயப்படா நின்றேன்.

வ்யா. எட்டாம்பாட்டு. கேட்டறியாதனவித்யாதி. ப்ரஹ்ம ருத்ர்களுக்குக் கர்ண பூதனுகையாலே "கேசவன்" என்னும் திருநாமத்தையுடையவனே, இதுக்குமுன்பு உன் விஷயத்தில் கேட்டறியாதன வெல்லாம் இப்போது கேளாநின்றேன் என்றவாறே, "அதே குதான்" என்று அவன்கேட்க; கோவலரித்யாதி. கோதரர்கையாலே வர்ஷார்த்தமாக வத்ஸரந்தோறும் இந்த்ரனுக்குச் சோறிட்டுப் போருமிடையரான்வர்கள், அந்த இந்த்ரனுக் கிடுவதாக வரக்காட்டின * தன்னுசகடத்தாற்புக்க பெருஞ்சோற்றையும் அதுக்குத்தக்க கறியையும் தயிரையும் அவனுக்கிடாதபடி சில வுக்திவிசேஷங்களைச் சொல்லி நீ விலக்கி, "நமக்

கெல்லாப்படியாலும் ச்சுகமாயிருக்கிற விம்மலிக்கிடுங்கோள்" என்று அதின் முன்னே யிடுவித்து, (*) "மொவ்வய-ுடி நாஷி" என்று * ஒருபூதவடிவைக்கொண்டு வந்திருந்து எல்லாவீற்றையும் சேர்க்கலந்து ஒன்றேழியாமல் நீயே புஜித்துவிட்டாயென்று, "பாசந கல்லன பண்டிகளால் புகப்பெய்த வதனையெல்லாம் = போயிருந்தங்கொரு பூதவடிவுகொண் டென் மகனின்று நங்காய் = மாயனதனையெல்லாம்முற்றவாரி வளர்த்துண்டிருந்தான்" என்று பலரும் வந்து சொல்லா நின்றார்கள், "அப்படி செய்தாயோதான்" என்ன; நிருத்தரஞ்ய் நின்றவாறே உட்டமுதலிலே ஜுன்றண்ணைக்கண்டொருபோது மெனக்கரிது. என்கிறாள். அதானது - இப்படியுண்ண வல்லவனக்கு நாள்தோறு மிப்படியூட்டத்தக்க முதலுடையே வல்லேன்; இப்படி யிருக்கிற வுண்ணைக்கொண்டு ஒருபோது மெனக்காற்ற வரிதென்கை. வாட்டமிலாப்புகழ் வாசுதேவா. ஒருகாலும் வாட்டமின்றிக்கே நித்யமாய்ச் செல்லும்படி யான புகழையுடைய வஸுதேவர் புத்ரனே, இப்படிக்கொத்த வ்யாபாரங்களால் உன்புகழ் க்கு ஒருவாட்டம் வாராதாழியவேணுமென்று கருத்து. உன்னேயஞ்சுவனின்று தோட்டும். இப்படிப்பட்ட அதிமாநுஷத்வத்தைச்செய்த வுன்னைக்குறித்து, இன்னமேது செய்யத்தே டுகிறாய், உன்புகழுக்கு வாட்டம் வரப்புகுகிறதோவென்று, கேட்டறியாதன கேட்ட வின்று துடக்கமாக நானஞ்சாநின்றே னென்கிறாள். ... ...அ.

மூ.—திண்ணூர்வெண் சங்குடையாய் திருநாட்டிருவோண மின்றேழுநாண்முன்
பண்ணேர்மொழியாரைக் கூவிமுளையட்டிப் பல்லாண்டு கூறுவித்தேன்
கண்ணுலஞ்செய்யக் கறியுங்கலத்ததரிசியு மாக்கினைவத்தேன்
கண்ணு நீ நாளைத்தொட்டுக் கன்றின்பின் போகேல் கோலஞ்செய்திங்கேயிரு.கூ.

பதவுரை:

திண் ஊர்— ப்ரதிகூல நிர்ஸநத்தில் நிலை பேராமல் நின்று முழங்கும் திண்மையை யுடைத்தாய்
வெண்— வெண்மையிய யுடைத்தான
சங்கு— ஸ்ரீபாஞ்சஜந்யத்தை
உடையாய்— திருக்கையி லுடையவனே!
திருநாள்— நீ பிறந்த நிருநக்ஷத்ரமான
திருவோணம்— திருவோண நக்ஷத்ரம்
இன்றெழுநாள்— இன்றைக்கேழாநாள் ஆகையாலே,
முன்— அதுக்குமுன்னே
பண்— பண்ணேடேகூடின்
ஏர்— அழகிற
மொழியாரை— மொழியையுடையவர்களை
கூவி— அழைத்து
முளையட்டி— திருமூலை சாத்தி
பல்லாண்டு கூறுவித்தேன்—மங்களாசாஸனம் பண்ணுவித்தேன்
கண்ணுலம்— திருக்கல்யாணம்
செய்ய— திருவோணத்திருநக்ஷத்ரத்துக் குச் செய்வதாக
கறியும்— கறியமுதுகளும்
அரிசியும்— அமுதுபடிகளும்
கலத்ததாக்கி வைத்தேன் — பாத்ரஸ்தமாக்கி வைத்தேன்
கண்ணு— என்க்கு கண்ணுயிருந்தவேனே
நீ— கன்றுகள்மேய்க்கப்போம், நீ
நாளைத்தொட்டு— நாளைமுதலாக
கன்றின்பின்— கன்றுகளின் பின்னே
போகேல்— போகாதேகொள்
கோலம் செய்து— ஆபரணதிகளால் அந்த வொப்பனையை யுடையனாய்க்கொண்டு
இங்கே இரு — அகத்தைவிட்டுப் போகாமல் இங்கேயிரு.

(*) "கோவர்த்தநோஸ்மி"

வ்யா. ஒன்பதாம்பாட்டு. திண்ணார் வெண்சங்குடையாய்! "படைபோர் புக்கு முழங்கு மப்பாஞ்சசன்னியம்" என்கிறபடியே ப்ரதிகூலநிரஸநத்தில், நிலைபேராமல் நின்று முழங்கும் திண்மையை யுடைத்தாய் "பால்வண்ணத்தின் பாஞ்சசன்னியம்" என்கிற படியே திருமேனி நிறத்துக்கு ப்ரபாகமாய்க்கொண்டு அதுகூலர்க்கதுபர்வ்யமான வெண்மை யைப்புடைத்தா யிருக்கிற ஸ்ரீபாஞ்சஜந்யத்தை யுடையவனே. திருநாள் திருவோணமின்றேழு நாள். நீ பிறந்த திருநக்ஷத்ர்மான திருவோணம் இற்றைக்கேழ்நாள். முன்னித்யாதி. யுகை யாலே அதுக்குடலாக முன்னே பண்ணேடுகூடின அழகிய மொழியையுடையவர்களை யழைத்துத் திருமுன்னாசாத்தி மங்களாசாஸநம் பண்ணுவித்தேன். கண்ணுலமித்யாதி. திரு வோணத் திருநக்ஷத்ரத்துக்குத் திருக்கல்யாணம் செய்வதாக கறியமுதுகளும் அமுதுபடி களும் சேர்த்து பாதாரஸ்த மாக்கிலைத்தேன். கண்ணு. என்க்குக் கண்ணு யுள்ளவனே. நீ நாகணத்தைக் கட்டிக் கன்றின்பின்போகேல். "ஜாதஸ்திதிமான் தர்மம்" என்று கன்றுகள் மேய்க்கப்போம் நீ, நாளை முதலாகக் கன்றுகளின்பின்னே போகாதேகொள். கோலஞ்செய்திங்கே யிரு. ஆபர்ணநிகளால் வந்த லொப்பங்களை யுடையவனுய்க்கொண்டு அகத்தைவிட்டுப் போ காமல் இங்கேயிருவென்று அதுவர்த்தந பூர்வகமாக நியமித்துச் சொல்லுகிறாள். ... ...கூ.

அ. நிகமத்தில், இத்திருமொழி கற்றூர்க்கு பலம்சொல்லித் தலைக்கட்டுகிறார்.

மூ.—புற்றரவல்குல் லசோதைகல்லாய்ச்சி தன்புத்திரன் கோவிந்தனைக்
கற்றின் மேய்த்துவரக் கண்டுகந்தவள் கற்பித்தமாற்ற மெல்லாம்
செற்றமிலாதவர்வாழ்தரு தென்புதுவை விட்டுசித்தன்சொல்
கற்றிசைபாடவல்லார் கடல்வண்ணன்கழலிணை காண்பர்களே. ய.

பதவுரை.

புற்று— புற்றிலேவள்ருகிற
அரவு— பாம்பின் படத்தை யொத்த
அல்குல்— நிதம்பத்தை யுண்டையளாய்
அசோதை— யசோதை யென்னும் பெய
ரை யுண்டையளாய்
கல்—பிள்ளை நிறத்தில் பேச்சன்பையுடையள்ளா
யிருக்கிற
ஆய்ச்சி— ஆய்ச்சியானவள்
தன்— தன்னுடைய
புத்திரன்— பிள்ளையாய்
கோவிந்தன்— பசுக்களை ரக்ஷிக்கையால்
வந்த கோவிந்த வென்னும் திருநாமத்
தையுண்டையவனை
கன்று— கன்றுகளினுடைய
இனம்— நிரளை
மேய்த்து— வயிறுநிறைய மேய்த்து
வர— திரும்பிவர
கண்டு— கண்ணாரக்கண்டு
உகந்து— மனமகிழ்ந்து
அவள்— அவள்
கற்பித்த— அவனைக்குறித்து இன்னபடி
யின்னபடி செய்யென்று கற்பித்த
மாற்றமெல்லாம்—சொலவுகளெல்லாவற்றையும்
செற்றம் இலாதவர்— தாம்செய்யும் செய்கை
களில் அஸூயை யில்லாதவர்கள்
வாழ்தரு— வர்த்திக்கிற
தென்— அழகிய
புதுவை— ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு நிர்வா
ஹகரான
விட்டுசித்தன்— பெரியாழ்வா ருருளிச்செய்த
சொல் இவை— சொல்லான விவற்றை
கற்று— ஓராசார்யன் பக்கலிலே அப்யஸித்து
பாட வல்லார்— (அதிலுண்டான இனிமை
யாலே வாய்படைத்த ப்ரயோஜநம்பெறப்)
பாடவல்லவர்கள்

கடல்— கடல்போன்ற
வண்ணன்— திருநிறத்தையுடையனான் கிருஷ்ணனுடைய
இணை— ஒன்றுக்கொன்றொப்பான
கழல்— திருவடிகளை
காண்பர்கள்—கண்டநுபவிக்கப் பெறுவர்கள்.

வ்யா. புற்றரவித்யாதி. தன்நிலத்திலே மிடியற வளருகையால்வந்த ஒளியையும் கொழுப்பையுமுடைத்தான அரவினுடைய பணம்போலேயிருக்கிற நிதம்பப்ரதேசத்தையுடையளாய், "யசோதை" என்கிற திருநாமத்தையுடையளாய், புத்ரவிஷயத்தில் ஸ்நேஹத்தையுமுடையளாயிருக்கிற ஆய்ச்சியானவள். தன்புத்திரன் கோவிந்தனை. தன்புத்ரனை கோவிந்தனை. இவளுக்குப் புத்ரனுகையாலேயிறே, கோவிந்தனுசத்தான் பெற்றது. கிருஷ்ணனை யென்றபடி. கற்றினம் மேய்த்துவரக்கண்டேகோது. கன்றுகளினுடைய ஸமூஹத்தை ஒன்றொழியாமல் வயிறுநிறையமேய்த்து, அத்தாலே ஸந்துஷ்டனுய்க் கொண்டுவரக்கண்டு ப்ரீதையாய்.. அவள் கற்பித்த மாற்றமெல்லாம். அவள் அவனைக்குறித்து "இன்னபடி இன்னபடி செய்" என்று கற்பித்த சொலவுகளெல்லாவற்றையும். செற்றமித்யாதி. மங்களாசாஸநபரராய் அதுக்கு அநுகூலரைக் கூட்டியும் ப்ரதிகூலரை நீக்கியும் தாம்செய்யும் வ்யாபாரங்களில் அஸ்வயையில்லாதவர்கள் வர்த்திக்கிற தர்சநீயமான ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகரான பெரியாழ்வா ரருளிச்செய்த சொல்லான இவற்றை. கற்று-பாடவல்லார். ஓராசார்யன் பக்கலிலேயப்யஸித்து, இதிலுண்டான ரஸ்யதையாலே ப்ரீதிப்ரேரிதராய்க்கொண்டு பாடவல்லார். கடல்வண்ணன் கழலிணைகாண்பர்களே. "காலிப்பின்னே வருகின்ற கடல்வண்ணன்" என்றுசொன்ன கடல்போன்ற நிறத்தையுடையனான கிருஷ்ணனுடைய பரஸ்பரஸத்ருசமான திருவடிகளைத் தாம்கண்டாற்போலே கண்டநுபவிக்கப் பெறுவரென்கை. ... இ.

பெரியஜீயர் திருவடிகளேசரணம்.

அடிவரவு.—சீலை கன்னி காடு கடி பற்று ரஞ்சுடர் பன்றி
கேட்டுத் திண்ணர் புற்றுத் தழை.

ஆ - திருமொழி, உஉ - க்கு, பாட்டு - உசக.

மூன்றும்பத்து- நான்காந்திருமொழி - தழைகளும் - ப்ரவேசம்.

அ.—கீழே - "நானைத்தொட்டுக் கன்றின்பின் போகேல் கோலம் செய்திங்கேயிரு" என்கையாலே, ஏழுநாளெழுந் தருளியிருந்து திருவோணத் திருநக்ஷத்ரமுங் கொண்டாடி விட்டபின்பு; பசுக்களையும் கன்றுகளையும் மேய்க்கப்போய் அவைமேய்ந்த ப்ரதியாலே தன்னை நாநாப்ரகாரமாக அலங்கரித்துக் குழலூதுவது இசைபாடுவதாய்க் கொண்டு தானும் * தன்னேராயிரம் திருத்தோழன்மாருமாகப் பெரியமேனிப்போடே எழுந்தருளி வருகிற ப்ரகாரத்தைக் கண்டு, திருவாய்ப்பாடியிலே பெண்கள் பலகணிவழியே நுழைந்து பார்ப்பாரும் நிற்பாரும், அவன் வரும்போதாக எதிரே நின்று உங்கள்வீட்டை யிழவாதே கொள்ளுங்கோள் என்பாரும், வருகிற வவன்வடிவை என்பெண் அருகேநின்று கண்டாளித்தனை,

அதுகண்டு இவ்வூரொன்று புணராநின்றதென்பாரும், அவன்வருகிற படியைத் தெருவிலே கண்டு, அவன்பக்கல் ஸ்நேஹத்தாலே தாங்கள் விக்ரதைகளாய், காணுதாரையு மழைத்துக் காட்டுவாரும், அவன் சேஷ்டிதத்திலே மீடுபட்டு தாங்கள் அந்யார்ஹரானமை சொல்லு வாரும், அவன் இத்தெருவே வருமாகில் "எங்கள் பந்தைப் பறித்துக்கொண்டு போனவன்" என்றவனோத்து அவனுடைய பவள்வாய் முறுவலைக் காண்போம் என்பாரும், அவன்வர வைக்கண்டு தாம்தாம் ஈடுபட்டமையைத் தாய்மார்க்குச் சொல்லும்படி விக்ரதைகளாவாரு மாய, இப்படி அவன்பக்கல் காமுற்றப்ரகாரத்தை அவர்களெல்லாருடையவும் பாவவ்ர்த்தியை யுடையராய்க் கொண்டு தாம அவனைக்குறித்துப்பேசி ப்ரீதராகிறார் - இத்திருமொழியில்.

மூ.—தழைகளுந் தொங்கலுந் ததும்பியெங்குந் தண்ணுமையெக்கமத்தளிதாழ்பீலிக்
குழல்களுங் கீதமுமாகியெங்குங் கோவிந்தன் வருகின்றகூட்டங்கண்டு
2 54 மழைகொலோ வருகின்றதென்று சொல்லி மங்கைமார் சாலகவாசல்பற்றி
நுழைவனர் நிற்பனராகியெங்கு முள்ளம்விட்டேமறந்தொழிந்தனரே. க.

பதவுரை.

தழைகளும் தொங்கலும்—தழையென்றும், தொங்கலென்றும்பேர் பெற்ற பீலிக் குடைகள்

எங்கும் ததும்பி— எங்கும் நிறைந்து

தண்ணுமை— மத்தங்களும்

எக்கம்— ஒருதந்த்ரியையுடைய

மத்தளி— மத்தளியென்னும் வாத்யங்களும்

தாழ் பீலி— பீலிதூக்கின திருச்சிலற்றங்களும்

குழல்களுட்— இலைக்குழல், வேய்ங்குழல் முதலான முரளிகளும்

கீதமும்— ஜாதிக்குத்தக்க பாட்டுக்களும்

எங்கும் ஆகி— எங்கு மிவையேயாய்க் கொண்டு

கோவிந்தன்— கண்ணபிரான்

வருகின்ற— * தன்னோராயிரம் பிள்ளைகளும் தானுமாக வருகிற

கூட்டம்— கூட்டத்தை

கண்டு— பார்த்து

மழை கொல் ஓ— "மேகமுமூஹ மோதான் வருகின்றது— தறைமேலே நடந்து வருகிறது"

என்று— என்று

மங்கைமார்— யுவதிகளான பெண்கள்

சொல்லி— களித்துச் சொல்லி

சாலகம் வாசல் பற்றி } ஜாலகரந்த்ரங்களைச் சென்றுகிட்டி

நுழைவனர்—(வ்யாமோஹத்தாலே சென்று மேல்விழுவதாக) நுழைவாரும்

நிற்பனர் ஆகி— (குருஜநபீதி முதலியவற்றால்) நிற்பாரும்போல

எங்கும்— அவன்போன வழியெங்கும்

உள்ளம் விட்டு— நெஞ்சைப் பரக்கவிட்டு

ஊண்— உணவை

மறந் தொழிந்தனர்— மறந்து விட்டார்கள்.

வ்யா. முதற்பாட்டு. தழையித்யாதி. தழையென்றும், தொங்கலென்றும்- பீலிக் குடைவிசேஷங்கள்: "தழைதொங்கல் சாபாலம் பிச்சம் குளிரி பீலிக்குஞ்சமாகும்" என்று தழையென்றும், தொங்கலென்றும், சாபாலமென்றும், பிச்சமென்றும், குளிரியென்றும், பீலிக்குடைக்குப் பேராகச்சொன்னனிறே திவாகரன்.. எல்லாம் பீலிக்குடைக்குப்பேரானாலும் அதில் ஆகாரபேதமுண்டாகையாலே, தழையென்றும் தொங்கலென்றும் பிரித்துச்சொல்லுகிறது. "தழைகளும்" என்றுபலவாகச்சொல்லுகையாலே, "தொங்கலும்" என்கிறவிடத்திலும் பஹுவசநம்விவக்ஷிதம். ததும்பியெங்கும். எங்கும்நிறைந்து. தண்ணுமை. அதாவது-

ஒரும்மங்களவாத்யவிசேஷம். எக்கமாவது- ஏகதந்த்ரியாய், மத்தளியென்று பிரித்துச்சொல்லவுமாம். அன்றிக்கே, எக்கமத்தளியென்று - ஒரு பறைவிசேஷமாகவுமாம். தாழ்பீலி. பீலிதூக்கின சிற்றமென்னுதல்; பீலிதாழ்ந்த வாத்யமென்னுதல். குழல்களும். இடைக்குழல், வேய்ங்குழல்முதலான குழல்களும் கீதமும். ஜாத்யுசிதமான பாட்டுக்களும். ஆகியெங்கும். எங்கு மிவையேயாய்க்கொண்டு. கோவிந்தன்வருகின்ற கூட்டங்கண்டு. கோசகூசணத்துக்கு முடி சூடினவன் * தன்னோராயிரம் பிள்ளைகளும் தானுமாய்வருகிற திரளைக்கண்டு. மழைகோலோ வருகின்ற தென்றுசொல்லி மங்கைமார். மேகஸ்ரீவரமோதான் தன்றேரிலே நடந்துவருகிறதென்று யுவதிகளானஸ்த்ரீகள் கொண்டாட்டத்துடனே சொல்லி. சாலகவாசல்பற்றி. பலகணித்வாரங்களைக் கிட்டி. நுழைவனர்நிற்பனராகி. வ்யாமோஹத்தாலேசென்று மேல்விழுவதாக நுழைவாரும், ஜாலகப்ரதிபந்தத்தாலும் பந்துவர்க்கபீதியாலும் ஸ்த்ரீத்வாபிமானத்தாலும் நிற்பாருமாகி. எங்குமுள்ளம்விட்டு. அவன் போனவழியெங்கும் நெஞ்சைப்பரக்கவிட்டு. ஊண்மறந்தொழிந்தனர். உண்ணைமறந்துவிட்டார்கள். உனைவந்தணைக்கும்போது நெஞ்சுவேணுமிறே; நெஞ்சு அவன்பின்னே போய்விட்டதே; நெஞ்சில்லாதார்க்கு நினைக்கப்போமோ. ஆகையாலே, "மறந்தனர்" என்னுமித, மறந்துவிட்டார்களென்கிறது. ... ... கு.

மூ.—வல்லிநுண்ணித ழன்னவாடைகொண்டு வசையறத் திருவரைவிரித்துடுத்துப்
புல்லிநுண்பற்றுகு வுடைவாள்சாத்திப் பணைக்கச்சுந்திப் பல்தழைநடுவே
முல்லைநன்னறுமலர் வேங்கைமலரணிந்து பல்லாயர்குழாநடுவே
எல்லியம்போதாகப் பிள்ளைவரு மெதிர்நின்றங்கினவகாயிழவேன்மினே உ.

பதவுரை.

வல்லி— கல்பகக் கொடியின்
நுண்— நுண்ணியதான
இதழ் அன்ன—இதழ் போல் மிருதுவாய் நிறத்திருக்கிற
ஆடை கொண்டு — பரியட்டத்தைக் கொண்டு
வசை அற— பழுதற்றிருக்கும்படி [நன்றாக]
திரு அரை— திருவரையிலே
விரித்து உடுத்து— விரித்துச் சாத்திக்கொண்டும்

(அதுக்குமேலே,)

பணைக்கச்சு— பெரிய கச்சை
உந்தி— இளப்பி
பல்லி— பல்லியானது
நுண் பற்றுக— சுவர்களிலே இடைவெளியறப் பற்றிக்கிடக்குமாப்போலே
உடைவாள்— திருக்குற்றுடைவாளை
சாத்தி— சாத்திக்கொண்டும்
பல தழை நடுவே— பல பீலிக்குடைகளின் நடுவே

நல்— அழகியதாய்
நறு— பரிமளம் விசாகின்றுள்ள
முல்லை மலர்— முல்லைப் பூவும்
வேங்கை மலர்— வேங்கைப்பூவுமாகிற இவற்றை
அணிந்து—தொடுத்துச் சாத்திக்கொண்டும்
பல்— பலரான
ஆயர்— இடையருடைய
குழா நடுவே— திரள் நடுவில்
எல்லியம்போது ஆக— அந்தியம் போதாகா நின்றவளவில்
பிள்ளை—*நந்தகோபன்குமரனை கண்ணன்
வரும்— வருவன்;
அங்கு— அவ்வழியிலே
எதிர் நின்று— எதிரே நின்று
இனம் வளை—(உங்கள்கையில் கிடக்கிற) திரளான வளைகளை
இழவேல்மின் — இழவாதே கொள்ளுங்கோள்.

என்று தோழிமார்கள் சொல்லிக்கொள்ளும் பாசுரமாய்ச் செல்லுகிறது.

வ்யா. இரண்டாம்பாட்டு. வல்லியித்யாதி. கல்பகவல்லியி னுடைய நுண்ணிதாகிய இதழ்போலே மிர்துவாய் நிறத்திருக்கிற பரியட்டத்தைக்கொண்டு. வசையற்திருவரை விரித்துடுத்து. நன்முகத்திருவரையிலே விரித்துச்சாத்தி. வசையறவென்றது- பழுதறவென் றபடி. பரிவட்டம் நன்முறையும் உடுக்கவல்லதொரு ஸாமர்த்தியமுண்டிறே. அதாவது- பரி வட்டம்சாத்தினால் (க) "கூடுகடி" என்கிறபடியே திருவரை பூத்தாற்போலேயிருக்கை. பல்லியித்யாதி. பணைக்கச்சுந்தி-பல்லிநுண்பற்முகவுடைவாள்சா த்தி. திருவரையிற்சாத்தின பரிவட்டத்துக்குமேலே முசிவறவிரித்து அழுந்தச்சாத்தின பெரியகச்சைக்கிளப்பி- சுவர்களிலே நீரந்த்ரமர்கப்பல்லிபற்றிக்கிடந்தாற்போலே, வைத்துக் கட்டினதாயிராதே, "ஸஹஜம்" என்னலாம்படி திருக்குற்றுடைவாளைச்சாத்தி. பலதழை நடுவே. பலபீலிக்குடைகளின்நடுவே. முல்லையித்யாதி. ஜாத்யுசிதமாக, செவ்விருன்முமல் பரிமளிதமாய் விகஸிதமான முல்லைப்பூவும் வேங்கைப்பூவுமாகிற விவற்றைத் தொடுத்துச் சாத்தி. பல்லாயிர்குழாநடுவே. "தன்னேராயிரம் பிள்ளைகள்" என்கிறபடியே தன்னே டொத்த தரத்தாராய், தன்னை லேவித்துக்கொண்டிவருகிற பல ஆயருடைய திரள்நடுவே. எல்லியம்போதாகப் பிள்ளைவரும். அந்தியம்போதாக ஸ்ரீநந்தகோபர் திருமகனைலன்வரும். எதிர்நின்றுங்கினவளை யிழவேண்மினே. அவன்வருகிறவழியிலே எதிரேநின்று உங்கள்கையில் கிடக்கிற திரளானவளையை யிழவாதேகொள்ளுங்கோள். எதிர்நிற்கையென்றும், வளையிழ க்கையென்றும் இரண்டில்லிபோலே காணும். இனவளையிழவேண்மினென்கைபோலே- எதிர் நின்றவர்களில் இனவளையில் ஒருவளை நோக்கவல்லாரில்லை என்னுமிடம் சொல்லுகிறது. உ

மூ.—சுரிகையுங் தெறிவில்லுஞ் செண்டுகோலுமேலாடையுந் தோழன்மார் கொண்
ஒருகையா லொருவன்றன் றோளூன்றி யாநிரையினமீளக் குறித்தசங்கம் [டோட
256 வருகையில் வாடியபிள்ளைகண்ணன் மஞ்சளுமேனியும் வடிவுங்கண்டாள்
அருகேநின்றுளென்பெண்ணைக்கிக்கண்டாளதுகண்டிவ்வூரொன்றுரைக்கின்றதே.

பதவுரை.

சுரிகையும்— உடைவாளையும் [உரைகா]
தெறி வில்லும்— சண்டு வில்லையும்
செண்டு கோலும் — பூஞ்சண்டுடைத்தான கோலையும்
மேல் ஆடையும்— மேல் சாத்தையும்
தோழன்மார் — (தன்னை இறைப்போதும் பிரிந்து ஆற்றமாட்டாத) தோழன் மாரானவர்கள்
கொண்டு – தங்கள் கையிற்கொண்டு
ஓட— (வேண்டினபோது கொடுக்கைக்காக, ஓய்டிதாழாமல்) பின்னே ஸேவித்துவர
ஒருவன் தன்— உயிர்த் தோழனை வொரு வனுடைய
தோளை– தோளை
ஒரு கையால்— ஒரு திருக்கையாலே
ஊன்றி— ஊன்றிக் கொண்டு,
(மற்றொரு திருக்கையாலே,)
ஆநிரை— பசு நிரையின்
இனம்— கூட்ட மானது
மீள— திரும்புகைக் குறுப்பாக
குறித்த— ஊதின
சங்கம்— சங்கத்தைப் பிடித்துக்கொண்டு
வருகையில்— மீண்டு வருகிறவளவிலே
வாடிய— வாட்டத்தையுடையனாய்
பிள்ளை— நவயௌவநனை
கண்ணன்— கண்ணனுடைய

(க) "கௌசேயபுஷ்பிதக்ஷௌமம்"

மஞ்சளும்— பட்டுப்படாத மஞ்சளையும்
மேனியும்— திருமேனியில் நிறத்தையும்
வடிவும்— அவயவ ஸமுதாய சோபையையும்
அருகே— அவன் வருகிற வழிக்கருகிலே
நின்றுள்— நின்றுளான
என் பெண்— என் பெண்ணைவள்
கண்டாள்— (எல்லாரும் பார்க்கிறுப்போலே)
பார்த்தாள்;
(அதுவுமன்றி, அபூர்வதர்சநமாகையாலே;)
நோக்கிக்கண்டாள்—விரும்பிக் கண்வைத்துப்
பார்த்தாள்
அது கண்டு— இவள் கண்வைத்துப்பார்த்த
அவ்வளவைக்கொண்டு
இ ஊர்— இச் சேரியிலுள்ளவர்கள்
ஒன்று புணர்க்கின்றது — அவளோடிவளுக்
கொரு ஸம்பந்தத்தைக் கட்டிப்பிடித்
துச் சொல்லாநின்றார்கள்.
என்று ஒருத்தியின் தாய் சொல்லுகிறாள்.

வ்யா. மூன்றும்பாட்டு. சுரிகையுமித்யாதி. பசுமேய்க்கப்போம்போது விரோதிநிரஸநத்துக்கும் லீலைக்குமுறுப்பான உபகரணங்கள்பலவும் கொண்டாய்த்துப்போவது. சுரிகை என்று ஓராயுதவிசேஷம். இதை, "உடைவாள்சாத்தி" என்றும், இங்கே, "சுரிகை" என்றும் சொல்லுகையாலே விரோதிநிரஸநத்துக்குடலான ஆயுதங்கள்.*சென்று செருச்செய்யுமவர்களார்கையாலே ஆயுதமும் வேணுமிறே. தெரிவில்லாவது - சுண்டுவில்லு; இது சென்றுகொலும் லீலைக்குபகரணம்; இவற்றையும். மேலாண்டையும் பசுமேய்த்துலருமது திருவரைக்குத் தகுதியாக, முன்புசாத்தின பரியட்டத்துடனே சாத்துகைக்குத் தயான மேற்சாத்தையும். தோழன்மார்கொண்டோட. ஸமாநவயஸ்காராய்த் தனக்கு ஸ்நேஹளாய்த் தன்னையொருக்ஷணகாலமும் பிரிந்திருக்கமாட்டாத தோழன்மாரானவர்கள் தங்கள் கைகளிலேகொண்டு ஆபத்ஸமயத்திலே கொடுக்கைக்காக ஓரடி தாழாமல் நெடுவரைத்துஸேவித்துக்கொண்டுவர. ஒருகையாலொருவன்றன்தோளையுன்றி. கீழ்க்கொடு தோழன்மாரளவன்றிக்கே, உயிர்த்தோழனுய்ப் ப்ரியபரனுமாய் ஹிதபரனுமாயிருப்பானொருவனுடைய தோளை ஒருதிருக்கையாலே ஸ்பர்சித்து. ஆநிரையினம்மீளக்குறித்தசங்கம். மற்றொருதிருக்கையாலேபசுநிரையினுடைய திரளானதுமீளுப்படியாகவூதினசங்கத்தைப்பிடித்துக்கொண்டு. சங்கம்குறிக்கும்போது, ஆநிரையினமானது மேய்கைக்குறுப்பாகக் குறிக்குமதும், மீளுகைக்குறுப்பாகக் குறிக்குமதும், பக்கத்துவிலங்காமைக் குறுப்பாகக்குறிக்குமதுமாய் பஹூமுகமாயிறே யிருப்பது. இவையெல்லாம், ஊதுகிற த்வநிவிசேஷத்தாலே வாஸநைபண்ணின பசுக்களறியுமிறே;இப்போது ஸாயங்காலமாகையாலே, மீளக்குறித்தசங்கம் என்கிறது. இந்தத்வநிதான் * பூங்கொள் திருமுகத்து மடித்துதிய சங்கொலிபோலே திருவாய்ப்பாடியில் பெண்களுக்கும் தன்வரவையுணர்த்துகைக் குடலாயிறேயிருப்பது. வருகையில்வாடியபிள்ளை கண்ணன். இப்படிவருகிறவளவில், பசுக்களின்பின்னே திரிந்த ஆயாஸம்பொறுத ஸௌகுமார்யத்தாலும், பகலெல்லாம் பெண்களைப்பிரிந்து போகையாலுண்டான தளர்த்தியாலும்வந்த வாட்டத்தையுடையனுய் நவயௌவநமாயிருந்துள்ள கர்ஷணையுடைய. மஞ்சளும் மேனியுமித்யாதி. *பற்றுமஞ்சள் பூசும்படி ஸ்ரீபராஸரையாலே அவர்கள்பூச, பட்டுப்படாத மஞ்சளும், அதுக்குப்பரபாகமான திருமேனியின் நிறமும், திவ்யமான அவயவ ஸமுதாயசோபையும், அவன் வருகிறவழிக்கருகே நின்றவளான என்பெண், எல்லாரும்காண்கிறவோபாதி கண்டாள். நோக்கிக்கண்டாள். விரோதிப்போகிறவள் அபூர்வதர்சநத்தாலே புரிந்து கண்வைத்துப்பார்த்தாள்.அதுகண்டிவ்வூரோன்று புணர்க்கின்றதே.இவள்கண்வைத்துப்பார்த்த அவ்வளவைக்கொண்டு, அவன்பக்கலிலே ப்ரவணையாய்ப் பார்த்தாளாகக்கொண்டு, இவ்வூரானது ஒன்றைத்தொடுத்து நடத்தாநின்றது. ஒன்றுபுணர்க்கையாவது

ஈது இவளுக்குமவனுக்கும் ஒருஸம்பந்தமின்றிக்கே யிருக்கச்செய்தே உண்டானதற்போலே
ஒன்றைப்பிடித்துச் சொல்லுகை ... ... கூ.

மூ.—குன்றெடுத்தாநிரைகாத்தபிரான் கோவலனாய்க் குழலூதியூதிக்
கன்றுகண்மேய்த்துத் தன்றோழரோடு கலந்துடன்வருவானைத் தெருவிற்கண்டு
என்றுமிவனை யொப்பாரை நங்காய் கண்டறியேனேடி வந்துகாணாய்
ஒன்றுநில்லா வளைகழன்று துகிலேந்திளமுலையு மென்வச மல்லவே. சு.

பதவுரை.

கோவலன் ஆய்—கோபகுலத்திற்பிறந்தவனாய்
குன்று— கோவர்த்தந பர்வதத்தை
எடுத்து— குடையாக எடுத்து
ஆ நிரை— பசுக்களின் நிரையை
காத்த—(*மழுவுந்தோழுங்காள்பெய்த போது)
பிரான்— உபகாரகன் [ரக்ஷித்த
குழல்— வேய்ங்குழலை
ஊதி ஊதி— பலகாலு மூதிக்கொண்டு
கன்றுகள் மேய்த்து— கன்றுகளை மேய்த்து
தன் தோழரோடு— கூடப்போன தன் தோழர்க்களோடே
கலந்து— கலந்து
உடன் வருவானை— கூடவருகிறவனை
தெருவில் கண்டு—தெருவிலேபார்த்து
நங்காய்—ஸ்த்ரீத்வப்பூர்த்தியையுடையவளே!
என்றும்— எக்காலத்திலும்
இவனை ஒப்பாரை—இவனைப்போல்வாரை
கண்டறியேன்— பார்த்தறியேன்
அடி— தோழீ!
வந்து காணாய்— வந்துபார்;
(அவனைக் கண்டபின்பு)
துகில்— வஸ்த்ரமும்
கழன்று— அரையில் தங்காதபடி கழன்று
வளை— கைவளைகளும்
ஒன்றும் நில்லா—ஒன்றும் நிற்கிறனவில்லை;
வந்து— எந்தப்படிமுகாய்
இள— இளம்பருவமான
முலைப்— முலைகளும்
என் வசம் அல்ல— என்னுடைய வசத்தில்
நிற்கிறன வில்லை.

வ்யா. நன்காம்பாட்டு. குன்றெடுத்தோரிரைக்காத்தபிரான். இந்தர்ன் பசிக்கோபத்தாலே கல்வர்ஷத்தை வர்ஷிப்பிக்கப்புக்கவாறே "கல்லெடுத்துக்கன்மாரிகாத்தாய்" என்கிறபடியே- முன்பு "ரக்ஷகம்" என்று சொன்ன மலைதன்னையே வர்ஷவாரணமான குடையாகவெடுத்து, ரக்ஷ்யவர்க்கமான பசுநிரையின்மேல் ஒருதுளிவீழாதபடி ரக்ஷித்தவுபகாரகன். கோவலனாய். கீழ்ச்சொன்னதுக்கும் மேல்சொல்லுகிறதுக்கும் தோற்ற இக்குடிப்பிறப்பிலே. ஆய்என்கையாலே- இடைத்தனத்தில் புரையில்லாமைசொல்லுகிறது. ஆக்கையாலிலே "ரக்ஷ்யவர்க்கமான பசுக்கள் நலுங்கவொண்ணாது" என்றாழ்ந்காள்ஒருபடிப்பட மலையைச்சுமந்துகொண்டுநின்று ரக்ஷித்தது. இப்படிமலையைச்சுமந்துநின்றவிடத்தில் ஓராயாஸம் தோற்றிற்றில்லையிலே- ரக்ஷ்யவர்க்கத்தில் ஒருவர்தந்தாமுடையரக்ஷணத்துக்கு ஒருயத்நம்பண்ணினாலில்லாமையாலே. குழலூதியூதி. இதுவும் ஜாத்யுசித வ்ருத்தியிலே. வீப்ஸையாலே - பலகாலும் ஊதும் என்னுமிடம் சொல்லுகிறது. அதாவது - கன்றுகள் மேய்க்கைக்கும் க்ரமத்தில் போகாதபடி மறிக்கைக்கும் வழிதோக்கி மீளுகைக்கு முடல்க்கப் பலகாலு மூதுமிலே. கன்றுக்ரித்யாதி. கன்றுகள் வயிறுநிறையும்படி மேய்த்து, கூடப்போன தன்னுடைய தோழன்மாரோடே "அவர்களிலொருவன்" என்னலாம்படி கலந்து கூடவருகிறவனைத் தெருவிலேகண்டு. என்றுமித்யாதி. ஒருகாலத்திலும் இவனையொப்பாரைக் கண்டறியேன் நங்காய்

வடி! வந்துகாணென்று - தனக்குத் தோழியானவளிடமும் காண்பழைக்கிறாள். நங்காய்! கையாலே - நினைத்தகார்யம் தனக்குத் தலைக்கட்டித் தரவல்ல குணபூர்த்தியுடையவ ளென்னு மிடந் தோற்றச் சொல்லுகிறாள். ஏடியென்றது - தோழியென்றபடி. "எல்லையுமேடியும் தோழியும் முன்னிலைப்பேர்" என்னக்கடவதிறே. ஒன்றித்யாதி. அலர்னேக்கண்ட வரலாறு தனக்குப் பிறந்த விக்ரியைச் சொல்லுகிறாள். துகில் - கழன்று - வீழ - ஒன்றுமறிகில்லா. பரியட்டமும் மரையிற் றெங்காதபடி கழன்று, கையில்வளைகளும் வியர்நிறுத்தியும் நின்றும் நிற்கிறனவில்லை. ஏந்திளமுலையு மேன்வசமல்லாதே. ஏந்துதலையும் இளமையையு முடைத்தான முலையும் என்னுடைய வசத்தில் நிற்கிறதில்லை. "கொங்கைகளார்ந்து குமைத்துக் குதுகுலித்து ஆவியையாகுலஞ்செய்யும்" என்கிறபடியே தன்வசமாகக் கிளர்ந்து கலியா நின்றது. ... ...

மூ.—சுற்றிநின்றுயர் தடைகளிடைச் சுருள்பங்கிநேத்திரத்தாலணிந்து
பற்றிநின்றுயர் கடைத்தலையே பாடவுமாடக் கண்டேனன்றிப்பின்
மற்றொருவர்க்கென்னைப் பேசலொட்டேன் மாலிருஞ்சோலை யெம்மாயற்கல்லால்
கொற்றவனுக்கிவளா மென்றெண்ணிக்கொடுமின்கள் கூடிராகிற்கோழம்பமே.

பதவுரை.

ஆயர்— தோழரான இடையர்கள்
சுற்றி நின்று—சூழ நின்றுகொண்டு
தடைகள்— பீலிக்குடைகளை
இட— திருமேனிக்குப்பாங்காகப்பிடித்துவர
சுருள்— சுருண்ட
பங்கி— திருக்குழல்களை
நேத்திரத்தால்— பீலிக்கண்களாலே
அணிந்து— அலங்கரித்து
ஆயர்— இடையர்களுடைய
கடைத்தலை— தலைக்கடையிலே
பற்றி நின்று— நெஞ்சு பொருந்தி நின்று
பாடவும் ஆடவும் கண்டேன்—பார்க்கவும் ஆடவும் பார்த்தேன்;
அன்றிப்பின் — இப்படிப்பட்ட இவனுக்கு கொழுய
மற்று ஒருவர்க்கு—வேறொருவர்க்கென்று
என்னை— என்னை
பேசலொட்டேன்—சொல்லவொட்டேன்;
(என்ன; நீ எனக்குக்கொழுயவென்று சொல்லுகிறாயென்ன;)
மாலிருஞ்சோலை—திருமாலிருஞ்சோலையிலே
என்—என்னிடத்தனக்குரிதாச்சிக்கொண்ட
மாயற்கு அல்லால்—ஆச்சர்யசக்தியுகதனை
எம்பெருமானுக்கொழுய
(என்ன; ஆகில் என்செய்யச் சொல்லுகிறாயென்ன;)
கொற்றவனுக்கு—ஐயிஷ்வர்யவான அவனுக்கு
இவள் ஆம்— இவள்தகுந்தவள்
என்று எண்ணி—என்று நினைத்து
கொடுமின்கள்— கொடுங்கோள்;
கூடிராகில்— அப்படி கூடார்களாகில்
¶ கோழம்பமே— உங்கள் குழப்பம் முடிவோடே தலைக்கட்டுமத்தனை யென்று கருத்து.

¶ கோழம்பம்— மனக்கலக்கம்.

வ்யா. ஐந்தாம்பாட்டு. சுற்றிநின்றுயர் தடைகளிடை திருத்தோழன்மாரான வாயர் அத்யந்த ஸ்நேஹிகளாய்ச்சூழ்ந்துகொண்டு நின்று வர்ஷாதபபரிஹாரமான குடைகளைத்தன் திருமேனிக்கு அதுகுணமாகப்பிடிக்க, சுருள்பங்கி நேத்திரத்தாலணிந்து, சுருண்ட திருக்குழலை யெடுத்துக்கட்டி, சூழப்பீலிக்கண்களாலே யலங்கரித்து, பற்றிநின்றுயர் கடைத்தலையே பாடவுமாடக்கண்டேன். ஆயர்தலைக்கடையிலே நெஞ்சுபொருந்தினின்று பாடவும் ஆடவும்

நம்பெருமாள் பாண்டியன் கொண்டை

கண்டேன். அன்றிக்கே, பற்றிநின்றென்றது - தலைக்கடையைப்பற்றிநின் றென்னவுமாம். ஆபத்தலைக்கடை யென்றது - நம்முடைய தலைக்கடை என்றபடி.. அன்றிப்பின் மற்றொருவர்க் கென்னைப் பேசலாட்டேன். இப்படிப்பட்டவனுக்கொழிய வேறொருவர்க்கென்று என்னைச் சொல்லவொட்டேன். நீங்கள் நினைத்திருக்கிறது செய்யலாவதில்லை; நீங்கள் வாய்விடில் நான்முடிவன். "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" - என்னுமாபோலே சொல்லுகிறாள். இப்படி இவள் சொன்னவாறே, இவள் தன்னினைவை இவள் வாயாலே கேட்கைக்காக "எவனுக்கொழிய என்று நீசொல்லுகிறது" என்ன; மாலிருஞ்சோலையெம் மாயற்கல்லால் என்கிறாள். "க்ருஷ்ணனுக்கு" என்னுதே இப்படி சொல்லிற்று - இவனுக்கு ஓடியுடைமை சொல்லுகைக்காக. அடியுடைமை சொல்லும்போது ஒரு$கோத்ர லம்பந்தம் சொல்லவேணுமிறே. மாலிருஞ்சோலைபோலே என்னையும்தனக்கு அஸாதாரண மாகிக்கொண்ட ஆச்சர்ய சக்தியுக்தனுக் கொழியவென்றபடி திருவாய்ப்பாடியில் அங்காட்டில் திருமாலிருஞ்சோலை அவனுக்கு அஸாதாரண தேசம்போலேகாணும். அவதாரகால மித்தனையுமிறேபங்கு; நித்யஸந்நிதி யிங்கேயிறே. கோற்றவனுக்கு. கொற்றம் - வெற்றி. நீங்கள் கொடுத்திலிகோளாகிலும் தனக்கு என்றது விடாதவனுக்கென்கை. * அண்ணாந்திருக்கலாங்கவளைக்கைப்பிடித்தவனிறே. இவளாம் என்றெண்ணிக்கொடுமின்கள். *தனிவழி போயினு ளென்னும்சொல் வாராதபடி(க) "தனியீமுவையாவு தாழ்" என்கிறபடியே- "அவனுக்குஇவள் அதுரூபை" என்று நினைத்து,(உ) "மஹயா ஸுஸீ தவவ்ரு தீஹவெநாழ்' என்கிறபடியே கொடுங்கோள். கோடீராகில் கோழம்பமே. அப்படி கொடுகோளாகில் நீங்கள் குழம்பினிகோளா மித்தனை; நான் போகைதவிரேன். சிந்தயந்திபோலே யிருப்பாளொருத்திபோலேகாணுமிவள். ஆனபின்பு, உங்கள்குழப்பம் நிஷ்ப்ரயோஜநம்; முடிவோடே தலைக்கட்டு மென்கிறாள். கோழம்பம் - குழப்பம். ... ... கூ.

மூ.—சிந்துரமிலங்கத்தன் றிருநெற்றிமேற்றிருத்திய கோறம்டிந் திருக்குழலும்
அந்தரமுழவத் தண்டழைக் காவின்கீழ் வருமாயரோடுடன் வளைகோல்வீச
அந்தமொன்றில்லாத வாயப்பிள்ளையறிந்தறிந் திவ்வீதிபோதுமாகில்
பந்துகொண்டானென்று வளைத்துவைத்துப் பவளவாய்முறுவலுங் காண்போந்தோழி.

பதவுரை.

தன்—தன்னுடைய
திரு நெற்றி மேல்—திருநெற்றியிலே சாத்தி
சிந்துரம்—ஸிந்தூர சூர்ணமானது [ன
இலங்க—ஸிலங்கவும்
திருத்திய — அதுக்குமேலே திருந்தச்சாத்
கோறம்பும்—திருக்குறம்பமும் [தின
திரு குழலும் — அதுக்குப்பரபாகமான திரு
இலங்க—விளங்கவும் [க்குழற் கற்றையும்
அந்தரம்—ஆகாசமடங்கலும்
முழவம் — வாத்யகோஷங்களாலே முழங்க
தண்—குளிர்ந்த [வும்

தழை— பீலிக்குடையாகிற
காவின் கீழ்— சோலையின் கீழே
வரும்— தன்னுடனே வருகிற
ஆயரோடுடன்—இடைப்பிள்ளைகளோடேகூட
வளை கோல்— வளைந்த தடிகளை
வீச— (ஒருவர்க்கொருவர் வெற்றிகூறி) எறிந்து கொண்டுவர
ஒன்று— (ஒப்பனை முதலியவற்றில்) ஒவ்வொன்றே
அந்தம் இல்லாத— எல்லைகாணவொண்ணாத
ஆயப்பிள்ளை— இடைப்பிள்ளையானவன்

(க) "துல்யசீலவ்யோ வர்த்தரம்" (உ) "ஸஹதர்மசரீ தவ ப்ரதீச்சமைதாம்"
$ இது சாடேக்ஷி; கோத்ரசப்தம் பர்வதத்தையும் வசிக்கும்.

அறிந்தறிந்து— தன்னையொழிய எனக்குச் செல்லாமையையும், என்னை யொழியத் தனக்குச் செல்லும் படியையு மறிந்து வைத்தும்
இ வீதி— இத்தெருவில்
போதும் ஆகில்— வருவானானால்
பந்து— / " எங்கள்பந்தை
கொண்டான்— (நாங்கள் விளையாடும்போது) பறித்துக்கொண்டு போனான் "
என்று— என்று முறையிட்டு
வளைத்துவைத்து—புறம்போகாதபடி தடுத்து [வைத்து
பவளம்— பவளம் போன்ற
வாய்— திருவதரத்தையும்
முறுவலும்— புன் சிரிப்பையும்
தோழி— தோழீ!
காண்போம்— நாம்கண்டநுபவிக்கக்கடவோம்
\ என்று தோழிகள் ஒருவர்க் கொருவர் பேசுகிறதாய்ச் செல்லுகிறது.

வ்யா. ஆரும்பாட்டு. சிந்துரமிலங்கத்தன் திருநெற்றிமேல். " நாள்மன்னு வெண்டிங்கள்கொல் நயந்தார்கட்கு நச்சிலைகொல் " என்னும்படியான அழகையுடைய தன்திருநெற்றிக்குமேலே, அதுக்கு பரபாகமாம்படி சாத்தின ஸிந்தூரசூர்ணமான துவிளங்க. திருத்திய கோறம்பும் திருக்குழலும். அதுக்குமேலே திருந்தச்சாத்தின திருக்குறம்பமும், அதுக்கு பரபாகமான திருக்குழற் கற்றையும் விளங்க. கீழ், " இலங்க " என்றது இங்கும் வரக்கடவது. அந்தரமுழுவம். ஆகாசமெல்லாம் வாத்ய கோஷங்களாலே முழங்க. முழவமென்று – மத்தளமாய், அதினுடைய முழக்கம் அத்பாஹார்யமாய்க் கிடக்கிறது. தண்டமைக்காவின்கீழ். குளிர்ந்த பீலிக்குடையாகிற சோலைக்கீழே. வருமாயரோடுடன். தன்னுடனே வருகிற திருத்தோழன்மாரான ஆயர்சோடுகூட, வகைகொல்வீச. ஒருவர்க்கொருவர் வெற்றிகாட்டி வளைதடி யெறிந்துகொண்டு. அந்தமொன்றில்லாத வாயப்பிள்ளை. ஒப்பனையழகும் வருகிற அலங்காரமும் லீலாவ்யாபாரமும் ஒசொன்றே எத்தனையேனு மளவுடையராலும் எல்லைகாண வொண்ணாத இடைப்பிள்ளை. அறிந்தறிந்திவ்வீதி போதுமாகில். தன்னையொழிய வெனக்குச் செல்லாமையும் என்னையொழியத் தனக்குச் செல்லும்படியான நீம்புகளையுமறிந்தால் இத்தெருவில் வரக்கூடாது; இவற்றையறிந்து வைத்தும் இத்தெருவே வந்தானுகில். பந்துகொண்டானென்று வளைத்துவைத்து. " திரளிலே நாம் அவனை வளைக்கும்படியென்? " என்று நீ நினைக்கவேண்டா, " நாங்கள் விளையாடுகிறபோது எங்கள் பந்தைப் பறித்துக் கொண்டுபோனான் " என்றுசொல்லிப் போகாதபடி தடுத்துவைத்து. பவளவாய் முறுவலும் காண்போம்தோழி. நாம் இப்படி செய்தவாறே, அவன் கால்வாங்கிப் போகாமே நின்று மந்தஸ்மிதம் பண்ணுமே, அப்போது அவனுடைய பவளம்போலேயிருக்கிற திருவதரத்துக்கு பரபாகமான முறுவலையும், தோழீ! நாம் கண்டநுபவிக்கக் கடவோம் என்று மநோரதிக்கிறாள். ... ... கூ.

மூ.—சாலப்பன்னிரைப்பின்னே தழைக்காவின்கீழ்த் தன்றிருமேனி நின்றெளிதிகழ
நீலநன்னறுங்குஞ்சி நேத்திரத்தாலணிந்து பல்லாயர்குழாநடுவே
கோலச்செந்தாமரைக்கண் மிளிரக்குழலூதி யிசைபாடிக்குனித்தாயசோ
டாலித்துவருகின்ற வாயப்பிள்ளை யழகுகண்டென்மக ளயர்க்கின்றதே. எ.

பதவுரை.

$ சால பல்— பற்பல்வான
நிரை பின்னே— பசுத்திரளின் பின்னே
தழை— பீலிக்குடையாகிற
$ சால— மிகவும்.

காவின் கீழ்— சோலையின் கீழே
தன்— தன்னுடைய
திருமேனி— திருமேனியானது
நின்று— ‡ நின்று
ஒளி திகழ— ஒளி விளங்க
நீலம்— நீலநிறத்தை யுடைத்தாய்
நல்— சுருட்சியாலும் நீட்சி பாலு முண்டான நன்மையையுடைத்தாய்
நறு— பரிமளம் கமழாநின்றுள்ள
குஞ்சி— நிருக்குழற் கற்றையை
நேத்திரத்தால்— பீலிக்கண்களாலே
அணிந்து— அலங்கரித்து
பல்— பல
ஆயர் குழா நடுவே— இடையர்களின் கூட்டத்தின் நடுவே
கோலம்— அழகியதாய்
செம்— சிவந்திருந்துள்ள
தாமரை— தாமரைபோலே யிருக்கிற
கண்— திருக்கண்களானவை
மிளிர— ஸ்புரிக்கும்படி
குழல்— வேய்ங்குழலை
ஊதி— ஊதிக்கொண்டும்
இசை— அதற்குரிய இசைகளை
பாடி— பாடிக்கொண்டும்
குனித்து— ஆடிக்கொண்டும்
ஆயரோடு— இடைப்பிள்ளைகளோடு
ஆலித்து வருகின்ற— ஸம்ப்ரமித்து வருகிற
ஆயப்பிள்ளை— இடைப்பிள்ளையின்
அழகு கண்டு— வடிவழகைக்கண்டு
என் மகள்— என் பெண் பிள்ளையானவள்
அயர்க்கின்றது— துவளாநின்றாள்
என்று ஒருத்தியின் தாய் சொல்லும்
பாசுரமாய்ச் செல்லுகிறது.

‡ ‘ நின்று ’ என்கிறவிது - வார்த்தைப்பாடு.

வ்யா. ஏழாம்பாட்டு. சாலப்பன்னிரைப் பின்னே. மிகவும் பலவான பசுநிரைகளின் பின்னே. ஒரொரு திறமாக வெண்ணிலும் பரிகணிக்க வொண்ணுதபடியாய்த்து கோஸம்ர்த்திதா னிருக்கும்படி. இப்படியிருக்கிற பசுநிரையை முன் நடக்கவிட்டு பிற்கூழையிலே யாய்த்து இவன்றான் வருவது. தழைக்காவின்கீழ். பீலிக்குடைச் சோலைக்கீழே. தன்திரு மேனி நின்றொளிதிகழ. பசுக்கள் வயிறுநிறைய மேய்ந்து மீளப் பெறுகையாலும், “ பெண்களோடே கலக்கைக் கீடான காலம்வந்தது ” என்னுமத்தாலு முண்டான வுகப்பாலே தன்னுடைய திருமேனியானது நின்றொளிவிளங்க. நீலநன்னறுங்குஞ்சி நேத்திரத்தாலணிந்து. நீலமான நிறத்தை யுடைத்தாய் சுருட்சியாலும் நீட்சியாலு முண்டான நன்மையை யுடைத்தாய் பரிமளிதமா யிருந்துள்ள திருக்குழலைப் பீலிக்கண்களாலே அலங்கரித்து.

பல்லாயர் குழாநடுவே. அநேகமான ஆயர் திரளுக்கு நடுவே. கோலச்செந்தாமரைக் கண்மிளிர. தர்சநீயமாய்ச் சிவந்த தாமரைபோலே யிருக்கிற திருக்கண்களானவை மிளிர. இத்தால் - திருத்தோழன்மாருடைய திரளை இடம்வலங் கொண்டு பார்த்து மகிழ்ந்துகொண்டு வரும்படி சொல்லுகிறது. குழலூதியிசைபாடிக்குனித்து. “ ஆமருவினநிரை மேய்க்க நீபோக்கு ஒருபகலாயிரமூழி ” என்னும்படி பகலெல்லாம் தன்னைப்பிரிந்து நோவுபட்டுக் கிடந்த பெண்கள் தான்வருகிறமையறிந்து கொந்தளிக்கும்படியாகவும், அவர்களைப் பிரிகையாலே தனக்குண்டான ஆர்த்தியெல்லாம் தோன்றும்படியாகவும், ப்ரணயரோஷம் கொண்டாடி யிருப்பார்நெஞ்சில் மறம் தீரும்படியாகவும் தக்கபாசுரங்களை வைத்துத் திருக்குழலை யூதி, அதுக்கு அநுரூபமான இசைகளையும்பாடி, “ கூத்தன்கோவலன் ” என்கிறபடியே வருகிறபோதை நடையழகாலே வல்லாராடினாற்போலேயாடி.

ஆயரோடாலித்துவருகின்ற வாயப்பிள்ளை. இப்படியே கீழ்சொன்ன தோழன்மாரான வாயரோடேகூட மேனிணிப்புத்தோன்ற கர்வித்துவருகிற இடைப்பிள்ளையுடைய. அழகு

கண்டேன் மகளயர்க்கின்றதே. அவனுடைய வடிவழகைக்கண்டமாத்ரங்கொண்டுகாணும் என்னுடைய பெண்பிள்ளையானவள் தன்னுடைய குடிப்பிறப்பையும் ஸ்த்ரீத்வாபிமானத்தையும் என்னுடைய நியந்த்ர்த்வத்தையும் நிரூபிக்கசக்தியல்லாதபடி அறிவழிகிறது. ... எ.

மூ.—சிந்துரப்பொடிக்கொண்டு சென்னியப்பித் திருநாம மிட்டங்கோ¶ லிலையந்தன்னுல்
அந்தரமின்றித் தன்னெறிபங்கியை யழகிய நேத்திரத்தாலணிந்து
இந்திரன்போல் வருமாயப்பிள்ளை யெதிர்நின்றங்கின்வகள் யிழவலென்னைச்
சந்தியினின்றுகண்டூர் நங்கைதன்றுகிலோடு சரிவளைகழல்கின்றதே. அ.

பதவுரை.

சென்னி— "திருமுடியிலே
சிந்துரம் பொடி கொண்டு— ஸிந்தூர சூர்ணத்தைக் கொண்டு
அப்பி— சாத்தியும்
அங்கு— திருநெற்றியில்
ஓர் இலை ‡ தன்னால்— ஓரிலையாலே
திரு நாமம் இட்டு— ஊர்த்வபுண்ட்ரம் சாத்தியும்
தன்— தன்னுடைய
நெறி— நெறித்திரா நின்றுள்ள
பங்கியை— திருக்குழலை
அழகிய— அழகியதான
நேத்திரத்தால்— பீலிக்கண்களாலே
அணிந்து— அலங்கரித்துக் கொண்டும்
இந்திரன் போல்— தேவேந்த்ரனைப்போல்
வரும்— வருகிற
ஆயப்பிள்ளை— இடைப்பிள்ளைக்கு
எதிர் அங்கு— எதிரான அவ்விடத்தில்
நின்று— நின்றுகொண்டிருந்து
இனம் வளை— திரளான வளைகளை
இழவேல்— இழவாதேகொள்"
என்ன— என்று என் பெண்ணைக் குறித்து
நான் சொல்லச்செய்தேயும்
சந்தியில்— அவன் வருகிற வழியான சந்தியிலே
நின்று கண்டூர்— நின்று கண்டூர்!
நங்கைதன்— * நாண்மடநச்சம் முதலியவற்றால் குறைவற்றவளான இவளுடைய
துகிலொடு— பரியட்டத்தோடு
சரிவளை— சரி யென்னும் வளையும்
கழல்கின்றது— கழலாநின்றது.
என்று ஒருத்தியின் தாய் தன்தோழி மார்களுடன் சொல்லித் தளருகிறாளாய்ச் செல்லுகிறது.

‡ "இலையந்தன்னால்" என்றவிடத்தில் 'அம்' சாரியை.

வ்யா. எட்டாம்பாட்டு. சிந்துரப்பொடிக்கொண்டு சென்னியப்பி. சாதிலிங்கப்பொடிகொண்டு திருமுடியிலேசாத்தி. கீழ், "சிந்துரமிலங்கத்தன் திருநெற்றிமேல்" என்று ஸிந்தூரசூர்ணத்தைத் திருநெற்றியிலே விளங்கும்படி திலகமாகச்சாத்தினபடி சொல்லிற்று. இங்கே, "சென்னியப்பி" என்கையாலே திருமுடியிலே திருகுழல்மேலே அலங்காரமாகக்கொண்டு பரக்கச்செறியச்சாத்தினபடி சொல்லுகிறது. திருநாமமிட்டங்கோலியந்தன்னால். நேரியதாய்நீண்டு ஒட்டினவிடத்திலே பற்றும்படி இளையதாய் நிறத்திருப்பதொரு இலையாலே திருநெற்றியிலே திருநாமமாக இட்டு. ஊர்த்வபுண்ட்ராகாரமாக அழுத்திவைக்குமாய்த்து. அங்கென்று- திருநாமத்துக்கு அநுரூபஸ்தலமான திருநெற்றியைச் சொல்லுகிறது. "இலையம்" என்கிறவிடத்தில், அம்-சாரியை. அதவா, சாதிலிங்கப்பொடியை ஆஸ்யஜலத்தாலே நனைத்துத் திருநெற்றியிலே திருநாமமாகச்சாத்தி யென்னவுமாம். அப்போதைக்கு, "ஓரிலயம்" என்று பாடமாய், இல்லென்று- உள்ளாய், அயமென்று- ஜலமாய், ஓரிலயமென்

¶ "நிலயந்தன்னால்" என்று பாடாந்தரம்.

றது திருப்பவளத்துக்குட்பட்டதொரு ஜலமென்றபடி. "ஆயப்பிள்ளை" என்கிற இடைத்தனத்துக்கும் பிள்ளைத்தனத்துக்கும் சேருவதொரு வ்யாபாரமிதுயிது. அந்தரமித்யாதி. தன்னுடைய நெறித்தகுழலில் பிடைவெளியில்லாதபடி அழகிய பீலிக்கண்களாலே அலங்கரித்து.

இந்திரன்போல்வருமாயப்பிள்ளை. ஸஜாதியரான தேவர்களடங்கலும் ஸேவிக்க அவர்களுக்கு நிர்வாஹகனான இந்திரன் அவர்களுடனே தன்னைப்பணிமாறுவருமாபோலே, *தன்னோராயிரம் பிள்ளைகளான திருக்கோழுன்மாரடங்கலும் ஸேவிக்க அவர்களுடனே தன்செருக்கும் பெருமையும் தோற்றும்படி வருமாயப்பிள்ளை. அன்றிக்கே, இந்த்ரசப்தத்துக்கு முக்யவ்ருத்தி ஈச்வரவிஷயத்திலேயாகையாலே, பரமஸாம்யாபந்நரான ஸ்ரீகள்ஸேவிக்க அவர்களுடனே ஸர்வேச்வரன்றான் வருமாபோலே வருகிறவனென்னவுமாம். தர்ம்பைக்யமுண்டேயாகிலும் அவதாரப்ரயுக்தமான நிலையைவிட்டு, (க) "விஷ்ணோர்நாஸாதர்சோ வீர்யே" என்றுற்போலே இப்படி சொல்லலாமிதே. இப்படிவருகிற ஆயப்பிள்ளையுடைய எதிர்நின்றங்கின வகாயிழவேலென்ன. அவன்வரவுக்கு எதிராக அந்தஸ்தலத்திலேநின்று உன்னுடைய இனவளைகளை இழவாதேகொள்ளென்று நான்சொல்ல. "எதிர்நிற்கை" என்றும், "வளையிழக்கை" என்றும் இரண்டில்லிபோலேகாணும். இனவளைபென்கையாலே எதிர்நின்றவர்கள்கையில் ஒருவளையும் தொங்காதென்னுமிடம் தோற்றுகிறது. வளையிழக்கையாவது - ஸ்த்ரீத்வ மழிகையிதே.

கந்தியில்நின்றுகண்டீர். என்சொல் கேளாமல் ஊர்ப்பொதுவான அவன்வருகிறவழியான கந்தியிலேநின்றுகண்டீர். நங்கைதன்துகிலோடுசேரிவளை கழல்கின்றதே. முன்பு ஸ்த்ரீத்வத்தால் பரிபூர்ணையாயிருந்த இவளுடைய பரியட்டத்தோடேகூடச் சரிவளையும் கழலாநின்றது. "கோல்வளை, கழல்வளை, வரிவளை" என்னுமாபோலே, "சரிவளை" என்றும் ஒருவளைவிசேஷம். "கழல்வளையைத்தாமும் கழல்வளையேயாக்கினர்" என்கிறபடியேமுன்பே "சரிவளை" என்று பேராயிருந்தவித்தை, நாமமாத்ரமன்றிக்கே, கையில்மிதாங்காமல் சரிந்து கழன்றுபோம்படி பண்ணினனுயத்து. அவன் தன்னுடைய காட்சியாலே. இத்தால் - வினவப்புகுந்தவர்களுக்குத் தன் பெண்பிள்ளையுடைய விக்ருதிக்கு ஹேதுவையும் விக்ருதிவிசேஷந்தன்னையும் சொன்னளாய்த்து. ... ... அ-

மூ.—வலங்காதின் மேற்றேன்றிப் பூவணிந்து மல்லிகைவனமாலை மௌவன்மாலை
சிலிங்கரத்தாற் குழல்தாழவிட்டே தீங்குழல்வாய் மடுத்தூதியூதி
அலங்காரத்தால்வரு மாயப்பிள்ளை யழகுகண் டென்மகளாசைப்பட்டே
விலங்கிநில்லாதெதிர்நின்று கண்டீர்வெள்வளைகழன்று மெய்மெலிகின்றதே. கூ-

பதவுரை.

வல காதில்— வலங்காதிலே	மளவல் மாலை— காட்டுமல்லிகை மாலையையும்
மேல்தோன்றி பூ— செங்காந்தள் பூவை	[அணிந்து]— சாத்திக் கொண்டும்
அணிந்து— சாத்திக் கொண்டும்	சிலிங்காரத்தால்— சிங்காரத்தோடே
வனம்— அழகிய	குழல்— திருக்குழற் கற்றையை
மல்லிகை மாலை— மல்லிகைப்பூ மாலையையும்	தாழ விட்டு— திருமுதுகில் தாழவிட்டும்

(க) "விஷ்ணோர்நாஸாதர்சோ வீர்யே"

தீம்— யாவர்க்கும் இனிமையைத்தரா நின்றுள்ள

குழல்— வேய்ங்குழலை

வாய் மடுத்து— திருப்பவளத்தில் வைத்து

ஊதி ஊதி— பலகாலூதிக் கொண்டும்

அலங்காரத்தால்— இப்படிப்பட்ட வேஷத்தோடே

வரும்— வாராநின்ற

ஆயப்பிள்ளை— இடைப்பிள்ளையின்

அழகு கண்டு— அழகைக்கண்டு

என் மகள்— என் பெண்ணானவள்

ஆசைப்பட்டு— ஆசைப்பட்டு

விலங்கி நில்லாது— ('இது கண்டவர்கள் வருத்தும்' என்று கண்ணை மாறவைத்து) வழிவிலங்கி நில்லாதே

எதிர் நின்று கண்டீர்— அவனுக்கெதிரே நின்று கண்டீர்!

வெள்வளை— சங்குவளைகளும்

கழன்று— (கையில் தங்காமல்) கழன்று

மெய்— சரீரமும்

மெலிகின்றது— கரியாநின்றாள்

என்று— வினவவந்தவர்களுக்குத் தன் பெண்ணின் தசையைச் சொல்லுகிற தாயார் பாசுரமாய்ச் செல்லுகிறது.

வ்யா. ஒன்பதாம்பாட்டு. வலங்காதில் மேல்தோன்றிப் பூவணிந்து. வலக்காதிலே செங்காந்தள்பூவை யலங்காரமாகச்சாத்தி. இடக்காதுக்கு ஒன்றும் சொல்லாமையாலே ஒரு காதுக்குச் சாத்திக்கொண்டு வருகிறவிதுதானும் ஓரழகாகச் சாத்திக்கொண்டு வந்தானென்னுதல்; ஒரு காதுக்குச் சாத்தினவளவிலே, மல்லிகைமாலையைக் காண்கையாலே அத்தை மறந்து இத்தைச்சாத்தி விட்டானென்னுதல். மல்லிகைவனமாலை. "வனம்" என்கிறவித்தை, மல்லிகையோடே சேர்த்து - காட்டு மல்லிகைமாலை யென்னுதல். அன்றிக்கே, வனமென்று - அழகாய், மல்லிகையா லுண்டான அழகியமாலை யென்னுதல். மௌவல்மாலை. மௌவலாவது மல்லிகையின் அவாந்தரபேதம். பூவை, காயா என்னுமிடத்தில், பூவையாவது - காயாவின் அவாந்தர பேதமாறப் போலே. மௌவல் மாலையென்று - இங்கும் அந்தவனப்புக் கூட்டிச் சொல்லவுமாம். கீழ், "அணிந்து" என்றதை இங்கும் கூட்டி இம்மாலைகளையுமணிந்து என்று சொல்லக்கடவது. இவைதான் திருமார்புக்கு அலங்காரமாகச் சாத்துமவையிறே.

சிலிங்காரத்தால் குழல்தாழவிட்டு. சிலிங்காரம் - சிங்காரம்; அலங்காரமென்றபடி. இத்தால் - திருக்குழல் பணியாகச் சாத்தும் பூந்தொடைகளைச் சொல்லுகிறது. அந்த அலங்காரத்தோடே கூடத் திருக்குழலைத் திருமுதுகிலே தாழவிட்டு. தீங்குழல்வாய் மடுத்தூதியூதி. தீமென்று - இனிமை. "இன்னார்க்கு" என்று விசேஷியாமையாலே - தன்னோடு பிறரோடு வாசியற எல்லார்க்கு மினிதாயிருக்கும் குழலென்றபடி. கேட்கிறவர்களிலும் தன் செவி யணித்தாகையாலே "பேதுறுமுகம்செய்து நொந்து நொந்து" என்கிறபடியே முதல்தன்னைவருந்தி, பின்னையிறே யவ்வருகுபோவது. பிறரைவருத்துகையாவது - "அவியுணுமறந்து வானவரெல்லாம்" என்றும், "தும்புருவோடு நாரதனும் தந்தம்வீணைமறந்து" என்றும், "கோவலர் சிறுமியர் - வந்து கவிழ்ந்து நின்றனர்" என்றும், "பறவையின் கணங்கள் கூடுதுறந்து வந்துசூழ்ந்து" என்றும் "மரங்கள்நின்று மதுதாரைகள் பாயும்" என்றும் சொல்லுகிறபடியே - தேவமநுஷ்ய திர்யக்ஸ்தாவர விபாகமற எல்லாரையு மொக்க வருத்துகை. இப்படியிருக்கிற திருக்குழலைத் திருப்பவளத்திலே வைத்துப் பலகாலு மூதிக்கொண்டு.

அலங்காரத்தால் வருமாயப்பிள்ளை. எவப்ப்ராகாரங்களான அலங்காரங்களோடே வருகிற இடைப்பிள்ளையுடைய. "பிள்ளை" என்கையாலே - (க) "ராஜகுமாரி" என்கிறபருவத்தைச் சொல்லுகிறது. அழகுகண்டென்மகளாசைப்பட்டு. கண்டவர்கள் கண்ணையும் நெஞ்சையும் தன்வசமாக்கிக்கொள்ளும் அழகைக்கண்டு என்னுடைய பெண்பிள்ளையானவ ளாசைப்பட்டு. விலங்கிநில்லாதேதிர்ந்நின்றுகண்டீர். "இது கண்டவர்களை வருத்தும்" என்று கண்ணை மாறவைத்து வழிவிலங்கிநில்லாதே அத்தைப் பார்த்துக்கொண்டு எதிரேநின்று கிடீர். வேள்வளைகழன்று மெய்மெலிகின்றதே. சங்குவளையும் கழன்று சரீரமும் மெலியாநின்றது. உடம்பு மெலிந்தன்றே வளையும் கழலுவது; வளைகழலுதலை முந்துறச்சொல்லி, பின்பு உடம்பு மெலிவுசொல்லுவா னென்னென்னில்; வளைகழன்றபின்பாய்த்து உடம்பில்மெலிவு இவளுக்குத் தோற்றிற்றென்னுதல். அன்றிக்கே, முந்துற வளைகழலுகைக்குத் தக்கவலிவுமெலிந்து; அவ்வளவுமன்றிக்கே, "இனி வளைக்கு ஆச்ரயமில்லை ஓ!" என்னும்படி மேன்மேலும் மெலிந்து செல்லுகிறபடியைச்சொல்லுகிறதென்னுதல். இதுவும் வினவவந்தவர்களுக்குத் தன்மகள்தசையைக் காயார்சொன்னவார்த்தை. ... ... கூ.

அ. நிகமத்தில், இத்திருமொழிகற்றார்க்கு பலம்சொல்லித் தலைக்கட்டுகிறார்.

மூ.—விண்ணின்மீதமர்கள் விரும்பித்தொழ மிறைத்தாயர்பாடியில் வீதியூடே
கண்ணன்காலிப்பின்னே யெழுந்தருளக் கண்டிளவாய்க் கன்னிமார்காமுற்ற
263 வண்ணம்வண்டமர்பொழிற் புதுவையர்கோன் விட்டுசித்தன்சொன்ன மாலைபத்தும்
பண்ணின்பம்வரப் பாடும்பத்தருள்ளார் பரமானவைகுந்த நண்ணுவரே. ஙு.

பதவுரை.

விண்ணின்மீது — ஸ்வர்க்காதிலோகங்களிலுள்ள
அமரர்கள்— தேவர்கள்
விரும்பி— உகந்து
தொழ— ஸேவித்து நிற்க
மிறைத்து— அவர்களை அநாதரித்து
ஆயர் பாடியில்— இடைச் சேரியில்
வீதியூடே— வீதியின் நடுவே
காலி பின்னே— பசுக்களின் பின்னே
கண்ணன்— கண்ணபிரான்
எழுந்தருள— எழுந்தருளா நிற்க
கண்டு— பார்த்து
இள— நவயௌவநைகளான
ஆய் கன்னிமார்— இடைப்பெண்கள்
காமுற்ற வண்ணம்— ஆசைப்பட்டபடியை
வண்டு— வண்டுகளானவை.
அமர்— படிந்துகிடக்கிற
பொழில்— சோலைகளையுடைய
புதுவையர்— ஸ்ரீ வில்லிபுத்தூரில் உள்ளார்க்கு
கோன்— நிர்வாஹகரான
விட்டு சித்தன்— பெரியாழ்வார்
சொன்ன— அருளிச்செய்த
மாலை— சொல்மாலையான
பத்தும்— இப்பத்துப் பாசுரங்களையும்
இன்பம் வர— ரஸாஸ்வாத முண்டாம்படி
பண்— பண்ணிலே
பாடும்— பாடாநிற்கிற
பத்தர் உள்ளார்— பக்தர்களா யிருக்குமவர்கள்
பரமான— மேலானதிக்கும் மேலான
வைகுந்தம்— ஸ்ரீ வைகுண்டத்தை
நண்ணுவர்— கிட்டப் பெறுவர்கள்.

(க) "யுவராஜகுமாரி"

வ்யா. விண்ணின்மீதமரர்கள் விரும்பித்தொழ. ஸ்வர்க்காத்யுபரிதநலோகங்களில் தேவர்கள் ஆதரித்துக்கொண்டுதொழ. பூபாரநிரஸநார்த்தமாக ப்ரார்த்திக்க அவதரிப்பித்தவர்களாலேயாலே திருவவ்தாரகாலமேற்றிதாடங்கி இவனுடைய திவ்யசேஷ்டிதங்களெல்லாம் பார்த்துக்கொண்டு அவ்வவசேஷ்டிதங்களைக்கண்டு வித்தர்யிறே தேவர்கள்தானிருப்பது: ஆகையாலே, உப்யவிபூதிநாதனுனதிவ்ய சேரபஸஜாதியைப், ஜாத்யுசிதவர்த்தியான கோரசூணத்திலே அநுகரித்து, ஜாத்யுசிதமான அலங்காரத்தையுடையனுய்க்கொண்டு திரிகிறபடியைக் கண்டால் அவர்கள் விரும்பித் தொழாநிர்க்களிறே. அன்றிக்கே, விண்ணின்மீதென்கிறது (க) " நாகஸ்யுபரிஷ்டே " . என்கிற பரமபதத்தையாய், அங்குண்டான, அமரருண்டு நித்யஸூரிகள், அவர்கள் தாங்களநுபவிக்கிற மேன்மைக்கெதிர்த்தட்டான இந்நீர்மையைக் காண்கையாலே அத்யாதரம்பண்ணித் தொழும்படியாக வென்னவுமாம். மின்றத்து. மிறுக்குச்செய்து. அதாவது - அப்படி தொழுது நிற்கிறவர்களுக்கு முகம்கொடாதே அநாதரித்து, பசுக்களையும் திருவாய்ப்பாடியில் ஸ்ரீயையும் ஆதரித்துக் கொண்டுபோகை. ஆயர்பாடியில் வீதியூடேகண்ணன் காலிப்பின்னே யெழுந்தருளக்கண்டு. திருவாய்ப்பாடியில் தெருவின்நடுவே பசுக்களின்பின்னே கீழ்ச்சொன்ன லோப்பங்களோடும் அவைதானும் மிகைபாய்ப்படியான வடிவழகோடும் க்ருஷ்ணனெழுந் தருளக்கண்டு. இளவாய்க்கன்னிமார் காமுற்ற வண்ணம். " சாலகவாசல்பற்றி நுழைவனர் நிற்பனராகி " என்றது முதலாக, " வெள்வளைகழன்று மெய்மெலிகின்றது " என்றது முடிவாகச் சொன்னபடியே யுவதிகளான இடைப்பெண்கள் ஆசைப்பட்டு விக்ர்தைகளான ப்ர்காரத்தை. வண்டமர்பொழிலித்யாதி. மதுபாநார்த்தமாகப்படிந்த வண்டுகள் வேறொன்றைப் புரிந்துபாராமல் ஸ்வகார்யமும் பொருந்திக் கிடக்கும்படியான் திருச்சோலைகளையுடைய ஸ்ரீவில்லிபுத்தூரி ஸ்வாமிக்கு நிர்வாஹகராய். * அரவத்தமளிப்படியே ஸர்வேச்வரனை எப்போதும் தம்முடைய திருவுள்ளத்திலே வைத்துக்கொண்டி ருக்கையாலே " விஷ்ணுசித்தன் " என்னும் திருநாமத்தை யுடையரான பெரியாழ்வார ருளிச்செய்த மலையான இப்பத்தையும். பண்ணின்பம்வரப்பாடும் பத்தருள்ளார். கேட்கிறவர்களிலுங்காட்டில் பாடுகிறதங்களுக்கு இன்பம்வரும்படியாகப் பண்ணிலே பாடாநிற்கும் பக்திமான்களர் யுள்ளவர்கள். பரமானவைகுந்தம் நண்ணுவரே. (உ) " விஷ்ணோ: பரமம்பதம் ஸதா பஸ்யந்தி ஸூரய: " என்கிறபடியே- மேலானதுக்கெல்லாம்மேலாய் " பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டு " என்கிறபடியே பகவதநுபவமங்களாசாஸநங்களைப்பண்ணி காலத்தவமுள்ளதனையும் வர்த்திக்கலாம் தேசமான ஸ்ரீ வைகுண்டத்தை ப்ராபிக்கப்பெறுவர். ... ... ஓ.

பெரியஜீயர் திருவடிகளேசரணம்.

அடிவரவு.—தீண்டி வல்லி சுரிகை குன்று சுற்றிச் சிந்துரம்
சாலச் சிந்துரப்பொடி வலம் விண் ணாட்டு.

ஆ - திருமொழி, உக - க்கு, பாட்டு - உருக.

(க) " நாகஸ்ய ப்ர்ஷ்டே " (உ) " விச்வதஸ்ப்ர்ஷ்டேஷு ஸர்வதஸ் ப்ர்ஷ்டேஷு "

2634
26.11.09

மூன்றும்பத்து - ஐந்தாந்திருமொழி - அட்டக்குவி - ப்ரவேசம்.

அ. கீழ்ச்சொன்னபடியே தான்விரும்பி மேய்த்துக்கொண்டுபோகிற கன்றுகளுக்கும் பசுக்களுக்கும், தனக்கு அபிமதவிஷயங்களான கோபகோபீஜநங்களுக்கும் பாதகமாம்படி இந்த்ரன் பசிக்கோபத்தாலே கல்வர்ஷத்தை வர்ஷிப்பிக்க, " குன்றெடுத் தாநிரை காத்தபிரான் " என்கிறபடியே மலையையெடுத்து ரக்ஷ்யவர்க்கமானவற்றுக்கு ஒரு நலிவு வாராதபடி நோக்கினமுபகாரம் திருவுள்ளத்திலே பின்னிட்டி, மலையெடுக்கவேண்டின ஹேதுக்களையும், மலைதன்னிலுண்டான வளப்பங்களையும், மலையினுடைய பரப்பையும், அதினுடைய கனப்பாட்டையும், அத்தை அநாயாஸேந பிடுங்கியெடுத்தபடியையும், அதுதன்னை ஏழுநாள் ஒருபடிப்பட தரித்துக்கொண்டுநின்ற படியையும், அத்தால் திருக்கைக்கு ஒரு வாட்டமின்றிக்கேயிருந்தபடியையுமெல்லாம் தத்காலம்போலேதர்சித்துப்பேசி, அவனுடைய ஆபத்ஸகத்வமாகிற மஹாகுணத்துக்கு ப்ரகாசகமான அந்த திவ்யசேஷ்டிதத்தினுடைய ரஸத்தையநுபவித்து இனியராகிறார்- இத்திருமொழியில். ... ...*

மூ.—அட்டக்குவிசோற்றுப்பருப்பதமும் தயிர்வாவியு நெய்யளறுமடங்கப்
பொட்டத்துற்று மாரிப்பகைபுணர்த்த பொருமாகடல்வண்ணன் பொறுத்தமலை
264 வட்டத்தடங்கண்மடமான்கன்றினை வலைவாய்பற்றிக்கொண்டுகுறமகளிர்
கொட்டைத்தலைப்பால் கொடுத்துவளர்க்குங்கோவர்த்தநமென்னுங் கோற்றக்குடையே.

பதவுரை.

அட்டு— சமைத்து
குவி— குவிக்கப்பட்ட
சோறு— சோறுகிற
பருப்பதமும்— பர்வதமும்
தயிர் வாவியும்— தயிர்சோடையும்
நெய் அளறும்— நெயச் சேறும்
அடங்க— ஆகிய இவற்றையெல்லாம்
பொட்ட— சடக்கென
துற்று— அமுது செய்து
மாரி— மழையாகிற
பகை— பகையை
புணர்த்த— உண்டாக்கினவனுய்
பொரு— திரைபொருகிற
மா கடல்— கருங்கடல் போன்ற
வண்ணன்— திருநிறத்தை யுடையனனவன்
பொறுத்த— தாங்கின
மலை— மலையாவது;
வட்டம்— வர்த்துலமாய்
தட— பெருத்திருந்துள்ள
கண்— கண்களையுடைத்தாய்
மடம்— தாயின் வசத்திலே ஒழுகும் பவ்
யதையையு முடைத்தான
மான் கன்றினை— மான்கன்றை
வலைவாய்— வலையிலே
பற்றிக்கொண்டு— பிடித்துக்கொண்டு
குறமகளிர்— குறப்பெண்கள்
கொட்டை— பஞ்சுச்சுருளின்
தலை— தலையினுலே
பால்கொடுத்து— ‡பால் உண்ணக்கொடுத்து
வளர்க்கும்— வளர்க்காநிற்பதாய்
கோவர்த்தனம் என்னும்— பசுக்களைப் பெரு
க்கிக்கொண்டு போருகையாலே ‘ கோவர்
த்தந ’ மென்னும் பேரையுடைத்தாய்
கொற்றம்— அம்மழையை வென்ற வெற்
றியையுடைத்தாய்
குடை— ஒருவர்மே லொருதுளி விழாத
படி கவிந்து நிற்கையாலே குடையென்
னப்பெற்றமலையாம்.

‡பஞ்சுச்சுருளின் தலையாலே பால்தோய்த்து மான்கன்றுகளுக்குக் கொடுப்பர்கள்.

வ்யா. முதற்பாட்டு. அட்டக்குவிசோற்றுப் பருப்பதமும். ஆக்கிக் குவித்த சோற்றுப் பர்வதமும். கோபஜநங்கள், வர்ஷார்த்தமாக இந்த்ரன ஆராதித்து, அவன் ப்ரீதியைவர்

ஷிப்பிக்க அத்தாலே பசுக்களுக்குப் புல்லும் தண்ணீருமுண்டாய், அத்தாலே பாலும் நெய்யும்மிருந்து ஜாத்யுசிதமான ஸம்பத்தோடே வர்த்திக்கத்தடையாயிறே யிருப்பது. ஆகையாலிறே, "எழில்விழவில்பழநடைசெய் மந்திரவிதியிற் பூசனை" என்று இத்தைப் பழையதாகநடந்துபோரும் அநுஷ்டானமாகச்சொல்லுகிறது. இப்படியாகையாலே, இந்த ராசாதனை பண்ணுகைக்காக, திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷங்குடியிலும் வாசல்கள்தோறும் வரிசைவத்துச்சமைத்து, "துன்னுசகடத்தாற் புக்கபருந்தேசாறு" என்கிறபடியே சகடுகளிலே வைத்திழுத்துக்கொண்டுவந்த சோறெல்லாம்சேர, பெரும்திருப்பாவாணைபோலே குவிக்கையாலே பர்வதம்போலே உயர்ந்திருக்குமிறே; அத்தைப்பற்ற "அட்டுச்குவிசோற்றுப்பருப்பதம்" என்கிறது. பருப்பதமென்றது - பர்வதமென்றபடி. தயிர்வாவியும். தயிரோடையும். நெய்யளறும். நெய்ச்சேறும். அச்சோற்றுமலைகளின்மேலே தொட்டியாகக் கட்டி தயிரை நிறையவிடுகையாலே, அந்தை அந்தமலைக்குண்டான வோடையாக ரூபித்துச்சொல்லுகிறது. நெய்யையும் அப்படியே தொட்டிகளாகப்பிடித்து அதுக்குள்ளும் சுற்றெங்கும் நிறையவிடுகையாலே செறிந்துகிடக்கும்படியைப்பற்ற "அளறு" என்கிறது. இவை யிரண்டையும்சொன்னது - மற்றுமுண்டான பால் பழங்கள் கறிகள் முதலானவற்றுக்கும் உபலக்ஷணம். அடங்க. இவையடைய. போட்டத்துற்று. போரத்துற்று- சடக்கெனவமுதுசெய்து. தேவதாந்தரத்தை உத்தேசித்துச்சமைத்தளித்து தந்தர்யாமியாய் நின்றும் ஜீவிக்கவும்வல்ல தனக்கிதாழிய, "தனக்கு அந்யார்ஹமாயிருப்பார்க்காகாது" என்றுய்த்து அடங்கத்தானே யமுதுசெய்தது. "நாங்கள் முன்புசெய்துபோந்தமர்யாதை செய்யவேணும், என்று மறுமனஸ்ஸுப்பட்டு இன்னமும் இவர்கள் விலக்கவும்கூடும்" என்றுய்த்துச் சடக்கெனவமுதுசெய்தது. மாரிப்பகைபுணர்த்த. வர்ஷமாகிற பகையையுண்டாக்கினன். அதாவது - இந்த்ரனுக்கென்று சமைத்தசோற்றை அவனுக்கு இடாதபடி விலக்கி, மலைக்கு இடச்சொல்லி, (க) "மொவயஜ்ஞ நாஷ்டி" என்று தான் அடையஜீவித்துவிடுகையாலேயிறே அவன் பசிக்கோபத்தாலே புஷ்கலாவர்த்தகாதி மேகங்களையேவி வர்ஷிப்பிக்க வேண்டிற்று; ஆகையாலே வர்ஷமாகிற பகையையுண்டாக்கினன் இவன்றானேயென்கிறது. பொருமாகடல்வண்ணன். திரைபொருகிற கருங்கடல்போன்ற திருநிறத்தையுடையவன். தான்பிறந்தவூரிலுள்ளவர்களுக்கு அந்யசேஷத்வத்தை அறுக்கையாலுண்டான ஹர்ஷோத்ரேகத்தையும் திருமேனியின் புகரையும்சொல்லுகிறது. பொறுத்தமலை. தரித்துக்கொண்டு நின்றமலை. ஏழுநாள் ஒருபடிப்படச்சுமந்துகொண்டிறே நின்றது. வட்டத்தடங்கண்மடமான்கன்றினை. †வட்டணித்துப்பெருத்தகண்களையும், தாயினுடையவசத்திலே யொழுகும் பவ்யதையையுமுடைத்தான மான்கன்றை. வலைவாய்பற்றிக்கொண்டு. வலையிடத்தேபிடித்துக்கொண்டு. அம்மலைமேல் வர்த்திக்கிற குறவர், மான்கன்றுகளை சூழ்வலைக்குள்ளாக்கிப்பிடித்துக்கொண்டுபோய், தங்களிடங்களிலே குறப்பெண்கள்கையிலே காட்டிக்கொடுப்பராக்களாய்த்து. குறமகளிர்கோட்டைத் தலைப்பால்கொடுத்து வளர்க்கும். அந்தக்குறப்பெண்களானவர்கள் பஞ்சுச்சுருளைப் பாலிலேதோய்த்து, அதினுடைய தலையை தாய்முலைபோலே உண்ணக்கொடுத்து வளர்ப்பராக்களாய்த்து. கோட்டை - பஞ்சுச்சுருள். கோவர்த்தநமித்யாதி. புல்லும் தண்ணீரும் எப்போதுமுண்டாய், பசுக்களை வர்த்திப்பித்துக்கொண்டு போருகையாலே "கோவர்த்தநம்" என்கிற பேரையுடைத்தாய், நலியவந்தவர்ஷத்தை ஐயித்து ஒருவர்மேல் ஒருதுளிவிழாதபடி கவிந்துநிற்கையாலே "கோவர்த்தநமென்னும் கொற்றக்குடை" என்கிறது. ... ...

(க) "கோவர்த்தநோஸ்மி." † வட்டணித்து - வர்த்துலமாய்.

மூ.—வழுவொன்றுநில்லாச்செய்கை வானவர்கோன் வலிப்பட்டுமுனிந்து விடுக்கப்பட்ட
மழைவந்தெழுநாள் பெய்துமாத்தடைப்ப மதுசூதனெடுத்துமறித்தமலை
265 இழுவுதரியாததோரிற்றுப் பிடியிளஞ்சீயந்தொடர்ந்து முடுகுதலும்
குழவியிடைக்காலிட்டெதிர்ந்துபொருங் கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. உ

பதவுரை.

ஒன்றும் வழு இல்லா — இந்த்ரபட்டம் பெறுதற்குச் செய்த ஸாதநாம்சத்திலொன்றும் நழுவுதலில்லாத
செய்கை— செய்கைகளையுடைய
வானவர் கோன்— தேவேந்த்ரனுடைய
வலிப்பட்டு— வசத்திலிருக்குமவனுப்
முனிந்து— (ஆயிரம் கண்களும் சிவக்கும் படி) கோபித்து
விடுக்கப்பட்ட— ஏவப்பட்ட
மழை— மேகங்களானவை
வந்து— வந்து
எழுநாள்— ஏழுநாள்
பெய்து— வர்ஷித்து
மாத்தடைப்ப— கோ, கோபாதிகள் புறம்பு போக்கறும்படி தகைவைப்பண்ண
மதுசூதன்— மதுவைநிரஸித்த கண்ணன்
எடுத்து— ஆயாஸமின்றி எடுத்து
மறித்த— தலைகீழாகப் பிடித்த
மலை— மலையாவது;
இளசீயம்— சிங்கக்குட்டியானது
தொடர்ந்து— (யானைக்குழவியை நலிவதாகத்) தொடர்ந்து
முடுகுதலும்— கிட்டினவளவிலே
இழவு— தன்குழவிக்கு வரும்துன்பத்தை
தரியாதது— ஸஹித்திருக்கமாட்டாத
ஓர்— ஒரு
ஈற்றுப்பிடி—ஈன்ற பெண்ணானையானது,
குழவி— தன்குட்டியை
காலிடை— நாலுகால்களுக்கும் நடுவே
இட்டு— அடக்கிக்கொண்டு
எதிர்ந்து— அந்த சிங்கக்குட்டியோடெதிர்ந்து
பொரும்— போர்செய்யா நிற்கிற
கோவர்த்தனமென்னும் கொற்றக்குடையாம்.

வ்யா. இரண்டாம்பாட்டு. வழுவித்யாதி. இந்த்ரபத ப்ராப்திக்குறுப்பான ஸாதநத்தில் ஒன்றும் நழுவுதலில்லாதபடிசெய்து. அத்தாலே த்ரயஸ்த்ரிம்சத்கோடி தேவர்களுக்கு நிர்வாஹகனான இந்த்ரனுடைய வலியிலே அகப்பட்டு, இத்தால் - மேகங்களுக்கு அவன்சொன்னது செய்தே நிற்கவேண்டும்படியான பாரதந்த்ரியம் சொல்லுகிறது. முனிந்து விடுக்கப்பட்ட. அவன் பலதிலே யகப்பட்டு நிற்கிறவளவன்றிக்கே * பழநடைசெய் மன்னர் விதியில் பூசனிபறுமையாலே தாமரைக்காடு வெடித்தாற்போலே ஆயிரங்கண்ணும் சிவக்கும்படி கோபித்து ஏவப்பட்ட. மழைவந்து. புஷ்கலாவர்த்தகாதி மேகங்களானவைவந்து. எழுநாள்பெய்து மாத்தடைப்ப. ஒருநாளிரண்டு நாளன்றிக்கே, ஏழுநாளொருபடிப்படக் கல்வர்ஷமாக வர்ஷித்து, பசுக்களுக்கும் இடையரிடைச்சிகளுக்கும் புறம்பு போக்கறும்படி தகைவைப்பண்ண. மதுசூதனெடுத்துமறித்தமலை. விரோதிநிரஸந சீலனவன் எடுத்து, பசுக்கள் எட்டிமேய்ந்து நிற்கலாம்படி தலைகீழாகமறித்தமலை. இழவுதரியாத தோரிற்றுப்பிடி குழவியிழவுதரிக்க மாட்டாததொரு ஈன்றபெண்ணானையானது. இளஞ்சீயம் தொடர்ந்துமுடுகுதலும். வயஸ்ஸாலிளைய ஸிம்மமானது இத்தை நலிவதாகத் தொடர்ந்துவந்து முடுகினவளவிலே. குழவியிடைக்காலிட் டெதிர்ந்துபொரும். தன்கன்றைத் தன்னுடைய நாலுகாலுக்கும் நடுவே யிட்டுக்கொண்டு, அந்த ஸிம்மக்கன்றோடே எதிர்ந்து பொராநிற்கிற. கோவர்த்தனமென்னும் கொற்றக்குடையே. ... ...

மூ.—அம்மைத்தடங்கண்மடவாய்ச்சியரு மாயருமாரையுமலறி
$ எம்மைச்சரணென்று கோள்ளென்றிரப்ப விலங்காழிக்கை யெந்தையெடுத்தமலை
தம்மைச்சரணென்ற தம்பாவையரைப் புனமேய்கின்றமானினங் காண்மினென்று
கோம்மைப்புயக்குன்றர் சிலைகுனிக்குங் கோவர்த்தனமென்னுங் கொற்றக்குடையே.

பதவுரை.

அம்— அழகியதாய்
மை— அஞ்ஜநாலங்கர்தமாய்
தட— விசாலமான
கண்— கண்களையுடையராய்
மடம்— மடப்பத்தையு முடையரான
ஆய்ச்சியரும்— இடைச்சிகளும்
ஆன் ஆயரும்— கோரக்ஷணத்தையே தொழிலாகவுடையரான இடையர்களும்
ஆ நிரையும்— பசுக்களின் திரளும்
அலறி— வர்ஷபாதையால் வருந்திக் கூப்பிட்டு
எம்மை— "எங்களை
சரண் என்று— 'ரக்ஷிக்கக்கடவோம்' என்று
கொள் என்று— திருவுள்ளம்பற்றவேணும்" என்று
இரப்ப— ப்ரார்த்திக்க
இலங்கு— ஒளியையுடைய
ஆழி— திருவாழியாழ்வானை
கை— திருக்கையிலேந்தின
எந்தை— என் ஸ்வாமியானவன்
எடுத்த— (அவற்றைக்காக்க) எடுத்த
மலை— மலையாவது;
தம்மை— தங்களை
சரண் என்ற— ரக்ஷிக்கவேணுமென்றுபற்றின
தம் பாவையரை— தங்கள் பெண்களை (புனத்திலே ஸஞ்சரிக்கிறவர்களுடைய கண்களைக்கண்டு,)
புனம் மேய்கின்ற— "நம் புனத்தையழித்துமேய்கிற
மான் இனம்— மான்களின் திரளை
காண்மின்— பாருங்கள்"
என்று— என்றொருவர்க் கொருவர்காட்டி
கொம்மை— திரண்டிருண்ட
புயம்— தோள்களையுடைய
குன்றர்— பர்வதவாஸிகளான குறவர்
சிலை— வில்லை
குனிக்கும்— (அவர்கள்மேலே சரத்தை விடுவதாக) வளையாநின்றுள்ள
கோவர்த்தனமென்னும் கொற்றக்குடையாம்.

வ்யா. மூன்றும்பாட்டு. அம்மைத்தடமித்யாதி. வெறுப்புறத்திலே அழகியதாய், அதுக்குமேலே அஞ்சநத்தாலே அலங்கர்தமாய்ப் பெருத்திருந்துள்ள கண்களையும் ஸ்வாபாவிகமான மடப்பத்தையு முடையரான இடைச்சிகளும். ஆனயரும். கோரக்ஷணபரரான இடையரும். ஆநிரையும். அவர்களுக்கு ரக்ஷ்யமான பசுநிரையும். அலறி. (க) '. மெமெ வீஜ நவஜ்ஜுஜ்ஜீவாகுட்டி' என்றபடியே வர்ஷவேகத்தாலே க்லேசித்துக் கூப்பிட்டு. எம்மைச்சரணென்று கோள்ளென்றிரப்ப. எங்களை "ரக்ஷிக்கக்கடவோம்" என்று நீயே ரக்ஷகனாய் என்றுகொள்ளவேணு மென்றுப்ரார்த்திக்க. இலங்காழிக்கை யெந்தையெடுத்தமலை * கருதுமிடம் பொரவல்ல தேஜஸ்ஸையுடைய திருவாழியைத் திருக்கையிலே யுடையனான என்ஸ்வாமியானவன் இவற்றை ரக்ஷிக்கைக்காக வெடுத்தமலை. இப்போது, திருவாழியைத் திருக்கையிலே யுடையனனமை சொன்னது - இந்த்ரனைத் தலையறுத்துப் பொகடவல்ல பரிகரமுண்டாயிருக்க, "உண்பதுகொண்டநாம் உயிரையும் கொள்ளவொண்ணாது, அநுகூலனுக்குவந்த கலக்கமாகையாலே தானே தெளிந்துவிடுகிறன்" என்று தன்னுடைய

(க) "கோகோபீ ஜநஸங்குலம நீவார்த்தம்." * "சரணேன்றுகொள்" என்ற பாடமிருக்கவேணுமென்று வ்யாக்யாநசையால் விளக்குகின்றது.

ரஷ்யவர்க்கத்துக்கொருருவிவாராமல்மலையெடுத்துக்கொண்டு நின்றநீர்மையைச் சொல்லுகைக்காக. தம்மைச்சரணென்ற தம்பாவையரை. தங்களை "ரக்ஷகர்" என்று பற்றியிருக்கிற தங்கள்பெண்களை. புனமேய்கின்ற மானினங்காண்மினென்று. புனத்திலே வ்யாபரிக்கிறவர்கள் கண்களைக்காண, "நம்புனத்தை யழித்துமேய்கிற மானினம் பாரிகோள்" என்று ஒருவர்க்கொருவர்காட்டி. கோம்மைப்புயக் குன்றர்சிலுகுனிக்கும் அவர்கள்மேலே சரத்தைவிடுவதாக, பெரியதோளை யுடையான குன்றவர் விற்களை வளையாநின்றுள்ள. கோவர்த்தநமென்னும் கோற்றக்குடையே. ... ... கூ

மூ.—கடுவாய்ச்சினவெங்கட்களிற்றினுக்குக் கவளமெடுத்துக்கொடேப்பானவன்போல்
அடிவாயுறக்கையிட்டெழப்பறித்திட்டமரர்பெருமான் கொண்டுநின்றமலை
267 கடல்வாய்ச்சென்று மேகங்கவிழ்ந்திறங்கிக் கதுவாய்ப்பட்டநீர்முகந் தேறியேங்கும்
குடவாய்படநின்று மழைபோழியுங் கோவர்த்தநமென்னுங் கோற்றக்குடையே.

பதவுரை.

கடு— கொடியதான
வாய்— வாயை யுடைத்தாய்
சினம்— மிக்க சீறுதலையுடைத்தாய்
வெம்— வெவ்விதான
கண்— கண்களையுமுடைத்தான
களிற்றினுக்கு— யானைக்கு
கவளம்— சோற்றுக்கவள்த்தை
எடுத்து— திரட்டி எடுத்து
கொடுப்பானவன்போல்— கொடுக்கும்போக
வனைப்போல்
அடிவாய்— மலையின் வேர்ப்பற்றிலே
உற— உறும்படியாக
கை— திருக்கையை
இட்டு— கீழே செலுத்தி
எழ பறித்திட்டு— இளரப்பிடுங்கி
அமரர் பெருமான்— தேவர்களுக்குத் தலை
வனான கண்ணன்
கொண்டு நின்ற— தாங்கிக்கொண்டுநின்ற
மலை— மலையாவது;
மேகம்— மேகங்களானவை
கடல்வாய் சென்று— கடலிலே போய்
இறங்கி— அதன் கரையிலே இறங்கி
கவிழ்ந்து— கவிழ்ந்து கிடந்து
கதுவாய்ப்பட— (கடல்)வெறுந்தரையாம்படி
நீர்— அங்குள்ள நீரையெல்லாம்
முகந்து— மொண்டுகொண்டு
ஏறி— ஆகாசத்திலேறி
எங்கும்— எல்லாவிடங்களிலும்
குடவாய்பட நின்று— குடத்திட்டுச் சொரி
ந்தாற்போலே நின்று
மழை பொழியும்— மழைபொழியாகிற்கிற
கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையாம்.

வ்யா. நான்காம்பாட்டு. கடுவாய்ச்சினவெங்கண் களிற்றினுக்கு. கொடியவாயையும் கோபத்தையும் வெவ்விய கண்ணையுமுடைய யானைக்கு. கவளமெடுத்துக் கொடுப்பானவன் போல், கவளத்தைத் திரட்டியெடுத்துக் கொடுக்கிற பாகனைவனைப்போலே. இத்தால் - மேகத்தை ஆனையினுடைய ஸ்தானேயாகவும், மலையைக்கவளத்தினுடைய ஸ்தானேயாகவும் அது எடுத்துப்பிடிக்கிற கர்ஷணைக் கவளமெடுத்துக் கொடுக்கிற பாகனுடைய ஸ்தானேயாகவும் ரூபித்துக் கொண்டருளிச் செய்கிறார். மேகத்தையானையென்கிறது - ஆனையோடி அதுக்குஸாம்ய முண்டாகையாலே; "மதயானைபோலெழுந்த மாமுகில்தான்" என்னக்கட வதிறே. "கடுவாய்ச்சின வெங்கண்களிறு" என்கையாலே - இங்கும் மத்தகஜமென்று

தோன்ற நின்றதிறம்: எங்ஙனேயென்னில்; கடுவாயென்று - க்ரூரமாயிருந்துள்ள பிளிறு கலிறு சப்தத்தையும் க்ரோதத்தையும், "வெங்கண்" என்று - சிவந்தபுப்புப்பறந்த கண்களையும் சொல்லுகையாலே. இத்தனையும் மேகத்துக்கு முண்டிறே; கேட்டவர்களுக்கு பயங்கரமாம் படியான முழக்கமும், அடர்த்துக்கொண்டு வர்ஷிக்கநிற்கிற ஆக்ரஹமும், "தீவளைத்து மின்னிலகும்" என்கிறபடியே கொள்ளிவட்டம் போலேயிருக்கிற மின்னினுடைய சுழிப்பையுமுடைத்தாய், இருட்சியாலும் திரட்சியாலும் உயர்த்திபாலும் கண்டவர்களுக்கு "மத்தகஜம்" என்றே சொல்லலாம்படி யிருக்கையாலே.

அடிவாயுறக்கையிட்டெழப்பறித்திட்டு: மலையினுடைய வேர்ப்பற்றிலே உறும்படியாகத் திருக்கையைக் கீழேசெலுத்தி மற்றத் திருக்கையாலே மேலேபிடித்துக் கிளரப்பிடுங்கி. அமரர்பெருமான் கொண்டுநின்றமலை. * அயர்வுமமரர்களதிபதி, இயற்றியில்லாதாரைப்போலே தானேதரித்துக் கொண்டுநின்றமலை. கடல்வாய்ச்சென்று மேகம்கவிழ்ந்திறங்கி. கடலிடத்தேசென்று மேகங்கள் இறங்கிக் கவிழ்ந்துகிடந்து. கதுவாய்ப்பட நீர்முகந்தேறி. கதுவாய்ப்பட வென்றது - வடுப்படலென்றபடி. வடுப்படுகையாவது - குறைபடுகை. இத்தால் - கடல்குறைபடும்படியாக அங்குள்ள நீர்களெல்லாவற்றையும் முகந்துகொண்டு ஆகாசத்திலே யேறியென்கை. அன்றிக்கே, கதுவுதல்-கவ்வுதலாய், அபிநிவேசயுக்தமானவாயை புடைத்தாய்க்கொண்டு "பெரும்பௌவம் மண்டியுண்ட" என்கிறபடியே கடல்வெறுந்தரையாம்படி. அங்குள்ளநீரை முக்ந்துகொண்டு ஏறியென்னவுமாம். எங்கும் சூடவாய்பட நின்று மழைபொழியும். ஸார்வத்ரிகமாய்க்கொண்டு சூடத்திட்டுச் சொரிந்தாற்போலே ஏழுகால் ஒருபடிப்பட நின்று வர்ஷத்தைச்சொரிகிற. கோவர்த்தநமென்னும் கோற்றக்குடையே. ச.

மூ.—வானத்திலுள்ளீர்வலியீருள்ளீரே லறையோவந்து வாங்குமினேன்பவன்போல்
ஏனத்துருவாகிய வீசனெந்தையிடவனெழ வாங்கியெடுத்தமலை
268 கானக்களியானை தன்கொம்பிழந்து கதுவாய்மதஞ்சோரத் தன்கையெடுத்துக்
கூன்பிறைவெண்டி யண்ணுந்துநிற்குங் கோவர்த்தநமென்னுங் கோற்றக்குடையே.

பதவுரை.

வானத்தில் உள்ளீர்— "மேலுலகங்களில் வஸிக்குமவர்களே!
வலியீர் உள்ளீரேல்— வல்லமையுள்ளவர்களாயிருந்தீர்களாகில்
அறை— ஜயஸூசகமான காவலிட்டு
வந்து— இவ்விடம் வந்து
வாங்குமின்— இம்மலையை யெடுத்துக்காணுங்கள்"
என்பவன் போல்— என்று சொல்லுமவன் போலே
ஏனம் உரு ஆகிய— வராஹவேஷங்கொண்டு,
பூமியை அண்டபித்தியினின்று மொட்டு விடுவித்தவனுய்
ஈசன்— ஸர்வநிர்வாஹகனுய்
எந்தை— எமக்கு ஸ்வாமியாயுள்ளவன்
இடவன்— மண்கட்டிபோலே
எழ— வேர்ப்பற்றேறே கிளரும்படி
வாங்கி— வாங்கி
எடுத்த— எடுத்துக்கொண்டு நின்ற
மலை— மலையாவது;
கானம்— காட்டிலே
களி— செருக்கித்திரிகிற
யானை— யானையானது
தன் கொம்பு— தன் தந்தத்தை
இழந்து—(கரைபொருதுதிரிகையாலே ஓரிடத்தில்குத்தண்டு முறிகையாலே) இழந்து

கதுவாய் — கொம்பு முறிந்து புண்பட்ட வாயிலே
மதம்- மதநீரோன்று
சோ— ஒழுகாநிற்க [த்து
தன் கை எடுத்து— தன் துதிக்கையையெடு
கூனல்— வளைந்திருந்துள்ள
பிறை—மூன்றாம் பிறையை[பிறை-சந்த்ரகலை]
வேண்டி — விரும்பி
அண்ணாந்து நிற்கும்—மேலே பார்த்துக்கொ
ண்டு நில்லாநிற்கிற
கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையாம்.

வ்யா. ஐந்தாம்பாட்டு. வானத்நித்யாதி. உபரிதநலோகங்களிலே வர்த்நிக்கையாலே மநுஷ்யரிற்காட்டில் அநிசயிதஜ்ஞாநசக்நிகராகத்தந்தாமை அபிமாநித்துக்கொண்டிருக்நிறவர்களே! நிணைத்தது செய்துமுடிக்கவல்ல சக்நியான்களாயிருப்பாருள்ளிகோஷாகில். அறையோவந்துவாங்குமினென்பவன்போல். "அறையோவறை! இம்மலையைவாங்கு, வாங்கிக் காணுங்கோள்" என்பாரைப்போலே. ஏனத்துருவாகியவீசனேந்நை. * லப்தத்வீபாப்நி மஹீதரையான பூமியிடியவிழுந்து கீழிலண்டபித்நிபோட சேர்த்துகிடக்க, நீருக்கும் சேற்றுக்குமிராபாத வராஹவேஷங்கொண்டு "ஊன்றியிடந்து எயிற்நிற்கொண்ட" என்கிறபடியே மறுபாடுருவக்குத்நி அண்டபித்நியினின்றும் நூட்டுவிடுவித்து ஆகாசத்நிலேயேறிட்டுத் நிருவெயிற்நிலேதரித்த சக்நிமானுய், தன்னையொழிந்த ஸமஸ்தபதார்த்தங்களும் தானிட்டவழக்காம்படி நடத்தவல்ல ஸர்வநியந்தாவாய், அவற்நினுடையஸத்தை ஸ்வாநுமாம் படியிருக்கும் ஸர்வகாரணபூதனனவன்.

இடவனெழவாங்கி யெடுத்தமலை. வேர்ப்பற்நிரோடே ஒருகட்டிபோலே கிளரும்படி வாங்கி யெடுத்துக்கொண்டுநின்ற மலை. இடவனெழுப்பறித்நிதன்னுதல், பேர்த்நிதன்னுதல்செய்யாதே, வாங்கியென்கையாலே அநாயாஸேந எடுத்தமைசொல்லுகிறது. பர்வதங்களோடேகூட பாதாளகதையான பூமியைத் நிருவெயிற்நிலேகுத்நி ஒட்டுவிடுவித்தெடுத்த சக்நிமானனவனுக்கு, ஒருகட்டியையிடந்தெடுத்தாற்போலே அம்மலையை யிடந்தெடுக்கையில் ஓரருமையில்லையிறே. கானக்களியானை தன்கொம்பிழந்து. காட்டிலேமநித்துத்நிரிகிறவானையானது கரைபொருதுநிரிகையாலே ஓரிடத்நிலே குத்நினவளவிலே தன்கொம்புமுறிய, அத்தாலே தன்கொம்பையிழந்து. கதுவாய்மதஞ்சோர. கதுவுதல்- விடப்படுதலாய். கொம்பு முறிந்து புண்பட்டவாயிலே மதஜலமொழுக. தன்கையித்யாதி. தன்னுற்றுமையாலே கையையெடுத்து வளைந்தபிறையை, தானிழந்தகொம்பாக ப்ரமித்து அத்கையபேக்ஷித்து மேலேபார்த்துக்கொண்டு நில்லாநிற்கும். கோவர்த்தநமென்னும் கொற்றக்குடையே. ...நு

மூ.—செப்பாடுடைய திருமாலவன்றன் சேந்தாமரைக்கைவிர லேந்தினையும்
கப்பாகமடுத்து மணிநெடுந்தோள் காம்பாகக்கொடுத்துக் கவித்தமலை
2ஏ9 எப்பாடும்பரந்நிழி தெள்ளருவியிலங்குமணி முத்துவடம்பிறழக்
குப்பாயமெனநின்று காட்சிதருங் கோவர்த்தநமென்னுங் கொற்றக்குடையே. கூ.

பதவுரை.

செப்பாடு உடைய— ஸௌந்தர்யகுணத்தையுடையனுய்
நிருமால்— ஸ்ரியஃபதியாய்
அவன்— அப்படிப்பட்டகுணத்தையுடையனவன்
தன்— தன்னுடைய

செம்தாமரை— செந்தாமரைப் பூப்போன்ற
கை— திருக்கையிலுள்ள
விரல் ஐந்தினையும்— ஐந்து விரல்களையும்
கப்பாக— மலையாகிற குடைக்குக் காம்படி
யிலுண்டான கப்பாகக்கொண்டு
மடித்து— செறித்து
மணி— நீலமணிபோன்றநிறத்தையுடைத்தாய்
நெடு— நெடியதாயிருந்துள்ள
தோள்— திருத்தோளை
காம்பாக— அக்குடைக்குக் காம்பாக
கொடுத்து— கொடுத்து
கவித்த— நலிகிழாகக் கவித்த
மலி— மலையாவது;
எப்பாடும்— எல்லாப்பக்கங்களிலும்
பரந்து இழி— பரவித் தங்குகிற
தெள் அருவி— தெளிந்த அருவிகளானவை
இலங்கு— விளங்காநின்றுள்ள
மணி— அழகிய
முத்த வடம்— முத்துவடம்போலே
பிறழ— தனித்தனியே ப்ரகாசிக்க
குப்பாயம் என நின்று— அதுதான் அவனுக்கோர் முத்துச்சட்டையென்று தோற்றும்படியாக நின்று
காட்சி தரும்— காட்சி கொடாநிற்கிற
கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையாம்.

வ்யா. அரும்பாட்டு. செப்பாடையதிருமால். செப்பாடாவது - செவ்வை. அதாவது - ஆர்ஜவகுணம். "திருமால்" என்கையாலே, இவ்விடத்தில் அந்த ஆர்ஜவமாவது * சிதகுரைத்தாலும் நன்றுசெய்தாரென்கை. அன்றிக்கே, இந்த்ரனுக்கிட்ட சோற்றைவிலக்கி மலைக்கிடுவித்து வர்ஷாபத்தைவிலக்கி "இவை பட்டது படுக" என்றிருக்கையன்றிக்கே, முன்பு "ரக்ஷகம்" என்று சொன்ன மலைதன்னையே யெடுத்து ரக்ஷித்த செவ்வைப்பாட்டைச் சொல்லுகிறது. இப்படி ரக்ஷிக்கைக்கடி அவனோடாட்டை ஸம்பந்தமாகையாலே "திருமால்" என்கிறது என்று இங்ஙனே யோஜிக்கவுமாம். அவன். அப்படிப்பட்ட குணத்தையுடையவன். தன்செந்தாமரைக்கைவிரலிலந்தினையும் கப்பாகமடித்து. தன்னுடைய சிவந்த தாமரைப்பூப்போலே யிருக்கிற திருக்கையில் விரல்களைந்தையும் மலையாகிற குடைக்குக் காம்படியிலுண்டான கப்பாகக்கொண்டு செறித்து.

மணிநெடுந்தோள் காம்பாகக்கொடுத்துக் கவித்தமலை. நீலரத்நம்போன்றநிறத்தையுடைத்தாய் நெடியதாயிருக்கிற திருத்தோளை அதுக்குக் காம்பாகக்கொடுத்து, பஞ்சலக்ஷம் குடியிலுள்ளார்க்கும் பசுக்களுக்கும் மழையால் நலிவு வராதபடியாகவும், பசுக்களுக்குச் சுவடுபடாத புல்லும்தண்ணீரு முண்டாம்படியாகவும் நலிகிழாகக்கவித்தமலை. எப்பாடும் பரந்திழி தெள்ளருவி. "சுனைவாய் நிறைநீர் பிளிறிச்சொரிய" என்கிறபடியே அவனைச்சூழ எல்லாபார்ச்வத்திலும் இடைவிடாமல் தங்குகிற தெளிந்த சுனைநீரருவிகளானவை. இலங்குமணி முத்துவடம் பிறழ. விளங்காநின்ற அழகிய முத்துவட்டம்போலே தனித்தனியே ப்ரகாசிக்க. குப்பாயமெனநின்று காட்சிதரும். "அதுதான் அவனுக்கொரு முத்துச்சட்டை" என்று தோற்றும்படியாக நின்று காட்சிகொடாநிற்கும். கோவர்த்தனமென்னும் கொற்றக்குடையே

மூ.—படங்கள்டலவுமுடைப் பாம்பரையன் படர்பூமியைத்தாக்கிக் கிடப்பவன்போல்
தடங்கைவிரலிலந்து மலரவைத்துத் தாமோதரன்றுங்குதடவரைதான்
அடங்கச்சென்றிலங்கையை யீடழித்தவனுமன்புகழ்பாடித் தங்குட்டன்களைக்
குடக்கைக்கொண்டு மந்திகள்கண்வளர்த்துங் கோவர்த்தனமென்னுங் கொற்றக்குடையே

270

பதவுரை.

படங்கள் பல‡ கண்டை—பலபடங்களையுடைய
பாம்பு அரைபன்— ஸர்ப்பராஜனானவன்
படர்— பரம்பின
பூமியை— பூமியை
தாங்கி கிடப்பவன் போல்— தன்தலைகளா
லே தாங்கிக்கொண்டு கிடக்குமாப்போலே
தட— இடமுடைத்தான
கைவிரல் ஐந்தும்— கையிலுள்ள ஐந்துவிர
ல்களையும்
மலரவைத்து— பரப்பிவைத்து
தாமோதரன்— தாமோதரனானவன்
தாங்கு— தாங்கிக்கொண்டுநின்ற
தட— பெரிய
வரை தான்— மலையாவது;
சென்று— ஆகாசவழியாலே போய்க்கிட்டி
இலங்கையை— லங்கையை
அடங்க— முழுதும்
சுடழித்த— கட்டழித்துப்பொகட்ட
அனுமன்— ஹநுமானுடைய
புகழ் — கீர்த்தியை
மந்திகள்— பெண்குரங்குகளானவை
பாடி— பாடி
தம்— தங்கள் தங்களுடைய
குட்டன்களை— குட்டிகளை
குடங்கை— உள்ளங்கையிலே
கொண்டு— ஏந்திக்கொண்டு
கண்வளர்த்தும்— சோட்டியுறங்கப்பண்ணு
நிற்கிற
கோவர்த்தன மென்னுங்கொற்றக்குடையே.

‡ "பலவும்" என்ற விடத்தில் 'உம்'சாரியை.

வ்யா. ஏழாம்பாட்டு. படங்களித்யாதி. பலபணங்களையுமுடைய நாகராஜன், பாப்பையுடைத்தான பூமியைத் தன்தலைகளாலே தரித்துக்கொண்டு கிடக்குமவன்போலே. தடங்கைவிரலைந்தும் மலரவைத்து. இடமுடைத்தான திருக்கையிலைந்துவிரலையும் மலரவைத்து. தாமோதரன்தாங்குதடவரைதான். ஓர்அபலைக்குக்கட்டவு மடிக்கவுமாம்படி யெளியனுப், அவள்கட்டினகட்டை யவிழ்த்துக்கொள்ள சக்தனுமன்றிக்கே யிருந்தவன் தரித்துக்கொண்டுநின்ற பெரியமலைதான். பஞ்சலக்ஷம்குடியும் வரிலுள்ள பசுநிரைகளு மெல்லாம் சேரவொதுங்கலாம்படியிறே மலையின்பரப்பு. தானென்று - அதின் கந்தையும் அதின் மேலுண்டான வ்ருக்ஷங்களையும் ம்ருகவிசேஷங்களையும் அந்நிலத்துக்கடைத்த மநுஷ்யரையு மெல்லாம் நினைக்கிறது.

அடங்கச்சென்றிலங்கையை யீடழித்த. தூர்க்கதர்யுக்தமாய், தேவர்கள்கொடுத்த வரபலத்தாலும் ராவணனுடைய புஜபலத்தாலும் ஒருவரால்சென்று அழிக்கவொண்ணாத படியிருக்கிற லங்கையையெல்லாம் "ஒதமாகடலைக்கடந்தேறி" என்கிறபடியே சென்று "உயர்கொள்மாக்கடிகாவையிறுத்து" இத்யாதிப்படியே கட்டழித்துப்பொகட்ட. அநுமன்புகழ்பாடி. ஹநுமானுடைய கீர்த்தியைப்பாடி. தம் குட்டன்களை. தந்தாமுடைய குட்டிகளை. குட்டனென்கிறது- ப்ரீதியாலே. குடங்கைக்கொண்டு. குடங்கைகளிலே யேந்திக்கொண்டு. மந்திகள் கண்வளர்த்தும். மந்திகளானவை சோட்டியுறங்கப்பண்ணுநிற்கும். மந்தி- பெண்குரங்கு. கோவர்த்தனமென்னுங் கொற்றக்குடையே. ... ... எ.

மூ.—சலமாமுகிற் பல்கணப்போர்க்களத்துச் சமரிபொழிந்தெங்கும் பூசலிட்டு
நலிவானுறக்கேடகங் கோப்பவன்போல் நாராயணன் முன்முகங்காத்தமலை
இலவேய்குரம்பைத் தவமாமுனிவரிருந்தார் நடுவேசென்றணுர் சோறியக்
கோலவாய்ச்சின வேங்கைகணின்றுறங்குங் கோவர்த்தனமென்னுங் கொற்றக்குடையே.

பதவுரை.

சலம்— நீர் கொண்டெழுந்த
மா முகில்— கார் மேகங்களுடைய
பல் கணம்— பல திரளானது.
போர் களத்து— யுத்த பூமியிலே
சரம் மாரி பொழிந்து— சரங்களை வர்ஷித்த தாற்போலே வர்ஷித்துக்கொண்டு
எங்கும்— இடைச்சேரியடங்கலும்
பூசலிட்டு— இடித்து முழங்கி யுத்தம்பண்ணி
நலிவான்— வருத்துவதாக
உற— ஒருப்பட்ட வளவிலே
கேடகம் கோப்பவன்போல்— கடகு கோத்துப் பிடிக்குமவன் போலே
நாராயணன்— நாராயணனனவன்
(திருக்கையி லெடுத்துக் கொண்டு,)
முன்— முந்திவருகிற
முகம்— வர்ஷமுகத்தினின்றும்
காத்த— ரக்ஷித்த
மலை— மலையாவது;
இலை வேய் குரம்பை— பர்ணசாலைகளில் வஸிக்கிற
தவம் மா முனிவர் இருந் தார் நடுவே சென்று } தபஸ்விகளாயிருந்த மஹர்ஷிகள் நடுவே சென்று
அணுர் சொறிய - தன்கழுத்தை அவர்கள் சொறிய
கொலை— கொல்லுகிற
வாய்— வாயையுடையதாய்
சினம்— கோபத்தையுடைத்தான
வேங்கைகள் புலிகளானவை
நின்று உறங்கும்— நின்றபடியே உறங்கா நிற்கும்
கோவர்த்தனமென்னுங் கோற்றக்குடையாம்.

வ்யா. எட்டாம்பாட்டு. சலமாமுகிலித்யாதி. பலதிரளாய்க்கடலே வரளாகப்பரு நீர்கொண்டெழுந்த மஹாமேகங்களானவை, யுத்தபூமியில் சரவர்ஷம்போலே வர்ஷித்து கொண்டு திருவாய்ப்பாடியில் ஊரோடு பசுக்கள் மேயுமிடத்தேதாடுவாசியற எங்கும் "எங்களைத் தப்பவல்லாருண்டோ" என்று இடித்து முழங்கிப் பூசலிட்டு நலிவதாகவொருப்பட்ட வளவிலே, அந்த சரவர்ஷத்தைத் தகைக்கக்குக் கடகுகோத்துப் பிடிக்குமவன்போலே ஸர்வ ரக்ஷகனன நாரர்யணன் தன்கையிலே யெடுத்துக்கொண்டு முந்திவருகிற வர்ஷமுகத்தைத் தகைந்தமலை. இலைவேய்குரம்பை. இலையாலே வேய்ந்தகுடில்; பர்ணசாலையென்றபடி. இத்தை வாஸஸ்தானமாக வுடையராயிருந்துள்ள. தவமாமுனிவர். தபோநிஷ்டரான மஹர்ஷிகள். இருந்தார்நடுவேசென்று. தபஸ்ஸுக்காக ஓரிடத்திலே திரளவிருந்தவர்கள் நடுவே சென்று. அணுர்சொறிய. "ஸர்வமும் பகவதாத்மகம்" என்று கண்டிருக்கையாலே ஒன்றிலு மொருபயமற்றிருக்குமவர்கள் தன் கழுத்தைச்சொறிய. கோலவாய்ச்சின வேங்கைகள் நின்றுறங்கும். கொல்லுகிறவாயையும் சினத்தையுமுடைத்தான புலிகளானவை அந்த ஸுகத்தாலேநின்று உறங்காநிற்கும். கோவர்த்தனமென்னுங் கோற்றக்குடையே. ... அ

மூ.—வன்பேய் முலையுண்டதோர் வாயுடையன் வன்றாணைனநின்றதோர் வன்பரத்தைத்
தன்பேரிட்டேக்கொண்டு தரணிதன்னிற் றுமோதரன் றுங்குதடவரைதான்
முன்பேவழிகாட்ட முசுக்கணங்கள் முதுகிற்பெய்து தம்முடைக்குட்டன்களைக்
கொம்பேற்றியிருந்து குதிபயிற்றுங் கோவர்த்தனமென்னுங் கோற்றக்குடையே. கூ

பதவுரை.

வன் பேய்— வலியளான பூதனையின்
முலை— (விஷந்தடவின) முலையை
உண்டது ஓர் வாய்உடையன் } உண்டதோரு வாயையுடையனும்

முன்பே— ஏற்கவே

வழி காட்ட— ஒரு இளையில் நின்றும் மற் றொரு இளையில் பாயும் வழி காட்டுகைக்காக

தம்முடை குட்டன்களை— தந்தம் குட்டி களை

முதுகில்— முதுகிலே

பெய்து— கட்டிக்கொண்டு போய்

கொம்பு— கொம்பிலே

ஏற்றி இருந்து— ஏற்றிவைத்து

குதி— ஒரு கொம்பில் நின்று மொரு கொம்பிலே தத்தும்படியை

பயிற்றும்— பழக்குவியாநிற்கிற

கோவர்த்தந மென்னுங் கொற்றக் குடையாம்.

வன் பரத்தை— வலிய பாரத்தைத் (தாங்கிக் கொண்டு)

நின்றது ஓர்— நின்றதொரு

வன் தூணினை— வலிய தூணைப்போலே

தன் பேர்— 'கோவர்த்தநன்' என்ற தன் பேரை

இட்டுக்கொண்டு— அந்தமலைக்கு இட்டுக் கொண்டு

தரணிதன்னில் — இந்நிலத்திலே

தாமோதரன்— ஆய்ச்சி யொருத்திக்குக் கட்டவு மடிக்கவுமாம்படி பவ்யனாயிரு ந்தவன்

தாங்கு— தாங்கிக்கொண்டு நின்ற

தூம் வரை தான்— பெரிய மலையாவது;

முசுக்கணங்கள்— (ஓர் வகைப்பட்ட) குரங்கு களின் திரளானவை

வ்யா. ஒன்பதாம்பாட்டு. வன்பேய்முலையுண்டதோர் வாயுடையன். வலிய பேயு டைய முலையுண்டதொரு வாயையுடையவன். பேய்க்கு வன்மையாவது-இவனுடைய மௌ க்த்யத்தையும் வடிவழகையும் கண்டவிடத்திலும் இளகாத நெஞ்சின்வலிமை. அன்றிக்கே, வன்மை முலைக்கு விசேஷணமாய்- அதின் விஷத்திலுடையக்ரௌர்யத்தைச் சொல்லவுமாம். நஞ்சேற்றின முலையிறே. ஓர்வாயென்றது- அந்த நஞ்சைப்பொறுத்து உண்கையாலும் அ வளை முடிக்கையாலும் அத்விதீயமானவாயென்றபடி. வன்தூணைனநின்றதோர் வன்பரத்தை வலியபாரத்தை தரித்துநின்றதொரு வலியதூணைப்போலே. "தரித்து" என்கிற விது வும் அத்யாஹாரியம்.

தன்பேரிட்டுக்கொண்டு. "கோவர்த்தநன்" என்கிற தன்பேரை அதுக்கிட்டுக்கொ ண்டு. தரணிதன்னில். தேசாந்தரங்களில் வ்யாவர்த்தி. அதாவது - பேரளவுடையான ப்ரஹ்மேசாதிகள்போல்வார்க்கன்றிக்கே, க்ஷுத்ரமநுஷ்யரும் காணலாம்படியான இந்நில த்திலே யென்றபடி. தாமோதரன். பெற்றதாய்க்குக் கட்டிவைக்கலாம்படி பவ்யனாயிருந்த வன். "வன்பேய்முலை யுண்டதோர் வாயுடையன்" என்றும், "தாமோதரன்" என்றும் சொல்லுகையாலே - பேய்த்தாயைமுடித்து ஆய்த்தாய்க்கு பவ்யனாயிருந்தபடி சொல்லு கிறது. தாங்குதடவரைதான். இப்படி யிருக்கிறவன் தரித்துக்கொண்டுநின்ற பெரிய மலை தான். முன்பேயித்யாதி. முசுக்கண்ங்களானவை ஏற்கவே பிணையோடுபிணையாயும்வழி காட்டுகைக்காகத் தந்தாமுடைய குட்டிகளை முதுகிலே கட்டிக்கொண்டுபோய், கொம்பிலே யேற்றியிருந்து ஒரு கொம்பில் நின்றும் ஒரு கொம்பிலே குதிக்கும்படியை, தான்முந்துறக் குதித்துக் காட்டி அப்யஸிப்பியாநிற்கும். கோவர்த்தநமென்னுங் கோற்றக்குடையே. ...கூ.

அ. பத்தாம்பாட்டு. கோடியித்யாதி. "மழைவந் தெழுந்தாள் பெய்து மாத்தடை ப்ப" என்கிறபடியே - ஏழுநாள் ஒருபடிப்பட வர்ஷிக்கிறவளவில் ரக்ஷ்யவர்க்கத்துக்கு ஒரு நலிவுவாராதபடி மலையையெடுத்து தரித்துக்கொண்டுநின்று ரக்ஷித்த ப்ரகாரத்தை யருளிச் செய்தார் - கீழ்; இப்படி யேழுநாள் மலையைச் சுமந்துகொண்டு நின்றவளவில் திருக்கையில் ஒருவாட்டமின்றிக்கே யிருந்தபடியை யநுபவித்து, மங்களாசாஸநபராகையாலே ப்ரீதராக யருளிச் செய்கிறார் - இதில்.

273

மூ.—கோடியேறு செந்தாமரைக் கைவிரல்கள் கோலமுமழிந்தில வாடிற்றில
வடிவேறுதிருவுகிர் நொந்துமில மணிவண்ணன் மலையுமோர் சம்பிரதம்
முடியேறிய மாமுகிற்பல்கணங்கண் முன்னேற்றி நரைத்தன போலவெங்கும்
குடியேறியிருந்து மழைபொழியுங் கோவர்த்தனமென்னுங் கொற்றக்குடையே. ய.

பதவுரை.

(அத்தை இவனெடுத்துக் கொண்டு நின்ற நிலையும்,)
ஓர் சம்பிரதம்— ஒரு கண்கட்டு வித்தை யாயிருந்தது!;
(அந்த மலை எது வென்ன;)
முடி— மலையின் சிகரத்திலே
ஏறிய— ஏறின
மா முகில்— பெரிய மேகங்களின்
பல் கணங்கள்— பல திரள்களானவை
முன் நெற்றி— தங்கள் நெற்றியின் முற் பாகமான து
நரைத்தன போல— நரைத்தாப்போலே
எங்கும்— எல்லா விடங்களிலும்
குடி ஏறி இருந்து— குடியேறியிருந்து
மழை பொழியும்— மழை சொரியா நிற்கிற
கோவர்த்தன மென்னும் கொற்றக் குடைபாம்.

கோடி ஏறு— த்வஜத்தை சேகாரூபமாக கரித்துக்கொண்டிருப்பதாய்
செந் தாமரை— செந்தாமரைப்பூப் போன்ற
கை விரல்கள்— திருக்கைகளும் திருவிரல் களும்
(ஏழுநாள் ஒரு படிப்பட மலையைச் சுமந்து கொடு நின்ற வளவிலும்,)
மேனி மும்— இயற்கையான அழகும்
அழிந்தில— அழிந்தனவில்லை;
வாடிற்றில— வாட்டத்தையு மடைந்தன வில்லை;
வடிவு ஏறு— அழகுமிக்கிருந்துள்ள
திரு உகிர்— திரு நகங்களானவை
நொந்தும் இல— நொந்தனவுமில்லை;
மணி வண்ணன்— நீலரத்நவர்ணனை கண்ணனெடுத்த
மலையும்— கோவர்த்தந கிரியும்

வ்யா. பத்தாம்பாட்டு. கோடியேறு செந்தாமரைக் கைவிரல்கள். (க) "யுஜவ ஜுஷ் கூடஹிஹ்ந வாணிநா" என்கிறபடியே ஐச்வர்யஸுசகமான த்வஜவஜ்ராதி சிஹ்நங் களை ரேகாரூபேண உடைத்தாயிற்ற திருக்கைதானிருப்பது; அதுக்கெல்லா முபலக்ஷணமாக த்வஜமொன்றையு மருளிச்செய்கிறார். த்வஜத்தை ரேகாரூபேண தரித்துக்கொண்டிருப்பதாய், நிறத்தாலும் செவ்வியாலும் மார்த்தவத்தாலும் செந்தாமரைபோலே யிருக்கிற திருக்கையும் திருவிரல்களும். கோலமுமழிந்தில வாடிற்றில. ஏழுநாள் ஒருபடிப்பட மலையைச் சுமந்துகொண்டு நின்றவளவில், ஸ்வாபாவிகமான வழகும் அழிந்தனவில்லை; ப்ரம பொறுமையாலே தளர்ந்து வாட்டத்தையடைந்தனவுமில்லை. வடிவேறுதிருவுகிர் நொந்துமில. அழகுமிக்கிருந்துள்ள திருவுகிர்களானவை நொந்தனவுமில்லை.

(க) "த்வஜ வஜ்ராப்ஜ சிஹ்நேந பாணிநா"

மணிவண்ணன்மலையு மோர்சம்பிரதம். நீலரத்நம்போலே யிருக்கிற வடிவையுடைய வன் எடுத்தமலையும், அதனையிவனெடுத்து நின்ற நிலையும் ஒரு இந்த்ரஜாலம். அதாவது - மலையையெடுத்துச் சுமந்து கொடுநின்றது மெய்யாகில் அதின்கார்யமான விக்நநிவ்ருத்தி யொன்று நிருக்கையிலே காணவேண்டாவோ? அதில்லாமையால் இதொரு கண்கட்டு வித்தை போலே யிருப்பதொன்றென்னை. எடுத்த நிருக்கையில் ஒரு விக்நநிவ்ருத்தியாலே இந்த்ரஜாலமென்ற வித்தனையொழிய, அது பரமார்த்தமென்னுமிடத்தை நளிர்ச்சொல்லிமேல் முடியித்யாதி. மலையின்கொடு முடியிலேயேறின மஹா மேகங்களினுடைய பலவகைப்பட்ட ஸமூஹங்களானவை. முன்னேற்றி நரைத்தனபோல வெங்குங் குடியேறியிருந்து மழைபொழி யும். அதினுடைய முன்னெற்றி நரைத்தாற்போலே சூழக் குடியேறியிருந்து லோகத்துக் கெல்லாம் ஜல ஸம்ருத்தியுண்டாம்படி வர்ஷத்தைச் சொரியாநிற்கும். வர்ஷியாமல் வெளுத் திருக்கும் காலத்திலும் வஸ்துவ்யதிரேகம் மலைத்தலைபோல மாகைபாலே "முன்னெற்றி நரை த்தனபோல வெங்கும் குடியேறியிருந்து" என்கிறது. இப்படி மேகங்களிருந்து வர்ஷியா நிற்கும். கோவர்த்தநமென்னும் கோற்றக்குடையே. ஆகையால் இந்த்ரஜாலமன்று, பரமார் த்தமென்னை. ... ... இ.

அ.—நிகமத்தில், இத்திருமொழி கற்றார்க்கு பலம்சொல்லித் தலைகட்டுகிறார்.

மூ.—அரவிற்பள்ளிகொண்டரவந்துரந்திட் டரவப்பகையூர்தியவனுடைய
குரவிற்கோடி முல்லைகணின்றுறங்குங் கோவர்த்தநமென்னுங் கோற்றக்குடைமேல்
திருவிற்போலி மறைவாணர்புத்தூர்த் திகழ்பட்டர்பிரான் சொன்னமாலைபத்தும்
பரவுமனங்குடைப் பத்தருள்ளார் பரமான்வைகுந்த நண்ணுவரே. கக.

பதவுரை.

அரவில்— திருவனந்தாழ்வான் மேலே
பள்ளிகொண்டு— (க்ஷீராப்திபிலே) பள்ளி கொண்டு
(அத்தைவிட்டு, ஆய்ப்பாடியில் வந்தவதரித்து,)
அரவம்— காளியநாகத்தை
துரந்திட்டு— ஓட்டிவிட்டு
அரவம்— ஸர்ப்பஜாதிக் கெல்லாம்
பகை— பகையான பெரிய திருவடியை
ஊர்தியவனுடைய— வாஹநமாக வுடைய வனுடைய
குரவில்— குரவமரத்திலே
கொடி— கொடியாய்ப் படர்ந்து கிடக்கிற
முல்லைகள்— முல்லைகளானவை
நின்று— நிலைபெற்று
உறங்கும்— உறங்கும்படி யிருப்பதாய்
கோவர்த்தநம் என்னும்— கோவர்த்தந மென்னும் திருநாமத்தை யுடைத்தாய்
கொற்றம்— மழைதடுத்த வெற்றியை யுடைத்தான
குடைமேல்—குடையான பர்வதவிஷயமாக
திருவின்— வைஷ்ணவ ஸ்ரீயால்
பொலி— விளங்கா நின்றவர்களாய்
மறை— வேதத்துக்கு
வாணர்— வ்யாஸபதம் செலுத்த வல்ல ரானவர்கள் வர்த்திக்கிற
புத்தூர்— ஸ்ரீவில்லிபுத்தூரில்
திகழ்— விளங்கா நின்றுள்ள
பட்டர்பிரான்— பெரியாழ்வார்
சொன்ன— அருளிச்செய்த
மாலை— சொல் மாலையான
பத்தும்— இப்பத்துப் பாசுரங்களையும்
பரவும்— பரவும்படியான
மனம்— மநஸ்ஸை
நன்கு— நன்றாக
உடை— உடையவர்களாய்
பத்தர் உள்ளார்— பக்திமான்களா யுள்ள வர்கள்
பரமான— எல்லாவற்றுக்கும் மேலான
வைகுந்தம்— ஸ்ரீ வைகுண்டத்தை
நண்ணுவர்— அணுகப் பெறுவர்கள்.

வ்யா. அரவிற்பள்ளிகொண்டு. மென்மை குளிர்த்தி நாற்றங்களோ ப்ரக்ருதியாக வுடைய திருவனந்தாழ்வான்மேலே திருப்பாற்கடலிலே பள்ளிகொண்டு. அரவம் துரந்திட்டு. (க) "காலவாழ்ஜீவிஷ்ணுஜ்ஞாஜ்ஞாஹ்யாமதஃ" என்கிறபடியே அப்படிக்கையை விட்டுப்போந்து அவதரித்த விடத்திலே கோபஜாதியும் கோக்களும் கண்ணீர்குடிக்கிற மடி வை விஷதூஷிதமாக்கிக் கொண்டுகிடந்த காளியனென்ற ஸர்ப்பத்தை அங்குநின்று மோட்டி விட்டு. அரவப்பகையூர்தியவனுடைய. "அரவம்" என்கிறஜாதிக்கெல்லாம் பகையான பெரியதிருவடியை வாஹகமாக நடத்துகிறவனுடைய.

குரவிலித்யாதி. "குரவு" என்கிற வ்ருக்ஷத்திலே கொடியாய்ப் படர்ந்துகிடக்கிற முல்லைகளானவை நின்றுறங்கும்படி யிருப்பதாய், கோவர்த்தனமென்கிற திருநாமத்தையுடைத்தாய், வர்ஷத்தைத் தகைகைக்குக் கொற்றக்குடையான பர்வதவிஷயமாக. "குரவத் கொடிமுல்லைகள்" என்றுபாடமானபோது - குரவாகிய வ்ருக்ஷமும் அதின்மேலே படர்ந்த கொடியான முல்லையும் நின்றுறங்குமென்று பொருளாகக்கடவது. திருவிற்பொலிகித்யாதி. ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயால் மிக்கு வேதத்துக்கு வ்யாஸபதம் செலுத்த வல்லானவர்கள் வர்த்திக்கிற ஸ்ரீவில்லிபுத்தூரில் ஸர்வோத்தரராய்க்கொண்டு விளங்காநின்றுள்ள பெரியாழ்வாருளிச்செய்த சப்தஸந்தர்ப்பமான விப்பத்தையும். பரமனநன்குடைப்பத்தருள்ளார். ப்ரீதி பரவசராய்க் கொண்டுபேசும் நல்லமநஸ்ஸையுடைய பக்தோத்தமன்களாயுள்ளவர்கள். பரமவைகுந்தம் நண்ணுவரே. தங்களுடைய ஜ்ஞாந ப்ரேமாதிகுணமாக பகவதநுபவைகாந்த்யங்களிலே அந்வயித்து * அடியார்கள் குழாங்களோடுகூடி வாழலாம்படியிருக்கும் ஸர்வோத்தரமான ஸ்ரீவைகுண்டத்தை ப்ராபிக்கப்பெறுவர். ... ... கக.

பெரியஜீயர் திருவடிகளேசரணம்.

அடிவரவு.—அட்டு வழு வம்மை கடு வான் செப்பாடு படம் சலம்
வன்பேய் கோடியரவில் நாவல்.

(*)

ஆ - திருமொழி, உச - க்கு, பாட்டு - உசுஉ.

மூன்றும்பத்து- ஆறாந்திருமொழி- நாவலம்பெரிய, ப்ரவேசம்.

அ.—நாம்பிறந்து வளருகிறவூரிலே "ஒருத்ரவ்யத்தை ஒரு தேவதாந்தரத்துக் கிடுகையாவதென்" என்று இந்த்ரனுக்கிடுகிற சோற்றைவிலக்கி மலைக்கிடுவித்து அத்தையண்டையத் தானமுதுசெய்து விடுகையாலே அவன் (உ)க்ருத்தனுய், திருவாய்ப்பாடியை யழிப்பதாக புஷ்கலாவர்த்தகாதி மேகங்களேயேவிக் கல்வர்ஷத்தை வர்ஷிப்பிக்க, "கல்லெடுத்துக் கன்மாரி காத்தாய்" என்கிறபடியே கோவர்த்தநோத்தரணம்பண்ணி, அந்தவர்ஷத்தை ரக்ஷயவர்க்கத்தின்மேலே விழாதபடி நோக்கின திவ்யசேஷ்டிதரஸத்தையநுபவித்தார் - கீழ்; "குழல்

(க) "நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்யஹ்யாகதஃ." (உ) கூடலுய்.

கோவலர்" என்கிறபடியே - கோபர்க்குக் குழலூதுகை ஜாத்யுசித வ்ருத்தியாகையாலே, ஸ்ரீ நந்தகோபர் திருமகனுகையாலே தானும் அந்தவ்ருத்தியிலே யதிகரித்துப் பலகாலும் குழலூதிக் கொண்டு போருமவனுகையாலே, ஒருநாள் ஸ்ரீப்ருந்தாவநத்திலே நின்று திருக்குழலூயுத. அந்தக்குழலோசைவழியேயுவதிகளான ஸ்ரீகோபிமாரிலேசிலர் தங்கள்பந்துக்கள் பண்ணிவைத்த காவல்களையும் கடந்து இவன் நின்றவிடத்தேவந்து சூழ்ந்துகொண்டு நின்ற படியையும், வேறுசிலர் அரைகுலைய தலைகுலைய வோடிவந்து ஸ்த்ரீத்வம் பின்னிட்டின படியாலே ஒடுங்கி நெகிழ்ந்தவுடையை ஒரு கையாலே தாங்கி இவனளவிலே கண்ணோட நின்ற படியையும், உபரிதநலோகவர்த்திகளான ஸ்த்ரீகள் இக்குழலோசையைக் கேட்டுவந்து திரண்டு நெஞ்சுருகி, கள்ளக்பனிக்கை முதலான விக்ரிகளோடே இதிலே செவிமடுத்துக்கொண்டு நின்றபடியையும், மேருகை திலோத்தமை முதலான நர்த்தகீத பரைகளாய்த் திரியும் அப்ஸரஸ்ஸுக்கள், உலாவியுலாவிக் குழலூதுகிற இவனுடைய வடிவையும் குழலோசையையும்கண்டு, "நாமும் சிலராபாடிப்பாடித் திரிகிறோமே" என்று லஜ்ஜித்து அவிவழிந்து தந்தாமுடைய ஆடல்பாடல்களைத் தாங்களே மாறினபடியையும், ஸுதத்தபாராய்த் திரியும் தும்புருநாரதரும் கிந்நரமிதுனங்களும் இந்தக்குழலோசையினுடைய ரஸத்திலே யீடுபட்டுத் தந்தாமுடைய வீணையைமறப்பார் கிந்நரம்திதாடோ மென்பாரான படியையும், ஆகாசசாரிகளான ¶காந்தப்பரெல்லாரும் அம்ர்தம்போலேயிருக்கிற இக்கீதவலியிலே யகப்பட்டு சிலராய்க் கைமறித்து நின்றபடியையும், தேவர்களெல்லாரும் தங்கள் ஒளிர்ப்போ ஜுக்தைமறந்து திருவாய்ப்பாடி நிறையவந்து திரண்டு இக்குழலோசையினுடைய ரஸத்தை புஜித்து இவனிடமே சின்பற்றித் திரிந்தபடியையும், பக்ஷி ஜாலங்கள் தந்தாம் கூட்டை விட்டுவந்து சூழ்ந்து படுகாடுபோலே கிடந்தபடியையும், பசுத்திரள்கள் இக்குழலோசை யைக்கேட்டு பரவசமாய்க் கால்களைப்பரப்பித் தலைகளை நாற்றிக் கொண்டு செவியை யசைக்கவும் மாட்டாமல் நின்றபடியையும், மான்திரள்களானவை மேய்கைமுதலான வற்றைமறந்து நிச்சலமாய்க்கொண்டு சித்ரார்ப்பிதங்கள்போலே நின்றபடியையும், அசேதநமான மரங்களானவை சேதநங்களிலுங் காட்டில் அத்யாச்சர்யமாம்படி ஈடுபட்டபடியையும் தனித்தனியேபேசி அவனுடைய திருக்குழலோசையினுடைய வைசித்ரியை யநுபவிக்கிறார் - இத்திருமொழியில். ... ...*

மூ.—நாவலம்பெரிய தீவினில்வாழு நங்கைமீர்களிதோ சற்புதங்கேளீர்
தூவலம்புரியுடைய திருமாறுயவாயிற் குழலோசைவழியே
கோவலர்சிறுமிய ரிளங்கொங்கை குதுகுலிப்ப வுடலுளவிழ்ந்தெங்கும்
காவலுங்கடந்து கயிறுமாலையாகிவந்து கவிழ்ந்துநின்றனரே.

பதவுரை.

பெரிய— பெரிதாயிருந்துள்ள
நாவல ‡ தீவினில்— ஜம்பூத்வீபத்திலே
வாழும் — வாழாநின்றிருந்துள்ளவர்களாய்
நங்கைமீர்கள்— ஒன்றிலுங் குறைவில்லாத வர்களே!
இது ஓர்— இதொரு
அற்புதம்— ஆச்சர்யத்தை
கேளீர்— கேளுங்கோள்;
தூ— சுத்தமான
வலம்புரி உடைய— ஸ்ரீபாஞ்சஜந்யத்தைத் திருக்கையிலே உடைய

‡ "நாவலம்" என்றவிடத்தில் 'அம்' சாரியை.

காந்தப்பர்- கந்தர்வர்.

திரு மால்— ஸ்ரீயஃபதியானவன்
தூய— போக்யமான
வாயில்— திருப்பவளத்தில் வைத்து ஊது
கிற
குழல்— முரளியினுடைய
ஓசை—வழியே— இசையின் மார்க்கமாக
கோ வலர்— இடையருடைய
சிறுமியர்— சிறுப் பெண்களானவர்கள்
இள— பக்குவமாயிருந்துள்ள
கொங்கை— தங்கள் ஸ்தனங்களான்னவை
குதுகுலிப்ப— நாங்கள் முன்னே போகிறே
மென்று நெறித்து குதூஹலம் பண்ண

உடல்— சரீரமும்
உள்— நெஞ்சும்
அவிழ்ந்து— கட்டுக்கொலைந்து
எங்கும்— எங்குமுள்ள
காவலும்— காவலையும்
கடந்து— அதிக்ரமித்து
கயிறு மாலை ஆகி வந்து } கயிற்றில் ஒழுங்குபடச் சேர்ந்த மாலைகள் போலே
கிரள் திரளாகவந்து
கவிழ்ந்து நின்றனர்— (அவனைக் கண்ட வாறே லஜ்ஜித்துக்) கவிழ்தலையிட்டு நின்றார்கள்.

வ்யா. முற்றப்பாட்டு. நாவலம்பெரியதீவினில். நாவலையுடைத்தான பெரியதீவிலே. த்வீபாந்தரங்களோடு பெருமைபையுடைய ஜம்பூத்வீபத்திலே யென்றபடி. இந்தத்வீபத்திலுடைய வைபவம் வேறொரு த்வீபத்துக்கில்லையிறே. அதாவது - த்வீபாந்தரங்களெல்லாம் (ந) போகபூமியாயிருக்கு மித்தனையிறையுள்ளது; ஆர்ஜவபூமியுள்ளது இதிலேயிறே; இதுதன்னிலும் நலமகண்டமான பாரதவர்ஷமிறே ஆர்ஜவபூமியாயிருப்பது; வர்ஷாந்தரங்களும் (க) போகபூமிகளித்தனையிறே; அப்படியிருந்த தாகிலும் பாரதவர்ஷ ப்ராதான்யத்தைப் பற்ற த்வீபாந்தரங்களிற் காட்டில் இந்தத்வீபத்துக்கு ஏற்றம்சொல்லக் குறையில்லை; த்வீபாந்தரங்களில் போகங்களுக்கும் உபரிதநபாதாள லோகங்களில் போகங்களுக்கும் மோக்ஷத்துக்கும் லாதநாதுஷ்டானம் பண்ணலாவது இங்கேயாகையாலும், இவ்ய தேசங்களும் முமுக்ஷுக்களும் ப்ராசுர்யேணவுள்ளது இங்கேயாகையாலும் இந்த பாரதவர்ஷத்தோடே கூடியிருக்கையாலே ஜம்பூத்வீபத்தை "பெரியதீவு" என்றருளிச்செய்கிறார். வாழும்நங்கைமீர்கள். அவனவதரித்த தேசத்திலேபிறந்து அவனுடைய அவதாரகுண சேஷ்டிதங்களையெல்லாம் அநுபவிக்கையாகிற வாழ்வையுடையராய், அதுக்கீடான ஜ்ஞாநப்ரேமங்களால் பூர்ணைகளாயுள்ளவர்களேயென்று தாமும் கோபஜந்மத்தை ஆஸ்தாநம்பண்ணினவராகையாலே திருவாய்ப்பாடியிலுள்ளாரோடு ஸஜாதீயராய்நின்று அங்குத்தை விசேஷஜ்ஞைகளான ஸ்த்ரீகளிலே சிலரை ஸம்போதித்து அருளிச்செய்கிறு ரென்னுதல்; அன்றிக்கே, (க) "ஸவவவாஸுதேவோஸௌ ஸாகூஸாதபுருஷ உச்யதெ । ஸ்த்ரீப்ராயமிதரத்ஸர்வம்" என்கிறபடியே பகவத்வ்யதிரிக்தசெல்லாரையும் ஸ்வாதந்த்ர்யகந்தரஹிததயா ஸ்த்ரீப்ராயரென்றுநிரூபித்து ஜம்பூத்வீபத்தில் பகவதநுபவ பரரான விசேஷஜ்ஞரையடைய "நங்கைமீர்" என்று ஸம்போதிக்கிறாகவுமாம். இதோரற்புதம் கேளீர். இதோராச்சர்யம் கேளிகோள். நாவலம்புரியுடைய திருமால். நாய்தானவலம்புரியையுடைய ஸ்ரீயஃபதியானவன். இத்தால்— ப்ரதிகூலரை நிரஸிக்கவும் அநுகூலரைச் சேர்ப்பிக்கவும்வல்ல பரிகரத்தையுடையவனென்கை. ஸ்ரீபாஞ்சஜந்யத்துக்குத் தாய்மையாவது- சேஷிநிரூபணமறிந்து கார்யம் செய்யவல்ல சுத்தி. இப்படியிருக்கையாலே தன்னுடைய த்வநிகொண்டே அவனுகந்தார் வாழவும் முனிந்தார் முடியவும் பண்ணநிற்குமாய்த்து. நாயவாயில் குழலோசைவழியே. திருப்பவளத்துக்குத்

(க) ஸோமலஸ்மிருதி.
(க) "ஸவவவாஸுதேவோஸௌ ஸாகூஸாதபுருஷ உச்யதெ— ஸ்த்ரீப்ராயமிதரத்ஸர்வம்

தாய்மையாவது-தன்னுடைய உத்தியோகஷங்களாலே அநுகூலரைவாழப்பண்ணவல்லவளுத்தி. இப்படியிருக்கிற திருப்பவளத்திலேவைத்து ஊதுகிற திருக்குழலோசைவழியே. அதாவது- 'கர்ஷணன்கிடாய் பெண்கள்கிடாய்' என்கிறவூராகையாலே, உறவுமுறையானவர்கள் பலவகைப்பட்ட அரண்களிலே பெண்களைக் கொடுபுக்குக் கட்டிக்கொடு கிடவாநிற்கச்செய்தே அவர்களெல்லாரையுமுறுக்கி, தங்கள் செவியிலே புகுந்து உணர்த்தி வாருங்கோள் என்பாரைப்போலே ஆகர்ஷிக்கிற குழலோசை வழிகாட்டவாய்த்து இவர்கள் தாங்கள் வந்தது. கோவலர்சிறுமியர். கோகுலத்திலே ஸமர்த்தரானவர்களுடைய சிறுபெண்கள். இளங்கோங்கை குதுகலிப்ப. தங்கள்வசத்தில் நில்லாதபடி பரிணதமான முலைகளானவை, தங்களைப்பிற்பாடரக்கி "நாங்கள் முன்னேபோகிறோம்" என்று கௌதுஹலம்பண்ண. இளங்கோங்கை. சொல்கேளா ப்ராயமாகளாய்த்து. குதுகுலிக்கையாவது-தவாதிசயத்தால்வந்த கிளப்பம். உடலுள்விழ்ந்து. கொங்கையில் குதுகுலிப்பு மாத்ரமன்றிக்கே கொங்கைக்கு ஆச்ரயமானசரீரமும், ஸர்வேந்த்ரியங்களுக்கும் ப்ரதாநமான மநஸ்ஸும் கட்டுக்கொலைந்து. எங்கும் காவலும் கடந்து. எங்குமுள்ள காவலையும்கடந்து. அதாவது- அறைகளுக்குள்ளேயிட்டுத் தாய்மார்மீண்டுக்கொண்டு கதவுகளையுமடைத்துப் புறக்காவலாக வேண்டும்படிக்கும் கிடக்க, அந்தக்காவல்களையெல்லாம் சூரூத்ரபாஷாணங்களைப்போலே ஒருசரக்காக நினையாமல் கடந்து. கயிறுமாலையாகிவந்து. கயிற்றிலே யொழுங்குபடச் சேர்த்தமாலைகள் போலே நிரைநிரையாகவந்து. கவிழ்ந்துநின்றனரே. இவனைச் சூழ்ந்துகொண்டுநின்றார்கள். அன்றிக்கே, குழலோசைவழியேவந்து இவனைக்கண்டவாறே லஜ்ஜித்துக் கவிழ்தலையிட்டு நின்றார்களென்னுதல்; எதிர்செறிக்கமாட்டாமல் கவிழ்தலையிட்டு நின்றார்களென்னுதல். க.

மூ.—இடவணரை யிடத்தோளோடுசாய்த் திருகைகூடப் புருவநெரிந்தேறக்
கூடவயிறுபட வாய்கடைகூடக் கோவிந்தன்குழல்கொ தினபோது
மடமயில்களோடு மான்பிணைபோலே மங்கைமார்கண் மலர்க்கூந்தலவிழ
உடைநெகிழ வோர்கையாற்றுகில்பற்றி யொல்கியோடரிக்க ணைடநின்றனரே. உ.

பதவுரை.

கோவிந்தன்— பசுமேய்க்கப் பெற்ற கண்ணன்
இட அணரை— இடப்பக்கத்து சமச்ருங்கத்தாநத்தை
இட தோளொடு சாய்த்து— இடத் திருத்தோளோடே சாய்த்து
இரு கை— இரண்டு திருக்கைகளும்
கூட— வேய்ங்குழலோடே சேரவும்
புருவம்— திருப்புருவங்களானவை
நெரிந்து ஏற— நெளித்து மேலே இளரவும்
வயிறு— திருவயிறானது
குடம் பட— குடம்போலே தோற்றவும்
வாய்— திருப்பவளமானது
கடை கூட— இரண்டருகும் குவிந்து வேய்ங்குழல் துளைகளளவாகவும்
குழல் கொடு— வேய்ங்குழலைக் கொண்டு
ஊதினபோது— ஊதினகாலத்திலே.
மடம்— மடப்பத்தையுடைய
மயில்களொடு மான் பிணை போலே } மயில்கள் போலவும் மான் பேடைகள் போலவும்
மங்கைமார்கள்— யுவதிகளான ஸ்த்ரீகள்
மலர்— பூக்களால் அலங்கரிக்கப்பட்ட
கூந்தல்— கேசபாசமானது
அவிழ— நெகிழ்ந்து அலையவும்
உடை— பரியட்டமானது
நெகிழ— நெகிழவும்
ஓர் கையால்— ஒரு கையாலே
துகில்— நெகிழ்ந்த அத்துகிலை
பற்றி— பிடித்துக் கொண்டு

ஒல்கி— (லஜ்ஜித்து) ஒடுங்கி
அரி ஓடி— செவ்வரி, கருவரிகள் ஓடின
ஓட— அவன் பக்கலிலே ஓட
நின்றனர்— நிகைத்து நின்றார்கள்.
கண்— கண்களானவை

வ்யா., இரண்டாம்பாட்டு: இடவணரையிடத்தோளோடு சாய்த்து. இடப்பார்ச்வத்தில் சமச்ருஸ்த்தாநத்தை இடத்திருத்தோளோடேசாய்த்து. இருகைகூட. இரண்டு திருக்கையும் திருக்குழலோடே சேர. புருவம்நெரிந்தேறி. திருப்புருவங்களானவை நெளித்து மேலெழுர. கூடவயிறுபட. திருவயிற்றிலே வாயுவைப்பூரித்து நிறுத்தித் திருப்பவளத்தாலே க்ரமசஃ விட்டு ஊதவேண்டுகையாலே திருவயிறு குடம்போலே தோற்ற. வாய்கடை கூட. திருப்பவளம் இரண்டருகும் குவிந்து திருக்குழல் துளைகளளவாக. கோவிந்தன்குழல் கோதினபோது. கோகுலத்திலே தீக்ஷிதனுய், அவை விலங்காமைக்கும் மேய்கைக்கும் மீளுகைக்கும் தகுதியாக வூதவல்லானுகையாலே "கோவிந்தன்" என்கிறது; அறியாதவனாகிலும் த்வநிவாய்ப்பாலே ஆகர்ஷகமாம்படியிருக்கையாலே "குழல்கொடு" என்கிறது. இத்தால்-ஊதுகிறவனுடைய ஸாமர்த்த்யமும், அதுக்கு உபகரணமான குழலினுடைய வைலக்ஷண்யமும் சொல்லிற்றாய்த்து. மடமயில்களோடு மான்பிணைபோலே. மடப்பத்தையுடைத்தான மயில்கள்போலவும், நோக்கையுடைத்தான மான்பேடை போலவும். "மயில்கள்" என்கிற பன்மைக்கீடாக, "மான்பிணை" என்கிற ஏகவசநமும்- ஜாத்யபிப்ராயமாய், பன்மையிலேயாகக்கடவது. மங்கைமார்கள். யுவதிகளான ஸ்த்ரீகள். மலர்க்கூந்தலவிழ. புஷ்பாதிகளாலே அலங்க்ருதமான குழல்கள் நெகிழ்ந்தலைய. உடைநெகிழ. ஒப்பித்துடுத்த பரியட்டம் நெகிழ. இப்படி அரைகுலையத் தலைகுலையக் குழலோன்சவழியே யோடிவந்து. ஓர்கையால் துகில்பற்றி. நெகிழ்ந்த துகிலை ஒருக்கையாலே தாங்கி. ஒல்கி. ஸ்த்ரீத்வம் பின்னுட்டினபடியாலே ஒடுங்கி. ஓடரிக்கணுை நின்றனரே. ஸ்த்ரீத்வம் பின்னுட்டினாலும் ஓடுகிறகண்ணை நிவர்த்திக்கப்போமோ. செவ்வரி கருவரியோடினகண்கள் அவன்பக்கலிலே யோட நின்றார்கள். "மடமயில்" "மான்பிணை" என்ற தார்ஷ்டாந்தத்வயத்துக்கும் "மலர்க்கூந்தலவிழ" "ஓடரிக்கணுை" என்ற இரண்டும் தார்ஷ்டாந்திகம். ... ... உ.

மூ.—வானிளவரசு வைகுந்தக்குட்டன் வாசுதேவன் மதுரைமன்னனந்தர்
கோனிளவரசு கோவலர்குட்டன் கோவிந்தன் குழல்கொடுதினபோது
வானிளம்படியர் வந்துவந்தீண்டி மனமுருகி மலர்க்கண்கள்பனிப்பத்
தேனளவுசெறிகூந்தலவிழச் சென்னிவேர்ப்பச் செவிசோர்த்துநின்றனரே. நு.

பதவுரை.

வான்— பரமபதத்துக்கு
இள அரசு— யுவராஜனுய்
‡ வைகுந்தம் குட்டன்— அத்திரு நாட்டில்
வள்ளார் அநவரதம் நோக்க வேண்டும்
படியான சிறுப்பிள்ளையாய்
வாசுதேவன்— வஸுதேவர் திருமகனுய்
மதுரை— வடமதுரைக்கு
மன்னன்— நிர்வாஹகனுய்
நந்தர் கோன்— நந்தகோபருகுப் (பிள்ளை
யாய்)
இள அரசு— இளவரசானவனுய்
கோவலர் குட்டன்— இடையர்களுக்குப்
பரியவேண்டும்படியான பிள்ளையாய்

‡ "வைகுந்தக்குட்டன்" என்றதற்கு, 'வைகுண்டன்' என்னும் பேரையுடைய குட்டனென்றும் பொருளாகு மென்பர்.

கோவிந்தன்— பசுமேய்க்கப்பெற்ற கண்ணனனவன்
குழல் கொடு ஊதினபோது—;
வான்— தேவலோகத்திலே வர்த்திப்பாராய்
இள— அநுபவயோக்யமான
படியர்— சரீரங்களையுடையரான ஸ்த்ரீகள்
வந்து வந்து ஈண்டி—(குழலோசைதூண்ட)
வந்து வந்து திரண்டு
மனம்— மநஸ்ஸானது
உருகி— நீர்ப்பண்டம் போலே உருகி
மலர்— மலர் போன்ற
கண்கள்— கண்களானவை
பனிப்ப— ஆநந்தபாஷ்பத்தாலே குளிரவும்
தேன் அளவு— தேனேடு கூடின*
செறி— செறிந்த
கூந்தல்— கூந்தலானது
அவிழ— அவிழ்ந்து அலையவும்
சென்னி— நெற்றியானது
வேர்ப்ப— ஸ்வேதஸ்விந்நமாகவும்
செவி— காதுகளை
சேர்த்து— இக்குழலோசையிலே மடுத்துக்கொண்டு
நின்றனர்— நின்றார்கள்.

வ்யா. மூன்றும்பாட்டு. வானிளவரசு. பரமபதத்துக்கு இளவரசாயுள்ளவன். (க)வர்த்தமந்த்ரிகள்கீழே பாலராஜனனவன் வர்த்திக்குமாபோலே யாய்த்து— "மூதுவராம்-விண்ணுட்டவர்" என்கிற நித்யஸூரிகளை ப்ரதாநராக்கி அவர்கள்கீழே தன்னியமைத்துக்கொண்டு இவர்களுக்கு சேஷியாயிருக்கும்படி. ("திருவனந்தாழ்வான்மடியிலும் ஸ்ரீஸேநாபதியாழ்வான் பிரம்பின் கீழிலும் பெரியதிருவடி சிறகின்கீழிலுமாய்த்து இத்தத்வம் வளருவது" என்றிறே பட்டரருளிச்செய்வது.) வைகுந்தக்குட்டன். அங்குள்ளார்க்குக் குழைச்சராச்காகநினைத்து*அஸ்த்தாநேபயசங்கைபண்ணி அநவரதம் நோக்கவேண்டும்படியானபருவத்தையுடையவன். வாசுதேவன். ஸ்ரீவஸுதேவர் திருமகன். இத்தால்-*பிறப்பிலியானபரத்வத்தில் வ்யாவ்ர்த்தி. மதுரைமன்னன். ஸ்ரீமதுரைக்கு ராஜாவானவன். பரமபதத்தில் ஸ்வதந்த்ரராயிருப்பாரொருவரில்லாமையாலே தன்னுடைய ஆச்ரித பாரதந்த்ர்யம் தோற்ற இருக்கும்படியைப்பற்ற "இளவரசு" என்கிறது; இங்கு இருந்தேகுடியாக ஸ்வதந்த்ராகையாலே ஈரரசு அறுத்துக்கொண்டிருக்கும்படியைப்பற்ற "மன்னன்" என்றது. நந்தர் கோனிளவரசு. "வாசுதேவன்" என்றதுக்கும் அவ்வருகேயொரு நீர்மையிறேயிது. அது ராஜகுலம்; இது கோபகுலமிறே. ஸ்ரீநந்தகோபர் திருமகனை இளவரசு. பஞ்சலக்ஷம்குடிக்கும் அரசு ஸ்ரீநந்தகோபராகையாலே, இவனை "இளவரசு" என்கிறது. கோவலர்குட்டன். *வைகுந்தக்குட்டனில் வ்யாவ்ர்த்தி. கோபஜாதியாகப்பரிந்து நோக்கவேண்டும்படியான பருவத்தையுடையவன். கோவிந்தன். ஜாத்யுசிதமான கோரக்ஷணமே யாத்ரையாயுள்ளவன். குழல்கொடூதினபோது. ஸர்வவசீகாரபரிகரமான குழலைக்கொண்டு ஊதினபோது. வானிளம்படியர். வானிலே வர்த்திப்பாராய் அந்தலோகமுள்ளவளவும் ஜராமரணங்களின்றிக்கே, (உ) போகயோக்யமான சரீரங்களையுமுடைய ஸ்த்ரீகள். படி-சரீரம். வந்துவந்தீண்டி. குழலோசைவழியே வந்துவந்து திரண்டு. மனமுருகி. மநஸ்ஸு நீர்ப்பண்டமாயுருகி. மலர்க்கண்கள் பனிப்ப. மலர்போலேயிருக்கிறகண்களில் ஆநந்தாச்ருக்கள் துளித்துவிழ. தேனளவுசெறி கூந்தலவிழ. ஓடிவந்தவிசையாலே புஷ்பாதிகளுதிர்ந்தாலும் அவை முடிக்கையாலுண்டான தேன்சுவடு விடக்குமிறே; ஆகையாலே தேனேடுகூடின செறிந்த குழல்களானவையவிழ. சென்னிவேர்ப்ப. நெற்றிவேர்க்க. தேவஸ்த்ரீகளுக்கு வேர்ப்புண்டாமோ வென்னில்; வஸ்து

(க) வ்யவஹரிகள். (உ) லோகயோகமும்.

க்களுக்கு ஸ்வபாவபேதங்களைப் பிறப்பிக்கும் திருக்குழலோசையால்வந்த விக்ரியென்று கொள்வது. செவிசேர்த்துநின்றனரே. இக்குழலோசையிலே செவியை மடித்துக்கொண்டு கின்றார்கள். ... ...

மூ.—தேனுகன்பிலம்பன் காளியனென்னுந் தீப்பப்பூகே ளடங்சவழக்கிக்
கானகம்படி யுலாவியுலாவிக் சருஞ்சிறுக்கன் குழலூதினபோது
மேனகையொடு திலோத்தமையரம்பை யுருப்பசியரவர் வெள்கிமயங்கி
வானகம்படியில் வாய்திறப்பின்றி யாடல் பாடலிவை மாறினர்தாமே. 5

பதவுரை.

தேனுகன்— தேநுகாஸுரன்,
பிலம்பன்— ப்ரலம்பாஸுரன்,
காளியன்— காளிய நாகன்,
என்னும்— என்று சொல்லப்படுகிற
தீம்ப— கொடியவையான
பூதகள் அடங்க— பூண்டுகளையெல்லாம்
உழக்கி— கலியறித்துப் பொகட்டு
கானகம்— காட்டிலே
படி— இயற்கையாக
உலாவி உலாவி— (தன் இச்சையாலே நின்று) நெடுங்காலம் ஸஞ்சரித்து
கரு— கரியதிருமேனியை யுடையனாய்
சிறுக்கன்— இளம்பிள்ளையான கண்ணன்
குழல் ஊதினபோது—;
மேனகையொடு— மேநகையோடு

திலோத்தமை அரம்பை உருப்பசி } இவர்களாகிற
அரவர்— அப்ஸரஸ்ஸுக்கள்
வெள்கி— வெட்கப்பட்டு
மயங்கி— (இவனூதும் குழலோசையிலீடுபாட்டாலே) மயங்கி
வானகம்— தேவலோகத்திலும்
படியில்— பூலோகத்திலும்
வாய்திறப்பு இன்றி— வாய் திறவாமல்
தாமே— (பரப்ரஹ்மணியின்றிக்கே) தாங்களே
ஆடல் பாடல் இவை— ஆடலும் பாடலுமாகிற இவற்றை
மாறினர்— தவிர்ந்து விட்டார்கள்.

வ்யா. நான்காம்பாட்டு. தேனுகவித்யாது. கழுதைபோலவடிவைக்கொண்டு காட்டுக்குள்ளே நலிவதாகவந்துநின்ற தேநுகன், இடைப்பிள்ளைகளும் தானுமாக விளையாடா நிற்கச்செய்தே அவர்களோடு ஸமாநரூபனுய்க்கொண்டு வந்துகலந்து நம்பிமூத்தபிராளை டோக்க விளையாடி நலியத்தேடின ப்ரலம்பன், பசுக்களும் இடையரும் தண்ணீர்குடிக்கிற மடுவை விஷத்தாலே தூஷித்துக்கொண்டுகிடந்தகாளியன் என்றுசொல்லப்பட்டதந்தூண்டு கொடியவையான பூண்டுகளையெல்லாம் கலியழித்துப்பொகட்டு. தீப்பப்பூடென்றது - பரஹிம்ஸாரூபமான தீம்பை யுடைத்தான பூண்டென்றபடி. ஒரொன்றே அதிப்ரபலமாயிருக்க, இவற்றை "பூதகள்" என்றுகூறுதல்மாகச் சொல்லிற்று - நிரஸிக்கிறவனுடைய பலத்துக்கு இவை அத்யாபாஸங்கள் என்று தோற்றுகைக்காக. ஆகையாலிறே "அழித்து" என்னாதே, "உழக்கி" என்றது. "கானகம்படியுலாவியுலாவி. வாசியறிவாரில்லாத் காட்டுக்குள்ளே "தன்னுடைய நடையழகு காட்டவேணும்" என்னும் கருத்தாலன்றிக்கே ஸ்வாபாவிகமாகத்தன்னிச்சையா லன்றிக்கே ஸஞ்சரித்து ஸஞ்சரித்து. எப்படியேயானாலும் அடிமாறியிடுவிப்புக்கால் வல்லராடிஞற்போலேயிறே யிருப்பது. கருஞ்சிறுக்கன் குழலூதினபோது. கண்டவர்கள்கண்குளிரும்படி ச்யாமளமான திருமேனியையும் பருவத்தால்வந்த இளமையையுமுடையவன் குழலூ

தினபோது. இப்படி புலம்பிக்கொண்டிருந்து திருக்குழலையுதினவளவில். மேனகையித்யாதி. "உபரிதலோகங்களில் ஆடுகைக்கும் பாடுகைக்கும் தங்களுக்கு மேற்பட்டாரில்லை" என்று ப்ரஸித்தைகளாயிருக்கும் மேனகை, திலோத்தமை, ரம்பை, ஊர்வசி என்று அப்ஸரஸ்ஸுகளானவர்கள் இவன் நடையழகையும் குழலோசையையும் கண்ணாலும் செவியாலும் அநுபவிக்கையாலே "நாமும் சிலராய் ஆடிப்பாடித் திரிகிறோமே" என்று லஜ்ஜித்து, லஜ்ஜையினுடைய முதிர்த்தியாலே மயங்கி. வானகமித்யாதி. வானிடத்திலும் பூமியிடத்திலும் ஆடப்பாட என்கிறவித்து சம்வாயாற் சொல்லக்கடவோமல்லோம் என்று தங்களுடைய ஆடலும் பாடலுமாகிற விவற்றைத் தவிர்ந்தார்கள். இவர்கள் இப்படித்தவிர்ந்தது, இரண்டினுடையவும் வாசியறிந்த மத்பஸ்தரானவர்கள் "இனி நீங்களாடவும் பாடவும் வேண்டா" என்று தவிர்க்கையாலேயோவென்னில்; அன்று; தாமே. தாங்களே தவிர்ந்துவிட்டார்கள்.

மூ.—முன்னரசிங்கமதாகி யவுணன்முக்கியத்தை முடிப்பான் மூவுலகின்
மன்னரஞ்சு மதுசூதனன்வாயிற் குழலினோசை செவியைப்பற்றிவாங்க
279 நன்னரம்புடைய தும்புருவோடு நாரதனுந் தந்தம்வீணைமறந்து
கிந்நரமிதுனங்களுந் தந்தங்கிந்நர ரிதோடகிலேர மென்றனரே. டு.

பதவுரை.

முன்— முற்காலத்திலே
நரசிங்கம் அது ஆகி— நரஸிம்ம வடிவம் கொண்டு
அவுணன்— ஹிரண்யாஸுரனுடைய
முக்கியுதனை— மேன்மையை
முடிப்பான்— அழித்தவனும்
மூ உலகில் மன்னர்— மூன்று லோகங்களிலுமுள்ள அரசர்களும்
அஞ்சும்— தன் மநிப்பைக் கண்டால் உள்ளம் நடுங்கும்படியா யிருக்கிற
மது சூதனன்— மது நிரஸநம் செய்தருளின கண்ணன்
வாயில்— திருப்பவளத்தில் வைத்தூதின
குழலின்— திருக்குழலினுடைய
ஓசை— த்வநியானது
செவியை— காதை
பற்றி வாங்க— பிடித்திழுக்க
நல் நரம்பு உடைய— நல்ல வீணை நரம்பையுடைய
தும்புருவோடு— 'தும்புரு' என்னும் ரிஷியோடு
நாரதனும்— நாரதமஹர்ஷியும்
தம் தம்— தங்கள் தங்களுடைய
வீணை— வீணையை
மறந்து— மறந்து
(அதுவு மன்றிக்கே,)
கிந்நர மிதுனங்களும்— 'கிந்நர மிதுனங்கள்' என்று சொல்லப்படு மவர்களும்
தம் தம்— தந் தாமுடைய
கிந்நரம்— கிந்நரங்களை
தொடுகிலோம் என்றனர்— இனித் தொடக்கடவோ மல்லோமென்று விட்டார்கள்.

வ்யா. ஐந்தாம்பாட்டு. முன்நரசிங்கமதாகி. முற்காலத்திலே "தேவாதி சதுர்வித ஜாதியில் ஒன்றிலும் படக்கடவே னல்லேன்" என்று அவன்கொண்ட வரத்துக்கு அவிருத்தமாக நரஸிக்கைக்காக "நாஹ்யாயு தந-ஂகூகா வித்ஹாஹ்யாயு தந-ஹயா" என்கிறபடியே - நரத்வ ஸிம்ஹத்வங்களிரண்டையும் சேர்த்து ஒருவடிவாகக்கொண்டு. "அதாகி" என்றது, இப்படி நரத்வ ஸிம்ஹத்வங்களைச் சேர்த்து ஒருவடிவாக்கின

(க) "நரஸ்யார்த்த தநும்க்ர்த்வா ஸிம்ஹஸ்யார்த்த தநும்ததா"

விடத்தில் சேராச்சேர்த்தியா யிருக்கையன்றிக்கே "அழகியான்தானே யரியுருவன்தானே" என்னும்படி இருந்த வழகினுடைய வதிசயத்தைச் சொல்லுகிறது. அவுணன் முக்கியத்தை முடிட்பான். எல்லே யில்லாத பெரும்தவத்தாலே பல மிறுக்குக்களைப் பண்ணுகின்றுகொண்டு அமரரையல்லல்செய்து, தானே ஜகத்துக்கெல்லாம் ப்ரதானனுய், பகவந்நாமம் கேட்கப் பொறுமல் அதுசொன்னதுவே ஹேதுவாக "வயிற்றிற் பிறந்தபிள்ளை" என்று பாராதே வாசாமகோசரமான பீடைகளை யெல்லாம் பண்ணின ஹிரண்யாஸுரனுடைய வேண்டப் பாட்டை யறித்துப் பொகட்டவன். மூவுலகில் மன்னரஞ்சும். மூன்றுலோகத்திலுண்டான ராஜாக்களும், அதிமாநுஷ சேஷ்டிதங்களால்வந்த தன்மதிப்பைக்கண்டால் உள்ளம் நடுங்கும்படியிருக்கிற. மதுசூதனன்வாயிற் குழலிணைசை செவியைப்பற்றிவாங்க. ஆச்ரிதவிரோதியான மதுவை நிரஸித்தவனுடைய திருப்பவளத்தில் வைத்துதின திருக்குழலினுடையத்வனியானது செவியைப்பிடித்திழுக்க. நன்னரம்பித்யாதி. செவிபடைத்தாரெல்லாரையும் தன்னுடைய த்வனியாலே வசிகரிக்கவற்ருன நன்மையையுடைய வீணாநாரம்பைத் தந்தாமுக்குப் பெரியவுடைமையாக நினைத்திருக்கும் தும்புருவும் நாரதனும். "கானவித்யைக்கு தும்புரு நாரதர்" என்று ஸர்வலோகப்ரஸித்தராயிருக்குமவர்களிறே; இப்படி யிருக்கிறவர்களும். தம்தம்வீணைமறந்து. தந்தாமுக்கு ஸர்வகாலமும் அபிமதமான வீணைகளெடுத்துப் பாடாத வளவன்றிக்கே, அவைதன்னை நேராகமறந்து. கிந்நரமித்யாதி. கிந்நரங்கொண்டு பாடித்திரிகையாலே "கிந்நரமிதுனங்கள்" என்று ஜகத்ப்ரஸித்தங்களா யிருக்கிறவர்களும் தந்தாமுடைய கிந்நரம் இனித் தொடக்கடவோமல்லோமென்று விட்டார்கள். ... ... இ.

மூ.—செம்பெருந்தடங்கண்ணன் திரடோளன் தேவகிசிறுவன் தேவர்கள்சிங்கம்
நம்பரமனிந்நாள் குழலூதக்கேட்டவர்க ளிடருற்றனகேளீர்
அம்பரந்திரியுங் காந்தப்பரேல்லா மமுதகீதவலியாற் சுருக்குண்டு
நம்பரமன்றென்று நாணிமயங்கி நைந்துசோர்ந்து கைம்மறித்துநின்றனரே. சு.

பதவுரை.

செம்— சிவந்ததாய்
பெருந்தட— மிகவும் பெருத்திருந்துள்ள
கண்ணன்— திருக்கண்களை யுடையனுய்
திரள்— (மூங்கில்போலே) திரண்டிருக்கிற
தோளன்— திருத்தோள்களை யுடையனுய்
தேவகி— தேவகிப் பிராட்டிக்கு
சிறுவன்— மகனுய்
தேவர்கள் சிங்கம்— தேவஸிம்மமாய்
நம்— நமக்கு
பரமன்— தன் பெருமை யெல்லாமறிய லாம்படி யிருக்குமவன்
இந்நாள்— இந்ததிநம்
குழல் ஊத— திருக்குழலூதும் போது
கேட்டவர்கள்— (அக்குழலோசையைக்) கேட்டவர்கள்
இடர் உற்றன— இடருற்ற ப்ரகாரங்களை
கேளீர்— கேளுங்கோள்;
அம்பரம்— ஆகாசத்திலே
திரியும்— திரியாநின்ற
காந்தப்பர் எல்லாம்— கந்தர்வ ஜாதியர் எல்லாரும்
அமுத கீதம்— அம்ருதம்போல் இனிய இசையாகிற
வலியால்— வலியாலே
சுருக்குண்டு— கட்டுண்டு
நம் பரம் அன்று என்று— நம்மால் இனிப் பாடப் போகாதென்று
நாணி— முன்பெல்லாம் பாடினதற்கும் லஜ்ஜித்து
மயங்கி— மயங்கி

நைந்து— மநச்சைதில்யத்தையு மடைந்து
சோர்ந்து— சரீரமும் கட்டுக் கொலைந்து
கை மறித்து நின்றனர்— இனி நாம் ஒன்றுக்கும் கடவோ மல்லோபென்று கையை மடக்கிக் கொண்டு நின்றார்கள்.

வ்யா. ஆரும்பாட்டு. செம்பெருந்தடங்கண்ணன். சிவந்து மிகவும் பெருத்திருக்கிற திருக்கண்களை யுடையவன். திரள்தோளன். கணைய்ங்கள்போலே நிரண்டிருக்கிற நிருத்தோள்களை யுடையவன். தேவகிசிறுவன். தேவகிப்பிராட்டிக்கு விதேயனான புத்ரனாவன். தேவர்கள் சிங்கம். துர்மாநிகளான தேவர்களுக்கு ஸிஹ்மம்போலே அநபிபவநீயனா யிருக்குமவன். நம் பரமன். தன்னபிமாநாந்தர்ப்பூதரான நமக்குத் தன்பெருமையெல்லா மறிய லாம்படி-யிருக்குமவன். இந்நாள் குழலூத. இற்றைநாள் குழலூத. கேட்டவர்க ளிடருற் றனகேளீர். இக்குழலோசையைக் கேட்டவர்கள் இதினுடையரஸத்தாலே வித்தரானபடி யைக் கேளிகோள். கேட்டவர்கள்தான் ஆர், அவர்களிடருற்ற ப்ரகாரமென்னென்ன; செவ் ஸ்லுறைதுமேல் அம்பரமித்யாதி. அந்தரிகூசாரிகளாய் ந்ர்த்தகீத பராய்ப்போரும் கந்தர்வ ராதியரெல்லாம் அம்ர்தம்போலே யினிதான காநவலையிலே கட்டுண்டு. நம்பரமன்றென்று. இனிப்பாடவென்பதிதான்று நமக்கு பரமன்றென்று. நாணி. கீழ்பாடிப்போனதுக்கும் லஜ் ஜித்து. மயங்கி. கிழ்மேல் ஒன்றுதானும் நிணைக்கமாட்டாதபடி யறிவழிந்து. நைந்து. அறிவுக்கு த்வாரமான அந்தஃகரணம் சிதிலமாய். சோர்ந்து. சரீரம் கட்டுக்கொலைந்து தளர்ந்து. கை மறித்து நின்றனரே. தங்கள் தளர்த்தி வாக்கால் சொல்லவும் பலமற்று " ஒன்றுக்கும் கூடாமல்லோம் " என்று கையை மறித்துக்கொண்டு நின்றார்கள். ... ... கூ

மூ.—புவியுணன்கண்டதோ ரற்புதங்கேளீர் பூணிமேய்க்குமிளங் கோவலர்கூட்டத்
தலையுணகத்தணையான்குழலூத வமரலோகத்தளவுஞ் சென்றிசைப்ப
அவியுணமறந்து வானவரெல்லா மாயர்பாடிநிறையப் புகுந்தீண்டிச்
செவியுணவின்சுவை கொண்டுமேகிழ்ந்து கோவிந்தணைத்தொடர்ந்தென்றும்விடாரே.

பதவுரை.

புவியுள்— பூமியிலே
நான் கண்டது ஓர்— நான்கண்டதொரு
அற்புதம்— ஆச்சர்யத்தை
கேளீர்— கேளுங்கோள்;
பூணி மேய்க்கும்— கன்றுகள்மேய்க்கிற
இள கோவலர் கூட்டத்தலையுள் } கோபாலபாலர்மிக்கிருந்துள்ள கூட்டத்திலே
நாகம் அணையான்— திருவனந்தாழ்வான் மேலேபள்ளிகொண்டருளுமவனை ஸர்வேச்வரன்
குழல் ஊத— திருக்குழலை ஊத
(அதின் த்வநியானது,)
அமரலோகத்தளவும்— தேவலோகத்தளவும்
சென்று— வியாபித்து
இசைப்ப— த்வநிக்க
வானவர் எல்லாம்— தேவஜாதியரெல்லாரும்
அவி— அந்தணர் தங்களுக்களிக்கும் ஹவிஸ்ஸை
உண மறந்து— புஜிக்க மறந்து
ஆயர்பாடி— திருவாய்ப்பாடியானது
நிறைய— நிறையும்படி
புகுந்து— வந்து
ஈண்டி— நெருங்கி
செவி உள் நா— செவியின் உள்நாவாலே
இன்சுவை—குழலோசையின்இனியரஸத்தை
கொண்டு— உட்கொண்டு
மகிழ்ந்து— உள்ளம் களித்து
கோவிந்தனை— பசுமேய்க்கும் கண்ணனை
தொடர்ந்து— பின்தொடர்ந்து
என்றும்— ஒருகூணகாலமும்
விடார்— விடமாட்டாமலிருந்தார்கள்.

வ்யா. ஏழாம்பாட்டு. புவியுள் நான்கண்டதோ ரற்புதம் கேளீர். கார் காலத்திலே சருமுகை பூத்தாற்போலே இப்படி யிருப்பதொன்று உண்டாகைக்கு யோக்யதையில்லாத பூமியிலே, " இது அகடிதம் " என்று அறிந்தவான் பிறர்வாயால் கேட்கையன்றிக்கே ப்ரத்யக்ஷமாகக்கண்டமாத்ர ஆச்சர்யம் கேளிதோள். பூணிமேய்க்குமிளம் கோவலர் கூட்டத்தவையுள். குழல்களை ஊதிக்கொண்டு கன்றுகளும் பசுக்களும் மேய்த்துத்திரியும் இளங்காலிகளான இடையர் திரண்டதிரளில். நாகத்தணையான்குழலூத. அநந்தசாயியாகையாலே ஸர்வாதிகனனவன் கத்ஸஹாநீயனுய்நின்று குழலூத. அமரலோகத்தளவும் சென்றிசைப்ப. அந்தக்குழலோசை தேவலோகத்தளவும் சென்று தவங்கிக்க. அவியுணுமறந்து வானவரெல்லாம். தேவர்களெல்லாரும், தங்களுடைய கௌரவாநுகுணமாக யாகங்களிலே ப்ராஹ்மணர் ஸமர்ப்பிக்கும் ஹவிஸ்ஸுக்களை புஜிக்கமறந்து. அவர்களுக்கு காரகாதிகளெல்லாம் அப்ரதமாயிருக்க அதுமறந்தார்கள் என்னுதே, இத்தைச்சொல்லிற்று- தங்கள் வைபவத்துக்குறுப்பாகையாலே அதில்நின்காட்டில் அவர்களிருப்பி ஜீவிப்பது இதுவாகையாலே. ஆயர்பாடிநிறையப்புகுந்தீண்டி. அவ்வளவன்றிக்கே மநுஷ்யகந்தம்போறுமல் பூமியில்காலிட அருவருத்துத் திரியுமவர்கள் " இவன் பிறந்துவளருகிறவூர் " என்றுமத்தாலே திருவாய்ப்பாடி. நிறையப்புகுந்து திரண்டு. செவியுணவின் சுவைகொண்டுமெகிழ்ந்து. செவிக்குள்ளில் நாவாலே குழலில்பிறந்த இசையின் இனியரஸத்தை புஜித்து ஆநந்தித்து. செவிக்கு நாவுண்டோவென்னில்; " செவியுணுகிட்ட " என்னக்கடவதிறே; சேதந ஸமாதியாலே சொல்லுகிறது. அன்றிக்கே, செவிக்கு உணவாயிருந்துள்ள இனிதான காநரஸத்தை புஜித்து என்னவுமாம்: " செவிக்குணவில்லாதபோது " என்றுனிறே. கோவிந்தனைத்தொடர்ந்தென்றும்விடாரே. கோரக்ஷணபரனனவனை அவன்போனவிடமெங்கும் தொடர்ந்து ஒருக்ஷணகாலமும் விடுகிறிலர்கள். ஸர்வஸ்மாத்பரனனவன் கோபஸங்க மத்யத்திலே கத்ஸஹாநீயனுய் நின்று குழலூதுகையும், அந்தக்குழலோசை தேவலோகத்தளவும் செல்லுகையும், அதைக்கேட்டுத் தேவர்களெல்லாரும் தாங்கள் விரும்பியிருக்கும் ஹவிர்ப்போஜநத்தை மறக்கையும், அவ்வனவன்றிக்கே மநுஷ்யகந்தம்போறுதவர்கள் கோபச்சேணியிலேவந்து திரளுகையும், இந்தக் குழலோசையினுடைய ரஸத்தை புஜித்து ஆநந்திகளாய்க்கொண்டு இவனைவிடாதே பின்பற்றித்திரிகையுமாகிற இவையெல்லாம் அகடிதங்களாகையாலும், அதுக்குமுன்பு இந்தலோகத்தில் கண்டறியாமையாலுமிறே " புவியுள் நான்கண்டதோ ரற்புதங்கேளீர் " என்று அருளிச்செய்தது. ... ... எ.

மூ.—சிறுவிரல்கடடவிப்பரிமாறச் செங்கண்கோட ச்செய்யவாய்க் கோட்டளிப்பக்
குறுவெயர்ப்புருவங் கூடலிப்பக் கோவிந்தன்குழல்கோ தேனபோது
பறவையின்கணங்கள் கூடுதோறந்து வந்துசூழ்ந்து படுகாடுகிடப்பக்
கறவைகின்கணங்கள் கால்பரப்பிட்டுக் கவிழ்ந்திறங்கிச் செவியாட்டகில்லாவே.

பதவுரை.

சிறு— சிறுத்திருந்துள்ள
விரல்கள்— திருவிரற்களானவை
தடவி— தடவிக்கொண்டு
பரிமாற— வ்யாபரிக்கும்படியாகவும்,
செம் கண்— சிவந்த கண்களானவை
கோட— வ்ஜையும்படியாகவும்
செய்ய— சிவந்த
வாய்— திருப்பவளமானது
கோப்பளிப்ப— குமிழ்க்குப்படியாகவும்,
குறு வெயர்— குறுவெயர்ப்பு அரும்பின

புருவம்— திருப்புருவமானது
கூடலிப்ப— மேலே இளர்ந்து வளையும் படியாகவும்
கோவிந்தன்— கோவிந்தனனவன்
குழல் கொடு— திருக்குழலைக் கொண்டு
ஊதினபோது— ஊதினபோது
பறவையின் கணங்கள்— பக்ஷிகளின் திரள் களானவை
கூடு துறந்து— தந்தாமுடைய கூட்டை விட்டு
வந்து— கர்ஷ்ணன் பக்கலிலே வந்து
சூழ்ந்து— சூழ்ந்து கொண்டு
படு காடு— வெட்டி விழுந்த காடுபோலே
கிடப்ப— மெய் மறந்து கிடக்க
கறவையின் கணங்கள்— பசுக்களின் திரள் களானவை
கால் பாப்பிட்டு— கால்களைப் பாப்பி
கவிழ்ந்து இறங்கி— தலைகளைத் தொங்க விட்டுக் கொண்டு
செவி— காதுகளை
ஆட்ட வில்லா— அசைக்கவும் மாட்டாதே நின்றன.

வ்யா. எட்டாம்பாட்டு. சிறுவிரல்கள் தடவிப்பரிமாற. "கருஞ்சிறுக்கன்" என்ற பருவத்துக்குத் தகுதியாம்படி சிறுத்திருந்துள்ள திருவிரற்களானவை திருக்குழலின்துளைகளில புதைக்கவேண்டுவது புதைத்தும் நிறக்கவேண்டுவது நிறக்கைக்காகக் குழலின்துளைகளைத் தடவிக்கொண்டு வ்யாபரிக்க. செங்கண்கோட. * இடவணையிடத்தோளொடுசாய்த்துத் துளைதோறும் கண்ணைடநின்று ஊதுகையாலே, சிவந்திருக்கிற திருக்கண்களானவை வக்ரிக்க. செய்யவாய் கோப்பளிப்ப. "வாய்கடைகூட" என்கிறபடியே இரண்டுகடைவாயையும் குவித்து ஊதுகிறபோது சிவந்திருப்பவளமானது அகவாயிலுண்டான வாயுவினுடைய பூரிப்பாலே குமிழ்க்க. குறுவெயர்ப் புருவங்கூடலிப்ப. * உலாவியுலாவிக் குழலூதுகிற ஆயாஸம்பொறுமல் ஸௌகுமார்யத்தாலே குறுவெயர்ப்பரும்பின திருப்புருவமானது மேலெழுந்துவளைய. கோவிந்தன் குழல்கொடூதினபோது. கோகுலத்திலே நிகரில்லாதனாய் அவனறை மேய்த்துக்கொண்டு திரியுமவன் அவை மேய்ந்து வயிறுநிறைந்த ஹர்ஷத்தாலே ஸர்வஜந்துஜாதமநோஹரமான திருக்குழலைக்கொண்டு ஊதினபோது. பறவையின்கணங்கள். பக்ஷிகளினுடைய திரள்கள். கூடே துறந்து. தந்தாமுடைய வஸ்துவ்யஸ்தலங்களைவிட்டு. வந்து சூழ்ந்து படுகாடுகிடப்ப. குழலோசைவழியே ஊதுமிறவனளவும் வந்துசூழ்ந்துகொண்டு வெட்டிவிழுந்தகாடுபோலே பரவசமாய்க்கிடக்க. கறவையின்கணங்கள். பசுக்களினுடைய திரள்களானவை. கால்பரப்பிட்டு. பாரவச்யத்தாலே கால்களைப்பரப்பி. கவிழ்ந்திறங்கி. தலைகளை மிகவும் நாற்றிக்கொண்டு. செவியாட்டகில்லாவே. "செவியையசைக்கில் இசைக்குப்ரதிபந்தகமாம்" என்று செவியையாட்டவும் மாட்டாதேநின்றன. ... ... அ.

மூ.—திரண்டெழுதழைமழை முகில்வண்ணன் செங்கமலமலர்சூழ் வண்டினம்போலே
சுருண்டிருண்ட குழலுழ்ந்த முகத்தானூதுகின்ற குழலோசைவழியே
மருண்டமான்கணங்கண் மேய்கைமறந்து மேய்ந்தபுல்லுங் கடைவாய்வழிசோ
இரண்போகே துலுங்காப் புடைபெயரா வெழுதுசித்திரங்கள்போல நின்றனவே. கூ.

293

பதவுரை.

(கார்காலத்திலே,)
திரண்டு— திரண்டு
எழு— மேலெழுந்து
தழை— தழைத்திருக்கிற
மழை முகில்— காளமேகம் போன்ற
வண்ணன்— திருநிறத்தை யுடையனனவன்

செம் கமலம் மலர்— செந்தாமரைப் பூவை
சூழ்— சூழப்படிந்த
வண்டு இனம் போலே— வண்டுகளின் திரள்போலே
சுருண்டு இருண்ட— சுருட்சியையும் இருட்சியையு முடைத்தான
குழல்— கேசபாசங்களானவை
தாழ்ந்த— தாழ்ந்திருந்துள்ள
முகத்தான்— முகத்தையுடையவன்
ஊதுகின்ற— ஊதுகிற
குழல் ஓசைவழியே— குழலோசை செவிப்பட்ட வழியே
மான் கணங்கள்— மான் திரளானவை
மருண்டு— அறிவழிந்து
மேய்கை மறந்து— மேய்ச்சலையும் மறந்து
மேய்ந்த— மேயக் கவ்வின
புல்லும்— புல்லும்
கடைவாய் வழி— கடைவாய் வழியே.
சோர— நழுவி விழ
இரண்டு பாடும்— முன்னும் பின்னுமான இரண்டருகும்
துஞ்சா— அசையாமலும்
புடை— பக்கங்களில்
பெயரா— அடிபெயர மாட்டாமலும்
எழுது— (சுவரில்) எழுதப்பட்ட
சித்திரங்கள் போல— சித்திரங்கள்போல்
நின்றன— ஒரு செயலற்று நின்றன.

வ்யா. ஒன்பதாம்பாட்டு. திரண்டேழு தழைமுழுமுகில்வண்ணன். கார்காலத்திலே தன்னிலே திரண்டு கிளர்ந்து அகவாயில் நீர்க்கருத்தாலே தழைப்புண்டாயிருக்கிற. வர்ஷுக வலாஹகம்போலே யிருக்கிற திருநிறத்தையுடையவன். செங்கமலமித்யாதி. சிவந்தசெந் தாமரைப்பூவைச் சூழப்படிந்தவண்டினுடைய திரள்போலே சுருட்சியையும் மிருட்சியையு முடைத்தான திருக்குழல்கள் தாழ்ந்த திருமுகத்தையுடையவன். ஊதுகின்ற குழலோசை வழியே. ஊதாநின்றுள்ள திருக்குழலோசை செவிப்பட்டவழியே. மருண்டித்யாதி. மான் திரள்களானவை ஸஜாதீயவிஜாதீய விபாகாதிகள் தோன்றுதபடி அறிவழிந்து, தனக்கு தாகமாக எப்போதும் செய்துபோரும் மேய்கையைத் தவிருகையன்றிக்கே, விஸ்மரித்து மேயக்கவ்வின புல்லும் இறக்குதல் உமிழ்தல் செய்யமாட்டாத பாரவச்யத்தாலே கடைவாய் வழியே நழுவிவிழ. இரண்டுபாடுமித்யாதி. முன்னும்பின்னுமான இரண்டருகும் அசையாதே பக்கங்களில் போகவும் மாட்டாதே சித்தரத்தில் எழுதினவைபோலே ஒரு வ்யாபாரமற்று நின்றன. ... ...

பெருமான்வன்— தலைவனனவனுய்
ஒருவன்— அத்விதீயனு யிருக்கிறவன்
குழல் ஊதினபோது—;
மரங்கள்— மரங்களானவை
நின்று— ஒருபடிப்பட நின்று
மது தாரைகள்— மது தாரைகளை
பாயும்— பாயாநிற்கும்;
மலர்கள்— கொம்பில் நிற்கும் பூக்களெல்லாம்
வீழும்— நிலைகொலைந்து வீழாநிற்கும்;
வளர்— மேலே வளருகிற
கொம்புகள்— கொம்புகளானவை
தாழும்— கீழே படியாநிற்கும்;
இரங்கும்— தன் நிலை கொலைந்து ஈடுபட்டா நிற்கும்;
கூம்பும்— (அஞ்ஜலி செய்வாரைப் போலே, தாழ்ந்த கொம்புகளைக்) குவியாநிற்கும்;
அவை— அந்த மரங்களானவை
செய்யும்— செய்யா நிற்கிற
குணமே— குணமிருந்தபடியென்!
என்று ஆச்சர்யப் படுகிறார்.

வ்யா. பத்தாம்பாட்டு. கருங்கண்தோகையித்யாதி. கருகின கண்ணையுடைத்தான தோகைமயிற்பிலையைத் திருமுடிக்கு அலங்காரமாகச்சாத்தி. கட்டி நன்குடுத்த பீதகவாடையருங்கலவுருவின். திருவரைபூத்தாற்போலே அழுந்தக்கொண்டு நன்றுகச்சாத்தின திருப்பீதாம்பரத்தையும், பெறுதற்கரிய திருவாபரணங்களையுமுடைய திருமேனியையுடையனுய். ஆயர்பெருமானவனொருவன் குழலூதினபோது. ஆயர்க்கதிபதியான நீர்மையையுடையனுய், அழகாலும் நீர்மையாலும் ப்ரஸித்தனுய் அத்விதீயனுயிருக்கிறவன் திருக்குழலூதினபோது. மரங்கள்நின்று மதுதாரைகள்பாயும். தேவமநுஷ்யதிர்யக்ஜாதிகள்உருகினவளவன்றிக்கே, அசேதநங்களான வ்ருக்ஷங்களானவை ஒருபடிப்படநின்று உள்ளுருகினமை தோற்ற மதுதாரைகள் பாயாநிற்கும். மலர்கள்வீழும். கொம்பில்நிற்கிற பூக்களெல்லாம் நிலைகொலைந்து வீழாநிற்கும். வளர்கொம்புகள் தாழும். மேலேவளருகிற சாகைகளானவை கீழேபடியாநிற்கும். இரங்கும். தன்னிலைநின்றலைந்து ஈடுபடாநிற்கும். கூம்பும்திருமால்நின்ற நின்றபக்கம்நோக்கி. ஸ்ரீயஃபதியானவன் உலாவியுலாவிநின்று குழலூதினவழியே அவன் நின்ற நின்ற பார்ச்வங்களைநோக்கி, அஞ்சலிசெய்வாரைப்போலே தாழ்ந்த கொம்புகளைக் குவியாநிற்கும். அவை செய்யும் குணமே. அவைசெய்த குணமிருந்தபடி யென்றன்! என்று ஆச்சர்யப்படுகிறார். ம.

அ. நிகமத்தில், இத்திருமொழி கற்றார்க்கு பலம் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

மு.—குழலிருண்டசுருண் டேறியகுஞ்சிக் கோவிந்தனுடைய கோமளவாயில்
குழன்முழஞ்சுகளினூடு குமிழ்த்துக் கொழித்திழிந்த வமுதப்புனறன்னைக்
295 குழன்முழவம்விளம்பும் புதுவைக்கோன் விட்டுசித்தன்விரித்ததமிழ்வல்லார்
குழலிலவென்றகுளிர்வாயினராகிச் சாதுகோட்டியுட் கொள்ளப்படுவோரே. கக.

பதவுரை.

குழல்— திருநெற்றியில் தாழ்ந்த குழலையுடையனுய்
இருண்டு— கறுத்து
சுருண்டு— சுருண்டு
ஏறிய— மேலே நெடுகவளர்ந்த
குஞ்சி— மயிர்முடியை யுடையனுய்
கோவிந்தனுடைய— பசு மேய்க்குமவனுடைய கண்ணனுடைய
கோமளம்— அழகிய
வாயில்— திருப்பவளத்தில்
குழல்— திருக்குழலின்
முழஞ்சுகளினூடு— துளைகளின்வழியே

குமிழ்த்து- இளர்ந்து
கொழித்துளறுந்த--அலையெறிந்துருகித்த
அமுதம் புனல்தன்னை- அம்ருதஜலத்தை
குழல் முழவம்- குழலின் ஓசையாக
விளம்பும்— சொன்ன
புதுவை கோன்— ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு நிர்வாஹகரான
விட்டுசித்தன்— பெரியாழ்வார்
விரித்த— விரிவாகச் சொன்ன
தமிழ்— தமிழ்ப்பாட்டுக்களான இவற்றை
வல்லார்— ஓதவல்லவர்கள்
குழலை- குழலோசையின் குளிர்த்தியை
வென்ற— கீழாம்படிபண்ணி
குளிர்— குளிர்ந்த
வாயினர் ஆகி—, சொல்லை யுடையராய்க் கொண்டு
சாது கோட்டி— ஸாதுக்களின் கோஷ்டியில்
உள் கொள்ளப்படுவார் — அங்கீகரிக்கப் பெறுவர்கள்.

வ்யா. குழலித்யாதி. "சுருண்டிருண்ட குழல்தாழ்ந்தமுகத்தான்" என்கிறபடியே திருநெற்றிப்ரதேசத்திலே தாழ்ந்த திருக்குழலாய் இருண்டுசுருண்டு மேலேநெடுகவளர்ந்த கேசபாசத்தையுடையனுய் கோரக்ஷணபரனுயிருக்குமவனுடைய அழகிய திருப்பவளத்தில். குழல்முழஞ்சித்யாதி. திருக்குழலில் துளைகளின்வழியே இளர்ந்து அலையெறிந்துருகித்த அம்ருதஜலத்தைக் குழலோசையாகச்சொன்ன. இத்தால்- குழலோசையினுடைய ப்ரவாஹமும் ரஸ்யதையுஞ் சொன்னபடி. புதுவைக்கோன் விட்டுசித்தன் விரித்த தமிழ் வல்லார். ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகரான பெரியாழ்வார் இவனுடைய வைபவத்தை விஸ்தரேணப்ரதிபாதித்த த்ராவிடகாதைகளான இவற்றை ஸாபிப்ராயமாக வல்லவர்கள். குழலிவென்ற குளிர்வாயினராகி. திருக்குழலோசையினுடைய குளிர்த்தியையும் கீழ்ப்படுத்தித் தான்மேலாம்படி குளிர்ந்த வ்யவஹாரத்தை யுடையராய். சாதுகோட்டியுள் கொள்ளப்படுவோரே. ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளிலேபுகுந்தால் அவர்கள் ஸஹர்ஷமாகப் பரிக்ரஹிக்கும்படியாவர்கள். ... ... கக.

பெரியஜீயர் திருவடிகளே சரணம்.

அடிவரவு.—நாவல் இட வான் தேனுகன் முன் சேம்பெரும் புவி சிறு திரண்டு கருங் குழ லிய.

—(*)—

ஆ - திருமொழி, உரு - க்கு, பாட்டு - உளங்.

அ. "போகத்தில் வழுவாத புதுவையர்கோன்" என்கிறபடியே திருவவதாரஸமயமே தொடங்கி க்ருஷ்ணவதார குணசேஷ்டிதங்களே யொன்றெழியாமல் அநுபவித்துக் கொண்டு போந்தார்-கீழ்; மற்றுள்ளவாழ்வார்களைக் குமிழ்நீருண்ணப்பண்ணும் அவனுடைய ஸௌந்தர்யமாகிற ஆழங்கால்தானே மேடாய் தரித்துநின்று மங்களாசாஸநம்பண்

னிப்போரும் ஸ்வபரிவர்சனவிவர், இப்போது அவர்களைப்போலே அவனை நுபவிக்கவே ணுமென்னுமாசை இளைத்து, அவ்வாசாநுரூபமாகக்கிட்டி நுபவிக்கப்பெறுமையாலே தா மான தன்மையழிந்து ஒருகோபகந்யகாவஸ்தையை ப்ராப்தராய், ஸ்வதசையை அந்யாப தேசத்தாலே பேசுகிறார். அதாவது- பருவம் நிரம்புவதற்குமுன்னே கர்ஷ்ணவிஷயத்திலே ப்ரவணையாகாநின்ற தன்மகளுடைய தசையைக்கண்டு திருத்தாயார், இவள்பருவத்தின் இளமையையும், இப்படியிருக்கச்செய்தே அவன்விஷயத்திலே ப்ரவணையாய் அவனைமேல் இவள் கலந்துவருகிறபடியையும், இதுக்கடி ஸஜாதீயைகளாய் தத்விஷயத்தில் ப்ரவணைகளாயிருக் கும் பாலிகளோடுண்டான ஸம்ஸர்க்கம் என்னுமத்தையும், இவள் லீலாவ்யாபாரத்திலே அந்வயிக்கிலும் அவனுடைய சிஹ்நங்களொழிய வேறொன்றறியாளானபடியையும், இவை எல்லாவற்றுக்கும் மூலமாகத் தோழிமார் இவளை வசிகரித்துக்கொண்டுபோய் அவன் பக்க லிலே அகப்படுத்தினபடியையும், இவள் தன்னுடைய ப்ராவண்ய ப்ரகாரங்களையும், இத் தைக்கண்ட பந்துவர்க்கமும் அந்யரும் சொல்லுகிற வார்த்தைகளையுமெல்லாம், ஸந்நிஹி தரைக்குறித்தும் தன்னிலேயும் பேசின பாசுரங்களாலே யருளிச்செய்கிறார். ... ... *

மு.—ஐயுழுதி யுடம்பகைந் திவள்பேச்சு மலந்தலையாய்ச்
செய்யநூலின் சிற்றுடை செப்பனுடுக்கவும் வல்லளல்லள்
உ-ம் கையினிற் சிறுதூதையோ டிவள் முற்றில்பிரிந்துமிலள்
பையரவணைப் பள்ளியானெடு கைவைத்திவள் வருமே க.

பதவுரை.

இவள்— இளம்பருவத்தள்ளான என் பெண்
பிள்ளையானவள்
உடம்பு— தன் உடம்பெல்லாம்
ஐய புழுதி— அழகிய புழுதியாம்படி
அளைந்து— புழுதியளைந்து
(உடம்பெல்லாம் புழுதியாவானென்?
என்றால், விளையாடிப் புழுதிய
ளைந்தே னென்னமாட்டாமல்,)
இவள் பேச்சும்— இவள் தன் சொல்லும்
அலந்தலையாய்— கலங்கினதாய்
(அதுவுமன்றி,)
செய்ய— சிவந்த
நூலின்— நூலாலே சமைக்கப்பட்ட
சிறு ஆடை— சிற்றாடையை
செப்பன்— ஒழுங்குபட
உடுக்கவும் வல்லள் அல்லள்— உடுக்கவும்
மாட்டாதவளாய்
கையினில்— கையிலிருக்குமதான்
சிறு தூதையோடு— (மணற் சோறுக்கும்)
சிறிய தூதையோடு
முற்றில்— சிறு சுளகையும்
பிரிந்தும் இலள்— விடுவதும் செய்திலள்;
(பின்னையென் செய்யுமென்னில்;)
இவள்— இப்படிப்பட்ட பருவத்தளான
இவள்
பை— பணத்தையுடைய
அரவு— திருவனந்தாழ்வானுகிற
அணை— அணையை
பள்ளியானெடு— திருப்படுக்கையாக
உடையவனோடு
கைவைத்து வரும்— கை கலந்து வாரா
நின்றாள்.

என்று ஒரு பிராட்டிதசையை ப்ராபித்த ஆழ்வார், தாயார் பாசுரத்தாலே பேசுகிறார்.

வ்யா. முதற்பாட்டு. ஐயுழுதியுடம்பகைந்து— அழகியபுழுதியை யுடம்பெங்கும்கொள் ந்து. அதாவது- புழுதியிலேயிருந்து விளையாடுதையாலே சரீரமெல்லாம் புழுதியாலே

வ்யர்த்தமாயிருக்கை. இவள்பேச்சுமலந்தலையாய். 'உடம்பெல்லாம்புழுதியாவானென்'என்றால் 'விளையாடிப்புழுதியளைந்தான்' என்று சொல்லலாமிறே; அது சொல்லாமல், பந்து கழல் அம்மானை யென்றுப் போலே சில அநந்விக பாஷணங்களைப் பண்ணுகையாலே இவள்பேச்சும் கலங்கி செய்யித்யாதி. சிவந்தநூலாலே சமைக்கப்பட்ட சிறிய ஆடையை உடுக்கு மடைவதிந்து நன்றுகவுடுக்கவும் மாட்டாள். கையினிலித்யாதி. விளையாடுகலமாய்க்கொண்டு கையிலிருக்கும் மணற்சோறுக்கும் சிறு தாதையும் மணற்கொழிக்கும் சிறுசுளகும் இவள் விடுவதும் செய்திலள். இவள்பருவமிது. பையவித்யாதி. "அரவணையாயாயரேறே" என்னும்படி திருவனந்தாழ்வானைப் படுக்கையாக வுடையவனேடே இவள்கைகலந்து வாராநின்றாள். ... ... க.

மூ:—வாயிற்பல்லுமெழுந்தில மயிருமுடி கூடிற்றில
சாய்விலாதகுறுந்தலைச் சிலபிள்ளைகளோடிணக்கித்
தீயிணக்கிணங் காடிவந்திவ டன்னன்ன செம்மைசொல்லி
மாயன் மாமணிவண்ணன் மேலிவண் மாலுறுகின்றாளே: உ.

பதவுரை.

வாயில்— வாயிலே
பல்லும்— பற்களும்
எழுந்தில— எழுந்தனவில்லை;
மயிரும்— மயிரும்
முடி கூடிற்றில— சேர்த்து முடிக்கலாம்படி கூடினவில்லை;
‡ இவள்— இத்தன்மையளான என் பெண் பிள்ளையானவள்
சாய்வு இலாத— ஒடுக்கமில்லாத வர்களாய்
குறுந்தலை— தண்மையில் தலைநின்ற
சில பிள்ளைகளோடு— சில பெண்களோடு
இணங்கி— சேர்ந்து
நீ இணக்கு— பொல்லாத இணக்கத்தோடே
இணங்காடி— கலந்து
வந்து— வந்து
‡ இவள்— இவள்
தன் அன்ன— இப்படி செய்துவந்த தன்னோடொத்த
செம்மை— செவ்வையை
சொல்லி— சொல்லிக்கொண்டு
மாயன்— ஆச்சர்ய சேஷ்டிதங்களையுடையவனும்
மாமணி— நீலமணிபோன்ற
வண்ணன் மேல்— திருநிறத்தையுடைய வன் மேலே
மால் உறுகின்றாள்— பிச்சேறுகின்றாள்.

‡ "இவள்" என்று அடிக்கடி சொல்வது— பருவத்துக்கும் செயலுக்கும் சால வைஷம்ய மிருந்ததே! என்னுமத்தைப்பற்ற.

வ்யா. இரண்டாம்பாட்டு. வாயிற்பல்லுமெழுந்தில. வாயில் பல்லும் முளைத்தனவில்லை. இத்தால் - பெற்றதாயாகையாலே இவளை அத்யந்த சிசுவாகநினைத்துச் சொல்லுகிறாள். மயிரும் முடி கூடிற்றில. மயிரும் சேர்த்து முடிக்கலாம்படி கூடினவில்லை. சாய்விலாத. சாய்வு - ஒடுக்கம். தாய்க்கடங்காதே தண்மையில் தலைநின்ற சில பெண்பிள்ளைகளோடே கூடி. தீயிணக்கிணங்காடிவந்து. பொல்லாத இணக்கத்தோடே இணங்கிவந்து. அதாவது - தன்னோடு கலந்தாரைத் தாய்க்கிழடங்காதபடி கலக்கறுக்கும் விஷயத்தோடே கலந்துவந்தென்கை. இவள் தன்னன்ன செம்மைசொல்லி. இப்படி செய்துவந்த இவள், தன்னோடொத்த செவ்வையைச் சொல்லி. அதாவது - 'இத்தனைபோது' எங்கேபோனாய்?

ஆரோடிணங்கிவந்தாய்?என்றால், உண்மைசொல்லுகையன்றிக்கே தன்னுடைய க்ருத்ரிமத்து குணமாகச்சில குடிலோக்திகளைச் செவ்வைபோலே சொல்லி யென்கை. மாயன் மாமணி வண்ணன்மேல். ஆச்சர்யமான குணசேஷ்டிதங்களையும் நீலாத்ரும்போன்ற வடிவையு முடையவன் விஷயத்திலே. இவள் மாலுறுகின்றாளே. இப்படி. செம்மைசொன்னவிவள், அதுக்குச்சேராதபடி அவன் குணசேஷ்டிதங்களைச் சொல்லுவது வடிவழகைச் சொல்லுவதாய்க் கொண்டு பிச்சேறுகின்றாள். ... ... உ.

மூ.—போக்துவெண் மணற்கொண்டு சிற்றிலுமுற்றத் திழைக்கலுறில்
சங்குசக்கரந்தண்டு வாள்வில்லுமல்ல திழைக்கலுருள்
கொங்கையின்னங் குவிந்தெழுந்தில கோவிந்தனெடிவளைச்
சங்கையாகி யென்னுள்ளநாடொறுந் தட்டுளுப்பாகின்றதே. கூ.

பதவுரை.

முற்றத்து— முற்றத்திலே
போக்து— நல்லனியதாய்
வெண்— வெளுத்திரா நின்ற
மணல் கொண்டு— மணலைக் கொண்டு
சிறு இல்— சிற்றில்லை [கொட்டகத்தை]
இழைக்கல் உறில்— சமைக்க முயன்றா ளாகில்
சங்கு— ஸ்ரீபாஞ்சஜந்யமும்
சக்கரம்— திருவாழியாழ்வானும்
தண்டு— கதையும்
வாள்— நந்தகவாளும்
வில்லும் அல்லது— ஸ்ரீசார்ங்கதநுஸ்ஸு மல்லாத மற்றொன்றை
இழைக்கல் உறுள்— இழைக்க நினையாள்;
கொங்கை— முலைகளான்னவை
இன்னம்— இன்னம்
குவிந்து— முகம் திரண்டு
எழுந்தில— எழுந்தனவில்லை;
கோவிந்தனெடு— பசு மேய்க்கும் கண்ணனேடே
இவளை சங்கை ஆகி — } 'இவளுக்குகலவி உண்டா யிருந்ததாக வேணும்' என்று சங்கித்து
நாள் தொறும்— நாடோறும்
என் உள்ளம்— என் மனமானது
தட்டுளுப்பா கின்றது— தடுமாறிச் செல்லா நின்றது.

வ்யா. முன்றும்பாட்டு. பொங்கித்யாதி. "புறம்பே போய் * தியினக்கிணங் காடாதே முற்றத்திலே யிருந்து விளையாடு" என்று நான் நியமித்து வைத்தால், வண்டல்விட்டதாகையாலே நண்ணியதாய் வெளுத்திருக்கிற மணலைக்கொண்டு முற்றத்திலே கொட்டகமிட வொருப்பட்டாளாகில். உறில் என்கையாலே - இதில் இவளுக்கு மநஸ்ஸில்லாமையும் தன்னுடையநிர்ப்பந்தத்துக்காகச் செய்கிறதித்தனையென்னுமதும் தோற்றச்சொல்லுகிறாள். சங்கித்யாதி. அவனுக்கு அஸாதாரணசிஹ்நமாய் அழகுக்கும் விரோதிநிரஸநத்துக்குமுடலாயிருக்கும் ஸ்ரீபஞ்சாயுதமுமொழிய வேறொன்று இடநினையாள். கொங்கையின்னம் குவிந்தெழுந்தில. "முலையோ முழுமுற்றும் போந்தில" என்கிறபடியே முலைகளானவை ஆண்முலைக்கும்பெண்முலைக்கும் வாசிதோற்ற முகம் திரண்டு விளர்த்தனவில்லை. இவள்தான் யுவதியானாலும் தாயார்க்கு அவளுடைய சைசவமிறே தோற்றுவது. கோவிந்தனெடிவளைச் சங்கையாகி. பசுக்களோடும் பொருந்திவர்த்திக்கும் நீர்மையையுடையனனவனேடே யிவளுக்குக் கலவியுண்டாகவேணுமென்று சங்கித்து. என்னுள்ளம் நாடொறும் தட்டுளுப்பாகின்றதே. என்னுடைய மநஸ்ஸானது நாள்தோறும் தடுமாறிச்செல்லாநின்றது. இவ

ளுடைய சைசவத்தைப் பரீத்தவாறே "உண்டு" என்னப்போகிறதில்லை; ஆகையால், இன்னதென்று நிர்ணயிக்கமாட்டாமல் என்னுடைய ஹ்ருதயமானது தடுமாறுகின்றதென்கை. தட்டுளுப்பு- தடுமாற்றம். ... ...கூ.

மூ.—ஏழைபேதையோர் பாலகன்வந் தென்பெண்மகளை யேள்கித்
தோழிமார்பலர் கொண்டுபோய்ச் செய்தசூழ்ச்சியை யார்க்குரைக்கேன்
ஆழியானென்னு மாழமோழையிற் பாய்ச்சியகப்படுத்தி
மூழையுப்பறியாததென்னு மூதுரையுமிலளே. கூ.

பதவுரை.

ஏழை— சபலையாய்
பேதை— அறியாதவளாய்
ஓர்— ஒப்பற்ற
பாலகன்— இளம்பருவத்தளான
என் பெண்மகளை— என் பெண்பிள்ளையை
தோழிமார் பலர்— பல தோழிமார்கள்
வந்து— நேராகவந்து
எள்கி— ஈடுபடுத்தி
கொண்டுபோய்— தங்களோடுகூடக் கொண்டுபோய்
ஆழியான் என்னும் — திருவாழியை யுடையவனென்று ப்ரஸித்தமாய்
ஆழம்— ஒருவரால் நிலைகொள்ள வொண்ணாத ஆழத்தையுடைத்தான
¶ மோழையில்— கிழாறு போலே யிருக்கிற விஷயத்திலே
பாய்ச்சி— உள்ளுறத் தள்ளி
அகப்படுத்தி— அகப்படப்பண்ணி
செய்த— செய்த
சூழ்ச்சியை— க்ருத்ரிம வ்யாபாரத்தை
ஆர்க்கு உரைக்கேன்— ஆருக்குச் சொல்லுவேன்;
மூழை— "அகப்பையானது [தடுப்பு]
உப்பு— தான் முகக்கிற பதார்த்தத்தின் ரஸத்தை
அறியாதது— அறியமாட்டாதது"
என்னும்— என்கிற
முதுரையும்— பழமொழியும்
இலள்— தன் பக்கலில்லாதவளாளுள்.

¶ மோழை— கிழாறு.

வ்யா. நான்காம்பாட்டு. ஏழை. நல்லதுகண்டால் விடமாட்டாத சபலை. பேதை. மேல்விளைவது நிரூபிக்கத்தக்க வறிவில்லாதவள். ஓர்பாலகன். இரண்டுக்குமடியான பருவத்தின் இளமையையுடையவள். என்பெண்மகளை. இப்படியிருக்கிற வென்பெண்பிள்ளையை. தோழிமார்பலர்-வந்து-எள்கி-கொண்டுபோய். தோழிமாரநேகராகவந்து "விளையாடப்போரு" என்று எத்தி, கூடக்கொண்டுபோய். ஆழியானென்னு மாழமோழையிற்பாய்ச்சியகப்படுத்தி - செய்தசூழ்ச்சியை யார்க்குரைக்கேன். "அணியாரூழி" என்கிறபடியே ஸர்வாபரணங்களும் தானேயாகப்போரும்படியான திருவாழியையுடையவனென்று ப்ரஸித்தமாய், ஒருவரால் நிலைகொள்ளவொண்ணாதபடியிருப்பதாய், அகப்பட்டாரை உள்வாங்கிக்கொள்ளும் கிழாறுபோலே யிருக்கிறவிஷயத்திலே உள்ளுறத்தள்ளியகப்படும்படி பண்ணிச் செய்த க்ருத்ரிமவ்யாபாரத்தை யார்க்குச்சொல்லுவேன். மூழையித்யாதி. இவ்வுப்படிபார்த்தால், "முகந்துபரிமாறுகிற மூழையானது தான்முகக்கிற பதார்த்தத்தின் ரஸமறியாது" என்னும் அந்த முதுரையும் தன்பக்கல் இல்லாதவள்காணும். அதாவது- தாங்கள் கலந்து பரிமாறுகிறவிஷயத்தின் ரஸமறியாதாரை "உப்பறியா மூழையாய்" என்று லோகம்சொல்லும்

பழமொழிக்கும் யோக்யதையில்லாதவள் காணுமிவள். இப்படியிருக்கிற விவேகி இவர்கள் இவ்விஷயத்திலே கொண்டுபோய் அகப்படுத்தி மற்றொன்றறியாதபடியாக்குவதே! என்று தன்னிலேகொந்து சொல்லுகிறாள். ... ... ச.

நாடுமூரு மறியவேடோய் நல்லதுழா யலங்கல்
சூடிநாரணன் போமிடமெல்லாஞ் சோதித்துழிதருகின்றாள்
கேடுவேண்டுகின்றார் பலருளர் கேசவனேடிவளைப்
பாடுகாவலிடுமி னென்றென்று பார்தடுமாறினதே ரு.

பதவுரை.

நாடும்— திருவாய்ப்பாடி சூழ்ந்த நாட்டி
லுள்ளாரும்
ஊரும்— திருவாய்ப்பாடியாகிற ஊரி லுள்
ளவர்களும்
அறிய— அறியும்படியாக
போய்— அகத்தைவிட்டுப் புறம்போபோய்
நல்ல— பசுமை நிறத்தையுடைய
துழாய் அலங்கல்— திருத்துழாய் மாலையை
சூடி— சூட்டிக்கொண்டு
நாரணன்— கண்ணனனவன்
போம் இடம் எல்லாம்— வ்யாபரிக்குமிட
மெங்கும்
சோதித்து— தேடி
உழிதருகின்றாள்— திரியாநின்றாள்;
கேடு— (இக்குடிக்குக்) கேட்டை
வேண்டுகின்றார்— விரும்புகிறவர்கள்
பலர் உளர் — பலருமுண்டு;
(ஆகையால்,)
கேசவனேடு— ப்ரசஸ்தகேசனென கண்ண
னோடு
இவளை— அவன் பின்னே திரிகிற இவளை
பாடுகாவல் இடுமின்— அருகு காவலிடுங்
கோள்;
என்று என்று— என்று இத்தையே பல
காலும்சொல்லி
பார்— பூமியிலுள்ள அநுகூல ஜநமானது
தடுமாறினது— தளும்பிச் செல்லா நின்றது

வ்யா. ஐந்தாம்பாட்டு. நாடுமூருமறியவேபோய். தானும் தன்னையணைந்த பந்து வர்க்கமும் அறிந்தவளவாக அவன் பக்கலிலே ப்ரவணையாய் அகம்விட்டுப் புறப்படாம லிருக்கையன்றிக்கே, திருவாய்ப்பாடி சூழ்ந்தநாடும் திருவாய்ப்பாடியான ஊர்தானும் இருந்தேதகுடியாக அறியும்படியாக க்ருஹத்தைவிட்டுப் புறம்போபோய். நல்லதுழாயலங்கல் சூடி. ஸம்ச்லேஷத்தாலே பிசகின திருத்துழாய் மாலையைச் சூடிக்கொண்டு. நாரணனித்யாதி. நாராயணனென்னும் திருநாமத்தையுடைய க்ருஷ்ணன் வ்யாபரிக்குமிடம் பலவுண்டாகையாலே அவன் போமிடமெல்லாம் அவனைக் காண்கைக்காக ஆராய்ந்து திரியாநின்றாள். அதாவது-பசுமேய்க்கை, பெண்களோடே கலக்கை, விளையாடுகை தொடக்கமானவற்றுக்காக அவன் வ்யாபரிக்குமிடங்களெங்கும் தேடித்திரியா நின்றாளென்கை. கேடுவேண்டுகின்றார் பலருளர். இக்குடியின் மிடுக்கம் பொறுமையாலே "இதுக்கோரவத்யம்வரக் காணவல்லோமே!" என்று இக்குடிக்குக்கேடு வேண்டியிருக்கிறார் பலருண்டு. கேசவனித்யாதி. ஆனபின்பு, ப்ரசஸ்தகேசனவனோடே அவ்வைலக்ஷண்யத்திலே யெடுப்புண்டு பின்பற்றித் திரிகிறவிவளை, தானேபோய்ச் சேர்ந்தாளாகாமல் நீங்களே கொண்டுபோய்ச் சேர்த்து அருகு காவலிடுங்கோள். அதாவது-அவனுக்கு ஆஸந்நமான அந்தஃபுரக்காவலிலே யாக்குங்கோ

சென்னெல்.. என்றென்று பார்தடுமாறினதே. இப்படி இத்தைப் பலகாலும் சொல்லி, இக் குடிக்குத் தீங்குவரப்பெற்ற லோகத்தில் அதுகூல ஜனமானது நின்று தளும்பிற்றென் றிரங்கள். ... ... இ.

மூ.—பட்டங்கட்டிப் பொற்றேருபேய்திவள் பாடகமுஞ் சிலம்பும்
இட்டமாகவளர்த் தெடுத்தேனுக் கென்னே டிருக்கலூரள்
21 போட்டப்போய்ப் புறப்பட்டுநின்றிவள் பூவைப்பூவண்ணவென்னும்
வட்டவார்குழன் மங்கைமீ ரிவண்மாலுறுகின்றாளே. கூ.

பதவுரை.

வட்டம்— சுருட்சியையுடைத்தாய்
வார்— நீண்டிருந்துள்ள
குழல்— கூந்தலை யுடையவர்களாய்
மங்கைமீர்— பருவத்தால் வந்த இளமை யையுடையவர்களான பெண்காள்!
பட்டம்— நெற்றிக்கணியான பட்டத்தை
கட்டி— கட்டியும்
பொன்தோடு— (காதுக்கணியான) பொன் னால்செய்த தோட்டையும்
பாடகமும் சிலம்பும்— (கழலணியான) பாடகத்தையும் சிலம்பையும்
பெய்து— இட்டும்
இவள் இட்டமாக— இவளிஷ்டப்படி
வளர்த்து— வளர்த்து
எடுத்தேனுக்கு— இடுப்பிலெடுத்துக் கொண்டு திரிந்த எனக்கு
இவள்— இப்படி அருமையாக வளர்க்கப் பட்ட இவள்
என்னை— இப்படி சீராட்டிவளர்த்த என் னைவிட
இருக்கலூரள்— என்னருகில் இருக்கவும் இசைகிறிலள்;
இவள்—;
பொட்ட— திடீரென்று
போய்— என்னைக் கைவிட்டுப் போய்
புறப்பட்டு நின்று— எல்லாரும் காணத் தெருவிலே புறப்பட்டு நின்று
பூவைப்பூ வண்ண என்னும்— 'காயாம்பூப் போன்ற நிறத்தையுடையவனே!' என்று வாய்விட்டுக் கூப்பிடா நிற்கும்;
(இதனாலறிந்த தென்னென்ன;)
மாலுறுகின்றாள்— பிச்சேறினாள் என்றித்தாய் காணறிந்ததென்கிறாள்.

வ்யா. ஆரும்பாட்டு. பட்டமித்யாதி. லலாடபூஷணமான பட்டத்தைக்கட்டி, கர்ணபூஷணமான பொன்னின் தோட்டையிட்டு, பாதபூஷணமான பாடகத்தையும் சிலம் பையுமிட்டு. "பெய்து" என்கிறக்ரியை இங்கும் அந்வயிக்கக்கடவது. இவைதான் ஸர் வாபரணங்களுக்கு முபலக்ஷணம். இட்டமாகவித்யாதி. நியமித்து வளர்க்கையன்றிக்கே இவளுடைய இஷ்டத்திலே வளர்த்து, நிலத்திலே நடக்கவிடாமல் ஒக்கலையிலே யெடுத்துக் கொண்டு திரிந்தவிவனக்கு. இவள்-என்னைவிட்டிருக்கலாருள். இப்படி நான் சீராட்டி வளர்க் கப்பெற்ற விவள், இப்படி வளர்த்தவளன்றோவென்று ஸ்நேஹித்து எனக்கு பவ்யையாய் நடக்கவேணுமிறே; அது செய்யாவிட்டால், நான் தன்னைக்கண்டநபித்துக்கொண்டிருக் கும்படி நெஞ்சொழியவும் என்னருகு விடாமலிருக்கலாமிறே; அதுவும் செய்கிறிலள். போட்டப்போயித்யாதி. அவ்வளவுமன்றிக்கே, சடக்கென என்னைவிட்டுப்போய், எல்லா ரும் காணும்படி தெருவிலே புறப்பட்டு நின்று, ஸ்த்ரீத்வத்தாலே வாய்திறவாமலிருக்கக்

கடவுளிவள் காயாம் பூவண்ணனென்று அவனுடைய வடிவழகை யநுபவிக்கை யிலுண்டான விடாய்தீராற்றக் கூப்பிடாநிற்கும். வட்டவார்குழல் மங்கைமீர். சுருண்டுநீண்ட குழலியும் பருவத்தால்வந்த இளமைபையு முடையவர்களே!. நீங்களுமெல்லாம் உங்கள் தாய்மார்க்கு நியாம்யைதளாய்ப் போருகிறீகாளே, இவளுமப்படி போரவேண்டாவோ, அது செய்யா மல்; இவள்மாலுறுகின்றாளே. இவள் அவன்விஷயத்திலே பிச்சேறுநின்றாள். ... கூ.

மூ.—பேசவுந்தெரியாத பெண்மையிற் பேதையேன் பேதையிவள்
கூசமின்றிநின்றார்க டம்மெதிர் கோல்கழிந்தான் மூழையாய்க்
கேசவாவென்றுங் கேடிலீயென்றுங் கிஞ்சுகவாய் மொழியாள்
வாசவார்குழன் மங்கைமீரிவண் மாலுறுகின்றாளே. எ.

பதவுரை.

இவள்— இவள்
நின்றார்கள் தம்— நாண் மட மச்சம் பயிர்ப்பு முதலானவற்றில் தவறுமல் நின்ற வர்களுக்கு
எதிர்— முன்னே
கூசம் இன்றி— கூசாமல்
கோல் கழிந்தான்— கோலில் நின்றும் நீங்கின
மூழையாய்— அகப்பைபோலே
(என்னோடு உறவற்றவளாய்க் கொண்டு)
கேசவா என்றும்— 'அழகிய மயிர்முடியை யுடையவனே!' என்றும்
கேடிலீ என்றும்— 'ஒரு கேடுமற்றவனே!' [அச்யுதனே!] என்றும் சொல்லி
மாலுறுகின்றாள்— பிச்சேறுநின்றாள்.

வாசம்— பரிமளப்ரசுரமாய்
வார்— நீண்டிருந்துள்ள
குழல்— கூந்தலே புடைபர்களாய்
மங்கைமீர்— மடப்பத்தால் பூர்ணைகளான பெண்காள்!
பேதையேன்— இவளைச் செவ்வே நிறுத்தும் வகையறியாத என்னுடைய
பேதை— பெண்பிள்ளையாய்
பேசவும் தெரியாத— ஒருவார்த்தை சொல்லவும் பெ(ா)ருத
பெண்மையின்— பெண்தன்மையை யுடையளாய்
கிஞ்சுகம்— இளியிலுடைய
வாய் மொழியாள்— வாய் மொழிபோன்ற வாய் மொழியை யுடையளான

வ்யா. ஏழாம்பாட்டு. பேசவும்தெரியாத பெண்மையின். ஒருவார்த்தை சொல்லப் பெறுத ஸ்த்ரீத்வத்தையுடைய. அதாவது தன்னுடைய ஆசாரத்தால் ஸ்த்ரீத்வத்துக்கு ஒரு நழுவுதல்வாராதபடி வர்த்திக்குமளவன்றிக்கே, நழுவுதலுண்டாக ஒருவர் ஒரு வார்த் தைசொல்லிலும் அதுபொறுமல் ‡ மாந்தும்படியான ஸ்த்ரீத்வத்தையுடையவளென்கை. ஸ்த் ரீத்வமாவது—" நாண் மடம் அச்சம் பயிர்ப்பு " என்கிற ஆத்மகுணயோகம். பேதையேன் பேதை. ஒரு விசகறியாத வென்னுடைய பெண்பிள்ளை. அதாவது - தன் குலத்துக்கும் ஸ்த்ரீத்வத்துக்கும் அநுகுணமாக நடத்துமதொழியப் பேர்ந்துபுரிந்து நிற்கைக்கு ஒரு விசகறியாத வென்வயிற்றிற் பிறந்தவளென்கை. இவள். இப்படியிருக்கிறவிவள். கூசமின்றி நின்றார்கள்தம்மெதிர். " தந்தாமுடைய ஸ்த்ரீத்வத்திலும் மாதர்ப்வ்யதையிலும் தவறுமல் நின்றவர்கள் தங்கள் ஸந்நிதியிலே நாமித்தைச் செய்யும்படியென் " என்கிற கூச்சமின் றிக்கே. கோல்கழிந்தான்மூழையாய். $ கோல்கழிந்தமூழைபோலே தனக்கு ஆச்ரயமானவை

‡ மாந்தும்படியான - மனம்வருந்தும்படியான. ¶ 'தரியாத' என்று பாடமானால் வியாக்கியானத்துக்குச் சேரும். $ கோல்கழிந்த மூழை - காம்பில்லாத அகப்பை.

ன்மேனி ஒட்டற்றவளாய். இத்தால்- எனக்கு நியாம்யையல்லாதவளென்கை. தேசவாவென்றும்: ப்ரசஸ்தமேசளனவமேனியென்றும். கேடிலீயென்றும். உன்னலல்லது செல்லாதவர் கனியொருநாளும் கைவிடாதவனேயென்றும். கிஞ்சுகவாய்மொழியாள். வெளியோடொத்த வாயிற் பழுப்பையும் பேச்சில் இளமையையுமுடையவள். தனக்கடங்காம்ல் கைகழிந்து அவன்பேரைச் சொல்லிநின்று கூப்பிடுகிற தசையிலும், இவளுடைய ஆதரசோடையும் மதுரபாஷணமும் திருக்தாயார்க்கு ஆகர்ஷகமாயிருக்கிறது காணும். வாசலார்குழல்மங்கைமீர். பரிமளிதமாய் ஒழுகுநீண்டமயிர்முடியையும் பருவத்தால்வந்த இளமையையுமுடையவச் களே!. இவள்மாலுறுகின்றாளே. இப்படி யிவள் அவன் விஷயத்திலே பிச்சேறுநின்றாள். எ.

மூ.—காறைபூணுங் கண்ணுடிகாணுந் தன்கையில் வளைகுலுக்கும்
கூறையுடுக்கு மயர்க்குந் தன்கோவைச் செவ்வாய்திருத்தும்
தேறித்தேறிநின் றுயிரம்பேர்த் தேவன்றிறம் பிதற்றும்
மாறின்மாமணி வண்ணன்மேலிவண் மாலுறுகின்றாளே. உ.

293

பதவுரை.

காறை— பொன்னற் செய்த காறையை
பூணும்— கழுத்திலே பூண்நின்றாள்;
கண்ணுடி— கண்ணுடிப் புறத்திலே
காணும்— (காறையும் கழுத்துமான அழகைக்) காண்நின்றாள்;
தன் கையில்— தன் கையிலிருக்கிற
வளை— வளையை
குலுக்கும்— அசைத்துப் பாராநின்றாள்;
கூறை— புடைவையை
உடுக்கும்— ஒழுங்குபட உடாநின்றாள்;
(அவன் வரவுக்கிடாக இவ்வளவு அலங்கரித்தவளவிலும், அவன் வரக்காணுமையாலே,)
அயர்க்கும்— தளராநின்றாள்;
(மீளவும் இதற்குமேலாக அலங்கரிக்கத் தொடங்கி,)
கோவை— கோவைக்கனிபோலே
செம்— சிவந்திருந்துள்ள
தன் வாய்— தன்னுடைய அதரத்தை
திருத்தும்— மிகச் சிவக்கும்படி பண்ணுநின்றாள்;
தேறித் தேறி— மிகத் தெளிவுடையளாய்
நின்று— தரித்து நின்று
ஆயிரம் பேர்— * நாமஸஹஸ்ரவாசகமான
தேவன்— தேவனுடைய
திறம்— ப்ரகாரங்களை
பிதற்றும்— அடைவு கெடப் பேசும் (ஆகையால்,)
மாறு இல்— ஒப்பில்லாத
மா மணி— நீலமணி போன்ற
வண்ணன் மேல்— நிறத்தையுடைய கண்ணன் விஷயத்திலே
இவள் மாலுறுகின்றாள்— இவள் பிச்சேறுநின்றாள்.

வ்யா. எட்டாம்பாட்டு. காறைபூணும். தன்னற்றுமையாலே "ஏதேனுமொன்றைச்செய்து நாமவனைப்பெறவேணும்" என்று நினைத்து, "அவனுக்கு ஆகர்ஷகமாம்படி நம்மை யலங்கரிக்கவே அவன்தானேவந்து மேல்விழும்" என்று தான் தன்னையலங்கரிக்கையிலே ப்ரவர்த்தையாய், ப்ரதமம், அவன் கண்டு ப்ரியப்பட்டுக் கட்டிக்கொள்ளும் கழுத்துக்கு அலங்காரமாகக் காறையைப்பூணும்.. இதுதான் உத்தமாங்கத்துக்கும் உடம்புக்கும் நடுவாய் நின்று ஒளிவிடுவதோராபரணமிறே. கண்ணுடிகாணும். காறைபூண்டதிருத்தம் தன்கண்ணுக்கு விஷயமல்லாமையாலே, அவனுக்கும்படி வாய்த்ததோவில்லையோ என்று

மிடம்நிகைக்காக காறையும் கழுத்துமான சேர்த்தியழகைக் கண்ணுடிப்புறத்திலே பார்நிற்கும். இதுதான் அவயவாந்தரங்களிலாபரணங்களும் இவள்பூணுமதுக்கு முபலக்ஷணம். தன் கையில் வளைகுலுக்கும். இம்மனோரதமடியாக உடம்பிலே ஒரு பூரிப்புத் தோற்றுகையாலே அதநிகைக்காகக் கையில் வளையையசைத்துப் பார்நிற்கும். விரஹகார்ச்யத்தாலே கையில் வளைகள் கழன்றலும் பின்னையும் எடுப்பது இடுவதாயிறே இவள்தானிருப்பது. இவள் எடுத்துஇட்டாலும் அவை கையில் தொங்காதே; இப்போது உடம்பில் தோன்றுகிற பூரிப்பாலே அவை கையில் தொங்கினமையறிகைக்காக அசைத்துப்பார்நிற்குமென்கை.

கூறையுடுக்கும். பரியட்டமும் அரையில் தொங்கும்படியாய்த்து - இம்மனோரத நிபந்தமான தேஹறபௌஷ்கல்யத்தாலேயிறே; அல்லாதபோது, கையிலேயொரு † தலையும், காலிலும் தலையிலும் ஒரு † தலையுமாமிறே. வளையும் கலையும், கர்தஸங்கேதரைப் போலே கழலும்போதும் ஒக்கச்கழன்று, தொங்கும்போதும் ஒக்கத்தொங்காநிற்குமாய்த்து; காறை பூண்டதுக்குமேலே ஔசித்யம் தேடிகைக்காகவிறே கூறையுடுக்கப்புகுந்தது. அதாவது - அவனுக்காகர்ஷகமாம்படி பரியட்டத்தை நன்றாக வுடாநிற்குமென்கை. இவளுடைய அழகிலேயாய்த்து அவனீடுபடுவது. ஆகையால், அவன் உகக்கத்தக்கவுடை வாய்ப்பு வருமளவும் குலைப்பது உடுப்பதாய்ச் செல்லாநிற்குமாய்த்து. அயர்க்கும். இப்படி அவன் வரவுக்குடலாகத் தன்னை யலங்கரித்தவளவிலும் வரக்காணுமையாலே அறிவழியாநிற்கும்.

தன்கோவைச்செவ்வாய் திருத்தும். மீளவு மறிவு குடிபுகுந்து "இன்னமும் அவனுக்காகர்ஷகமாம்படி விருப்பதோ ரதிசயம் நம்பக்கலிலே உண்டாக்கக்கடவோம்" என்று ஸ்வபாவமே கோவைப்பழம்போலே சிவந்திருக்கிற தன்னுடைய அதரத்தை ராகஜநகமான பதார்த்த ஸேவைகளாலும் மிகவும் சிவக்கும்படி பண்ணுநிற்கும். அல்லாதவைபோலன்றிக்கே, இது அவனுக்கு வாய்புகுசோறு யிருப்பதொன்றிறே; "தொண்டையஞ் செங்கனிவாய்த்துகர்ந்தான்" என்கிறபடியே. தேறித்தேறிநின்று. தன்னுடைய அவயவாலங்காரத்தின் வாய்ப்பாலும் (க)- "கஸ்மிம்ஶ்ச வஹவோகுணாஃ" என்கிறபடியே இத்தசையில் வந்த உதவுகைக்கீடான அவன்குணங்களில் விச்வாஸத்தாலும் அயர்க்கைதவிர்ந்து மேன்மேலும் தெளிவையுடையளாய், அத்திதளிவு கைகொடுக்கத் தரித்துநின்று. ஆயிரம்பேர்த் தேவன் திறம்பித்தற்றும். (உ) "தேவோநாம ஸஹஸ்ரவாந்" என்கிறபடியே தன்குண சேஷ்டிதங்களுக்கு வாசகமான ஆயிரம் திருநாமங்களையுடையனாய், அவை யெல்லாவற்றிலும் மநோஹரமான வடிவழகை யுடையனானவனுடைய ப்ரகாரங்களை, அவற்றினுடைய ரஸ்யதையாலே கலங்கி அடைவுகெடப் பேசாநிற்கும். மாறிபித்யாதி. ஆகையால், ஒப்பில்லாத நீலரத்நம்போன்ற வடிவழகையுடையவன் விஷயமாக இவளிப்படி பிச்சேறுநின்றனி.அ

மூ.—கைத்தலத்துள்ள மாடழியக் கண்ணுலங்கள் செய்திவளை
வைத்துவைத்துக்கொண் டென்னவாணிப நம்மைவடுப்படுத்தும்
செய்த்தலையெழு நாற்றுப்போலவன் செய்வன்செய்துகொள்ள
மைத்தடமுகில்வண்ணன்பக்கல் வளரவிடுமின்களே கூ.

† தலை - தலைப்பு, முந்தானை. (க) "தஸ்மிம்ச்சபஹவோகுணாஃ."
(உ) "தேவோநாம ஸஹஸ்ரவாந்."

பதவுரை.

(இவள் விஷயமாக,)

கைத்தலத்து உள்ள— கையிலுள்ள

¶ மாடு அழிய—செல்வமெல்லா மழியும்படி

கண்ணழகங்கள்— கல்யாணங்களை

செய்து— பண்ணி

இவளை— நமக்குக் கீழ்ப்படியாத இவளை

வைத்து வைத்துக் கொண்டு— நியமித்தும்

காவலிட்டும் வைத்துக் கொண்டிருந்து

என்ன வாணிபம் — என்னப்ரயோஜநமுண்

நம்மை— நம் குடிக்கு [டாம்;

வடுப்படுத்தும்— பழியுண்டாக்கா நிற்கும்;

(என்று தாயார் சொல்ல;- இத்தைக்

கேட்ட பந்துக்கள்-)

செய்த்தலை— கழனியிலே

எழு— வளருகிற

நாற்றுப்போல்— நாற்றையுடையவன் வேண்

டினபடி அவற்றை நியோகம்கொள்ளு

மாப்போலே

இவளையும்;

அவன் — இவளாலே விரும்பப்படுகிற

அவன்

செய்வன் செய்துகொள்ள— வேண்டின

படி செய்து கொள்ளும்படியாக

மை— கறுத்ததாய்

தட— பெருத்திருந்துள்ள

முகில்— மேகம்போன்ற

வண்ணன் பக்கல்— வடிவையுடையவன்

பக்கலிலே

வள— இவள் வளரும்படியாக

விடுமின்கள்— விடுங்கோள்

என்றார்கள்.

¶ "மாடு - பொன், பக்கம், செல்வம்" என்று நிகண்டு.

வ்யா. ஒன்பதாம்பாட்டு. கைத்தலத்துள்ளவித்யாதி. பந்துவர்க்கத்துக்கோடாகவும் ஐச்வர்யத்துக்கோடாதவும், இதொரு பெண்ணுமன்றே நமக்குள்ளது என்னும் ஸ்நேஹத்தாலே லோகமெல்லாம் கொண்டாடும்படி கையிலுள்ள தாமெல்லாமழிய இவள் விஷயமாக வுண்டான கல்யாணங்களை யெல்லாம்செய்து. இவளையித்யாதி. "நம்முடையபிழைக்காத பருவமான விவளைக் கடக்கலாமோ" என்று பார்த்து, நியமித்தும் காவலிட்டும் வைத்துக் கொண்டிருந்து என்ன ப்ரயோஜநமுண்டு. நமக்கு மிவளுக்கும் ஜாத்யுசிதமாகக் கொள்ள லாவதொரு ப்ரயோஜநமில்லையிறே. நம்மைவடுப்படுத்தும். இதுக்குமுன்பு ஒரு பழிப்பற் றுப்போந்த நம்மை யிப்படிப்படி பண்ணும். அதாவது - "பந்துக்கள் உடன்படாதிருக் கத்தானே புறப்பட்டுப்போனாள்" என்னும்படிபோய் நம்முடையகுடிக்கு அவத்யத்தை விளைக்குமென்கை. செய்த்தலையித்யாதி. செய்த்தலையிலே வளர்ந்த நாற்று உடையவன் வேண்டினபடி நியோகம் கொள்ளுமாபோலே இவளையும் அவன்வேண்டினபடி செய்து கொள்ள. மையித்யாதி. கழுத்தேகட்டினாப்போல நீரைப்பருகுகையாலே கறுத்துப் பெருத் திருந்துள்ள மேகம்போலே யிருக்கிற வடிவை யுடையவன்பக்கலிலே இவள்வளரும்படியாக நீங்களே சேர்த்துவிடுங்கோள், என்று இப்படி பந்துக்கள் சொன்னார்கள் என்கிறவித்தனை யும் இவ்விடத்தில் அபிப்ரேதம். அதுக்கடி "தாயுரைசெய்ததனை" என்று-திருமொழி முழுதும், தாயார்வார்த்தையென்று நிகமிக்கையாலே. இது மேன்மேற்பாட்டுக்குமொக்கும். கூ

மூ.—பெருப்பெருத்த கண்ணழகங்கள்செய்து பேணிநம்மில்லத்துள்ளே
இருத்துவா னெண்ணிநாமிருக்க விவளுமொன் றெண்ணுகின்றாள்
மருத்துவப்பத்தீங்கிவளென்னும் வார்த்தைபடுவதன்முன்
ஒருப்படுத்திமினிவளை யுலகளந்தானிடைக்கே. ஒ

பதவுரை.

பெருப் பெருத்த— மிகப் பெரிதான
கண்ணலங்கள்— கல்யாணங்களை
செய்து— பண்ணி
பேணி— குலமர்யாதையைப் பேணி
நம் இல்லத்துள்ளே— நம் அகத்துக்குள்ளே
இருத்துவான்— இவளை இருத்துவதாக
நாம் எண்ணி இருக்க— நாம் நினைத்திருக்க
இவள்— இப்பெண்பிள்ளையானவள்
ஒன்று— நம் எண்ணத்துக்கு எதிர்த்திட்
டான தொன்றை
எண்ணுகின்றாள்— எண்ணி நின்றாள்
(என்று தாயார் சொல்ல;- இதைக்
கேட்ட பந்துக்கள் -)

மருத்துவப்பதம் நீங்கினாள் என்னும் } 'வைத்யன் செய்யும்
மருந்தில் பாகம் பார்
த்துச் செய்யாதபோது அதுவை
தவறுமாப்போலே, இவள் பதம்
பார்த்து நாம் செய்யாமையாலே
கைகழிந்தாள்' என்கிற
வார்த்தை— வார்த்தையானது
படுவதன் முன்— உலகத்தில் உண்டாவதற்கு
முன்னே
உலகு அளந்தானிடைக்கே— உலகத்தை
நீரேற்றளந்த வனிடத்திலே
இவளை— இவளை
ஒருப்படுத்திடுமின்— நீங்களே சேர்த்து
விடுங்கோள்
என்றார்கள்.

வ்யா. பத்தாம்பாட்டில். பெருப்பெருத்த கண்ணலங்கள் செய்து. லோகத்திலுள்ளார் ஐச்வர்யச்செருக்காலே பெருக்கச்செய்யும் கல்யாணங்களிலும் பெரியதான கல்யாணங்களைச்செய்து. பேணி. குலமர்யாதையைப்பேணி. நம்மில்லத்துள்ளேயித்யாதி. நம் முடைய க்ருஹத்துக்குள்ளே இருத்துவதாக நாம் மநோரதித்துக் கொண்டிருக்க. இவளு மொன்றேயெண்ணுகின்றாள். நம்முடைய எண்ணுதலுக்கு விபரீதமாக இவளுமொன்றை யெண்ணுகின்றாள். அதாவது- இங்குத்தையிருப்பு காராக்ருஹவாஸமாய், அவன் பக்கலிலே போகவே மநோரதியா நின்றாளென்கை. மருத்துவப்பதமித்யாதி மருத்துவனானவன் சமைக்கிற ஔஷதத்தில் பாகம்பார்த்துச் செய்யாதபோது அது கைதவறுமாப் போலே, இவள்பதம் பார்த்து நாம் செய்யாமையாலே இவள் கைகழிந்தாளென்னும் வார்த்தை ;லோகத்திலுண்டாவதுக்கு முன்னே. ஒருப்படுத்திடுமினித்யாதி. தன்னுடைமையை மஹாபலி "என்னது" என்றிருக்க, பிரகாலே அவன் பக்கலில்நின்றும் வாங்கித் தன்திருவடிகளின் கீழே யிட்டுக்கொண்டவன் பக்கலிலே இவளை நீங்களே சேர்த்துவிடுங்கோள்; நீங்கள் சேராத போது இவள் ஸ்வபாவத்தாலும் இரண்டுதலையும் சேர்ந்தவிடும்; ஆனபின்பு, ஏற்கவே நீங்களே சேர்த்துவிடுங்கோளென்று த்வரிப்பிக்கிறார்கள். ... ... ஏ.

மு.—ஞாலமுற்று முண்டாலிலைத்துயி ஞராயணனுக்கிவள்
மாலதாகி மகிழ்ந்தனளென்று தாயுரைசெய்ததனைக்
296 கோலமார்பொழில்சூழ் புதுவையர்கோன் விட்டுசித்தன்சொன்ன
மாலைபத்தும் வல்லவர்மட்கில்லைவருதுயரே. கக.

பதவுரை.

ஞாலம் முற்றும்— பூமி தொடக்கமான
ஸகலலோகங்களையும்
உண்டு— ப்ரளயத்திலழியாதபடி திருவ
யிற்றிலே வைத்து
ஆல் இலை— ஓர் ஆலந்தளிரிலே
துயில்— கண்வளர்ந்தருளின
நாராயணனுக்கு— நாராயணன் விஷயத்
திலே

இவள்—;
மாலதாகி— மிக்க ஆசையை யுடையளாய்க் கொண்டு
மகிழ்ந்தனள் என்று — மகிழ்ந்தாளென்று
தாய்— திருத்தாயார்
உரை செய்ததனை— சொன்னதை
கோலம் ஆர்— அழகுமிக்கிருந்துள்ள
பொழில்— பொழிலாலே
சூழ்— சூழப்பட்ட
புதுவையர்— ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ளார்க்கு
கோன்— நிர்வாஹகரான
விட்டுசித்தன்— பெரியாழ்வார்
சொன்ன— அருளிச்செய்த
மாலை— சொல்மாலையான
பத்தும்— பத்துப்பாட்டையும்
வல்லவர்கட்கு— ஓதவல்லவர்களுக்கு
வரு— பகவதநுபவத்துக்கு விரோதியாய் வருவதொரு
துயர்— துக்கம்
இல்லை— உண்டாகாது.

வ்யா. ஞாலமித்யாதி. பூமிதொடக்கமான ஸகலலோகங்களும் ப்ரளயத்தில் அழியாதபடி திருவயிற்றிலேவைத்து ரக்ஷிக்கையிலே கண்வளர்ந்தருளின அகடிதகடநா ஸாமர்த்ய்யத்தை யுடையனும் ஸர்வஸ்வாமியான நாராயணனுக்கு. இவள்மாலதாகி மகிழ்ந்தனளென்றித்யாதி. அதிபாலியானவிவள் அதிமாத்ரமான வ்யாமோஹத்தை யுடையளாய்க்கொண்டு ஸம்ச்லேஷ மநோரதத்தாலே ப்ரிதையாலுளென்று தாயாரானவள் சொன்னசொலவை. கோலமித்யாதி. அழகுமிக்கிருந்துள்ள பொழிலாலே சூழப்பட்ட ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ளார்க்கு நிர்வாஹகரான பெரியாழ்வாரருளிச்செய்த ஸுகர்ப்பமாய் ச்லாக்யமாயிருந்துள்ள பத்துப்பாட்டையும் ஸாபிப்ராயமாக அநுஸந்திக்க வல்லவர்களுக்கு. இல்லைவருதுயரே. பகவதநுபவாதிகளுக்கு விரோதியாய் வருவதொரு துக்கமில்லை. ... ... கக.

பெரியஜீயர் திருவடிகளே சரணம்.

அடிவரவு.—ஐய வாயில் பொங் கேழை நாடு பட்டம் பேச
காறை கைத்தலப் பெரு ஞாலம் நல்ல.

ஆ திருமொழி-உசு-க்கு, பாட்டு-உஅச.

மூன்றும்பத்து - எட்டாந்திருமொழி - நல்லதோர் தாமரை, ப்ரவேசம்.

அ.—கீழிற்றிருமொழியிலே – தன்பெண்பிள்ளைக்கு அவன்பக்கல் செல்லுகிற ப்ராவண்யத்தைக்கண்ட திருத்தாயார் “ கோவிந்தனோடி வளைச்சங்கையாகி ” என்று அவனோடு இவளுக்குக் கலவியுண்டாய்த்தோவென்று முந்துறச்சங்கித்து, பின்பு பலஹேதுக்களாலும் ஸம்ச்லேஷம் ப்ரவர்த்தமானமையைத் தானுமறிந்து, இவளுடைய ப்ராவண்யத்திலே ‡ முறுகுதலைக்கண்ட பந்துக்களும், “ மருத்துவப்பதம் நீங்கினளென்னும் வார்த்தைபடுவதன்முன் ஒருப்படுத்திடுமினிவளை யுலகளந்தானிடைக்கே ” என்றுசொல்லி யிருக்கச்செய்தேயும், சடக்கெனவிரைந்து கொடாதொழிகையாலே, அவன் முற்பாடனுய்வந்து ¶ * கள்வன் கொல்

‡ முறுகுதல் - முதிர்த்தி.
¶ “ கள்வன்கொல் யானறியேன் ” என்ற திருமொழியிற் சொன்ன பிராட்டி.

வீற் பிராட்டியைக் கொண்டுபோனற்போலே இவளை ‡ அத்தவாளத்தலையாலே மறைத்துக் கொண்டு தன்னுடைய திவ்யாகரியான திருவாய்ப்பாடியிலே கொண்டுபோக, அந்தரங்கமாகக் காத்துக்கொண்டுகிடந்த திருத்தாயார், படுக்கையில் பெண்பிள்ளையைக் காணுமையாலே “இவளையொழியக் கொண்டுபோவாரில்லை” என்றும் “இவன் கொண்டுபோவது தான் திருவாய்ப்பாடியிலே” என்றும் அறுதியிட்டு; இவள்போகையாலே தன் திருமாளிகையெல்லாமழகழிந்து வெறியோடிற்றென்றும்; இவன் இப்படியடைவுகேடாகக் கொண்டு போனவிது இக்குடிக்கு ஏச்சாமோ குணமாமோவென்றும்; இவளுக்கு பாணிக்ரஹணார்த்தமான உத்ஸவம் இப்படி நடக்குமோவென்றும்; மாமியாரான யசோதைப்பிராட்டி இவளைக் கண்டுகந்து மணவாட்டிப் பெண்பிள்ளையென்று ஸ்தகரிக்குமோவென்றும்; மாமனரான ஸ்ரீநந்தகோபர் உகந்தணைத்துக் கொண்டு இவள் வைலக்ஷண்யத்தைக்கண்டு இவளைப்பெற்ற தாயார் இனி தரிக்கமாட்டாரென்பதோ வென்றும்; அவன்றன் நிஜாகுலத்தி லுள்ளாரைப்போலே என்மகளைப் புணர்ந்து உடன்போகைக்கு ஹேதுவாகக்கொண்டு குடிவாழுமோ, நாடெல்லாமறியும்படி நன்றாகக் கண்ணாலஞ்செய்து கைப்பிடிக்குமோவென்றும்; தன்பெருமையாலே அவன் இவளுக்கு ரூபகுணசீலாதிகளைச்சொல்லி வரிசையறுத்து ஆண்டிடுமோ, தனக்கு ஜாத்யுசிதமான மஹிஷியாகப் பட்டங்கட்டி பூர்வ மஹிஷிகள் முன்னே வைபவம் தோற்ற வைக்குமோவென்றும்; இவள்தான் தயிர்கடைகை முதலான வன்தொழில்கள் செய்து குடிவாழ்க்கை வாழவல்லளோ வென்றும் இப்படி க்லேசித்தும் மநோரதித்தும் சென்ற ப்ரகாரத்தைச் சொல்லுகிறது - இத்திருமொழியில். ... ... *

மூ.—நல்லதோர் தாமரைப்பொய்கை நாண்மலர்மேற் பனிசோர
அல்லியுந்தாது முதிர்ந்திட் டமுகழிந்தா லொத்ததாலோ
2.97— இல்லம்வெறியோடிற்றிலோ வென்மகளை யெங்குங்காணேன்
மல்லரை யட்டவன்பின்போய் மதுரைப்புறம் புக்காள்கொலோ. க.

பதவுரை:

நல்லது— அழகியதாய்
ஓர்— ஒப்பற்றிருக்கிற
தாமரைப் பொய்கை— தாமரைப் பொய்கையான்து
நாள்— அப்போதலர்ந்த
மலர் மேல்— பூவின்மேல
பனி— அதற்கு விரோதியான பனியானது
சோர— விழ (அத்தாலே,)
அல்லியும்— உள் இதழும்
தாதும்— தூகளும்
உதிர்ந்திட்டு— உதிர்ந்து
அழகு அழிந்தால் ஒத்தது— அழகழிந்தாற் போலே;
இல்லம்— அகமானது
‡ வெறியோடிற்று— வெளியாய் விட்டது;
என் மகளை— என் பெண்பிள்ளையை
எங்கும்— எவ்விடத்திலும்
காணேன்— காண்கிறிலேன்;
மல்லரை— சாணூர, முஷ்டிக்களை
அட்டவன் பின் போய்— நிரஸித்தவன் பின்னேபோய்
மதுரைப் புறம்— மதுரைக்கு அணித்தான ஆய்ப்பாடியிலே
புக்காள் கொல் ஓ— புகுந்தாளோ!

என்று ஸந்தேஹிக்கிறாள்.
(அல் - ஓ - அசை.)

‡ ‘வீடு வெறிச்சென்றிருக்கிறது’ என்று உலகவழக்கத்துக்கேற்ப.

‡ அத்தவாளத்தலை - முந்தானை.

வ்யா. முதற்பாட்டு. நல்லதோர்தாமரைப்பொய்கை. பரப்புமாறத் தாமரைபூத்துக் கிடக்கையாலே, அழகியதாய் அத்விதீயமான பொய்கையானது. நாண்மலர்மேற்பனி சோர. சிவப்பு, விகாஸம், குளிர்த்தி, பரிமளம், மார்த்தவம் இவற்றையுடைத்தான நாட்பூவின்மேலே, அதுக்கு விருத்தமான பனியானது சொரிய. அல்லியித்யாதி. அத்தாலே அல்லியும் தாதும் செவ்விகெட்டுத் தீர்ந்து அலங்கார்மானபூ அழிகையாலே தானழகழிந்தாற்போலேயிராநின்றது. ஸ்தாவரஜாதிக்கெல்லா முபகாரகமா யிருந்ததேயாகிலும் தாமரைக்கு பாதகமாகை நியதஸ்வபாவமிறேபனிக்கு. அப்படி பனியேயுண்ட தாமரையோடை போலேயாய்த்து இத்திருமாளிகை கிடக்கிறது. ஆலும், ஒவும்- விஷாதாதிசயஸூசகம். இல்லம் வெறியோடிற்றுலோ. க்ருஹமானது வெறிபாய்ந்துவிட்டது. ஒருஜந்துஸஞ்சாரமற்று வெளியாய்க்கிடவா நின்றதென்கை. இக் க்ருஹம்முழுக்க இப்பெண்பிள்ளை யொருத்தியும் போலே காணுமிருந்தாள்; எல்லாருமிருந்தாலும் இவளொருத்தியும் போகவே திருத்தாயார்க்கு அப்படி தோற்றுமிறே. மீளவும் " ஆலோ " என்கிறாள் - விஷாதாதிசயத்தாலே. என்மகளேயெங்கும்காணேன். என்பெண்பிள்ளையை யோரிடத்திலும் காண்கிறிலேன். க்ருஹம்மாத்ரமன்றிக்கே, பண்டு இவளிருக்குமிடம் ஸஞ்சரிக்குமிடமெங்கும் தேடிக்காணுமையாலே சொல்லுகிறாள். மல்லரையித்யாதி. இங்குக்காணுமையாலே " அவன் கொண்டு போனான் " என்று அநுபவியிட்டு, மல்லநிரஸநம்பண்ணின வீரப்பாட்டையுடையவன் பின்னேபோய், மதுரைப்புறத்திலே புகுந்தானோ வென்கிறாள். மதுரைப்புறமாவது - மதுரைக்கு அடுத்த அணித்தான திருவாய்ப்பாடி. " மதுரைப்புறம் புக்காள்கொலோ " என்றது - " அணியாலி புகுவர்கொலோ " என்றாற்போலே. அதாவது - ஒருவர்க்கொருவர் ஹமத்தங்காயாகையாலே கம்ஸநகரியான மதுரைதன்னிலே சென்று புகவும், கூடுமிறே அது செய்யாதே, தனக்கு உத்தேச்யபூமியான திருவாய்ப்பாடியிலே போய்ப்புகுந்தானோ வென்று ஸம்சயிக்கிறாள். ... ...

மூ.—ஒன்றுமறி வொன்றில்லாத வுருவறைக் கோபாலர்தங்கள்
கன்றுகான் மாறுமாபோலே கன்னியிருந்தானைக்கொண்டு
நன்றுங்கிறிசெய்துபோன நாராயணன் செய்ததீமை
என்றுமெமர்கள்குடிக் கோரேச்சுக்கொ லாயிடுங்கொலோ. உ.

298

பதவுரை.

ஒன்று— பொருந்தின
அறிவு— ஞானம்
ஒன்றும்— அல்பமும்
இல்லாத— இல்லாதவர்களாய்
உரு அறை— ரூபஹீநர்களான
கோபர்லர் தங்கள்— இடையரானவர்கள்
கன்றுகால் மாறுமாபோலே— நல்வழியாய்க்
கண்ணுக்கு நன்றாயிருந்துள்ள கன்று
களை உடையவர்களறியாமல் கள
வீலே கொண்டுபோமாப்போலே
கன்னி— கன்னிகையாய்
இருந்தானை— எனக்குக் கீழ்ப்படிந்திருந்த
என்மகளை
நன்றும்— மிகவும்
கிறி செய்து— உபாயம்பண்ணி
கொண்டு போனான்— கொண்டு போன
வனுடைய
நாராயணன்— நாராயணனவன்
செய்த— செய்த
தீமை— தீம்பானது
எமர்கள் குடிக்கு— எங்கள் குலத்துக்கு
என்றும்— எப்போதும்
ஓர் ஏச்சு ஆயிடும் கொல் ஓ— ஒரு பழிப்
பாமோ புகழாமோ?
என்கிறாள்.

வ்யா. இரண்டாம்பாட்டு. ஒன்றுமறிவொன்றில்லாத. பொருந்தின வறிவு ஒன்றுமில்லாத. லௌகிகவைதிகங்களோடு சேர்ந்த வறிவு அற்பமுமில்லாத; * அறிவொன்றுமில்லாத வாய்க்குலமிதம்: காட்டிலே பசுமேய்க்கப்போன் விடங்களிலே வழிதிகைத்தால் வழிகாட்டுவது பசுக்களாம்படியிறே இவர்களறிவிருப்பது. உருவறைக்கோபாலர். ரூப ஹீநரான கோபாலர். ஆத்மகுணமில்லாதாற்போலே 'ரூபகுணமுமில்லாதவர்களென்கை. தங்கள். "தாங்கள்" என்கிறவித்தைக் குறைத்துக்கிடக்கிறது. கோபாலர் தாங்களென்றபடி. இவர்களுடைய வறிவுகேடும் வடிவுகேடும் சொன்னது-இவைபார்த்தால் பொல்லாதாயிருக்குமாப்போலே, இவர்களுடையவ்வார்த்தியும் பார்த்தால் பொல்லாதாயிருக்குமென்னைக்காக. அந்தவ்வார்த்திதன்னைச் சொல்லுகிறதுமேல் கன்றுகால்மாறுமாபோலேயென்று.கன்றுகால் மாறுகையாவது- நீதாயிருந்துள்ள தங்களுடைய கன்றுகளை "உங்களது" என்று பிறர்க்குக் காட்டி, நல்லதாயிருந்துள்ள அவர்களுடைய கன்றுகளைத் தங்களதாக்கிக்கொள்ளுகையும், நல்வழியாய்க்கண்ணுக்கு நன்றாயிருக்கும் கன்றுகளை உடையவர்களறியாமல் களவிலே நிலைபோர்த்தக்கொண்டுபோகையுமிறே; இதில் பிற்பட்டதே இவ்விடத்துக்குச் சேருவது. இப்படி இவர்கள் செய்யுமாபோலே.

கன்னியிருந்தாளை- நன்றும்கிறிசெய்து - கொண்டு- போனன். கன்னிகையாய், விஷயரஸமென்பதொன்றறியாதே பட்டிகடந்து புறப்படாமல் என்கிழேயிருந்தவளை, முன்தீம்பு செய்து தன் சுவட்டையறிவித்துத் தன்வசமாக்கி, நானறியாதபடி மிகவும் விரகு செய்து கொண்டுபோனன். நாராயணன் செய்ததீமை. ஸமஸ்தகல்யாணகுணாத்மகனுகையாலே நன்மையே செய்யக்கடவனவன் இப்படி தீமையைச்செய்வதே!. இவ்விடத்தில் தீமையாவது-தன்னுடைமையைத்தான் கொண்டுபோம்போது வரைந்து வெளிப்படக்கொண்டுபோகலாயிருக்க, இப்படி களவிலே கொண்டுபோனது. என்றுமித்யாஜ்ஞ. இப்படி யிவன்செய்த தீமை நிரவதியமானவெங்கள் குடிக்கு எல்லாக்காலத்திலும் நிற்பதொரு பழிப்பாமோ; அன்றிக்கே, இக்குடியிற்பிறந்ததொரு விஷயத்தை வரைந்துகொடுக்கப் பெறுமல் அவன் முற்பாடனுய்வந்து கைக்கொண்டுபோனவிதுதன்னுலே இக்குடிக்கேற்றமாமோ. "கொல்லியென்பர் கொலோ குணம் மிக்கனளென்பர்கொலோ" என்னுமாபோலே, இக்குடிக்கு இது பழியாமோ, புகழாமோ வென்கிறாள். ... ... உ.

மூ.—குமரிமணஞ் செய்துகொண்டு கோலஞ்செய் தில்லத்திருத்தித்
தமரும்பிறருமறியத் தாமோதரற் கென்றுசாற்றி
அமரர்பதியுடைத்தேவி யரசாணியை வழிப்பட்டுத்
துமிலமெழப் பறைதொட்டித் தோரணநாட்டிடுங்கோலோ. கூ-

299

பதவுரை.

குமரி— கன்னிப்பெண்ணுக்கு
மணம்செய்துகொண்டு— விவாஹத்துக்கு
முன்னதாகச் செய்யும் கல்யாணம் செய்து
கோலம்செய்து— ஆடை, ஆபரணங்களாலே அலங்கரித்து
இல்லத்து— விவாஹபவனத்திலே
இருத்தி— உட்காரவைத்து
தமரும்— பந்துக்களும்
பிறரும்— மற்று முள்ளாரும்
அறிய— அறியும்படி
தாமோதரற்கு— தாமோதரனை கண்ணனுக்

என்று — கொடுக்கப் புகுகிறேமென்று சாற்றி— பறையறைந்து (அதனால்,) அமரர்பதியுடை— தேவாதிராஜனுடைய தேவி— தேவியான இவள் அரசாணியை— அரசங்கினையை வழிப்பட்டு— (ஜாத்யாசாரப்படி) வலம்வர தமிலம் ஏழ— பேராரவாரம் தோன்ற பறை கொட்டி— பறையை முழக்கி தோரணம்- மகரதோரணம் முதலியவற்றை நாட்டிடும் கொல் ஓ— ஊரெங்கும் நாட்டி அலங்கரித்துக் கொண்டாடுவர்களோ? கொண்டாட்ட மேதுக் கென்பர் களோ வென்று ஸங்கதஹிக்கிறாள்.

வ்யா. மூன்றும்பாட்டு. குமரிமணம்செய்துகோண்டு. குமரி- கந்திகை, கந்திகாவஸ்தையில் செய்யும் கல்யாணத்தைச் செய்துகொண்டு. அதாவது- விவாஹத்துக்கு பூர்வாங்கமாகச்செய்யும் உத்ஸவவிசேஷத்தைச் சொன்னபடி. கோலஞ்செய்து. ஆபரணவஸ்த்ராங்காராதிகளாலே யலங்கரித்து. இல்லத்திருத்தி. கல்யாணக்ருஹத்திலே யிருத்தி. தமருமித்யாதி. பந்துக்களும் மற்றுமுள்ளாருமறியும்படி, "தாமோதரனுக்கு இவளைக்கொடுக்கப்புகாநின்றோம்" என்று ப்ரஸித்தமாக்கி. தாமோதரனென்றது- மாதாவானவன் கட்டின கட்டு அவிழ்த்துக்கொள்ள சக்தனன்றிக்கே அவள் நியமநம் தப்பாமலிருந்த நீர்மையையுடையவனென்றபடி. அமரர்பதியுடைத்தேவி. அங்குத்தைக்கென்று ஸங்கல்பித்து *தமரும் பிறரு மறியச்சாற்றினபோதே * அயர்வறுமமரர்களதிபதியானவனுடைய தேவியானவள், அரசாணியைவழிப்பட்டு. ஜாத்யுசிதமாம்படி அலங்காரபீடத்துக்குத்தகுனை அரசாணியை வலம்வந்து. அரசாணியாவது- அலங்காரபீடத்தின்மேலே நாட்டும் அச்வத்தகண்டம். தமிலமெழப்பறைகொட்டி. பெரிய ஆரவாரத்தோன்ற வாத்யத்தைமுழக்கி. "மத்தளங்கொட்ட" என்னக்கடவதிறே. தோரணம்நாட்டிடுங்கோலோ. ஊரெங்கும் தோரணம் நாட்டுகைமுதலான அலங்காரங்களைக் கற்பித்துக் கொண்டாடுவர்களோ; குடியிற்பிறந்தார், 'கல்யாணத்துக்குக் கொண்டாட்டமென்செய்ய?' என்பர்களோ?. ... ... க.

மூ.—ஒருமகடன்னையுடையே னுலகநிறைந்த புகழால்
திருமகள்போல வளர்த்தேன் செங்கண்மாருன் கொண்டுபோனான்
பெருமகளாய்க் குடிவாழ்ந்து பெரும்பிள்ளைபெற்ற வசோதை
மருமகளைக்கண்டுகந்து மணட்டுப்புறஞ் செய்யுங்கொலோ. சு.

பதவுரை.

ஒரு மகள்தன்னை— ஒரே பெண்பிள்ளையை
உடையேன்— உடையளான நான்
உலகம் நிறைந்த— லோகமெங்கும் பரவின
புகழால்— கீர்த்தியோடே
திருமகள்போல— பெரிய பிராட்டியாரைப் போலே
வளர்த்தேன்— சீராட்டி வளர்த்தேன்;
இப்படிப்பட்டவனை,
செம் கண்— சிவந்த கண்களையுடையனும்
மால்— வ்யாமோஹத்தை யுடையனான கண்ணன்
தான்— தானே [டான்;
கொண்டு போனான்— கொண்டுபோய் விட்
பெரு மகளாய்— பெரிய பெண்பிள்ளையாய்
குடிவாழ்ந்து— குடிவாழ்க்கை வாழ்ந்து
பெரு பிள்ளை — பெருமை பொருந்திய பிள்ளையை
பெற்ற— பெற்ற
அசோதை— யசோதைப் பிராட்டியானவள்
மருமகளை கண்டு— நாட்டுப் பெண்ணைக் கண்டு
உகந்து— ப்ரியப்பட்டு
மணட்டுப்புறம் செய்யும் கொல் ஓ } மணவாட்டிக்குச் செய்யக் கடவ சீர்மைகளைச் செய்வளோ, லளிதத்துக்குத் தக்கவளவு அலங்காரத்தயமாகச் செய்து விடுவளோ என்று ஸந்தேஹிக்கிறாள்.

வ்யா. நான்காம்பாட்டு. ஒருமகள்தன்னை யுடையேன். அத்விதீயையா யிருப்பா ளொரு பெண்பிள்ளையையுடையேன். ஒருமகளென்கையாலே - ஏகபுத்திரியென்னுமிடமும், தன்னை யென்கையாலே - லௌகந்தர்யாதிகளா லுண்டான இவளுடைய மதிப்பும், உடையே னென்கையாலே - இவளை புத்திரியாக வுடையளாகையா லுண்டான தன்னுடைய ஏற்றமுஞ் சொல்லுகிறது. உலகம் நிறைந்த புகழால். விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசி யறத் தந்தாமுடைய அளவுகளுக்கீடாக இருந்த விருந்த விடங்களிலே இவளுடைய குணங்க ளைச்சொல்லி ச்லாகிக்கும்படி லோகமெல்லாம் வ்யாப்தமான புகழோடே. திருமகள்போல வளர்த்தேன். "கடிமாமலர்ப்பாவைபோற்பாள்" என்கிறபடியே ஸர்வர்க்கும் அவலக்ஷ ண்யத்துக்கு உபமாந பூமியாய் புருஷகாரத்வயுக்தையான *நாரீணு முத்தமையோடு ஸத்ர் ஸ்வபாவையாம்படி வளர்த்தேன். செங்கண்மால் தான் கொண்டுபோனான். (அ) "யஸ்ய கவேர்வாஸுதேவஸ்ய" என்கிறபடியே ஸ்வாபாவிகமான சிவப்புக்குமேலே *பக்தரோக் கமியாமல் இவளைப்பார்த்துக்கொண்டிருக்கும் வ்யாமோஹத்தாலும் சிவந்த திருக்கண்களை யுடையனாய், இந்தவ்யாமோஹமேதனக்கு நிரூபகமாம்படி யிருக்குமவன், ஆதிவாஹிகரை வரக்காட்டியாதல், பெரியதிருவடியை வரக்காட்டியாதல் கொடுபோகையன்றிக்கே, * கள்வ ன்கொல்லில் பிராட்டியைக்கொண்டுபோனாற்போலே தானேகொண்டுபோனான். "ஆழ்வா ன்திருநாட்டுக் கெழுந்தருளினபோது, உடையவர், விச்லேஷம் பொறுக்கமாட்டாமல், 'ஒருமகள்தன்னை யுடையேன்' என்றும், 'உலகம்நிறைந்த புகழால் திருமகள்போல வள ர்த்தேன்' என்றும், 'செங்கண்மால் தான் கொண்டுபோனான்' என்று மருளிச்செய்தார்" என்று ப்ரஸித்தமிறே. (உ) "உவமை நிலைஞாலமுய்ய நாயகன் வந்துதோன்றி" என் கிறபடியே - ஸர்வர்க்கங்களுக்கெல்லா முபமாந பூமியாகச் சொல்லலாம்படி யிருக்கையாலே உல கம் நிறைந்த புகழுள்ளது ஆழ்வானுக்கேயிறே. பெருமகளாய்க் குடிவாழ்ந்து. பெரிய பெண் பிள்ளையாய்க் குடிவாழ்க்கைவாழ்ந்து. திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷம் குடிக்கும் நிர்வா ஹகரான பெருமையையுடைய ஸ்ரீநந்தகோபர் மஹிஷியாகையாலே இவளை "பெருமகள்" என்கிறது. அவர் ஊர்க்காரியத்துக்கெல்லாம் அபிமானியாய் நிர்வஹிக்கையாலே "குடி வாழ்ந்து" என்கிறது. பெரும்பிள்ளை பெற்றவசோதை. பெரியபிள்ளையைப் பெற்றவசோதை. ரூபகுணத்தாலும் ஆத்மகுணத்தாலும் பரிபூர்ணனாய் "என்னநோன்பு நோற்றாள்கொலோ இவனைப்பெற்ற வயிறுடையாள்" என்னும்படி யிருக்கையாலே "பெரும்பிள்ளை" என் கிறது. தானும்பெருமகள், பெற்றதும் பெரும்பிள்ளைகாணுமிவள். மருமகளைக்கண்டுகேட்டு. மருமகளைக்கண்டு ப்ரியப்பட்டு, "அவன்கொண்டுபோனான்" என்று வெறுத்தகாலத்தி லும், போனால் பிறக்கும் முறையுறவு சொல்லவேண்டுகையாலே "மருமகள்" என்கிறாள், கண்டுகேட்டு. பெண்பிள்ளையுடைய லௌகந்தர்யாதிகளையும் வ்யாமோஹத்தை யும்கண்டு மடியிலேவைத்தணைத்து, "பெறுப்பேறுபெற்றோம்" என்று ப்ரியப்பட்டு. மணைட்டுப்புறம் செய்யுங்கோலோ. மணவாட்டுப்பிள்ளையாக நினைத்தத் தான் செய்யக்கடவ தான்மைகள் செய்யுமோ; "கூடிய கூட்டமன்றே" என்று - லௌகிகத்துக்குத் தக்கவளவு அஹார்யமாகச் செய்துவிடுமோ. ... ... ச.

மூ—தன்மாமன் நந்தகோபாலன் தழீஇக்கொண்டென் மகடன்னைச்
செம்மாந்திரு யென்றுசொல்லிச் செழுங்கயற் கண்ணுஞ் செவ்வாயும்

301

(அ) "யதாகப்யாஸம்புண்டரீகம்."

(உ) "உபமாநம சேஷாணாம் லாதாநாம் யஸ்ஸதாபவத்."

கோம்மைமுலையு மிடையுங் கோழும்பணைத் தோள்களுங் கண்டிட்
டிம்மகனைப் பெற்றதாய ரினித்தரியா ரென்னுங்கொலோ. ரு.

பதவுரை.

தன்— பெண்பிள்ளை தனக்கு
மாமன்— மாமனான
நந்த கோபாலன்— நந்த கோபரானவர்
என் மகள் தன்னை— என் மகளை
தழீ இக்கொண்டு— அணைத்து மடியிலே வைத்துக்கொண்டு
செம்மாந்து இரு என்று சொல்லி — 'செவ்வே இரு' என்று சொல்லி
செழு— செழுமைதங்கிய
கயல்— கயல் (மத்ஸ்யம்) போன்ற
கண்ணும்— கண்களையும்
செம்— சிவந்திருந்துள்ள
வாயும்— அதரத்தையும்
கொம்மை— பருத்த
முலையும்— ஸ்தநங்களையும்
இடையும்— இடையையும்
கொழு— செழித்த
பணை— மூங்கிலையொத்த
தோள்களும்— தோள்களையும்
கண்டிட்டு— தனிதனியாக உற்றுப்பார்த்து
இ மகளை— 'இப்பெண்பிள்ளையை
பெற்ற தாயர்— பெற்ற தாயாரானவள்
இனி— இவளைப் பிரிந்த பின்பு
தரியார்— தரித்திருக்க மாட்டாள்'
என்னும் கொல் ஓ— என்று சொல்லுவரோ, அவிக்தராயிருப்பாரோ என்று ஸந்தேஹிக்கிறாள்

வ்யா. ஐந்தாம்பாட்டு. தன்மாமன் நந்தகோபாலன். பெண்பிள்ளை தனக்கு மாமனான ஸ்ரீநந்தகோபர். தழீஇக்கொண்டென்மகள்தன்னை. "நமக்கு மருமகள்" என்னும் ஸ்நேஹந்தோற்ற என்மகள்தன்னை யணைத்துக்கொண்டு மடியிலேவைத்து. செம்மாந்திரே யென்றுசொல்லி. இவன் வ்ரீளையாலே நிலம்பார்க்க, செவ்வேயிருவென்றுசொல்லி. செம்மாப்பு- செவ்வை. முகம் முதலான அவயவங்களையும் ஸமுதாயசோபையையும் பார்க்கைக்காகவிறே- செவ்வேயிருவென்பது. செழுங்கயற்கண்ணும். அழகிய கயல்போன்றகண்ணையும். செவ்வாயும். ஸ்வபாவமே சிவந்திருக்கிற அதரத்தையும். கொம்மைமுலையும். பருவதினளவல்லாத பரிணமத்தை யுடைத்தான முலைகளையும். கொம்மை- பெருமை. இடையும். முலையிணடைய வளர்த்தியாலே நெருங்கி நோந்திருக்கிற இடையையும். கொழும்பணைத் தோள்களும். சுற்றுடைமையாலும் பசுமையாலும் செவ்வையாலும் வளர்ந்தமுங்கில்போலேயிருக்கிற தோள்களையும். கொழுமை- அழகும், பெருமையும். கண்டிட்டு. தனிதனியும் ஸமுதாயேநவும் தர்சித்து. என்னுடை இழவுநெஞ்சிலே தோன்றி. இம்மகளையித்தா தி. இப்பெண்பிள்ளையைப் பெற்ற தாயாரானவள். இவளைப்பிரிந்தபின்பு ப்ராணனோடே தரிக்கமாட்டாளென்று சொல்லுவரோ; அன்றிக்கே; அவிக்தராயிருப்பாரோ. ...

மூ.—வேடர்மறக்குலம்போலே வேண்டிற்றுச் செய்தென்மகளைத்
கூடியகூட்டமே யாகக்கொண்டு குடிவாழுங்கொலோ
நாடெங்கருமறிய நல்லதோர் கண்ணலஞ்செய்து
சூடிறப்பாய்ந்தபெருமான் தக்கவாகைப்பற்றுங்கொலோ.

பதவுரை.

வேடர்— நீச ஜாதியான வேடரையும்
மறக்குலம் போலே— மறக்குலத்திலுள்ளாரையும் போலே
என் மகளை— என் பெண்பிள்ளையை
வேண்டிற்று செய்து— வேண்டினபடி செய்து

கூடிய கூட்டமே ஆகக் கொண்டு } ஆணும் பெண்ணும் நெஞ்சு பொருந்திக் கூடின கூட்டம்மாத்திரமே மணமாகக் கொண்டு

குடிவாழும் கொல் ஓ — குடிவாழ்க்கை வாழுமோ!;

சாடு— சகடத்தை

இற— முறியும்படி

பாய்ந்த— உதைத்த

பெருமான்— ஸ்வாமியானவன்

நாடும்— அவிசேஷஜ்ஞரும்

நகரும் — விசேஷஜ்ஞரும்

அறிய— அறியும்படியாக

நல்லது— விலக்ஷணமாய்

ஓர்— ஒப்பற்றிருப்பதொரு

கண்ணலம் செய்து— கல்யாணம் செய்து

தக்க ஆ—ஸ்வஜாத்யாசாரத்துக்குத்தக்கபடி

கைப்பற்றும் கொல் ஓ— கையப்பிடித்து மணங் கொள்ளுமோ என்று தாயார் ஸந்தேஹிக்கிறாள்.

வ்யா, ஆரும்பாட்டு. வேடர்மறக்குலம்போலே. தண்ணியஜாதியான வேடரையும் மறக்குலத்திலுள்ளாரையும் போலே. "கள்ளர், பள்ளிகள்" என்னுமாபோலே, வேடர் மறவர் என்கிறதும் தண்ணியஜாதியில் அவாந்தரபேதம். வேண்டிற்றுச்செய்து. இரண்டு தலையிலுமுண்டான குடிப்பிறப்பைப்பாராதே, ஒருசாஸ்த்ரமர்யாதையின்றிக்கே, தனக்கு வேண்டினபடிசெய்து. என்மகளை. பழுதற்ற குலத்திலேயுள்ள என்வயிற்றிலேபிறந்த பெண்பிள்ளையை. கூடியகூட்டமேயாகக்கொண்டு. புணர்ந்துடன்போக்கில் இரண்டு தலையும் நெஞ்சுபொருந்திக்கூடின கூட்டரவுமாத்ரமே மணமாகக்கொண்டு. குடிவாழுங்கொலோ. குடிவாழ்க்கைவாழுமோ. சாடிறப்பாய்ந்தபெருமான் - நாநேகருமறிய நல்லதோர் கண்ணலம் செய்து - தக்கவா கைப்பற்றுங்கொலோ. அஸுராவேசத்தாலே தனியிடத்திலே நடியவந்த சகடத்தை, முலைவரவு தாழ்த்துச்சிறி நிமிர்த்த திருவடிகளாலே முறியவுதைத்துத் தன்னை நோக்கி, "தனியிடத்திலே பிள்ளையைவிட்டுவைத்துப் போகையாலே தாழ்வுவந்தது" என்று தாயார்க்குத் தாழ்வுவாராதபடி நோக்கின குணதிகனனவன், இரண்டு குடிக்கும் பழிவாராதபடி, திருவாய்ப்பாடி சூழ்ந்தநாடும் திருவாய்ப்பாடியாகிற நகரமுமறியும்படியாக "இதுக்குமுன்பு இப்படியில்லை" என்னும்படி விலக்ஷணமாய் அத்விதீயமான கல்யாணத்தைச்செய்து, ஜாத்யுசிதமான தர்மத்துக்குத் தகுதியாக பாணிக்ரஹணஞ்செய்யுமோ. ... கூ.

மு.—அண்டத்தமரர்பெருமா ளாழியானின் றென்மகளைப்
பண்டப்பழிப்புக்கள் சொல்லிப்பரிசற வாண்டிடுங்கோலோ
303 கொண்டுகுடிவாழ்க்கைவாழ்ந்து கோவலர்பட்டங் கவித்துப்
பண்டைமணட்டிமார்முன்னே பாதுகாவல்வைக்குங்கோலோ. எ.

பதவுரை.

அண்டத்து— பரமபதவாஸிகளான

அமரர்— நித்யஸூரிகளுக்கு

பெருமான்— தலைவனும்

ஆழியான்— சக்ரபாணியாயிருக்குமவன்.

என்— என்னுடைய

மகளை— பெண்பிள்ளையை

இன்று— இப்போது

‡ பண்டம் பழிப்புக்கள் சொல்லி } பதார்த்த தோஷம் சொல்லி

பரிசு அற— வரிசை கெட

ஆண்டிடும் கொல் ஓ— ஆளுவனே;

‡ ரூபத்திலேயாதல் குணத்திலேயாதல் சில குறைகளைச் சொல்லியென்கை.

(அல்லது,)

பண்டை மணட்டி மார் முன்னே— முன்பே பட்டங்கட்டித் தனக்கு முதல் மணவாட்டியராயிருப்பவர்கள் முன்னே

கொண்டு— இவளைக் கொண்டு

குடிவாழ்க்கை வாழ்ந்து— தன் க்ருஹக்ருத்யங்களை யெல்லாம் நடத்தி

கோவலர் பட்டம் கவித்து— 'இடைக்குலத்துக்குத் தலைவி' என்று தன் மனோவியானமை தோற்றப் பட்டங்கட்டி

பாதுகாவல் வைக்கும் கொல் ஓ— அந்தஃபுரக்காவலிலே வைப்பனோ.

வ்யா. ஏழாம்பாட்டு. அண்டத்தமர்பெருமா ஞாலியான். அப்ராக்ருதமான பரமபதத்திலே அஸ்பர்ஷ்டஸம்ஸார கந்தரான நித்யஸூரிகளுக்குநிர்வாஹகனாய், ஸ்ரீவைகுண்டநாதனான திருவாழியை தரித்துக்கொண்டிருக்கும் பெருமையையுடையவன். அந்தப்பெருமையால்வந்த செருக்காலே. இன்றென்மகளைப் பண்டட்டப்பழிப்புக்கள் சொல்லி, ஸர்வஸ்மாத் ஸமபந்நையான வென்னுடைய பெண்பிள்ளையை, இப்போது பதார்த்த தோஷங்கள் சொல்லி. அதாவது- ரூபத்திலேயாதல், குணத்திலேயாதல் சிலகுறைகளைச்சொல்லி யென்னை. டரிசறவாண்டிடேங்கோலோ. அபகர்ஷபுத்தியாலே வரிசைகெட ஓண்டிடுமோ. அதாவது- அந்தரங்க வ்ருத்திகொள்ளாமல் புறத்தொழில்களைக்கொண்டுவிடுமோ என்னைகோண்டு குடிவாழ்க்கை வாழ்ந்து. இவளைக்கொண்டு தன்னுடைய குடிவாழ்க்கை யெல்லாம் வாழ்ந்து. அதாவது- இவள் முகப்பாகத் தன்னுடைய க்ருஹக்ருத்யமெல்லாம் நடத்தியென்னை. கோவலர்பட்டங்கவித்து. "கோபகுலத்துக்கு ஸ்வாமிநி" என்று தன்மஹிஷியானமைதோற்றப் பட்டங்கட்டி. பண்டைமணட்டிமார் முன்னே. பண்டேபட்டங்கட்டி, தன்க்கு மஹிஷிகளாயிருக்கிறவர்கள்முன்னே. பாதுகாவல்வைக்குங்கோலோ. அந்தஃபுரக்காவலிலே வைக்குமோ. ... ...ஏ.

மூ.—குடியிற்பிறந்தவர் செய்யுங் குணமொன்றுஞ் செய்திலனந்தோ
கடையொன்றுஞ் செய்திலனங்காய் நந்தகோபன்மகன் கண்ணன்
இடையிருபாலும் வணங்க விளைத்திளைத் தென்மகளேங்கிக்
கடைகயிறே பற்றிவாங்கிக் கைதழும்பேறிடேங்கோலோ. கி

பதவுரை.

நங்காய்!— ஸுலபூர்ணையான வுனக்கு!
நந்தகோபன்— ஸ்ரீநந்தகோபருடைய
மகன்— திருமகனான
கண்ணன்— கண்ணனானவன
குடியில்— உயர்ந்த குடியிலே
பிறந்தவர்— பிறந்தவர்கள்
செய்யும்— தங்கள் குடிக்குத்தகுதியாகச் செய்கிற
குணம்— குணத்தில்
ஒன்றும்— ஒன்றேனும்
செய்திலன்— செய்தானென்றில்லை;

(அதுவுமன்றி,)

நடை— லோகநடத்தையிலும்
ஒன்றும்— ஏகதேசமும்
செய்திலன்— செய்யவில்லையே;
அந்தோ— ஐயோ! [என்றுமனம் வருந்தி]
இடை— இடையானது
இருபாலும்— இருபக்கமும்
வணங்க— வளையும்படி
என் மகள்— என் மகளானவள்
எங்கி— (மூச்சுத்தாங்கிக் கடைய மாட்டாமல் நடுநடுவே) எங்கி

இளைத்து இளைத்து— மிகவும்மிளைத்து
கடை கயிற்றே— கடைகிற கயிற்றையே
பற்றி— பிடித்து
வாங்கி— வலித்து (அதனால்,)
கை— மர்துவான கையான்து
தழும்பு ஏறி டும் கொல் ஓ } தழும்பேறிவிடுமோ.

வ்யா. எட்டாம்பாட்டு. குடியிற்பிறந்தவர் செய்யும் குணமொன்றும் செய்திலன். உயர்ந்தகுடியிலே பிறந்தவர்கள் அக்குடிக்குத்தகுதியாகச் செய்யும் குணத்தில் ஒன்றும் செய்திலன். அதாவது- முன்றயிலே யிவளைவரைந்துகொண்டு வெளியில் கொண்டு போகாமையிறே. அந்தோ. ஐயோ! என்று விஷண்ணையாகிறாள். நடையொன்றும் செய்திலன். குடியிற்பிறந்தவர்கள் செய்யுமது செய்யாவிட்டால் லோகத்தில் நடக்கும் மர்யாதைதான் செய்பவேணுமிறே; அதில் ஏகதேசமும் செய்திலன். அதாவது- லோகத்திலே யிப்படிசெய்வாரில்லையிறே யென்கை. நங்காய். குலமர்யாதையும் லோகமர்யாதையு மறியும் குணபூர்த்தியுடையவளேயென்று, தனக்கு பந்துவாய் ஸந்நிஹிதையானவள் முகத்தைப்பார்த்துச் சொல்லுகிறாள். நந்தகோபன்மகன் கண்ணன். குடிப்பிறப்பில் வந்தால் ஸ்ரீநந்தகோபர் திருமகனாயிருக்கிற க்ருஷ்ணன். நங்காய் நந்தகோபன்மகன் கண்ணன் - குடியிற்பிறந்தவர்செய்யும் குணமொன்றும் செய்திலன் - நடையொன்றும் செய்திலன் - அந்தோ என்று - அவன்முறைகெடக் கொண்டுபோன ப்ரகாரத்தைச் சொல்லி விஷண்ணையாய், மேல் தன்னுடைய பெண்பிள்ளையின் மார்த்தவத்தை நினைத்து கொண்டு சொல்லுகிறாள். இடையிருபாலும் வணங்க. இடம்வலங்கொண்டு கடைகையாலே, இடையானது இரண்டு பார்ச்வத்திலும் வணங்க. இளைத்திளைத்தென்மகளேங்க. ஸுகுமாரியான வென்பெண்பிள்ளை பலஹாநியாலே மூச்சுத்தாங்கிக் கடையமாட்டாமல்வங்கி நடுநடுவே யிளைத்திளைத்து. கடைகயிறித்யாதி. தொடங்கினகாரியம் தலைக்கட்டுமளவும் இடைவிடாமல் கடைகயிற்றையே பிடித்துவலித்து, அத்தாலே தளிர்போலே மர்துவானகையானது தழும்பேறிவிடுமோ வென்கிறாள். கோவலர் பட்டங்கட்டினாலும் கடைகயிறு வலிக்கவேணுமிறே இடைச்சிகளுக்கு. தான் தன் பெண்ணின் மார்த்தவம் சொல்லுகிறானித்தனையிறே. ... ... அ.

மூ.—வெண்ணிறத்தோய் தயிர்தன்னை வெள்வரைப்பின் முன்னெழுந்து
கண்ணுறங்காதேயிருந்து கடையவந்தான் வல்லள்கொலோ
305 ஒண்ணிறத்தாமரைச் செங்கணுலகளந்தா னென்மகளோப்
பண்ணைறையாப் பணிகொண்டு பரிசாறவாண்டிடுக்கொலோ: கூ.

பதவுரை.

தான்— மெண்மைத் தன்மையள்ளான என்
பெண்ணனவள்
வெள் நிறம்— வெண்மை நிறத்தையுடை
த்தாய்
தோய்— செறியத் தோய்ந்த
தயிர் தன்னை— தயிரை
வெள் வரைப்பின் முன்— கிழக்கு வெளுப்
பதற்கு முன்னே
எழுந்து— எழுந்திருந்து
கண் உறங்காதே இருந்து— கண்விழித்துக்
கொண்டிருந்து
கடையவும்— வருந்திக் கடையவும்
வல்லள் கொல் ஓ— வல்லளோ!
(இப்படியிருக்க;)
ஒண் நிறம்— அழகிய நிறத்தையுடைய
தாமரை— தாமரைமலர் போன்று

செம்— (திவந்த) சிவந்த
கண்— கண்களையுடையனும்
உலகு— எல்லா உலகங்களையும்
அளந்தான்— நீரேற்றளந்து கொண்டவன்
என் மகளை— என் மகளை
பண்ணையாப் பணிகொண்டு } இழி தொழில்களிலே ஏவிக்கொண்டு
பரிசு அறல்— பெருமைகெட
ஆண்டிடும் கொல் ஓ— ஆளுவனோ;
அறிகிறிலேன் என்கிருள்.

வ்யா. ஒன்பதாம்பாட்டு. வெண்ணிறத்தோய் தயிர்தன்னை செவ்விகுன்றதபடி காய்ச்சித்தோய்க்கையாலே வெளுத்தநிறத்தையுடைத்தாய்ச் செறிவுத்தோய்ந்த தயிர்தன்னை, வெள்வரைப்பின் முன்னெழுந்து. ஆதித்யோதயத்துக்கு ஸமீபமான வெள்வரைப்புத் தோற்றுவதற்குமுன்னே யெழுந்திருந்து. வெள்வரைப்பு, இழக்குவெளுக்கை- ப்ராஹ்மணர் ஸந்த்யாவந்தநார்த்தமாக அருணோதயத்துக்கு முன்னே யெழுந்திருக்குமாபோலே யிறே- இடைச்சிகளும் தயிர்கடைகைக்கு எழுந்திருக்கும்படி. கண்ணுறங்காதேயிருந்து. எழுந்திருந்தாலும் நித்ரைபண்ணாமிறே; அதின் வசமாகாதே விழித்திருந்து. கடையவும் தான்வல்லள் கோலோ. மாதுப்பர்க்நியான் தான் ஆயாஸித்துக்கடையவும் வல்லளோ. ஒண்ணிறமித்யாதி. அலர்ந்தபோதை அழகிய நிறத்தையுடைத்தான தாமரைபோலே சிவந்திருக்கண்களையுடையனும், ஸமஸ்தலோகங்களையும் தன்திருவடிகளின்கீழ பாக்கிக்கொண்டவன். இத்தால்- தன் கண்ணழகாலே இவளை அநந்யார்ஹையாக்கித் தன்காற்கீழ் பிட்டுக்கொண்டவனென்கை. என்மகளைப் பண்ணையாப் பணிகொண்டு- நான் * திருமகள்போல வளர்த்த வென் பெண்பிள்ளையை, பண்புகெடத்தாழ்ந்த பணிகளிலே யேவிக்கொண்டு. பரிசழிந்து ஆண்டிடுங்கோலோ. இவளுடைய பெருமைகெட்டாளுமோ, பெருமைகெடாதபடி யாளுமோ, அறிகிறிலேனென்கிறாள். ... ...

அ. நிகமத்தில் இத்திருமொழிகற்றார்க்கு பலஞ்சொல்லித் தலைக்கட்டுகிறார்.

மு.—மாயவன்பின் வழிசென்று வழியிடை மாற்றங்கள்கேட்டு
ஆயர்கள் சேரியிலும்புக் கங்குத்தைமாற்றமு மெல்லாம்
தாயவள் சொல்லியசொல்லைத் தண்புதுவைப்பட்டன் சொன்ன
தூயதமிழ்பத்தும்வல்லார் துளபவண்ணனுக்காளரே. ய.

பதவுரை.

மாயவன்— ஆச்சர்ய சேஷ்டிதங்களையுடைய ஸர்வேச்வரனுக்கு
பின்வழி சென்று— பின்னேபோய்
வழியிடைமாற் } போம் வழியிடையிலே
றங்கள்கேட்டு } கண்ட அபூர்வ வஸ்துக்கள் விஷயமான வார்த்தைகள் தங்களைக்கேட்டு
ஆயர்கள் சேரியிலும்— திருவாய்ப்பாடியிலும்
புக்கு— புகுந்து
அங்குத்தை— அங்குள்ளார்க்குத் தக்க செய்தி
மாற்றமும் எல்லாம்— தன் பெண்பிள்ளையின் சொலவுகளெல்லா வற்றையும்
தாயவள்— தாயானவள்
சொல்லிய— அருகுநின்றவர்களைக் குறித்துச் சொன்ன
சொல்லை— சொல்லை
தண்— குளிர்ந்த [வரான்
புதுவை— ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் தலை

பட்டன்— பெரியாழ்வார்
சொன்ன— அருளிச்செய்த
தூய— (பகவத்விஷயமாகையாலே) பரி சுத்தமான
தமிழ்— தமிழ் பாஷையான
பத்தும்— பத்துப் பாட்டையும்
வல்லார்— ஓதவல்லவர்கள்
நூ மணி— பழிப்பற்ற நீலமணிபோன்ற
வண்ணனுக்கு— வடிவழகை யுடையவனுக்கு
ஆளர்— அடிமைசெய்யப் பெறுவர்.

வ்யா. மாயவன்பின் வழிசென்று. தன்னுடைய பெண்பிள்ளையானவள், ரூப குண சேஷ்டிதங்களால் ஆச்சர்யபூதனைப், அவற்றைக்காட்டித் தன்னே வசிகரித்துக்கொண்டவனுடையபின்னே, * கள்வன் கொல்லில் பிராட்டியைப்போலே வழிபோய். வழியிடைமாற்றங் கள்கேட்டு. "இளிபோல் மிழற்றிநடந்து" என்கிறபடியே போகிறவழி யிடையிலே அபூர்வ பதார்த்தங்களைக் கண்டால் இவை யென்னென்று அவ்விஷயமாக அவனே வார்த்தைகள் கேட்டு. ஆயர்கள் சேரியிலும்புக்கு. ப்ராப்யதேசமான திருவாய்ப்பாடியிலும் சென்று புகுந்து. இப்படியுண்டான செயல்களையும். அங்குத்தை மாற்றமுமெல்லாம். அவ்வூரிற் புகுந்தபின்பு, அங்குண்டான யசோதைப்பிராட்டி, ஸ்ரீநந்தகோபர், நாயகனைக்ருஷ்ணன், தன் பெண்பிள்ளையான விவள், தந்தாமுக்கு அநுகுணமாகச்செய்யும் வ்ருத்தாந்தமான சொலவு களையும் எல்லாவற்றையும். "மாற்றமும்" என்கிற ஸமுச்சயவாசி சப்தத்தாலே - கீழுண்டான செயல்களையும் கூட்டிக்கொள்வது. தாயவள் சொல்லிய சொல்லே. திருத்தாயாரானவள் தன் க்ருஹத்திலேயிருந்து தன்னிலே க்லேசித்தும் மநோரதித்தும் ஸங்கல்பிதரைக்குறித்துச் சொன்ன சொலவுகளே. ... ... *

அதவா, மாயவனித்யாதி. தன்னுடைமையைத் தான்கொண்டுபோனகையாலும், அது தன்னே முடையிலே காட்டிக்கொடுக்கக் கொண்டுபோகாமையாலுமுண்டான குணதோஷங்களிரண்டும் உபாதேயமாய்த் தோற்றும்படியிருக்கிற ஆச்சர்யபூதனைவன் போனவழியிலே தானும் வழிப்பட்டுச்சென்று, வழியெதிர்வந்தாரை முன்போனவர்களுடைய ஸ்திதி கமநாதி ப்ரகாரங்களையும் வினவிக்கேட்டு. ஆயர்கள் சேரியிலும் புக்கு. திருவாய்ப்பாடியில் ஸ்ரீநந்தகோபர் தெருவளவாகச்சென்று, அங்குநின்றவர்களே அங்குத்தை விசேஷங்களையும் வினவிக்கேட்டு. தாயவள்சொல்லியசொல்லே. வழியெதிர்வந்தாரை "மதுரைப்புறம் புக்காள்கொலோ" என்றுகேட்டும், * எமர்கள்குடிக்கு ஒரேச்சாமோ குணமாமோ என்றாற் போலே கேட்டும், திருவாய்ப்பாடியில் தோரணம்முதலான அலங்காரங்களும் வாத்யகோஷங்களும் கண்டு கேட்டிகோளோவென்று கேட்டும், ஆயர்கள்சேரியிலேசென்று யசோதை ஸ்ரீநந்தகோபருடைய ஆதராநாதரங்களெல்லாம் வினவிக்கேட்டு அவர்கள்சொன்ன விசேஷங்களுமெல்லாம் திருத்தாயாரானவள் சொன்னப்ரகாரங்களேயென்று இங்ஙனேயோஜிக்கவுமாம். இதிலுங்காட்டில், பூர்வயோஜனைக்கு ஒளசித்யமுண்டு.

தண்புதுவைப்பட்டன்சொன்ன. ஸம்ஸாரச்சமஹரமான குளிர்த்தியையுடைய திருப்புதுவைக்கு நிர்வாஹகரான பெரியாழ்வாரருளிச்செய்த. தூயதமிழ்பத்தும்வல்லார். ஸம்ஸ்க்ருத சப்தம்போலேயிருண்டு பொருள்தெரியாதபடி யிருக்கையன்றிக்கே, பெண்ணுக்குபதைக்கும் அறியலாம்படி ஸ்வார்த்த ப்ரகாசகமாயிருக்கும் தூய்மையையுடைத்தான த்ராவிடபாஷையாய், ஒரொன்றே ஒராத்மாவினுடைய உஜ்ஜீவநத்துக்குப் போருமென்னும்படி

யிருக்கிற பத்துப்பாட்டையும் ஸாபிப்ராயமாக அநுஸந்திக்கவல்லவர்கள், தூமணிவண்ணனுக்காளாகே. பழிப்பற்ற நீலாதங்கம்போன்ற வடிவழகையுடையவனுக்கு சேஷபூதராய் அடிமை செய்யப் பெறுவர், ... ம

பெரியஜீயர் திருவடிகளே சரணம்.

அடிவரவு.—நல்ல தோன்று குமரி யோரு தன்மாமன் வேட
ரண்டக் குடி வெண்ணிற மாயவ னென்னுதன்.

ஆ திருமொழி:உஎ-க்கு, பாட்டு-உகூச.

மூன்றும்பத்து - ஒன்பதாந்திருமொழி - என்னுதன், ப்ரவேசம்.

அ. க்ர்ஷ்ணவதாரைகப்ரவணராய், தத்குணசேஷ்டிதங்களேயே யநுபவித்துக்கொண்டு போந்தார்-கீழ்; இப்போது, அந்தக்ர்ஷ்ணவதாரகுணசேஷ்டிதங்களோடே ஏதத்பூர்வகாலிகமான ராமாவதாரகுணசேஷ்டிதங்களையும் ஏககாலத்திலே யநுபவிக்கவேணுமென்னும் அபிநிவேசம்பிறந்து, அதுக்குடலாக இரண்டு ஸ்ரீகோபிமாரவஸ்த்தையைப்ராபதராய், அதிலே ஒருத்தி க்ர்ஷ்ணவதாரகுணசேஷ்டிதமும், ஒருத்தி ராமாவதாரகுணசேஷ்டிதமுமாகக்கொண்டு, ஒருவர்க்கொருவர் எதிரியாய்க்கொண்டு சொல்லி, உந்தியறந்த பாசுரத்தாலே உபயாவதாரகுணசேஷ்டிதங்களையும்பேசி யநுபவிக்கிறார்- இத்திருமொழியில். இரண்டு கோபிமாரவஸ்த்தையை ஏககாலத்திலே யடையக்கூடுமோவென்னில்; பகவத்ப்ரஸாதவிசேஷத்தாலே ஜ்ஞாநத்தில் தடையற்றால் எல்லாம் சொல்லலாமிறே. [" 'மானமருமென்னேக்கி' என்கிற திருமொழியிலே, இரண்டு பிராட்டிமார்தசை ஏககாலத்திலே கூடும்படியென்? " என்று ஜீயர் பட்டரைக்கேட்க; " தேசவிசேஷத்தில் அநேக சரீரபரிக்ரஹம் ஏககாலத்திலே கூடுகிறபடி எங்ஙனே; அப்படியே இவரையும்பார்த்து அருளிச்செய்தார் என்று ப்ரஸித்தமிறே.] ... ...

மூ.—என்னுதன்றேவிக் கன்றின்பப்பூ வீயாதாள்
தன்னுதன்காணவே தண்பூமரத்தினை
வன்னுதப்புள்ளால் வலியப்பறித்திட்ட
என்னுதன்வன்மையைப் பாடிப்பற வெம்பிரான் வன்மையைப்பாடிப்பற.

பதவுரை.

என்— எனக்கு
ஈதன்— சேஷியான ஸர்வேச்வரனுடைய
தேவிக்கு — தேவியான ஸத்யபாமைப் பிராட்டிக்கு
அன்று— அவள் விரும்பினபோது
இன்பம்— மநோஹரமான
பூ— கற்பகப்பூவை [யுண்டாயி
ஈயாதான் தன்— கொடாத இந்த்ராணி

நாதன்— நாயகனான இந்திரன்
காணவே— கண்டு நிற்கும்போதே
தன்— சமைத்துக் குளிர்ந்து
பூ— பூத்துக்கிடக்கிற
மரத்தின்னை— கல்பவர்க்ஷத்தை
நாதம்— ஸாமவேதரூபனுய்
வல்— வலியையுடைய
புள்ளால்— பெரியதிருவடியாலே
வலிய— பலவந்தமாக
பறித்து— பிடுங்கிக் கொண்டுவந்து
இட்ட- ஸத்யபாமைக் கர்ஹத்தில் நட்டவனுய்
என் நாதன்— என்னை அடிமைகொண்ட வனுடைய
வன்மையை— நினைத்தது முடிக்கும் வல்ல மையை
பாடி— ப்ரீதியாலே பாடிக்கொண்டு
பற— உத்திபற;
எம்— எமக்கு
பிரான் — உபகாரகனான வனுடைய
வன்மைபைப்பாடிப்பற
என்று கர்ஷ்ணவதாரத்தில் ஈடுபட்டா ளொருத்தி சொல்லுகிறுள்.

வ்யா, மூதற்பாட்டு. என்னுதன் தேவிக்கு. என்னுடைய நாதனான வனுடைய தேவிக்கு. நாதனென்றது - சேஷியென்றபடி. ஸ்வரூபத்தையுணர்ந்தால் எல்லார்க்கும் தனித்தனியே "என்னுதன், என்னுதன்" என்னலாம்படியிறே வஸ்துவோட்டை ப்ராப்தியிருக்கும்படி. இவ்வாத்மாவினுடைய சேஷத்வந்தான் கேவலம் அவனளவன்றிக்கே மிதுநவிஷயமாயிறே யிருப்பது; ஆகையாலிறே "என்னுதன் தேவிக்கு" என்றது. (க) "விஷ்ணுவதூழி" என்கிறபடியே இவளுக்கு நிரூபகம்-அவனுடையதேவியென்னுமிறே. "தேவி" என்கையாலே - ஸத்யபாமைப் பிராட்டியுடைய வால்லப்யம் சொல்லுகிறது. அன்று. நரகாஸுரவதம்பண்ணி தங்களுக்குக் குடியிருப்புப் பண்ணிக்கொடுத்த கர்ஷ்ணனேடகூடி, தன்னுடைய கர்ஹத்திலே ஸத்யபாமைப்பிராட்டி யெழுந்தருளினவன்று. அபேக்ஷா நிரபேக்ஷமாக மஹாநிதி கைப்பட்டவன்று. இன்பப்பூவீயாதாள். போக்யமான கல்பகப்பூ வர, அதைக்கண்டு நாய்ச்சியார் அபேக்ஷிக்கவும் பெற்றுவைத்து நிர்ப்பாக்யையாகையாலே நிரர்த்தகமாகச் சிலவேறுதுக்களைச்சொல்லிக் கோடாத இந்திராணி. தன்நாதன். "அவனைத்தனக்கு நாதனுகவுடையோம்" என்னுமித்தையிறே இவள் தனக்குக்கனக்க பலமாக நினைத்திருப்பது. காணவே. "நான் மூப்பத்துமூக்கோடி தேவர்களுக்கும் நிர்வாஹகனான இந்திரனல்லனே" என்று தன்னைப் போரப்பொலிய அபிமானித்திருக்குமவன் கண்டுகொடு நிற்கவே, தண்பூமரத்தினை. தனைத்துக்குளிர்ந்து பூத்துநிற்கிற கல்பகவர்க்ஷத்தை. வன்னுதப்புள்ளால். நாதப்ரதாந வேதமயனுயிருக்கிற பெரியதிருவடியாலே. (உ) "திவ்ய ஸ்ரீமஹாமாருவஹ" இத்யாதியாலே - இவனுடைய வேதமயத்வம் ஸுவ்யக்தமாகச் சொல்லப்படா நின்றதிறே. நாதத்துக்கு வன்மையாவது- பாஹ்யகுதர்ஷ்டிகளால் சலிப்பிக்கவொண்ணுமை. வன்மை, பெரிய திருவடிக்கு விசேஷணமாகவுமாம். இவனுக்கு வலிமையாவது - நினைத்தகாரியம் செய்து முடிக்கவல்லசக்தி. வலியப்பறித்திட்ட. வலியாலே பிடுங்கிக்கொண்டுபோந்த, அவன்றன்னையபேக்ஷித்துக் கொள்ளுகையன்றிக்கே, அவனுடைய அஸந்நிதியிலே பிடுங்குகையுமன்றிக்கே, அவன் பார்த்துநின்று விலக்கச்செய்தே, பலத்தாலேயிறே பிடுங்கிக்கொண்டு போந்தது. என்னுதன்வன்மையைப் பாடிப்பற. அபிமதையான ஸத்யபாமைப் பிராட்டிக்கு பரதந்த்ரனுய் காரியம்செய்த ப்ரண

(க) "விஷ்ணுபத்நீம்." (உ) "த்ரிவர்த் தேஸிரோ காயத்ரஞ்சகூ-ஃ."

யித்வகுணத்தாலே யென்னை யெழுதிக்கொண்டவனுடைய, நினைத்தது முடிக்கவல்ல பல த்தை பரீதியாலே பாடிக்கொண்டுபற. எம்பிரான்வன்மையைப் பாடிப்பற. பிராட்டிக்குச் செய்த உபகாரம் தனக்குச் செய்ததாக நினைத்து "எம்பிரான்" என்கிறார். "வன்மையை ப்பாடிப்பற" என்று மீளவும்சொல்லிற்று பரீதி ப்ரகர்ஷத்தாலே. பறவென்றது - உற்றி பறவென்றபடி. ... ... க

மு.—என்வில்வலிகண்டு போவென்றெதிர்வந்தான்
தன்வல்லிஞ்ஞேடுந் தவத்தையெதிர்வாங்கி
முன்வில்வலித்து முதுபெண்ணுயிருண்டான்
தன்வில்லின் வன்மையைப்பாடிப்பற தாசரதிதன்மையைப்பாடிப்பற. உ

பதவுரை.

என்— என்னுடைய
வில்— வில்லின்
வலி— வலியை
கண்டு போ என்று— 'கண்டு போ' என்று
எதிர்வந்தான் தன்— எதிர்ந்துவந்த பரசு ராமனுடைய
வில்லினேடும் தவத்தை— வில்லையும் தபஸ் ஸையும்
எதிர்— அவன் கண்முன்னே
வாங்கி— அழித்தவனுய்
முன்— இதற்குமுன்னே
வில்— திருக்கையில் வில்லை
வலித்து— வளைத்து [யுண்டய
முது பெண்— தாடகி என்னும் ராக்ஷஸி
உயிர்— உயிரை
உண்டான் தன்— முடித்த சக்ரவர்த்தி திரு மகனுடைய
வில்லின் வன்மையைப் பாடிப்பற—;
தாசரதி— தசரதபுத்ரனுடைய
தன்மையை— குணத்தை
பாடிப்பற. [இதராமாவதாரத்திலீடு பட்ட்வள்வார்த்தை.]

வ்யா. இரண்டாம்பாட்டு. என்னித்யாதி. "என்னுடைய வில்லின்வலியைக் கண்டுபோ" என்று எதிரேவந்த பரசுராமனுடைய. அதாவது - மாமேறச்வர தநுர்ப்பங் கம்பண்ணி ஸ்ரீஜநகராஜன் திருமகளைத் திருமணம்புணர்ந்து, பெரியசெருக்கோடே திரு வயோத்தியையைநோக்கி யெழுந்தருளா நிற்கச்செய்தே, இந்த விசேஷத்தைக்கேட்டு, குபி தஹ்ர்தயனுய்த் தன்னுடைய வில்லையுமெடுத்துக்கொண்டு நடுவழியிலேவந்து தோன்ற,சக்ர வர்த்திபெதிரேசென்று பொற்பூக்களையும் காலிலேபோகட்டு அதுவர்த்தித்து(க) "வாஸு நாம்ஸிவஸுதாணா ஸுஹபண்டா தஸிஹ்ருஹி" என்று அர்த்தித்தவளவிலும் அத்தை அதிக்ரமித்துத் தள்ளிக் கொடுபோந்து, தன்சிற்றமெல்லாந் தோற்றும்படி முகத்தைப் பார்த்து, "முன்பேமுரிப்போய் பலவிடங்களிலும் பூண்கட்டிக்கிடக்கிறதொரு சாதனை வில்லைமுறித்தேன் என்று கர்வோத்தானுய் வருகிற நீ என்கையில் வில்லைவாங்கி வலித் தாயாகில்சமத்தன்" என்னும் நினைவாலே, "என்வில்வலிகண்டுபோ" என்று தன்னு டைய பூர்வபராக்ரமங்களையும் அதுக்கடியான தபஸ்ஸையும் கனக்கநினைத்து, "சக்ரவர்த் திதிருமகன்" என்றுமதியாதே எதிரே அடர்ந்துவந்தபடியைச் சொல்லுகிறது.

(க) "பாலாநாம்மமபுத்ராணு மபயம்தாதுமர்ஹஸி."

தன் வில்லிலேறும் தவத்தையேதீர்வாங்கி. "ஆனல் தன்னுடைய வில்லைத் தந்து காண்" என்று வில்லை வாங்குகிறவளவில், அந்த வில்லோடேகூட அவனுடைய கர்வமோற தபஸ்ஸையும், அவன் பார்த்துநிற்கச் செய்தே வாங்கி. எதிர்வந்தான்றன் வில்லென்று- எதிரேவந்தவன்றன்னுடைய வில்லென்னுதல்; எதிரேவந்த பரசுராமன்கையிலிருப்பதாய் வைஷ்ணவமான தநுஸ்ஸாகையாலே முன்பே தன்னுடையதாயிருக்கிற வில்லென்னுதல். இப்படியிருக்கிற வில்லோடே, அவனுடைய தபஸ்ஸை யெதிர்வாங்குகையாவது- அந்த வில்லைவாங்கி அதிலே சரத்தைத்தொடுத்து, "இத்தைக்கொண்டு உன் ப்ராணனைப் போக்கிவிட என்றால் நீ ப்ராஹ்மணனு யிராநின்றாய்; ஆனபின்பு, உன்னுடைய கதி பங்கத்தைப் பண்ணிவிடலோ, உன்னுடைய தபோபலங்களையழித்துப் பொகட்டுவிடலோ" என்று கேட்டவளவில்; "கதிபங்கம்பண்ணினால் எனக்கு வாஸஸ்தலமான மஹேந்த்ர பர்வதத்தை நம்மாலாகாது, என்னுடைய தபோபலத்தை யழித்துவிடும்" என்ன; அப்படி செய்துவிட்டது. ஸ்வரூபாவேசாவதாரமாய், தசாவதாரமத்யே ஸேர்படிதனுப்போருகிற அப்பரசுராமன்றான் நிரஸ்தனனபடி யெங்ஙனே யென்னில்; ஸ்வரூபாவேசத்திலும் ஸாக்ஷாதவதாரம் ப்ரபலமாகையாலே அத்யுத்கடத்வமுண்டானபோது இதினுலே அதுநிரஸ்தமாகக்குறையில்லை; சக்த்யாவேசத்தில் ஸ்வரூபாவேசம் ப்ரபலமானவோபாதி, ஸ்வரூபாவேசத்தில் ஸாக்ஷாதவதாரம் ப்ரபலமாகத்தட்டியில்லையிறே; சக்த்யாவேசத்தில் ஸ்வரூபாவேசம் ப்ரபலமாகையாலே யிறே ஸேர்ஸ்ரபார்ஹவர்ஜ்ஞான் பரசுராமனுலே நிரஸ்தனுப்பது.

முன்வில்லலித்து முதுமெண்ணெயிருண்டாள். இதற்கு பூர்வத்திலே விச்வாமித்ரமஹர்ஷியினுடைய அத்வரத்தாணுர்த்தமாக மஹர்ஷியோடேகூட எழுந்தருளினவளவிலே; பாதிம்ஸையிலே பழகி, யாகங்களையும் ப்ராஹ்மணரையும் தபஸ்ஸுக்களையுமழித்துக்கொண்டு திரியும் ராக்ஷஸியான தாடகை, அதிரக்கடப்பிட்டுக் கைகளையுமெடுத்துக்கொண்டு மிருந்த மிருந்தகோபத்தோடே நலிவதாக அடர்ந்துவர, விச்வாமித்ர நியோகத்தாலே திருக்கையில் வில்லோடுக்கு அவளுடைய ப்ராணனைமுடித்தவன், தன்வில்லின்வன்மையைப் பாடிப்பற. அவன் தன்னுடைய வில்லின்வன்மையைப் பாடிக்கொண்டு பறவென்று எதிரியைப்பார்த்துச் சொல்லுகிறான். வில்லுக்கு வலிமையாவது- "காய்ங்கடுஞ்சிலை" என்கிறபடியே ப்ரதிபக்ஷநிரஸநத்தில் பெருமாள் கண்பார்க்கிலும் கண்பாராமல் காரியம் செய்யும் திண்மை. தாசரதிதன்மையைப்பாடிப்பற. இத்தால்- இவ்வதிமாநுஷசேஷ்டிதங்களைச் செய்யாநிற்கச்செய்தேயும், மீளவும் ஈச்வரகந்தமற "ஐயர் மகன்" என்றே தன்னைநினைத்துநின்று கார்யஞ்செய்தகுணத்தைச் சொல்லுகிறது. ... ... உ.

மு.—உருப்பிணிநங்கையைத் தேரேற்றிக்கொண்டு
விருப்புற்றங்கேக விரைந்தெதிர்வந்து
செருக்குற்றுன்வீரஞ் சிதையத்தலையைச்
சிரைத்திட்டான் வன்மையைப்பாடிப்பற தேவகிசிங்கத்தைப்பாடிட்பற.

பதவுரை.

உருப்பிணி நங்கையை— ருக்மிணிப் பிராட்டியை	ஏற்றிக்கொண்டு— ஏறிக்கொண்டு
தேர்— திருத்தேரிலே	அங்கு— அவ்வளவிலே
	விருப்புற்று— விருப்பத்தை யுடையனுய்

எக— போகாநிற்கச் செய்தே
எதிர்— எதிர்ந்தின்று பொருவதாக
விசைந்து வந்து— விசைந்தோடி வந்தவலுப்
செருக்குற்றான்— கர்வத்தையடைந்தருக்
மனுடைய
வீரம் சிதைய— வீர்யமழியும்படி
தலையை— தலையை

சிதைத்திட்டான்— அம்பாலே சிதைத்த
விட்டவனுடை
வன்மையைப் பாடிப்பற—;
தேவகி சிங்கத்தை — தேவகியற்றிற்
பிறக்கையாலே சிங்கம்போன்ற
வீரப்பாட்டை யுடையவனை
பாடிப்பற—

வ்யா: முன்றும்பரட்டு. உருப்பிணிநங்கையைத் தேரேற்றிக்கொண்டு. "கண்ணலங்கோடித்து" என்கிறபாட்டிற் சொல்லுகிறபடியே - தான் முன்புதேடின தனமெல்லாம் இதிலே செல்லுப்படி .கல்யாணத்தைப் பெருக்கக்கோடித்து, புதுப்பூ மொக்கவேணும் என்று ஆசைப்பட்டிருப்பாரைப்போலே கன்யகையானவிவளைக் கைபிடிப்பதாக விரும்பி, அதுக்கு பூர்வக்ரியைகளெல்லாம் செய்து "இனி இவ்விஷயம் நமக்குக்கைப்புகுந்தது" என்று நிச்சயித்திருந்த சிசுபாலன் தேஜோஹரனிப்பட்டு, ஒருவர்முகம்பார்க்க லஜ்ஜித்து அண்ணாந்து கொண்டிருக்கும்படியாக அங்கேசென்று கையைப்பிடித்தெடுத்து, ருக்மிணிப் பிராட்டியைத் திருத்தேரிலே யேற்றிக்கொண்டு. விருப்புற்றங்கே. அவ்வளவிலே விருப்பத்தைப் பண்ணிக்கொண்டு போராநிற்கச்செய்தே. அவ்வளவிலே விரைந்தியாதி. ருக்மிணிப் பிராட்டியினுடைய தமையனான ருக்மன்," இப்படிச் செய்கை யாவதென்" என்று எதிர்போருக்கு மீட்பாகை விரைந்துவந்து தன்னுடைய வீர்யத்தால்வந்த செருக்கையுடைய னாய்க்கொண்டு தகைய. "இவனைக்கொல்லில் ருக்மிணிப்பிராட்டி மநஸ்ஸு பிசகும்" என்று அவனைப்பிடித்துத் தேர்க்காலோடேகட்டி அவனுடைய வீரத்துக்குப் பங்கமாக அவன்றலையை அம்பாலே சிரைத்து விட்டவனுடைய வலியை. ப்ரதிபக்ஷரிதையாய்க் கொண்டு பாடிப்பற. அன்றிக்கே, "வந்தசெருக்குற்றான்" என்று பாடமானபோது - "மீட்சியெனும்" என்னும் கற்புதலாலே விரைந்து எதிர்ந்து வந்த கர்வயுக்தனானவனுடையதலையைச் சிரைத்திட்டான் வன்மையைப் பாடிப்பறவென்கை. தேவகிசிங்கத்தைப் பாடிப்பற. ருக்மிணிப்பிராட்டியைத் திருமணம்புணருகைக்குடலான தேவகியிற்றில் பிறப்பையும், ப்ரதிபக்ஷகோசரத்தில் விழ்ந்மம்போலே யிருக்கும் வீரப்பாட்டையு முடையவனைப் பாடிப்பற. ... ... கூ.

மூ.—மாற்றுத்தாய்சென்று வனம்போகேயென்றிட
ஈற்றுத்தாய்பின்றொடர்ந் தெம்பிரானென்றழக்
கூற்றுத்தாய்சொல்லக் கோடியவனம்போன
சீற்றமிலாதானைப்பாடிப்பற சீதைமணாளனைப்பாடிட்டற். கூ.

310

பதவுரை:

மாற்றுத் தாய்— தம் தாயாரையொத்த ஸ்ரீமித்ரையர்
சென்று— சென்று
வனமே— 'காட்டுக்கே
போகு— போ'
என்றிட— என்று நியமிக்கவும்
ஈன்று தாய்— பெற்றதாயாரான ஸ்ரீ கௌஸலையார்
பின் தொடர்ந்து— பின்னே சென்று
எம்பிரான் — 'என் நாயனே!

போன— எழுந்தருளினவனுய்
சிற்றம் இலாதானே— 'காட்டிலே போக விட்டாள்' என்கிற கோபமில்லாதவனே
பாடிப்பற—; [வனே
சிதைத் மணுளனே— ஸீதைக்கு வல்லபனனே
பாடிப்பற.

(உன்னைப்பிரிந்து எப்படி தரித்திருப்பேன்;')
என்று அழ— `என்று கதறி அழவும்
கூற்றுத்தாய் சொல்ல— கூற்றம் போன்ற கைகேயியுடைய சொல்லைக் கொண்டு
கொடிய வனம்— கொடிய காட்டிலே

வ்யா. நான்காம்பாட்டு. மாற்றுத்தாய்சென்று வனம்போகேயென்றிட. மாற்றுத்தாயென்றது மற்றைத்தாயென்றபடி. அன்றிக்கே, 'மாறு' என்று - ஒப்பாய், மாறான தாய்-பெற்றதாய்க்குப்போலியான தாயென்னவுமாம். ஸ்ரீகௌஸல்யாதேவியாரோபாதி, பெருமாள் பக்கல் அதிஸ்நேஹியாயிறே ஸுமித்ரையாரிருப்பது. இப்படியிருக்கிற தாயாரானவள் சென்று "நீர்வநத்திலேபோம்" என்றுசொல்ல. அதாவது- திருவபிஷேகமங்களமஹோத்ஸவார்த்தமாகத் திருப்படைவீடெல்லா மலங்கரித்து உத்ஸவமும்தொடங்கி புரோஹிதரான வஸிஷ்டாதிகளுந் தானுமாகக்கொண்டு, ராஜாவான சக்ரவர்த்தி, திருவபிஷேகார்த்தமாகப் பெருமாளுக்குக் காப்புக்கட்டி, புரச்சரணங்களும் செய்வித்து, "இனி அபிஷேகம்செய்யுமித்தனே" என்று முஹூர்த்தம்பார்த்திருக்கிறவளவிலே, கைகேயியானவள் குப்ஜைவார்த்தையாலே நெஞ்சுகல்லி, பர்த்தாவான சக்ரவர்த்தியைப்பார்த்து, எனக்கு "இரண்டுவரமுண்டே முன்னே தந்திருப்பது, அதிரண்டும் இப்போது செய்யவேணும்; அதாவது- ராமனை அபிஷேகம்செய்யாமல் காட்டிலேபோகவிடவேணும், பரதனை அபிஷேகம் செய்யவேணும்" என்ன; ஸத்யதர்மபராயணனுகையால் "என்செய்வோம்" என்று இடிவிழுந்தாற்போலே இவ்வார்த்தையைக்கேட்டு க்லேசப்பட்டு, பெருமாளையழைத்துக்கொண்டுவரும்படியாக ஸுமந்த்ரனைப்போகவிட்டு, தான்கலங்கிக்கிடக்க; ஸுமந்த்ரன்சென்று "ஐயர் எழுந்தருளச்சொல்லுகிறார்" என்கையாலே, பெருமாளும், திருவபிஷேகத்துக்கென்று அலங்கரித்த திவ்யகாத்ரராய்க்கொண்டு, பிராட்டி மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு அந்தஃபுரத்வாரத்தளவும் பின்னேதேவர, திவ்யாந்தஃபுரத்திலிருந்தும் புறப்பட்டுப் பெரிய கோலாஹலத்தோடே எழுந்தருளிவந்து தமப்பனுரைக்காணப் புகுந்தவளவிலே, கலங்கிக்கிடக்கிறபடியைக்கண்டு "இதுக்கடியென்" என்று பயப்பட்டு, "ஐயர்க்கு இப்போது க்லேசமேது" என்று கைகேயியைக்கேட்க; "முன்பே எனக்கு இரண்டுவரம் தந்திருப்பர்; அந்த இரண்டுவரமும் இப்போது பெறுகைக்காக உம்மைக் காட்டிலே போகவிடவேணுமென்றும், பரதனை அபிஷேகம் செய்யவேணுமென்றும் நானபேக்ஷித்தேன்;ஸத்யம் தப்பாதவராகையாலே அதுக்கு அதுமதிபண்ணி உம்மைக் காட்டிலேபோகவிடுவதாக அழைத்துவிட்டார்; இப்போது உம்மைக்கண்டவாறே வாய்திறந்து சொல்லமாட்டாமல் கிடக்கிறார்" என்ன; "இப்படியோ நான் ஐயர்க்கு பரதந்த்ரனுய் வர்த்தித்தபடி, என்னை நியமிக்கும்போதைக்கும் இப்படி க்லேசிக்கவேணுமோ, நெருப்பிலே விழச்சொன்னுல் அதுவும் நான் செய்யேனே" என்ன; "ஆனுல், அவர்க்காக நான் சொல்லுகிறேன், நீர் வநவாஸார்த்தமாகப்போம்" என்ன; "அப்படி செய்யக்கடவேன்" என்று ஸங்கல்பித்துப் புறப்பட்டுத் தாயாரான கௌஸல்யாதேவியாரையும் வந்துகண்டு வநகமநார்த்தமாக உத்யோகிக்கிறவளவிலே, இளையபெருமாள், தமமுடைய திருத்தாயாரான ஸுமித்ரையார் பக்கலிலே வந்து, "ஐயர் சொல்லிற்றுச் செய்யவேண்டுகையாலே பெருமாள் காட்டிலே யெழுந்தருளாநின்றார், நானுங் கூடப்போகத்தக்கதாக

போகிறேன்" என்ன; (க) "வ்ருஷ்ஸ்வ நவாஸாய ஸ்வதராக்த ஸ்ஸுஹ்ருஜ்ஜநாநாமே ப்ரமாதம் மாகார்ஷீ புத்ரப்ராதரிகச்சதி" என்றும்; (உ) "ராமம் தசரதம் வித்தி மாம்வித்தி ஜநகாத்மஜாம் அயோத்யாமடவீம் வித்தி கச்ச காதயதாஸுகம்" என்றுஞ்சொல்லி இவரை ஒருப்படுத்தி, பெருமாள்பக்கலிலே சென்று, அவர் வநகமநார்த்தமாக உத்யோகித்து நிற்கிற்படியைக்கண்டு, சக்ரவர்த்தியுங் கைகேயியுஞ்செய்த கொடுமையையெல்லாம் நெஞ்சிலிருத்து "ஒருபெண்பெண்டாட்டி 'என்பிள்ளைக்குவேணும்' என்று பறித்துக்கொண்டராஜ்யம் உமக்குவேண்டா, ஒருவரும் அபிமாநியாதவநமே உமக்கு அமையும், ஆனபின்பு வநத்திலே யெழுந்தருளும்" என்று சொன்னது. வனம்போகேயென்றது- வநமேபோகு என்றபடி. இந்த அவதாரணமிறே கீழ்ச்சொன்ன பொருளைக்காட்டுகிறது.

ஈற்றுத்தாய் பின்தொடர்ந்து எம்பிரானென்றழ. பெற்ற தாயாரான ஸ்ரீகௌஸல்யார் பின்னேதொடர்ந்து சென்று தன்னுடைய பிரிவாற்றுமை யெல்லாம்சொல்லி, "ஏகபுத்ரையான நான் உம்மைப்பிரிந்திருக்கமாட்டேன், என்னுடைய நாயனே!" என்று கட்டிக்கொண்டு அழ. கூற்றுத்தாய்சொல்ல. கூற்றம்போன்ற கைகேயியாகிற தாய்சொல்ல. பெருமாளுடைய ஸௌகுமார்யத்தையும், போகிறவிடத்திலுண்டான கொடுமையையும் பாராமல், பதிநாலுஸம்வத்ஸரம் வநவாஸம் பண்ணச்சொன்ன க்ரௌர்யத்தைப்பற்ற - இவளைக் கூற்றுத்தாயென்கிறது. "பித்வசநபரதந்த்ரராய்ப் போனார்" என்ன நிற்கச்செய்தே, இவள்சொன்னதுக்காகப் போனார் என்கிறது - அவர் வாய்விட்டுச் சொல்லமாட்டாதே அநுமதி பண்ணிக்கிட்டக, அதுதானும் சொன்னாள் இவளாகையாலேயிறே. மாற்றுத்தாய் சென்று வநம்போகேயென்றிடவும், ஈற்றுத்தாய் பின்தொடர்ந்து எம்பிரானென்றழவும், கூற்றுத்தாய் சொல்லடியாகக் கொடியவநத்திலே போனவென்றபடி.

அதவா, மாற்றுத்தாயென்கிறது - கைகேயியாகவும், கூற்றுத்தாயென்கிறது - ஸுமித்ரையாராகவும் யோஜிக்கவுமாம். அப்போதைக்கு, மாற்றுத்தாயென்றது - ஸபத்நியாகையாலே; ஸ்ரீகௌஸல்யாருக்குத் தன்நிலைவாலே மாற்றுந்தாயென்றபடி. ஸ்ரீபரதாழ்வான் நிலைவுக்கு மேல்பொருந்தாமையாலே மாற்றுந்தாயென்கிற தாகவுமாம். "மாறு" என்றுசொல்லி,-"தாய்" என்னவேண்டுகிறது பெருமாள் நிலைவாலேயிறே; "கடுவிலாச்சி" என்றிறே அவர் எப்போதும் மருளிச்செய்வது. சென்றுவனம்போகேயென்றிட. வநமே சென்றுபோகு என்றுநியமிக்க. அதாவது - ராஜபோகத்தில் நெஞ்சுவையாதே வந்தளவுஞ்சென்று அதிலேபோய்விடு என்று நியமிக்கவென்னை; "வா" என்றருளன்றே; "போ" என்றுமதுவேயிறே இவள்சொல்லுவது. ஈற்றுத்தாயித்யாதி. பெற்றதாயாரான கௌஸல்யார், "என்நாயனே! ஏகபுத்ரையான் நான் உம்முடைய விச்லேஷ வ்யஸநம் பொறுக்கமாட்டேன், நான் எப்படி உம்மைப்போகவிட்டு தரித்திருப்பது" என்று பின்தொடர்ந்து சென்றழ.

கூற்றுத்தாய்சொல்ல. ஸுமித்ரையாகிற தாய்சொல்ல. கூறுபட்ட ஹவிஸ்ஸைபுஜிக்கையாலே கூற்றுத்தாயென்னுதல்; சக்ரவர்த்திக்கு மூவரும் ஸஹதர்மசாரிணிகளாகையாலே யதாம்சத்தாலே கூற்றுத்தாயென்னுதல்; ஸ்ரீகௌஸல்யாரைப்போலே நிஷேதிக்க அது

(க) "ஸ்ர்ஷ்டஸ்த்வம்வநவாஸாய ஸ்வதராக்த ஸ்ஸுஹ்ருஜ்ஜநாநாமே ப்ரமாதம் மாகார்ஷீ புத்ரப்ராதரிகச்சதி" (உ) "ராமம் தசரதம் வித்தி மாம்வித்தி ஜநகாத்மஜாம் அயோத்யாமடவீம் வித்தி கச்ச காதயதாஸுகம்."

மநிபண்ணுமல் " அறம் முமனதகளாலே ஒருத்தி 'னனக்கு' என்றது உமக்கென்செய்ய" என்று இவள் சொன்னதை மிகவும் திருவுள்ளம்பற்றுனகயாலே விச்லேஷபிருக்களபி ப்ராயத்தாலே கூற்றம்போன்ற தாயென்னுதல். இப்படியிருக்கிறவள் வசநத்தைக்கொண்டு கொடியவநம்போன- முற்பட்டயோஜனை- நாலூர்பிள்ளையிட்டருளின வ்யாக்யாநப்ரக்ரியை; பிற்பட்டயோஜனை- ‡ பிள்ளை யிட்டருளின வ்யாக்யாநப்ரக்ரியை. முற்பட்டயோஜனையில், " சென்றுவனம்போகெ " என்கிற விதுக்கு ஸ்வரஸார்த்தம் பித்திக்கையும், *கூற்றுத்தாய் சொல்லக்கொடிய வநம்போனவிது " தண்டகநூற்றவள் சொற்கொண்டுபோகி " என்றும், " குலக்குமரா காடுறையப் போவென்று விடைகொடுப்ப விலக்குமணன்றன்னோடு மங்கே கியது " என்றும், " கொடியவள்வாய் கடியசொற்கேட்டு - கான்தொடுத்த நெறிபோகி " என்றும் கீழ்மேல் அருளிச்செய்தவற்றுக்குச் சேர்ந்திருக்கையுமுண்டு.

ஸம்ப்ரதாயத்திலும் வந்தால், நம்பிள்ளை ஸ்ரீபாதத்திலே கேட்ட சிறியாழ்வானப் பிள்ளைகுமாரர் பக்கலிலேகேட்ட நாலூர்பிள்ளை யருளிச்செய்த தாகையாலேவந்த ப்ராபல்ய முண்டு. அவர்தாம் ஆச்சான்பிள்ளை திருத்தமப்பனாகையாலே, பிள்ளைக்கு பரமாசார்ய ருமிறை; ஆகையாலே, அந்தியோஜனை முற்படவெழுதி, பிள்ளையருளிச் செய்தயோஜனை பிற்பட எழுதப்பட்டது. இரண்டு யோஜனையிலும், ஸுமித்ரையார், பெருமாள் முகம் பார்த்துச் சொன்னதாகச் சொல்லப்பட்டவசநம் ஸ்ரீராமாயணத்தில் இல்லையேயாகிலும் இதிஹாஸாந்தர புராணாந்தராதிகளிலேயாதல், கல்பாந்தரத்திலேயாதல் உண்டென்று கொள்ளவேணும் * மயர்வற மதிநலமருளப் பெற்றவிவர் இப்படி யருளிச்செய்கையாலே.

கொடியவனம்போன. " கன்னிரைந்து தீய்ந்து கழையுடைந்து கல்சுழன்று, பின்னும் திரைவயிற்றுப்பேயே திரிந்துலவாக், கொன்னவிலும் வெங்கானம் " என்னும்படியிறே காட்டின்கொடுமை தானிருப்பது; இப்படியிருக்கிற காட்டிலே, * கைவாயவேல் நெடுங்கண் நேரிழையு மிளங்கோவும் பின்புபோக வெழுந்தருளின: சீற்றமிலாதானே. " காட்டினகாப்போடே காட்டிலே தள்ளிவிட்டாள்" என்னும் சீற்றம் ஏகதேசமும் திருவுள்ளத்திலில்லாதவனே. (க) " ரோஷகூஷாஸஹோவம் கூஷீபுகூஷ்ய விவரூபோ ராஜ்யம்வாவநவா லோகாவநவா லோகேஹாடயம் " என்று - ஸந்தோஷத்தோடேயிறே யெழுந்தருளிற்று. சீதைமணாளனைப்பாடிப்பற. வநவாஸந்தான் ஸரஸமாய்த்தது அவள்கூடப் போகையாலேயிறே. பிராட்டியும் தாமும் " ஏகாந்தரஸமநுபவிக்கலாம்தேசம் " என்றிறே காடுதன்னை விரும்பிற்று. (உ) " ஜாநகீ ஸஹிதஸ்ய மே ஸுகநிவாஸோ ஜாயதே । லயிகம்வநவாஸாத்து விநாகிம் நு கிலவைதேஹ்யா: " என்றிறேயருளிச்செய்தது. இப்படியிருக்கிறவனைப் பாடிப்பறவென்று ப்ரதிகோடியான வளைப்பார்த்து நியமிக்கிறாள். ... ... ச.

மு.—பஞ்சவர்தூதனுய்ப் பாரதங்கைசெய்து
நஞ்சமிழ்நாகங்கிடந்த நற்பொய்கைபுக்கு

‡ பிள்ளையாகிறார்- திருவாய்மொழிப்பிள்ளை. இவர் இப்ரபந்தத்துக்கு ஸ்வாபதேசவ்யாக்யாநமிட்டருளியிருப்பதாகப் பெரியோர் பணிப்பர். (க) " மாச லக்ஷ்மண ஸந்தாபம் கார்ஷீர் லக்ஷ்மம்யாவிபர்யயே-ராஜ்யம்வா வநவாஸோவா வநவாஸோ மஹோதயஃ " (உ) " தர்சநம் சித்ரகூடஸ்யமந்தாகிந்யாச்ச சோபதே-அதிகம் புரவாஸாச்ச மந்யே தவசதர்சநாத். "

அஞ்சப்பணத்தின்மேற் பாய்ந்திட்டருள்செய்த
அஞ்சனவண்ணனைப்பாடிப்பற வசோதைதன்சிங்கத்தைப்பாடிப்பற. ரு

பதவுரை.

பஞ்சவர்— பஞ்சபாண்டவர்களுக்கு
தூதனுய்— தூதனுய்க்கொண்டு
பாரதம்— பாரதயுத்தத்திலே
கை செய்து— ஸஹகரித்து
நஞ்சு— விஷத்தை
உமிழ்— உமிழாநின்ற
நாகம்— காளியநாகம்
கிடந்த— கிடந்த [யிலே
நல் பொய்கை— கொடிய பொய்கைக் கரை
புக்கு— போய்ப்புக்கு
அஞ்ச— அவன் அஞ்சும்படி
பணத்தின்மேல்— பணங்களின்மேலே
பாய்ந்திட்டு— குதித்து இளைப்பித்து
(அவ்வளவிலே, அவனும் அவன் மனைவியும் சரணம்புக:)
அருள் செய்த — அவனைக் கொல்லாமல் விட்டவனுய்
அஞ்சனம்— மைபோன்ற
வண்ணனை— வர்ணத்தை யுடையனனவனை
பாடிப்பற—:
அசோதை தன் சிங்கத்தைப் பாடிப்பற.

வ்யா. ஐந்தாம்பாட்டு. பஞ்சவர்தூதனுய். தர்மபுத்ராதிகளைவர்க்குத் தூதனுய். இவர்கள் ஐவரிலும், இவனை எவரறியாதார் இல்லைபோலேகாணும். தூதனுய். ஸர்வாதி கனைதான், கழுத்திலே ஓலைகட்டித் தூதுபோகிறவிடத்தில் புரையற்றிருந்தபடி. இது தன்னைப் பெரும்பேறுகளிற்றை யிவன்றன் நினைத்திருப்பது. "இன்றுர் தூதனென நின்றன்" என்கிறபடியே - "பாண்டவதூதன்" என்கிற ப்ரஸித்திபெற்றபின்பிற்பாடில் கால்பாவி நடித்துநின்றது. பாரதம்கைசெய்து. "பக்தர், ஓரூர்" என்றுற்போலே சொன்னவிடத்தில் அவர்கள் ஒன்றுக்கும் இசையாமையாலே, "ஆனல், யுத்தத்தைப் பண்ணி ஜயித்தவர்கள் பூமியாளுங்கோள்" என்று அவர்களை யுத்தத்திலே பொருத்திப் போக்கு, பாண்டவர்களுக்காய்நின்று, பாரத ஸமரத்தில் கையுமணியும் வருத்தி யுத்தத்தை நடத்தி. நஞ்சுமிழ்நாகங்கிடந்த நற்பொய்கைபுக்கு. அருகணைந்த வர்கூடங்கள் பகுதிகளெல்லாம் பட்டுவிழும்படி விஷத்தை யுமிழாநின்ற காளியனுகிற ஸர்ப்பங்கிடந்த * நச்சழல் பொய்கையிலேபுக்கு. "நற்பொய்கை" என்றது - "நல்லபாம்பு, நல்லநருப்பு" என்பாரைப் போலே விபரீதலக்ஷணை. அதவது, காளியன் ப்ரவேசிப்பதுக்கு முன்புத்தை படியையிட்டுச் சொல்லிற்றுகவுமாம். அஞ்சப் பணத்தின்மேல் பாய்ந்திட்டருள்செய்த. அப்பொய்கையைக் கலக்கி, காளியன் க்ருத்தனுய்த் தலையெடுக்குமப்படிபண்ணி, பின்பு அவனஞ்சும்படியாக அவன் பணங்களின்மேலே சென்று குதித்து நின்றுடி அவனையிளைப்பித்து.(க) "கூவாதத்3 தொவ்ருத்தீம்ப்ரஹீ2தி3" என்றும், (உ) "மாத்ருஜீக்ஷாவ்ருதீபகாழி" ம்என்று-அவனும் அவனுடைய ஸ்த்ரீகளும் சரணம்புகுந்தபின்பு அவன் ப்ராணன்பெற்றுப் போம்படி க்ரியை பண்ணின. அஞ்சனவண்ணனைப்பாடிப்பற. இப்படி சரணகதராகூடாணம் பண்ணுகையாலே அஞ்சனம்போன்ற தன்திருமேனிநிறம் ப்ரகாசிக்கும்படி நின்றவனைப் பாடிக்கொண்டுபற. அசோதைதன் சிங்கத்தைப்பாடிப்பற. யசோதைப்பிராட்டி சிறாட்டிவளர்க்கையாலே ஸிம்மக் கன்றுபோலே செருக்கியிருக்கிறவனைப் பாடிப்பறவென்று எதிரியைப் பார்த்து நியமிக்கிறுள். ... ... ரு.

(க) "க்ருபாமாத்ரமனோவாத்தி : ப்ரஹீதமே."
(உ) "மாத்ருமுகாவ்ருதீயாம்."

மூ.—முடியொன்றி மூவுலகங்களு மாண்டென்
னடியேற்கருளென் றவன்பின்றொடர்ந்த
படியில்குணத்துப் பரதனம்பிக்கன்
றடிநிலையீந்தானேப்பாடிட்டற வயோத்தியர்கோமானேப்பாடிட்டற. கூ.

312

பதவுரை.

முடி ஒன்றி— "திருமுடிசூடி
மூ உலகங்களும்— பூமி, சுவர்க்கம், பாதாள
மென்கிற மூன்று லோகங்களையும்
ஆண்டு— பரிபாலித்துக்கொண்டு
உன்— தேவரீருடைய
அடியேற்கு— தாஸனாகிவனக்கு
அருள்— க்ருபபண்ணியருளவேணும்"
என்று— என்று ப்ரார்த்தித்த
அவன்பின் தொடர்ந்த } அந்தசக்ரவர்த்தி திருமகன்
பின்னேசென்று தொடர்ந்த
படி இல்— ஒப்பில்லாத
குணம்— குணங்களை யுடையனான
பரதன் நம்பிக்கு— ஸ்ரீபரதாழ்வானுக்கு
அன்று— அவன் மனம்வருந்திநின்ற அக்கா
லத்திலே
அடிநிலை— ஸ்ரீபாதுகைகளை
ஈந்தானை— அளித்தருளினவனை
பாடிப்பற—;
அயோத்தியர்- திருவயோத்தியி லுள்ளார்க்கு
கோமானை— ராஜாவானவனை
பாடிப்பற.

வ்யா. ஸ்ரீரும்பாட்டி. முடியித்யாதி. சக்ரவர்த்திக்கு சாஸ்த்ரார்த்தங்கள் பண்ணின அன்று நாயிறுபாடி, ராஜகுலத்திலுள்ளாரும் பௌர்ணமாஸபதமும் புரோஹிதரான வஸிஷ்டாதிகளும் எல்லாரும் திரளவிருந்து "பெருமாள் காடேறப்போனார், சக்ரவர்த்தி தஞ்சினன் நாடு அராஜகமாய்க்கிடக்க வொண்ணாது" என்று தன்னை முடிசூட்டுவதாக மங்களாவஹமான தூர்யகோஷத்தையும் பண்ணிக்கொண்டிருக்க, அந்தத்வனி கேட்டபோதே கலக்கமுற்று, (க) "விலபலபலபாமதியு ஜமஹபுவபரோஹிதபு" என்கிறபடியே தன்னற்றுமையெல்லாம் தோற்றும்படி திரளிலேயிருந்து, "ஒருதிரளாகவிருந்து என்னுடைய சோகத்வத்தை அபஹரிப்பதே!" என்று பெருமிடறுசெய்து கூப்பிட்டு, (உ) "நியமதிக்ரமம் ரஹஸியோயமெவ" என்கிற க்ரமமும் பாராதே, புரோஹிதனான வஸிஷ்டபகவானையும் "அழகிதாக இக்குடிக்கு முன்னேடஹிதம்பார்த்தாய்" என்று அத்திரளிலே கர்ஹித்து, (ங) 'ராஜ ஞபலஞரஹஞரஹஸ்ய யதுவக்ஷ்யதிஹமஹபுஹிகயம்தஞராஜ்யமதிக ஹமெவ ரஞ்ஜராவஹாரகஃ" என்று ஒருவனுக்கு இரண்டு வஸ்து சேஷமானால் ஒன்றை ஒன்று நிர்வஹிக்குமோ; ராஜ்யந்தான் என்னையாண்டாலோ, நாடு அராஜகமாய்க் கிடக்க வொண்ணாது என்கிறவித்தையே பார்க்குமித்தனையோ, இதுக்கு விஷயபூதனான என்னையும் பார்த்து வார்த்தை சொல்லவேண்டாவோ, அவர் போகட்டுப்போன ராஜ்யத்தை அபஹரித்தால், அவரைப்பிரிந்த வருத்தம்முடிந்தவன் வயிற்றிலே பிறந்தவனும்படி யெங்ஙனே நான்" என்று சொன்னவாறே; "ஆனல் செயயவடுப்பதென்" என்று அவர்களெல்லாரும் இவன்றன்னைக்கேட்க, "நாமெல்லாரும் கூடப்போய் பெருமாள் திருவடிகளிலே விழு

(க) "விலபலபஸபாமதியே ஜகர்ஹேச புரோஹிதம்."
(உ) "நியமாதிக்ரமம் ரஹஸியோதயேத்" (ங) "ராஜ்யஞ்சாஹஞ்சாமஸ்ய தர்மம் வக்துமிஹார்ஹஸி—கதம்தசராதாஜ்ஜாதோ பவேத்ராஜ்யாபஹாரகஃ."

நீது அவரை மீட்டுக்கொண்டுவந்து திருவபிஷேகம் பண்ணுவிப்போம் வாருங்கோள்" என்று எல்லாரையும் கூடக்கொண்டு திருச்சித்திர கூடத்திலே போய், பெருமாள் திருவடிகளிலே தன்னுர்த்தியை முன்னிட்டுச் சரணம்புகுந்து விண்ணப்பஞ்செய்த ப்ரகாரத்தைச் சொல்லுகிறது.

மூடியொன்றி. முடியைத்தவிர்ந்து சடையைப்புனைந்து நாட்டைவிட்டுக் காட்டிலே யெழுந்தருளின தேவரீர், இக்காட்டையும் தாபஸவேஷத்தையும் விட்டு நாட்டிலே திருவ யோத்தையிலே யெழுந்தருளித் திருமுடிசூடி.. மூவுலகங்களுமாண்டு. (க) "ஏதேஹோ கஸ்ய கஸ்யேதி நாபூந்நஸ்யா ஹாபூத்ரயம்" என்கிறபடியே மூன்று லோகத்தையும் ஸநாதமாக்கியாண்டு.உன்னடியேற்கருளென்றவன்பின்றேடர்ந்த. (உ) "ஹந்தாஸ்ருஷ்யஸ்ய தாஸஸ்ய ப்ரஸாதம் கர்துமர்ஹஸி" என்று ப்ரார்தாவாய்க் கூறுகொள்ள இருக்கிறவனன்றிக்கே, அகிலரஹஸ்யமும் தேவரீரோடே அதிகரிக்கையாலே சிஷ்யனுய், அவ்வளவுமன்றிக்கே, க்ரயவிக்ரயார்ஹனும்படி உமக்கு தாஸனுயிருக்கிறவெனக்கு ப்ரஸாதத்தைப் பண்ணியருள வேணும் என்று அர்த்தித்து, பின்னேசென்று அநுவர்த்திக்க. படியில்குணத்துப் பரதனம் பிக்கு. "இக்குடியில் முத்தாரிருக்க இளையார் மூடிசூடியறிவாரில்லை" என்ற குலமர்யாதையை நோக்குகையாலும், ஸ்வாதந்த்ர்யபீதியாலே முடிசூட வெருவி, தன்ஸ்வரூப்த்தை நோக்குகையாலும், ஆர்த்தியோடே திருவடிகளிலேவந்து விழுந்து "மீண்டு எழுந்தருளி திருவபிஷேகம் பண்ணியருளவேணும்" என்று அர்த்திக்கையாலும், ஒப்பில்லாத குணத்தையுடையனை ஸ்ரீபரதாழ்வானுக்கு. அன்றடிநிலையீந்தானை. அவன் ஆர்த்தனுய்நிற்கிற அக்காலத்திலே, "நீசொல்ல நாம் இப்போது மீண்டோமாகில், நம் ஐயர் சொன்னது செய்யாமல் ராஜ்யச்ரத்தையாலே மீண்டோமாவோம்; நீ நம்மைமீட்டுக்கொண்டு போனுயாகில், 'ஸ்ரீபரதாழ்வான் இரண்டுஞ்செய்ய வல்லனுயிருந்தான், – முன்பு, கீழோலைவைத்து தானைக்கொண்டு ராஜ்யத்தைவாங்கித் தமையனைக் காட்டேறப்போகவிட்டான்; இப்போது, லோகாபவாதம்முதிர்ந்தவாறே பின்தொடர்ந்துசென்று கண்ணீர்ப்பிசைந்து காலிலேவிழுந்து மீட்டுக்கொண்டுவந்தான்' என்னும் அவத்யமும் உனக்குவரும்; ஆனபின்பு, உன்னை ஸ்வதந்த்ரனுக்கி வார்த்தை சொன்னர் முன்னே, உன்ஸ்வரூபாநுரூபமான பாரதந்த்ர்யத்தைப் பெற்று நீபோ" என்று, அவன் நிர்ப்பந்தியாதபடி வார்த்தைசொல்லி யிசைவித்து, "மாவடியைத்தம்பிக்கு வான்பணையம்வைத்து" என்கிறபடியே அவன் ஸ்வாதந்த்ர்யபய மெல்லாம் போம்படியாகவும், "மீண்டு எழுந்தருளுவர்" என்னுமதுக்கு விச்வாஸமாகவும் திருவடிநிலைகளைக்கொடுத்து * அடிசூடுமாசாக்கி விட்டவனைப் பாடிப்பற. அயோத்தியர் கோமானைப் பாடிப்பற. ஸ்ரீபரதாழ்வான் முடிசூடாமல் அடிசூடிப்போகையாலே திருவயோத்தியையிலுள்ளார்க்கு தானேநிர்வாஹகனைவனைப் பாடிப்பற என்று எதிரியைப்பார்த்துச் சொல்லுகிறுள். ... ...

பதவுரை.

காளியன்— காளியநாகம் இடந்த
பொய்கை— பொய்கையானது
கலங்க— கலங்கும்படி
பாய்ந்திட்டு— சென்று குதித்து
அவன்— அவனுடையதாய்
நீள்— ஆகாசத்தளவும் வளர்ந்திருக்கிற
முடி ஐந்திலும்— ஐந்து பணங்களிலும்
நின்று— மாறிமாறி அடியிட்டுநின்று
நடம் செய்து— கூத்தாடி [படியும்
மீள— (அவன் சரணம்புக்கவளவிலே) மறு
அவனுக்கு— அந்தக் காளியனுக்கு
அருள் செய்த— திருவுள்ளமிரங்கின
வித்தகன்— விஸ்மயநீயனானவனுடைய
தோள் வலி— புஜபலத்தையும்
வீரம்— வீரப்பாட்டையும்
பாடிப்பற—;
தூ— பழிப்பற்ற
மணி— நீலரத்நம்போன்ற
வண்ணனை— வடிவழகை யுடையவனை
பாடிப்பற.

வ்யா. ஏழாம்பாட்டு. காளியன்பொய்கை. வெறும்புறத்திலே "காளியன்பொய்கை" என்னவமையுங்காணும் அதின் க்ரௌர்யத்துக்கு; "பாம்புப்பாழி" என்னுமாபோலே. அனுகூல ஸ்தாவர ஜங்கமாதிகளெல்லாம் அழலாலேபட்டு விழும்படியிறே பொய்கையில் விஷத்தினுடைய க்ரௌர்யமிருப்பது. "அயிரவாய்நச்சழல் பொய்கை" என்னக்கடவதிறே. கலங்கப்பாய்ந்திட்டு. "காளியன் தடந்தைக்கலக்கி" என்கிறபடியே பொய்கைகலங்கும்படி ஒடிச்சென்று குதித்து. அவனித்யாதி. பொய்கையைக் கலக்கினவாறே அதுக்குள்ளுக் கிடக்கிறவவன் அதிக்ருத்தனாய், தலையெடுத்து ஆகாசத்திலே வளர்ந்து பணங்களை விரித்துக்கொண்டு நிற்க, அப்பணங்களின் மேலே ஏறி ஐந்துபணங்களிலும் மாறிமாறிநின்று நர்த்தனஞ்செய்து. மீளவவனுக்கருள் செய்தவித்தகன். (க) "தம்ப்ரபிந்நசிரோக்ரீவமாஸ்யேப்ய: ஸ்ருதசோணிதம்" என்கிறபடியே தலைகளும் கழுத்தும்நெரிந்து வாய்களாலே ரத்தம்சொரியும்படி அவன் இளைத்து, தன்னுடைய ப்ராணன் பெறுகைக்காகச் சரணம்புகுந்தவாறே, முன்பு அவனைக் கொல்லநினைத்த கோபத்தைவிட்டு, அவன் ப்ராணன் பெறும்படி, மீண்டு அவனுக்கு ப்ரஸாதத்தைப்பண்ணின விஸ்மயநீயனான வனுடைய. விஸ்மயநீயத்வமாவது-முன்பு,கோபத்துக்கு விஷயமாக்கி முடிக்கத்தேடின வவன்றன்னையே ப்ரஸாதத்துக்கு விஷயமாக்கி ரக்ஷித்த ஆச்சர்யம். தோள்வலிவீரமே பாடிப்பற. இப்படியிருக்கிறவனுடைய, "பாம்பாலாப்புண்டு" என்கிறபடியே காளியன் தன்னுடலாலே நெருங்கச்சுற்றிக் கட்டினவிடத்திலும் அதிலீடுபடாதே உதறிப்பொகட்டு வாலைப்பிடித்துத்தூக்கி மேலேநின்றுடின தோள்வலியையும் வீரப்பாட்டையும் பாடிப்பற. தூமணியித்யாதி. காளியனுக்கு ப்ராணனைக்கொடுத்துத் தரத்தி யோட்டிவிட்டு, விஷஜலமான பொய்கையை அம்ருதஜலம்போலே குடிக்கலாம்படி கடாக்ஷித்து, பசுக்களும் இடையரும் முன்புபோலே தண்ணீர்குடிக்கும்படி கண்ணுதையாலே, பழிப்பற்ற நீலரத்நம்போலே திருமேனியின் அழகுவிளங்கும்படி நின்ற வனைப் பாடிப்பற. என்று ப்ரதிகோடியானவனைப்பார்த்து நியமிக்கிறாள். ... ஏ.

மூ.—தார்க்கிளந்தம்பிக் கரசீந்துதண்டக
நூற்றவள்சொற்கேள்ண்டு போகிநடுங்கிடைச்
சூர்ப்பணகாவைச் செவியொடுமூக்கவள்
ஆர்க்கவரிந்தானைப் பாடிப்பற வயோத்திக்கரசனைப்பாடிப்பற. ஆ.

(க) "தம்ப்ரபிந்நசிரோக்ரீவமாஸ்யேப்ய: ஸ்ருதசோணிதம்."

பதவுரை.

கார்க்கு-மாலே இட்டராஜ்யம்பண்ணுகைக்கு
இள— தகாத
தம்பிக்கு- தம்பியான ஸ்ரீபாதாழ்வானுக்கு
அரசு நல்கு— * அடிசூடுமரசைக்கொடுத்து
நின்றவள் சொல் } விசாரித்த கைகேயி
கொண்டு— } யின் சொற்படி
தண்டகம்— தண்டகாரண்யத்தைக்குறித்து
போகி— எழுந்தருளி
நடுங்கு— நலனாகின்ற
இடை— இடையையுடையளான
சூர்ப்பணகாவை— சூர்ப்பணகையை
செவியோடு மூக்கு— காதையும்மூக்கையும்
அவள் ஊர்க்க— அவள் கதறக்கதற
அரிந்தானை— † அறுத்தவனை
பாடிப்பற-;
அயோத்திக்கு— திருவயோத்தியைக்கு
அரசனை— ராஜாவானவனை
பாடிப்பற.

† அறுத்தது இளையபெருமாளா யிருக்க, பெருமாள் அறுத்ததாகச் சொன்னது *ராமதக்ஷிணபாஹுத்வ ப்ரயுக்தமான ஐக்யத்தைப்பற்றி.

வ்யா. எட்டாம்பாட்டு. தார்க்கிளந்தம்பிக்கரசீந்து. "அடியிலே சக்ரவர்த்தி அறுமதி உண்டாகையாலும், பெருமாள் உடன்பட்டுப் போகையாலும், நாடு அராஜகமாய்க் கிடக்கவொண்ணாது, நீமுடிசூட வேணும்" என்று வஸிஷ்டாதிகளும் ராஜலோகாதிகளும் அர்த்திக்கையாலும் அபிஷேகம் செய்யலாவதொரு புடையுண்டாயிருக்க, "மூத்தாரிருக்க இளையார்முடி சூடியறிவாரில்லை" என்கிற குலமர்யாதையை நினைத்து, "மாலேயிட்டு ராஜ்யம்பண்ணுகைக்கு நான் இளையவன், தமையனிருக்க எனக்கு முடிசூட ப்ராப்தியில்லை" என்று மறுத்துத் திருச்சித்ரகூடத்தளவும்வந்து "மீண்டெழுந்தருளவேணும்" என்று அர்த்தித்த தம்பியான ஸ்ரீபரதாழ்வானுக்கு அநுகுணமாக அடிசூடுமரசைக் கொடுத்து.

தண்டகநூற்றவள் சொல்கொண்டு போகி. "ராஜ்யத்தை விடுவித்து தண்டகாரண்யத்திலே போகவிடக் கடவோம்" என்று விசாரித்தவள் சொல்லைக் கைக்கொண்டுபோய். "கூற்றுத்தாய் சொல்லக் கொடியவனம்போன" என்றிறே கீழும் சொல்லிற்று. ஸ்ரீபரதாழ்வானேயே திருச்சித்ரகூடத்தளவும் சென்றவஸிஷ்டாதிகள் தொடக்கமானோர், மீளுகைக்குடலாகச் சொன்ன வார்த்தைகளும் கேளாமல், இவள்சொன்னவார்த்தையைத் திருவுள்ளத்திலே கொண்டிறே ஸ்ரீபரதாழ்வானுக்கு அரசிந்து அநந்தரம் தண்டகாரண்யத்திற வெழுந்தருளிற்று.

நடுங்கிடையித்யாதி. காமரூபிணியாகையாலே ஸ்வவேஷத்தை மறைத்து அத்யந்தாபிமதமானதொரு ஸ்த்ரீவேஷத்தைக்கொண்டு வருகையாலே, நடுங்கின இடையையுடையளான் சூர்ப்பண்கைனய். தன்னழகைக்காட்டி "என்னை விஷயீகரிக்கவேணும்" என்று வந்தவளவில், பிராட்டியைக்காட்டி "நமக்கு இவளொருஸ்த்ரீயுண்டு, அங்கேபோ" என்று இளையபெருமாளைக்காட்ட, அவ்வே சென்றவளவிலே, "நான் அவர்க்கு சேஷபூதனாயிருப்பானொருத்தன், இன்னம் அவர்தம்பக்கலிலேபோ" என்ன; இப்படி உபாலம்பிக்கையாலே அவள் அதிக்ருத்தையாய், பழைய வேஷத்தைக்கொண்டு, எடுத்துக்கொண்டு போகப் புக்கவளவிலே, செவியோடேகூட அவள்மூக்கையும், அவள் கதறக்கதற அறுத்தவனை.

(க) "ராமஸ்யதக்ஷிணோபாஹு:" என்கிறபடியே இளையபெருமாள் காணபூதராகையாலே அறுத்ததில் கர்த்தர்த்வம் பெருமாளதாகச் சொல்லுகிறது. பாடிப்பற. அயோத்தியிற்பாதி. ஸ்ரீபரதாழ்வான் முடிசூடாமையாலும், திருவடிநிலை கொடுத்துப் போருகையாலும், திருவ யோத்யைக்குத்தானே ராஜாவானவனைப் பாடிப்பற வென்னுமத்தை அவனே நியமிக்கிறாள்.

மூ.—மாயச்சகட முதைத்து மருதிறுத்
தாயர்களோடுபோ யாநிரைகாத்தணி
வேயின்குழலூதி வித்தகனுய்நின்ற
ஆயர்களேற்றினைப்பாடிப்பற வாநிரைமேய்த்தானைப்பாடிப்பற. கூ.

315

பதவுரை.

மாயம்— வஞ்சனத்தையுடைய்
சகடம்— சகடாஸுரனை
உதைத்து— கட்டுக்குலையும்படி திருவடி களாலுதைத்தும்
மருது— யமளார்ஜுநங்களை
இறுத்து— முறித்தும்
ஆயர்களோடு— இடையர்களோடு
போய்— காடேறப்போய்
ஆ நிரை— பசுக்களின் திரளை
காத்து— ரக்ஷித்தும்
அணி— அழகிய
வேயின் குழல்— வேய்ங்குழலை
ஊதி— ஊதி
வித்தகனுய் நின்ற— விஸ்மயநீயனுய் நின்ற
ஆயர்கள் ஏற்றினை— இடையர்க்குத் தலை வனுனவனை
பாடிப்பற—;
ஆநிரை மேய்த்தானைப் பாடிப்பற—.

வ்யா. ஒன்பதாம்பாட்டு. மாயச்சகடமுதைத்து. "கள்ளச்சகடம் கலக்கழியக்காலோச்சி" என்கிறபடியே காவலாகவைத்தவண்டிலே அஸுரர்கள் ஆவேசித்து நலியவருகையாலே பாதகம் என்று தோற்றுதபடி க்ருத்ரிமமான சகடத்தை, ஸ்தந்யார்த்தியாய் நிமிர்த்த திருவடிகளாலே யுதைத்து. அன்றிக்கே, சகடமானது ‡ உருமாயும்படி உதைத்து என்னவுமாம். மருதிறுத்து. தாயார்கட்டிவைத்த உரலையுமிழுத்துக்கொண்டு தவழ்ந்துபோகாநிற்க, நலிவதாக வழியிலேநின்ற இரட்டை மருதுகளின்நடுவே நுழைந்து அப்புறத்தேபோய், உரல் தடைபடுகையாலே அத்தைவலித்துக்கொண்டு அம்மருதுகள் இரண்டருகும் சாய்ந்து விழும்படி முறித்து. ஆயர்களோடுபோய் ஆநிரைகாத்து. பசுமேய்க்கப்போகிற இடையரோடே அவர்களில் ப்ரதாநனுய்க்கொண்டுபோய், புல்லும் தண்ணீருமுள்ளவிடம் பார்த்து வயிறுநிறைய மேய்க்கையாலே பசுநிரையை ரக்ஷித்து. அணிவேயின்குழலூதி விஸ்மயநீயனுய் நின்ற. காட்டிற் பசுக்களைப்போலே கேவலம் புல்லும் தண்ணீரும் தாரகமாக வளருமவையன்றிக்கே, குழலோசையே தாரகமாக வளரும்வையாகையாலே, அவற்றை மேய்க்கைக்கும் நிதறிப்போகாமல் குவிக்கைக்கும் மீட்கைக்குமாக, அழகிய வேய்ங்குழலூதி, தன்னுடைய ஸாமர்த்யம் தோற்றநின்ற. ஆயர்களேற்றினை. கோபர்க்குத்தலைவனுன செருக்கையுடையவனை. பாடிப்பற. ஆநிரைமேய்த்தானை. "நிவத்திலும் பசுநிரைமேய்ப்புவத்தில்" என்கிறபடியே- பாமபதத்திலிருப்பிலுங்காட்டில் உகந்து பசுநிரைமேய்த்தவனை. பாடிப்பற. என்று எதிரியைப்பார்த்துச் சொல்லுகிறாள். ... ... கூ.

(க) "ராமஸ்யதக்ஷிணோபாஹு:." ‡ இவ்வர்த்தம் சொல்லும்போது "மாய" என்று வினையெச்சமாக்குக.

மூ.—காரார்கடலை யடைத்திட் டிலங்கைபுக்
கோராதான்பொன்முடி யொன்பதோடொன்றையும்
நேராவவன்றம்பிக்கே நீளரசீந்த
ஆராவமுதனைப்பாடிப்பற வையோத்தியர்வேந்தனைப்பாடிப்பற. ய.

316

பதவுரை.

கார் ஆர்- ஆழத்தின் மிகுதியாலே கருமை மிக்கிருந்துள்ள
கடலை— கடலை
அடைத்திட்டு- மலைகளைக் கொண்டடைத்து
இலங்கை புக்கு— லங்கையில் புகுந்து
ஓராதான்- பெருமாள் வீரப்பாட்டை மதியாத ராவணனுடைய
பொன்முடி ஒன்ப } கிரீடம்தரித்த அழகிய
தோடு ஒன்றையும் } பத்துத்தலைகளையும்
நேரா— அறுத்துப் பொகட்டு
அவன் தம்பிக்கே— அவன தம்பியான விபீஷணனுக்கே
நீள்— நெடுங்காலம் நடக்கும்படி
அரசு— ஆதிராஜ்யத்தை
ஈந்த— கொடுத்தவனுய்
ஆரா— எவ்வளவுகாலம் புஜித்தாலும் த்ருப்திபிறவாத
அமுதனை— அம்ருதம் போல் போக்யனவனை
பாடிப்பற—;
அயோத்தியர்- அயோத்தியிலுள்ளார்க்கு
வேந்தனை— ராஜாவானவனை
பாடிப்பற—

வ்யா. பத்தாம்பாட்டு. காரார்கடலையடைத்திட்டு. ஆழத்தின்மிகுதியாலே கருணமிக்கிருந்துள்ள கடலை, அகடிதகடநாஸாமர்த்யம் தோற்றும்படி, நீரைக்கண்டவாறே ஆழக்கடவமலைகளையிட்டுக் குரங்குகளைக்கொண்டடைத்து, இலங்கைபுக்கு. (க) "ஸ்ரீராவண வாலீகாழி" என்கிறபடியே மண்பாடுதானே ஒருவர்க்கும் ப்ரவேசிக்கவரிதாய், அதுக்கு மேலே உள்ளுநின்று நோக்குகிறவனுடைய பலத்தையுமுடைத்தாகையாலே துஷ்ப்ராபமாயிருக்கிற லங்கையிலே, எழுபதுவெள்ளம் வாநரஸேனையையும்கொண்டு சென்றுபுக்கு ஓராதான்பொன்முடி யொன்பதோடொன்றையும் நேரா. இந்த அநிமாதுஷ்சேஷ்டிதங்களைக்கண்டு வைத்தும் இவற்றில் ஒன்றையும் நிரூபியாதே, தன்னுடைய வாபலபுஜபலங்களைப் பெருக்க நினைத்து, "தான்போலுமென்றெழுந்தான் தரணியாளன்" என்கிறபடியே - சக்ரவர்த்திதிருமகன் என்னும் வீரப்பாட்டையறியாமல் ஆபாஸனைநினைத்து, தான் வெல்லுவானுக்கிருந்த ராவணனுடைய அபிஷேகயுக்தமான அழகையுடைய தலைகளை, திருச்சரங்களாலே, முன்பு, ஒவ்வொருதலையாக அறுத்தாற்போலன்றிக்கே, "காலமிதுவென்றயன்வாளியினல்கதிர் நீண்முடிபத்துமறுத்தமரும்" என்கிறபடியே— "இன்று இவனேமுடிக்கைக்குக்காலம்" என்று, ப்ரஹ்மாஸ்த்ரரூபமான சரத்தாலே, பத்தும் சேர ஒருகாலேவிழும்படி அறுத்துப் பொகட்டு.

அவன்றம்பிக்கே நீளரசீந்த. (உ) "ஸ்ரீராவணஸ்யாஹம்" என்கிறபடியே ஸ்வநிகர்ஷத்துக்குடலாக, "ராவணன்பின்பிறந்தவன்" என்று சொல்லிக்கொண்டுவந்து திருவடிகளைச்சேர்ந்த ஸ்ரீவிபீஷணழ்வானுக்கே, "*என்னிலங்குராமத்தளவுமாக" என்று

(அ) "லங்காம்ராவணபாலிதாம்." (உ) "அநுஜோராவணஸ்யாஹம்."

நீர்க்கோலம் நடக்குட்படி, லங்கைக்கு அரசாகிற ஐச்வர்யத்தைக்கொடுத்த. ஆராவமுதனை. இந்தக்குணத்தாலே ஒருகாலும் த்ருப்திபிறவாமல் மேன்மேலென தர்ஷ்ணையைவிளைக்கும் சுபர்தம்போலே, அநுபவிப்பார்க்கு நிரதிசயபோக்யனானவனைப் பாடிப்பற. அயோத்தியர் வேந்தனை. ராவணவதாநந்தரம் மீண்டு எழுந்தருளி; திருவபிஷேகம்பண்ணியிருந்து ஆளுகையாலே, திருவயோத்தையிலுள்ளார்க்கு ராஜாவானவனை. பாடிப்பற. என்று ப்ரதிகோடியானவஸ்து நிரூபிக்கிறது. ... ... ங.

அ. நிகமத்தில், இத்திருமொழிகற்றார்க்கு பலம்சொல்லித் தலைக்கட்டுகிறார்.

மூ.—நந்தன்மதலையைக் காகுத்தனைநவின்
றுந்திடறந்த வொளியிழையார்கள்சொல்
3.7 செந்தமிழ்த் தென்புதுவை விட்டுசித்தன்சொல்
ஐந்தினைடைந்தும் வல்லார்க் கல்லலில்லையே. கக.

பதவுரை.

நந்தன் மதலையை— நந்தகோபன் குமரனான கண்ணனையும்
காகுத்தனை— ககுத்ஸ்த சக்ரவர்த்தியின் வம்சஸ்தனான சக்ரவர்த்தி திருமகனையும்
நவின்று— ஒருவர்க்கொருவர் எதிரியாய்க் கொண்டு சொல்லி
உந்தி பறந்த — ‡ உந்திபறக்கையாகிற லீலாரஸம் கொண்டாடின
ஒளி— அழகிய [களுடைய
இழையார்கள்— ஆபரணமணிந்த பெண்
சொல்— சொல்லை
செம்— செவ்வையையுடைய
தமிழ்— தமிழ் பாஷையாலே
தென்— அழகிய [ஹரான
புதுவை— ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு நிர்வா
விட்டுசித்தன்— பெரியாழ்வார்
சொல்— அருளிச்செய்த
ஐந்தினோடு ஐந்தும்— க்ருஷ்ணவதார விஷயமான ஐந்தும், ராமாவதார விஷயமான ஐந்துமான இப்பத்தை
வல்லார்க்கு— ஓதவல்லவர்களுக்கு
அல்லல் இல்லை — யாதொரு துன்பமும் இல்லை.

‡ “உந்தி- மகளிர் விளையாட்டினென்று” என்று தமிழர்.

வ்யா. நந்தன்மதலையைக் காகுத்தனை நவின்று. ஸ்ரீநந்தகோபர் திருமகனையும், ககுத்ஸ்தகுலோத்பவனான சக்ரவர்த்தி திருமகனையும், ஒருவர்க்கொருவர் எதிரியாய்க்கொண்டு சொல்லி. உந்திபறந்த ஒளியிழையார்கள்சொல். உந்திபறக்கையாகிற லீலாரஸம் கொண்டாடின அழகிய ஆபரணலங்க்ருதைகளான பெண்களுடைய சொல்லை. செந்தமிழ்த்தென்புதுவை விட்டுசித்தன்சொல். ஔர்ஜவரூபமான த்ராவிடபாஷையாலே, அழகிய ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு நிர்வாஹகரான பெரியாழ்வாரருளிச்செய்த. ஐந்தினோடைந்தும்வல்லார்க்கு. க்ருஷ்ணவதாரவிஷயமானவைந்தும், ராமாவதாரவிஷயமான வைந்துமான இப்பத்தையும் ஸாபிப்ராயமாக வல்லவர்க்கு. அல்லலில்லையே. ஸாம்ஸாரிகதுஃகமொன்றுமில்லை. ... ... கக

பெரியஜீயர் திருவடிகளே சரணம்.

அடிவரவு.—என்னுதன் என்வில் உருப்பிணி மாற்றுப்
பஞ்சவர் முடி காளியன் தார் மாயக் காரார் நந்தன் நெஞ்சே.

ஆ - திருமொழி, உஅ - க்கு, பாட்டு - கூ0று.

மூன்றும்பத்து -பத்தாந்திருமொழி - நெறிந்த கருங்குழல், ப்ரவேசம்.

அ. இழிற்றிருமொழியிலே ராமாவதாரகுண சேஷ்டிதங்களை அநுபவித்தவிவர், (க) " ராகவஸ்வஹமஸ்மீதா " என்கிறபடியே அவ்வவதாராநுகுணமாக ஒக்கவந்தவதரித்த பிரட்டி, தன்னுடைய புருஷகாரத்வோபயோகியான க்ஷாபாரதந்த்ர்யா நர்யார்ஹத்வங்களை சேதநரெல்லாருமறிந்து விச்வஸித்துத் தன்னைப்பற்றுகைக்குடலாக, " நம்முடைய அநுஷ்டாநத்தாலே வெளியிடக்கடவோம் " என்று திருவுள்ளம்பற்றி; அதில் ப்ரதமத்திலே தன்னுடைய க்ஷமையை வெளியிடுகைக்காக, " தண்டகாரண்யத்திலே எழுந்தருளியிருக்கச்செய்தே ராவணன்பிரித்தான் " என்றொரு வ்யாஜத்தாலே லங்கையிலே யெழுந்தருள, (உ) " ஸகிருதேவ ப்ரபந்நாய " என்கிற அவதாரத்தின் மேய்ப்பாட்டாலே பெருமாள் இவள்போன விடமறியாமல், திருத்தம்பியாரும் தாமுமாய்க்கொண்டு தேடித்திரியா நிற்கச்செய்தே, பம்பாதீரத்திலே எழுந்தருளின வளவிலே, மஹாராஜருடைய நியோகத்தாலே ஸ்வவேஷத்தைமறைத்து பரிவ்ராஜகவேஷ பரிக்ரஹம் பண்ணிவந்து முகங்காட்டின திருவடியோடே முந்துற உறவுசெய்து, பின்பு அவர்கொடுபோய்ச் சேர்க்க, ராஜ்ய தாங்களையிழந்து சுரமடைந்து கிடக்கிற மஹாராஜரைக்கண்டு, அவரோடே ஸக்யம் பண்ணி, அநந்தரம் அவர்க்கு விரோதியான வாலியை நிரஸித்து, அவரை ராஜ்ய தாரங்களோடே சேர்த்து வாநராதிபதியாக்கி கிஷ்கிந்தையேறப் போகவிட்டு, திருத்தம்பியாரும் தாமுமாகப் பெருமாள் வர்ஷாகால மித்தனையும் மால்யவானிலே யெழுந்தருளியிருக்க, படைவீட்டிலே போனவிவர், பெருமாள் செய்த உபகாரத்தையும் அவருடைய தனிமையையும் மறந்து, விஷயப்ரவணராய் தாமேபோக ஸக்தராயிருந்துவிட, வர்ஷாகாலத்துக்குப் பின்பு, அவர் வரக்காணுமையாலே (ங) " கபிவ்ருஷ்ணுஸ்ரீர்வ் தஷ்டாஞ்ஜநகாந்திஜ் ஜோ வேஷ்டாகாமீ கீதஸ்ய ஸ்ரோதாரோஹவாரோ " என்கிறபடியே கனக்க க்லேசித்தருளி இளையபெருமாளைப் பார்த்து, " நீர்போய் வெதுப்பியாகிலும் மஹாராஜரை யழைத்துக் கொண்டுவாரும் " என்றுவிட, அவர் கிஷ்கிந்தாத்வாரத்திலே பெழுந்தருளி ஜ்யாகோஷத்தைப்பண்ண, அத்தைக்கேட்டு மஹாராஜர் நடுங்கி, கழுத்தில் மாலையையும் அறுத்துப் பொகட்டு, காமேபயமாதச்சில வ்யாபாரங்களைப்பண்ணி, அருகேநின்ற திருவடியைப்பார்த்து, " இவ்வளவில் நமக்குச் செய்ய வடுப்பதென் ? " என்ன, (ச) " கூ தஸ்வாயஸ்ஸ்வர்கஸ்ய ஹந்தாரம் ! ஸஹாயாணாஞ்ச விஸ்வாஸ்யஸ்ஸ்யாத் " என்று அபராதகாலத்திலே அநுதாபம்பிறந்து மீண்டோம்போய், எளியன சில செய்கிறோமல்லோம். தீக்கழிய அபராதம் பண்ணினபின்பு இனி ஓரஞ்சலிசேராமல் போகாது என்ன; அவ்வளவிலும் தாம் முந்துறப் புறப்பட்/ பயப்பட்டு, " இளையபெருமாள் திருவுள்ளத்தில் சிவிட்டகதாரையைவிட்டு ஆற்றவேணும் " என்று தாரையைப் புறப்பட்விட, அவள் (ஞ) " ஸர்வ்வ மஜீ " இத்யாதிப்படியே இளையபெருமாள் ஸந்நிதியிலேவந்து, இளையபெருமாள் திருவுள்ளத்தில் சிவிட்டு ஆறுமபடி வார்த்தைகள் விண்ணப்பஞ் செய்தபின்பு, மஹாராஜர்

(க) " ராகவத்வேபவத்ஸீதா. " (உ) " ஆதமோநம்மா நுஷம்மமந்யே. "

(ங) " காமவ்ருத்தஞ்ச ஸுக்ரீவம் நஷ்டாஞ்ச ஜநகாத்மஜாம் - புத்வாகாலமதீதஞ்ச மூமோஹபரமாதுர: " (ச) " க்ருதாபராதஸ்ய ஹிதேநாஸ்யதபச்யாம்யஹமீக்ஷமம் । அந்தரே ஞ்ஜலிம்பத்வா லக்ஷ்மணஸ்யப்ரஸாதநாத் " ¶ தாரை—வாலியையும், ஸுக்ரீவபத்நியான தாரையும். (ஞ) " ஸாப்ஸ்கலந்தி. "

மூன்றும்பத்து -பத்தாந்திருமொழி - நெறிந்த கருங்குழல், ப்ரவேசம்.

அ. இழிற்றிருமொழியிலே ராமாவதாரகுண சேஷ்டிதங்களை அநுபவித்தவிவர், (க) " ராகவஸ்வஹமஸ்மீதா " என்கிறபடியே அவ்வவதாராநுகுணமாக ஒக்கவந்தவதரித்த பிரட்டி, தன்னுடைய புருஷகாரத்வோபயோகியான க்ஷாபாரதந்த்ர்யா நர்யார்ஹத்வங்களை சேதநரெல்லாருமறிந்து விச்வஸித்துத் தன்னைப்பற்றுகைக்குடலாக, " நம்முடைய அநுஷ்டாநத்தாலே வெளியிடக்கடவோம் " என்று திருவுள்ளம்பற்றி; அதில் ப்ரதமத்திலே தன்னுடைய க்ஷமையை வெளியிடுகைக்காக, " தண்டகாரண்யத்திலே எழுந்தருளியிருக்கச்செய்தே ராவணன்பிரித்தான் " என்றொரு வ்யாஜத்தாலே லங்கையிலே யெழுந்தருள, (உ) " ஸகிருதேவ ப்ரபந்நாய " என்கிற அவதாரத்தின் மேய்ப்பாட்டாலே பெருமாள் இவள்போன விடமறியாமல், திருத்தம்பியாரும் தாமுமாய்க்கொண்டு தேடித்திரியா நிற்கச்செய்தே, பம்பாதீரத்திலே எழுந்தருளின வளவிலே, மஹாராஜருடைய நியோகத்தாலே ஸ்வவேஷத்தைமறைத்து பரிவ்ராஜகவேஷ பரிக்ரஹம் பண்ணிவந்து முகங்காட்டின திருவடியோடே முந்துற உறவுசெய்து, பின்பு அவர்கொடுபோய்ச் சேர்க்க, ராஜ்ய தாங்களையிழந்து சுரமடைந்து கிடக்கிற மஹாராஜரைக்கண்டு, அவரோடே ஸக்யம் பண்ணி, அநந்தரம் அவர்க்கு விரோதியான வாலியை நிரஸித்து, அவரை ராஜ்ய தாரங்களோடே சேர்த்து வாநராதிபதியாக்கி கிஷ்கிந்தையேறப் போகவிட்டு, திருத்தம்பியாரும் தாமுமாகப் பெருமாள் வர்ஷாகால மித்தனையும் மால்யவானிலே யெழுந்தருளியிருக்க, படைவீட்டிலே போனவிவர், பெருமாள் செய்த உபகாரத்தையும் அவருடைய தனிமையையும் மறந்து, விஷயப்ரவணராய் தாமேபோக ஸக்தராயிருந்துவிட, வர்ஷாகாலத்துக்குப் பின்பு, அவர் வரக்காணுமையாலே (ங) " கபிவ்ருஷ்ணுஸ்ரீர்வ் தஷ்டாஞ்ஜநகாந்திஜ் ஜோ வேஷ்டாகாமீ கீதஸ்ய ஸ்ரோதாரோஹவாரோ " என்கிறபடியே கனக்க க்லேசித்தருளி இளையபெருமாளைப் பார்த்து, " நீர்போய் வெதுப்பியாகிலும் மஹாராஜரை யழைத்துக் கொண்டுவாரும் " என்றுவிட, அவர் கிஷ்கிந்தாத்வாரத்திலே பெழுந்தருளி ஜ்யாகோஷத்தைப்பண்ண, அத்தைக்கேட்டு மஹாராஜர் நடுங்கி, கழுத்தில் மாலையையும் அறுத்துப் பொகட்டு, காமேபயமாதச்சில வ்யாபாரங்களைப்பண்ணி, அருகேநின்ற திருவடியைப்பார்த்து, " இவ்வளவில் நமக்குச் செய்ய வடுப்பதென் ? " என்ன, (ச) " கூ தஸ்வாயஸ்ஸ்வர்கஸ்ய ஹந்தாரம் ! ஸஹாயாணாஞ்ச விஸ்வாஸ்யஸ்ஸ்யாத் " என்று அபராதகாலத்திலே அநுதாபம்பிறந்து மீண்டோம்போய், எளியன சில செய்கிறோமல்லோம். தீக்கழிய அபராதம் பண்ணினபின்பு இனி ஓரஞ்சலிசேராமல் போகாது என்ன; அவ்வளவிலும் தாம் முந்துறப் புறப்பட்/ பயப்பட்டு, " இளையபெருமாள் திருவுள்ளத்தில் சிவிட்டகதாரையைவிட்டு ஆற்றவேணும் " என்று தாரையைப் புறப்பட்விட, அவள் (ஞ) " ஸர்வ்வ மஜீ " இத்யாதிப்படியே இளையபெருமாள் ஸந்நிதியிலேவந்து, இளையபெருமாள் திருவுள்ளத்தில் சிவிட்டு ஆறுமபடி வார்த்தைகள் விண்ணப்பஞ் செய்தபின்பு, மஹாராஜர்

(க) " ராகவத்வேபவத்ஸீதா. " (உ) " ஆதமோநம்மா நுஷம்மமந்யே. "

(ங) " காமவ்ருத்தஞ்ச ஸுக்ரீவம் நஷ்டாஞ்ச ஜநகாத்மஜாம் - புத்வாகாலமதீதஞ்ச மூமோஹபரமாதுர: " (ச) " க்ருதாபராதஸ்ய ஹிதேநாஸ்யதபச்யாம்யஹமீக்ஷமம் । அந்தரே ஞ்ஜலிம்பத்வா லக்ஷ்மணஸ்யப்ரஸாதநாத் " ¶ தாரை—வாலியையும், ஸுக்ரீவபத்நியான தாரையும். (ஞ) " ஸாப்ஸ்கலந்தி. "

தோன்றும் புறப்பட்டுவந்து இராமபிரானைப் பார்த்தைகொண்டு, அவர்தம்மையே முன்னிட்டுக்கொண்டு பெருமானே ஸேவித்தவநந்தரம் தம்முடைய ஸர்வபரிதாத்தையும் நிவேதித்து, (க) "யாம்கபீநாம்ஸஹஸ்ராணி ஸுபஹூந்யயுதானிச । நிஷூஸர்வாஸுமார்கேஷு" என்கிறபடியே திக்குக்கள்தோறும் நிரள்நிரளாகப் பிராட்டியைத் தேடிப்போகவிடுகிறவளவிலே, தக்ஷிணதிக்கில்போகிற முதலிகளுக்கெல்லாம் ப்ரதாநராகப் போருகிற அங்கதப் பெருமாள், ஜாம்பவான், மஹாராஜர், திருவடி, இவர்களில் கைத்தலைக்கொண்டு, "திருவடி கையிலொழிய இக்காரியமறுது" என்று திருவுள்ளம்பற்றி, பிராட்டியைக்கண்டால்விச் வாஸஜநகமாக விண்ணப்பஞ் செய்யத்தக்க அடையாளங்களோடு மருளிச்செய்து திருவாழி மோதிரத்தையும் கொடுத்துவிட, எல்லாரும் கூடப்போய், தக்ஷிணதிக்கில் ஓரிடத்திலும் காணுமல்க்லேசப்பட்டு, அநசநத்திலே தேகஸ்திதராய் முடிய நிற்கிறவளவிலே, ஸம்பாதி வார்த்தையாலே "ராவணனிருப்பு ஸமுத்ரத்துக்குள்ளே லங்கையென்பதொரு படைவீடு" என்றுகேட்டு எல்லாரும் ப்ரீதராய், இக்கரையிலேயிருந்து திருவடியைப் போகவிட, அவரும்ஸமுத்ரதர்ணம்பண்ணி அக்கரையேறி *ப்ரஷ்டதம்சதமாத்ரமாக வடிவைச்சுருக்கிக்கொண்டு ராத்ரியிலே ராவணாந்தஃபுரபர்யந்தமாக ஸர்வப்ரதேசத்திலும் பிராட்டியைத்தேடிக் காணுமையாலே க்லேசப்பட்டுக்கொண்டு இராநிற்கச்செய்தே, அசோகவநிகாப்ரதேசத்திலே சில ஸ்த்ரீயக்கத்தைக்கண்டு அங்கேசென்று, (உ)" ஸ்ரீயஸுநம்வஸ்ஸ்ரீம வஸ்ஸ்ரீம ராகவஸ்ய மஹிஷி ! ஸுமத்ரை நஸ்ரீம்ஹி நாம ஸுமத்ரைராவ்ய தாஸ்ரிவ" என்கிறபடியே விகர்தவேஷைகளான எழுநூறுராக்ஷஸிகள் நடுவே மலங்கமலங்கவிழித்துக்கொண்டு நோவுபட்டிருக்கிற விவேகக்கண்டு, அநேகவேஷதுக்களாலே "இவளேபிராட்டி" என்று அறுதியிட்டு, "இனி இங்குத்தை வ்ருத்தாந்தமறியவேணும்" என்று ஸூக்ஷ்மரூபேண சிம்சுபாவ்ருக்ஷத்துக்குள்ளே மறைந்திருக்க, அவ்வளவிலே, ராவணன் காமமோஹிதனுய்வந்து பிராட்டிஸந்நிதியிலே சிலவற்றை ஜல்பிக்க, அவள் இவனை முகம்பாராமலிருந்து நிக்கரித்து வார்த்தை சொல்லிவிடுகையாலே மீண்டுபோகிறவன் ராக்ஷஸிகளைப்பார்த்து, "இவள் பயப்பட்டு நம் வசமாம்படி க்ரூரமாகநலியுங்கோள்" என்று சொல்லிப்போகையாலே, அவர்கள் "இதுக்கு முன்பு ஒருகாலமும் இப்படிநலிந்திலர்கள்" என்னும்படி தர்ஜநபர்த்ஸநாதிகளைப் பண்ணி நலிய, "இனி நமக்கு இருந்து ஜீவிக்கப்போகாது, முடிந்தவிடுமித்தனை." என்று வ்யவஸிதையாய், அந்தராக்ஷஸிகள் நித்ராபரவசைகளான வளவிலே, அங்குநின்றும்போந்து (ங) வேண்யுத்க்ரதநோத்யுக்தையாய் வ்ருக்ஷத்தின் கொம்பைப்பிடித்துக்கொண்டு நிற்கிறவளவிலே, "இனிநாம் பார்த்திருக்கவொண்ணாது, இவ்வளவிலே யிவளை நாம்நோக்கலேணும்" என்று, (ச)'ஏவமம்பஹ்வியாஜிஹாஜிஹயிகூரிஹாகவிம்: ஸம்ஸ்ரவேசிஸம்ராக்ஷம் மெயிஹ்யாவ்யாஜஹாரஹ" என்கிறபடியே - செவிப்பட்டபோதே ரஸிக்கும்படி ராமகுணசேஷ்டிதவிஷயமான வாக்யங்களைச்சொல்ல, "இத்தனைகாலமும் இல்லாததொன்று இப்போது உண்டாகைக்கடியென்?" என்றுசொல்லவந்தவழியே சிம்சுபாவ்ருக்ஷத்தை யெங்கு மொக்கப்பார்த்து அதின்மேலேயிருக்கிற வாநரரூபியான விவேகக்கண்டு, "இதுவேதோ" என்று ஏங்கி மோஹித்து விழுந்து, நெடும்போதோடே உணர்த்தி யுண்டாய், பின்னையும்

(க) "யாம்கபீநாம்ஸஹஸ்ராணி ஸுபஹூந்யயுதானிச- நிஷூஸர்வாஸுமார்கேஷு." (உ) "ப்ரியஞ்ஜநம்வஸ்யந்தீம பச்யந்தீம்ராக்ஷஸீகணம் - ஸ்வகர்மணோநமோஸ்துஸீதாம்ச்வகர்மணாவர்தாமிவ." (ங) வேண்யுத்யோதநோத்யுக்தாம். (ச) "ஏவம்ப்ரகாரம்விதாஞ்சிந்தாஞ்சிந்தயித்வாமஹாகபி:- ஸம்ச்ரவேமதுரம் வாக்யம் வைதேஹ்யா வ்யாஜஹாரஹ."

இதே தோன்றுகிறது. (க) "கிருஷ்ணாவதாரத்திலே" இப்படியே விசாரிக்கிற வளவிலே, இவள்முன்னே வந்து கையும் அஞ்சலியுமாய் நின்று அநுவர்த்தன பூர்வகமாகச் சில்வார்த்தைகளைச் சொல்ல, அவள்பிதையாய், இவளே "ராவணன்" என்று அதிகல்பனை பண்ணி, "இப்படி நலியலாகாதுகாண்" என்று வைகல்யமாகப் பலவார்த்தைகளையும் சொல்ல, இவளுடைய அதிசங்கையைத் தீர்க்கைக்காக, பெருமாளருளிச் செய்துவிட்ட அடையாளங்களெல்லாம் ஸுஸ்பஷ்டமாக இவள் திருவுள்ளத்திலே படும்படி விண்ணப்பம் செய்து, தான் ராமதூதன் என்னுமிடத்தை யறிவித்து, பின்பு, திருவாழிமோதிரத்தையும் கொடுத்து அவள் திருவுள்ளத்தை மிகவும் உகப்பித்த பிரகாரத்தை யநுஸந்தித்து, அதில் தமக்குண்டான ஆதராதிசயத்தாலே அவன் அப்போது விண்ணப்பஞ்செய்த அடையாளங்களையும் திருவாழிமோதிரம் கொடுத்தபடியையும், அநுசந்தித்து அவள் ப்ரீதியான படியையுமெல்லாம் அடைவே பேசி யநுபவிக்கிறார்- இத்திருமொழியில். ... ... *

மூ.—நெறிக்குழல் குமன்மடவாய் நின்னடியேன் விண்ணப்பம்
செறிந்தமணி முடிச்சனகன் சிலையிறுத்தானினைக் கொணர்ந்த
3\|8 துறிந்தசுக்ரீவனுக்கட்ட வருந்தவத்தோ னிடைவிலங்கச்
செறிந்தசிலைகோடு தவத்தைச் சிதைத்ததுமோ ரடையாளம். க.

பதவுரை.

நெறிந்த— நெறித்ததாய்
கரு— கறுத்திரா நின்றுள்ள
குழல்— கூந்தலை யுடையளாய்
மடவாய்— மடப்பத்தை யுடையளான பிராட்டியே!
நின்— தேவரீருக்கு
அடியேன்— தாஸனான என்னுடைய
விண்ணப்பம்— விஜ்ஞாபநமாவது;—
செறிந்த— நெருங்கின
மணி— நவரத்நங்களழுத்திச் சமைத்த
முடி— கிரீடத்தை தரித்த
சனகன்— ஜநகராஜரானவர்
சிலை— கன்யாசுல்கமாகவைத்த தநுஸ்ஸை
இறுத்து— முறித்து
நின்னை— தேவரீரை [நின்னை]
கொணர்ந்தது— பரிணயம் செய்துகொண்டு போன சேதியை
அறிந்து— அறிந்து
அரசு— இருபத்தொரு தலைமுறை துஷ்ட ராஜாக்களாகிற
கவி கட்ட— கவியைப் பிடுங்கினவனும்
அரு— ஒருவர்க்கும் செய்யவொண்ணாத
தவத்தோன்— தபஸ்ஸையுடையனான பராசுராமனென்பவன்
இடை— நடுவழியிலே
விலங்க— தகைய [குத்தகுந்த
செறிந்த— அவன் கர்வபங்கம் செய்தற்
சிலை கொடு— வில்லைக் கொண்டு
தவத்தை— அவன் தபஸ்ஸை
சிதைத்ததும்— அறுத்ததும்
ஓர் அடையாளம்— (அடியேன் பெருமாளுடைய அடியாரென்று தேவரீர் அறிதற்கு) ஓரடையாளம்.

வ்யா. முதற்பாட்டு. நெறிந்தகருங்குழல்மடவாய். நெறித்தகருங்குழலையும் மடப்பத்தையு முடையவளே. கோசலையிராயிராதே, சுருண்டு கடையளவும் செல்ல

(க) "கிருஷ்ணாவதாரத்திலே" என்பது ஸ்ரீ ஸித்தமோஹநாயம்.

இருண்டிருண்கையிறே குழலுக்கு ஏற்றம். இதுதான் பூர்வத்திற் படியையிட்டுச் சொல்லுகிறபடி: (க) "நீலகாபபாவேண்யா ஜகந்மதனயகயா" இவ நம்மசிஷ்டபரை யா" என்னும்படியிறே இப்போது பிடக்கிறது. நாகரான பெருமாளோடேகூடிச் செல்லவேதாற்றச் செருக்கியிருக்கப்பாத்தையாயிருக்க, அவரைப்பிரிந்து, க்லேசத்தாலே தலண்டு ஓடுங்கியிருக்கிற படியைப்பற்ற "மடலாய்" என்கிறான். அதவா, மடப்பமாவது - பற்றித்தர விடாமையாய், இங்கேயிருக்கச் செய்தேயும் (உ) "ஸ்வயமேவாபஹ்ருத்ய" என்கிறபடியே பெருமாளையே நினைத்துக்கொண்டு மற்றொன்றறியாமை யிருக்கிறபடியைச் சொல்லுகிறதுகவுமாம். நின்னடியேன் விண்ணப்பம். (ரு) "யாசேஹம் கோஸலேந்த்ரம்" என்று - பெருமாளுக்கு அடியனானபோதே இவளுக்கு மடியனாகையாலே, உனக்கடியனான வென்னுடைய விண்ணப்பமென்கிறான். இத்தால் - உனக்கு அடியனான நான் விண்ணப்பஞ்செய்கிற வார்த்தையைக்கேட்டருள வேணுமென்கை.

செறிந்தமணி முடிச்சனகன் சிலையிறுத்து. நெருங்கின சத்ருங்களோடேகூடின அபிஷேகத்தையுடைய ஜ்யேஷ்டன், தேவரீருக்கு சுல்கமாகவிட்ட வில்லை முறித்து. "இந்த வில்லை வளைத்தார்க்கு இவளைக்கொடுக்கக்கடவோம்" என்று வீர்யசுல்கமாக அவன் கல்பித்துவைத்த வில்லிதேயது. அப்படியிருக்கிறவில்லை வளைக்கத்தானும் லோகத்தில் ஆளின்றிக்கேயிருக்க, திருக்கையில் பலத்துக்கு இலக்குப்போராமையாலே அத்தைமுறித்து. நினைக்கொணர்ந்ததறிந்து. இத்தவீரப்பாட்டைக்கண்டு, (ச) "உயம்ஹி சாபே லகோ யமயத்ருஸீ தவ: ஸ்ரீஷ்டவாம்ஸ்ச ராமேண ஸாம்ஹ்ருஷ்டரூபேண வாணிம்ஹ! ஸ்ரீஷ்டவாம்ஸ்ச" என்கிறபடியே- "இவளைக் கைக்கொண்டருளவேணும்" என்றுஸமர்ப்பிக்க, தேவரீரை பாணிக்ரஹணம்பண்ணிக்கொண்டு போந்தசேதியை யறிந்து. அரசுகளைக்கட்ட அருந்தவத்தோனிடைவிலங்க. இருபத்தொருபடிகால் துஷ்டக்ஷத்ரியரான ராஜாக்களாகிற களையை நிரஸித்தவனுய், ஒருயாகஸ்செய்யவொண்ணாத தபஸ்ஸையுடையனுயிருந்துள்ள பரசுராமன, திருவயோத்தியைக்கு எழுந்தருளாநிற்கச்செய்தே இடைவழியிலே "என்வில்வலி கண்டுபோ" என்று வந்துதகைய. "விலங்க" என்றது- விலக்கவென்றபடி. சேர்ந்தஜித்யாநி. அவன் கையினின்றும் வாங்கினதாயிருக்கச்செய்தேயும், வைஷ்ணவமான தநுஸ்ஸாகையாலே இத்தலைக்குருபமாயிருக்கிற வில்லைக்கொண்டு அவனுடைய தேஜோபங்கத்தைப் பண்ணிவிட்டது மோரடையாளம். "தவத்தைச் சிதைத்த தடையாளம்" என்னுதே "சிதைத்ததுமோரடையாளம்" என்னுகையாலே- இன்னமும் பலவடையாளங்களும் சொல்லுவதாக நினைத்துச்சொல்லுகிறுனென்னுமிடம்தோற்றுகிறது. சங்காநிவர்த்தி பிறக்குமளவும் சொல்லவேணுமிறே. ... ... க.

மூ—அல்லியம்பூமலர்க்கோதா யடிபணிந்தேன் விண்ணப்பம்
சொல்லுகேன் கேட்டருளாய் துணைமலர்க்கண் மடமானே
எல்லியம்போ தினிதிருத்த லிருந்தோ ரிடவகையில்
மல்லிகைமா மாலைகொண்டங் கார்த்ததுமோ ரடையாளம். உ.

319

(க) "நீலகாபபாவேண்யா ஜகந்மதனயகயா." (உ) "அஸ்யாதேவ்யாமஸ்தஸ்மிந்." (ரு) "தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய." (ச) "இயம்ஸீதாமமஸுதா யஹிதாமஸாதவ ப்ரதீச்சசைநாம் பதிவ்ரதாம் பதிர்ஹ்யேஷ க்ருஹீதஸ்தவபாணிநா."

அல்லி — உள்ளிதழ் விளங்குப்படி
மலர் — அலர்ந்த
அம் — அழகிய
கோதாய் — (பூமலரால்தொடுக்கப்பட்ட)
மாலைபோலே யிருப்பவளாய்
துணை மலர் — இரண்டு தாமரை மலர் போன்ற
கண் — கண்களோடும்
மடம் — மடப்பத்தையு முடைய
மானே — மான் போன்றவளே!
அடி — தேவரீர் திருவடிகளிலே
பணிந்தேன் — பணிந்த என்னுடைய
விண்ணப்பம் — விஜ்ஞாபனத்தை
சொல்லுகேன் — சொல்லாகின்றேன்,
கேட்டருளாய் — தேவரீர் கேட்டருள வேணும்;
எல்லியம்போது — இராக்காலத்திலே
இனிது இருத்தல் — பெருமாளும் தேவரீரு மினிய இருப்பாக
இருந்தது ஓர் — இருந்ததொரு
இலவகையில் — ஸ்தலத்திலே
மா — சிறந்த [யைக் கொண்டு
மல்லிகைமாலை கொண்டு — மல்லிகைமாலை
அங்கு — அவ்விடத்திலேயே
ஆர்த்தது — கட்டிவைத்ததும்
ஓர் அடையாளம்.

வ்யா. இரண்டாம்பாட்டில், அல்லியம்பூமலர்க்கோதாய். அல்லிதோன்றும்படி விகஸிதமான அழகியபூவாலே கட்டப்பட்ட மாலைபோலே யிருக்கிறவளே. இத்தால் திருமேனியுடைய தருணதையையும், மார்த்தவத்தையும், துவட்சியையும் சொல்லுகிறது. அடிபணிந்தேன் விண்ணப்பம். என்னுடைய ஸ்வரூபாநுரூபமாக தேவரீர் திருவடிகளிலே வணங்கி, கலைபடைத்த ப்ரயோஜநம் பெற்றேன், இனி வ்யாபடைத்த ப்ரயோஜநம் பெறும்படி விண்ணப்பம் செய்யத்தக்கதொன்றுண்டு என்ன; அதுகேட்கையிலுண்டான ஆதரந்தோற்றக் கடாக்ஷித்துக்கொண்டிருக்கிறபடியைக்கண்டு துணைமலர்க்கண்மடமானே - சொல்லுகேன் கேட்டருளாய் என்கிறான். என்பக்கல் வாத்ஸல்யந்தோன்ற என்னைக்கடாக்ஷித்துக்கொண்டிருக்கையாலும் பவ்யதையாலும் இணைமலர்போலே யிருக்கிற கண்களையுடையளாய், மடப்பத்தையு முடைத்தான மான்போலே யிருக்கிறவளே! அந்தவிண்ணப்பந்தன்னைச்சொல்லுகிறேன் கேட்டருளவேணுமென்கை. மேல் - அது தன்னைச்சொல்லுகிறான் எல்லியம்போது. ராத்ரிகாலத்திலே பெருமாளும் தேவரீருமாய் ரஹஸ்யதாமானவிருப்பாக இருந்ததொருஸ்தலத்திலே மல்லிகையித்யாதி. சிலாக்யமான மல்லிகைமாலையைக்கொண்டு பெருமாளை பந்தித்துவைத்ததும் ஓரடையாளம். பெருமாளுடையப்ரணயித்வ பாரதந்த்ர்யப்ரயுக்தமாய் போகதசையில் நடப்பதொரு ரஸமாய்த்து இது; ஆகையாலே, அல்லாத வடையாளங்கள் போலன்றிக்கே, அத்யந்தரஹஸ்யமாயிருப்பதொன்றிறே இதுதான். (க) "ஸகாமாதஸ்ய தத்ராஹம் ராகவஸ்ய நிவேசநே - புஞ்ஜாநாமாநுஷாந்போகாந் ஸர்வகாமஸமர்த்திநீ" என்று இவள் காணும் பெருமாளுமறியுமித்தனையிறே. ... ... உ.

மூ.—கலக்கியமாமனத்தனளாய்க் கைகேயிவரம்வேண்ட
மலக்கியமாமனத்தனனாய் மன்னவனுமருதோழியக்
குலக்குமராகாடுறையப் போவென்றுவிடைகோடுப்ப
இலக்குமணன்றன்னோடு மங்கேகியதோரடையாளம்.—

(க) "ஸகாமாதஸ்ய தத்ராஹம் ராகவஸ்ய நிவேசநே - புஞ்ஜாநாமாநுஷாந்போகாந் ஸர்வகாமஸமர்த்திநீ."

பதவுரை.

மருதொழிய— மறுக்கமாட்டாமல் சோகித்துக் கிடக்கச் செய்தே

(ஸுமந்த்ரனைக்கொண்டு பெருமாளை அழைப்பித்து,)

குலம் குமரா } இக்குலம் விளங்கவந்து பிறந்த குமாரனே!

காடு உறைய போ என்று } வாவாஸார்த்தமாகப் போ வென்று

விடை கொடுப்ப— நியமிக்க [ளோடே

இலக்குமணன் தன்னோடு— இளையபெருமாளுக்கு— தண்டகாரண்யத்திலே

எகியது— எழுந்தருளினதும்

ஓர் அடையாளம்.

கைகேயி— கைகேயியானவள்

கலக்கிய— கூனியாலே கலக்கப்பட்ட

மா— பெரிய [கொண்டு

மனத்தனளாய்— மநஸ்ஸையுடையளாய்க்

வரம் வேண்ட— ராமவநவாஸமும், பரத ராஜ்யாபிஷேகமுமாகிற இரண்டுவரங் கேளாயு மிப்போதே நிறைவேற்ற வேணுமென்று கேட்க,

மன்னவனுட்— தசரத சக்ரவர்த்தியும்

மலக்கிய— மலக்கப்பட்ட

மா— கம்பீரமான [கொண்டு

மன்த்தனனுப்— மநஸ்ஸையுடையனுப்க்

வ்யா. மூன்றும்பாட்டு. கலக்கியமாமனத்தனளாய். குப்ஜையாலே கலக்கப்பட்ட பெரியமநஸ்ஸை யுடையளாய். முனபு, புத்ரனை ஸ்ரீபரதாழ்வானிலுங் காட்டில் பெருமாள் பக்கல் ஸ்நேஹமிகியாய், பர்த்தாவான சக்ரவர்த்தியினுடைய ப்ரியமேசெய்து போந்த வளாகையாலே "பெரியமநஸ்ஸை யுடையவள்" என்கிறது. இப்படியிருக்கிற மநஸ்ஸை, மந்தரம் கடலைக் கலக்கினற்போலே காணும் மந்தரை கலக்கின்படி. அதாவது - மூற்பட இவள் சொன்னவை எல்லாம் அநிஷ்டமாய், "இப்படி சொல்லலாகாதுகாண்" என்று பெருமாள்பக்கல் தனக்குண்டான ஸ்நேஹத்தைச் சொல்லியும், பெருமாளுடைய குணங்களைச் சொல்லியு மிருந்தவளை, உத்தரோத்தரம் தான் சொல்லுகிற வசநங்களாலே பெருமாள் பக்கல் ஸ்நேஹத்தைக் குலைத்து, "அவரை அபிஷேகம் பண்ணவொண்ணாது, என் மகனை யபிஷேகம் பண்ணவேணும்" என்று சொல்லும்படி யாக்கினள் இவளையிறே. கைகேயிவரம்வேண்ட. இப்படி கலக்கப்பட்ட மநஸ்ஸையுடையளாய்க் கொண்டு, கைகேயியானவள், தனக்குமுன்பே தருவதாகச் சொல்லிக்கிடக்கிற வாமிரண்டையும் இப்போது தரவேணுமென்றும் - அதுதான் பதிநாலுஸம்வத்ஸரம் பெருமாளைக் காட்டிலே போகவிடுகையும், ஸ்வபுத்ரனை பரதனை அபிஷேகம் பண்ணுகையும் என்றுசொல்லி அபேக்ஷிக்க.

மலக்கியமித்யாதி. அதுக்கு அவன் இசையாமையாலே, அறுபதினாயிரமாண்டு ஸத்யப்ரதிஜ்ஞனைப் போந்தீ, இப்போது அஸத்யப்ரதிஜ்ஞனையோ வென்றும், நீ இது செய்யாயாகில் நான் என் ப்ராணனை விடுவேன் என்றும் அதிகுபிதையாய்க் கொண்டு இவள் சொன்ன சொலவுகளாலே மலக்கப்பட்ட மஹா மநஸ்ஸை யுடையனுப்க் கொண்டு, ராஜாவானவனும் மறுக்கமாட்டாதொழிய. "மாமனத்தனனுப்" என்றது- அறுபதினாயிரமாண்டு வஸிஷ்டாதிகளை ஸேவித்து தர்மாதர்மங்களெல்லாமறிந்து, ராஜ்யதந்த்ரத்தில் ஒருவர் ஒருபழுதும் செய்யாதபடி நோக்கிக்கொண்டு போந்தவனுகையாலே, ஒருவரால் கலக்கவொண்ணாதபடியான் மநஸ்ஸில் இடமுடையவனென்றபடி. இப்படியிருக்கிற மநஸ்ஸையும் தன்னுடைய உக்திசேஷ்டிதங்களாலே "என்செய்வேன்" என்று தெகுடாடும்படி பண்ணினளாய்த்து கைகேயி. மந்தரை தன்மநஸ்ஸைக் கலக்கினற்போலேயாய்த்து - இவள் அவன் மநஸ்ஸைக்

கலக்கினபடி. இப்படியான மநஸ்ஸையுடையனுய், இவள் சொன்னதுக்கு மறுத்து ஒன்றும் சொல்லமாட்டாதிருக்க.

குலக்குமரா காடுறையப்போவென்று விடைகொடுப்ப. மறுக்கமாட்டாமைபாலே ராஜாவானவன் சோகித்துக் கிடக்கச்செய்தே, பெருமாளையழைத்துக்கொண்டுவாவென்று ஸுமந்த்ரனைப் பார்த்துச் சொல்லுவதாக நினைத்து, சோகமெலக்காலே அதுதானும் மாட்டாதொழிய, இவள் அருகேயிருந்து, " ராஜா ராத்ரியெல்லாம் உத்ஸவ பராக்காலே நித்ரையற்றிருக்கையாலே ச்ராந்தராய், சற்று உறங்குகிறார்; நீ கடுகப்போய் பெருமாளையழைத்துக்கொண்டுவா " என்றுபோகவிடுகையாலே, அவன் போய், பெருமாளெழுந்தருளுவித்துக்கொண்டு வந்தவளவில், பிதாவானவன் சோகித்துக் கிடக்கிறபடியைக் கண்டு, " இதுக்கடியென் " என்று க்லேசப்பட்டுக் கேட்டவாறே " முன்பே எனக்கு இரண்டுவரம் தந்திருப்பர்; அதிரண்டும் எனக்கு இப்போது தரவேணும்; அதாவது - பதினாலுஸம்வத்ஸரம் உம்மைக் காட்டிலே போகவிடவேணும்; பரதனை அபிஷேகம் செய்யவேணும் என்று நான் சொன்னேன்; * ஸத்யதர்மபராயணனுகையாலே மறுக்கமாட்டாமல் அதும்பிசெய்து, உம்மைக் காட்டிலே போகவிடுவதாக அழைத்துவிட்டார்; உம்மைக்கண்டவாறே வாய்திறந்து சொல்லமாட்டாமல் கிடக்கிறார் காணும் " என்ன; " என்னை நியமிக்கும் போதைக்கும் இப்படி க்லேசிக்கவேணுமோ ? யாதொன்று திருவுள்ளமானபடி செய்யவேணே நான் " என்ன; " ஆனல், அவர்க்காக நான் சொல்லுகிறேன், இக்குலம் விளங்கவந்து பிறந்த குமாரரான நீர், உங்கள் ஐயரை ஸத்யப்ரதிஜ்ஞராக்கவேண்டியிருந்தீராகில், அவருடைய வசநபரிபாலகராய்க் கொண்டு வநவாஸம் பண்ணும்படியாகப்போம் " என்று போக்கிலே ஒருப்படுத்த. இலக்குமணன் றன்ஞேடுமங்கேகிய தோரடையாளம். (க) " ஹ ெவ ஹ ஹ ஹ

பெரு- பெருமைக்குத் தக்கவளான
தேவீ— தேவீ!
விண்ணப்பம் கேட்டருளாய்-;
கூர் அணிந்த- மிகக்கூர்மையையுடைய
வேல்— வேல் தொழிலில்
வலவன்— வல்லவனுன

குகனேடும்- ஸ்ரீ குஹப் பெருமாளோடே
கங்கை தன்னில்- கங்கைக்கரையிலுள்ள
சீர்ங்கபோ புரத்திலே
சீர் அணிந்த— சீர்மை மிகுந்த
தோழமை— ஸ்நேஹத்தை
கொண்டதும்- கொண்டதும்
ஓர் அடையாளம்.

வ்யா. நான்காம்பாட்டு. வாரணிந்தமுலைமடவாய். கச்சணிந்தமுலைகளையும் மடப்பத்தையுமுடையவளே. ராஜாக்களுக்கு போக்யமானவஸ்துக்கள்கொண்டுதிரிவார், பிறர் கண்படாதபடி கட்டி முத்ரையிட்டுக்கொண்டு திரியுமாபோலே, "பெருமாளுக்கு போக்யமானவிவை பிறர்கண்படவொண்ணாது" என்னுமத்தாலேயாய்த்து- இவள் கச்சிட்டுக்கட்டி மறைத்துக்கொண்டிருப்பது. இப்படி இருந்த முலைகள் இப்போது வெறும்புறத்திலே இருப்பதே! என்று க்லேசித்துச் சொல்லுகிறதுதல்; அன்றிக்கே, கச்சாலே அடக்கி ஆளவேண்டும்படி பரிணதமாய்த் தசைத்திருக்குமவை, இப்போது (க) "உபவாஸக்ருசாங்கி" என்கிறபடியே திருமேனியினேக்கையாலே சோஷித்திருக்கிறபடியைப்பற்றச் சொல்லுகிறதுதல். (" மடவாய் " என்றது ஸ்த்ரீத்வத்தால்வந்த ஒடுக்கமன்றிக்கே, பிரிவாற்றுமையால் வந்த துவட்சியைப்பற்றச் சொல்லுகிறதுதல்; அன்றிக்கே, மடப்பமாவது- பற்றிற்றுவிடாமையாய், அநவதம் பெருமாளனுபவமே திருவுள்ளமாய், மற்றொன்றறியாதிருக்கிறபடியைப் பற்றச் சொல்லுகிறதுதல். வைதேவீ. விதேஹபுத்ரியானவளே. இப்படிதேஹத்தையுபேக்ஷித்திருக்கலாய்த்து இக்குடியில் பிறப்பிறேயென்கை.) தேரணிந்தவயோத்தியர்கோன் பேருந்தேவீ. தேர்களாலே அலங்க்ருதமான திருவயோத்தையையிலுள்ளார்க்கு நிர்வாஹகரான பெருமாளுடைய பெருமைக்குத்தகுதியானதேவீ. (உ)"தல்யசீலவயோவர்த்தாம் தல்யராஜகுலோத்பவாம் ஸகலதர்மசர்யாநிரதாம் தர்மபத்நீமிஹ நமஸ்யாமி ராமவிலாஸ ஸந்நிதிம் விதேஹராஜபுத்ரீம் தர்மேணாஹம் தர்மசாரிணீம் தர்மஜ்ஞாம் தர்மஸஹசரீம் தர்மபத்நீம் தர்மேணாஹம் தர்மேணாஹம்" என்னக்கடவதிறே. அல்லது ஒரு சிறுத்தேவியுண்டாய், பெருந்தேவியென்கிறதன்றே; பெருமாள் ஏகதாரவ்ரதராகையாலே. விண்ணப்பம் கேட்டருளாய். நான் விண்ணப்பஞ் செய்கிற வித்தைக் கேட்டருளவேணும். கூரணிந்தவேல்வலவன். மிகக்கூர்மையையுடைய வேல்தொழிலில் வல்லவன். ஸ்ரீகுஹப்பெருமாள் வேல்வாங்கினரென்றால் சத்ருபக்ஷம் மண்ணுண்ணும்படியாய்த்து இவருடைய சௌர்யமிருப்பது. குகனேடுமித்யாதி. இப்படிவேலுங்கையுமாய்த் திரியுமதொழிய, " ஏழைபாதலன் " இத்யாதிப்படியே - அபிஜாதவித்யா வ்ருத்தங்களொன்றுமில்லாத ஸ்ரீகுஹப் பெருமாளோடே கங்காதீரமான சிருங்கிபேரபுரத்திலே " மாழைமான்மடநோக்கி உன்தோழி உம்பிஎம்பி தோழன் நீயெனக்கு " என்றருளிச் செய்தபடியே குணத்தோடே கூடின தோழமை கொண்டதும் ஓரடையாளம். ... சு.

மூ.—மானமருமென்னேக்கி வைதேவிவிண்ணப்பம்
கானமருங்கல்லதர்போய்க் காதைந்தகாலத்துத்
தேனமரும்பொழிற்சாரற் சித்திரகூடத்திருப்பப்
பான்மொழியாய் பரதனம்பிபணிந்ததுமோ ரடையாளம். டு.

322

(க) "உபவாஸக்ருசாம்." (உ) "தல்யசீலவயோவர்த்தாம் தல்யராஜகுலோத்பவாம் ஸகலதர்மசர்யாநிரதாம் தர்மபத்நீமிஹ நமஸ்யாமி ராமவிலாஸ ஸந்நிதிம் விதேஹராஜபுத்ரீம் தர்மேணாஹம் தர்மசாரிணீம் தர்மஜ்ஞாம் தர்மஸஹசரீம் தர்மபத்நீம் தர்மேணாஹம் தர்மேணாஹம்."

பதவுரை.

மான் அமரும்— மான்பேடை போன்ற
மெல்— மெல்லிய
நோக்கி— நோக்கையுடையளாய்
வைதேஹீ— விதேஹ ராஜபுத்திரியாய்
பால்— பால்போலே போக்யமான
மொழியாய்— மொழியை யுடையவளே!

விண்ணப்பம்—;

கான் அமரும்— காடு செறிந்திருப்பதாய்
கல் அதர்— * கல் நிரைந்து கிடப்பதான வழியிலே
போய்— எழுந்தருளி
காடு உறைந்த காலத்து— வாஸம் பண்ணின காலத்திலே
தேன் அமரும்— தேன் நிறைந்த
பொழில்— சோலைகளோடு சேர்ந்த
சாரல்— தாழ்வரையை யுடைய
சித்ர கூடத்து— சித்ரகூட பர்வதத்திலே
இருப்ப— எழுந்தருளியிருக்கச் செய்தே
நம்பி— பாரதந்த்ர்யத்தால் பூர்ணனான
பரதன்— பாதாழ்வான்
பணிந்ததும்— "மீண்டெழுந்தருளவேணும்" என்று ப்ரபத்தி பண்ணினதும்
ஓர் அடையாளம்.

வ்யா. ஐந்தாம்பாட்டு. மானமருமித்யாதி. மானேடொத்திருந்துள்ள மிதுவான நோக்கை யுடையளாய், விதேஹ ராஜாவினுடைய புத்ரியானவளே! இக்தால் (க)"ப்ரியஞ்ஜநமபச்யந்தீம் பச்யந்தீம்ராக்ஷஸீகணம் - ஸ்வயமேநமுபாகம்ய ஸ்வகேஷாவர்தாமிவ." என்கிறபடியே - தன்னினத்தைப் பிரிந்து அநேகம் நாய்களினுடைய நிரள்களாலே வளைக்கப்பட்டு நடுவேநின்று மலங்கமலங்க விழிப்பதொரு மான்பேடை போலே, அநுகூலஜநத்தின் முகத்திலே விழிக்கப்பெறாமல் ப்ரதிகூலமான ராக்ஷஸிகளைத் தைப் பார்த்துக்கொண்டிருக்கிற விருப்பையும், அவர்களுடைய தர்ஜநபர்த்ஸநங்களாலே உளைந்து வேண்டுதற்கநோத்யுக்தையாம்படி தேஹத்தையுபேக்ஷித்தபடியையும் சொல்லுகிறது. விண்ணப்பம். அடியேன் விண்ணப்பம் செய்கிறவார்த்தையைத் திருவுள்ளம்பற்றியருளவேணும்.

கானமருமித்யாதி. காடுசெறிந்திருப்பதாய் * கல்நிரைந்து கிடப்பதானவழியிலே திருவடிகளின் மார்த்தவம்பாராதேபோய் வாஸம்பண்ணினகாலத்திலே. தேனமருமித்யாதி. வண்டுகள்மாறாமல் பொருந்திக்கிடக்கிற பொழில்களோடுசேர்ந்த பர்யந்தத்தையுடைய சித்ரகூட பர்வதத்திலே,(உ) "உடஜோராமமாஸீநம் ஜடாமண்டலதாரிணம் - க்ருஷ்ணாஜிநதரம் தந்தம் சீரவல்கலவாஸஸம்." என்கிறபடியே இளையபெருமாள்சமைத்த ஸ்ரீபர்ணசாலையிலே யெழுந்தருளியிராநிற்க. பான்மொழியாய். பால்போலே ரஸாவஹமான பேச்சையுடையவளே. இதற்குமுன்பு இவள்சொன்ன வார்த்தைகளில் ரஸ்யதையாலும் இது கேட்கையிலுண்டான ஆதரத்தாலும் சொல்லுகிறன். பரதன்பணிந்தது மோரடையாளம். பாரதந்த்ர்யத்தால் பூர்ணனான ஸ்ரீபரதாழ்வான்வந்து "மீண்டு எழுந்தருளவேணும்" என்று ப்ரபத்திபண்ணினது மோரடையாளம். ... ... கு.

(க) "ப்ரியஞ்ஜநமபச்யந்தீம் பச்யந்தீம்ராக்ஷஸீகணம் - ஸ்வயமேநமுபாகம்ய ஸ்வகேஷாவர்தாமிவ." (உ) "உடஜோராமமாஸீநம் ஜடாமண்டலதாரிணம் - க்ருஷ்ணாஜிநதரம் தந்தம் சீரவல்கலவாஸஸம்."

மூ.—சித்திரகூடத்திருப்பச் சிறுகாக்கை மூலிதீண்ட
அத்திரமேகொண்டெறிய வவனத்துலங்குந் திரிந்தோடி
வித்தகனே யிராமாவோ நின்னவய மென்றழைப்ப
அத்திரமே யதின்கண்ணை யறுத்ததுமோ ரடையாளம் கூ.

பதவுரை.

சித்திர கூடத்து— சித்ரகூட பர்வதத்திலே
இருப்ப— இருக்கச் செய்தே
(இந்த்ரன் மகனை ஜயந்தனைவன்,)
சிறு— பக்ஷிஜாதியில் மிகத்தண்ணிதான
காக்கை— காக்கை வடிவாய்க் கொண்டு
மூலி— (தேவரீர்) திருமூலைத்தடத்திலே
தீண்ட— வந்து
(அவ்வளவிலே பெருமாள் உணர்ந்தருளி,)
அத்திரம்— ப்ரஹ்மாஸ்த்ரத்தை
கொண்டு— ஒரு தர்பத்திலேநிட்டு
ஏறிய— அக்காகத்தின் மேலே ப்ரயோகிக்க
(அது பின் தொடர்ந்து செல்ல, அத்தைத்
தப்பவழி தேடி,)
ஆனைத்து உலகும்— எல்லாலோகங்களிலும்
ஒடி திரிந்து— ஓடித்திரிந்து
(அவ்வளவிலும் தனக்கொரு புகலிடம் கா
ணமையாலே மீண்டுவந்து,)
வித்தகனே— யாவரும் வியக்கத்தக்கவனுப்
இராமா— யாவரையும் ரமிப்பிக்க வல்லவ
னனவனே!
நின் அவயம்— உனக்கு அபயமென்று
ஓ என்று அழைப்ப— அடைக்கலம் புகுந்த
மை தோற்றக்கூப்பிட
அத்திரமே— முன்பு தலைபறுப்பதாகத்
தொடர்ந்த அஸ்த்ரந்தானே
அதின் கண்ணை — அக்காகத்தின் ஒரு
கண்ணை
அறுத்ததும்— அறுத்துப் போகட்டதும்
ஓர் அடையாளம்.

வ்யா. ஆரும்பாட்டு. சித்திரகூடத்திருப்ப.. சோலைகளும் ஆறுகளும் இலாதலங்களு மாய்க்கொண்டு மநோகரஸ்தானமாயிருக்கும் சித்ரகூட்பர்வத ப்ரதேசத்திலே, (க) "தஸ்யோ பவநஷண்டேஷு நாநாபுஷ்பஸுகந்திஷு விஹர்த்யஸலில க்ஷி ந்நதவாங்கே ஸமுபாவிசம்." (உ) "வாயஸஸ்ஸஹஸாகம்ய விததாஸ்தநாந்தரே." (ங) "கஸ்கரீடதிஸரோஷேண பஞ்சவக்த்ரேணபோகிநா." (ச) "ஸதாப்பமஸ்தாந க்ஷ்ய ப்ராஹ்மேணாஸ்த்ரேண யோஜயேத் ॥ ஸநீப்தஇவகாலாக்நிர் ஜ்வாலாபிருபகே தவிஜம் । ஸதம்ப்ரதீப்தம்சிகேஷப தர்ப்பந்தம் வாயஸம்ப்ரதி" என்ற

(க) "தஸ்யோபவநஷண்டேஷு நாநாபுஷ்பஸுகந்திஷு விஹர்த்யஸலில க்ஷி ந்நதவாங்கே ஸமுபாவிசம்." (உ) "வாயஸஸ்ஸஹஸாகம்ய விததாஸ்தநாந்தரே." (ங) "கஸ்கரீடதிஸரோஷேண பஞ்சவக்த்ரேணபோகிநா." (ச) "ஸதாப்பமஸ்தாந க்ஷ்ய ப்ராஹ்மேணாஸ்த்ரேண யோஜயேத் ॥ ஸநீப்தஇவகாலாக்நிர் ஜ்வாலாபிருபகே தவிஜம் । ஸதம்ப்ரதீப்தம்சிகேஷப தர்ப்பந்தம் வாயஸம்ப்ரதி"

படியே ஒருதர்ப்பத்தையெடுத்து, அதில் ப்ரஹ்மாஸ்த்ரத்தை யோஜித்து, அத்தை அந்த காகத்தின்மேலே செலுத்திவிட. அதுதுலகுமித்யாதி. அந்த அஸ்த்ரம் மந்தகதியாலே கையாலே பின்தொடர்ந்துசெல்ல, அத்தைத்தப்பவழிதேடி, (க) "ஸவிதராஸபரித்யக்த ஸ்ஸுரைச்சஸமஹர்ஷிபிஃ । த்ரீந்லோகாந்ஸம்பரிக்ரம்ய தமேவசரணங்கதஃ" என்கிறபடியே முந்தை பிதாக்கள்ஹத்திலே சென்றவளவில், பிதாவாலும் மாதாவாலும் கைவிடப்பட்டு, பந்துக்களானவர்கள்தான் கைக்கொள்ளுவார்களோவென்று அவர்கள்பக்கலிலே சென்றவளவில் அவர்களாலும் பரித்யக்தனுய், ஆசார்யப்ராதாநரான ரிஷிகள்தான் கைக்கொள்ளுவர்களோவென்று அவர்கள் பக்கலிலே சென்றவளவில் அவர்களும் கைவிடுகையாலே, திறந்து கிடந்த வாசல்கள்தோறும் ஒருகால் நுழைந்தாற்போலே ஒன்பதின்கால் நுழைந்து மூன்று லோகங்களையும் வலைய ஓடித்திரிந்தவிடத்திலும், ஒருவரும் கைக்கொள்ளாமையாலே (உ) "தமேவசரணங்கதஃ" என்கிறபடியே சிறிதும் காலக்கட்டிக்கொள்ளலாம்படியிருக்கும் க்ருபாவாணுகையாலே விஸ்மயநீயனுய், எல்லாரையும் குணத்தாலே ரமிப்பிக்கவல்லவனே! என்று சரண்யனுன பெருமாள்குணத்தைச்சொல்லி, "ஓ!" என்று தன்னுடைய அநந்யகதித்வத்தை முன்னிட்டுக்கொண்டு "உனக்கு அபயம்" என்று சரணாகதனனமை தோற்றக்கூப்பிட. அத்திரமேயித்யாதி. இப்படி சரணம் புகுகையாலே (ங) "ஸகம நிவதிதம்மமேள ஸாரணஸ்ஸரணமதஜ । வயாஹரூபிகாகஸ்தஃ க்ருபயாபர்யபாலயத்" என்கிறபடியே க்ருபையாலே பெருமாள் ரக்ஷித்தருளுகிறவள்வில், காகத்துக்கு ப்ராணப்ரதாநம்பண்ணி அஸ்த்ரத்துக்கு ஒருகண்ணழிவு கற்பிக்கையாலே, முன்பு தலையறுப்பதாகத் தொடர்ந்த அஸ்த்ரந்தானே அதினுடைய ஒருகண்ணை யறுத்துவிட்டதும் ஓரடையாளம். ௯

மூ.—மின்னேத்தநுண்ணிடையாய் மெய்யடியேன் விண்ணப்பம்
பொன்னேத்தமானென்று புகுந்தினிதுவிளையாட
நின்னன்பின்வழிநின்று சிலையிடித் தெம்பிரானேகப்
பின்னேயங்கிலக்குமணன் பிரிந்ததுமோ ரடையாளம். எ.

பதவுரை.

மின் ஒத்த— மின்னலைடொத்திருந்துள்ள
நுண்— நுண்ணிய
இடையாய்— இடையை உடையவளே!
மெய்— குற்றமற்ற
அடியேன்— சேஷபூதனுன நான் செய்கிற
விண்ணப்பம்— விண்ணப்பத்தைக் கேட்டருளவேணும்;
பொன் ஒத்த— பொன்போன்ற நிறத்தையுடைத்தான
மான் ஒன்று— ஒரு மானுனது
புகுந்து— பர்ணசாலையின் முன்னேவந்து புகுந்து
இனிது— மநோஹரமாக
விளையாட— துள்ளிவிளையாட

(க) "ஸபித்ராசபரித்யக்த ஸ்ஸுரைச்சஸமஹர்ஷிபிஃ । த்ரீந்லோகாந்ஸம்பரிக்ரம்ய" (உ) "தமேவசரணங்கதஃ" (ங) "ஸதம்நிபதிதம்பூமௌ சரண்யச்சரணகதம் । வதசர்ஹமபிகாகுத்ஸ்தஃ க்ருபயாபர்யபாலயத்."

நின்— தேவரீருடைய [யிலே நின்று
அன்பின் வழி நின்று— ஆன்சயின் வழி
சிலை பிடித்து— வில்லை யெடுத்துக்கொண்டு
எம்பிரான்— பெருமாள்
ஏக — அத்தைப்பிடிப்பதாக நெடுந்தூர
மெழுந்தருள்

பின்னே— பிற்பாடு
அங்கு— அங்கே
இலக்குமணன்— இளையபெருமாள்
பிரிந்ததும்— பிரிந்துபோனதும்
ஓர் அண்டையாள்ளம்.

வ்யா. ஏழாம்பாட்டு. மின்னிடையாதி, மின்னேரிடைத் திருந்துள்ள நுண்ணிய இடையையுடையாய்!. இடையினுடைய நுண்ணிமையும், விரஹதசையில் நேர்வபாடாற்ற வொண்ணுமைக்கு உடலாயிருக்குமிதே; அத்தைப்பற்றச் சொல்லுகிறன். மெய்யடியேன் விண்ணப்பம். புரையற்ற சேஷபூதனான நான் விண்ணப்பஞ் செய்கிறத்தைத் திருவுள்ளம் பற்றியருளவேணும்: மெய்யடியானைகைபோலது - எதிர்த்தலையில் ஸம்ச்லேஷ புருஷார்த்த மாயிருக்குமென்றபடி, ஸ்வப்ரயோஜந பரனன்றிக்கேயிருக்கை. பொன்னெத்துமானிடையாதி. மாயாவியானமாரீசன் இதுக்குமுன்பு லோகத்தில் கண்டறியாதொரு வடிவையெடுத்துக் கொண்டுவந்த தசையாலே, பொன்போலிருக்கிற நிறத்தையும் நானாரத்நங்கள் போலிருக்கிற புள்ளியையும் மற்றுமநேகம் வைசித்ரியையு முடைத்தாயிருப்ப தொருமானென்று, எழுந்தருளியிருக்கிற ஆச்சர்யத்தின் மூன்னேவந்து புகுந்து மநோஹரமாம்படி நின்று துள்ளி விளையாட. நின்னன்பின்வழிநின்று. " இத்தைப்பிடித்துத்தரவேணும் " என்று பெருமாள்பார்த்து தேவரீர் அருளிச்செய்தவிடத்தில், இளையபெருமாள் அருகேநின்று, "லோகத்தில் இப்படி யிருப்பதொரு மிருகமில்லை, மாரீசன் இங்ஙனே சிலமாயாரூபங்களைக்கொண்டு திரியும் என்றுப்ரஸித்தம்; ஆகையால், இது மாயாமிருகம்" என்றுநிற்கச்செய்தேயும், தேவரீருடைய ஆசையின்வழியிலேநின்று. சிலை பிடித்தேம்பிரானேக். இளையபெருமாளை இருகுத்தைக்குக் காவலாக நிறுத்திபிருக்கையாலே, பிடித்தவில்லும் காருமாய்க்கொண்டு அத்தைப்பிடிப்பதாகப் பெருமாள் நெடுந்தூரமெழுந்தருள். பின்பு தங்களையெல்லாரையும் விஷயீகரித்த உபகாரத்தைநினைத்து " எம்பிரான் " என்கிறன். பின்னேயித்யாதி. நெடுந்தூரம் பின்பற்றிப்போன விடத்திலும் பிடிகொடாமல் அநுதப்பித்திரிகையாலே " இது மாயாமிருகம்" என்று திருவுள்ளம்பற்றி அதின்மேலே சரத்தைவிட, அதுபட்டுவிழுகிறபோது "ஹா!ஸீதே!,ஹா!லக்ஷ்மண!!" என்று பெருமாள் மிடற்றோசைபோலே கூப்பிட்டுக்கொண்டுவிழ, அத்தை தேவரீர்கேட்டருளி, பெருமாளுக்கேதேனும் அபாயம்வந்ததாக நினைத்து, " இத்தைச்சடக்கெனப்போய் அறியும் " என்று அருளிச்செய்யச் செய்தேயும் இருகுத்தைக்குக் காவலாகநிறுத்திப் போகையாலும், பெருமாளுடைய தௌர்ப்பல்யத்தையறிகையாலும் " அங்குத்தைக்கு ஒன்றும்வாராது, தேவரீர் பயப்பட்டருளவேண்டா " என்று விண்ணப்பம்செய்து, தாம்போகமாட்டாமல் சுற்றிக்கொண்டுநிற்க, அவர் நில்லாமல் போகவேண்டும்படி தேவரீர் சிலவருளிச்செய்கையாலே, பிற்பாடு அங்கே இளையபெருமாள் பிரிந்துபோனது மோரடையாளம். ... ... எ.

மூ—மைத்தகுமாமலர்க்குழலாய் வைதேவிவிண்ணப்பம்.

ஒத்தபுகழ்வானரக்கோ. னுடன்றிருந்து நினைத்தேட
அத்தகுசீரயோத்தியர் கோ னடையாளமிவை மொழிந்தான்
இத்தகையாலடையாள மீதவன்கைமோதிரமே. அ.

பதவுரை.

மைத்தகு— ஸ்மைபோலே கறுத்து
மா— சிறந்த
மலர்— மலரை அணிந்த
குழலாய்— கூந்தலையுடையளாய்
வைதேவீ— வீதேஹராஜன் குலம்விளக்க வந்தவதரித்தவளே!
விண்ணப்பம்— அடியேன் செய்யும் விண்ணப்பத்தைக் கேட்டருளவேணும்;
ஒத்த புகழ்— ஸுகதுக்கங்களில் பெருமாளோடொத்தவர் என்கிற புகழையுடையராய்
வானர்— வானரங்களுக்கு
கோன்— அதிபதியான ஸுக்ரீவர்
உடன் இருந்து— பெருமாளுடன் கூட இருந்து
நீ— தேவரிரை
தேட— தேடுகைக்காக
அ தகு— அந்தநிலைக்குத் தகுதியான
சீர்— கல்யாண குணங்களை யுடையராய்
அமாத்தியர்— அமாத்யையிலுள்ளார்க்கு
கோன்— ஸ்வாமியான பெருமான்
இவை அடையாளம்— இவ்வடையாளங்களை
பெல்லாம்
மொழிந்தான்— அருளிச்செய்தார்;

(தூபின்பு,)

அடையாளம்— அடியேன் விண்ணப்பம் செய்த அடையாளங்களித்தனையும்
‡ இத்தகையால் — இந்தப்ரகாரத்தாலே வந்தவை,

(என்று அறிவித்து)

ஈது— இது
அவன் கை— அவர்கையில் தரித்திருந்த
மோதிரம்— திருவாழிமோதிரம்
[என்று மோதிரத்தையும் கொடுத்தாயுத்து.]

‡ 'இத்தகை' என்று பிரித்து— 'இவ்வண்ணமானதே' என்று பொருளாக்கி, 'ஆல்' என்னுமித்தை அசைச் சொல்லாக்குவார் சிலர்.

வ்யா. எட்டாம்பாட்டு. மைத்தகுமாமலர்க்குழலாய்! மைபோல இருண்டு ச்லாக்யமாள்மலரோடேகூடியிருக்கும் குழலையுடையவளே. இந்த விசேஷணங்கள் இப்போதிருக்கிற இருப்புக்குச் சேராமையாலே, இப்படியிருக்கைக்கு யோக்யமான குழலென்று சொல்லுகிறுமித்தனை. பிரிவாற்றுமையாலே பேணுமிருக்கையால் புழுதிபடத்துப் பூமாலையிப்போது கிடக்கிறது. வைதேவீ. தேஹத்தை உபேக்ஷித்திருக்கிறபடியைக்கொண்டு சொல்லுகிறன். விண்ணப்பம். இந்த விண்ணப்பத்தைத் திருவுள்ளம் பற்றவேணுமென்கை.

ஒத்தபுகழ்வானரக்கோன். காண்பதுக்குமுன்னே (க) "ஸுக்ரீவம் நாயதிஹ்ருதி" (உ) "ஸுக்ரீவம் ஸரணம்கத:" என்று இளையபெருமாள் அருளிச்செய்யும்படி தாமே பஹுமாநம் பண்ணிக்கொண்டுவந்து, கண்டபின்பு அக்நிஸாக்ஷிகமாக ஸக்யம்பண்ணி, (ங) "கமலஹ்ருதிவிஹரதெரதி தெரகுநந்தன வசநாத்" என்று இளைய பெருமாள் அருளிச்செய்தபின்பு, "பெருமாளோடு சேரஹ்ருதயங்கள் ஒத்துப்போந்தவர்" என்னும்புகழையுடையராய் வாநராதிபதியான மஹாராஜர். இப்போது, வாநராதிபதியென்றது ஸாபிப்ராயம். அதாவது- தேவரீரைத்தேடுகைக்காக (க) "ஸுக்ரீவோ நாம ஹரயாணி"

(க) "ஸுக்ரீவம்நாதமிச்சதி" (உ) "ஸுக்ரீவம் சரணம்கத:" (ங) "தவம்வயஸ்யோஸிஹ்ருத்யோமேஹ்யேகம்த: கம்ஸுகேஸ்வசநெள" (ச) "யாம்கபீநாம்ஸஹஸ்ராணி"

என்கிறபடியே திக்குக்கள் தோறும் திரள்திரள்காப் போகவிடத்தக்க லாகரலைகளை யுடையவசென்கை. உடனிருந்து. மல்லவானிலும் கிஷ்கிந்தையிலுமாகப் பிரிந்திருந்துபோய் பெருமாளுடன் கூடியிருந்து. நினைத்தே தேவரீரைத்தேடுகைக்காக. ஸர்வதிக்குக்களிலும் ஆள்விடுகிறவளவிலே, (க) "விசேஷேண தஸ்ய ஸ்ரீவர ஹரநாமத்யர்த்தமுக்தவாந்" என்கிறபடியே எல்லாரையும்போலன்றிக்கே விசேஷித்து என்னையபிமானித்து "இவன் இக்காரியத்துக்கு லமர்த்தன்" என்று மஹாராஜர் திருவுள்ளம்பற்றினவநந்தரம்.

அத்தகுசீரயோத்தியர்கோ னடையாளமிவை மொழிந்தான். தேவரீரைப்பிரிந்தபின்பு னனுமூறக்கமுமற்று கடித்ததும் ஊர்ந்தது மறியாதே ஏதேனுமொரு போக்யபதார்த்தம் தனைக் கண்டால் தேவரீரை நினைத்து ஈடுபடாநின்றுள்ள அந்தநிலைக்குத் தகுதியான ப்ரணயித்வகுணத்தை யுடையராய், ஸ்ரீபரதாழ்வான் * அடிசூடுமாசாய்த் திருவடிநிலைகொண்டு போகையாலே திருவயோத்தியையி லுள்ளார்க்குத் தாமோராஜாவான பெருமாள், விண்ணப்பஞ் செய்த இந்தவடையாளங்களெல்லாம் அடியேனுக்குத் தம்முடைய திருப்பவளத்தாலே யருளிச்செய்தார். அல்லாதபோது *மல்லிகைமாமாலைகொண்டு அங்கார்த்தது அடியேனுக்கு அறியக்கூடுமோ. இத்தனையாலடையாளம். ஆனபின்பு, விண்ணப்பஞ்செய்த வடையாளமித்தனையும் இந்தப்ரகாரத்தாலே வந்ததென்று அறிவித்து. ஈதவன்கைமோதிரமே. இது அவர் திருக்கையில் திருவாழிமோதிரமென்று, (உ) "ராமநாமாங்கிதஞ்சேதம் பச்யதேவ்யங்குளீயகம்" என்கிறபடியே பெருமாளுடைய திருநாமத்தாலே அங்கிதமாயிருக்கிற திருவாழிமோதிரத்தைக் கொடுத்தானுய்த்து. ... ... அ.

மூ.—திக்குநிறைபுகழாளன் றீவேள்விச்சென்றநாள்
மிக்கபெருஞ்சலைநடுவே வில்லிறுத்தான் மோதிரங்கண்
டொக்குமாலடையாள மனுமானென்றுச்சிமேல்
வைத்துக்கொண்டேந்தனளால் மலர்க்குழலாள்சீதையுமே. கூ.

3ச6

பதவுரை.

மலர்— மலர்களணிந்த
குழலாள்— கூந்தலையுடையளான
சீதை— ஸீதையானவள்,
திக்கு— எல்லா திக்குக்களிலும்
நிறை— நிறைந்த [ராஜனுடைய
புகழாளன்— புகழையுடையனான் ஸ்ரீராம
தீ— முத்தீவளர்க்கிற
வேள்வி— யாகத்திலே
சென்ற நாள்.— விச்வாமித்ரரோடு எழுந்தருளின காலத்திலே
மிக்க பெரு— மிகப் பெரிதான
சலை நடுவே— ஸபையின் நடுவிலே
வில்— தனக்கு சுல்கமாக்க் கற்பித்திருந்த வில்லை
இறுத்தான்— முறித்த பெருமாளுடைய
மோதிரம்— திருவாழிமோதிரத்தை
கண்டு— பார்த்து
அனுமான்— ஹநுமானே!
அடையாளம்— நீ முன்சொன்ன அடையாளங்களும், திருவாழி மோதிரத்தினடையாளமும்
ஒக்கும் என்று—ஒத்திருந்ததென்றுசொல்லி

(க) "விசேஷேண தஸ்ய ஸ்ரீவர ஹரநாமத்யர்த்தமுக்தவாந்" (உ) "ராமநாமாங்கிதஞ்சேதம் பச்யதேவ்யங்குளீயகம்."

உச்சிமேல் தன் தலையின்மேல் வைத்துக்கொண்டு — திருவாழிமோதிரத்தை வைத்துக்கொண்டு | உகந்தனள் — திருவுள்ளமுகந்தாள்.

[ஆல் - ஆச்சர்யம்.]

வ்யா: ஒன்பதாம்பாட்டு. திக்திக்யாதி. தத்த்வஜ்ஞாநத்தாலும், ப்ராப்தவிஷய ஸ்வரூபத்தாலும், முமுக்ஷுவாய் பலாபிஸந்திரஹிதமாக கர்மாநுஷ்டாநங்களைப் பண்ணிக் கொண்டு பேர்ருகையாலும், ஸர்வதிக்குக்களிலும் நிறைந்த புகழையுடையனான ஸ்ரீஜநகராஜனுடைய ஆஹவநீயாத்யக்நித்ரயத்தோடே பண்ணும் யாகத்திலே விச்வாமித்ரமஹர்ஷி கொண்டுசெல்ல எழுந்தருளின காலத்திலே. மிக்கபெரும் சனவாடுவே. மிகவும்பெரிய ஸபாமத்யத்திலே. வில் இறுத்தான் மோதிரங்கண்டே. தனக்கு ஸுல்கமாகக் கல்பித்திருந்த வில்லை முறித்த பெருமாளுடைய திருக்கையிலே அப்போது இடந்ததாய், பின்பு பாணிக்ரஹணம் பண்ணுகிறபோது தன்கையிலே உறுத்தினதாய், ஸர்வகாலமும் பெருமாள் திருக்கையிலே இடக்குமதான திருவாழிமோதிரத்தைக்கண்டு.

ஒக்குமித்யாதி. அதுமானே! முன்பு சொன்னவடையாளங்களும் திருவாழிமோதிரத்திலிடையாளமும் ஒக்குமென்று அவன் முகத்தைப் பார்த்துச்சொல்லி, (க)" ஹ்ருஷ்டா வைதேஹீ ஸாத்விகீ வாரயோஷிதா ஜாநகீ ஸ்வாமிநீ தாஸ்யே" என்கிறபடியே - அத்திருவாழிமோதிரத்தை வாங்கி அதிலுண்டான சிகளரவமும் தன்னுடைய ஊதாமும்தோற்றத் தலைமேலே வைத்துக்கொண்டு, பின்னை, அத்தைக் கையிலேயேந்தி, வைத்தகண்மாறுமல் பார்த்துக்கொண்டிருக்கையாலே அத்திருவாழிமோதிரத்தோடு சேர்ந்த திருவிரலையும் அத்தோடுசேர்ந்த திருக்கையையும் அத்தோடுசேர்ந்த திருத்தோள்களையும் நினையாநின்றுகொண்டு, அவ்வழியாலே திருமேனியெல்லாவற்றையும் நினைத்து, பாவநாப்ராகர்ஷத்தாலே பெருமாள் அலங்கரிக்கப் பூமுடித்து ஒருபடுக்கையிலே யிருந்தாற் போலே தோன்றி, பிராட்டி மிகவும் ப்ரீதையாளென்று ஆச்சர்யப்பட்டருளிச் செய்கிறார். ஆல் - ஆச்சர்யம். ... ... கூ.

அ.—நிகமத்தில், இத்திருமொழிகற்றார்க்கு பலம்சொல்லித் தலைக்கட்டுகிறார்.

மூ.—வாராருமுலைமடவாள் வைதேவிதனைக்கண்டு
சீராருந்திறலனுமன் றெரிந்துரைத்த வடையாளம்
பாராரும்புகழ்ப்புதுவைப் பட்டர்பிரான் பாடல்வல்லார்
ஏராரும்வைகுந்தத் திமையவரோ டிருப்பாரே. ஓ.

பதவுரை.

வார் ஆரும் — கச்சோடு கூடின
முலை — ஸ்தநங்களை யுடையளாய்
மடவாள் — மடப்பத்தையுடையளான
வைதேவிதனை — பிராட்டியை
கண்டு — கண்டு
சீர் ஆரும் — சீர்மைபொருந்திய

(க) " க்ருஹீத்வாப்ரேக்ஷமாணஸ்தா பர்த்துர்ஹஸ்தவிபூஷணம்- பர்த்தாரமிவஸம்ப்ராப்தா ஜாநகீமுதிதாபவத். "

இறல்— சக்தியையுடைய
அணுமன்— திருவடி
சிதரிந்து— ஆராய்ந்து
உரைத்த— விச்வஸிக்கும்படி சொன்ன
அடையாளம்— அடையாளங்களை
பார் ஆரும்— பூமியெங்கும் பரவின
புகழ்— கீர்த்தியை யுடையராய் [ான
புதுவை— ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹக
பட்டர்பிரான்— பெரியாழ்வார் அருளிச் செய்த
பாடல்— பாடலான விவற்றை
வல்லார்— ஓதவல்லவர்கள்
ஏர் ஆரும்— எல்லா நன்மைகளும் சேர்ந்த
வைகுந்தத்து— ஸ்ரீவைகுண்டத்திலே
இமையவரோடு— நித்யஸூரிகளோடு
இருப்பார்— இருக்கப் பெறுவர்கள்.

வ்யா. பத்தாம்பாட்டு. வாசாருமித்யாதி. வாரோடுசேர்ந்திருக்கைக்கு யோக்யமா யிருக்கச்செய்தே, இப்போது வெறும்புறத்திலே யிராநிற்பதான முலையையுடையளாய், விரஹத்தால்வந்தவட்சியையு முடையளாய், தேஹத்தில் உபேக்ஷையாலே விதேஹபுத்ரி யானமை தோற்றவிருக்கிற பிராட்டியைக்கண்டு. சீராரும்திறலனுமன். முதலிகளெல்லாரு முண்டாயிருக்க " இவனேயிக்காரியம் செய்யவல்லான் " என்று பெருமாள் திருவுள்ளம் பற்றி, அடையாளங்களும் சொல்லித் திருவாழிமோதிரமும் கொடுத்துவிடும்படி ஜ்ஞாநாதி குணங்களால் பரிபூர்ணனும், நினைத்தது முடிக்கவல்ல சக்திமானுயிருக்கிற திருவடி. தெரிந்துரைத்தவடையாளம். பெருமாளருளிச் செய்தபடிகளில் ஒன்றும் தப்பாமல் ஆராய்ந்து பிராட்டிக்கு விச்வஸநீயமாக விண்ணப்பம் செய்த அடையாளங்களை. பாராருமித்யாதி. பூமியெங்கும் நிறைந்த புகழையுடையரான ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகரான பெரியாழ்வாரருளிச்செய்த பாடலான விவற்றை ஸாபிப்ராயமாக வல்லவர்கள். ஏராருமித்யாதி. எல்லாநன்மைகளும் சேர்ந்த பரமபதத்திலே, " அடியரோடிருந்தம் " என்கிறபடியே நிரந்தரபகவதநுபவபரரான நித்யஸூரிகளோடு ஒரு கோவையாயிருக்கப்பெறுவர். ஒ.

பெரியஜீயர் திருவடிகளே சரண்ம்.

அடிவரவு.—நெறி யல்லி கலக்கிய வாசணி மான்
சித்திர மின் மைத்த திக்கு வாசாரும் கதிர்.

ஆ. திருமொழி-உகூ-க்கு, பாட்டு-கூஏடு.

மூன்றுப்பத்து மூற்றிற்று.

(*)

நாலாம்பத்து - மூதற்றிருமொழி - கதிராயிரமிரவி ப்ரவேசம்.

அ.—க்ர்ஷ்ணவதாரைகட்சவணராய், திருவவதார ஸமயமேதொடங்கி அவ்வவதார ரஸமே அநுபவித்துக்கொண்டு போந்தவர், க்ர்ஷ்ணவதார சேஷ்டிதங்களையும் ராமாவதார சேஷ்டிதங்களையும் ஏககாலத்திலே அநுபவிக்கவேணு மென்னும்படியா யிருப்பதொரு அபிநிவேசம் பிறந்து, அவைதன்னை ஏகாச்ரயத்திலிட்டு அநுபவிக்கப் போகாமையாலே இரண்டு வடிவுகொண்டு ஒன்றுக்கொன்று எதிரியாகப்பேசி அநுபவித்த வநந்தரம், ராமாவதாரா நுகுணமாக வந்தவதரித்தருளின பிராட்டி., தன்னுடைய புருஷகாரத்வத்துக்கு ப்ரதாநகுணமான க்ர்பையை வெளியிடுகைக்காக " ராவணன்பிரித்தான் " என்று ஒருவ்யாஜத்தாலே லங்கையிலே யெழுந்தருள, அவ்வவதாரத்தின் மெய்ப்பாட்டாலே பெருமாள் அவள்போன விடம் இன்னவிடமென்றறியாமல் தேடிக்கொண்டு திரியாநிற்க, மஹாராஜரோடே உறவு

செய்தவநந்தரம் அவருடைய ஸர்வபரிகரத்தையும்திரட்டி திக்குக்கள்தோறும் தேடிவ வகைவகையாகப் போகவிடுகிறவளவிலே, பெருமான், திருவடியினுடைய புத்திசக்திகளைக்கண்டு " இவனே இக்கார்யம் செய்துமுடிக்கவல்லான் " என்று திருவுள்ளம்பற்றி, பிராட்டியைக்கண்டால் விண்ணப்பஞ் செய்யத்தக்க வடையாளங்களையு மருளிச்செய்து திரு வாழிமோதிரத்தையும் கொடுத்துப்போகவிட, திருவடியும் லங்கையிலேசென்று பிராட்டியைக்கண்டு திருவடித்தொழுது, ராவணன்மாயையால்வரு மநிசங்கைதீரும்படி பெருமானருளிச்செய்த அடையாளங்களையெல்லாம் விண்ணப்பஞ்செய்து, திருவாழிமோதிரத்தையும் கொடுத்து, பிராட்டிதிருவுள்ளத்தை மிகவும்உகப்பித்த ப்ரகாரத்தை அநுஸந்தித்து, அந்த புரகைங்கர்ய ரஸத்திலுண்டான ஆசையாலே பிராட்டிக்குத் திருவடிவிண்ணப்பஞ்செய்த அடையாளங்களையும், திருவாழிமோதிரம் கொடுத்தபடியையும், அநுகண்டு பிராட்டிதிரு வுள்ளமுகந்த படியையுமெல்லாம் அடைவேபேசியநுபவித்துப்பரீதாபத்தில் திருமொழி யிலே;ராமக்ருஷ்ணவதாரங்களோடு அவதாராந்தரங்களோடு அபதாராந்தரங்களோடு வாசிய தர்ம்யைக்யத்தாலே எல்லாம் ஏகாச்ரயமாகையாலே " இப்படியிருக்கிற விஷயத்தைக் கண் ணாலே கண்டநுபவிக்கவேணும் " என்று தேடுகையாகிறவிது தமக்கு ஒருபுடை-செல்லு கிறபடியையும், மாநஸாநுபவத்திலுடைய கரைபுரட்சியாலே அவ்விஷயந்தன்னை ஸாக்ஷாத்க டமாகக் கண்டதாகவே ஒருபுடை தோற்றியிருக்கிறபடியையு மநுஸந்தித்து, அவையிரண் டையும், அவதாராதி விசிஷ்டனாக ஸர்வேச்வரனைக் கண்ணாலே காணவேணுமென்று தேடி த்திரிகிறார் சிலரும், " அப்படிதேடுகிறிகோளாகில் அவனை உள்ளபடி கண்டாருளர் " என்று சொல்லுகிறார் சிலருமாகக்கொண்டு, தம்மை இரண்டுவகையாக வகுத்துக்கொண்டுபேசி இனியராகிறார் - இத்திருமொழியில். " நாடுதிரேல் " என்றும், " கண்டாருளர் " என்றும் பன்மையாகவருளிச்செய்தது - * கட்கண்ணுற்காண்கையில் அபேக்ஷாரூபஜ்ஞாந வ்யக்திகளும், * உட்கண்ணுல்கண்டு அநுபவாத்மகத்தாலே பாஹ்யாநுபவமும் லித்திக்க தென்று தோற்றும்படியான ஜ்ஞாநவ்யக்திகளும் பல்வுமுண்டாகையாலே. ... ... *

மூ.—கதிராயிரமிரவி கலந்தெறித்தா லொத்தநீண்முடியன்
எதிரில்பெருமையிராமனை யிருக்குமிடாதேரேல்
அதிருங்கழற்பொருதோ ளிரணியனுகம்பிளந்தரியாய்
உதிரமளைந்தகையோடிருந்தானை யுள்ளவாகண்டாருளர். க.

பதவுரை.

கதிர்— (எண்ணிறந்த) கிரணங்களையுடைய
ஆயிரம் இரவி— ஆயிரமாதித்யர்கள்
கலந்து— சேர்ந்து
எறித்தால் ஒத்த— ப்ரகாசித்தாற் போலே யிருக்கும் தேஜஸ்ஸையுடைய
நீள் முடியன்— உயர்ந்த திருவபிஷேகத் தையுடையனும்
எதிர் இல்— ஒப்பற்ற
பெருமை— பெருமையையுடைய
இராமன் ‡ — சக்ரவர்த்தி திருமகன்
இருக்கும் இடம்— எழுந்தருளி யிருக்கு மிடந்தை
நாடுதிர் எல்— தேடுகிறிகோளாகில் (சொல்லுகிறேன்;)
அதிரும்— ஒலியாநின்றுள்ள
கழல்— வீரக்கழலையுடையனும்
பொரு— போர்செய்யப் பதைக்கிற
தோள்— தோள்களையுடையனுமான

‡ ஐ - சாரியை.

இணியன்— ஹிரண்யாலை ரனுடைய
ஆகம்— மார்வை
அரியாய்— நரஸிம்ஹரூபியாய்
பிளந்து— இருபிளவாகப் பிளந்து
உதிரம் அனைந்த— ரத்தத்தைபூசின்த
கையோடு— கையோடே
இருந்தானை— இருந்தவனை
உள்ள ஆ— உள்ளபடி
கண்டார் உளர்— கண்டவர்கள் உளர்.

வ்யா. முதற்பாட்டு. கதிரித்பாதி. ஸஹஸ்ரரச்மிகளான ஆயிரமாதித்யர்கள் சேர உதயகாலத்தாற்போலேயிருக்கும் தேஜஸ்ஸையுடைத்தாய் ஆதிராஜ்யஸூசகமான ஓஜஸ்ஸையுடைத்தான திருவபிஷேகத்தையுடையவன். இத்தால் - ராவணவதம்பண்ணி ஸ்ரீ விபீஷணற்குலங்கைக்கு ராஜாவாக அபிஷேகஞ்செய்து பிராட்டியும் தானுமான சேர்த்தியோடே திருவயோத்தியையிலே யெழுந்தருளித் திருவபிஷேகம் பண்ணியிருந்த படியைச் சொல்லுகிறது. எதிரில்பெருமையிராமனே. ரூபகுணங்களாலும் ஆத்மகுணங்களாலும் அதிமானுஷ சேஷ்டிதங்களாலும் ஒப்பில்லாத வைபவத்தையுடையனும், எல்லாருடையவெஞ்சுகளையும் ஸ்வவைலக்ஷண்யத்தாலே ரமிப்பிக்கும் ஸ்வபாவத்தையாலே "ராமன்" என்னும் நிருபர்மத்தை யுடையவனே. இருக்குமிடம் நடதேலே. எழுந்தருளியிருக்குமிடம் தேடுகிறிகளாகில்.

அதிருக்கழல்பொருதோளிரணியனகம்பிளந்தரியாய். ப்ரஹ்மலோக பர்யந்தமாக எல்லாரையும் தன்பிழாக்கி ஈரசரவிருந்தவனுகையாலே, த்ருடியாகின்றுள்ள வீரக்கழலையுடையனும், தனக்கு ஒரெதிரியில்லாமையாலே யுத்தகண்டூதி வர்த்தியாகின்றுள்ள தோள்களையுடையனுமிருந்துள்ள ஹிரண்யனுடைய வரபலபுஜபலங்களாலே பூண்கட்டியிருந்த மார்வை, தேவர்கள் கொடுத்த வரத்துக்கு விரோதம் வாராதபடியாக நரஸிம்ஹ ரூபத்தைக் கொண்டு இருபிளவாக்கி. உதிரமனைந்ததையோடிருந்தானே. பிரஹ்லாதாழ்வான் நில்லாதே உதிரத்தையளையும் "வெஞ்சினத்தரி" என்கிறபடியே மிகுந்த சீற்றத்தாலே அவனுடைய சரீரமெங்கும் * குருதிகுழம்பி யெழும்படி கூருகிராலே குடைந்து குடலைப்பிடுங்கி யெடுக்கையாலே, உதிரமனைந்த கையோடே சீற்றந்தோற்ற விருந்தவனே. உள்ளவாகண்டாருளர். ஸம்சயவிபர்யயரஹிதமாக உள்ளபடி கண்டாருளர். உள்ளவாகாண்கையாவது - அவதார ப்ரயுக்தமான ஆகாரங்களோயிட்டு வேறுபடக்காணுதே, "நரஸிம்ஹாவதாரமாய் ராவணவதம் பண்ணினவனும், நரஸிம்ஹாவதாரமாய் ஹிரண்யவதம் பண்ணினவனும் ஒருவனே" என்று வஸ்துவினுடைய படியறிந்துகாண்கை. முன்பு ஹிரண்யனெனவன்றுனையிலே பின்பு ராவணனுப்பிறந்தவன். ப்ரஹ்மாதிகள்பக்கல் ஹிரண்ய ராவணர்களிருவரும் கொண்டவரங்களுக்கு விரோதம் வாராதபடி நரஸிம்ஹ வேஷத்தாலேயிறே ரூபபேதம் கொள்ளவேண்டிற்று. அதாவது - "தேவாதிதேவர்களில் ஜாதியிலொன்றினும் படைக்கடவேனல்லேன்" என்று வரங்கொள்ளுகையாலே நரஸிம்ஹமாக வேண்டிற்று - அங்கு; "தேவர்கள் அஸுரர்கள் ராக்ஷஸர் முதலானு, மொருவராலும் படைக்கடவனல்லேன்", என்று வரங்கொள்ளுகையாலும், மநுஷ்யரை ஒன்றாக கணியாமல் போருகையாலும், மநுஷ்யனுமின்று கொல்லவேண்டிற்று - இங்கு; ஆகையால், கார்யாநுரூபமாகக்கொண்ட ரூபபேதமாத்ரமேயாய், ப்ரகாரி ஒன்றேயாதையாலே இந்த ஐக்யமறிந்துகாண்கையாயிற்று - உள்ளபடி காண்கையாவது. ... ...

அ. இரண்டாம்பாட்டு. நாந்தகமித்யாதி. கீழ்ப்பாட்டிலே ஈச்வரத்வம் தோற்றிற்றிலே; "ஈச்வரன்" என்றறுதியிட்டால் பின்னை ஸ்ரீபஞ்சாயுத தாத்வம் சொல்லலாமிறே: ராவண

வைத்தனவும்மேறே ஈச்வரத்வஸ்தான் உடைக்கமேவண்டுவதுஇத்யாதிகளைபோலேயன்றே, ராவணவதார்த்தம் வந்தப்ரதிபாதிதமாகையாலே. (க) "ஸ்வாபதேசேவம் ஸ்ரீராமாயணே" என்றது. பின்னையும். (உ) "ஸ்ருதிஸ்ம்ருதி மமைவாஜ்ஞா" என்னுமிவர் விஷயத்திலும் முன்பு சிலபதிகங்களில் புகராயறுதி தோற்றுவைத்தோமே.

ரு.—நாற்றத்தினுந்துழாய் நாரணனெம்மிறைக்கென்று
ஏற்றபெருமையினாமனை யிருக்குமிட மேதேரில்
327 கூற்றமுழிந்தனைய சீற்றத்தரக்கர்குலம்
கோற்றதிலங்கைகெடக்கடல்வண்ணன் கோவிலிதே.

பதவுரை.

நாற்றத்தினும்— நற்கந்தமென்னும்படியான
துழாய்— துளசியையும்
நாரணன்— ஸ்ரீமந்நாராயணனுக்கு
எம்மிறைக்கு— எம்பெருமானுக்கு
என்று— என்றுசொல்லி
ஏற்ற— தகுதியான
பெருமை— பெருமையையுடைய
இராமன் இருக்குமிடம்— ஸ்ரீராமபிரான் எழுந்தருளியிருக்கும் இடமான
காந்தள்— செங்காந்தள்பூவையும்
வ்யா. நாற்றத்தினும். திருக்கைகளில் பிரியாதேயிருந்து எதிரிகளை அழச்செய்யும் திருக்குற்றுடைவாள். சார்ங்கு. வைத்தகாலிலேயிருந்து தன்னோக்கியாலே எதிரிகளை முழுக்காயாக அவியப்பண்ணும் ஸ்ரீபாஞ்சஜந்யம். தண்டு. கைவிடாமலிருந்து எதிரிகளை கொரியடிக்கும் ஸ்ரீகதை. நாணொலிச்சார்ங்கம். ஸ்யாகோஷலஜிதமாய் எதிரிகள் மேலே சரவர்ஷத்தை வர்ஷிக்கும் ஸ்ரீசார்ங்கம். திருச்சக்கரம். சகருதமிடம்பொருது கையிலிருக்கும் திருவாழி. ஏந்துபெருமையிராமனை. இவற்றை யழகுக்குடலாகவும் விரோதிநிரஸநத்துக் குடலாகவும் தரித்துக்கொண்டிருக்கும் பெருமையையுடையனாய், இலைமிகையோம்படி தன்வடிவழகாலே யெல்லாரையும் ரமிப்பிக்கவல்லவனை. இருக்குமிடம் நாடுதேரில். இந்த சௌர்யாதிகளும் ஸௌந்தர்யாதிகளும் அவனிருக்கு மிடத்தேசென்று காணவேணுமென்று, இருக்குமிடம் தேடுகிறிகோளாகில். காந்தளித்யாதி. செங்காந்தள் முகிழிதழ் போலேயிருக்கிற திருவிற்கையையுடைய பிராட்டிக்காக. கடுஞ்சிலைசென்றிருக்க. விச்வாமித்ரமஹர்ஷி கொடுசெல்லச் சென்று, ரௌத்ரமாய் ஒருவரால் எடுக்கவும் வளைக்கவும் அரிது என்றிடந்த வலியவில்லை முறிக்க. கடுமை - திண்மை. வேந்தரித்யாதி. ராஜதர்மத்தோடே தத்த்வஜ்ஞாநத்தையும் முடையவனுகையாலே ராஜாக்களுக் கெல்லாம்தலைவனான ஸ்ரீஜநகாஜ்ஞையுடைய யாகத்திலே கண்டாருளர்.

இங்கு, "இராமனைநாடுதிரேல் - வேள்வியில் கண்டாருளர்" என்கிறதில் வேறு பாடுதோன்றுதாற் போலேயிறே - "இராமனைநாடுதிரேல் - உதிரமளந்தகையோடிருந்தனை - கண்டாருளர்" என்கிறதும். ... ... உ.

(க) "பவாந்ஹ்யாயதநேதேவஃ ஸ்ரீமாந்சக்ராயுதோவிபுஃ." (உ) "ஆத்மாநம் மாநுஷம்மந்யே."

முகிழ்— முகிழ்த்துப்போன்ற
சிலை— விற்களையுடைய
சிலைக்காலி— பிராட்டிக்காக
வேந்தர் தலைவன்— ராஜாக்களுக்கெல்லாம் தலைவனான
சனகராஜன் தன்— ஸ்ரீஜநகராஜனுடைய
வேள்வியில்— யாகத்திலே
செல்ல— எழுந்தருளி
கடுஞ்சிலை— வலியவில்லை
இறுக்க— முறிக்க
கண்டார் உளர்— கண்டவர்கள் உளர்.

மூ.—கொலையானை கொம்புபறித்துக் கூடலர்சேனைபொருதழியச்
சிலையான்மராமர மெய்ததேவனைச் சிக்கனாடுதிரேல்
330 தலையாற்குரக்கினந் தாங்கிச்சென்று தடவரைகொண்டடைப்ப
அலையார்கடற்கரை வீற்றிருந்தானை யங்குத்தைக்கண்டாருளர். ங.

பதவுரை.

கொலை— ஆளைக்கண்டால் கொல்லுமதான
யானை— குவலயாபீடத்தின்
கொம்பு— கொம்பை
பறித்து— பறித்தவனுய்
கூடலர்— ஜநஸ்தாந வாஸிகளான ராக்ஷஸர்களுடைய
சேனை— ஸேனையானது
அழிய— அழியும்படி
பொருது— போர் செய்தவனுய்
சிலையால்— வில்லாலே
மராமரம்— மராமரங்களை
எய்த— மறுபாடுருவ எய்தவனுய்
தேவனை— தேவனானவனை
சிக்கன— தெவ்வளிதாக இருந்து
நாடுதிரேல்—;
குரங்கு இனம்— வாநரஸேனையானது
தலையால் தாங்கி — சிரஸாவஹித்துக்
கொண்டு
சென்று— போய் [கொண்டு
தடவரைகொண்டு— பெரியமலைகளைக்
அடைப்ப— அணையாக அடைக்க
அலை ஆர்— அலை எறிகிற
கடல் கரை— கடற்கரையிலே
வீற்றிருந்தானை— எழுந்தருளியிருந்தவனை
அங்குத்தை— அந்தஸ்தலத்திலே
கண்டாருளர்.

வ்யா. மூன்றும்பாட்டு. கொலையானை கொம்புபறித்து. "கவளக்கடர்க்களிறு" என்கிறபடியே தர்த்தர்வ்யங்களைப் பருகுவித்துப் பிச்சேற்றி மதஜ்வலமொழுகும்படி நிறுத்து கையாலே, ஆனைக்காணில் கொல்லுமதான குவலயாபீடமாகிற ஆனையினுடைய கொம்புகளை அநாயாஸேந பறித்து. கூடலர்சேனைபொருதழிய. மஹர்ஷிகளை நலிகையாலே சத்ருக்களான ஜநஸ்தாநவாஸிகளான ராக்ஷஸருடைய ஸைந்யமானது விசேஷம் சொல்லவும் ஒருவரில்லாதபடி அழியும்படியாகப் பொருது. சிலையால் மராமரமெய்ததேவனை. (க) "ஸ-ஸ்ரீவஜ்ர ஹிதஜ்ராஹீ ஹ்ரீ தயம்வீபெ ஜுண்ராவ்வெ" என்கிறபடியே மஹர்ராஜருடைய அதிசங்கையைத் தீர்க்கைக்காக வில்லாலே மராமரங்களை மறுபாடுருவவெய்து, அவரதிசங்கையைத் தீர்த்த ஹர்ஷத்தாலே திருமேனியிற்பிறந்த புகரையுடையவனை. சிக்கன நாடுதிரேல். "அதொரு வ்யக்தி, இதொரு வ்யக்தி" என்று பிரித்து ப்ரதிபத்திபண்ணுதே, தர்மியொன்று என்றே அத்யவஸித்து அவனிருந்தவிடம் தேடுகிறிகோளாகில்.

தலையிற்யாதி. ஸ்ரீவாநரவீரர்களுடைய திரள்களானவை "பெருமாள திருவடிகள் படப்புகுகிறதன்றே" என்னும் கௌரவபுத்தியாலே சிரஸாவஹித்துக்கொண்டு சென்று, பெரியமலைகளைக் கொண்டுகடலை யூடறுத்து அணையாகவடைக்க. அலையிற்யாதி. அலைமிக்கிருந்துள்ள கடற்கரையிலே அவ்வலைகள் தெறிக்கும்படி ஆஸந்நமாக அவர்கள் செய்கிற அடிமையைப்பார்த்து உகந்துகொண்டு அவர்களை அடிமைகொள்ளுகையால் வந்த வ்யாவ்ருத்தி தோற்ற எழுந்தருளியிருந்தவனை அந்தஸ்தலத்திலே கண்டவர்களுளர். ... ... ங.

(க) "ஸ-ஸ்ரீவச்சங்கிதச்சாஸீந் ஸ்ரீயம்வீர்யேணாகலே"

மூ.—தோயம்பரந்தநடுவே குழலிற்றோல்லைவடிவுகொண்ட
மாயக்குழவியதனை யாடுகின்றம்மின் கண்டீரேக்கேன்
ஆயர்மடமகள் பின்னைக்காகி யடல்விடையேழினையும்
வீயப்பொருதுவியர்த்துநின்றானை மெய்ம்மையேகண்டாருளர். 3

பதவுரை.

பரந்த— பரவின்
தோயம்— ஜலத்தினுடைய
நடுவு— மத்யத்திலே
சூழலின்— உபாயத்தாலே
தொல்லை— பழையதான
வடிவு— வடிவை
கொண்ட— சுருக்கிக்கொண்ட
மாயம்— ஆச்சர்யத்தையுடைய
குழவி அதனை— அந்தக்குழவியை
நாடீ— தேடி
உறில்— ஒருப்படுவீர்களானால்
வம்மின்— வாருங்கோள்;
சுவடு— ஓரடையாளம் [நிறன்;
உரைக்கேன் — உங்களுக்குச் சொல்லு

ஆயர்— கோபரான ஸ்ரீகுப்பருடைய
மகள்— பெண்பிள்ளையாய்
மடம்— மடப்பத்தையுடையளான
பின்னைக்காகி— நற்பின்னைப் பிராட்டிக்காக
அடல்— போர்செய்ய எதிர்த்துவாரா நின்
றுள்ள
விடை ஏழினையும்— ரிஷபங்களேழையும்
வீய— முடியும்படியாக
பொருது— போர்செய்து
வியர்த்து நின்றானை— அந்த வருத்தத்தாலே
குறுவெயர்ப்பரும்பின வடிவும்
தானுமாய் நின்றவனை
மெய்ம்மையே— உண்மையாகவே
கண்டார் உளர்.

வ்யா. நான்காம்பாட்டு. தோயம்பரந்த நடுவுசூழலில். நடுவுசூழலில் தோயம்பரந்த போது. அதாவது- சுற்றும் ஸமுத்ரமாய், அதுக்குநடுவே வர்த்துலாகாரமாயிருக்கிற பூமி யெங்கும் ஜலத்தாலே வ்யாப்தமானகாலத்திலே யென்கை. "பரந்த" என்கிறதுக்குமே லே, "போது" என்கிற வித்தனையும் அத்யாஹாரம். அன்றிக்கே, தோயம்பரந்தநடுவு- ஜலம்பரந்தநடுவே; அதாவது- பரந்த ஜலத்தினுடைய மத்யத்திலே யென்றபடி. சூழலின் தோல்லைவடிவுகொண்ட. ரக்ஷ்யவர்க்கம் ப்ரளயத்திலே யழியாதபடி ரக்ஷிக்கைக்கீடான விர காலே, பழையதான் அப்ராக்ருத விக்ரஹத்தை சுருக்கிக்கொண்ட மேல், "குழவி" என் கையாலே வடிவைச்சுருக்கிக்கொண்ட என்று நியமித்துச் சொல்லவேணும். மாயமித்யாதி. சிறுவடிவைக்கொண்டு பெரியலோகங்களை வயிற்றிலேவைத்து ஒருபவனை ஜலந்தன்னிலே கண்வளர்ந்தருளின அகடிதகடநா ஸாமர்த்யத்தால்வந்த ஆச்சர்யத்தையுடைய அந்தக்குழ வியை. (க) "ஸ்ரீமத்பரமபதநாதஸ்ய-ஸ்யிதோவாஸி தந்வாதந்வாஜலமத்யேஹ்யவஸ்தாஸ வஸ்ய : வைஸ்ரீதிரோஜலத ஸாதித்ரகதி-ர்தவ்யாம் சவ்யாஜதஸ்ப்ரதயலேகமிஹாவதீர்ணஃ" என்றருளிற்றே- ஆழ்வான். "குழவி" என்கிறதுக்கீடாக "அதனை" என்கிறது அவனை யென்றபடி. நாடுறில். தேடுகையிலே அத்யவஸிக்கில். வம்மின் சுவடுரைக்கேன். வாருங் கோள் உங்களுக்கு ஓரடையாளம் சொல்லுகிறேன். சுவடாவது- அகடிதகடநாஸாமர்த்ய ஸூ சகமானதொரு வ்யாபாரம். அதாவது- அஸுராவிஷ்டமான ரிஷபங்களேழையும் ஒருக்காலே ஊட்டியாக நெரித்துப்போகட்டநிறே.

(க) "முக்தச்சிசுர்வடதலேசயிதோஸிதந்வாதந்வா ஜகந்திபிப்ருஷஸவிகாஸமேவ- ஜிமிமாந்தவதசக்திமதர்கிதவ்யாம் அவ்யாஜதஃப்ரதயலேகமிஹாவதீர்ணஃ."

ஆயர்மடமகள் பின்னைக்காகி. கோபான ஸ்ரீகும்பருடைய பெண்பிள்ளையாய், ஆற மகுணமான மடப்பத்தையுடையளான நற்பின்னைப்பிராட்டியை லபிக்கைக்காக. அடல்விடை யேழினையும். அஸுராவிஷ்டமாய் யுத்தோந்முகமாய் நின்ற ரிஷபங்களேழையும். வீயப்போ ருது வியர்த்து நின்றனை. முடியும்படியாகப்பொருது, அந்த ஆயாஸத்தாலே குறுவியர்ப்பரும்பின வடிவும் தானுமாய் நின்றவனை. மெய்ம்மையேகண்டாருளர். உண்மையாகவே அவ்விடத்திலே கண்டவர்களுண்டு. இத்தால்- வடதளசயநாபுதாநத்துக்கும் கர்ஷ்ணவதாரத்துக்கு முண்டான தர்ம்யைக்யம் சொல்லப்பட்ட தாய்த்து. "வையமேழுங்கண்டாள் பிள்ளை வாயுள்" என்றும், "ஆனிலைவளர்ந்த சிறுக்கனவனிவன்" என்றும் இவ்வைக்யந்தான் மேலும் பலவிடங்களிலும் சொல்லப்பட்டதிறே. ... ... சு.

மூ.—நீரேறுசெஞ்சடை நீலகண்டனு நான்முகனுமுறையால்
சீரேறுவாசகஞ்செய்யநின்ற திருமாலைநாடதிரேல்
வாரேறுகொங்கையுருப்பிணியை வலியப்பிடித்துக்கொண்டு
தேரேற்றிச்சேனைநடவே போர்செய்யச் சிக்கனக்கண்டாருளர். டு.

பதவுரை.

நீர்— எம்பெருமான் ஸ்ரீபாதநீர்த்தத்தை
ஏறு— தரித்த
செஞ் சடை— சிவந்த ஜடையையுடைய
நீலகண்டனும்— கறுத்த மிடற்றையுடைய
ருத்ரனும்
நால் முகனும்— சதுர்முக ப்ரஹ்மாவும்
முறையால்— சேஷசேஷிபாவக்ரமத்தாலே
சீர் ஏறு வாசகம் செய்ய நின்ற } சிறந்த சொற்களைக்கொண்டு ஸ்தோத்ரம் - பண்ணும்படி நின்ற
திரு மாலை— ஸ்ரீய:பதியை
நாடுதிர் எல்—;
வார் ஏறு— கச்சணிந்த
கொங்கை— திருமுலைத்தடத்தையுடைய
உருப்பிணியை— ருக்மிணிப் பிராட்டியை
வலிய— பலவந்தமாக
பிடித்துக்கொண்டு— பிடித்துக்கொண்டு
தேர் ஏற்றி— தேரின்மேலேற்றி
சேனை நடுவு— ருக்மனுல் எடுத்துவிடப்பட்ட சேனைக்கு நடுவேநின்று
போர் செய்ய— யுத்தம்பண்ண
சிக்கன— தர்டமாக
கண்டார் உளர்.

வ்யா. ஐந்தாம்பாட்டு. நீரேறுசெஞ்சடை நீலகண்டனும். (க) "தடம்பூவுதிகம் பூஷாதயாஸ்ரிரஸா ஹரஸ்ரீவ்யலநயம் ஜடாபிர்யுதம் சமுத்ஸ்ருஜ்ய தயவாஸ்ரஸ" என்கிறபடியே- திருவுலகளந்தருளுகிறபோது, ப்ரஹ்மா திருவடிவிளக்கினை ஜலம்விழுகிறதைக்கண்டு, பாவநார்த்தமாக அத்தை சிரஸ்ஸாலே தரிக்கையாலே அந்த ஜலத்தோடே கூடியிருப்பதாய், சிரகாலம் தபஸ்பாணுப்பண்ணுதலற்றிருக்கையாலே சிவந்திருக்கிற ஜடையையுடையனுய்; (உ) "நாராயணஜ்ஞபாதேந நீலகண்டத்வமர்ப்புயாத்" என்கிறபடியே ஸமுத்ரமதந ஸமயத்தில் முக்குறக்கிளம்பின தீவ்ரமான விஷத்தை "நீ இத்தை க்ஷி" என்று ஸர்வேச்வரன் நியமிக்க க்ரஹிக்கையாலும், அதுதான் ஹ்ருதயத்திலே கருடத்யாநமும்

(க) "தடம்பூ பதிதம் த்ருஷ்ட்வா ததார சிரஸாஹர:- பாவநார்த்தம் ஜடாமத்யே போக்போஸ்மீ த்யவதார்ணாத்." (உ) "நாராயணஜ்ஞபாதேந நீலகண்டத்வமர்ப்புயாத்."

சிரஸ்ஸிலே சந்த்ரகலையுமாகையாலே கண்டத்தளவிலே நின்றுவிடுகையாலும் கரந்திருந்த ள்ளகண்டத்தை யுடையனான ருத்ரனும். நான்முகனும். ஸ்தோத்ரம்பண்ணுகைக்கீடான பல முகத்தையுடைய ப்ரஹ்மாவும். முறையால் சீரேறுவாசகம் செய்யநின்ற. ப்ரஹ்மபாலைதலை யெடுத்து, தான் சேஷியும் தாங்கள் சேஷபூதருமான முறையால், தன்னுடைய குணங்களால் ப்ரசுரமான வசநங்களைக்கொண்டு ஸ்தோத்ரம்பண்ணும்படி நின்ற. திருமாலை நாடுதிரேல். தத்ததபிஷ்டப்ரதனான ஸ்ரீயஃபதியை, அவனும் அவளுமான சேர்த்தியோடேகாண வேணும் என்று தேடுகிறிகோளாகில்.

வாரேறுகோங்கை யுருப்பிணியை. "க்ருஷ்ணனுக்கு போக்யமானவிலை பிறர்கள் படவொண்ணாது" என்று, "செங்கச்சுக்கொண்டு கண்ணைடையார்த்து" என்கிறபடியே கச்சாலே மறைத்துக்கொண்டிருக்கிற திருமுலைத்தடங்களையுடைய ருக்மிணிப்பிராட்டியை. வலியப்பிடித்துக்கொண்டு தேரேற்றி. பந்துக்களையுமுடன்படுத்தி * கண்ணலமும் கோடித்துக் கைப்பிடிப்பதாகத் திண்ணார்ந்திருந்த சிசுபாலன் லஜ்ஜாவிஷ்டனும் அண்ணாந்திருக்கும்படியாக ஆருடிவருகிற ஸமயத்திலே சென்று, அவளுக்கும் தனக்குமுண்டான மனப்பொருத்தமே ஹேதுவாக, பந்துக்களுடன்படவன்றிக்கே பலத்திலே பிடித்துக்கொண்டு தேரிலேயேற்றி. சேனாநிவஹபோர்செய்ய. ருக்மிணிப்பிராட்டி தமையனான ருக்மன் இந்த பரிபவம் பொறுமையாலே அநேகாயுதாக்களும் தானும் பஹுஸைன்யமோடேவந்து போகாதபடி வழி கட்டிச்சூழ்ந்துகொள்ள, அந்த ஸைந்யத்துக்குநடுவே நின்று அவர்களோடே யுத்தம்பண்ண. சிக்கனக்கண்டாருளர். அந்த மணக்கோலத்தையும் வீரக்கோலத்தையும் தர்டமாகக் கண்டவர்களுளர். ... ... இ.

மூ.—பொல்லாவடிவுடைப்பேய்ச்சி துஞ்சப்புணர்முலைவாய்மடுக்க
வல்லானை மாமணிவண்ணனை மருவுமிட நாடுதிரேல்
டல்லாயிரம் பெருந்தேவிமாரோடு பளவமெறிதுவரை
எல்லாருஞ்சூழச் சிங்காசனத்தே யிருந்தானைக் கண்டாருளர். கூ.

பதவுரை.

பொல்லா— கோரரூபமான
வடிவு உடை— வடிவையுடைய
பேய்ச்சி— பூதனையானவள்
துஞ்ச— மாளும்படியாக
புணர்— தன்னில் தான் சேர்ந்திருந்துள்ள
முலை— முலையிலே
வாய் மடுக்க வல்லானை— வாயைவைத்து உண்ணவல்லவனும்
மா மணி— நீலமணிபோன்ற
வண்ணன்— திருநிறத்தையுடையவன்
மருவும் இடம்— பொருந்தி வர்த்திக்குமிடத்தை
நாடுதிர் ஏல்— தேடுகிறி கோளாகில்
பல் ஆயிரம் பெரு தேவிமாரோடு } பதினாயிரம் தேவிமாரோடே கூட
பளவம்— ரமுத்ரத்திலலைகள்
எறி— வீசாநின்றுள்ள
துவரை— த்வாரகையிலே
எல்லாரும்— தேவிமாரெல்லாரும்
சூழ— சுற்றுஞ் சூழ்ந்துநிற்க
சிங்காசனத்து— ஸிம்மாஸநத்திலே
இருந்தானை— எழுந்தருளி யிருந்தவனை
கண்டார் உளர்.

வ்யா. ஊரும்பாட்டு. பொல்லாவடிவுடைப் பேய்ச்சிதுஞ்ச. வாய்ப்புவைத்து நஞ்சம் முலையும் எலும்பும் தோன்றும்படியிருக்கையாலே, பொல்லாதான வடிவையுடைய பேய்ச்சியான

வள் முடியும்படியாக. புணர்முலைவாய் மடுக்கவல்லானே. அந்த வடிவைமறைத்து "பெற்ற தாய்போல்வந்த பேய்ச்சி" என்கிறபடியே யசோதைப்பிராட்டியோடொத்த வடிவைக்கொண்டு வருகையாலே தன்னில்தான் சேர்ந்திருந்துள்ள முலையிலே, அவள் முலைகொடாவிடில் தரியாதாளாய்க்கொண்டு "முலைப்பாலுண்" என்று கொடுத்தாற்போலே, தானும் முலையுண்ணுவிடில் தரியாதாளுய்க்கொண்டு பெரிய அபிநிவேசத்தோடே வாயைமடித்து உண்ண வல்லவனே. "உள்ளத்தினுள்ளே அவனையுறநோக்கி" என்கிறபடியே வருகிறபோதே அவள் கர்மமெல்லாம் திருவுள்ளத்திலே வன்றதர்சித்திருக்கச்செய்தே, அவள் தாயாகவே யிருந்து முலைகொடுத்தாற்போலே, தானும் பிள்ளையாகவேயிருந்து முலையுண்டு அவளை முக்தி ஸாம்ராஜ்யத்தைச் சொல்லுகிறது- வல்லானேயென்று. மாமணிவண்ணனே. "விடப்பால் முதலாவமுதுசெய்திட்ட" என்கிறபடியே அவளுடைய விஷப்பாலை அம்ருதமாகவமுது செய்து அவளை முடித்து, ஜகத்துக்கு சேஷியானதன்னை நோக்கிக்கொடுக்கையாலே, நீல ரத்நம்போலே உஜ்ஜ்வலமான திருமேனியையுடையனாயிருந்தவனே. மருவுமிடம் நாதிரேல். திருவுள்ளம் பொருந்தி வர்த்திக்கிறஸ்தலம் தேடுகிறிகோளாகில்.

பல்லாயிரம் பெருந்தேவிமாரோடே. நாகவதாநந்தரம் கொண்டுவந்து பாணிக்ரஹணம் பண்ணப்பட்டவர்களாய், ஒவ்வொருத்தரே அத்யந்த விலக்ஷணைகளாயிருக்கும் பதினாயிரம் தேவிமாரோடே. ஆயிரமிரண்டாயிரமன்றிக்கே, பதினாயிரமுண்டானகையாலே- "பல்லாயிரம்" என்கிறது. பாலமெற்துவரை. சாமஸ்ரமாம்படி ஸமுத்ரத்தின் திவலைகள் வீசாநிற்கும் ப்ரதேசத்வாரகையிலே. எல்லாருமித்யாதி. தேவிமாரெல்லாரும்சூழ விஷ்வக்ஸேநத்திலே ஸம்ஸாரதாரணையழுந்தருளியிருந்தவனே அவ்விருப்பிலே கண்டவர்களுளர். ... ... கூ

மு.—வெள்ளைவிளிசங்கு வெஞ்சுடர்திருச்சக்கர மேந்துகையன்
உள்ளவிடம் வினவிலுமக்கிறைவம்மின் சுவடுரைக்கேன்
வெள்ளைப்புரவிக் குரக்கு வெல்கொடித் தேர்மிசைமுன்புநின்று
கள்ளப்படைத்துணையாகிப் பாரதங்கைசெய்யக் கண்டாருளர். எ.

பதவுரை.

வெள்ளை— வெண்மைநிற முடைத்தாய்
விளி— "அநுபவ கைங்கர்யங்களில் ருசியுடையார் வாருங்கோள்" என்று தன்னை அழைக்கிறபடி
சங்கு— ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும்
வெம்— வெவ்விதான
சுடர்— ஜ்யோதிஸ்ஸையுடைய
திருச்சக்கரம்— திருவாழியாழ்வானையும்
ஏந்து— தரித்துக்கொண்டிருக்கிற
கையன்— திருக்கைகளை யுடையவன்
உள்ள இடம்— இருக்குமிடத்தை
வினவில்— கேட்கிறிகோளாகில்
உமக்கு— உங்களுக்கு
இறை சுவடு— சிறிது அடையாளம்
உரைக்கேன்— சொல்லுகிறேன்;
வம்மின்— வாருங்கோள்;
வெள்ளை— வெளுத்த
புரவி— குதிரை பூண்டிருப்பதாய்
குரங்கு— வாநரமான [தான
வெல் கொடி— வெற்றிக் கொடியையுடைத்
தேர் மிசை— (அர்ஜுநனுடைய) தேரின்மேலே
முன்பு நின்று— அவனுக்கு ஸாரதியாய் முன்னே நின்று
படை— யுத்தத்துக்கு
கள்ளம் துணை ஆகி— க்ருத்ரிமத்துணையாய்
பாரதம்— பாரதயுத்தத்தை
கைசெய்ய— கையுமணியும் வகுத்தூடத்த
கண்டார் உளர்.

வ்யா. ஏழாம்பாட்டு. வெள்ளிவிளிசங்கு. சியாமளமான திருமேனிக்கு மிகவும் மான வெண்மையையுடைத்தாய், அதுபலகைங்கர்யங்களில் ருசியுடையார் வாருங்கோள் என்று தன்த்வனியாலே அழையாநிற்கும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும். வேங்கடம் திருச்சின்னம் ஆச்ரிதவிரோதிகள் விஷயத்தில், லௌகிகாக்நி, நரகாக்நி, 'தண்ணீர்' என்னும்படி கோலி தான சுடரையுடைய திருவாழியையும். ஏந்துகையன். அழகுக்கும் வீரோதிநிரஸனத்துக்கு மூடலாக ஸர்வகாலமும் பூவேந்தினற்போலே தரித்துக்கொண்டிருக்கும் திருக்கைகளையுடையவன். உள்ளவிடம்வினவில். வர்த்திக்கிற ஸ்தலம் கேட்கிறிகோளாகில். உமக்கீதை வம்மின் சுவரைக்கேன். வாருங்கோள், உங்களுக்கு அவன் வர்த்திக்கிறவிடத்துக்கு அல்பமடையாளம் சொல்லுகிறேன்.

வெள்ளியித்யாதி. சரணகதனுய் தனக்கபிமதனான அர்ஜுநனுடைய, வெளுத்த புரவிபூண்டிருப்பதாய், வாநரமான வெற்றிக்கொடியையு முடைத்தாயிருக்கிற தேரின்மேலே அவனுக்கு ஸாரதியாய் முன்னேநின்று. கள்ளப்படைத்துணையாகி. க்ருத்ரிமப்படைத்துணை. அதாவது- படைத்துணையாகிறவிடத்தில் இரண்டுதலையு மறியும்படி செவ்வையிலன்றிக்கே, பகலியிரவாக்கியும், " ஆயுதமெடேன் " என்று ஆயுதமெடுத்தும், எதிரியுடைய உயிர்நிலையைக்காட்டிக்கொடுத்தும் செய்தவை. பாரதம்கைசெய்யக்கண்டாருளர். பார்த ஸமரத்தைக் கையுமணியும் வகுத்துநடத்த அத்தனையிலேகண்டவர்களுளர். ... ... எ.

மூ.—நாழிகைகூறிட்டுக் காத்துநின்ற வரசர்கடம்முகப்பே
நாழிகைபோகப் படைபொருதவன் றேவகிதன்சிறுவன்
ஆழிகொண்டன் றிசவிமறைப்பச் சயத்திரதன்றலையைப்
பாழிலுருளப் படைபொருதவன் பக்கமேகண்டாருளர். அ.

பதவுரை.

நாழிகை— நாழிகையை
கூறிட்டு— விபஜித்து
காத்து நின்ற— காத்துக்கொண்டு நின்ற
அரசர்கள் தம் முகப்பே } ராஜாக்களுக்குமுன்னே
நாழிகை— பகல் முப்பது நாழிகையும்
போக—போயிற்றென்று தோற்றும்படியாக
படை— திருவாழியாழ்வானைக்கொண்டு
பொருதவன்— பொருதவனுடைய
தேவகிதன்— தேவகிப்பிராட்டியினுடைய
சிறுவன்— பிள்ளையாய் [வன்று
அன்று—அவர்கள் காத்துக்கொண்டு நின்ற
ஆழிகொண்டு— திருவாழியைக்கொண்டு
இரவி— ஸூர்யனை
மறைப்ப— மறைக்க
சயத்திரதன்— ஜயத்ரதனுடைய
தலையை— தலையை
பாழில்— பாழி பள்ளத்திலே
உருள— உருளும்படி
படை— அம்பாலே
பொருதவன்— பொருத அர்ஜுநனுடைய
பக்கமே— அருகே
கண்டார் உளர்.

வ்யா. எட்டாம்பாட்டு. நாழிகையித்யாதி. " ஜயத்ரதனை அஸ்தமிப்பதற்கு முன்னே கொல்லக்கடவேன் " என்று அர்ஜுநன் ப்ரதிஜ்ஞைபண்ண, அதுக்கிடமறும்படி ஒரு புருஷப்ரமாணமன்றியே தீர்க்கனைவனை ஒருபுருஷப்ரமாணமாகக் குழிக்குள்ளே நிறுத்தி,

" நீங்கள் இன்னதனைநாழிகை காத்துக்கொள்ளுங்கோள், நாங்கள் இன்னதனைநாழிகைகாத்துக்கொள்ளுகிறோம் " என்று பகல்முப்பது நாழிகையும் இவனுக்கு ஒருகலிவு வாராதபடி காத்துக்கொண்டுநின்று அதிரத மஹாரதரான ராஜாக்கள் தங்கள்முன்னே. நாழிகைபோகப் பட்டபொருதவன் தேவகிதன்சிறுவன். பகல் நாழிகை முப்பதும் போய்த்தென்று தோற்றும்படிவர்கப்படைபொருதவனான தேவகிபுத்ரன், நாழிகைபோகப் படைபொருகையாவதுதிருவாழியைக்கொண்டு ஆதித்யனைமறைக்கை. அதுதான் முன்சொல்லப்படாநின்றதிறே. கீழ்ப்பாட்டில், " திருச்சக்கரமேந்துகையனுள்ளவிடம் வினவில் " என்றுற்போலே, இங்கும், " தேவகிதன்சிறுவன்-உள்ளவிடம்வினவில் " என்று கூட்டிக்கொள்வது. அடிக்கடி பூர்வோத்தரங்களுக்குச் சேரவேண்டுகையாலே.

ஆழிகொண்டன்றிரவிமறைப்ப. அப்படி அவர்கள் காத்துக்கொண்டு நின்றவன்று பகல்நாழிகை சென்றதாகத்தோற்றும்படி நினைவறிந்து காரியஞ்செய்யும் திருவாழியைக் கொண்டு ஆதித்யனை மறைக்க. சயத்ரதனித்யாதி. " ஆதித்யனஸ்தமித்தான் " என்று அவனைக் குழியினின்றும் அவர்கள்கிளப்பி நிறுத்தினவளவிலே, இருள்பரப்பின திருவாழியைப்போநிறுத்தி, ஜயத்ரதனுடைய தலையைப் பாழியிலேவிடந்தருளும்படி அம்பாலேபொருத அர்ஜுநனுடையவருகை கண்டாருளர். நிரவதிகதேஜோரூபமான திருவாழியாலே ஆதித்யனைமறைத்தால் லோகத்துக்கு மிகவும் வெளிச்செறிப்புண்டாமித்தனையன்றே, " ஆதித்யனஸ்தமித்தான் " என்னும்படி கண்களுக்கு இருண்டுதோற்றுவா னென்னென்னில்; இந்த ஆதித்யனுடைய தேஜஸ்ஸை கண்ணாலே முகக்கலாம்படி அளவுபட்டிருக்கையாலே தமஸ்ஸைப்போம்படியாயிருக்கும்; அங்ஙனன்றிக்கே, திருவாழியாழ்வானுடைய தேஜஸ்ஸை நேர்கொடுநேர் கண்கொண்டு பார்க்கவொண்ணாதபடி மிக்கிருக்கையாலே பளபளத்துக் கண்ணை யிருளப்பண்ணிற்று. இதுதான் " ஆழியாலங்கன்றழியை மறைத்தான் " என்கிறவிடத்திலே பூர்வர்களருளிச்செய்தார்களிறே. ... ... அ.

மூ.—மண்ணுமலையு மறிகடல்களு மற்றுமியாவுமெல்லாம்
திண்ணம் விழுங்கியுமிழ்ந்ததேவனைச் சிக்கனநாடுதிரேல்
எண்ணற்கரியதோ ரேனமாகி யிருநிலம்புக் கிடந்து
வண்ணக்கருங்குழன் மாதரோடு மணந்தானைக் கண்டாருளர். கூ.

பதவுரை.

மண்ணும்— பூமியும்
மலையும்— மலைகளும்
மறி— அலை யெறிகிற
கடல்களும்— ஸமுத்ரங்களும்
மற்றும்— மற்றுமுண்டான
யாவும்— எல்லாப்பொருள்களுமான
எல்லாம்— இவை எல்லாவற்றையும்
திண்ணம்— நிச்சயமாக
விழுங்கி— ப்ரளயகாலத்திலே விழுங்கி
உமிழ்ந்த— பிற்பாடு வெளிப்படுத்தின
தேவனை— தேவனை
சிக்கன— ஸுற்றத்துடனே
நாடுதிர் எல்-;
எண்ணற்கு அரியது— நினைக்க அரிதான
ஓர்— ஒப்பற்ற
ஏனம் ஆகி— மஹாவராஹமாய்
இரு நிலம்— பெரியபூமியை
புக்கு— ப்ரளயத்திலே முழுகி
இடந்து— அண்டபித்தியினின்றும்
ஒட்டுவிடுவித்தெடுத்து
வண்ணம்— அழகியதாய்
கரு— கறுத்திருந்துள்ள

குழல்—பே கூந்தலிற்புடையே
மாதரோடு—ஸ்ரீபூமிப் பிராட்டியோடே | மணந்தானை—திருமணம் புணர்ந்தவனை
கண்டார் உளர்.

வ்யா. ஒன்புதாம்பாட்டு. மண்ணுநித்பாதி. ஸ்ர்வாதாரையான பூமியும், அ
தனக்காதாரமான பர்வதங்களும், பூமிக்குராக்ஷகமாகச் சூழ்ந்து திரைமறிகடலுழுதுண்ணும்
மற்றுமுண்டான ஸ்ர்வபதார்த்தங்களுமான இவையெல்லாவற்றையும். திண்ணம்விழுங்கி
ஆழிழ்ந்ததேவன். ஐந்த்ரஜாலிகரைப் போலன்றிக்கே, நிச்சயமாக ப்ரளயத்திலழியாதபடி
திருவயிற்றிலுள்ளேவைத்து, ப்ரளயங்கழிந்தவாறே வெளிநாடுகாண உமிழ்ந்து, இப்படி,
ரக்ஷ்யவர்க்கத்திலுடைய ரக்ஷணத்தைப் பன்னுகையால் வந்தபுகர், வடிவிலே தோற்றும்
படியிருந்தவன். சிக்கனநாடுதிரேல். மேலெழுந்தோடி "கண்டிலோம்" என்று மீளுகை
யன்றிக்கே, "கண்டேவிடவேணும்" என்னும் ஊற்றத்தோடே தேடுகிறிகோளாகில்.

எண்ணற்கரியதோரேனமாகி. அழகாலும் வடிவிற்பெருமையாலும் மநஸ்ஸாலே
பரிச்சேதிக்கவொண்ணாதபடியிருக்கையாலே, அதிஸ்நேஹமான மஹாவ்யாஹமாய். இரு
நிலம்புக்கிடந்து. மஹாப்ரளயத்திலேமுழுகி அண்டபித்தியினின்றும் ஒட்டுவிடு
வித்தெடுத்து. வண்ணமித்யாதி. தன்னுடைய அபிமானாந்தர்ப்பூதையான பூமியை,
இப்படி ப்ரளயத்தினின்று மெடுத்தமையைக்கண்ட ஹர்ஷத்தாலே, அதுக்கு அபிமானியான
ஸ்ரீபூமிப்பிராட்டி வந்தணைக்க, அழகியதாய்க் கறுத்திருந்துள்ள திருக்குழலி
யுடைய வழகோடே கலந்தவனைக் கண்டாருளர். ... ... கூ.

அ—நிகமத்தில், இத்திருமொழிகற்றார்க்கு பலம்சொல்லித் தலைக்கட்டுகிறார்.

மு.—கரியமுகில்புரைமேனி மாயனைக்கண்ட சுவடைத்துப்
புரிமுகஞ்செய்து செங்கேலோங்கிவிளை கழனிப்புதுவைத்
திருவிற்பொலிமறைவாணன் பட்டர்பிரான் சொன்னமாலைபத்தும்
பரமனடிப் பத்தருள்ளார் பரமனடி சேர்வர்களே. ய.

பதவுரை.

கரிய முகில்—காளமேகத்தை
புரை—ஒத்த
மேனி—வடிவையுடையனும்
மாயனை—ஆச்சர்ய குணசேஷ்டிதயுக்தனை
கண்ட—பார்த்த
சுவடு—அடையாளங்களை
உரைத்து—சொல்லி
செங்கெல்—செங்கெற்பயிர்களானவை
ஓங்கி—உயர்ந்து [தலைவணங்கி
புரி முகம் செய்து—குதிரைமுகம்போலே
விளை—விளையா நின்றுள்ள
கழனி—கழனிகளையுடைய [வாய்
புதுவை—ஸ்ரீவில்லிபுத்தூர்க்குத் தலை
திருவின்—ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயால்
பொலி—விளங்காநிற்பாராய் [கான
மறை வாணன்—வேதத்துக்கு நிர்வாஹ
பட்டர்பிரான்—பெரியாழ்வார்
சொன்ன—அருளிச்செய்த
மாலை—சொல்மாலையான
பத்தும்—இப்பத்தையும்
பரவும்—பேசும்படியான
மனம் உடை—மநஸ்ஸையுடைய
பத்தர் உள்ளார்—பக்தராயுள்ளவர்கள்
பரமன்—பரமபுருஷனுடைய
அடி—திருவடிகளை
சேர்வர்கள்—கிட்டப்பெறுவர்கள்.

வ்யா. பத்தாம்பாட்டு. கரியமுகில்புரைமேனிமாயனை, காளமேகம்போன்ற வடிவையுடையனும், ஆச்சர்யமான குணசேஷ்டிதங்களையுடையனுமவனை, கண்டசுவடுரைத்து. "காணவேணும்" என்று தேடுகிறவர்களுக்கு, கண்டவடையாளங்களைச்சொல்லி. தேடுகிறவர்களுடைய அவஸ்தையையும், கண்டவர்களுடைய அவஸ்தையையு மடைந்துபேசினார் காமோதரர். புரவிபித்யாதி. செந்நெற்களானவை யுயரவளர்ந்து கதிர்க்கூத்தாலே குனிரை முகம்போலே தலைவணங்கி விளைவாநின்றுள்ள கழனிகளையுடைய ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகராய், "பரமனைப்பயிலும் திருவுடையார்" என்கிறபடியே பகவதாஸ்ரயணயோக்யையான ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயால் மிக்கிருப்பாராய், * வேதப்பயன் கொள்ளவல்லவராகையாலே வேதத்துக்கு நிர்வாஹகரான பெரியாழ்வாரருளிச்செய்த மாலையானவிப்பத்தையும். பவுமித்யாதி. ப்ரீதிபரவசராய்க்கொண்டு அடைவுகெடப்பேசும் மநஸ்ஸையுடைய பக்தராயுள்ளவர்கள். பரமனடிசேர்வர்களே. காண்கைக்குத்தேட வேண்டாதே நித்யாநுபவம் பண்ணலாம்படி, ஸர்வஸ்மாத்பரனானவனுடைய திருவடிகளைச் சேரப்பெறுவர்கள். ... ஓ.

பெரியஜீயர் திருவடிகளே சரணம்.

அடிவரவு.—கதிர் ஈந்தகம் கோலை தோயம் நீரேறு பொல்லா
வெள்ளை நாழிகை மண் கரிய வலம்பா.

———(*)———

ஆதிருமொழி கூடுக்கு, பாட்டு-கூடுநி.

———(o)———

நாலாம்பத்து - இரண்டாந்திருமொழி - அலம்பாவெருட்டா, ப்ரவேசம்.

அ. க்ருஷ்ணாவதாரகுண சேஷ்டிதங்களை நேரே அநுபவித்துக்கொண்டுபோந்து, அத்நுடனே ராமாவதாரகுண சேஷ்டிதங்களையும் அநுபவித்தவர்ந்தர்ம், "தந்தாவதாரவிசிஷ்டனான ஸர்வேச்வரனைக் கண்ணாலேகண்டு அநுபவிக்கவேணும்" என்னும் அபேக்ஷை பிறந்து தமக்கு ஒருபுடை நடந்து செல்லுகிறபடியையும், தமக்கு மாநஸாநுபவ வைசத்யத்தாலே அவன்றன்னைக் கண்ணாலே கண்டாற்போலே ஒருபுடை ப்ரகாசிக்கிறபடியையும்நுஸந்தித்து, அவையிரண்டையும் "அவனைக்காணவேணும்" என்று தேடுகிறார் சிலரும், "அப்படிதேடுகிறிகோளாகில் கண்டார் சிலருளர்" என்று சொல்லுகிறார் சிலருமாக, தம்மை இரண்டுவகையாக்கிக்கொண்டு பேசினராய் நின்றார்-கீழ்; "அவதாரகுணங்களைத்தன்னைக் கண்ணாலேகண்டநுபவிக்கவேணும்" என்னும் ஆசைபிறந்தாலும் பெருக்காறுபோலே அவ்வவதாரகாலத்திலுள்ளார்க்கு அநுபாவ்யமாய், பிற்காலத்திலுள்ளார்க்குக் கிடையாததாயிருக்கிறபடியையும், "பின்னுந்நிர்வஹணங்குஞ்சாதி" என்கிறபடியே அவதாரத்தில் பிற்பாட்டான வர்களுக்கும் இழக்கவேண்டாதபடி ஸர்வேச்வரன் அர்ச்சாவதாரமாய்க்கொண்டு உகந்தருளின நிலங்களிலே அந்த அவதாரகுண சேஷ்டிதங்களெல்லாம் ப்ரகாசிக்கும்படியாக எழுந்தருளி நிற்கிறபடியையு மநுஸந்தித்து, உகந்தருளின நிலங்களிலே அவனை யநுபவிக்கக்கோலி, அவையெல்லாவற்றிலும், "தென்னவுயர் பொருப்பும் தெய்வவட்மலையு மென்னுமிவையே முலையாவடிவமைந்த" என்கிறபடியே- ஸ்ரீபூமிப்பிராட்டிக்குத் திருமூலத்தட்டுகளாம்படியிருக்கையாலே அவனுக்கு அத்யந்தாபிமதஸ்தலங்களாயிருக்கிற திருமலைகளிர

ண்டிலும் வைத்துக்கொண்டு, தெற்குத்திருமலையிலே நிற்கிறதிலையிலே அதுவிலையை முன்னே இழிந்து, ராமக்ருஷ்ணத்வதார சேஷ்டிதங்களெல்லாம் அங்கிலையிலே பாலிக்கிற படியை அநுபவியாநிற்கச்செய்தே, தத்விஷயத்திலும் தத்தீயவிஷயமே ப்ராப்யத்துக்குள் மாவதியாக அறுதியிட்டிருக்குமவராகையாலே, * களரொளியிளமையில் குழாமுயிர்த்தாற்போலே, " அங்கேயெழுந்தருளிநிற்கிற அழகரிலுங்காட்டில் அவர் விரும்பி வேழுந்தருளிநிற்கிற திவ்யஸ்தலமான திருமலையே ப்ராப்யம் " என்று அநுஸந்தித்து, அத்திருமலையிலுடைய வைபவத்தை பரமுகமாகப்பேசி யநுபவிக்கிறார் இத்திருமொழியில்.... *

மூ.—அலம்பாவெருட்டாக் கொன்றுதீரியு மரக்கரைக்
குலம்பாழ்படுத்துக் குலவிளக்காய்நின்ற கோன்மலை
சிலம்பார்க்கவந்து தெய்வமகளிர்க ளாடுஞ்சீர்ச்
சிலம்பாறுபாயுந் தென்திருமாலிருஞ்சோலையே. க.

338

பதவுரை.

அலம்பா— ப்ராணிகளை அலைத்தும்
வெருட்டா— பயப்படுத்தியும்
கொன்று— கொன்றும்
தீரியும்— திரியாநின்றுள்ள
அரக்கரை— ராக்ஷஸர்களை [பாழாக்கி
குலம் பாழ்படுத்து — ஸகுடும்பமாகப்
குலம்— இக்ஷ்வாகுவம்சத்துக்கு
விளக்காய் நின்ற— ப்ரகாசகனாய் நின்ற
கோன்— ஸர்வஸ்வாமியானவன் நித்யவா
ஸம்பண்ணுகிற
மலை— திருமலையாம்.

தெய்வம் மகளிர்கள்— தேவஸ்த்ரீகள்
சிலம்பு— பாதச்சிலம்புகள்
ஆர்க்க— ஒலிக்கும்படி
வந்து— பூலோகத்திலே வந்து
ஆடும்— நீராடா நின்றுள்ள
சீர்— பெருமையையுடைய
சிலம்பு ஆறு —திருச்சிலம்பாறானது
பாயும்— இடைவிடாமல் பெருகாநிற்பதாய்
தென்— அழகியதான [லையானது;
திருமாலிருஞ்சோலை— திருமாலிருஞ் சோ

வ்யா. முதற்பாட்டு. அலம்பா. ப்ராணிகளையிருந்தவிடத்திலிருக்கவொண்ணாதபடி அலைத்து. அதாவது- " இவர்கள்கீழ் நமக்கு வர்த்திக்கப்போகாது, எங்கேபோவோம் " என்று நின்று தளும்புகிறபடி பண்ணுகை. வெருட்டா. வெருளப்பண்ணி. அதாவது- தங்களுடைய உக்ரவேஷங்களையும் உக்ரவ்யாபாரங்களையும் கண்டுபயப்படும்படி பண்ணுகை. அன்றிக்கே, " அலம்பா வெருட்டா " என்றதுக்கு- ஆரவாரித்துச் சிலிட்கைவிளைத்து அஞ்சப்பண்ணி யென்னவுமாம். கொன்றுதிரியும். அவ்வளவுமன்றிக்கே, கொலைக்கஞ்சாமல் கொன்று, அதுதானே யாத்ரையாய்த் திரியாநிற்கும். அரக்கரை. கீழ்ச்சொன்னவை யெல்லாவற்றுக்குமடியான ஜந்மத்தையுடையவர்களை. கள்ளர், பள்ளர், வலையர் முதலானுக்கு ப்ராணிகளை அலைக்கையும் பயப்படுத்துகையும் கொல்லுகையும் ஜந்மஸித்தமாய் வருமாபோலே, இவர்களுக்குமிது ஜந்மஸித்தமாய் வருமாய்த்து. காதுஷணதிகளும் ராவணதிகளுமான ராக்ஷஸர் த்ரைலோக்யத்தையும் இப்படி பீடித்துக்கொண்டிறே திரிந்தது. குலம்பாழ்படுத்து. அவர்களை நிரஸிக்கிறவிடத்தில் அவர்கள்தங்களளவன்றிக்கே மறுகிளையுமும்படி குட்டிக்கொலையாகவறுத்துப் பொகடுகையாலே, குலமாகப்பாழ்பட்டுப் போம்படிபண்ணி. ஸ்ரீவிபீஷணனும் அவனேடே சேர்ந்தவர்களும் அவர்களுக்குக் கூட்டல்லர்களிறே. " பொல்லாவரக்கனைக் கிள்ளிக்களைந்தானை " என்றது- " நல்லவாக்கருமுண்டு " என்று திருவுள்ளம்பற்றியிறே. " இலங்கையரக்கர்குலம் முருடீர்த்தபிரான் " என்றுரிறே ஆழ்வாரும். ஜந்மமான

வர்னலும் அதுக்கீடான வ்யாபாரமில்லாதபோது அவர்களில் வ்யாவர்த்தனய்விடுமிறே. (க) "விபீஷணஸ்து தர்மாத்மா நதுராக்ஷஸசேஷ்டிதஃ" என்றார்களிறே- அவர்கள் தாங்களே. (உ) "ஸுவ்ருத்தஹ்ரீத்ரிதந ராக்ஷஸராம் பலாபலம்" என்று - இக்ஷ்வாகுவம்ச்யனுகநினைத்து, பெருமாள் கைக்கொண்டருளினபோதே அந்தஜந்மந்தானும் மாறிப்போய்த்திறே. ஆகையால், "குலம் பாழ்படுத்து" என்னக்குறையில்லை. குலவிளக்காய்நின்ற். ராவணன் திக்விஜயம்பண்ணினவன்று தொடங்கி ஒளிமழுங்கிக்கிடந்த இக்ஷ்வாகு வம்சம், பெருமாள் திருவவதரித்து, ராவணதிகளைக் கிழங்கெடுத்துப்பொகட்டபின்பாய்த்து ப்ரகாசமாய்த்து; ஆகையாலே, குலத்துக்கு ப்ரகாசகனுய் நின்றவென்கிறது. "வெங்கதிரோன் குலத்துக்கோர்விளக்காய்த்தோன்றி" என்றருளிறே- ஸ்ரீகுலசேகரப்பெருமாள். இவர்கள்தாம் *பேசிற்றேபேசும் ஏககண்டரிறே. கோன்மலை. ஸர்வஸ்வாமியானவன் நித்யவாஸம் பண்ணுகிற தேசம். "குலவிளக்காய் நின்றகோன்மலை" என்கையாலே- இன்னம் அங்ஙனெத்த விரோதிகளை நிரஸித்து ஆச்ரிதரக்ஷணம் பண்ணுகைக்காக எழுந்தருளிநிற்கிற ஸ்தலமென்கிறது. ஆனகயால், ஸர்வஸ்வாமித்வம் வீறுபெற்றது- இங்கேயிறே.

சிலம்பார்க்கவந்து தெய்வமகளிர்களாடும். முன்பு - தேவஸ்த்ரீகள் திருச்சிலம்பாற்றில் ஸ்நானம்பண்ணவரும்போது ராவணதிகளுக்கு அஞ்சி சிலம்பொழிந்தும் ‡ பஞ்சடையிட்டும் வருவர்களாய்த்து; இப்போது- அங்ஙனன்றிக்கே, அரக்கரைக் குலம்பாழ்படுக்கையாலே, சிலம்புகள் த்வனிக்கும்படி வந்து, தேவஸ்த்ரீகளானவர்கள் ஸ்நானம்பண்ணுகிறகிற. இவர்கள் எதுக்காக இப்படி ஸ்நானம்பண்ணுகிறதென்னில்; ஸ்வர்க்கத்திலிருப்புக்கு ஸாதனமாக. சாலில் நீர்மாண்டாற்போலே, முன்பு ஆர்ஜித்தபுண்யம்மாண்டால், தேடிக்கொள்ளும்தேசம் இது வாய்த்து. சீரித்யாதி. இப்படியிருக்துள்ள கௌரவத்தையுடைய திருச்சிலம்பாறுனது அவிச்சிந்ந ஸ்ரோதோரூபேண ப்ரவஹியாநிற்கும். (கூ) 'ஜுஹுதனிதமாதி நீ ஜுவ நதிநுதிஜுலஹா' என்றுதொடங்கி ஒருச்லோகத்தாலே திருச்சிலம்பாற்றினுடைய கதியைவர்ணித்து அருளிச் செய்தாரிறே- ஆழ்வான். தென்திருமாலிருஞ்சோலையே. தென் என்று- அழகாதல்; தெற்குத் திக்கிலேயான வென்றுதல். "மால்" என்றும், "இருமை" என்றுமிரண்டும்- பெருமைக்குவாசகமாய், சோலையினுடைய ஒக்கத்தையும் பரப்பையும் சொல்லுகிறது. இப்படி இருக்கிறசோலைகளை யுடைத்தாகையாலே மாலிருஞ்சோலையென்று அத்தேசத்துக்கு நிரூபகம்/ * வாகிறியிறே. ... ... க.

மூ.—வல்லாளன்ரௌளும் வாளாக்கன் முடியுந்துங்கை
போல்லாதமூக்கும் போக்குவித்தான் பொருந்துமலை
எல்லாவிடத்திலு மெங்கும்பரந்து பல்லாண்டொலி
செல்லாநிற்குஞ் சீர்த்தென்திருமாலிருஞ்சோலையே. உ.

பதவுரை.

பல்லாண்டொலி-மங்களாசாஸநத்வனியான து | எங்கும்— திருமலையின் பரப்பெங்கும்
எல்லா இடத்திலும் — எல்லாவிடங்களிலும் | பரந்து — பரவி

(க) "விபீஷணஸ்து தர்மாத்மா நதுராக்ஷஸசேஷ்டிதஃ." (உ) "ஆகாஹ்ரீம்ம தத்வேந ராக்ஷஸாநாம் பலாபலம்." ‡ பஞ்சடையிட்டும் - சிலம்பு த்வனியாதபடி பஞ்சை அதிலே அடைத்துக்கொண்டுமென்றபடி. (கூ) "க்வசித்வரிதகாமிநீ க்வசநமந்தமந்தாலஸா"

செல்லாநிற்கும்— செல்லாநின்றுள்ள
சீர்— பெருமையையுடைத்தாய்
தென் திருமாலிருஞ்சோலை—;
வல்— வலிய
ஆளன்— ஆண்பிள்ளைத்தனத்தையுடையனும்
வாள்— ருத்ரனிடத்தில் பெற்ற வாளையு
முடையனனை
அரக்கன்— ராவணனுடைய
தோளும்— தோள்களும்
முடியும்— தலைகளும்
தங்கை— அவன் தங்கையான சூர்ப்பண
கையுடைய
போல்லாத— கோடான
மூக்கும்— மூக்கும்
போக்குவித்தான்— அறுப்புண்டு போய்படி
பண்ணினவன்
பொருந்தும்— நித்யவாஸம்பண்ணுகிற
மலை— திருமலையாம்

வ்யா. இரண்டாம்பாட்டில். வல்லாளன். வலிய ஆண்மையை யுடையவன். ஆண் பிள்ளைத்தனத்தில்வந்தால் ப்ரபலனாவனென்கை. நிக்ரஹிக்கிறோமே பொருதும் நிக்ரஹிக்கிறோம் ஜயித்துமிருக்குமவனிறே. (க) "கம்பீரதேஜோரூபோ மிஷ்டோக்யோ ஜனப்ரியோ வாக்மிவேதீ। ஸகுணோ ஸாஹஸீலஸ்ச ஸர்வஜ்ஞ:" என்றவனிறே. வாளுக்கன். அதுக்கு மேலே, ருத்ரன்பக்கலிலேபெற்ற வாளையுமுடையவன். இத்தால் இந்தத் தோள்வலியும் வாள்வலியும் முடைபலனுக்கேயாலே ஒருவராலும் ஜயிக்கவொண்ணாதவனென்கை. இப்படியிருக்கிற வனுடைய. தோளும் முடியும். இத்தால்-அவனையழியச்செய்கிறவிடத்தில் ஒப்பாலே அழியச் செய்துவிடலாயிருக்க, தோள்தலைகளைத் தலையையறுத்துப் போதுபோக்காகநின்று கொன்றபடி சொல்லுகிறது. தங்கைபோல்லாதமூக்கும். "மன்னனிராவணன்றன் நற்றங்கை" என்கிற பலங்கொண்டு ஸ்வைரம் ஸஞ்சரித்துத்திரிந்த * கொல்லியரக்கியான சூர்ப்பணகையினுடைய ஹேயமான மூக்கையும். போக்குவித்தான். அறுப்புண்டுபோம்படி பண்ணினவன். இவள் மூக்கைபரிந்தவோபாதி காணும் அவனுடைய தோளும்முடியுமறுத்த அநாயாஸமும் பொருந்துமலை. இப்படி அவனுக்கு ப்ராணஹானியையும் இவளுக்கு அங்கஹானியையும் பண்ணினவன், அவதாரம்போலே நீர்த்தம் ப்ரஸாதியாதே; நித்யவாஸம்பண்ணுகிறமலை;

எல்லாவித்யாதி. அந்யப்ரயோஜநரோடு, ப்ரயோஜநாந்தரபரரோடு, அநந்யஸாதநரோடு, ஸாதநாந்தரபரரோடு வாசியற, எல்லாருடைய விடங்களிலும் திருமலையிலுள்ளபரப்பெங்கும் வ்யாப்தமாய்க்கொண்டு மங்களாசாஸநத்வநி நடந்துசெல்லாநிற்கும். ப்ரயோஜநாந்தரபரர்க்கும் இது கூடுமோவென்னில்; அவர்களையுமிங்கேவந்து புகுரக்கொள்ள, இந்த நிலமிதானே தங்கள் ப்ரயோஜநத்தைமுற்றுமங்களாசாஸநத்திலே முடியும்படி பண்ணுமாப்போலே. * புனத்தினைக்கிள்ளிப் புதுவிக்காட்டுகிற குறவரும். "உன்பொன்னடிவாழ்க" என்று மங்களாசாஸநம் பண்ணும்படியிறே நிலத்தின்மிதானிருப்பது. சீர்த்தென்திருமாலிருஞ்சோலையே. இப்படியிருந்துள்ள திருமாலிருஞ்சோலையே. ... ... உ.

மூ.—தக்கார்மிக்கார்களோச் சஞ்சலஞ்செய்யுஞ் சலவரைத்
தெக்காநெறியே போக்குவிக்குஞ் செல்வன்பொன்மலை

(க) "ஹிமவாந்மந்தரோமேருஸ்த்ரைலோக்யம்வா ஸஹரமரை:- சக்யம்புஜாப்யா முத்தர்த்தும்."

நீர்த்தம் ப்ரஸாதியாதே - தன்னுடைச் சோதிக்கெழுந்தருளாதே.

எக்காலமுஞ்சென்று சேவித்திருக்குமடியரை
அக்காலெறியைமாற்றுந் தண்மாலிருஞ்சோலையே. ஈ-

பதவுரை.

எ காலமுமே— எப்போதும்
சென்று— போய்
சேவித்து இருக்கும்— திருவடிதொழுதிரா நின்றுள்ள
அடியரை— தாஸபூதர்களை
அ காலெறியை— அந்தக் காட்டுவழியி னின்றும்

[காடு—பாவக்காடு.]

மாற்றும்— தவிர்ப்பிப்பதாய்
தண்— ஸம்ஸார தாபஹரமான
மாலிருஞ்சோலை—,
தக்கார் — எம்பெருமானேடொக்க க்ருபை யொத்திருக்குமவர்களையும்
மிக்கார்களை—எப்போதுமொக்க அநுக்ரஹ சீலராயிருக்கையாலே அவனிலுங் காட்டில் மேன்மை யுற்றிருக்கு மவர்களையும்
சஞ்சலம் செய்யும்— திருவுள்ளம் கலங்கப் பண்ணுகிற
† சலவரை— ப்ரதிகூலரை
தெக்கு ஆம்— தென்திக்கிலேயான
நெறியே— யமலோகத்தின்வழியே
போக்குவிக்கும்— போம்படி பண்ணுகின் றுள்ள
செல்வன்— ஸ்ரீயம்பதி வர்த்திக்கிற
பொன்— ஸ்ப்ருஹணீயமான
மலை— திருமலையாம்.

வ்யா. மூன்றும்பாட்டு. தக்கார். ஈச்வரனுடொக்க க்ருபையொத்திருக்குமவர்கள். தக்கார். ஈச்வரனுக்குத் தகுதியானவர்கள். அதாவது- நீனைவு ஒன்றுயிருக்கை. "ஸர்வாத்மாக்களும் முஜ்ஜீவிக்கவேணும்" என்கிற க்ருபை ஒத்திருக்கை. மிக்கார்களை. அவனைப்போலே ஸ்வதந்த்ராய், அபராதங்களைக் கண்டவாறே "கூவோமி" "நகூஷோமி" என்கையன்றிக்கே, எப்போதுமொக்க அநுக்ரஹசீலரா யிருக்கையாலே அவனிலுங்காட்டில் அதிகரா யிருக்குமவர்களை. ஆகையிறே - இவர்களைப்பற்றுமிடத்தில் புருஷகார நிரபேக்ஷமாகப் பற்றலாயிருக்கிறது. "ஸகிப்பின்றியாண்டெம்மைச் சண்மசன்மாந்தரம் காப்பர்" என்கிறபடியே- ஆச்ரயித்தவர்களை ஸகலமுமறநோக்குவாரும், "வருமையு மிம்மையும் நன்மையளிக்கும் பிராக்கள்" என்று இம்மைக்கும் மறுமைக்கும் ரக்ஷிப்பாரும் இவர்களேயிறே. ஆகையால், ஈச்வரனருளிலும் இவர்களருளிறே நன்றுயிருப்பது. "நல்லருளாயிரவர் நலனேந்தும் திருவல்லவாழ்" என்னக்கடவதிறே. சஞ்சலஞ்செய்யும் †சலவரை. பகவத்விஷயத்திலே வைத்த நெஞ்சைக் கலங்கப்பண்ணும் க்ர்த்ரிமரை. ஸ்ரீதண்டகாரண்யவாஸிகளானரிஷிகள் பகவத்யாகம் குலைந்து (க) "வஹ்நிவத்பூஜாரீராணி" என்று உடம்புக்கு மன்றுமிப்படியாய்த்திறே - ராக்ஷஸர்கள் கலக்கினபடி. சலவர் - அநுகூலரைப்போலேயிருந்து ப்ராதிகூல்யம் பண்ணுமவர்கள். தெக்காநெறியே. நரகத்துக்குப்போம்வழியே. யமபுரம் தக்ஷிணதிக்கிலேயாகையாலும், நரகத்துக்குப்போவார்போவது அவ்வழியாலே யாகையாலும் "தெக்கா நெறி" என்று-யாம்யமார்க்கத்தைச்சொல்லுகிறது. போக்குவிக்கும். மீட்சியில்லை. செல்வன். இப்படிபோம்படி பண்ணுகைக்குஹேது - ஸ்ரீயஃபதியாகையிறே. "அசுரர்க்குத் தீங்கிழைக்கும் திருமால்" என்னக்கடவதிறே. ராவணாதிகளைக் கொல்லுகைக்கு தபஸ்ஸுபண்ணுமவனிறே. பொன்மலை. இப்படியிருக்கிறவன் வர்த்திக்கிற ச்லாக்யமான திருமலை.

† "சலவர்" என்றது- சலத்தையுடையவர் என்றபடி. சலம் - உமிழ்; கபடம். அத்தையுடையவர் - க்ர்த்ரிமர். (க) "வஹ்நிபக்வசரீராணி."

எக்காலமுமித்யாதி. அங்ஙப்பரோஜஸாய், புறம்பு அங்ஙபரதையில்லையாமே ஸர்வகாலமும்சென்று ஸேவித்திருப்பர்கள். ப்ரயோஜநாந்தரபரர்க்கிறே -காலநியதியுள்ளது இவர்களுக்கு காலநியதி இல்லை; அதுக்கடி- * அடியாராகையிறே. " எழுவார் கீடமே ல்வா ரின்றுழாயானை, வழுவாவகை நினைந்துவைகல், தொழுவார் " என்னக்கடவதிறே. அக்கான் நெறியைமாற்றும். அக்காட்டுவழியைமாற்றும். * பாவக்காடிறே. தண்மலிருஞ் சோலையே. தட்பமாவது - ஸம்ஸாரதாபத்தை ஆற்றுமதாயிருக்கை. அழகர், ப்ரதிகூலரை * தெக்காநெறியே போக்குவிப்பர்; திருமலையாழ்வார், அநுகூலரை *அக்காணெறியை மாற்றுவிப்பர். " பிணிவீயுமாறுசெய்வான் திருவேங்கடத்தாயன் " "சமன்கொள்விடுதரும் தடங்குன்றம் " என்னக்கடவதிறே. அழகரைப் பற்றுகையிலும் *அயன்மலையடைவததுவிறே கருமம். ... ... கூ.

மூ.—ஆனயர்கூடி யமைத்தவிழவை யமரர்தம்
கோனுர்க்கோழியக் கோவர்த்தனத்துச் செய்தான்மலை
வானுட்டின்றுமாமலர்க்கற்பகத்தொத்திழி
தேனுறுபாயுந் தென்றிருமாலிருஞ்சோலையே. கூ.

பதவுரை.

வான்நாட்டில்—ஸ்வர்க்கலோகத்திலுள்ளதாய்	ஆயர்— இடையர்கள்
மா— ஸ்லாக்யமான	கூடி— திரண்டு
மலர்— பூக்களையுடைத்தான	அமைத்த — (இந்த்ரனுக்காகச்)சமைத்த
கற்பகம்— கல்பவ்ருக்ஷத்தின்	விழவை— ஜாதகோத்ஸவத்தை
தொத்தில்நின்று — பூங்கொத்தில்நின்றும்	அமரர்தம்— தேவர்களுடைய
இழி— பெருகாநின்றுள்ள	கோனுர்க்கு— ராஜாவான இந்த்ரனுக்கு
தேன்— தேனானது	ஒழிய— ஒழியாமல்
ஆறு பாயும்— ஆறாய்க்கொண்டு ஓடாநிற்கிற	கோவர்த்தனத்து- கோவர்த்தனகிரிக்காம்படி
தென்— அழகையுடைய	செய்தான்— செய்தவனுடைய
திருமாலிருஞ்சோலை—;	மலை— திருமலையாம்.
ஆன்— பசுக்களையுடைய	

வ்யா, நான்காம்பாட்டு. ஆனயரித்யாதி. கோதரான இடையர், வர்ஷர்த்தமாக வத்ஸாந்தோறும் ஒரு நிவஸம் இந்த்ரனை ஆராதித்துப்போரக் கடவர்களாய், அதுக்குடலாக அவர்கள், வாசல்கள்தோறும் ஆக்கியெடுத்துச் செல்லுகிறபடியைக் கண்டு, " நீங்கள்செய்கிறதென்? " என்று கேட்க; " வர்ஷார்த்தமாக இந்த்ரனுக்குச் சோறிடுகையாயிருக்கும் " என்ன; " நாம்பிறந்து வளருகிறவூரிலே ஒரு த்ரவ்யத்தை ஒருதேவதாந்தரம் கொள்ளுகையாவதென் " என்றுநினைத்து, அத்தைதவிலக்குகைக்காக, " இந்த்ரனிறவனெனவன், அவனை நீங்கள் கண்டறிவதுண்டோ, அவன்றன் நீங்களிட்டசோற்றை உண்ணக்கண்டறிவி கோளோ, ஒன்று மறியிகோளாயிருந்திகோள்; ஆனபின்பு, மேகங்களும் வந்துபடிந்து வர்ஷிக்கும்ஸ்தாநமாய், என்றுமொக்கப் பசுக்களுக்குப்புல்லும் தண்ணீருமுண்டாய், நமக்கு மழைக்கும் காற்றுக்கு மொதுங்கிடமாய், கோக்களை வாத்ஸல்யத்தாலே " கோவர்த்தநம் " என்னும் பேரையுடைத்தாயிருக்கிற இம்மலையன்றே நமக்குத்தெய்வம், இதின்

மூன்னே நீங்கள் சமைத்தவையெல்லாம் கொண்டுவந்திடுங்கோள்;" என்ன; பஞ்சலக்ஷம் குடியிலுள்ள இடையரெல்லாரும் திரண்டு இந்த்ரார்த்தமாகக் கல்பித்த உத்ஸவத்தை, முப்பத்துமுக்கோடி தேவர்களையும் கும்பிடுகொள்ளுமேற்றத்தை யுடையராய், தம்மைப் போலப் பொலிய நினைத்திருக்குமவர்க்கொழிய, அசேதநமாயிருப்பதொரு பர்வதமான கோவர்த்தநத்துக்காம்படி செய்தவனுடையமலை. அப்படி 'தன்னபிமாநத்திலே ஒதுங்கினவர்களை அந்யசேஷமாகாதபடி நோக்கி, திருமலையாழ்வார்க்கு சேஷமாக்குகைக்காக அவனைமுந் தருளி யிருக்கிறதேசமென்கை.

வாளுட்டிலித்யாதி. ஸ்வர்க்கலோகத்தில் நின்றும். பெரிய பூக்களையுடைத்தான கல்பகத்தினுடைய பூங்கொத்துக்களினின்றும் கீழ்நோக்கி ப்ரவஹியாநின்றுள்ள தேனை ஆறுப்க்கொண்டு பரம்பி ஓடாநிற்கு மழகையுடைய திருமாலிருஞ் சோலையென்கை. சு.

மூ.—ஒருவாரணம் பணிகோண்டவன் பொய்கையிற் கஞ்சன்ற
ஒருவாரண முயிருண்டவன்சென் றுறையுமலை
சுருவாரணந் தன்பிடிதுறந்தோடக் கடல்வண்ணன்
திருவாணைகூறத்திரியுந் தண்மாலிருஞ்சோலையே. டு.

342

பதவுரை.

கரு வாரணம்—	கறுத்த ஆனையானது
தன்—	தன்னுடைய
பிடி—	பிடியானது [பேடை]
துறந்து—	தன்னைவிட்டு
ஓட—	ப்ரணய ரோஷத்தாலே கடுநடையிட்டுப் போகப்புக்கவாறே
கடல்வண்ணன் திரு ஆணை கூற	"கடல் வண்ணன்மே லாணை" என்று சொல்ல,
திரியும்—	அப்புறம் போகமாட்டாமே மீளா நின்றுள்ள
தண்மாலிருஞ்சோலை—	
பொய்கையில்—	பெரியஸரஸ்தீரத்திலே
ஒரு வாரணம்—	ஒப்பற்ற ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுடைய
பணி—	கைங்கர்யத்தை
கொண்டவன்—	ஸ்வீகரித்தருளினவனுய்
கஞ்சன்தன்—	கம்ஸனுடைய [தின்
ஒருவாரணம்—	ஓராநையான குவலயாபீடத்
உயிர்—	உயிரை
உண்டவன்—	முடித்தவன்
சென்று—	எழுந்தருளி
உறையும்—	வர்த்திக்கிற
மலை—	திருமலையாம்.

வ்யா. ஐந்தாம்பாட்டு. "ஒருவாரணம் பணிகோண்டவன் பொய்கையில். சாபத்தாலே கஜயோநியிலே பிறந்திருக்கச் செய்தேயும், பூர்வஜந்ம ஸ்மர்தி குலையாமையாலே, மிகவும் பகவத்பக்தியை யுடைத்தாய் ¶திருப்படித்தாமம் பறித்து இட்டேத்திரியாநிற்க, ஜலத்திலே ஒருபூமலர் கிடையாதபடி வர்ஷாபாவமாய் வரண்டவளவிலே; "எங்கேயொரு பூக்காணலாம்" என்றுதேடித் திரியச்செய்தே "மொய்ம்மாம் பூம்பொழிற் பொய்கை" என்கிறபடியே தூரத்திலே ஒருகுளிர்ந்த சோலையும் பூத்த பொய்கையுமாய்த் தோற்றக் கண்டு ஓடிச்சென்று "உள்ளே துஷ்டஸத்த்வம் கிடக்கிறது" என்றறியாமலிழிந்து "காம

¶ "திருப்பள்ளித்தாமமென்று - திருத்துழாய்" என்று அரும்பத விளக்கத்தில் காண்கிறது.

ருபோய்கை வைகுதாமரை வாங்கியவேழம்" என்கிறபடியே தன் அபிநிவேசாதிசயத்தாலே பூவைவாரிப்பறித்துக் கரையிலே யேறுவதற்கு முன்னே, நெடுங்காலமெல்லாம் "கை மோக்ஷத்துக்கு ஒரு ¶ கறையடிகாணவல்லோமே" என்று கிடக்கிற்றொரு முதலை காலைப்பிடித்துக் கொள்ளுகையாலே, அது நீர்க்கிழுக்க, தான் கரைக்கிழுக்க, இப்படி நெடுங்காலம் நின்றலைந்து தன்னுற்செய்ய லாவதற்றவாறே, திருவடிகளே நினைத்துக் கபிட்டதோராணையை, அந்தத்வரி வழியே அதித்வரையோடே அது இடர்ப்பட்ட பொய்கையிலே சென்று முதலையின் வாயினின்றும் ஆனையை விடுவித்து, அதின் கையிற்பூ செவ்வியழியாமல் திருவடிகளிலே இடுவித்துக்கொண்டு அடிமை கொண்டவன். கஞ்சனித்யாதி. "தீயபுந்திக்கஞ்சன்" என்கிறபடியே - தூர்ப்புத்தியான கம்ஸன், ஆஸுர ப்ரக்ருதியை ப்ரச்சந்நரூபராக்கி வரவிட்டு பஹுமுகமாக நலியப்பார்த்தவளவில், வந்தவர்களொருவரும விசேஷம் சொல்லவும் மீண்டுசெல்வாரைக் காணுமையாலே, "இனி இதுகொண்டு இவனை வெல்லப்போகாது" என்று விட்டு, "வில்விழவுக்கென்று அழைத்து நலியக்கடவோம்" என்று தன்னுடைய மந்த்ரிகளில் அநுகூலரான அக்ரூரை வரவிட, அவரும் வந்தழைத்துக் கொண்டு போகாநிற்கச்செய்தே, வழியிலே நலிவதாக மதகுமான த்ரவ்யங்களைத் தேற்றிப் பிச்சேற்றி "புகுவாய் நின்றபோதகம்" என்கிறபடியே - புகுகிற வாசலிலே நிற்கிறை த்தோராணையை மதியாமல்சென்று அடர்த்து, அதினுடைய கொம்புகளைப் பிடுங்கி ப்ராணனை முடித்தவன். சென்றுறையும்மலை. தன்னுகப்பெல்லாம் தோற்றும்படி வந்து, "நங்கள் குன்றம் கைவிடான்" என்கிறபடியே நித்யவாஸம் பண்ணுகிறமலை. ஆநுகூல்ய முடையதோராணையை ரக்ஷித்து, ப்ராதிகூல்யம் பண்ணினதோராணையை நிரஸித்தவன் வர்த்திக்கிறதேசமாகையாலே, அநுகூலமான ஆனைகளெல்லாம் வர்த்திக்கும் தேசமாய்த்து. "மழக்களிற்றினஞ்சேர் மாலிருஞ்சோலை" என்னக்கடவதிறே.

கருவாரணம். கறுத்த நிறத்தையுடைய ஆனையானது. தன்பிடிதுறந்தோட. இந்நிறத்தைக் கண்ட் தன்னுடைய பிடியானது, "நம்மையொழிய வேறேகலந்து பெற்ற நிறமாயிருந்தது" என்று ப்ரணய ரோஷத்தாலே தன்னை ஸங்கஸித்துப் புரிந்து பாராமல் கடுநடையிட்டுப்போக. இப்படி இது ஓடப்புக்கவாறே, இது மீளுகைக்கடோன உபாயங்களிலே இழிந்து, "பெருகுமதவேழம்" இத்யாதிப்படியே சில உபஹாரங்களைப் பண்ணப்பார்க்க, "அத்தை உனக்குவேண்டுவார்க்குக் கொடாய்" என்று போகப்புக்கவாறே, "உபாயாந்தரம் பலித்ததில்லை, இனி சரமோபாயத்தை யநுஷ்டிப்போம்" என்று பார்த்து, கடல்வண்ணன் திருவாணைகூற. அழகர் ஸ்ரீபாதமே போவாயென்ன. திரியும். அந்த நிவ்யாஜ்ஞைக்கு இளைத்து,போகமாட்டாமல்மீளும். (க)"ஸ்ரஸ்ரஷ்டுராஜ்ஞாலம்ஹ தகாதரவஸாதநாயாயிநிகரிணி। ப்ரணயஜகுஹவஸ்ரபீ:வு தரவநாதிஸ்ரவணஷ்வ ஸ்ரஷ்டீ" என்று இவ்வர்த்தாந்தத்தையருளிச் செய்தாரிறே - ஆழ்வான். தண்மாலிருஞ்சோலையே. தப்பமாவது - ஸகல வஸ்துக்களுக்கும் நின்றநின்ற நிலைகளிலே தாபத்தை ஆற்ற வற்றாயிருக்கை.

¶ "'கறையடி' என்றது - 'கறை' என்று உரலாய், அதுபோன்ற அடியையுடைத்தான தென்றாய், ஆனையைச் சொல்லுகிறது.

(க) "ஸ்ரஸ்ரஷ்டாதோர் நிவ்யாஜ்ஞாலம்பநகாதரவஸாதநாயாயிநி கரிணி - ப்ரணயஜ்ஞ கலஹஸமாதிர்யத்ரவநாத்ரிஸ்ஸ ஏஷஸ்ரஸ்ரஷ்டாஷ்ணி:."

மூ.—ஏவிற்றுச் செய்வானேன் றெதிர்ந்துவந்த மல்லரைச்
சாவத்தகர்த்த சாந்தணிதோட்சதுரன்மலி
ஆவத்தனமென் றமரர்களு நன்முனிவரும்
சேவித்திருக்குந் தென்றிருமாலிருஞ்சோலையே. கூ.

பதவுரை.

அமரர்களும் — ப்ரஹ்மாதிதேவர்களும்
நல் முனிவரும் — ஸநகாதி மஹர்ஷிகளும்
ஆவத்து — தங்களுடைய ஆபத்துக்குரக்ஷகமான
தனம் என்று — தனமென்றுநினைத்து
சேவித்திருக்கும் — ஸேவித்துக்கொண்டிராநிற்கிற
தென் திருமாலிருஞ்சோலை —
ஏவிற்று — கம்ஸன் ஏவினகார்யங்களை
செய்வான் — செய்யும்பொருட்டு
என்று — துணிந்து
எதிர்ந்து வந்த — எதிர்த்துவந்த
மல்லரை — சாணூர முஷ்டிகரை
சாவ — சாம்படியாக
சாந்து அணி — கூனி இட்ட சாந்தைப்பணிந்த
தோள் — தோளாலே
தகர்த்த — முறித்துப்போகட்ட
சதுரன் — சாதுர்யமுடையவன் வர்த்திக்கிற
மலை — திருமலையாம்.

வ்யா. ஆறும்பாட்டு. ஏவிற்றுச்செய்வானேன் றெதிர்ந்துவந்தமல்லரை. ஸ்வதந்த்ரராய் வந்து மேல்விழிலிறே, 'முடியாது' என்று கைவாங்கலாவது; கம்ஸனுக்கு பாதந்த்ரராய் வருகையாலே, இங்குத்தோற்றார்களாகில் அவன் அங்கே தோள்களைக் கழிக்குமாய்த்து; ஆன்பின்பு, கோழைகளாய்க் கொலையுண்பதில் புகழோடே முடியவ்வமையும் என்று மேலிட்டார்கள். ஏன்றெதிர்ந்து வருகையாவது- "போரக்கடவோம்" என்று நெஞ்சிலே துணிந்து பிற்காலியாதே எதிரே நடந்துவருகை; இப்படியிருந்துள்ள மல்லரை. சாவத்தகர்த்த. குற்றுயிராக்கி விடுகையன்றிக்கே, பசுங்கலமுடைத்தாற்போலே அநாயாஸேநதகர்த்துப்போகட்ட. சாந்தணிதோள்சதுரன். கூனி சாத்திவிட்ட சாந்து குறியழியாதே காணும் அவர்களோடு வ்யாபரித்தது. மல்லரோடேகூட ஸர்வாவயவங்களும் பொருந்தி வ்யாபரியாநிற்கச்செய்தே சாத்தின சாந்து குறியழிந்ததில்லை காணும். கூனிசாத்திவிட்ட வநந்தரத்திலே, பெண்கள், கண்ணிலே இலச்சினையிட்டு விடுகையாலே இவளுலழிக்கவும் போகாதிறே. அவர்கள் கண்ணிலே யிலச்சினை யிடுகையாவது- இவன்தோளிலே சேதனங்கயலுமிடுகையிறே. இவன் மல்லரோடே அழித்தானாகிலும் மற்றெங்கேனு மழித்தான் என்றிறே அவர்களிருப்பது. இது அழித்துப்போனானில், பின்புபெண்கள் கோஷ்டிக்காளாகானே. மலை. இப்படி ப்ரதிகூலரை நிரஸித்து அநுகூலரைபுகப்பிக்குமவன் வர்த்திக்கிறமலை.

ஆவத்தனமென்று. நமக்கு¶ ஆபத்துக்கு ரக்ஷகமான தனமென்றுநினைத்து. அமரர்களும் நன்முனிவரும் சேவித்திருக்கும். உபயபாலாநிஷ்டரான ப்ரஹ்மாதி தேவர்களும், ப்ரஹ்ம பாவனைகநிஷ்டரான ஸநகாதிமஹர்ஷிகளும்சேவித்துக்கொண்டு இராநிற்கும். "ஆவத்தனம்" என்று ஒருக்கால் நினைத்தால் அதுக்குபலம் அநவரதம் ஸேவித்துக்கொண்டிருக்கையாய்த்து. தென்திருமாலிருஞ்சோலையே. தென்னென்று-; அழகாய், ஸர்வப்ரகார விலக்ஷணமான தேசமென்றபடி.. ... ... கூ.

¶ "ஆபத்துக்கு" என்றது - ஆபத்துவந்த காலத்துக்கென்றபடி..

மூ.—மன்னர்மறுக மைத்துனன்மார்க் கொருதேரின்மேல்
முன்னங்குநின்று மோழையெழுவித்தவன்மலை
கொன்னவிற்கூர் வேற்கோனெடுமோற்றன் றென்கூடற்கோன்
தென்னன்கொண்டாடுந் தென்றிருமாலிருஞ்சோலையே. எ.

பதவுரை.

மன்னர்— ராஜாக்களெல்லாரும்
மறுக — 'நாம் இவனை வெல்லலாமோ என்று குடல் மறுகும்படியாக
மைத்துனன்மார்க்கு— மைத்துனன்மாரான பாண்டவர்களுக்காக
ஒரு— ஒப்பற்ற
தேரின் மேல்— தேரின்மேலே
முன் அங்கு நின்று— முன்புறத்திலே ஸாரத்யவேஷம் தோற்ற நின்று
மோழை எழுவித்தவன்—‡நீர்நரம்பில்விட்ட வாருணாஸ்த்ரத்தின்வழியே - கீழுண்டான ஜலமானதுகுமிழியெறிந்து கிளரும்படி பண்ணுவித்தவன் வர்த்திக்கிற
மலை— திருமலையாம்.

கொல் நலில்— கொலையையே தொழிலாகவுடைய
கூர்— கூரிய
வேல்— வேலையுடையனும்
கொன்—ராஜநீதியை வழுவற்நடத்துமவனும்
கொடி— பெருமையையுடையனும்
மாறன்— தர்மயுத்தம் பண்ணுமவனும்
தென்— அழகிய
கூடல்— 'கூடல்' என்னும் மதுரைக்கு
கோன்— நிர்வாஹகனும்
தென்னன் — தக்ஷிணதிக்குக்குப்ரதாநனான மலயத்வஜராஜனுமான
கொண்டாடும்— கொண்டாடப்படுமதான
தென் திருமாலிருஞ்சோலை-;

வ்யா. ஏழாம்பாட்டு. மன்னர்மறுக அர்ஜுநனுடைய தேரிலே பூண்ட குதிரைகள் தண்ணீர்குடிப்பாய்த்து இளைத்தவளவிலே, கடிநஸ்தலத்திலே ‡நீர்நரம்பு அறியுமவனுடைகையாலே, வாருணாஸ்த்ரத்தை விடுவித்து அங்கே நீரையுண்டாக்கி, குதிரைகளைவிட்டு நீரூட்டி, புரட்டி பெழுப்பிக்கொண்டு போந்து; பூட்டிக்கொண்டு வந்து முன்னே நிறுத்தின இந்தைக்கண்ட ராஜலோகமடைய "இவனுடைய பக்ஷபாதமிருந்தபடியால் நாமிவனைவெல்லுகை யென்றொன்றுண்டோ" என்று குடல் மறுகும்படியாக. மைத்துனன்மார்க்கு. (க) "க்ருஷ்ணாயாஃக்ருஷ்ணபலாஃ க்ருஷ்ணநாதாச்ச பாண்டவாஃ" என்கிறபடியே தன்னையே ஸர்வஸ்வமாகப் பற்றியிருக்கும் பாண்டவர்களுக்கு. ஒருதேரின்மேல். ஆயுதமெடுக்கவொண்ணாது என்கையாலே, "கொல்லாமாக்கோல்கொலைசெய்து" என்கிறபடியே உழுவகோலும் கையுமாய் நின்று தேரைநடத்துகிற ஸாமர்த்யத்தாலே தேர்க்காலாலேதிரிகளையடங்கலும் நெரித்துப் பொகடும்படி தனக்கு உபகரணமாயுள்ள அத்விதீயமான தேரின்மேலே. முன்னங்குநின்று. ஸாரத்யம் பண்ணுகைக்கு அநுரூபமாக அத்தேரின் முகப்பான அவ்விடத்திலே நின்று. மோழை யெழுவித்தவன். ‡நீர்நரம்பில் விட்ட வாருணாஸ்த்ரத்தின் வழியே கீழுண்டான ஜலமானது குமிழி யெறிந்து கிளரும்படி பண்ணியருளினவன். மலை. இப்படி ஆச்ரித பக்ஷபாதியானவன் நித்யவாஸம்பண்ணுகிற மலை.

---

‡ நீர் நரம்பு — நீர்த்தாரை; நீரிருக்கும் மர்மஸ்தலம்.
(க) "க்ருஷ்ணேச்சயாஃ க்ருஷ்ணபலாஃ க்ருஷ்ணநாதாச்ச பாண்டவாஃ"

கோன்னவிலித்யாதி. (உ) "மலயத்வஜ இதி வ்யாகோ சாநவெம்ரோ நவமீபதிஃ" என்கிற மலயத்வஜ சக்ரவர்த்தி இத்தேசத்தை உபலாளித்துக்கொண்டு போந்தானென்னும் ப்ரீதியாலே அவனை ச்லாகிக்கிறார் மேல். கொலைக்குப் பரிகரமென்னும்படியான கூரிய வேலையுடையனாய், ராஜநீதி குலையாமல் தர்ம யுத்தமே செய்யுமவனாய், தபஃபலத்தாலே நித்யம் கங்காஸ்நாநஞ் செய்து வரவல்ல பெருமையையுடையனாய், பாண்டிமண்டலத்துக்குராஜாவாய், கட்டளைப்பட்டு 'நான்மாடக்கூடல்' என்னும் பேரையுடைத்தாயிருக்கும் மதுரைக்கு நிர்வாஹகனாய், தக்ஷிணதிக்குக்கு ப்ரதாநனான மலயத்வஜ சக்ரவர்த்தியாலே கொண்டாடப்பட்ட தேசமாய்த்து.— [அதாவது- அகஸ்த்யன் வர்த்திக்கிற மலய பர்வதத்திலே சென்று அகஸ்த்ய மஹர்ஷிமுன்னே " தர்மமே நடத்தக்கடவேன் " என்று மலயபர்வதத்தையெழுந்திக்கொடியேத்தினவன், கங்கையிலே ஸ்நாநம் செய்யப்போகாநிற்கச்செய்தே, * மதிதவழ் குடுமி யளவிலே சென்றவாறே, தேர் வடக்கு ஓடாமல் நின்றதாய், அவ்விடத்திலே தேரை நிறுத்தி, " இங்கே தீர்த்த விசேஷமும் தேவதாஸந்நிதியு முண்டாக வடுக்கும் " என்று இறங்கி ஆராய்ந்து பார்த்தவளவிலே, அவ்விடத்திலே அழகர் ஸந்நிதி பண்ணி, " இவ்வாற்றிலே ஸ்நாநம்செய் " என்ன; நாமும் கேட்டு ஸ்நாநம்பண்ண வேண்டுகையாலே, " இதுக்குப்பேர் என் " என்று கேட்க; " முன்பே நம்மை ப்ரஹ்மா காலைக்கழுவுகிற காலத்திலே நம் சிலம்பில் நீர் இதிலே தெறித்து ' சிலம்பாறு ' என்று இதுக்குப் பேராய்த்து " என்ன; அங்கே ஸ்நாநஞ்செய்து, கங்காஸ்நாநம் தவிர்ந்து இங்கே ப்ரவணனாயிருந்து, அழகர்க்கு வேண்டுமடிமைகளெல்லாம் செய்தான் என்று ஒரு ப்ரஸித்தியுண்டிறே;] அத்தை அநுஸந்தித்செய்தாசார்யத்து. தென்திருமாலிருஞ்சோலையே. இப்படி அவனாலே கொண்டாடப்பட்டிருப்பதாய் தெற்குத் திக்கிலேயான திருமாலிருஞ்சோலையே. ... ... ள

மூ.—குறுகாதமன்னரைக் கூடுகலக்கி வெங்கானிடைச்
சிறுகாலைவெழியே போக்குவிக்குஞ் செல்வன் பொன்மலை
அறுகால் வரிவண்டுக ளாயிரநாமஞ் சொல்லிச்
சிறுகாலைப்பாடுந் தென்திருமாலிருஞ்சோலையே. உ.

345

பதவுரை.

அறுகால்— ஆறுகால்களையுடைத்தாய்
வரி— அழகியதாயிருந்துள்ள
வண்டுகள்— வண்டுகளானவை
சிறுகாலை— விடியற்காலத்திலே
ஆயிரம் நாமம்— எம்பெருமானுடைய ஸஹஸ்ரநாமங்களையும்
சொல்லி— உள்ளத்திலைவத்து
பாடும்— பாடாநின்றுள்ள
தென் திருமாலிருஞ் சோலை-;
குறுகாத— திருமலையை அணுகாத
மன்னரை— ராஜாக்களுடைய
கூடு— இருப்பிடத்தை
கலக்கி— குலைத்து [அழித்து]
வெம்— வெவ்விதான
கான் இடை— காட்டின் நடுவே
சிறுகால் நெறியே— சிற்றடியோடே
போக்குவிக்கும்— போம்படியாகப் பண்ணுகிற
செல்வன்— ஸ்ரீயஃபதி வர்த்திக்கிற
பொன்— சிறந்த
மலை— திருமலையாம்.

(உ) "மலயத்வஜ இதிக்யாதோ மாநவேந்த்ரோ மஹீபதிஃ"

"ஒவ்வா. எட்டாம்பாட்டு. குறுகாதமன்னரை. திருமலையைக் கிட்டாத ராஜாக்களை. அதுகூலராய்ச்சேர்ந்து வாழ்ந்துபோகலாயிருக்க, ப்ரதிகூலராய்ச்சேராதேயிருக்கும்வர்களை. கூகேலக்கி.. இருப்பிடத்தைக் குலைத்து. அதாவது- போக்ய போகோபகரண போகஸ்தாநங்களெல்லாவற்றிலும் விலக்ஷணமாம்படி அவர்கள் பண்ணிக்கொண்டிருக்கும் நகரிகளிலிருப்பைக் குலைத்தென்கை. வெங்கானிடை. வெவ்விய காட்டின்நடுவே. நில்வதுக்கும் ஸஞ்சரிக்கவொண்ணுதபடியாய்த்து காட்டின் வெம்மையிருக்கும்படி; "வெம்மிளைவெயில் கானகம்" என்கிறபடியே. சிறுகானெறியேபோக்குவிக்கும். கெட்டுப்போம்போது பின் தொடருகிறார்களென்னுமச்சத்தாலே வழியானவிடம்கிடக்க, சிற்றடிப்பாடே தனழந்துபோம்படியாகப்பண்ணும். செல்வன். இதுக்கடி- ஸ்ரீயஃபதியாகை. அதுகூலரக்ஷணமும் ப்ரதிகூலநிரஸநமும் பண்ணுவது அவளுக்காகவிறே. பொன்மலை. இப்படி யிருந்துள்ள ஸ்ரீயஃபதியானவன் வர்த்திக்கிற ச்லாக்யமானமலை. அறுகால்வரிவண்டுகள். ஷட்பதங்களான அழகியவண்டுகள். இத்தால்- இவற்றினுடைய ரூபகுணம் சொல்லிற்று. ஆயிரநாமம்சொல்லிச் சிறுகாலைப்பாடும். (க) "தெவொ நாமஸஹஸ்ரவாந்" என்கிற அவனுடைய ஸஹஸ்ரநாமங்களையும் ஸத்ருசோத்தரமான காலத்திலே ப்ரீதிக்குப் போக்குவிட்டுப்பாடாநிற்கும். தென் திருமாலிருஞ்சோலையே. இப்படி யிருந்துள்ள அழகையுடைத்தான திருமாலிருஞ்சோலை யென்கை. ... ... அ.

அ. ஒன்பதாம்பாட்டு. அந்த நிகர்த்திகளான ஸ்ரீவைஷ்ணவ பூதங்களினுடைய வர்த்தமிருக்கும்படி சொல்லுகிறது. அழகருடைய செயல்போலேயிருந்து-இவற்றினுடைய செயலுமிருக்கும்படி. அதாவது- ப்ரதிகூலரானவர்களைக் காணப்பொறுதாய்த்து.

மூ.—சிந்தப்புடைத்துச் செங்குருதிகொண்டு பூதங்கள்
அந்திப்பலிகொடுத் தாவத்தனஞ் செயப்பன்மலை
இந்திரகோபங்க ளெம்பெருமான் கனிவாயொப்பான்
சிந்தும்புறவிற் றென்திருமாலிருஞ்சோலையே. கூ.

346

பதவுரை.

இந்திரகோபங்கள் — பட்டுப்பூச்சிகளானவை
எம்பெருமான்— ஸர்வஸ்வாமியான அழகருடைய
கனி— கொவ்வைக்கனிபோன்ற
வாய்— திரு அதரத்துக்கு
ஒப்பான்— ஒத்திருக்கையாக
சிந்தும் — கண்டவிடமெங்கும் சிதறிப்பறக்கிற
புறவின்— தாழ்வரையையுடைத்தாய்
தென்— அழகிதான
திருமாலிருஞ்சோலை—;
பூதங்கள்— அங்கே வர்த்திக்கிற ஸ்ரீவைஷ்ணவ பூதங்களானவை
(புஷ்டதேஹர்களான ஜந்துக்களைக்கண்டால்;)
சிந்த— அவயவங்கள் சிதறும்படி
புடைத்து— அடித்துக் கொன்று
செம் குருதிகொண்டு— அவர்கள் தேஹத்தினின்றும் புறப்படுகிற சிவந்த ரத்தத்தைக்கொண்டு
அந்தி— அந்திப்பொழுதில்
பலி கொடுத்து— ஆஹாரம் ஸமர்ப்பித்து
ஆவத்து தனம்— தம் ஆபத்துக்கு ரக்ஷகமான தனமாகநினைத்து
செய்— ஸேவித்துக்கொண்டு போருகிற
அப்பன்— ஸ்வாமி வர்த்திக்கிற
மலை— திருமலையாம்.

(க) "தெவொ நாமஸஹஸ்ரவாந்."

வ்ய. சிந்தப்புடைத்து. சிதறப்புடைத்து. ஆஸ்திகராய், த்யாஜ்யோபாதேய விவேகமுடையராய், அழகரளவிலும் திருமலையாழ்வாரளவிலும் ப்ரேமமுடையராய் வர்த்திக்குமவர்களைக் கண்டால் அவர்கள் ஸந்நிதியில் நில்லாதே அஞ்சலிவந்தநாதிகளைப் பண்ணித் தந்தாடைக்கொண்டு மறைந்துவர்த்திக்கு, நாஸ்திகராய் த்யாஜ்யோபாதேய விவேகசூந்யராய், தேஹ போஷணாதிகளைப் பண்ணி ஸ்வைரம்ஸஞ்சரித்துத்திரியும் ப்ரதிகூலஜந்துக்களை, தந்தாம் ஸஞ்சரிக்கிற தேசத்திலே காலத்திலேகண்டால், அலையவங்கள் சிதறவடித்துக் கொன்று பொகடாநிற்குமாய்த்து. செங்குருதிகோண்டு. தாந்தாம் அடித்துக்கொன்றவர்களுடைய தேஹத்தில்நின்றும், செவ்வியிலே சிவந்துபுறப்படுகிற ரக்தத்தைக்கொண்டு. பூதங்கள். பூதயோநியாயிருக்கச் செய்தேயும், வைஷ்ணவநாமரூபங்களோடு கூடி, பகவத் பாகவத பக்தியுக்தங்களாய்க் கொண்டுதிரியும் பூதங்களானவை. அந்திப்பலிகொடுத்து. (க) " நவமஸவதிஉம்வணுழி " என்று ஸமர்ப்பித்த கண்டாகர்ணனைப்போலே, தங்களுடையஜாத்யுசிதமாக ஜீவிக்குமத்தை, ஸந்த்யாகாலங்களிலே ஆராதநரூபேண ஸமர்ப்பித்து. ஆவத்தனம்செய். தங்களுக்கு ஆபத்துக்கு ரக்ஷகமான தாமாகநினைத்து ஸேவித்துக்கொண்டு போரும்படியிருக்கிற. அப்பன்மலை. ஸர்வகாரண பூதனானவன் நித்யவாஸம்பண்ணுகிறமலை. " அப்பன் " என்றது - இவற்றுக்கும் இப்படி கிட்டிவர்த்திக்கலாம்படி யிருக்கிறது காரண பூதனை குடற்றுடக்காலேயென்னுமிடம் தோற்ற.

இந்திரகோபங்கள். சிவந்தநிறத்தையுடையவாய், " இந்த்ரகோபம் " என்கிற நாமத்தையுடைத்தாயிருக்கிற ஜந்துக்களானவை. எம்பெருமான்கனிவாயொப்பான். ஸர்வ ஸ்வாமியான அழகருடைய, கொவ்வைக்கனி போலேயிருக்கிற திருவதரத்துக்குப் போலியாம்படி. சிந்தும்புறவில். கண்டவிடமெங்கும் சிதறிப்பறக்கும் பர்யந்தத்தையுடைய. " இந்தரச்செம்பொடிப்போல் திருமாலிருஞ்சோலையெங்கும் இந்திரகோபங்களேயெழுந்தும் பரந்திட்டன " என்றாரிறே - இவர் திருமகனாரும். தென்திருமாலிருஞ்சோலையே. இப்படியிருந்துள்ள அழகையுடைத்தான திருமாலிருஞ்சோலையென்கை. ... ... கூ.

மூ.—எட்டுத்திசையு மெண்ணிறந்த பெருந்தேவிமார்
விட்டுவிளங்க வீற்றிருந்த விமலன்மலை
347 பட்டிப்பிடிகள் பகடோடுஞ்சிச்சென்று மாலைவாய்த்
தெட்டித்திலைக்குந் தென்திருமாலிருஞ்சோலையே. ய.

பதவுரை.

மாலைவாய்— ராத்ரிகாலத்திலே
பட்டி— ஸ்வைரமாகத் திரியாநின்றுள்ள
பிடிகள் — பெண்யானைகளானவை
பகடு— ஆண்யானைகளோடே
உறிஞ்சி சென்று— உராய்ந்து சென்று
தெட்டி— அப்புணர்ச்சியாலுண்டான ஆநந்தம்மூற்றி
திளைக்கும்— களியாநின்றுள்ள
தென் திருமாலிருஞ் சோலை—;
எண் இறந்த — கணக்கிட முடியாதவர்களாய்
பெரு — ரூபஸௌந்தர்யங்களால் வந்த பெருமையையுடையான
தேவிமார்— தேவிமார்கள்

(க) " நவம் சவமிதம் புண்யம். "

எட்டு திசையும்— எட்டு திக்குக்களிலும்
விட்டு விளங்க— மிகவும் விளங்க
(அவர்கள் நடுவே)
வீறு— தன் பெருமைதோற்ற
இருந்த— ஸ்ரீ த்வாரகையிலிருக்கிற
விமலன்— பரிசுத்தனனவன் வர்த்திக்கிற
மலை— திருமலையாம்.

வ்யா. பத்தாம்பாட்டு. எட்டுத்திசையும். எட்டுதிக்குகளும். எண்ணிறந்தபெரும் தேவிமார். அஸங்க்யாதராய், ரூபகுணத்தாலும் ஆத்மகுணத்தாலும்வந்த பெருமையையுடையராய், சாஸ்த்ரோக்தமான ப்ரகாரத்திலே பரிக்ரஹிக்கப்பட்ட தேவிமாரானவர்கள். விட்டுவிளங்க. மிகவும்ப்ரகாசிக்க. அதாவது - பார்த்த பார்த்தவிடமெங்கும் இவர்களுடைய திரளின் ப்ரகாசமேயாயிருக்கை. வீற்றிருந்த. இவர்கள்நடுவே தன்வ்யாவர்த்தி தோற்றும்படி ஸ்ரீமத்வாரகையிலே யெழுந்தருளியிருந்த. அதாவது - இத்தனைபேரும்கூடும் பரிமாறுகிறவிடத்தில் ஒருவொருத்தரே "என்னைவொழியவறியான், என்னைவொழியவறியான்" என்னும்படி பரிமாறுகையால்வந்த வீறுடைமைதோற்ற விருந்தவனென்னை. விமலன். இப்படி பரிமாறினவிடத்தில் ஸ்வார்த்தப்ரதிபத்தியாகிற தோஷமில்லாதவனென்னை. இவனுடைய ஸமஸ்தவ்யாபாரங்களும் ஆச்ரிதரை ரஸிப்பிக்கைக்கு உறுப்பாயிறேயிருப்பது. இப்படியிருந்துள்ள பாரதந்த்ர்யந்தான் ப்ரணயித்வ ப்ரயுக்தமாகையாலே இவன்றனக்கு ஏற்றத்துக் குடலாமித்தனையிறே. மலை. ஏவம்பூதனனவன் இந்த ஸ்வபாவமெல்லாம் ப்ரகாசிக்கும்படி வர்த்திக்கிற மலை.

பட்டிப்பிடிகள். ஸ்வைரஸஞ்சாரிகளான பிடிகளானவை. பகடிஞ்சிச்சென்று. *களிற்றுனையோடே ஸ்பர்சித்துச்சென்று. ஸ்பர்சத்தால் ஸம்ச்லேஷத்தைச் சொல்லுகிறது. "சென்று" என்று-அதிலுண்டான ‡ காலதைர்க்யத்தைச் சொல்லுகிறது. மலைவாய். சாரியிடத்திலே. தெட்டித்திளைக்கும். அந்த ஸம்ச்லேஷரஸம் முற்றிக்கனியாநிற்கும். தெட்டல்- முற்றல். திளைத்தல்- கனித்தல். தென்திருமாலிருஞ்சோலையே. இப்படி இருந்துள்ள சிறப்பையுடைய திருமாலிருஞ்சோலைமலை யென்னை. ... ... டி

அநிகமத்தில், இத்திருமொழிகற்றார்க்கு பலம் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

மூ.—மருதப்பொழிலணி மாலிருஞ்சோலைமலைதன்னைக்
கருதியுறைகின்ற கார்க்கடல் வண்ணனம்மான்றன்னை
விரதங்கொண்டேத்தும் வில்லிபுத்தூர் விட்டுசித்தன்சொல்
கருதியுரைப்பவர் கண்ணன்கழலிணை காண்பரே. கக.

பதவுரை.

மருதம் பொழில்— மருதஞ்சோலைகளாலே
அணி— அலங்கரிதமான
மாலிருஞ் சோலைமலை தன்னை } திருமாலிருஞ் சோலை மலையை
கருதி— விரும்பி
உறைகின்ற— நித்யவாஸம் பண்ணுமவனுய்
கார் கடல்— கருங்கடல் போன்ற
வண்ணன்— திருநிறத்தையுடைய
அம்மான் தன்னை— ஸ்வாமியானவனை
விரதம் கொண்டு— வாழ்த்துகையையே வ்ரதமாகக்கொண்டு
ஏத்தும்— திருப்பல்லாண்டு பாடுமவராய்
வில்லிபுத்தூர்— ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் தலைவரான

‡ காலஸைர்க்யம்வது - காலத்தின் நெடுமை.

கிட்டுகித்தன்— பெரியாழ்வார்
சொல்— அருளிச்செய்த இத்தை
கருதி— விரும்பி
உரைப்பவர்— அநுஸந்திக்குமவர்கள்

கண்ணன்— க்ருஷ்ணனுடைய
கழல் இணை— திருவடிகளை
காண்பர்— காணப் பெறுவர்கள்.

வ்வா. மருதமித்யாதி. மருதஞ்சோலைகளாலே அணியப்பட்டிருப்பதாய், "திருமாலிருஞ்சோலை" என்னும் திருநாமத்தையுடைத்தாயிருந்துள்ள திருமலைதன்னை. "தன்னை" என்கையாலே- இதினுடைய போக்யதாதிசயத்தைச்சொல்லுகிறது. கருதியுறைகின்ற. நித்யவிபூதியிலுங்காட்டில் இதுவேநமக்கு வாஸஸ்தாநமென்று விரும்பி, "நங்கள் குன்றம் கைவிடான்" என்கிறபடியே நித்யவாஸம் பண்ணுகிற. கார்க்கடல்வண்ணனம்மான்றன்னை. கருங்கடல்போலேயிருண்டு ச்யாமஹரிதமான நிறத்தையுடைய ஸ்வாமியானவனை. விரதமித்யாதி. ஸ்வதேசஸ்தர்களுக்கு அநுபமாநனான மங்களாசாஸநமே தமக்கு வ்ரதமாகக்கொண்டு திருப்பல்லாண்டு பாடியருளினவரான ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வாரருளிச்செய்ததை. அன்றிக்கே, அர்ச்சாவதாரம் "அடியோமுக்கே யெம்பெருமானல்லீரோ நீர்" என்னப்படும் விஷயஸ்வீகாரபலமாலே, "இவ்விஷயத்தை யேத்தாகடவோம்" என்னும் வ்ரதத்தையுடையராய்க்கொண்டு மங்களாசாஸநரூபேண வத்தமென்னவுமாம். சருதியுரைப்பவர். ஸாபிப்ராயமாக புத்தி பண்ணி அநுஸந்திக்குமவர்கள். கண்ணன்கழலிணை காண்பரே. அத்யந்தஸுலபனான க்ருஷ்ணன் திருவடிகளைக் கண்டநுபவிக்கப் பெறுவர். ... ... கக.

பெரியஜீயர் திருவடிகளேசரணம்.

அடிவரவு.—அலம் வல்லாளன் தக்கா ராணயர் ஒரு ஏவிற்று மன்னர்
குறுகாத சிந்த வெட்டு மருத முருப்பிணி.

—(ப)—

ஆதிருமொழி ஈக-க்கு, பாட்டு-ஈஈசு.

நான்காம்பத்து- மூன்றாந்திருமொழி- உருப்பிணிங்கை, ப்ரவேசம்.

அ. கீழிற்றிருமொழியிலே, ராமாவதார குணசேஷ்டிதங்களும் க்ருஷ்ணவதாரகுண சேஷ்டிதங்களுமெல்லாம் ப்ரகாசிக்கும்படி அழகர் திருமலையிலே யெழுந்தருளியிருக்கிறபடியை அநுபவித்துக்கொண்டு, "அவரிலுங்காட்டில் அவர்விரும்பி யெழுந்தருளிநிற்கிற திருமலையே பாமப்ரபம்" என்று அநுஸந்தித்து, திருமலையாழ்வாருடைய வைபவத்தை பஹுமுகமாகப்பேசி யநுபவித்தார்; அப்படி அநுபவித்த பலவால் தமக்கு பர்யாப்தி பிறவாமையாலே மீளவும் அவதாரகுண சேஷ்டிதங்களெல்லாம் ப்ரகாசிக்கும்படி அழகர் திருமலையில் நிற்கிற நிலையை, கீழ்ச்சொன்ன க்ரமமன்றிக்கே, முகவுரைதானேபேசி திருமலை வைபவத்தையும் கீழ் உக்தப்ரகாரமன்றியே, முகவுரைதான பலபடியாகப்பேசியநுபவிக்கிறார்- இத்திருமொழியில்.— கீழ்- ராமாவதாரகுணசேஷ்டிதம் முன்னாக க்ருஷ்ணவதாரகுண சேஷ்டிதங்களையும் அழகர்பக்கலிலே கண்டநுபவித்தார்; இதில்-க்ருஷ்ணவதாரகுண சேஷ்டிதம் முன்னாக ராமாவதாரகுண சேஷ்டிதங்களையும் அவதாராந்தர சேஷ்டிதங்களையுமெல்லாம் அழகர் பக்கலிலே தர்சித்தநுபவிக்கிறார்.

முத்துக்கோக்கவல்லவன் முகம்மாறிக் கோத்தவாறே அது விலைபெறுமாபோலே, அவதாரகுண சேஷ்டிதங்களுக்கும் விசேஷஜ்ஞான விவர்சேர்த்தநுபவிக்கிற வாசியாலேநித்யமும் ரஸமூலமுண்டாயிருக்குமிறே. அநியவிஷயத்திலும் விசேஷணபேதத்தாலே விசேஷ்யத்துக்கு ரஸவிசேஷ முண்டாகக் கடவதிறே. ஆக, இது கீழிறுநிருமொழிக்கும் இத்திருமொழிக்கு முண்டான விசேஷம். ... ...

மூ.—உருப்பிணிநங்கைதன்னைமீட்பான் தொடர்ந்தோடிச்சென்ற
உருப்பினையோட்டிக் கொண்டிட்டறைத்திட்ட வுறைப்பன்மலை
பொருப்பிடைக் கொன்றைநின்று முறியாழியுங் காசுங்கொண்டு
விருப்பொடுபொன்வழங்கும் வியன்மாலிருஞ்சோலையதே. க

பதவுரை.

கொன்றை— கொன்றைகளானவை
பொருப்பிடை நின்று— மலையினிடத்திலே நின்று
பொன்— பொன்னாற் செய்யப்பட்டு
முறி — முறிந்த
ஆழியும்— மோதிரங்களையும்
பொன் காசும்— பொற்காசுகளையும்
கொண்டு— கையால்வாரி
விருப்பொடு— விருப்பத்தோடு
வழங்கும்— கொடுப்பாரைப் போலேயிருப்பதாய்
வியன்— ஆச்சர்யப்படத்தக்கதான
மாலிருஞ்சோலை— திருமாலிருஞ் சோலையென்னும் பேரையுடைத்தான
அதே— அம்மலையே,
உருப்பிணி நங்கை தன்னை— ருக்மிணிப்பிராட்டியை
மீட்பான்— மீட்டுக்கொண்டு போவதாக
தொடர்ந்து— பின்தொடர்ந்து
ஓடி சென்ற— ஓடிவந்த
உருப்பினை— (அவன் தமையனான) ருக்மியை
ஓட்டி— துரத்தி
கொண்டு— பிடித்துக்கொண்டு
இட்டு— தேர்த்தட்டில் இருத்தி
உறைத்திட்ட— (அவனை) மாறுபங்கம் செய்த
உறைப்பன்— பிடிக்கையுடையவனுடைய
மலை— திருமலையாம்.

வ்யா. முதற்பாட்டு. உருப்பிணிநங்கைதன்னை. ருக்மிணிப்பிராட்டிதன்னை. "நங்கை" என்று இவளுண்டாய குணபூர்த்தியைச் சொல்லுகிறது. அதாவது பித்ராதிகளெல்லாம் புறம்பே கொடுப்பதாக ஸங்கல்பித்து, அதுக்கீடான உத்ஸவமும் நடத்திச்செல்லாநிற்க, அந்த அந்யசேஷத்வத்துக்கு வெருவி "இவ்வளவிலே க்ருஷ்ணன்வந்து கைக்கொண்டிலனுகில் நான் முடிவன்" என்று வ்யவஸிதையாயிருந்த குணபூர்த்தியிறே. இப்படி அவள் வ்யவஸிதையாயிருக்கிற வளவிலே, புறச்சோலையிலே நின்று ஸ்ரீபாஞ்சஜந்யத்தை முழக்கி அந்த த்வநியாலே அவளுக்கு ப்ராண ப்ரதிஷ்டையைப்பண்ணி, விரைந்துசென்று கைக்கொண்டு தேரிலேயேற்றிக்கொண்டு போராநிற்கச்செய்தே. மீட்பான் தொடர்ந்தோடிச்சென்று. "இப்படி பலத்திலே கொண்டுபோகையாவதென்" என்று யுத்தம்பண்ணி மீட்பதாகப் பின்பற்றியோடிவந்த. உருப்பினையோட்டிக்கொண்டிட்டு. ருக்மிணி ஓட்டிப்பிடித்துக்கொண்டு தேர்த்தட்டிலேயிட்டு. அதாவது- ருக்மிணிப்பிராட்டிக்குத் தமையனுகையாலே, "இவனைக்கொல்லில் இவள் முகம் கருகும்" என்று அவனைப் பிடித்துக்கொண்டுவந்து தேர்த்தட்டிலே கட்டியிட்டுவைத்தமையைச் சொல்லுகிறது. உறைத்திட்ட. சிக்கன் பரிபவித்திட்ட. அதாவது- தேஹோவதமாம்படி தலையைச் சிரைக்கை முதலான பரிபவங்களைப் பண்ணுகையிறே. உறை

ப்பன்மலை: ருக்மிணிப் பிராட்டியைச் சிக்கனக் கைக்கொண்டு, மீட்கவந்த ருக்மனையும் தத்துவிட்ட மிடுக்கையுடையவன் வர்த்திக்கிற மலை.

பொருப்பிடைக் கோன்றை நின்று. கொன்றைகளானவை மலையிடத்திலே நின்று. பொன் - முறியாழியும் காசுங்கொண்டே. பொன்னுலண்டான முறிந்த மோதிரத்தையும் காசையுங்கொண்டு. முறிந்த பொன்மோதிரமும் பொற்காசும்போலே யாய்த்து - இதழுடைய பூவிலுள்ள நரம்பும் இதழுமிருக்குமப்படி. விருப்போவேழங்கும். இவற்றை விருப்பத்தோடே கொடாநிற்கும். பொன் மோதிரங்களையும் பொற்காசுகளையும் வாரிக்கொண்டு ஆதரத்தோடே பிறர்க்குக் கொடுப்பாரைப்போலே யாய்த்து - இவை பூச்சொரியும்படி. வியன் மாலிருஞ்சோலையதே. இப்படி யிருந்துள்ள வளப்பத்தை யுடைத்தாகையாலே விஸ்மயநீய மாய், " திருமாலிருஞ்சோலை " என்னும்பேரை யுடைத்தாயிருக்கிற வதுவே. அதுவென்று - ப்ரஸித்தியைச் சொல்லுகிறது. ... ... க.

மூ.—கஞ்சனுங் காளியனுங் களிறுமருது மெருதும்
வஞ்சனையின்மடிய வளர்ந்தமணிவண்ணன்மலை
நஞ்சுமிழ்நாக மெழுந்தணவி நளிர்மாமதியைச்
செஞ்சுடர்நாவலைக்குந் திருமாலிருஞ்சோலையதே. உ.

பதவுரை.

நஞ்சு— விஷத்தை
உமிழ்— உமிழாநின்றுள்ள
நாகம்— மலைப்பாம்பானது
நளிர்— குளிர்ந்த
மா மதியை — அந்தச் சிகரத்தின்மேலே தவழுகிற பூர்ணசந்திரனை (தனக்கு உணவாக நினைத்து,)
எழுந்து— கிளர்ந்து
அணவி— கிட்டி
செம்— சிவந்த
சுடர்— தேஜஸ்ஸையுடைத்தான்
நா— நாவாலே
அலைக்கும்— அலையாநின்றுள்ள
திருமாலிருஞ் சோலையதே—;

கஞ்சனும்— கம்ஸனும்
காளியனும்— காளியனும் [யும்
களிறும்— குவலயாபீடமென்னும் யானை
மருதும்— யமளார்ஜுநங்களும்
எருதும்— அரிஷ்டாஸுரனுகிற ரிஷபமும்
வஞ்சனையின்— தந்தாமுடைய வஞ்சனைகளாலே
மடிய— தாந்தாம் முடியும்படியாக
வளர்ந்த— திருவாய்ப்பாடியில் வளர்ந்தருளி
மணி வண்ணன்— நீலமணிபோன்ற திருநிறத்தையுடையவனுடைய
மலை— திருமலையாம்.

வ்யா. இரண்டாம்பாட்டு. கஞ்சனித்யாதி. *சாது சனத்தை நலியும் கம்ஸனும், பசுக்களும் இடையரும் தண்ணீர் குடிக்கிற பொய்கையை விஷத்தாலே தூஷித்துக் கிடந்த காளியனும், " புகுவாய்நின்ற போதகம் " என்கிறபடியே- கம்ஸனுடைய க்ருஹத்துக்குப் புகுகிற வழியிலேநின்று நலியத்தேடின ஆனையும், தவழ்ந்துபோகாநிற்க, வழியிலே நலிவதாக நின்ற யமளார்ஜுநமும், " வம்பவிழ்கானத்து மால்விடை " என்கிறபடியே - காட்டிலே நலிவதாகவந்த அரிஷ்டனுகிற ரிஷபமும். வஞ்சனையின்மடிய வளர்ந்த. தந்தாம் வஞ்சனைகளாலே தாந்தாம் முடியும்படியாகத் திருவாய்ப்பாடியிலே வளர்ந்த. காளியனுக்கு

வஞ்சகமும் மடிவும் - ஆத்மாபஹாரமும், அழிமாத பங்கமுமாகக்கடவது. மணிவண்ணன் மலை. இப்படி விரோதிகள் * தேயவளர்ந்தவன் நீலரத்நம்போன்ற வடிவோடே நித்யவாஸம் பண்ணுகிற மலை.

நஞ்சீயர். * மதிதவழ்குடுமி ப்ரதேசத்திலே, நஞ்சையுமிழ்ந்து பதித்துவைத்தாற்போல் கிற மாசுணமானது, அந்தச் சிகரத்தின்மேலே தவழுகிற குளிர்ந்த பூர்ணசந்த்ரனே, தனக்கு ஆபிஷமாகக்கருதி விளர்த்துவிட்டி, சிவந்த தேஜஸ்ஸையுடைத்தான நாவர்லே அவனை அணையாநிற்கும் திருமாலிருஞ்சோலையாகிற வதுவை - மணிவண்ணன்மலை. 2

மூ—மன்னுநரகன்றன்னைச் சூழ்போகி வஞ்சித்தெறிந்து
கன்னிமகளிர்தம்மைக் கவர்ந்தகடல்வண்ணன்மலை
351 புன்னைசெருந்தியொடு புனவேங்கையுங் கோங்குநின்று
பொன்னரிமாலைகள்சூழ் பொழின்மாலிருஞ்சோலையதே. 3

பதவுரை.

புன்னையொடு— புன்னையும்
செருந்தியொடு— செருந்தியும்
புன்ம— புனத்திலுண்டான்
வேங்கையும்— வேங்கையும்
கோங்கும்— கோங்கும்.
நின்று— ஒழுங்குபட நின்று
பொன்னரிமாலைகள் சூழ்— ‡ பொன்னரி மாலைகள் சுழற்றினாற்போலே யிருக்கிற
பொழில்— சோலைகளையுடைய
மாலிருஞ்சோலை அதே—;
மன்னு— (‘ஆள்வலியாலும் தோள்வலியாலும் நமக்கழிவில்லை’ என்று) பொருந்தியிருந்த
நரகன் தன்னை— நரகாஸுரனை [ந்து
சூழ்போகி— நிரஸிக்கும்வகைகளை ஆராய்

வஞ்சித்து— அவனைத்தப்ப வெண்ணுதபடி வஞ்சித்து
எறிந்து— கொன்று
கன்னிமகளிர் தம்மை— அவன் கல்யாணம் செய்வதாகப் பொறுக்கித் திரட்டிவைத்த கந்நிகைகளான பதினாயிரத் தொரு நூறு ஸ்த்ரீகளையும்
கவர்ந்த— கொள்ளைகொண்டு தேவிமாராக்கினவனும்
கடல்— கடல்போன்ற
வண்ணன்— வடிவையுடையனான வனுடைய
மலை— திருமலையாம்.

‡ “பொன்னரிமாலை - ஓர் ஆபரணம்.” என்று தமிழர்.

வ்யா. முன்னும்பாட்டு. மன்னுநரகன்றன்னை. “ஆள்வலியாலும் தோள்வலியாலும் நமக்கோர் விலக்சலில்லை” என்று ப்ரதிஷ்டிதனாயிருந்த நரகாஸுரனை. அதவா, விபரீதத்திலே நிலைநின்ற நரகாஸுரனே யென்னவுமாம். அதாவது - தேவர்களை யடர்த்து, தேவஸ்த்ரீகளைப் பிடித்து, அதிதியினுடைய குண்டலமளவாகப் பறித்துக்கொண்டுபோந்து குடியிருக்கமாட்டாமல் இந்த்ரன்வந்து ஸ்ரீமத் த்வாரகையிலே கூப்பிடும்படி பண்ணினவனிறே, சூழ்போகிவஞ்சித்தெறிந்து. இந்த்ரன் வந்து விண்ணப்பஞ்செய்த வநந்தரம், “இனியிவனை நிரஸிக்கக்கடவோம்” என்றுநிரஸிக்கும் ப்ரகாரமும் திருவுள்ளத்திலே விசாரித்து லக்ஷ்யபாணமைப் பிராட்டியோடேகூடப் பெரியதிருவடியை மேற்கொண்டு திருவாழிதொடக்கமான திவ்யாயுதங்களோடே ப்ராக்ஜ்யோதிஷ புரத்திலே எழுந்தருளி, தப்பவொண்ணாதபடி அவனை வஞ்சித்துக்கொன்று. சூழ்ச்சியாவது - விசாரம்; வஞ்சித்தல் - போக்கறுத்தல்; எறிதல் - சேதித்தலாய், திருவாழியாலே யறுத்துப்போகட்டமையைச் சொல்லுகிறது.

கன்னிமகளிர்தம்மைக் கவர்ந்த. அவன்முன் பாணிக்ரஹணம் பண்ணுவதாக அங்கு மிங்கும் ¶திரிந்து பொருக்கிக்கொண்டுவந்து திரட்டிவைத்த கந்நிகைகளான பதினாயிரத்தொரு நூறு ஸ்த்ரீகளையும் கைக்கொண்டுபோந்து, ஸ்ரீமத் த்வாரகையிலே பாணிக்ரஹணம்பண்ணி தனக்கு தேவிமாராக்கியருளின. கடல்வண்ணன்மலை. நரகவதம்பண்ணி இந்த்ராதிதேவர் களை ரக்ஷிக்கையாலும், அவன் திரட்டிவைத்த கந்நிகைகளைக் கைக்கொண்டு திருமணம் புணர்ந்து அவர்களை உகப்பிக்கையாலு முண்டான ஹர்ஷத்தாலே, கடல்போன்ற திருநிறத் தையுடையனா யிருந்தவன் நித்யவாஸம் பண்ணுகிற மலை.

புன்னைபித்பா தி. பொற்கென்ற பூக்களை யுடைத்தான புன்னையும் செருந்தியும் புன த்தினுண்டான லவங்கையும் கோங்கும் ஒழுங்குபடநின்று பூக்கையாலே, திருமலையாழ்வா ர்க்குப் பொன்னரிமாலைகள் சுற்றினாற்போலே யிருக்கும் பொழில்களையுடைய மாலிருஞ் சோலையாகிற வதுவை - கடல்வண்ணன்மலை. ... ... கு.

மு—மாவலிதன்னுடைய மகன் வாணன் மகளிருந்த
காவலைக்கட்டழித்த தனிக்காளைகருதுமலை
352 கோவலர் கோவிந்தனைக் குறமாதர்கள் பண்குறிஞ்சிப்
பாவலிபாடி நடம்பயின் மாலிருஞ்சோலையதே. சு.

பதவுரை.

கோவலர் கோவிந்தனை — கோபகுலத்தில் பண்ணும் இடைச்சாதியிலே பிறந்து கோவிந்தாபிஷேகம் பண்ணினவன் விஷயமாக
குறமாதர்கள்— குறப்பெண்கள்
குறிஞ்சி பண் — குறிஞ்சிராகத்தோடு கூடின
பா— பாட்டுக்களாலே
ஒலி பாடி— இசைபெற்றப் பாடி
நடம் பயில்— பாட்டுக்கிணங்கக் கூத்தாடா நின்றுள்ள
பாலிருஞ்சோலை அதே-;
மாவலி தன்னுடைய— மஹாபலியினுடைய
மகன்— புத்ரனான
வாணன் மகள் — பாணஸுரனுடைய மகளான உஷைக்கு
இருந்த— அவள்தகப்பனால் செய்யப்பட்டிருந்த
காவலை— காவலியெல்லாம்
கட்டு அழித்த— (தன் திருப்பேரனான அநிருத்தாழ்வான் களவிலே அவளைப் புணருகையால்வந்த சிறையைமீட்கைக்காக அரணழித்துப்பொகட்ட
தனி— ஒப்பற்ற
காளை— பலவந்தத்தையுடையவன்
கருதும்— வரும்பிவர்த்திக்கிற
மலை— திருமலையாம்.

வ்யா. நான்காம்பாட்டு. மாவலியித்யாதி. மஹாபலிபுத்ரனான பாணனுடைய மகளான உஷையிருந்த. இத்தால் அவளுக்கு பிதாவாய் அபிமானியானவனுடைய பலமும், அவன் இவளுடைய லைலகூன்யத்துக்கிடாக வைத்த அரணும் தோற்றுகிறது. காவலைக் கட்டழித்த. அவளிருந்த கந்யாக்ருஹத்தில் பிதாவானவன் செய்துவைத்த காவலியெல்லா வற்றையும், போனான அநிருத்தாழ்வானுக்காகச் சென்று, அரண்மீட்டு. அதாவது அநிருத் தாழ்வானைச் சிறைவைத்த நிமித்தமாகவிறே வாணபுரத்துக்கெழுந்தருளி வாணனைஜயித்

¶ "திரிந்து" என்று பாடாந்தரம்.

தது. அவனைஜயித்தபின்பிறே உலகு அடிநந்தனுக்கு சேஷமாய்த்து. அத்தைப்பற்ற- "காவலிக்கட்டழித்த" என்கிறது. தனிக்காதா கருதும்மலே. "காமனைப்பயந்தகாளை" என்னுமாபோலே, காமனைப்பெற்றபின்பும் அத்விதியமான யௌவனத்தைபுடையலுயிருந்தவன், "பரமபதத்திலுங்காட்டில் இதுவே நமக்குவாஸஸ்தானம்" என்று கருதி நித்யவாஸம்பண்ணுகிறமலே.

கோவலர்கோவிந்தனை. கோகுலத்தைபண்ணுகிற ஜாதியிலே பிறந்து அவர்களிலே ஒருவனுய், கோவிந்தாபிஷேகம்பண்ணினவனை. குறமாதர்கள். குறப்பெண்களானவர்கள். பண்குறிஞ்சிப்பாவொலிபாடி நடம்பயில்மாலிருஞ்சோலையதே. குறிஞ்சிப்பண்ணோடே கூடின பாட்டுக்களாலே ஒலிபெறப்பாடி., அப்பாட்டுக்களுபமான நர்த்தனத்தைப் பண்ணுகின்றுள்ள மாலிருஞ்சோலையாகிற வதுவே- தனிக்காளை கருதும்மலே. ... ... ச.

மூ.—பலபலகூழஞ்சொல்லிப் பழித்த சிசுபாலன்றன்னை
அலைவலைமைதவிர்த்த வழகனலங்காரன்மலை
குலமலைகோலமலை குளிர்மாமலை கோற்றமலை
நிலமலை நீண்டமலை திருமாலிருஞ்சோலையதே. டு.

பதவுரை.

குலம் மலை — தொண்டக்குலத்துக்குந் தலையானமலையாயும்
கோலம் மலை— அழகியமலையாயும்
குளிர்— குளிர்ந்ததாய்
மா— மேன்மையையுடையதான
மலை— மலையாயும்
கொற்றம்— வெற்றியையுடைய
மலை— மலையாயும்
நிலம்— மரம்முதலியவை முளைக்கத்தக்க மண்பாட்டையுடைய
மலை— மலையாயும்
நீண்ட— உயர்த்தியையுடைய
மலை— மலையாயுமிருந்துள்ள
திருமாலிருஞ்சோலை அதே-;
பல பல நாழும்— பற்பலகுற்றங்களை
சொல்லி— வாயாரச்சொல்லி
பழித்த— தூஷித்த
சிசுபாலன் தன்னை— சிசுபாலனை
‡ அலைவலைமை தவிர்த்த- அலைவலைத்தனத்தைப்போக்கி † ரக்ஷித்த
அழகன்— அழகையுடையனுய்
அலங்காரன்— அலங்காரத்தை யுமுடைய னனவன் வர்த்திக்கிற
மலை— திருமலையாம்.

‡ அலைவலைமை - விஷயகளாசவாதிகளைப் போலாமல் தன்னெஞ்சில் தோற்றினதைச் சொல்லுதல்.

† சரமதசையிலே தன் அழகைக் காட்டித் தன்னளவில் த்வேஷத்தை மாற்றுகையாலே தான் என்றும் நிந்தித்துக்கொண்டிரியும் அலைவலைத்தனத்தைப் போக்கிக்காத்தவனென்றபடி.

வ்யா. ஐந்தாம்பாட்டு. பலபலவித்யாதி. பலபலகுற்றங்களைச் சொல்லி நிந்தித்த சிசுபாலன்றன்னை. இவன் சொல்லும் தோஷங்கள் அநுகூலர்வாக்கால் சொல்லத்தக்கதல்லாமையாலே "நாழ்" என்கிறது. நாழ் - குற்றம்.. அதுதனக்கு ஒருஸங்க்யை யில்லாமையாலே "பலபல" என்கிறது. அதுதன்னை நெஞ்சால்நினைத்திருக்கு மளவன்றிக்கே, பிறரறியும்படி வாய்விட்டுச் சொல்லுவதே! என்று "சொல்லி" என்கிறது. "கேட்பார்செவிசுடுமிம்மை வசவுகளே வையும்" என்றுரிறே ஆழ்வார். அதாவது - பகவந்நிந்தைக்கு ஜீவநம்

வைத்துக் கேட்குமவர்களுடைய செவிக்கும் சுடும்படியான தண்ணிய வசனங்களே சொல்லி வைக்க. " சேட்பால்பழம்பகைவன் " என்று அதுக்கடியும் அருளிச்செய்தாரிறே அவர் தாமும்; அதாவது- ஹிரண்யராவணஜந்மங்களே தொடங்கி மிகவும் ஸ்வபாவமாய்க்கொண்டு வருகிற பழையதான பகைமை யுடையவனென்றபடி. இவன் ஒரோஜந்மங்களிலேபண்ணின் ப்ராதிகூல்யத்துக்கு ஓரளவில்லையிறே. அவ்வவஜந்மங்களிலுண்டான காலத்தின் மிகுதி யையும், பண்ணின ப்ராதிகூல்யத்திலுடைய மிகுதியையும், இவையெல்லாவற்றையும் நினைக்கிறது- பகையிலுடைய பழமைபாலே. அந்தவாஸனையாய்த்து - இந்த ஜந்மத்தில் இவன் இப்படி. நிந்தைபண்ணித் திரிகைக்குமேறது. இப்படி இவன் செய்து திரிந்த கொடுமையை நினைத்திறே " சிசுபாலனே " என்னுதே, " தன்னை " என்று இவர் வாய்விட்டு யருளிச்செய்தது. அலவலைமைதவிர்த்தவழகன். சரமதசையிலே தன்னழகைக்காட்டிக் தன்னளவில் த்வேஷத்தை மாற்றுகையாலே, " தான் " என்றுல் நிந்தித்துக்கொண்டு திரியும் அலவலைத்தனத்தைப் போக்கி ரக்ஷித்தவன். அலங்காரன்மலை. இப்படியிருந்துள்ள அழகருக்குமேலே * முடிச்சோதிப்படியே உண்டான அலங்காரத்தையு முடையவன் நித்ய வாஸம்பண்ணுகிற திருமலை.

குலமலை. * தொண்டக்குலத்துக்குத் தலையானமலை. கோலமலை. அழகர்க்கும் ஸ்ரீதர்க்கும் அநவரதாநுபாவ்யமான அழகையுடைய மலை. குளிர்மாமலை. ரக்ஷகனெனவனுக்கு ரக்ஷ்யவர்க்கம் பெறுமையால்வரும் தாபத்தையும், ரக்ஷ்யபூதரான விவர்களுக்கு ரக்ஷகனைப் பெறுமையால்வரும் தாபத்தையும் ஆற்றும்படியான குளிர்த்திமிக்கிருக்கிறமலை. கோற்றமலை. தன்னபிமாநத்திலே ஒதுங்கினாரை ஸம்ஸாரம் மேலிடாதபடிநோக்கும் வெற்றியையுடைத்தான மலை. நிலமலை. மணிப்பாறையாயிருக்குமளவன்றிக்கே, ஸ்த்ரீகளுக்கும் முமுக்ஷுக்களுக்கும் புஷ்பபல த்ருமாதிகளாய் முளைக்கவும், " முளைக்கவேணும் " என்று ப்ரார்த்திக்கைக்கும் யோக்யமான மலை. நீண்டமலை. பரமபதத்துக்கும் ஸம்ஸாரத்துக்கும் இடைவெளியற்று ஒரு கோவையாம்படியான ஒக்கத்தை யுடையமலை. இப்படியிருக்கிற திருமாலிருஞ்சோலையாகிற வதுவே-அலங்காரன்மலை. ... ... நி

மூ.—பாண்டவர்தம்முடைய பாஞ்சாலிமறுக்கமெல்லாம்
ஆண்டங்குநூற்றுவர்தம் பெண்டிர்மேல் வைத்தவப்பன்மலை
354 பாண்டகுவண்டினங்கள் பண்கள்பாடி மதுப்பருகத்
தோண்டலுடையமலை தொல்லைமாலிருஞ்சோலையதே. கூ.

பதவுரை.

பாண் தகு— ஓளத்திவைத்துப் பாடத்தக்க
வண்டினங்கள்— வண்டுத்திரள்களானவை
பண்கள் பாடி— பண்களைப் பாடிக்கொண்டு
மது— தேனை
பருக— பாநம்பண்ணிச் செல்லும்படியாக
தோண்டல் உடைய— சோலைகள் வாடாமல்
வளர்ந்து செல்லத்தக்க வேற்றை
உடைத்தான
மலை— மலையாய்
தொல்லை— அநாதியான
மாலிருஞ்சோலை அதே—;
பாண்டவர் தம்முடைய— பஞ்சபாண்டவர்
களின் மனைவியாய்
பாஞ்சாலி — பாஞ்சாலராஜன் மகளான
த்ரௌபதிபட்ட
மறுக்கம் எல்லாம் — மனக்குழப்பத்தை
யெல்லாம்

ஆண்டு— திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டிருந்து
அங்கு— அவள் பரிபவப்பட்டபோதுவந்தான (துன்பங்களையெல்லாம்)
நூற்றுவர்தம்— துர்யோதநனுடைய நூறு தம்பிமார்களின்
பெண்டிர்மேல் வைத்த— ஸ்த்ரீகள் பக்கலிலேயாம்படி பண்ணி (த்ரௌபதிக்கு மாநபங்கம் வராதபடி புடைவை சுரக்கும்படி பண்ணின)
அப்பன்— உபகாரகனுடைய
மலை— திருமலையாம்.

வ்யர. ஆறும்பாட்டு. பாண்டவரித்யாதி. பாண்டுபுத்ரர்களுடைய மஹிஷியாய், பாஞ்சாலராஜ புத்ரியாயிருக்கிறவளுடைய மறுகுதலெல்லாவற்றையும். இத்தால்- இவள் புகுந்தவிடத்தின் பெருமையும் பிறந்தவிடத்தின் பெருமையும் பார்த்தால், இம்மறுக்கம் வருகைக்கு யோக்யதை யில்லாதவளென்கை. "பாண்டவருடைய" என்றதில், "தம்முடைய" என்றது- ஒரொருத்தரே தன்னைரக்ஷிக்கைக்கிடான சக்திமான்களானவர்களை பர்த்தாக்களாக உடையளெனறு தோற்றுகைக்காக. ஆனால், இவர்கள்தான் இப்படி இவளைரக்ஷியாமல மறுகவிட்டிருப்பானென்னென்னில்; "பொய்ச்சூதில்தோற்ற பொறையுடையமன்னர்" என்கிறபடியே கர்த்ரிம த்யூதத்திலே இவளையும் தோற்றவர்களாகையாலே தர்மபீருக்களாய்ச் செய்யலாவதற்று, தங்கள் பொறையாலே நிலத்தைக்கிறியிருந்தார்களித்தனையிறே. ஸந்நிஹிதரான பர்த்தாக்கள் கைவாங்கியிருக்கையாலும், பிதாவானவன் அஸந்நிஹிதனுகையாலும், தான் அபலையாகையாலும், ப்ரபலரானவர்கள் நலிகையாலும் வந்த மறுக்கமிறேயித. "மறுக்கமெல்லாம்" என்றது- "அந்தகன் சிறுவனரசர்தமரசற்கிளையவனெனி யிழையைச் சென்று எந்தமக்குரிமை செய்யென" என்கிறபடியே குருடன் பெற்ற பிள்ளையாகையாலே அறிவுகேடி வழிவழியாய், பிதாவானவன் கண்ணஞ்சவளர்க்க வளருகையன்றிக்கே, தான் கண்டபடி மூலையடியே நிரிந்தவனுய், அதுக்குமேலே, ராஜராஜனை துர்யோதநனுக்குப் பின்பிறந்தவனுய், அவன் கொண்டாடி வளர்த்த செருக்காலே தம்பிமேலே நகமேறின துச்சாஸநனுகிற முரட்டுப்பையல், மஹாத்ஸவமாகையாலே ஆபரணங்களாலே அலங்கரிதையாய் ஆர்த்தவ தோஷயுக்தையாயிருக்கிறவள் பக்கலிலே கிட்டி, "சூதிலே உன்னையும் தோற்றுக்கள், நீ போந்து எங்களுக்கு இழிதொழில் செய்" என்று சொல்ல; அவள் (க) "ஈஇ வுஉஎஒகவஹ்ஹாவ்ம் நகஈஓஎத்ஈஇஉஹ்ஹி! மஈஈஅணாஹுவஈஈஓத்ஹ்ஹாத்ஈம் வஹாயம் ஈ நாவஈஈத்ஹ்ஹெஹ" என்ற வளவிலும், விடாதேமயிரைப்பிடித்து இழுத்துக்கொண்டுபோந்து மஹாஸபையிலே நிறுத்தி, பரிபவோக்திகளைப்பேசி வஸ்த்ரத்தை அபஹரித்துச்செய்கிறபோது அவள் பட்டமறுக்கங்கள் அநேகமாகையாலே.— ஆண்டு. அவை யெல்லாவற்றையும் ஒன்றொழியாமல் திருவுள்ளத்திலே வைத்துக்கொண்டிருந்து. அங்கு நூற்றுவர்தம் பெண்டிர்மேல்வைத்த. அவள் பரிபவப்பட்ட அத்தசையிலே அவளைப்பரிபவிப்பித்த துர்யோதநாதிகள் நூற்றுவருடையவும் ஸ்த்ரீகள்பக்கலிலேயாம்படி பண்ணின. "சந்தமல் குழலாளலக்கண் நூற்றுவர்தம் பெண்டிரு மெய்ந்நி" என்றுமிறே-திருமங்கையாழ்வாரும். இனி நலிழந்ததிறே இவளில் அவர்களுக்கேற்றம். அப்பன். சரணகதையான த்ரௌபதிக்குச் செய்த உபகாரம் தமக்குச் செய்ததாக நினைத்து "அப்பன்" என்கிறார்; ஆச்ரிதரிலே ஒருவர்க்குச் செய்தது தமக்குச் செய்ததாக நினைத்திராதவன்று பகவத்ஸம்பந்தம் இல்லையாகக்கடவதிறே. மலை. இப்படியிருக்கிற உபகாரகனுனவன் ஆச்ரித ஸம்ரக்ஷணார்த்தமாக நித்யவாஸம் பண்ணுகிற மலை.

(க) "ரஜஸ்வலைக வஸ்த்ராஹம் நதுமாம்நேதுமர்ஹஸி-குருணஞ்சபுரஸ்ஸ்தாதும் ஸபாயாம் நாஹமுத்ஸஹே."